Q23:22
M78
114524

உ

சிவமயம்.

பிரமோத்தரகாண்டம்.

இஃது
சைவசமயசிரோமணியாகிய
வரதுங்கராமபாண்டியமகாராசன்
அருளிச்செய்தது.

இதனுரையும்,
காஞ்சிபுரம் - பச்சையப்பமுதலியாரவர்கள்
கல்விச்சாலையில் தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய
காஞ்சிபுரம்

சபாபதிமுதலியார்

இயற்றிய பொழிப்புரையும்,

தில்லையம்பூர்ச்
சந்திரசேகரகவிராஜபண்டிதரவர்கள்
முன்னிலையில்
திருப்பத்தூர் ஆர்க்காட்டுத்தாலூக்காப் பாடசாலைகளில்
தமிழ்ப்பண்டிதராயிருந்த
காஞ்சீபுரம்

கோவிந்தமுதலியாரால்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு
மார்க்கபுரம்

முத்துசெட்டியாரால்

தமது
ஸுகவிரஞ்சனி முத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டன.

பகுதானியஹூ ஆடிமீ.

023:22
M73
114584

சிவமயம்.

பிரமோத்தரகாண்டத்தின் அத்தியாய

அட்டவணை

பக்கம்.

௧ வது, பஞ்சாட்சரமகிமையுரைத்தஅத்தியாயம் ௮
௨ வது, சிவதானமகிமையுரைத்தஅத்தியாயம் ௨௰
௩ வது, சிவராத்திரியில்கன்மாடபாதகாசன்முத்திபெற்றஅத்தியாயம் ௪௰௧
௪ வது, சிவராத்திரியில்விமரிசன்முத்திபெற்றஅத்தியாயம் ௫௰௭
௫ வது, சனிப்பிரதோஷத்தில் சந்திரசேனன் பூசைசெய்தஅத்தியாயம் ௮௰௧
௬ வது, சத்தியாதனன்பூசைசெய்தஅத்தியாயம் ௯௰௪
௭ வது, பிரதோஷ பூசைமகிமைஅத்தியாயம் ௱௨
௮ வது, சோமவாரவிரத மான்மியஅத்தியாயம் ௱௩௬
௯ வது, சோமவாரத்திற்சீமந்தனிபாவனைபெற்றஅத்தியாயம் ௱௭௰
௰ வது, சிவயோகிமகிமையுரைத்தஅத்தியாயம் ௱௯௰௧
௰௧ வது, பத்திராயுவுக்குஅரசியளித்தஅத்தியாயம் ௨௱௰௧
௰௨ வது, சிவகவசமுரைத்தஅத்தியாயம் ௨௱௨௰
௰௩ வது, பத்திராயுவின்கதையுரைத்தஅத்தியாயம் ௨௱௨௰௭
௰௪ வது, பத்திராயுமுத்திபெற்றஅத்தியாயம் ௨௱௪௰௬
௰௫ வது, விபூதிமகிமையுரைத்தஅத்தியாயம் ௨௱௬௰
௰௬ வது, திரிபுண்டரமுரைத்தஅத்தியாயம் ௨௱௭௰௩
௰௭ வது, வேடன்சிவபூசைகடைப்பிடித்தஅத்தியாயம் ௨௱௮௰௬
௰௮ வது, உமாமகேசுவரபூசைமகிமையுரைத்தஅத்தியாயம் ௨௱௯௰௭
௰௯ வது, உமாமகேசுவரபூசாபலமுரைத்தஅத்தியாயம் ௩௱௰௧
௨௰ வது, உருத்திராக்ஷமகிமையுரைத்தஅத்தியாயம் ௩௱௩௰௧
௨௰௧ வது, சீருருத்திரமகிமையுரைத்தஅத்தியாயம் ௩௱௫௰௧
௨௰௨ வது, வஞ்சுளைமுத்திபெற்றஅத்தியாயம் ௩௱௬௰௭

அத்தியாய அட்டவணை முற்றும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமோத்தரகாண்டம்

கடவுள்வாழ்த்து.

விநாயகர்துதி.

நல்ல சொற்பொரு ளுணர நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக் குரி யானை வழுத்துவாம்.

(இதன்பொழிப்பு.)

நல்லசொல்லையும் பொருளையு முணர்ந்து கவிகள்பாடவும் எல்லைகாணுதற்கரிய பேரின்பத்தையடையவும் கஜமுகாசுரனைவென்ற ஆனைமுகத்தையுடையவராய் வாழ்கின்ற வல்லபையென்னுஞ் சத்திக்குரிய விநாயக மூர்த்தியைத் துதிசெய்வாம். என்றவாறு.

நடேசர்துதி - வேறு.

பூமேவுசதுமுகனுந் திருமாலும்போற்றிசெய்யத்
தேமேவுகுழலுமையாள் செழுங்குவளைவிழிகளிப்ப
மாமேவுமிதழிநறு மழைதுளிப்பமணிமன்றந்
தாமேவிநடம்புரியுந் தனிப்பொருளைவணங்குவாம்.

(இ-பு.) தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமதேவனும் திருமாலும் போற்றிசெய்யவும் இயற்கையாகவே வாசனையுள்ள அளகபாரத்தையுடைய சிவகாமித்தாயாருடைய வளமையுள்ள நீலோற்பல மலர்போன்ற திருக்கண்கள் களிப்படையவும் அழகுபொருந்திய கொன்றைப் பூமாலையானது தேன்மழையைத் துளிக்கவும் சிற்சபையைவிரும்பி நடனஞ்செய்கின்ற ஒப்பில்லாத மெய்ப்பொருளாகிய நடேசமூர்த்தியை யாம் வணங்குவாம்-என்றவாறு. (௧)

சிவகாமித்தாயார்துதி - வேறு.

பூரணியைத்தனுகரண புவனபோகங்கடமைப் புரக்குமாயா
காரணியைப்பசுபாச மலமகல மெய்ஞ்ஞானக் கண்ணளிற்றோன்றும்

ஆரணியைப்பரமசிவ னானந்த நடத்தின்வைத்த வருட்கண்ணாளைச் சேரணிகொள்பொழிற் றில்லைச் சிவகாமசுந்தரியைச் சிந்தைசெய்வாம்.

(இ-பு.) எல்லாவுயிர்களிடத்தும் நிறைந்திருப்பவரும் - தனுகரண புவனபோகங்களை ஆத்துமகோடிகளுக்குத்தந்து முறைதவறாமல் காத்துக் கொண்டிருக்கிற மாயைக்கு அதிஷ்டானமாயிருப்பவரும் - பக்குவாத்து மாக்களுடைய ஆணவமலம் நீங்கினவிடத்து விளங்குகின்ற மெய்ஞ்ஞானப் பார்வைக்குத் தரிசனமாகின்ற வேதங்களால் துதிக்கப்பட்ட பரமசிவன் நிருத்தஞ்செய்கின்ற ஆனந்த நடனத்தை இடைவிடாது பார்த்துக்கொண்டிருக்கும் கிருபாநோக்கத்தையுடையவருமாகிய - சிறப்பினையும் அழகினையும் பொருந்திய சோலைசூழ்ந்த தில்லைவனமென்னும் திவ்வியக்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும் சிவகாமித்தாயாரை யெப்போதும் யாம் தியானிப்போம்-எ-று.

தனு- சரீரம். கரணம் - தத்துவங்கள். புவனம் - உஉ௪. போகம் - போகங்கள். பசு- ஆன்மா. பாசம் - ஆணவமலமாம். எனவே- ஆன்மாக்களுக்குச் சரீரத்தைக்கொடுத்துப் புவனங்களிற் பிறப்பித்துப் போகங்களை அனுபவிக்கச்செய்வது மாயையென்றும் - அந்த மாயையைத் தொழில்படுத்துவது பராசத்தியென்றுஞ் சொல்லப்படும். (௬)

கணபதிதுதி - வேறு.

பிஞ்சுமதிச்சடாமகுடப் பெருமானைப்பிரியா
வஞ்சியிமவான்றவத்தின்வருபேடைமயினுதவும்,
அஞ்சிறைவண்டிரைத்துவிழுமருவிமதமொழுகக்கவுட்
குஞ்சரவெம்புகர்முகத்துக் குரிசிலடியிணைதொழுவாம்

(இ-பு.) இளந்திங்களையணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவனை விட்டு நீங்காத பூங்கொடிபோன்ற திருமேனியையுடையவரும் மலையரையன் தவத்தினால் அவனுக்குப்புத்திரியாகத் திருவவதாரஞ்செய்த மயிற் பேடைபோன்றவருமாகிய பார்வதியார் அருளும் புத்திரராகிய அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் இசைபாடிக்கொண்டு உண்ணுதற்காக ஒன்றின்மேலொன்றாகவிழுகின்ற மதநீர் மலையருவிபோலொழுகும்படியான கவுட்குழியையுடையதாய்ப் புகர்நிறந்தங்கிய வெவ்விய யானைமுகத்தையுடைய கணபதியின் இரண்டுதிருவடிகளையும் யாம்தொழுவோம்-எ-று.

முதலில் விநாயகரைத்துதிசெய்து மறுபடியும் அவரைத் துதிசெய்வதற்குக் காரணமென்னவென்றால்? விநாயகர் திருவவதாரமானபோது

அவருக்குப் பரமசிவன் கணங்களுக்கெல்லாம் பதியாயிருக்குஞ் சிறப்பருளித் தேவர்கள் முதலாகிய எவர்களேயானாலும் ஆரம்பத்தில் உன்னைத்துதிசெய்து பின்பு ஒருகருமஞ்செய்யத் தொடங்குவார்களானால் அந்தக்கருமம் இடையூறின்றி முற்றுப்பெறுமென்று வரமருளிச்செய்தனர் முதல் ஆரம்பத்தில் விநாயகரைத் துதிசெய்து ஒருகருமஞ் செய்யத் தொடங்குவது சைவசமயத்தில் நியதியாக வருகின்றதாதலால் இந்நூலாசிரியரும் தாம் செய்யத்தொடங்குநூலிடையூன்றி யினிது முடியும் பொருட்டு ஆரம்பத்தில் விநாயகரைத் துதிசெய்து, தந்தை- தாய் - மக்கள் - என்று முறைமைபற்றிச் - சிவம் - சத்தி - இருவரையுந்துதிசெய்து பின்னும் விநாயகரைத் துதிசெய்தனர் இதுவேகாரணமென்றறிக(௭)

சுப்பிரமணியர்துதி - வேறு.

இறுதியெனத்தகுவியற்போய்க்கைமையெய்தவயிராணிமுன்பமெய்தப்
பிறைகளொருநான்கனைய திறன்மருப்புவெள்ளானைப்பிடரினேறி
மறுகுதொறும்பொன்னுலகின் வானவர்கோன்பவனிவரச்சூரன்மாயச்
சிறிதுகடைக்கண்சிவந்தசேவகன் கிண்கிணிச்சரணஞ்சென்னிவைப்பாம்.

(இ-பு.) அசுரர்சந்ததி யென்பதிந்தமட்டில் அழிந்துபோயதென்றுசொல்லும்படி அந்த அசுரர் மாதர்களெல்லாம் கைம்பெண்களாகவும் - இந்திராணிமுதலாகிய தேவஸ்திரீகள் சந்தோஷத்தையடையவும் - நான்கு பிறைகளிருந்து அதுகளை யொன்றாகவைத்தாற்போ லிராநின்றவண்மை பொருந்திய தந்தங்களையுடைய வெள்ளையானையாகிய ஐராவதத்தின் பிடரியின்மேல் ஆரோகணித்துக்கொண்டு பொன்னுலகத்தின வீதிகள் தோறும் தேவேந்திரன் பவனிவரவும் - சூரபன்மன், இறந்துபோகவும் நேத்திரங்களிடமாகக் கோபக்குறியைச்சிறிதுகாட்டிய சுப்பிரமணியருடைய கிண்கிணி யணிந்ததிருவடிகளை யெமதுசிரத்தில் சூட்டிக்கொள்வாம்-எ-று. செம்மையும் கறுப்பும் கோபக்குறியென்று சூத்திரமிருப்பதினால் கடைக்கண்சிவந்த வென்பதற்குக் கோபக்குறியெனப் பொருள் கூறப்பட்டது. (௮)

திருஞானசம்பந்தசுவாமிகள்துதி - வேறு.

சுழியும்புனற்செஞ் சடையாளர் பங்கிற்றோகை ஞானமுலைச்சுவை
வழியுங்கொழும்பாற் கடலுண்டு பாவக்கோடை மலிந்துசுட
ஒழியுங்கரும்புல் லெனவுலக மொடுங்காதோங்கத் தண்ணளியாற்
பொழியுங்கவின்றக் காளிமுகில் பொன்னங்கமலத் தாடொழுவாம்

(இ-பு.) சுழிகளைச்சுழிக்கும் நீருருவமாகிய கங்கையை அணிந்த செஞ்சடையையுடைய பரமசிவன் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் மயிர்சா

யலேயுடைய பார்வதிதேவியின் இரண்டு திருமுலேயிடத்தினின்றும் பெருகாநின்ற வளமையுள்ள ஞானப்பாற்கடலுண்டு பாவமாகிய கோடையிருந்துசுட அக்கோடையினல் கருகிப்போம் புல்லேப்போல இவ்வுலகமானது நரகத்திலவிழுந்து வெம்பாமல் மோக்ஷத்தையடையும்படி அதிசாந்தமாகிய கிருபையினலே தேவாரமாகிய மழையைப்பொழிந்தமேகமென்று சொல்லத்தக்க சீகாழியிற் றிருவவதாரஞ்செய்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகளுடைய பொன்னிறமுள்ள திருவடித்தாமரைகளை யாம்தொழுவோம்- எ-று.

காளிமுகில் என்பதில் காளி என்று மேகத்தைக் குறிக்கும்போது கருமைநிறமுள்ளதாகவும் - திருஞானசம்பந்த சுவாமிகளைக் குறிக்கும்போது காளியென்னும் பெயருள்ள தலமாகவும் - பொருள்கொள்ளப்படும்,காளிதனென்கிற ஒருநாகராசனல் பூசிக்கப்பட்ட தலமாதலால்-அது சீகாளியெனவோர் பேர்பெற்றுச் சீகாழியென வழங்கப்படுகின்றது()

திருநாவுக்கரசுசுவாமிகள்துதி.

ஆரணநன்னிலேயறியாச்சாக்கியர்களருங்கற்றூண்
பாரறியமருங்கசைத்துப் படுநீரிற்புகவுந்த
வாரணநல்லுரியானே யேத்திமுந்நீர் வடதளிரின்
நாரணன்போலினிதமர்ந்த நாவலன்பொற்றுடொழுவாம்

(இ-பு.) வேதத்தினுண்மைப்பொருளை யறியாத சமணர்கள் சுமப்பதற்கரிய கற்றூணை இவ்வுலகத்தாரெல்லா மறியும்படி அரையிற்கட்டிச்சமுத்திரத்தினுக்கு ளாழும்படிபோட யானையினதுதோலை நல்லபோர்வையாகப் போர்த்திருக்கும் பரமசிவனைத் துதிசெய்து அந்தக்கற்றூணே தெப்பமாக மிதக்கும்படி (திருப்பாற்கடலில் ஆலிளந்தளிரிற் பள்ளிகொண்டிருக்கும் விஷ்ணுவைப்போல) மகிழ்ச்சியுடனிருந்து திருப்பாதிருப்புலியூர்க்கடுத்தகெடிலநதியில்கரையேறிய திருநாவுக்கரசு சுவாமிகளுடைய அழகிய திருவடிகளை யாம்தொழுவோம்-எ-று. (௬)

சுந்தரமூர்த்திசுவாமிகள்துதி - வேறு.

தாதுநிறைக்கும்பசுந்துளபத்தாமத்தோனுஞ்சரோருகச்செம்
போதினகத்துச்சகமீன்றபுத்தேடானுமறியானை
மாதினிடத்தின்முனிவொழிய வாரூர்ச்செம்பொன்மணிமறுகிற்
றூதுநடத்துங்கவிராசன் றுணைத்தாட்கமலந்தொழுதிடுவாம்

(இ-பு.) மகரந்தங்களால் நிறையப்பட்டிருக்கும் பசியதுளபமாலையணிந்த திருமாலும் செந்தாமரைப்பூவி லிருந்துகொண்டு உலகங்களைப்படைக்கும் பிரமதேவனும் அறியக்கூடாத பரமசிவனைப் பரவைநாச்சியார் கொண்டிருந்த ஊடல்நீங்கும்படி அவரிடத்திற்குத் திருவாரூரின் செம்பொன்களும் ரத்னங்களும் நிறைந்துள்ள திருவீதியில் தூதுபோம்படி அனுப்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் யாம் வணங்குவோம்-எ-று. (௭)

மாணிக்கவாசகசுவாமிகள்துதி - வேறு.

சீதவார்பொழிற்றில்லேப்பரமனுக், சோதுநற்றமிழ்க்கோவையுரைசெய்த
நாதன்மாணிக்கவாசகனுண்மலர்ப், பாதபங்கயமேத்திப்பரவுவாம்.

(இ-பு.) குளிர்ச்சிபொருந்தியதாய் வானளாவுமோங்கிய சோலைசூழ்ந்த தில்லையென்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் ஆனந்ததாண்டவஞ் செய்கின்ற நடேசமூர்த்திக்கு யாவருந் துதிசெய்கின்ற நல்லதமிழினல் திருக்கோவையாருரைசெய்த நாதனகிய மாணிக்கவாசக சுவாமிகளுடைய விடியற்காலத்தில் மலர்ந்த தாமரைமலரையொத்த திருவடிகளை யாந்துதிசெய்து புகழ்வோம்-எ-று. (௮)

குருவணக்கம்.

வேறு.

தேசான சிவஞானச் செஞ்சுடரான் மும்மலமா
மாசான விருளகற்றி மன்னுயிரைப் புரந்தளித்துத்
தூசானை யுரியசைத்தோன் றொல்சமய நிறுத்துநிம்ப
யீசானி யாமுனிவ னிணையடியை யிறைஞ்சுவாம்.

(இ-பு.) சோதிமயமான சிவஞானமென்னுஞ் செழுமையுள்ளசூரியனல் ஆணவம் - கன்மம - மாயை - என்கின்ற மும்மலமாகிய குற்றமுள்ள அஞ்ஞான இருளைநீக்கி - நிலைபெற்ற உயிர்களைரக்ஷித்து யானைத்தோலைப் போர்வையாகப் போர்த்தருளிய பரமசிவனது பழமையாகிய சைவசமயத்தை நிலைநிறுத்திய - பெருமைபொருந்திய நிம்பஈசானமுனிவருடைய இரண்டு திருவடிகளையும் யாம் பணிவாம்-எ-று.

நிம்ப யென்பது - வேப்பந்தார் - தொல்சமய நிலைநிறுத்துமென வும்பாடம் - சிவம் - இத்தன்மையதென்றும் - சீவன் இத்தன்மையதென்றும் ஆணவமலம் இத்தன்மையவென்றும் யாவருக்குந் தெரிவித்துச் சைவப் பற்றுண்டாகச் செய்தலால் சைவசமயத்தை நிலைநிறுத்துகின்றவனெனச் சொல்லப்பட்டது. (௯)

அவையடக்கம் - வேறு.

அஞ்சன மிடற்றிறைவன் னிலைமுற்று மளவிட்டன்றிச்
செஞ்சொலின வழுத்தொணாதேல் விதியும்வாய் திறக்கொணாது
விஞ்சைய ரெவருந்தத்த மதியினின் விபுலங்காறும்
வஞ்சமற் றுரைக்கலாமே லடியனும் வழுத்தலாமால்.

(இ-பு.) காளகண்டத்தையுடைய பரமசிவனே தேவரீருடை
நிலைமை முழுவதையும் சாஸ்திரங்களினால் அளவிட்டறிந்து
ஙாற் சொல்லவேண்டுமேயல்லது அளவிட்டறிவதற்குமுனசொ
ன்னுதேயென்றால் வேதங்களையெல்லா மோதியுணர்ந்த பிரம
வரீருடைய நிலைமைமுழுவதையுஞ் சொல்லுகிறேனென்று சங்க
னின்றால் வாயைத்திறக்கவொண்ணாது ஆனால் அப்படி வேண்டு
புலவர்களெல்லாரும் தங்கள் புத்தியின் விசாலமட்டும் வஞ்சக
சொல்லலாமென்றால் அடியேனுந் தெரிந்தமட்டிற்சொல்லலாம்-

இதுவுமது.

தொல்லையமுனிபாற்கேட்டுச் சூதமாமுனிவன்சொன்ன
நல்லமுற்காதைதன்னை நான்றமிழ்வழிநடாத்தல்
கொல்லுலைவயிரவூசி குருமணிகுழித்தவாயின்
மெல்லியபஞ்சினூல்போம் விழுத்தகவுடையதம்மா,

(இ-பு.) பழமையாகிய வியாசமுனிவரிடத்தில் கேட்டுப் பொ
பொருந்திய சூதமுனிவர் முன்பு சொல்லிய பழைய நல்லசிவ ச
தைப் பின்பு நான் தமிழினாற்சொல்லுதல் கொல்லனுலைமுகத்தி
யப்பட்ட கூர்மையுள்ள ஊசியினால் துவாரஞ்செய்யப்பட்ட மே
யாகியரத்னத்தின்துவாரவழியில் மிருதுவாகிய பஞ்சுநூல் நுழை
மேன்மையையுடையதா யிருக்கின்றது-எ-று.

இதுவுமது.

பற்பியரவம்பாரார் முள்ளெண்ணார்பங்கந்தேரார்
பொற்புணர்நல்லைத்சார்ந்து பொலிவெண்ணிமலர்கொள்வார்போ
உற்றுணர்வில்லேன்செய்த பனுவலுள்ளூறுதவோரார்
கற்றுணர்மாந்தர்கொள்வர் கடவுடன்சரிதமென்றே

(இ-பு.) பாம்பிருக்குமென்று எண்ணாதவர்களாயும், முள்ளுக
ளில் தைக்குமேயென நினையாதவர்களாயும், சேற்றிலிருக்கின்
ன்று யோசியாதவர்களாயும், வாசனையின் மிகுதியைக்கருதிப் பொ
ருந்திய கொத்துகளையுடைய செந்தாமரையி லிடத்துச்சென்று

மலரைப் பறிப்பவர்போல், அறிவில்லாதயான் செய்தபாடலினிடத்துக்
குற்றங்களையெண்ணி நீக்கிவிடாமல் கற்றுணர்ந்த முன்னோர்கள் இதுசி
வசரிதமென்று மனம்பொருந்தி ஏற்றுக்கொள்ளுவார்கள்-எ-று. (௰௨)

சிறப்புப்பாயிரம்.

கறங்குதிரைப்பெருங்கடல்சூழ் புவனிபுரந்திகல்கடிந்துகலியைமாற்றி
மறந்திகழவிலங்கிலைவேல் வரதுங்கராமனியன்மதுரைச்சங்கஞ்
சிறந்தவறுகாற்பீடந்தனிற்பிரமோத்திரகாண்டந்தென்சொலாக்கி
யறந்தழைக்குங்கவிஞர்செவிக்காரமுதமாகவரங்கேற்றினனே

(இ-பு.) ஒலிக்கின்ற அலையையுடைய பெரியதாகிய சமுத்திரஞ்சூழ்
ந்த இவ்வுலகத்தைக்காத்துப் பகைவனைப் போர்முகத்தில்வென்று பாவ
ங்களைநீக்கி வீரம்விளங்கப் பிரகாசிக்கும் தகட்டுவடிவாகிய வேலேந்தி
ய வரதுங்கராம பாண்டியமகாராசன் பிரமோத்திர காண்டத்தைத் த
மிழாற்செய்து இயற்றமிழ்பயின்ற மதுரைச்சங்கத்தில் சிறப்புற்றிருக்கு
ம் அறுகாற்பீடத்திருந்து தருமகுணமிகுந்த புலவர்கள் காதுகளுக்குக்
கிடைப்பதற்கரிய அமுதம்போல மதுரிக்கும்படி அரங்கேற்றினன்-எ-று.

கடவுள்வாழ்த்து - முற்றிற்று.

உ

சிவமயம்.

முதலாவது.

பஞ்சாட்சரமகிமையுரைத்த அத்தியாயம்

வேதபாரகர் முனிவரர் வேள்வியாங் கியற்றப்
போதினன்முகத் திறையுறை சென்னியிற் புனையாச்
சீதவாம்பொழி னைமிசா ரணியத்தைச் சேர்ந்தாங்
காதிவேள்விசெய் விதிமுறை யியற்றுவ ரமைந்தார்

(இ-பு.) வேதபாரகராகிய முனிவர்கள் வேள்விசெய்யவிரும்பித் மரைப்பூவிலிருக்கும் நான்குமுகங்களையுடைய பிரமதேவனுடைய தாரத்தைச் சிரசில் ஏற்றுக்கொண்டு நைமிசாரணியமென்னும் குளிர் பொருந்திய மேலுயர்ந்த பொழிலிடத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவிதியாற் சிவயாக மௌனஞ்செய்யத் தொடங்கினார்கள்-எ-று. முதலிலிருக்கும் - ஆங்கு - அசை.

ஆயகாலையிற் புராணமீ ரொன்பது முறைந்த
தூயமாதவச் சூதமா முனிவந்து தோன்ற
வேயமாதவர் முனிவனுக் கிருக்கையிந் தெமக்கு
நேயமாகிய சிவகதை நிகழ்த்துதியென்றார்

(இ-பு.) அவர்கள் வேள்விசெய்துகொண்டிருக்கும்போது பதினெ புராணமுஞ்சொன்ன பரிசுத்தமானபெருமைபொருந்திய தவமுள் தமுனிவர்வந்துதோன்ற அவ்விடத்திலிருந்தமுனிவர்கள் அவருக்கு னங்கொடுத்து வீற்றிருக்கச்செய்து எங்களுக்கு அன்பு தருவதாகிய கதையருளிச்செய்யுஞ் சுவாமியென்றார்கள் - எ-று. பதினெண்பு ங்களாவன, மச்சியம் - கூர்மம் - வராகம் - வாமனம் - [illegible] வம் - பாகவதம் - சைவம் - இலிங்கம் - பௌடிகம் - நாரதீயம் - டம் - பிரமகைவர்த்தம் - காந்தம் - மார்க்கண்டேயம் - ஆக்கினே பிரமாண்டம் - பதுமம் - என்பவைகளாம்.

நன்றுநன்றுநீர் மொழிந்தது நானிலத் தவர்போற்
பொன்றனேனுறு தலொழிவிலாத் தேவரைப்போற்றன்
அன்றியீசன்கன் காதையை விரும்பினீ ரதனுள்
ஒன்றுகேட்டி மதன்பய னளவையா ருரைப்பார்

(இ-பு.) முனிவர்களே நீங்கள்சொல்லிய வார்த்தை மிகவும் நன்று மிகவும்நன்று - இவ்வுலகத்தி லிருப்பவர்கள்போல இறப்பதும் பிறப்பதும் ஒழியாத மற்றைத் தேவர்களைப் போற்றுதல் செய்யாமல், ஆதியந்தமில்லாத பரமசிவன் சரித்திரத்தைக் கேட்க விரும்பினீர்கள், அந்தச்சிவசரித்திரம், அநந்தமாம், அதனுள் ஒரு சரித்திரங் கேட்டாலும், அதனால் வரும்பயனிவ்வளவென்று யார் அளவிட்டுச் சொல்லுவார்கள்-எ-று.

ஆதில் சீர்க்கதை பற்பல வறைந்தன மினியாம்
பேசுநற்கதை பின்னுமன் திருவுரு வான
மாசிலஞ்செழுத் தடைவுசொன் மான்மிய முதலா
ஈசனற்கதை கேட்பதே யறமென்ப நீரு

(இ-பு.) குற்றமில்லாத புகழையுடைய அநந்தமாகிய சரித்திரங்களை உங்களுக்கு முன்னஞ்சொன்னோம், இப்பொழுது நாம் உங்களுக்குச்சொல்லும் நல்ல சரித்திரமாவது, பரமசிவனுடைய திருவுருவமாகிய பஞ்சாக்ஷரத்தின் முறைமையைச் சொல்லுகின்ற மான்மிய முதலாகப் பரமசிவனது நல்லசரித்திரத்தைக் கேட்பதே அறமென்று சொல்லுவீர்கள்-எ-று. (௪)

இந்துசேகரன் றளமுஞ் சிவநிசி யியல்பும்
பந்தநீர்பிர தோடத்தின் பூசையின் பலனும்
வந்தனைக்குறு சோமவா ரத்தினமான் மியமும்
அந்தமாதியி லாதவ னடியவர் திறமும்

(இ-பு.) சந்திரசேகரனாகிய பரமசிவன் வீற்றிருக்கும் ஸ்தலமான்மியமும், சிவராத்திரி மான்மியமும், பாசபந்தத்தை நீக்குகின்ற சனிப்பிரதோஷ பூசையினால்வரும் பலனும், ஆராதனைக்குரிய சோமவாரவிரத மான்மியமும், ஆதியந்தமில்லாத பரமசிவனுடைய அடியவர் மான்மியமும்-எ-று.

பிரதோஷம் - என்பது - இராத்திரியின் முன்காலம் அது அஸ்தமிப்பதற்குமுன் (௩.௩) நாழிகையும், அஸ்தமித்தபின்பு (௩.௩) நாழிகையுமுள்ள காலமாம். (௫)

தெரிவருஞ்சிவ கவசமும் பூதியின் செயலும்
புரியும்பத்தியி னியதிசெய் பூசனைப் பொலிவும்
ஒருவுகற்பினள் பழியகற் றுமாமகேச் சரமும்
அரனெனத்தகு மக்கமா மணியினை தடைவும்

(இ-பு.) எளிதாக அறிதற்கரிய சிவகவசமான்மியமும், விபூதிமான்மிய மும், விரும்புகின்ற பத்தியினால் நியதியாகச் செய்கின்ற சிவபூசைமான்

மியமும், கற்பு நீங்கியவனுடைய பழி நீக்கிய உமாமகேசுவரவிரத மியமும், சிவனென்றே சொல்லத்தக்க பெருமைபொருந்திய ருத்திராக்ஷமணியின் மான்மியமும் - எ-று.

வேதநான்கினும் விளங்குசீ ருருத்திர் வீற்ம்
ஓதுகேணிவை கேண்மின்க ளெனத்தொகுத் துனாயா
ஆகியஞ்செழுத் தடைவரு மான்மியமுதலாச்
சூதமாமுனி முனிவர்முன் வகுத்தனன் சொன்னான்

(இ-பு.) நான்கு வேதங்களாலும் சொல்லப்படுகிற ஸ்ரீருத்திரமகிமையுமுஞ், சொல்லுகின்றேன் இந்தச் சரித்திரங்களைக் கேளுங்களென்று தொகுத்துச் சொல்லிப் பின்பு வாக்குக்கடங்காத சிவசொரூபமாகிய பஞ்சாக்ஷர மான்மியமுதலாகச் சூதமுனிவரானவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு வகுத்துச்சொன்னார் - எ-று.

தவங்கள் வேள்விகண் முதலவாந் தருமவேள் விகளில்
அவங்கண் ணீக்குமெய்ஞ் ஞானமா வேள்வியே யதிகம்
பவங்க ணீக்குமவ் வேள்வியின் பாற்படு செபமாஞ்
சிவங் கலப்புறு மந்திர வேள்வியைச் செப்பின்

(இ-பு.) தவங்கள் - வேள்விகள்-முதலாகிய தருமவேள்விகளில் (பிறவிக்குக் காரணமாகிய) பயனில்லாத முயற்சிகளை நீக்கத்தக்க பெருமையுள்ள மெஞ்ஞான வேள்விகளே அதிகம், ஜநநங்களை நீக்குகின்ற அவ்வேள்விகளை யடுத்த ஜபமாகிய நன்மைபொருந்திய மந்திரவேள்விச்சொன்னால்-எ-று.

முக்கணுடைய கனமரரின் முதல்வனு மதுபோற்
றக்கமந்திர மெவற்றினுந் தலைமையைந் தெழுத்தே
தொக்கநான்மறைப் பிரணவ மாதியாத் தொடங்கி
யொக்கவோதியே பாகதி யளப்பில ருற்றார்

(இ-பு.) திரிநேத்திரங்களையுடைய பரமசிவன் தேவர்களுக்குள் முதல்வனும் அதுபோல் தகுதியுள்ள எல்லாமந்திரங்களிலும் பஞ்சாக்ஷரமே முதன்மையாம். (இந்தப் பஞ்சாக்ஷரத்தை) வியாசமுனிவரால் நான்காகத்தொகுக்கப்பட்ட வேதங்களிற் சொல்லப்படுகிற பிரணவமாகிய ஓங்காரந் தொடங்கிச் சேர்த்தோதி-அநந்தம்பேர் மோக்ஷமடைந்தார்கள்-எ-று.

வகாரம்- உம்- தெளிவு.

இன்னமந்திரத் தோரெழுத் தின்பய னெல்லை
யன்னதூர்தியுந் திருமறு மார்பனு மறியார்

முன்னை நான்மறை தனித்தனி மொழிவது மிதுவே
மன்னி யெங்கணுஞ் சிவன்றிரு வுருவமாய் வயங்கும

(இ-பு.) இத்தன்மையுள்ள பஞ்சாக்ஷரத்தில் ஒரு அக்ஷரத்தின் பயனெல்லையினைப் பிரமதேவனும் திருமாலுமறியார்கள்- பழைமையாகிய நான்குவேதங்கள் சொல்வதா யிந்த மந்திரந்தனதுவே-இது அண்டபிண்டமெங்கும் நிலைபெற்றுச் சிவன் றிருவுருவமாய் விளங்கும்-எ-று. (௰)

ஐந்தெழுத்தினுண் ணெறியினா லாருயிர் சென்று
சிந்தை காணருஞ் சிவபதஞ் செறிந்திடுந் திறத்தால்
இந்தமந்திர நிலைப்பரப் பிரமமே யென்பர்
வந்தனைத்தொழிற் சச்சிதா நந்தநின் மயத்தோர்

(இ-பு.) இப்பஞ்சாக்ஷரத்தின் அநுஷ்டிக்கும் முறையைக் (குருமுன்னிலையில்) வினவும் - அழிவில்லாத வுயிரானது சென்று மனதுக்கெட்டாத சிவபதத்தைச் சேர்ந்திடும் தன்மையால் - இந்த மந்திரத்தினுண்மைப் பரப்பிரமமே யாகுமென்று - வந்தனைத் தொழிலையுடைய சச்சிதாநந்தநின்மயர்களாகிய பெரியோர்கள் சொல்லுவார்கள்-எ-று. (௰௧)

கருப்ப யோனியிற் சுழிப்படு பவக்கடல் கடப்பப்
பொருப்பி னெம்பிரா னுயிர்க்கெலாம்புணையெனப்புகன்ற
விருப்ப ஞானவஞ் செழுத்தினை யுளத்திடை வித்திற்
றருப்பை சுட்டிடும் வேள்வியேன் றானமேன்றவமேன்

(இ-பு.) கருத்தங்கும் எண்பத்துநான்கு லக்ஷயோனி பேதமாகிய (பிறவியென்னும்) சுழிபொருந்தி ஜநநசாகரத்தைக்கடக்கத் தெப்பமாக- உயிர்க்கெல்லாங் கயிலாயகிரியில் வீற்றிருக்கும் எங்கடவுளாகிய பரமசிவனருளிச்செய்த விருப்பமுள்ள ஞானமயமான பஞ்சாக்ஷரமென்னும் வித்தை மனமென்கிற நிலத்தில்விதைத்தால் (மோக்ஷமாகிய பயனைத்தரும்) ஆதலால் தருப்பையைச்சுடும் வேள்வியேன்-தானமேன்-தவமேன் (வேண்டுவதில்லை) எ-று.

வித்தின் - எனக் கூறினமையால் - விதையும் நிலமுங் கூறப்பட்டன. விதைத்தலாவது - தியானித்தல். (௰௨)

பருதிவந்தெழா வளவுங் டிருளெனப் பவமுஞ்
சுருதியஞ்செழுத் துணர்கலா நாளெலாந் தொடருங்
கருதிநான்மறை யந்தத்தும் வேதத்தின் கண்ணும்
ஒருதனிப்பெருங் கடவுளஞ் செழுத்தலா துளதோ

(இ-பு) சூரியனுதயமாகாதவரையில் இருள்நீடித்திருப்பதுபோல்-வேதத்திற் சொல்லுகிற பஞ்சாக்ஷரத்தையறியாத நாளெல்லாம் ஜநநமரணது

தொடரும். என்னுமிடத்தில்-வேதாந்தமாகிய உபநிடதத்திலும்வேத ங்களினிடத்தும் - ஒப்பற்ற பெருங்கடவுளாகிய பரமசிவனது பஞ்சா க்ஷரமல்லது வேறுண்டோ (இல்லை) எ-று. (௰௩)

முத்தி நன்னெறிக் கொருதுணை மோகவா ரிதிக்கு
வைத்த செஞ்சிகை வடவனல் வினைவனத் திற்குப்
பொத்தி நுங்குவெங் கதழெரி புனைமதிக் கண்ணி
யத்த னெங்கையஞ் செழுத்திது கடைப்பிடித் தறிவீர்

(இ-பு.) திங்களாகிய மாலையைத்தரித்த அத்தனாகிய எம்மையனது ப ஞ்சாக்ஷரமானது - நல்ல மோக்ஷவழிக்கு ஒப்பற்ற துணையாம். மோக மாகிய சமுத்திரத்துக்கு அமைத்துவைத்த - செஞ்சிகையையுடைய வட வாமுகாக்கினியாம், இருவினையாகிய வனத்திற்கு வியாபித்துக்கொண்டு மிகுந்த வேகமாக எரிக்காநின்ற வெப்பமுள்ளதீயாம். இதனைத்தெளிவா கக்கொண்டறிவீர்கள்-எ-று.

வடவாமுகாக்கினியானது-பெட்டைக்குதிரையின் முகம்போல் வுருவுமுள்ளதாகச் சமுத்திரத்தினிடத்தி லிருந்துகொண்டு அதில் நீர் பெருகாதவண்ணம் வற்றச்செய்வதாகிய அக்கினியாம்.

மூன்றீக்கிய சிவமுன்னர் நமவினை யுரைக்கின்
ஞான மெய்திடு மவர்க்கு நம்பனூர் நயக்குந்
தான மெய்திற் குரவராற் பெற்றவர் தங்கட்
கான சித்தியுமுத்தியு மக்கணந் தாமால் (௰௪)

(இ-பு.) மும்மலங்களையும் நீக்கிய - சிவ என்பதன்முன் நமவென்ப தைச் சேர்த்துச் ஜபித்தால் அவர்களுக்கெல்லாம் ஞானபதங் கிடைக் கும் - பரமசிவன்விரும்பித் (திருக்கோவில்கொண்டுவீற்றிராநின்ற) ஆ லயத்திற்சென்று நல்லகுருவினால் உபதேசஞ்செய்துகொள்ளப் பெற்ற வர்களுக்கு விரும்பியவைகளையெல்லாங் கொடுக்கத்தக்கதான அஷ்டமா சித்திகளும் மோக்ஷமும் அப்பொழுதே கிடைக்கும்-எ-று. ஆல்-அசை. ()

வேறு.

தாதவிழ் கடுக்கையஞ் சடில நாயகன்
ஆதியி லவின்றநல் லஞ்செழுத்தையு
மேதகு குரவனு லுணர்ந்தோர் வேந்தன்முன்
றீதறுந் துய்த்தமை செப்பு வாமரோ

(இ-பு.) மகரந்தத்தோடு மலர்ந்த கொன்றைப் பூமாலையணிந்த சடாம குடத்தையுடைய பரமசிவன் - ஆதியில் அருளிச்செய்த நல்ல அஞ்செ ழுத்தையும் மேன்மைபொருந்திய குருவினாலறிந்து ஒருராசனுவ

ன் பாவங்களைநீக்கிக் கடைத்தேறிய சரித்திரத்தை- யாம்சொல்லுகிறோ ம் (என்று சூதமுனிவர்சொல்லுகின்றார்) எ-று. அரோ - அசை. (௰௬)

தேங்குபோரழியுந் திகிரிக் குன்றமொத்
தோங்குநீ ரகழியொ டுயரு மூதெயில்
பாங்கர்சூழ் மதுரையம் பதிக்கு மன்னவன்
வாங்குவி லெதுகுல மரபிற் றோன்றினோன்

(இ-பு.) நிறைந்துள்ள பெருப்புறக்கடலையும் - சக்கிரவாளகிரியையு மொத்து மிகுந்த நீரையுடைய அகழியுடன் - உயர்ந்த பழமையாகிய ம தில்லானது புறத்தில் சூழ்ந்திருக்கும்படியாகிய - அழகிய மதுராநகரத்து க் கிறைவன் - போர்முகத்தில் வளைக்கும் வில்லையுடைய எதுகுலமரபி ற் பிறந்தவன்-எ-று. (௰௭)

வடுவிலாப் பெரும்புகழ் வயங்க வையகத்
திடுபெயர்த் தசாருக னென்னு மாண்பினான்
றொடுகழற் றாளினன் புலவுச்சோரிவேல்
அடுகடற் றானையா னரி மொய்ம்பினான்

(இ-பு.) குற்றமில்லாத பெரிய புகழானது உலகமெங்கும் விளங்கத்- தசாருகனென்று சொல்லப்பட்ட பெயர்கொண்ட மாட்சிமையுடையவ ன் - வீரகண்டையணிந்த காலையுடையவ, பகைவருடைய உதிரத்தி ல் தோயத்தக்க வேலால் எதிர்த்தவரைக்கொல்லுகிற சமுத்திரம் போ ன்ற சேனையையுடையவன் சிங்கத்தையொத்த பலமுள்ளவன்-எ-று. ()

காவலின் மனுமுறை நடாத்து மாணையான்
வாளினிற் றெவ்வர்தம் வலியை மாற்றினோன்
றோளினில் வரைகளைத் துளக்கு மாற்றலான்
வேளினின் வனப்பினான் றவத்தின் மேன்மையான்

(இ-பு.) தன் காலத்தில் மனுமுறை தவறாதபடி நீதி செலுத்திய ஆக் கினை யுள்ளவன தன்கைவாளினால் பகைவருடைய பலங்களை மாற்றி னவன், தன தோள்களால் மலைகளை யசைக்கத்தக்க பராக்கிரமத்தையு டையவன் மன்மதனையொத்த அழகுள்ளவன், தவத்திலு மேன்மை பொருந்தியவன்-எ-று. (௰௮)

இத்தகை மன்னவ னிளநிலா நகை
முத்தணி முகிழ்முலை முளரி வாண்முகக்
கொத்தலர் நறுங்குழற் கோதை வேல்விழி
மெய்த்தவக் கொடியினை விதியின் வேட்டனன்

(இ-பு.) இப்படிப்பட்ட பெருமையுள்ள அரசனானவன் நிலவினது இளங்கதிரைப் பரப்புகின்ற ஒளிபொருந்திய முத்துமாலையணிந்த தாம ரையரும்பையொத்த தனங்களையும், செந்தாமரைமலர்போன்ற ஒளிபொ ருந்திய முகத்தையும், கொத்துகளாகிய மலர்களையணிந்த கறிய அளக த்தையும் வெற்பிமாலையணிந்த வேல்போன்ற கண்களையுமுடைய உண் மையாகிய தவத்தினுல் பிறந்த ஒரு கன்னிகையை வேதவிதிப்படி வி வாகஞ்செய்து கொண்டானில்-எ-று. (உ௰)

நல்கிய தாமமு நானத் தீபமு
மல்கிய மணவறை மலர்பெய் பாயலிற்
பல்கிய விருப்பினன் வளைக்கை பற்றலும்
ஒல்கிய கொடியென லொதுங்கிக் கூறுவாள்

(இ-பு.) காதிகளா லூட்டப்பட்ட அகிற்புகையும் கஸ்தூரிசேர்த்த தீ பமும் நிறைந்துள்ள மணவறையுள் மலர்கள் பரப்பிய சயனத்தி லிருந் துகொண்டு மிகுந்த விருப்பமுள்ளவனுகி வளையணிந்தவளைப் பற்ற வும் அவள் அசைகின்ற பூங்கொடிபோலப் பின்னொதுங்கிச் சொல்லு கின்றுள்-எ-று. (உக)

நின்னெடுந் தோள்வரை நெரும்பப் புல்லுதற்
குன்னருங் காதலென் னுளத்தின் றதலான்
மன்னகே ளொருதலைக் காம மன்னினர்க்
கின்னலே யன்றிமற் றின்ப மில்லையே

(இ-பு.) உன்னுடைய மலையொத்த புயங்களை அழுந்தப் புல்லுதற்கு நினைத்தற் கருமையாகிய ஆசையானது என்மனதிலில்லை ஆகையினுல் மன்னவனே கேள் - ஒருதலைக்காமத்தைப் பொருந்தினவர்களுக்குத் து ன்பமுண்டாகுமேயன்றி இன்பமுண்டாவதில்லை-எ-று. மற்று-அசைநிலை ஏ- ஈற்றசை.

ஒருதலைக்காமம் - என்பது - ஒருவரிடத்துண்டான ஆசை - ஏன் டு அரசனிடத்து மாத்திரமுண்டானமையால் ஒருதலைக்காமமென்னப் பட்டது. (உஉ)

சிந்தைவே றுயினர் பிணியிற் றேம்பினர்
புந்தியின் விரும்பிலார் விரதம் பூண்டுளார்
உந்தியிற் கருவினை ரொருவு பூப்பினர்
முந்துறு வலியினுன் முயங்கற் பாலரோ

(இ-பு.) மனது வேருகிய மாதர்களும், வியாதியினுல் வருந்திய மாத ர்களும், உள்ளத்தில் விருப்பமில்லாத மாதர்களும், விரதங்கொண்ட ம

ருக்கு மாதர்களும், வயிற்றிற் கருப்பமுள்ள மாதர்களும், ருதுக ளிந்தி யமாதர்களும், முந்துகின்ற பலாத்காரத்தினுல் அணையுந்தன்மையை உ டையவர்களல்லர்-எ-று. (உங)

கயங்கெழு நறுமலர் கயங்கு றுவதை
பயங்கெழு தேனுகர் சுரும்பின பான்மைபோல்
வயங்கிழை மகளிர மனந திருத்தியே
முயங்கினர்க் கன்றிமற் றின்ப முற்றுமே

(இ-பு) தடாகங்களிற் பொருந்திய வாசனையுள்ள மலர்கள் கசங்காம ல் வண்டுகள் தங்களுக்குப் பிரயோசனமாயுள்ள தேனைக் காலமறிந்து ண்ணுந் தன்மைபோல் - விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த தங்கட் குரிய மனைவிகளுடைய மனதைத் திருத்திப் புணர்ந்தவர்க்கல்லது-இன் பமுண்டாகுமோ உண்டாகாது-எ-று. மற்று-அசைநிலை. (உச)

என்றவள் கூறலு மெழுந்த காமநோய்
தன்றலை மீக்கொளத் தாங்க லாதவன்
குன்றென வீங்கிய குவவுத் தோளினுற்
பொன்றிகழ் வளமுலை வலிதிற் புல்லினுன்

(இ-பு.) என்றவள் சொல்லவும், தன் மனத்துண்டாகிய காமநோயான து தலைமேற் கொண்டதலால் அந்தக்காமத்தைச் சகிக்கமாட்டாதவனுய் அவ்வரசனானவன் மலைபோல உயர்ந்த திரண்ட தன் தோள்களால் அவ ளுடைய பொன்னிறமுள்ளதாய் விளங்குகின்ற அழகியதனங்களை வலு வில் புல்லினுன்-எ-று. (உரு)

புல்லிய காலையிற் பொறுது மாதவ
மெல்லியல் குளிர் தளிர் மேனி வெம்பியே
சொல்லுலை யழல்புகக் கொளுந்தி ரும்புபோல்
வல்லழலிறைத்தது மன்னன் மேனிமேல்

(இ-பு.) அப்படி புல்லியகாலத்தில் பொறுமல் மாதவத்தையுடைய அ ந்தமாதின் குளிர்ந்த தளிர்போன்ற மேனியானது வெதும்பிக் கருமான் உலைக்களத்தில் சேர்ந்ததினுல் அக்கினிமயமாய்ச் சுடுகின்ற இரும்புபோ லரசனவன் மேனிமேல் மிகுந்த வெப்பமுள்ள தீயையிறைத்தது-எ-று. ()

சாந்தமும் பொரிந்தது தாமந் தீந்தது
தோய்ந்தொளி ராமமுஞ் சுன்ன மானதால்
ஏந்தலும் வெருண்டெயர் விடுத்துப் புல்லிய
காந்தளந் தடக்கைகை யொடுங்கி வாடினுன்

(இ-பு.) அந்த வெப்பத்தினால் அரசன் மார்பிலணிந்திருந்த சந்தன
குழம்பும் பொரிந்து இரிந்தது பூமாலையுங் கருகியது அணியப்பட்டோ
ர்கின்ற முத்துமாலையும் நீறுபட்டது (இவைகளெல்லா மிப்படியானதினா)
அந்த அரசன் பயந்து தன்மனைவி மேனியை யிறுகப்புல்லிய் வாள்பிடி
கும் நீண்டகைகள் நீங்கி வாங்கிக் கொண்டான்-எ-று. (உ

வாங்கிய மன்னவன் மாதை நோக்கிநின்
தேங்கமழ் தளிர்புரை செய்ய மேனியின்
ஓங்கழல் வெதுப்பவென் னுடலம் வெந்ததால்
ஈங்கிது நிமித்தம்யா தெனவி னாவினான்

(இ-பு.) கைகளை வாங்கிக்கொண்ட மன்னவனானவன் தன்மனைவியை
ப்பார்த்து வாசனை கமழ்கின்ற செந்தளிரையொத்த உன்னுடைய செவ்
தாகிய மேனியிலிருந் துண்டாகிய மிகுந்த தீயானது சுட என்னுடல்வெ
ந்தது இதனுடையகாரண மென்னென்று வினாவினான்-எ-று. ஆல்-அசை.

ஆயினழமுறுவலித் தரசகேள்பவ
மாயிருமெ டுங்கடல் வார ரிசனார்
சேயவஞ் செழுத்தினை நிகழ்த்தலால்வினை
போயதென் னுடலமும் புனிதமாயதே

(இ-பு.) அழகுள்ளதாகச் செய்யப்பட்ட ஆபரணங்களணிந்த அ
மாதுநகைத்து ராசாவேகேளும் பிறவிக் கேதுவாகிய பெருமையுள்
ஆணவமல இருளைக்கெடுத்த தூருவாச முனிவரானவர் பரமசிவன்
ன்புறத்தக்க பஞ்சாக்ஷரத்தை எனக்குபதேசித்ததினால் இருவினையும்
ங்கியது - என்னுடலும் பரிசுத்தமாகியது-எ-று. ஏ- அசை. (உ௪

புண்ணியம் பாவத்தைப் பொருந்த லின்றி
இன்னமிப் புனிதமாஞ் செய்ய மேனியை
யண்ணலஞ் செழுத்தினை யறிய லாதனின்
றன்னிய மேனியாற் றழுவற் பாலையோ

(இ-பு.) புண்ணியமானது பாவத்தைச் சோராது இதுநிச்சயம் (ஆதலா
ல் புனிதமாகிய இந்த நல்லவுடலைப் பரமசிவனுடைய பஞ்சாக்ஷரத்தை
யறியாத வும்முடைய குளிர்ச்சிபொருந்திய மேனியால் நீர்தழுவத்தக்
வரோ-எ-று. (௩௰

இந்நிலை யினார்ந்துநீ யிறைவன் மந்திர
நின்னுடைச் செவிப்புல நிறைத்துத் தூய்மையாய்ப்
பின்னெனன் மெய்நலம் பெறுதி யெனறனள்
அன்னமந்திர மெனக் கருளென் றோதினான்

(இ-பு.) நீர் இப்பொழுதே விரைவாகப் பரமசிவனுடைய பஞ்சாக்ஷர
த்தை உம்முடைய காதினிடத்தில் உபதேசஞ்செய்யப் பெற்றுக்கொண்
டு பரிசுத்தமாகி அதன்பின்பு என்மெய்யின்பத்தைப் பெற்றுக்கொள்ளு
மென்று சொன்னாள். (அப்படியானால்) அந்த மந்திரத்தை நீயெனக் குப
தேசஞ் செய்யென்று சொன்னான்-எ-று. (௩௧)

மாதர்யான் மெய்ம்மொழி மகிழ்நர் கேட்பது
நீதியன் றான்று ணிவுறந்த தேசிகன்
மேதகு கர்க்கர்பால் விழைவினாற்பெறப்
போதுக வென்றனள் பொருந்தினானரோ

(இ-பு) கணவர்கள் தங்கள் மனைவியரிடத்தில் உண்மையான மந்தி
ரோபதேசம் பெற்றுக்கொள்வது நீதியல்ல! சிவனதுகிருபையைப் பூ
ரணமாகப் பெற்றுள்ள குருவாகிய மேன்மைபொருந்திய கர்க்கமுனிவரி
டத்தில் விருப்பமுடன் பெற்றுக்கொள்ள நீர் என்னுடன் வாருமென்று
ர் (அவ்வரசன்) அதற்குச் சம்மதித்தான்-எ-று. அரோ-அசை. (௩௨)

குரவுவார் குழலொடுங் கொழுந ணக்கணந்
திரைபுணர் யமுனையந் தீர மெய்தியே
வரமுனி கர்க்கர்தாள் வணங்கி வந்தவா
றுரைசெய்து பின்னுமோ ருரை விளம்பினான்

(இ-பு.) குரவம்பூவணிந்த நீட்சியாகிய அளகத்தையுடைய தன்மனைவி
யோடும் கணவனானவன் அப்போதே அலைகள்மோதுகின்ற அழகியயமு
னாநதியின்கரையி லடைந்து சிரேஷ்டம் பொருந்திய கர்க்க முனிவரு
டைய பாதங்களைப்பணிந்து தான் வந்தகாரியத்தைச் சொல்லிப் பின்னு
மொரு வார்த்தை சொல்லுகின்றான்-எ-று. (௩௩)

மருளுறு பவக்கட லுழும் வஞ்சனை
யருட்கரு மஞ்செழுத் தம்பி யாகநீ
தெருட்குரு தேசிக முத்தித் தீரமேல்
இருளற வேற்றுதி யென்ன வேத்தினான்

(இ-பு.) தெளிவைத் தருகின்ற குருவே! நீவிர் (யாவரும்) மயங்குத
ற்கேதுவாய ஜநநசாகரத்தில் முழுகியிராநின்ற பாவியாகிய அடியேனை அ
ருளைத்தருகின்ற பஞ்சாக்ஷரமானது தெப்பமாகும்வண்ணம் உபதேசி
த்து மயக்கந்தீரும்படி மோக்ஷமாகிய கரையிலேற்றுமென்று துதிசெய்
தான். எ-று. (௩௪)

அம்முனி நிருபன்மே லருணோக்குடன்
நம்மையா ளிறைவனை யுளத்திருத்தியே

செம்மலர்ச் சிவகரஞ் சென்னிசேர்த்துமே.
மெய்ம்மையஞ் செழுத்தையும் விதியிற் கூறினன்

(இ-பு) அந்த முனிவரானவர் அரசனிடத்தில் கிருபைசெய்யும் நோக்கத்துடன் நம்மை யாட்கொள்ளும் பரமசிவனையிருதயத்தில் தியானித்துச் செந்தாமரை மலர்போன்ற தம்முடைய நல்ல கையை அவன் சிரசில்வைத்து உண்மையாகிய ஐந்தெழுத்தையும் விதிப்படி உபதேசித்தார்-எ-று. (௩௫)

வேறு.

இசைபுரி தேசிக னுரைத்தபொருள் கொண்ட
வாகைவடி வேலினற மயிர்க்குழிக ளின்றும்
வேகவினை யாவையும் விரைந்து சதகோடிக்
காகவுரு வாய்மிசை பறந்தன கரிந்த

(இ-பு.) சந்தோஷத்தைச் செய்கின்ற தேசிகராகிய கர்க்கமுனிவருப தேசித்த பஞ்சாக்ஷரத்தைப் பெற்றுக்கொண்ட வெற்றிபொருந்திய வடிவேலையுடைய அந்த அரசனுடைய ரோமத் துவாரங்களி னின்றும் கொடுமையுள்ள வினைகளெல்லாம் நூறுகோடிக் காக்கை ரூபமாய் மேலெழுந்து பறந்துகரிந்தன-எ-று. (௩௬)

மேனியி னெழுங்கொடிகள் வெந்துவிழல் கண்ட
மானவடிவே லரசர் மன்னவன் வணங்கி
யூனுட லிரிக்கொடிக ளுற்றெழலெ வீறுய்ப்
போனதெவ னென்னமுனி புங்கவ னுரைத்தான்

(இ-பு.) தன்னுடலினின்று மேலெழுந்த காக்கைகள் வெந்து விழுவதைக்கண்ட பெருமைபொருந்திய வடித்தவேலையுடைய அரசர்க்கரசனவன்வணங்கி அடியேனுடைய பஞ்சப்பந்தமாகிய சரீரத்தினின்றும் இந்தக் காகங்கள் உண்டாகி மேலெழுந்த காரணமென்ன அவைகள் நீறாய்ப்போன காரணமென்ன வென்று வினவ முனிசிரேஷ்டராகிய கர்க்கர் சொல்லுகின்றார்-எ-று. (௩௭)

நல்வினை யுழந்துபல நல்லுரு வெடுத்தும்
அல்வினை யுழந்துபல வல்லலுரு வுற்றும்
தொல்வினை தொடர்ந்துதரு சூழ்பிறவி யென்னும்
வல்வினை யொழித்தனை யிம்மந்திர நலத்தால்

(இ-பு.) நல்வினையைச்செய்து பலவாகிய நல்ல உருவெடுத்தும் தீவினையைச்செய்து துன்பமனுபவிக்கத்தக்க பலவிய வுருவமெடுத்தும் பழை

யவினையாகிய சஞ்சிதந் தொடர்ந்து தருவதால் சுழலுகின்ற பிறப்பாகிய வலியவினையை இந்தப்பஞ்சாக்ஷரத்தி னன்மையால் ஒழித்தாய்-எ-று.

ஒழிந்தவினை காகவ வுருக்கொடுட லின்றும்
எழுந்தன வருந்தொடர் பிலாதவைக ணீறுய்
விழுந்தன வருந்தலுளம் வென்றிபுனை வேலோய்
செழுந்திரு வெழுத்தினிலை செப்பவெளி தன்றே.

(இ-பு.) வெற்றிகொண்ட வேலாயுதத்தை யுடைய அரசனே? ஒழிந்தவினைகள் உன்னுடலினின்றும் வலிய காகரூபங்கொண் டெழுந்து இனி தொடருந் தொடர்ச்சியில்லாமையினால் வெந்துநீறாய் விழுந்தன நீ மனம் வருந்தாதே மேன்மையுள்ள பஞ்சாக்ஷரத்தி னிலைமைசொல்ல வெளிதல்ல - எ-று. வ- அசை. (௩௯)

கண்டனை விளைந்தபடி காமர் நகரிற்போய்
ஒண்டொடியு நீயுகல னுண்டுட லொழிந்தால்
அண்டர்பதம் யாவையு மடைந்தவை துறந்து
தெண்டிரை விடத்தை நுகர் செம்மலடி சேர்வீர்.

(இ-பு.) அரசனே? நடந்த காரியங்களை யெல்லாங் கண்டனையல்லவா இனி நீயு முன்மனைவியும் அழகிய நகரத்திற்போய் இன்பமனுபவித்துக்கொண்டிருந்து இந்தச் சரீரமொழிந்தால் பின்பு முறையே தேவர்பதவிகளை யடைந்து (அவைகளிலுள்ள இன்பங்களையுமனுபவித்து) அவைகளையும் நீங்கித் தெளிவான அலைகளையுடைய சமுத்திரத்தி லுண்டாகியவிஷத்தையுண்டபரமசிவனுடையதிருவடிகளைச்சேர்வீர்கள்-எ-று.

என்றவ னியம்பவு மெழுந்துவடி வேலோன்
குன்றனைய மாடமணி கோநகர மெய்தித்
தன்றுணைவி யின்னல நுகர்ந்துடறணப்ப
மன்றன்மனை யோடுமான் வாழ்பத முடைந்தான்

(இ-பு.) இப்படியாகக் கர்க்கமுனிவர் சொன்ன மாத்திரத்தில் வடித்தவேலையுடைய அவ்வரசனானவன் எழுந்து மகமேருவை யொத்த வீடுகளுள்ள அழகிய சிறப்புப்பொருந்திய நகரத்திற்சேர்ந்து தன் மனைவியினிடத்தில் இனிதாகிய இன்பமனுபவித்து உடலநீங்க விவகஞ்செய்துகொண்ட அம்மனைவியுடன் பரமசிவன் வீற்றிருக்கின்ற சிவலோகஞ் சேர்ந்தான். எ-று. (௪௰)

வேறு.

மன்னுயிர்க் குயிராமீசன் வடிவெனு மஞ்செழுத்தின்
தன்னிலை யறிந்தவரு சாற்றிலே னென்னின

பின்னரோ தலத்தின்வீறுஞ் சிவநிசிப் பீடுஞ் சொல்வேன்
தொன்னெறி முனிவர்கேண்மி னென்றனன் சூதன்சொனறான்

(இ-பு.) நிலைபெற்ற உயிர்க்குயிராகிய பரமசிவனுடைய சொரூபமான பஞ்சாக்ஷரத்தி னிலைமையை நானறிந்தமட்டிற் சொன்னேனென்று சொல்லினார். அப்படி சொன்னவுடனே சிவதலமான்மியமும், சிவராத்திரி மான்மியமும், சொல்லுகிறேன் பழமையாகிய நன்னெறி தவறாத முனிவர்களே கேளுங்களென்று சூதமுனிவர் சொன்னார். எ-று. (சஉ)

முதலாவது-பஞ்சாட்சர அத்தியாயம் முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௬௫.

உ

சிவமயம்,

இரண்டாவது.

சிவதானமகிமையுரைத்த அத்தியாயம்.

சூரியகுலத்திற் றோன்ற றொன்னகரயோத்தி வேந்தன்
வாரணிபெறுமென் கொங்கை மதயந்தி விரும்புதோளான்
வேரியந் றொடையன்மார்பன் மித்திரசக நாமத்தோன்
ஆரணியத்தின்வேட்டை யாடுவான் விரும்பிப் புக்கான்

(இ-பு) சூரியகுலத்தரசனும் பழமையாகிய அயோத்தி நகரத்துவேந்தனும் கச்சினையும் ஆபரணங்களையும் பொருந்திய மிருதுவாகிய தனங்களையுடைய மதயந்தி யென்னும்பெயர்கொண்ட மனைவியினால் விரும்பப்பட்ட புயங்களையுடையவனும் தேனிறைந்த அழகிய பூமாலையணிந்த மார்பையுடையவனும் மித்திரசகன் என்னும் பெயரையுடையவனுமாகிய அரசனானவன் அரசாட்சி செய்துகொண்டிருக்கும் நாளிலொருநாள் வேட்டையாட விருப்பங்கொண்டு ஆரணியத்திற்சென்றான்-எ-று.

பூட்டுவெஞ் சிலைநெற்காலும் பொங்கழற் பகழிதூர்த்துக்
காட்டினுள் வல்விலங்கின் கணமெலாந் தொலைக்குங்காலை
வேட்டஞ்செய் விருப்பினான்முன் னிருவரோர் வயிற்றின்மேய
மாட்டிற லரக்கராகி மோவென வந்தெதிர்த்தார்

(இ-பு.) நாண்பூட்டிய கொடியவில்லையில்வைத்து வெப்பமிகுந்த தீயைக் கக்கும்படியான பாணங்களைப் பிரயோகஞ்செய்து காட்டினிடத்திருக்கு மிருகக்கூட்டங்களையெல்லாம் அழிக்கும்போது வேட்டையாடும் விருப்பமுள்ள அவ்வரசன்முன் ஒருதாய்வயிற்றிற் பிறந்தவர்களாய் வாட்போரில் வல்லவராகிய இரண்டு ராக்ஷதர்கள் அக்கினிமலைபோலவந்தெதிர்த்தார்கள்-எ-று. (உ)

முன்புறவெதிர்ந்து போர்செய் முன்னவன் றன்னைவாளாற்
றன்புறமாய்த்தான் முன்னோன் றொலைவுகண் டிளையநீசன்
வென்புறங் காட்டியேகி மீண்டுவஞ்சனையால் வெல்வான்
அன்புடை மனிதனுய்வந் தரசன தடியிற்றாழ்ந்தான்

(இ-பு.) தன்னெதிரில் முனைந்து போர்செய்கின்ற மூத்தவனை அந்த அரசனானவன் வாளாயுதத்தினால் துன்படையக் கொன்றான். அண்ணனிறந்ததைக்கண்டு தம்பியாகியநீசனானவன் முதுகுகாட்டியோடிப்போய் வஞ்சனையால்வெல்ல எண்ணங்கொண்டு அன்புள்ள மனிதவுருவங்கொண்டுவந்து அந்தமன்னவன் பாதத்தில் வணங்கினான்-எ-று. (ந)

அரசனுன்வரவேதென்ன வரக்கனுமண்ணலேயுன்
குரைகழற் கேவல்செய்யுங் கொள்கையி னடைந்தேனென்று
னிருபனுங் குவந்துவஞ்ச னிலையினைச் செறிந்தோரான்
வருசையி னடிசினல்கு மடைத்தொழி லவனுக்கீந்தான்

(இ-பு.) அரசனவனைக்கண்டு நீவந்தகாரண மென்னவென்று வினவ அந்த ராக்ஷதன் மகாராசாவே உம்முடைய சத்தியாகின்ற வீரகண்டையணிந்த பாதங்களுக்குக் குற்றேவல்செய்யுமெண்ணத்துடன வந்தேனென்றான் அதைக்கேட்டரசன் சந்தோஷித்து அவன மோசத்தினைப்பைக் கொஞ்சமு மறியாமல் கிரமமாகச் சோறுக்கு மடைத்தொழிலை அவனுக்குக் கொடுத்தான்-எ-று. மடை-சோறு. (௪)

வெருக்கொள விலங்குமாய்க்கும் வேட்டை யங்கானநீங்கி
யரக்கனு முடன்வந்தெய்த வயோத்தியி னடைந்து வேந்தன்
மருக்கமழ்குழதச்செல்வாய்மதயந்தி யோடும்வாழ்நாள்
உருக்கரினகன்றிறந்தோர்க் கூட்டுரா விற்றதன்றே

(இ-பு.) பயங்கொள்ளும்படி மிருகங்களைக் கொல்லும் வேட்டையாடுகின்ற அழகிய காட்டினை விட்டுநீங்கி அந்த ராக்ஷதனுங் கூடவரும்படி அரசனானவன் அயோத்தியிற்போய்ச்சேர்ந்து வாசனை கமழ்கின்ற செவ்வல்லி மலரையொத்த வாயையுடைய மதயந்தியுடன் வாழ்கின்றநாளில்

டட்டிலிட்டிறந்த பிதிர்களுக்குச் சிரார்த்தஞ்செய்யு நாள்வந்தது - எ-று.
அன்று- ௳- இவ்விரண்டுமசை.

தென்புல வாணர்க்கோகை செய்யுநா ளிதுநாளென்ன (௬)
நும்பதை புரக்கும்வேந்தன் வசிட்டனை வரித்துப்பூசித்
தன்பினோண் பிசைகவென்று னரக்கன்ற னெண்ணந்தீர்ப்பா
னன்கலத் தமுதத்தோடு நரருடையூனிட்டானே

(இ-பு.) தெற்குத்திசையில் வாழ்கின்றவர்களாகிய பிதிர்களுக்குச் சந்தோஷத்தையுண்டாக்கும் நாளாகியசிரார்த்த நாள் இந்நாளென்று புரோகிதன்சொல்ல மனிதர்களைக் காக்கும் ராசனானவன் வசிஷ்டமுனிவனை அழைப்பித்து அன்புடன் ஆராதனைசெய்து அமுதுகொள்ளவேண்டுமென்றான் (வஞ்சித்துவந்திருக்கின்ற அந்த ராக்ஷதனானவன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வசிஷ்டமுனிவருக்குப் பொற்பாத்திரத்தில் நல்ல அமுதத்துடன் நரமாமிசத்தைப் படைத்தான்-எ-று. ௳-அசை. (௭)

உய்த்தவுன் மனிதருனென் றுள்ளத்தி லுணர்ந்த தூய
மெய்த்தவன் கனன்றுசீறி வெய்யவன் வஞ்சமோரான்
வைத்தது நினைத்தானந்த மன்னனை யிதுசெய்தாய்
அத்தலை நரருன் றின்னு மரக்கனே யாதியென்றான்

(இ-பு) படைத்தமாமிசம் நரமாமிசமென்று தம்முள்ளத்தி லறிந்து பரிசுத்தமுள்ள மெய்யான தவத்தையுடைய வசிஷ்டமுனிவர் அந்த அரக்கன்செய்த வஞ்சகத்தை யறியாதவராய் மனங்கொதித்துச் சிறிப்பொருந்திய கோபத்தினையுடையவராய் அந்த மன்னவனைப்பார்த்து (இதற்கு முன் அதைவிட்டு)இப்படி யக்கிரமமான காரியம் செய்ததினாலே காட்டினிடத்தில் சஞ்சரித்து நரமாமிசத்தை உண்ணும் அரக்கனாக் கடவையென்று சபித்தார். எ-று.

சாபத்தை நவின்ற பேலோன்றன்னுளந் தன்னின்மேய (௮)
கோபத்தி னின்றுநீங்கிக் கொடியவல் லரக்கன் செய்த
ஆபத்தென் றறிந்துவேந்தே யறிகிலேன் சபித்த விந்தப்
பாபத்தின் றகைமைதீர்ப்பாய் பன்னிரு பருவத்தென்றான்

(இ-பு.) சாபமிட்ட வசிஷ்டரானவர் தம்முள்ளத்திலுண்டாகியகோபத்தினின்றும் நீங்கிக் கொடுந்தொழில் செய்கின்ற வலிய அரக்கன்செய்த ஆபத்தென்றறிந்து அரசனே! உன்னாலே நேரிட்டதல்லவென்று அறியாமல் நான்சபித்த இந்தப்பாபத்தின் தன்மையைப் பன்னிரண்டாம் வருஷம் தீர்ப்பாயென்று சொன்னார்-எ-று. (௯)

வரிசிலை யுழவன்றானு மறைமுனி தன்னைநோக்கிப்
பெருகிய சினத்தனாகிப் பிழைபுரியாதேன் றன்னை
நிருதனா கென்னச்சொன்ன நின்னையும் வெய்யசாபம்
புரிகுவ னென்றுசாபப் புனலினைக் கையிற்கொண்டான்

(இ-பு.) நீண்ட வில்லின்தொழில் பழகினவனாகிய அவ்வரசன் வேதமுணர்ந்த வசிஷ்டமுனிவரைநோக்கி மிகுந்தகோபமுடையவனாய்க் குற்றஞ்செய்யாத என்னை அரக்கனாகக் கடவையென்று சபித்த உனக்கும் நான் கொடியசாபமிடுகிறேனென்று சாபநீரைக் கையில் ஏற்றுக்கொண்டான்-எ-று. (௰)

கண்டனள் கலங்கித்தேவி மதயந்தி காவல்வேந்தே
எண்டரு மன்னர்தம்முட் குரவனைக்காய்ந்தார் யாரே
விண்டெழு வெகுளிதீர்வா யென்றவள் விளம்பவேலோன்
கொண்டகைச் சாபநீர்தன் குரைகழற் றாளிற்பெய்தான்

(இ-பு.) மதயந்தி யென்னும் அவன் மனைவியானவள் அதைக்கண்டு மனங்கலங்கி (மன்னுயிரைக்காக்கும்) காவல்பூண்டஅரசனே! யாவருமெண்ணும்படியான பெருமையுள்ள மன்னவர்களுக்குள் ஆசாரியனைக் கோபித்தவர்கள் யாருமில்லையே ஆதலால் அதிகரித்தெழுகின்ற கோபத்தைத் தணிப்பாயாகவென்று அவள்சொல்ல வேலேந்தும் அவ்வரசன் தன் கையிலேற்றுக்கொண்ட சாபநீரைச் சத்தியாகின்ற வீரகண்டையணிந்த தன்காலில்விட்டுக் கொண்டான்-எ-று. (௧௧)

தீக்குறுசாபநீராற் செம்மல ரெரிதோய்ந் தென்னப்
பூங்கழற் கால்களாங்கே பொள்ளெனக் கறுத்தலோடும்
பாங்குளோர் காணமன்னன் கன்மாடபாதனாகி
வாங்கருங் குருசாபத்தா லரக்கனாய்வனத்திற்புக்கான்

(இ-பு.) இனமயுள்ள சாபநீரால் செந்தாமரைமலர் தீயில் படிந்ததுபோல் பொலிவுள்ளதாய வீரகண்டையணிந்த கால்கள் அப்பொழுதே பக்கத்திலிருப்பவர்கள் காணும்படி அம்மன்னவன் கறுத்த மாத்திரத்தில் கன்மாடபாதனாகி நீக்குதற்கரிய குருவின்சாபத்தால் ராக்ஷதனாய் அரணியத்திற்போய்ச் சேர்ந்தான்-எ-று. கன்மாஷம் என்பது- கறுப்பு. (௧௨)

வேறு.

கொடுமுழங்கிச்செவிடுபடும் பேரடவியிடந்தோறு நெடுவேய் தேய்த்து
படுகனலிற் கைபணவச் சுறாநாறு மயிர்க்கவிகள் பதறிப்பாயப்

புடைகலந்தகேனினங்கள்பகன்மதியைப்பிறையென்னப்புகுந்துமொய்க்கும் குடுமிவரை யிடந்தோறும்பலவிலங்கின் குலமனைத்துங்கொடுஞ்செய்தான் (இ-பு.) [டான

காட்டுத்தீ சடசடவென் றொலிக்கக் கேட்போர்காதுகள் செவிடுபடுமேப்படியான பெரியகாடுகள்தோறும் நிட்சியையுடைய மூங்கில்களொன்றோடொன்று தேய்ந்து உண்டாகாநின்ற தீயின் சிகைபொருந்தச் சுழலும் அம்மரங்களினிடத்திலிருக்கும் வண்டுக்கூட்டங்கள் பதியமாங்கனியில் பாய்வதாகவும் சந்திரனைத் தேன்கூடெனறுகருதி யதனிடத்திற் சென்றுமொய்க்கவுமாக வீராநின்ற சிகரங்களையுடைய மலையிடங்கள்தோறுஞ் சஞ்சரித்துக்கொண் டிராநின்ற பலவகையாகிய மிருகக் கூட்டத்தையெல்லாங் கொன்று புசித்தான்-எ-று.

பாயிருஞாலப் பரப்பின் மன்னுயிருடலினைத்தினுக்கு மயானமென்றாக்காயுமிரும் பசியுதரக் கனற்குழியை நிணந்தூர்த்துக் கழிக்குநாளில் தூயவொரு முனிபுதல்வன் புதுவதுவை புரிந்தவிளந் தோகையோடுந் தீயதிறல் வாளரக்கன் வரவறியா னவ்வனத்திற் சென்றானன்றே (௰௨)

(இ-பு.) மிகுந்த பெருமையையுடைய இவ்வுலகத்தின் அகன்ற இடமெங்கும் பொருந்திய சரீரங்களுக்கெல்லாஞ் சுடுகாடு என்று சொல்லும்படி சுடுகின்ற மிகுந்த பசியுள்ள வயிறாகிய தீக்குழியை மாமிசங்களால் நிறைத்துக் காலங்கழிக்கும் நாளில் பரிசுத்தமுள்ள ஒருரிஷிகுமாரன் நவமாக விவாகஞ் செய்துகொண்ட இளமைப்பருவமுடைய தன்மனைவியுடன் கொடிய வலியுள்ள கொலைத்தொழில்செய்யும் அந்த ராக்ஷதன் வருவதையறியாமல் அந்தக்காட்டிற்போனான்-எ-று. மன்-ஓ-இசைநிறை.

புகுந்தவனைக் கண்டரக்கன் வாளெயிறும் பிலவாயும் வயங்கநக்கான் றுந்தியுறு பசிதணிக்க வந்தானென் றுன்னுமொரு மூவகைப்பொங்கக் கொந்தமலர்ச் சிறுகுடுமி மறைமுனிவன் காளைதனைக் குருதிவேட்டு முந்துசினப்புலிசேதா விளங்கன்றைக் கவர்ந்ததெனை முனைந்துபற்றும் (௰௩)

(இ-பு.) வந்த அந்தரிஷிபுத்திரனைக்கண்டு ராக்ஷதனனவன் வாள்போன்ற கோரப்பல்லும் பிலத்துவாரப்போன்ற வாயும் பிரகாசிக்கும்படி நகைத்து அப்போது தன்வயிற்றில் மிகுந்திருக்கின்ற பசியைத்தணிக்க வந்தானென்று நினைக்குந்தோறும் சந்தோஷம் தனக்குள்ளேபொங்க உதிரத்தைக் குடிக்கவிரும்பி முன்னதாக உண்டாகின்ற கோபத்தையுடைய புலியானது ஒருபசுவினிளங்கன்றைப் பிடித்துக்கொண்டதுபோலக்

கொத்தாகிய பூமாலையணிந்த சிறுகுடுமியையுடைய வேதமுணர்ந்த அந்த ரிஷிபுத்திரனைக் கோபமுகொண்டு பிடித்து-எ-று. (௰௪)

கொலைபுரிவா னுறுகாலை யதுகண்டு வெருவிமலர்க் கொம்பானனா னிலைதளர்ந்து கைநெரித்து நெடுங்கண்ணீர் முலைமுன்றி னிறைப்பச்சோர்ந்து, தொலைவில்புகழ்ப் பரிதிகுலத் தொல்வேந்தே மதயந்தி தோயுஞ் செம்பொன், மலைபொருவு மணிமார்பா வென்றேத்தி யினைந்தினைய மாற்றஞ்சொன்னாள் ... ...*

(இ-பு) கொலைசெய்யத் தொடங்கும்போது அதைக்கண்டு ரிஷிபுத்திரனுடைய மனைவியாகிய பூங்கொம்பையொத்த அழகுள்ளவள் பயந்து நிலைதளர்ந்து கைகளை நெரித்துக்கொண்டு நெடிய கண்ணீரானது முலையினிடத்தை நிறைக்கும்படியாகச் சோர்ந்து பழமையாகிய சூரியகுல மன்னவனே? மதயந்தி அணையும் பொன்மலையையொத்த அழகியமார்பனே? என்று துதிசெய்து மெலிந்து இந்தவசனங்களைச் சொன்னாள்-எ-று.

வல்வினையா லிவ்வுருவம் வாய்ந்தனைநீ நிருதர்குல வழியானல்லை கொல்வதுனக் கடாதுபிற ருயிர்க்குதவி புரிவதுங்கள் கொள்கையாமால், வெல்கதிர்வேற் படைவேந்தே யிவனிறக்கில் யானுமுயிர் விடுவேனென்று, மல்குவிழிப் புன்ல்பாயத் தொழுதிரந்தோ ருயிர்ப்பலிநீ வழங்குகென்றாள் ... ... *

(இ-பு) யாவராலும் விலக்கக்கூடாத வலியையுடைய வினையினால் இந்த உருவம்பெற்றனை நீ ராக்ஷதகுலச் சந்ததியிற் பிறந்தவனல்லை ஆதலால் கொல்வதுனக்குத் தகுதியல்ல பிறருயிருக்கு உதவிசெய்வது உங்கள் குணமாம் பகைவரை வெல்லுகின்ற ஒளிதங்கிய வேலாயுதமேந்தும் அரசனே? இவனிறந்தால் நானு முயிர்விட்டு விடுவேனென்று நிறைந்த கண்ணீர் பாயும்படித் தொழுதிரந்து ஒப்பற்றதாகிய உயிர்ப்பிச்சைதா நீ தாவென்றாள்-எ-று. (௰௫)

மனமறுகுற் றிவ்வாறு கவன்றனைக்கு முனைநிருதன் மனக்கொள்ளானாய்ப், புனைமலர்த்தார் வேதியனை யுயிர்செகுத்துத் தசைசுவைத்துப் புண்ணீர்மாந்திக், கனநிணங்கள் மூளைகுடர் மென்றருந்தி யென்பினைத்துங்கழித்துவாயால், இனவளையாள் முன்றுமிழ்ந்தா னென்செய்வாளுமிழ்ந்தவெலா மெடுத்துக்கொண்டாள் ... ...*

(இ-பு.)மனமறுக்கங்கொண்டு இப்படியாகவருந்திச் சொல்லுகின்றவார்த்தையை அந்த ராக்ஷதன் மனதிலேற்றுக் கொள்ளாதவனாய்ப் பூமாலையணிந்திருக்கும் ரிஷிபுத்திரனுடைய உயிரைக்கொன்று மாமிசத்தையுண்டு உதிரத்தைக் குடித்துக் கொழுத்திருக்கும் நிணங்களையும் மூளை

களையுங்குடல்களையு மென்றுநின்ற எலும்புகளை யெல்லாஞ்சுரிக்கு யாமிருல்ரிஷிபுத்திரன் மனைவியெதிரில் தாய்பிவிட்டான் (அதைக்கண்டுஎதிர்செய்யும்வலி தனக்கில்லாமையினால்) என்னசெய்வாள் அவள் தப்பிவிட்டதையெல்லாம எடுத்துக்கொண்டாள்-எ-று. (யஎ)

எழுந்துபடர் கதழெரியி னவ்வென்பை யிட்டிறைஞ்சி யின்ன செய்தோனச் செழும்பதியிற் புகுந்தரிமை மதயந்தி முதலாய தேவிமாரைத் தழும்பொழுதி லாருயிர்மாள் டொழிகவெனக் கொடுஞ்சாபஞ் சாற்றித்தானுங், கொழுந்தெரியிற் புக்கவிந்தா ளாண்டவையு மவ்வனத்திற் குறைநாளில்... ... ... *

(இ-பு.) கிளைவிட் டெழுந்து சுவாலைவீசுகின்ற மிகுந்த காட்டுத்தீயில் அந்த எலும்பையெல்லாம் போட்டு (அக்கினிதேவனை)வணங்கி இப்படிக் கொத்த (பாவமான காரியத்தைச்) செய்த இந்தப் பாதகனானவன் (சரபந்தீர்ந்து) வளப்பமுள்ள தன்பதியிற்சேர்ந்து தனக்குரிய மதயந்தி முதலான தேவிமார்களைத் தழுவும்போது பெறுதற்கரிய உயிர்மாண்டு போகக்கடவனென்று கொடியசாபஞ்சொல்லித் தானுங் கிளைபடர்ந்தெரிகின்ற அந்தத்தீயில் விழுந்திறந்துபோனாள் அதன்பின்பு ராக்ஷதனாகிய அரசன் அந்தவனத்திற் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது - எ-று. பெறுதற்கரிய உயிரென்றது, உயிர்களுக்கு மானிடசரீரம் கிடைத்தலரிதென்பது கருத்து. (யஅ)

வேதமுனி சாபந்தீர்ந் தரக்கவுரு வகலவிறல் வேந்தன்வேறுங்
காதலுறு முருவெய்தி முன்புபோ லயோத்திநகர் கடிதினெய்திச்
சீதமதி வாண்முகத்து மதயந்தி கலவிநலத் தேறலுண்பான்
போதகமொன் றதன்பிடியின்சேவகம்புக்கெனக்கோயில்புக்கான்மன்னோ

(இ-பு.) வேதமுணர்ந்த வஷிஷ்டருடைய சாபநீங்கி ராக்ஷதரூபமாகிய நீங்கி வெற்றியுள்ள ராஜனானவன் முன்போல மன்மதனும் ஆசைகொள்ளத்தக்கதன் பழையவுருவத்தை அடைந்து சீக்கிரமாக அயோத்தி நகரிற்சேர்ந்து குளிர்ச்சிதங்கிய சந்திரனையொத்த ஒளிபொருந்திய முகத்தையுடைய மதயந்தியென்னும் தன் மனைவியிடத்தில் மதுரமுள்ள தேன்போல இனிமையைத்தருகின்ற கலவியின்பம் அனுபவிக்க ஒரு ஆண்யானையானது கிரீடையை விரும்பித் தன்பெட்டையானை நித்திரை செய்யுமிடத்திற்சென்றதுபோல் தன்மனையிற்போனான்-எ-று. மன்-ஓ-அசை. ()

வேறு.

கோயில்புக்குறற் குருமணி நெடுமுடிக் குரிசில்
வேயின்மிக்கநல் வுருவமை வெள்வளைத் தோளி

வாயமைக்கனன் மதயந்தி யணிமுலை யவாவில்
தோயவுற்றனன் மறுத்தன ளிவையிவை சொன்னாள்

(இ-பு.) தன்மனையிற்சேர்ந்து நல்லநிறமுள்ள ரத்தினங்கள் பதிக்கப்பட்ட நெடியமகுடத்தை யணிந்திருக்கும் அரசனானவன் பசியமூங்கிலினழகைப் பார்க்கிலு மிகுந்த நல்ல அழகமைந்த சங்குவளையணிந்த தோளையுடையவளாகிய மையிட்ட கண்களையுடைய மதயந்தியின் ஆபரணங்களணிந்த தனத்தை ஆசையுடன் அணையப்போனான் அவள் தடுத்துச் சிலவசனங்களை வகுத்துச்சொன்னாள்-எ-று. (உய)

உற்றவாறென்று முணர்ந்திலை போலுநீ யுயர்கான்
முற்றுநாடிவல் லரக்கனாய் முனிவரன் சேயைப்
பற்றிநுங்கினைக் கண்டவன் பார்ப்பனி சீறிச்
சொற்றவாசகங்-கேளென விளைந்தவை சொல்வாள்

(இ-பு.) உனக்குச் சம்பவித்த முறைமையை நீ சிறிதும் அறிந்திலையோ (அது என்னவெனில்) நீராக்ஷதனாய் உயர்ந்த காடுகளெங்கும் ஆகாரத்தை விரும்பித்திரியும்போது அவ்விடத்தில்நேரிட்ட ஒருரிஷிபுத்திரனைப் பற்றிக்கொண்டு கொன்றுதின்றாய் அப்போ ததைக்கண்டு அவன் மனைவியானவள் கோபித்துச் சாபங்கூறியதைக் கேளெனச் சம்பவித்த காரியங்களைச் சொல்லுகின்றாள்-எ-று. போலுமென்பது-முன்னிலையசை.

இணையிலாதவென் கொழுநனை யின்னுயி ருண்ட
பணைநெடும்புய மன்னவ பதியினிற் புகுந்துன்
துணைவிமார்கடந் துணைமுலைச் சுவடுமார் பிறுக
அணையுநாளுயி ரிறத்தியென் றழல்புகுந் தவிந்தாள்

(இ-பு.) ஒப்பில்லாத என் கணவனுடைய இனிய உயிரைநீக்கிய பருத்து நீண்ட புயங்களையுடைய மன்னவனே! அயோத்தி நகரிற்சேர்ந்து உன் மனைவியருடைய இரண்டு தனங்களின் தழும்புகள் மார்பில் அழுந்தும்படி அணையுநாளில் உயிரிறந்து போகக்கடவையென்று தீயில் விழுந்திறந்தாள்-எ-று. * கொழுநனையென்பது - உருபுமயக்கம். (உக)

அன்னதாலெமை யணைவதற் கடாதுனக் கென்றாண்
மன்னர்மன்னனும் பசியினால் வருந்திய வொருவன்
பொன்னினன்கலத் தமுதுபெற் றுணப்பொறி யிலான்போல்
இன்னலெய்தினன் காமவேள் கணையினாலிடைந்தான்

(இ-பு.) அப்படிக்கொத்த சாபம் நேரிட்டிருக்கிறபடியினாலே எங்களையணைவதற்கு உனக்குத்தகாதென்று சொன்னாள் அதைக்கேட்ட மன்னர் மன்னனாகிய(தன்மாட்டாத ராசனானவன்)பசியினால் வருந்திய ஒருவன்

பொன்னுலாகிய நல்லபாத்திரத்தில் அன்னமிடப் பெற்றும் உண்ணுதற்குபயோகமாந் உறுப்புகளில்லாதவனாயிருந்தாற்போல் புன்மகப் பாணத்தினால் துன்பமடைந்து இடைந்துநின்றான் எ-று. (௨௫)

பெண்ணலத்தினைப் பெறாதவர் மகவினைப் பெறுதார்
பெண்ணலத்தினைப் பெற்றவ ரேமகப் பெற்றார்
பெண்ணலத்தினுன் மகவுபெற் றிருமையும் பெறுவார்
பெண்ணலத்தினு லன்றியோர் பெறும்பொருளின்றே

(இ-பு.) பெண்ணின்பத்தை அனுபவிக்கப் பெறாதவர்கள் புத்திரர்களைப் பெறாதவர்களாவார்கள். பெண்ணின்பத்தை அனுபவிக்கப்பெற்றவர்களே புத்திரர்களைப் பெற்றவர்களாவார்கள், பெண்ணின்பத்தை அனுபவிப்பதினால் புத்திரர்களைப்பெற்று இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் அடைவார்கள். பெண்ணின்பத்தினாலன்றிப் பெறும்பொருள் யாதொன்றுமில்லை-எ-று. ஏ- அசை. (௨௬)

உந்துநீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்துதாடொழு மரசியல் வளமெலாம் பெறினும்
இந்திராதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினு
மைந்தரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே

(இ-பு.) அலைவீசுகின்ற நீரையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியிலுள்ள எல்லாரும் ஒருகூட்டமாகவந்து பாதங்களில் பணியத்தக்க அரசுக்குரிய வளங்களெல்லாம் பெற்றிருந்தாலும் (அல்லது தேவேந்திரன் முதலானதேவர்கள் பதங்களிலிருக்கும் பேறுகள் பெற்றாலும் புத்திரரில்லாமல் வாழ்வதுவாழ்வல்ல-எ-று. மற்று- அசைநிலை- அன்று- ஏ- அசை.()

என்றுபற்பல சிந்தையி லெண்ணிவே லிறைவன்
குன்றுமாண்புடைத் தரசிய லினியென்றுங் குறியா
னின்றுமாதவம் புரிவதே கடனென நினைந்து
சென்றுகானடைந் தருந்தவஞ் செய்தன னிப்பால்

(இ-பு.) என்றுபலவாகத் தன்மனதிலெண்ணிக்கொண்டு வேலாயுதமேந்தும் அரசன் நாம் துறந்துவிட்டால் இனி அரசியல் குன்றுந்தன்மையையுடையதாகுமே யென்பதையுங் குறியாதவனாய் வனத்திற்போயிருந்தாலென்ணி இல்வாழ்க்கையைத் துறந்துபோய்க்காட்டிற்சேர்ந்து அரியதவத்தைச்செய்தான் இப்பால் நடந்ததென்னவெனில்-எ-று. (௨௭)

வேறு.

காவலன் றனக்குப்பின்னோர் கான்முளை யில்லையென்று
பூவலயத்தி லுள்ளோர் புகல்வதும் பொருந்தார்வீறும்

யாவையு முணர்ந்தநீதி வசிஷ்டனுஞ் சியல்பினுய்ந்து
பாவருந் துயரந்தீர்க்கும் படிநினைந் தினையசெய்தான்

(இ-பு.) நம்முடைய அரசனுக்குப்பின்பு (இந்த ராச்சியத்தைக் காப்பதற்கு) ஒருபுத்திரனுமில்லையேயென்று இவ்வுலகத்திலுள்ளவர்களிசக்காமற்றுச் சொல்வதும்பகைவருடைய வீராப்புமாகிய இவைகளையெல்லாம் அப்போது அறிந்தநீதியுள்ள வசிஷ்டமுனிவரானவர் தருமசந்தானமுண்டாக்கலாமென்கிற வாக்கியத்தை ஆராய்ந்துணர்ந்து நேரிட்டிருக்கிறதுயரத்தை நீக்கும்படியெண்ணி யிந்தக்காரியத்தைச்செய்தார்-எ-று.

அருந்ததி யனையகற்பின் மதயந்தி யனைநங் கனுள்பாற்
பொருந்தியின் கலவிதுய்த்தோர் புதல்வனைத் தந்து தீரா
இருந்துய ருலகந்தீர வியற்றினன் முனிவ னிப்பாற்
பெருந்தகை தவஞ்செய்வானைப் பேய்மக ளொருத்தி பற்றி

(இ-பு.) அருந்ததியையொத்த கற்பினையுடைய மதயந்தியென்னுமந்தப்பெண்ணை யொத்தவளிடத்திற்சேர்ந்து இனியகலவிசெய்து ஒருபுத்திரன் உற்பத்தியாகும்படி புரிந்து உலகத்துக்கு நேரிட்டிருந்த மிகுந்த துயரந் தீரும்படி வசிஷ்டர்செய்தார் (அங்கப்படியிருக்க) காட்டில் நடந்ததென்னவெனில் தவஞ்செய்கின்ற பெருந்தகையாகிய அரசனை ஒருபேய்மகள் தொடர்ந்து-எ-று. (௨௮)

☞ அரசனில்லாததேசம் உயிரில்லாதசரீரத்தையொக்குமாதலால் தருமசந்தானமுண்டாக்குதல் சாஸ்திரவிதியே இப்படிதருமசந்தானமுண்டாக்குகிற முனிவருக்காவது ஸ்திரீக்காவது தவத்திலும் பதிவிரதா தருமத்திலும் பழுதில்லை அவ்வாறுசெய்ய இசைவில்லாவிட்டால் பட்டத்துயானையைக் கண்கட்டிச் செல்லவிட்டு அதனால் எடுத்துக்கொண்டு வரப்பட்டவனுக்குப் பட்டங்கட்டத்தக்கது.

பிறையெயி றிலங்கக்கண்கள் பிறங்கெரி கதுவச்சீறிக்
கறவிட முருந்துவல்லே தொடர்தல்போற் றொடரக்கண்டாங்
கறைகழற் குரிசிறுனு மலைகமா தொருத்திபற்று
முறைமையே தென்னவேத முனிவரை வினவினானே

(இ-பு.) பிறைபோல் வளைவாகிய தந்தங்கள் பிரகாசிக்கவும் கண்களிலிருந்து மிகுந்த தீப்பொறியானது சிந்தவும் சீறிக் கரியவிடமானதுகோபித்து விரைவாகத் தொடர்தல்போலத் தன்னைத் தொடரக்கண்டு ஒலிக்க நின்ற வீரகண்டையணியும் அந்த மன்னவன் ஒரு பேய்மகளானவள் என்னைப்பற்றுதற்குக் காரணமென்னவென்று அங்கிருக்கும் வேதமுணர்ந்த முனிவர்களை வினவினான்-எ-று. ஏ- அசை. (௨௯)

கேட்டது முனிவரெல்லாங் கிளியென மிழற்றுமாதர்
மோட்டிள முலைகள்பாய்ந்த முருகுகொப் பளிக்குந்தாரோய்
காட்டினி லரக்கனாய்முன் கானிவேதியனை நீகொன்
றீட்டிய பாவங்கண்டா யலகையா பெய்திற்றென்றார்

(இ-ள்.) அவன் சொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அந்த முனிவர்களெல்லாரும் (அவனைப்பார்த்துக்) கிளியைப்போல வசனிக்கின்ற மாதர்களுடைய உயர்வாகிச் சாயாத தனங்கள்பட்டுத் தேனைக்சிதறப்பளிக்கும்படியான (பக்குவமுள்ள அரும்புகளால் தொடுக்கப்பட்ட) பூமாலையணிந்த மன்னவனே? நீ முன்னே ராக்ஷதனாய்க் காட்டில் சஞ்சரிக்கும்போது அங்குநேரிட்ட வாலிபனாகிய ஒருரிஷிபுத்திரனைக் கொன்று சம்பாதித்துக்கொண்ட பாவங்கண்டாய் இப்போது பேயாகவந்து உன்னைப்பற்றிக் கொண்டதென்றார்கள்-எ-று. (௩௰)

மாதவ ரிசைப்பக்கேட்டே மன்னனு மிதனைநீக்கச்
சேதுவே முதலாயுள்ள புனிதமாந் தீர்த்தம்யாவுங்
காதலான் மூழ்கிமூழ்கிக் கடவுளா லயங்களேத்திப்
பாதக வினைகடீர்க்கும் பதிபல வணக்கஞ் செய்தான்

(இ-ள்.) முனிவர் சொல்லக்கேட்ட மன்னவனும் இந்தப்பாவத்தைநீக்கச் சேதுமுதலாயுள்ள புனிதமாகிய தீர்த்தங்களி லெல்லாம் ஆசையுடன் தனித்தனியே மூழ்கியும் சிவாலயங்களிற்போய்ப் பரமசிவனைத் துதிசெய்தும் இப்படியாகப் பாவவினைகளைத் தீர்க்கத்தக்க அநேகம் ஸ்தலங்களிற்போய் வணங்கினான்-எ-று. (௩௧)

அங்கண்மா ஞாலவட்டத் தாலயந் தலங்கடீர்த்தம்
எங்கணு முழன்றும்பாவந் தீர்கலா திருத்தலாலே
வெங்கதிர்ப் புரவிமான்றேர் விலங்கெயின் மிதிலைஞாங்கர்
மங்குறோய் பொழிலின்மேவி வருத்தமுற் றிருந்தான்மன்னே

(இ-ள்) அழகிய இடத்தையுடைய பெரியபூமியி னிடத்திலுள்ள ஆலயங்கள் ஸ்தலங்கள் தீர்த்தம் எங்குமுழன்று திரிந்தும்(தனக்குநேரிட்ட) பாவந்தீராம லிருப்பதினாலே வெப்பம்பொருந்திய சூரியனுடைய குதிரைகட்டிய தேரானது ஒதுங்கிப் போகத்தக்க உயர்வையுடைய மதில்சூழ்ந்த மிதிலை நகரத்துக்குச் சமீபத்திலிருக்கும் மேகமண்டலத்தை யளாவிய ஒருசோலையிற் சேர்ந்து வருத்தங்கொண் டிருந்தான்-எ-று.

மன்- ஓ- அசை, பாடல்களி னிறுதியில்வரும்- மாது- மன்-ஆல்-அரோ-ஓ-அன்று-ஏ-இவைகள்- அசைகளெனக்கொள்க. இவைகளிற்சில பாடலின் மத்தியில் ஏகதேசமாக வருவதுமுண்டு. (௩௨)

ஆண்டகை யிருந்தகாலை யருந்தவ முனிவர்சூழ
ஈண்டுசெங் கதிரோன்றோன்றி வருவதே யேய்ப்பவொல்லை
காண்டகு வியப்பினோடு கவுதமன் வந்துதோன்றப்
பூண்டபே ருவகைபொங்கப் புரவலன் வணங்கிநின்றான்

(இ-பு.) அரசனப்படி யிருந்தபோது அரியதவத்தையுடைய முனிவர்கள் அருகிற்சூழ்ந்துவரச் சூரியன் உதயமா யிவ்வுலகத்தில் வருவதையொப்பாக யாவருந் தரிசிக்கத்தக்க வியப்புள்ள (தவவேடத்துடன்) கவுதமரிஷி விரைவாக வந்துதோன்றக்கண்டு உண்டாகிய பெரியசந்தோஷம் அதிகரிக்க அம்மன்னவன் வணங்கிநின்றான்-எ-று. (௩௩)

நின்ற மன்னவனை நோக்கி நீபெரு வளங்கண் மேவி
நன்றிருந் தனையோவென்று முனிவர னவிலவன்றோன்
என்றுநின் னருளைச் சேர்ந்தோர்க் கெய்திடா நிமையேனும்
ஒன்றுள துரைக்கக்கேட்டி யுத்தம வென்றுசொன்னான்

(இ-பு.) வணங்கிநின்ற வேந்தனைக் கவுதமரிஷியானவர் பார்த்து ராசனே? மிகுந்த செல்வத்தைப் பொருந்திச்சுகமாக இருக்கின்றனையோவென்றவினாவ அவ்வரசனானவன் சுவாமி உம்முடைய கிருபையைப்பெற்றவர்களுக்கு ஒருகாலத்துந் துன்பங்கள்நேரிடா ஆகிலும் ஒன்றுண்டு அதனைச் சொல்லுகிறேன் உத்தமரே கேளுமென்றுசொன்னான்-எ-று. ()

எங்குலக் குரவன்முன்னா ளியம்பிய சாபந்தன்னால்
வெங்கொலை யரக்கனாகி வேதியற் கொன்றபாவந்
தங்கியோ ரலகையாகித் தமியனைத் தொடர்தலாலே
அங்கது தணிப்பா னெண்ணி யளவிலா வேள்விசெய்தேன்

(இ-பு.) எங்கள் குலகுருவாகிய வசிஷ்டர் முன்னாள்கூறிய சாபத்தினால் நான்கொடிய கொலைத்தொழில் செய்யும் ராக்ஷதனாகி ஒருபிராமணனைக் கொன்ற பாவமானது ஒருபேயாகி ஆதரவில்லாத எளியேனைப் பற்றித் தொடர்தலினாலே அந்தப்பாவத்தைத் தீர்க்க எண்ணி அளவில்லாத யாகஞ்செய்தேன்-எ-று (௩௫)

எண்ணினல் லறங்கள்செய்தே னெண்ணின் மந்திரங்கின்றே
புண்ணிய தலங்கடீர்த்த மாலயம் பலவும்போனே
னுண்ணிய சாகமூல பலங்களை நுகர்ந்தியான்முன்
பண்ணினேன் விரதங்கோடி பாவகமாந்தஞ் செய்தேன்

(இ-பு.) அளவில்லாத நல்லதருமங்கள் செய்தேன் அளவில்லாத மந்திரங்கள் சபித்தேன் அனேகமாகிய ஸ்தலயாத்திரை செய்தேன் தீர்த்தயாத்திரை செய்தேன் சிவாலயங்களுக்கும் போனேன் (அவைகளுமல்லாம

ல்) நட்பாகிய இலிகஞும் மெய்குருகளும் உண்டு காலமுன்னே அந்த விரதங்களும் அனுஷ்டித்தேன் அந்தத் தியானமுஞ் செய்தேன்-எ-று.()

இவ்வணமுலப்பில்காலந் திரிந்துட லீளைத்தே னன்றி
வவ்வியபாவநீங்கப் பெற்றிலேன் மறைக்கு மெட்டாத்
திவ்வியமுணர்ந்தோ யின்றுன் திருமுகக் கருணைபெற்றேன்
அவ்வியமகன்றே னுய்வா னருளெனவடியில் வீழ்ந்தான்

(இ-பு.) இவ்வாறு அநந்தகாலந் திரிந்து உடலிளைத்தேனல்லது என்னைப்பற்றிய பாவந்தொலையப் பெற்றிலேன் வேதத்துக்கு மெட்டாத மெய்ஞ்ஞானப் பொருளை யுணர்ந்தவரே இன்று தேவரீருடைய திருமுகக் கிருபையைப் பெற்றேன் அதனாற்பாவத்தை நீங்கினவனானேன் இனி நான் கடைத்தேறும்படி கிருபை செய்யுமென்று அவர்பாதத்தில் வணங்கினான்-எ-று. (௫௭)

மூவினுமிகுந்தி யஞ்சேன் மொய்ம்மலர்த் தாரோய்முக்கட்
டனிமுதலொருவ னுண்டத் தகவினாலருளால் யார்க்கு
நனியிரு வினைகடீர்ப்பா னயந்தகோ கன்னமுண்டென்
றினிதுணர்ந் திலைபோலு மத்தலத் தியல்புகேண்மோ

(இ-பு.) கவுதமரு மனமிரங்கி நெருங்கிய பூமாலையணியுமன்னவனே? நீ பயப்படாதே திரிநேத்திரங்களுடைய ஒப்பற்ற முதலாகிய பரமசிவனொருவனுண்டு கிருபையுள்ள அந்தக்கடவுளின் அருளால் மிகுந்த இருவினைகளைத் தீர்ப்பதற்கு யாவரும் விரும்புகின்ற கோகன்ன மென்னுமொருதலமுண்டென்று இனிதாக நீ யறிந்ததில்லைபோ அந்தத்தலத்தின் மகிமையைக்கேள்-எ-று. போலும்-மோ-அசைச்சொல். (௫௮)

மந்தர கிரியும்வெள்ளி மால்வரை யிடமுமபோல
வந்தவா யிடமும்ஃதே யிந்திரனயன்பால் விண்ணோர்
சந்திராதித்தர் வேண்டுந் தவம்புரி யிடமுந்தானு
மைந்துபா தகத்தோரோனு மடையினீ டளிக்கும்வீட்டே

(இ-பு.) அரசனே? மந்தரகிரியில் வீற்றிருப்பதுபோலவும் பெரியவெள்ளிமலையாகிய கயிலாச கிரியினிடத்தில் வீற்றிருப்பதுபோலவும் பெரியவெ.. பரமசிவன் வீற்றிருக்குந் தானமும் அந்தக்கோகன்னமாம் அந்தத்தலமானது தேவேந்திரன் பிரமன் திருமால் தேவர்கள் சந்திரன் சூரியன் என்னும் இவர்கள் வேண்டித் தவஞ்செய்யு மிடமுந்தானுமி பஞ்சமாபாதகரோயானுலும் தன்னிடத்தில்வந்து சேர்வார்களானால்(அவர்களுக்கும்) மோக்ஷத்தைக் கொடுக்கும்-எ-று. (௫௯)

எத்தலஞ் சென்றுந்தீரா விடும்பைநோய் வினைகளெல்லாம்
அத்தல நினைக்குமுன்ன ரகன்றிடு முடுக்கோனுலுஞ்
சித்திர பானுவாலு மகன்றிடாத் திமிரவீட்டந்
தத்துவாம் புரவிமான்றேர்த் தபனனு லகலுமாபோல்

(இ-பு.) சந்திரனாலும் அக்கினிதேவனாலும் நீங்காத இருட்கூட்டமானது தாவிச்செல்லுகின்ற பச்சைக்குதிரைகள் கட்டிய தேரையுடைய சூரியனால் நீங்குமாறுபோல எந்தத்தலத்திற்சென்றும் தீராத துன்பமுள்ள பிறவிநோயைத் தருகின்ற வினைகளெல்லாம் அந்தத்தலத்தை நினைக்குமுன்னமே நீங்கிவிடும்-எ-று. (௬௰)

ஒன்றுமுற் றுணராரோனு மொப்பில்சீர்க் கோகன்னத்திற்
சென்றொரு நிமிடம்வைகிற் சிறந்தவே றொருதலத்திற்
கன்றுமைம் புலனுமோம்பிக் கற்பகாலஞ் செந்தீயி
னின்றருந் தவங்கள்செய்யு நெடும்பயன் பெறுவர்கண்டாய்

(இ-பு.) யாதொன்றையு மாராய்ந்தறியுந் தன்மையில்லாதவர்களாயிருந்தாலும் ஒப்பில்லாத பெருமையையுடைய கோகன்னத்திற்சேர்ந்து ஒருநிமிஷப்பொழுது தங்கியிருந்தால் சிறப்புப்பொருந்திய வேறொரு தலத்தில் ஐம்புலன்களையும் அடக்கிக் கற்பகாலம் அக்கினி மத்தியிலிருந்து அருமையாகிய தவங்கள்செய்தலால் வரத்தக்க அழியாத பயனைப்பெறுவார்கள்-எ-று. (௬௧)

வேறு.

அப்பதி தன்னி லைங்கிலை வேலோய்
வைப்பென வாழ்வருண் மாபல லிங்கம்
ஒப்பில தாகி யுறைந்து விளங்கு
மெய்ப்படு காதை விரித்திடின் முன்னாள்

(இ-பு.) பிரகாசியாநின்ற தகட்டுவடிவுள்ள வேலாயுதமேந்தும் அரசனே! அந்தக்கோகன்னத்தில் புதையலிட்டதனம் (கண்டெடுத்தவனுக்கு வாழ்வைத் தருவதுபோல் தன்னைத் தரிசித்தவர்களுக்குப்) பெருவாழ்வை யருளுகின்ற மாபல லிங்கமானது ஒப்பில்லாததாய் விளங்கிக்கொண்டிருக்கின்றது அதனுடைய உண்மையான சரித்திரத்தை விவரித்துச் சொல்லில்முன்னாளில்-எ-று. (௬௨)

இலங்கையின் மன்ன னிராவணன் வெள்ளி
விலங்கலின் மாதவ மெய்துதல் கண்டு
நலங்கெழு நாத னயந்தொரு லிங்கம்
வலங்கொள நல்கி மகிழ்ந்தனை செய்வான

ஒ

(இ-பு.) இலங்கைக்கு மன்னவனாகிய இராவணனானவன் வெள்ளியங்கிரியாகிய கயிலாசத்தில் தவஞ்செய்து கொண்டிருந்ததை அருள்மிகுந்த பரமசிவன்கண்டு கிருபைகூர்ந்து உறுதிகொள்ளும்படி ஒருலிங்கங்கொடுத்தருளி மகிழ்ச்சியுடன் திருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௩௩)

மான வரக்கரின் வாழ்பதி தன்னுள்
யானுதவுஞ் சிவ லிங்க மிருப்பின்
ஈனமுறா தவ் விலங்கை யமர்க்காய்
வானவர் மாலயன் வந்தென் மலைந்தென்

(இ-பு.) பெருமையுள்ள இராவணனே - உன்னுடைய வாழ்வுள்ள இலங்கைப்பட்டணத்தி னிடத்தில்-இப்போது நாமருளிச்செய்த இந்தச்சிவலிங்க மிருந்தால் - இந்தஇலங்கைப் பட்டணமானது ஒருகாலத்தும் அழியாது (இதுவுமல்லாமல்) தேவேந்திரன் முதலாகிய தேவர்களும- விஷ்ணுவும் பிரமனும் போர்செய்யவந்து எவ்விதப் போர்செய்தால் தானென்ன (அந்தப்பட்டணத்துக் கொரு குறையும் நேரிடாது)எ-று. (௩௪)

ஊர்தியி னேற லொழிந்தனை யேகிச்
சீர்பெறு நின்பதி சேர்த்துதி மற்றோர்
பார்மிசை வைத்திடல் பார்மிசை வைத்தால்
ஓதரு லிங்க மெடுக்க வொண்ணாதால்

(இ-பு.) தேரின்மேலேறிக் கொண்டு போவதைவிட்டு (நடந்துபோய்ச்)செல்வமிகுந்துள்ள உன்னூரில் (இந்தச்சிவலிங்கத்தை) ஸ்தாபனஞ்செய் அவ்விடம்விட்டு மற்றொரு பூமியினிடத்தில் வைக்காதே- வேறொருபூமியினிடத்தில் வைத்தால் சொல்லுதற் கரிதாகிய மகிமையுள்ள இந்தச்சிவலிங்கம்- மறுபடியெடுக்கவொண்ணாது-எ-று. (௩௫)

என்ன நிகழ்த்தி யளித்தனி லிங்கந்
தன்னொ டரக்கன் வழிக்கொடு சாரப்
பொன்னகர் வானவர் பொள்ளென மேவி
மன்னி னைங்கர வாரண முன்னார்

(இ-பு.) இவ்வாறு திருவாய்மலர்ந்து கொடுத்தருளிய சிவலிங்கத்தை ஏந்திக் கொண்டு இராவணன் வழிநடந்தான் அதையறிந்த பொன்னுலகத்திலுள்ள தேவர்கள் ஐந்து கரங்களையுடைய யானைமுகக் கடவுளாகிய விநாயகரிடத்தில் அதிசீக்கிரமாகப்போய்ச்சேர்ந்தார்கள்-எ-று. (௩௬)

கைக்களிறே யிது கால மரக்கன்
அக்கணி லங்கையி லிங்க மமர்த்தின்

மூக்கணனு மழிப்பது முற்றா
திக்கணமே யிடையூறிழை யென்றார்

(இ-பு.) துதிக்கையையுடைய யானைமுக விநாயகமூர்த்தியே- இராவணனானவனிப்போது (பரமசிவன் கொடுத்தருளிய)சிவலிங்கத்தைக்கொண்டு போய்-அந்தவிசாலமான இடமுள்ள இலங்கைப்பட்டணத்தில் ஸ்தாபிப்பானேயானால் திரிநேத்திரங்களையுடைய அந்தப் பரமசிவனாலும் அழிப்பதுமுடியாது (ஆகையால் இலங்கைப் பட்டணத்தில் கொண்டு போகவொட்டாமல் இப்பொழுதே அதற்கு இடையூறு செய்தருளௌனார்கள்-எ-று. (௩௭)

உம்பர் வருந்தி யுரைப்பது கேளா
நம்ப னளித்தகை யானந நாதன
பம்பு புனற்றிறை வாபடர் செய்கோன்
வெம்பு வயிற்றை நிறைக்கென பேலோன்

(இ-பு.) தேவர்கள் இப்படியாக வருந்தி விண்ணப்பம்பண்ணிக்கொண்ட குறையைப் பரமசிவ னீன்றருளிய (மூத்த நாயனாராகிய) துதிக்கைபொருந்திய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் நிறைந்துள்ள நீர்க்கிறைவனாகிய வருணனைப்பார்த்து வருணனே தேவர்களுக்குத் துன்பஞ்செய்யத்தக்கவனாகிய இராவணனுடைய வயிற்றில் நீர்நிறையச்செய்யென்று கட்டளையிட்டருள-அந்தவருணதேவனானவன்-எ-று. (௩௮)

ஆமிஃ தென்ற வரக்க னகட்டில்
நீர்மிகு வித்தலி னீர்தொடு திற்பான்
போமவன் முன்ன ரெதிர்ந்து புழைக்கை
மாமுகன் வந்தனன் மாமறை யோனாய்

(இ-பு.) அதைக் கேட்டவருணதேவன் இந்தக்காரியம் அடியேனாலாகுமென்று அந்த இராவணனுடைய வயிற்றில் நீர் அதிகரிக்கும்படி செய்ததினால் நீர் தொட்டுக்கொள்ளுதற்குப் போகாநின்ற இராவணனுக்கு முன்னே துவாரம் பொருந்திய துதிக்கையையுடைய யானைமுக விநாயகரானவர் பெருமைபொருந்திய ஒருபிராமண ரூபங்கொண்டு எதிராகவந்தார்-எ-று. (௩௯)

மல்லணி தோளவன் மாமறை யோயிவ்
வெல்லையி னீர்பெயதி யான் வருகாறும்
அல்லமர் கண்டனை யங்கை தரித்தே
நில்லென் வந்த நெடுந்தகை யோனும்

(இ-பு.) பலம்பொருந்திய தோளையுடைய இராவணனானவன் (பதிலி வந்தவனைக்கண்டு) பெருமையுள்ள பிராமணரே நீர் தொட்டுக்கொ டு இவ்விடத்தில் நான் வருமளவும் கருமை நிறந்தங்கிய கண்டத்தை யு டைய சிவசொரூபமாகிய சிவலிங்கப் பெருமானை உம்முடைய அழகிய கையில்வைத்துக் கொண்டிருமென்று சொல்ல மிருந்த பெருமையுள்ள அந்தப்பிராமணர் சொல்லுகிறார்-எ-று. (௫௰)

இச்சிவ லிங்க மெடுத்திவ ணிற்பா
னச்சிலை வேலவ நான்வலி யில்லேன்
முச்சொல் விளித்திடு முன்னணு கா யேற்
கைச்சிவ னைப்புவி யாட்டுவ னென்றான்

(இ-பு.) விஷம்போலக் கொடுமையுள்ள தகட்டுவடிமான வேலேந்து ம் இராவணனே நான் இந்தச் சிவலிங்கத்தை யேந்திக்கொண் டிருக்கு படியான சக்தியில்லாதவன் (ஆதலால்.) மூன்றுசொல் அழைப்பதற்கு ன் நீவாராவிட்டால் என்கையிலிருக்குஞ் சிவலிங்கப் பெருமானைப் பூ மியில்வைத்து விடுவேனென்றார்-எ-று. (௫௧)

செங்கணரக்க னிசைந் தயல் சென்றான்
வெங்கத வேழ விநாயன் முக்கால்
இங்கணை வாவென வெய்தில னாக
அங்கையி லிங்க மகன்புவி வைத்தான்

(இ-பு.) கோபக்குறியாகிய செம்மைநிறமுள்ள கண்களையுடைய இரா வணன் அதற்குச்சம்மதித்து அப்புறம்போனான் வெவ்வியகோபங்கொ ள்ளும் யானைமுகத்தையுடைய விநாயகமூர்த்தியானவர் இராவணா இங் கேவா இராவணா இங்கேவா இராவணா இங்கேவா வென்று மூன்றுதரம் அழைத்து அவன்வாராமையினாலே தம்முடைய அழகிய கையினிடத்தில் வைத்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை விசாலமாகிய பூமியினிடத்தில் வைத்துவிட்டார்-எ-று. (௫௨)

அவ்வழி யோடி யடைந்த வரக்கன்
றிவ்விய மண்மிசை சேர்ந்தது காணா
எவ்வ மிலாத விலிங்க மெடுத்தான்
வவ்வ லுறாமையின் மாபல மென்றான்

(இ-பு.) அந்தவிடத்தில் அதிகவிரைவாகவோடி நீர்தொட்டுக் கொண்டு வந்த இராவணன் சிவலிங்கம் பூமியினிடத்தி லிருப்பதைக் கண்டு குற் றமில்லாத அந்தச் சிவலிங்கத்தை யெடுத்தான் அதுதன்னா லெடுக்கக்கூ டாததாயிருந்ததினாலே இதுமகாபல லிங்கமென்றான்-எ-று. (௫௩)

ஊசி லாக்க னுனாத்தது கண்டே
பேசினர் மாபல லிசனென் னும் பேர்
வீசிய கைகொடு மீட்டு மெடுத்தா
னேச லிலிங்க நிமிர்ந்தது லகந்தே

(இ-பு.) சிவநேசத்தில் பழுதில்லாத இராவணனானவன் சொன்னதை அறிந்து அந்தச்சிவலிங்கத்துக்கு மாபல லிங்கமென்று பெயரிட்டார்கள் இராவணனானவன் மறுபடியும் நீண்டகையினால் தன் பலங்கொண்டமட் டும் எடுத்தான் (அப்படி யெடுத்தபோது) அன்பைத் தருகின்ற அந்த ச்சிவலிங்கமானது குழைந்து நீண்டது-எ-று. (௫௪)

வேறு.

ஆவினது செவிபோல வவ்விலிங்க நிமிர்வுறலான்
மேவினது கோகன்ன மெனும்பெய ரவ்வியன்பதிக்குக்
காவனைய கைத்திரளாற் கனன்றரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடிப் புடைத்தனன்றன் சினமிகவால்

(இ-பு.) அந்தச் சிவலிங்கமானது பசுவின் காதுபோல நீண்டபடியி னாலே பெருமையுள்ள அந்தத்தலத்துக்குக் கோகன்னமென்னும் பெயர் பொருந்தியது இராவணனானவன் மனங்கொதித்துச் சோலையையொத்த இருபதுகைகளாலும் பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டிருக்கும் வி நாயகமூர்த்தியின் சிகையுள்ள சிரசில் தன்கோப மிகுதியினால் குட்டினா ன்-எ-று. (௫௫)

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவா ரணமுகத்தோன்
அடித்தலமு மணிமுடியு மகலிடமும் விசும்புமுறப்
படைத்தவுரு வெனநிமிர்ந்து பனைக்கரத்தா லிராவணனைப்
பிடித்துமணிக் கழங்கென்ன வெறிந்தெறிந்து பிடித்திடலும்

(இ-பு.) குட்டினவுடன் மதநீரைப் பொழிகின்றயானைமுகத்தையுடை ய விநாயகமூர்த்தியானவர் கோபித்தெழுந்து திருவடியும் அழகிய தி ருமுடியும் விலாசமுள்ள பூமியிடத்தும் ஆகாசத்தினிடத்து மாகப்பொ ருந்தப்படைத்த சொரூபம்போல ஓங்கிப் பனைபோன்ற துதிக்கையினா ல் இராவணனைப்பிடித்து அழகிய கழற்சிக்காய்போல் (பூமியில்விழவொ ட்டாமல்) பலதரமேலெறிந்து பிடித்திடவும்-எ-று. (௫௬)

மறையோனென் றுறநினைந்து மடமையினா லிகழ்ந்தேன்
பிறையோங்கு மணிமகுடப்பெருங்களிறே பிழைசெய்தேன்
இறையோனே பொறுப்பதுனக் கியல்பெனறென் றிரந்தேத்தப்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக்கனை விடுத்தான்

(இ-பு.) என்னுடைய பேதைமையினாலே பிராமணப் பிள்ளையென்றெ
ண்ணி இந்தக்காரியத்தைச்செய்தேன் பிறைப்பணிர்தோங்கிய மணிமகுட
த்தையுடைய பெரியயானைமுக விநாயகமூர்த்தியே? அடியேன் பிழை
செய்தேன் இறைவனே, பொறுத்துக்கொள்வது தேவரீர்க்குத் தகுதியெ
ன்று பலதரஞ்சொல்லி யிரந்துநிற்செய்யப் பார்வதிபுத்திரராகிய விநா
யகமூர்த்தியானவர் பெருமையுடையவராய் இராவணனைப் பூமியில்விட்
டார்-எ-று. (ருஎ)

நிருதர்குலத் திசல்வேந்தே நினதுபிழை யாம்பொறுத்தற்
கிருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோ னுனக்களித்த
ஒருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனலோடுங்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குனித்தாடி யுவப்பித்தான்

(இ-பு) பலமுள்ள ராக்ஷதகுலத் தரசனாகிய இராவணனே ? நீசெய்த
குற்றத்தை நாம் பொறுத்துக்கொள்வதற்கு அழகிய செந்தாமரை மலரி
லிருக்கும் பிரமன் உனக்குக்கொடுத்த இருபது சிவந்த கைகளாலும்பெ
ருமையுள்ள மகுடமணிந்திருக்கும் பத்துத்தலைகளிலும் பொருந்தக்கு
ட்டிக்கொள்ளென்று சொன்னவுடன் செப்புநிறங் கொள்ளும்படி குட்டி
க்கொண்டு குதித்துக் குதித்துக் கூத்தாடி (விநாயகமூர்த்திக்குச்) சந்
தோஷம்வரச்செய்தான்-எ-று. (ருஅ)

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்றுமுதல்
என்னதரு ணலம்வேண்டி னினைப்போல விருகாத்தாற்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகிழ் குவனென்று
மின்னின் மறைந்தனனிருதன் வேலையிலங் கையிற்புக்கான

(இ-பு.) அவன் குட்டிக்கொண்டு கூத்தாடுவதைக்கண்ட ஐந்துகரங்க
ளையுடைய விநாயகமூர்த்தியானவர் சந்தோஷங்கொண்டருளி இன்றுமு
தல் எம்முடைய [illegible] விரும்பினால் உன்னைப்போலத் தங்க
ளிரண்டு கைகளாலும் சிரத்திற் பொருந்தக் குட்டிக் கொள்ளுகிறவர்க
ளிடத்தில் நாம்மனமகிழ்ச்சி யடைவோமென்றுசொல்லி மின்னல்மறை
வதுபோல மறைந்துவிட்டார் (அதன்பின்பு) ராக்ஷதனாகிய இராவண
ன் சமுத்திரத்தின்மத்தியிலிருக்கும்இலங்கையிற்போய்ச்சேர்ந்தான்-எ-று

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் திலக்கன்
பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகைதன் கைக்கொடுப்பப்
பொன்னிலங்கு முடியோயப் புகர்வேழம் புனலாடை
மின்னிலங்கவவ்வி லிங்கம் விருப்பத்தாலமைத்ததால்

(இ-பு.) பொன்னாற் செய்யப்பட்டுப் பிரகாசிக்கும் கிரீடமணிந்த அர
சனே! தெற்கிலுள்ள இலங்கைக் கரசனாகிய இராவணனிடத்தில் பரம
சிவன் கொடுக்க வெற்றியுள்ள அந்தராக்ஷதன்பின்பு ஒளிவிளங்காநின்ற
ஒற்றைக் கொம்பையுடைய விநாயகக்கடவுளிடத்திற் கொடுக்கப் பின்பு
புகர்நிறந்தங்கிய யானைமுகத்தையுடைய அந்தவிநாயகரானவர் சமுத்தி
ரமாகிய வஸ்திரமணிந்த பூமிதேவி விளங்கும்படி அந்தச்சிவலிங்கத்தை
விருப்பத்துடன் ஸ்தாபித்தார்-எ-று. (சுய)

கோகன்ன னுலயத்திற் குலவுதிசை யிருநான்கு
நாகவணைத் துயினெடுமா னான்முகனிந் திரன்முதலா
மாகமுறு மமரர்குழா மருத்துவர்விஞ் சையர்முனிவர்
நாகருல கத்தவரோ நாளுநிறைந் தடிதொழுவார்

(இ-பு.) பிரகாசியாநின்ற அஷ்டதிசையிலுள்ள திக்குப்பாலகர்களும்
சர்ப்பசயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் மகாவிஷ்ணுவும் நான்குமுக
ங்களையுடைய பிரமதேவனும் தேவேந்திரன்முதலாகிய சுவர்க்கலோக
த்தில்வாசஞ்செய்கிற தேவகூட்டமும் மருத்துவர்களும் விஞ்சையர்க
ளும் முனிவர்களும் நாகலோகத்தாரும் எந்நாளும ஆலயத்தில் நிறைந்
து கோகன்ன நாதனுடைய திருவடிகளைத் தொழுவார்கள்-எ-று. (சுக)

வேறு.

தும்புருநாரதர்மகதி விபஞ்சிகாய் புளாகூழ் சுருதித்தேறல், பப்புமொ
ருபால்வீணைத் தந்திரியுமிட்டுமொன்றாய்ப் பயின்றகான, நப்புசதிமுறை
நிறுக்குங் கின்னரர்தம் பாடலெனு நவையிறந்தேன், கும்பமுலையரம்பை
யர்த நடநவிலு மெய்யிலொன்றிக் குழையுமோர்பால் ... ... *

(இ-பு) தும்புரு நாரதர் என்னு முனிவர்கள் மகதி விபஞ்சி என்னு
ம் வீணையினரம்பைத் தெறித்து வாசிப்பதினால் பெருகாநின்ற இசைத்
தேனானது ஒருபுறத்தில் நிறைந்திருக்கும் ஒருபுறத்தில் வீணைத்தந்திரியி
னதும் கண்டத்தினதும் ஒத்துபடக்கின்னரர்கள் பாடுகின்ற மாறு
படாத தாளப்பிரமாணத்தை வகுத்துக் காட்டும் குற்றமில்லாத மதுர
முள்ள தேன்போலச் சுவையுள்ளஇசைப்பாடலானது பொருந்தாப்போ
ன்ற தனங்களையுடையஅரம்பைமாதர்களாடுகின்ற கூத்தின்விகற்பத்தை
க்காட்டும் அங்கங்களுக் கொத்துபேதமில்லாமலிருக்கும்-எ-று. (சுஉ)

ஆடுமுனிக் கணமொருபா லான்புகழைக் கானத்தி லமையவோதிப்
பாடுமருந் தவரொருபாற் பரமானந்தபூதியினிற் பழுத்துநெஞ்சங், கூடுச
மாதியரொருபாற் கோகன்ன நாயகனைக் கும்பிட்டேத்தி, வீடுபெறுவா
ரொருபால் விண்ணோர்ப்பார்க் கத்தலம்போல் வேறுண்டாமோ ... *

(இ-பு.) ஆனந்தத்திருவுல் கூத்தாடு முலைக்கூட்டங்க ளொருபுறத்தி லி ருப்பார்கள் பரமசிவன்புகழை இசையிற்பொருந்தும்படி சொல்லிப்பாடு ம் அரியமுனிவரொருபுறத்தி லிருப்பார்கள் சிவபெரியில் மனங்கவிந்து நிஷ்டைகூடியிருப்பவர்கள் ஒருபுறத்திலிருப்பார்கள் கோகன்னக் கடவு ளாகிய பரமசிவனைக கும்பிட்டுத் துதிசெய்து மோக்ஷமடையத்தக்கவர் கள் ஒருபுறத்தி லிருப்பார்கள் (ஆதலால்) வினைகளை யொழிப்பவர்களுக் கு அந்தத்தலத்தைப்போல வேறிருத்தலமுண்டாமோ இல்லை-எ-று. ()

ஆயிடையிற் சிலையனைத்துஞ் சிவலிங்கம் புனல்யாவு மரியதீர்த்தம்
மேயகார் யாவோரும் புத்தேளிர் மகளிரெல்லாம் விண்ணினமாதர்
தூயபசு நிரையெல்லாம் வான்சுரபி பொழிலெல்லாஞ் சுரர்பூத்தாரு
மாயிரு ஞாலப் பரப்பிற் கோகன்னஞ் சிவலோக மன்னமோதே

(இ-பு.) பகைகொள்ளு மன்னவர்களாகிய யானைகளுக்குச்சிங்கம்போ லிருக்கும் வேந்தனே அந்தத் தலத்திலிருக்கும கற்களெல்லாம் சிவலிங்க ம் நீரெல்லாம் சிவதீர்த்தம் அவ்விடத்தில் வாசஞ்செய்கின்ற மனிதாகளெ ல்லாரும் தேவர்கள், மாதாகளெல்லாரும் தேவமாதர்கள், பரிசுத்தமு ள்ள பசுக்களெல்லாம் காமதேனு, சோலையெல்லாம் கற்பகச்சோலை (இ த்தகுதியால்) பெருமைபொருந்திய பெரிய இவ்வுலகத்தினிடத்தில்கோ கன்னமானது சிவலோகமாம்-எ-று. (௧௪)

கூறுபல பெருந்தீர்த்தம் யாவுக்குமேலாகுங் கோடிதீர்த்தம்
பேறுதரு மிலிங்கங்க ளனைத்தினுக்கு மதிகமாம் பலலிங்கம்
வீறுதல மனைத்தினுக்கு மேலாகுங் கோகன்னம் வேந்தர்வேந்தே
தேறுவரோ வேறுமொன்றையிளக்கிருக்கத் தீத்தேடுந்தெருளிலார்போல்

(இ-பு.) அரசாக்காசனுகிய மித்திரசகராசனே? அந்தத்தலத்தி லிருக் குங் கோடிதீர்த்தமானது பலவாகச் சொல்லுகின்ற பெரிய எல்லாத் தீ ர்த்தங்களுக்கு மேலானதாகும், மாபலலிங்கமானது மோக்ஷந்தரத்தக்க எல்லாலிங்கங்களுக்கு மேலானதாகும், கோகன்னமானது விளங்குகின்ற எ ல்லாத்தலங்களுக்கு மேலானதாகும் ஆகையால் விளக்கிருக்க நெருப்புத் தேடும் அறிவில்லாதவர்கள்போல விவேகமுள்ளவர்கள் வேறிருதலத் தைத் தேடுவார்களோ தேடார்கள்-எ-று. (௧௫)

இத்தகைய நகர்மேவி மாகசதுர்த் தசியினரா விரவின்வைகி
யத்தமா பலலிங்க நாயகனை விதிமுறையா லருச்சித்திந்நாள்
வித்தகனுஞ் சனகன்முயல் வேள்விக்கு மிதிலைநகர் மீளுங்காலை
சித்தமுற மிறப்புறக் கண்டனமித் திசகனே செப்பக்கேண்மோ

(இ-பு) இப்படிக்கொத்த மகத்துவமுள்ள கோகன்னத்திற்போய் மா சிமாச சதுர்த்தசியாகிய சிவராத்திரியிலிருந்து நம்முடைய அத்தனுகிய மாபலலிங்கநாயகனை வேதமுறைப்படி யாம அருச்சனைசெய்து இன்றை யதினம் ஞானவானுகிய சனகராசன் செய்கின்ற யாகத்தைக்குறித்து மி திலைநகர்க்கு வரும்போது ஞாபகத்தில் வைக்கத்தக்க ஒரு அதிசயங்க ண்டோம் மித்திரசகனே? அதனைச்சொல்லக்கேட்பாயாக-எ-று. மோ முன்னிலையசை. (௬௬)

இரண்டாவது-சிவஞானமகிமையுரைத்த அத்தியாய
முற்றிற்று.
ஆ திருவிருத்தம - ௧௨௨.

உ

சிவமயம்.

மூன்றாவது.

சிவராத்திரியில்கன்மாடபாதராசன்

முத்திபெற்ற அத்தியாயம்.

மாதுறுமுனிகூறிடலு மிகல்வேந்த னகமகிழ்வோ டிறைஞ்சிபேதத
நன்றுபுதிதப்புதுமை யுரைத்தியென வுரைத்திடலு நவைநீர்வேதத்
தொனமிபநாவினனுய பெருந்தவனுங் கண்டபரி சுரைப்பேனென்னத்
துன்றுநறுந் தொடைப்புயத்து மன்னவனை முகநோக்கிச் சொல்லினனே

(இ-பு.) கவுதமரிஷியானவர் இப்படியாகச்சொல்லவே வலியுள்ள அரச னனவன மகிழ்ச்சியுடன் பணிந்து துதிசெய்து மிகவும் புதியதாகிய அவ் வாச்சரியத்தைச் சொல்லுமென்றுசொல்லவும் குற்றமில்லாத வேதங்களி ற்பழகிய நாவினையுடையவராகிய மேன்மைபொருந்திய அந்த முனிவர் தாங்கண்ட முறைமையைச் சொல்லுகிறேனென்று நல்லமணந்தங்கிய பூ மாலையணிந்த புசங்களையுடைய அந்தவேந்தன் முகத்தை நோக்கிச் சொ ல்லுகின்றார்-எ-று. (௧)

அருங்கானில் வருந்துயரான் மலர்த்தடத்து னீருகந்து யதன்றீரத்தோர்
மருங்கால நிழலடைந்து சூழ்ந்தவருந் தவரோடும் வதிந்தகாலைத்
கருங்காகம் போனிறமுங் காயமெலாம் புழுநெளியக்கவித்த புண்ணுஞ்
சுருங்காத குட்டமுதற் பலநோயு முடையானெய் துளங்குமீரான்

(இ-பு) செல்லுதற்கரிய வனத்தில் நடந்துவந்த இளைப்பினால் ஒருமலர்த்தடாகத்தினிடத்தில் நீருண்டு அதன்கரையி லொருபக்கத்திலிருக்கும் ஆலமரத்தினிழலிற் சேர்ந்து நம்மைச்சூழ்ந்த அரியமுனிவர்களுடன் இருந்தபோது கரியகாகம்போல நிறமும் சரீரமெங்கும் புழுவுளனதெளியும்படி வியாபித்திராநின்ற புண்ணும் குறையாத குஷ்டமுதலாகிய வியாதியும்- உடையவளாயும்- அவைகளால் உடல்நடுங்குந் தன்மையையுடையவளாயும்-எ-று.

(௨)

புண்டாளாமுடைநாற வணைந்துறவாள் வெப்பநோய் புகையச்சூலை
கொண்டாவிவருந்துவாள் கண்ணில்லாளொருபுலைச்சி கொடியவுடம்பாள்
கண்டோர்தங் கண்புதைப்ப வழிவருவா ளூனொத்தெழுந்த கயநோய்ச்சிற
விண்டோயுமாதவத்தாவெரிசொரிந்துநிலத்தினிடைவீழ்ந்தாண்மன்னே

(இ-பு.) புண்களிலிருந் தொழுகாநின்ற இரத்தத்தாரையானது துர்க்கந்தமாகநாற - வருத்தமடைகின்றவளாயும் - சுரநோய்மேலெழுந்து அனல்வீச அதனுடன் சூலைநோய்கொண்டு உயிர்வருந்துகின்றவளாயும் - பார்வையில்லாதவளாயும் - கொடியவிழிந்தன்மை யுள்ளவளாயும் - பார்ப்பேரெல்லாம் (அருவருப்பினால்) தங்கண்களை மூடிக்கொள்ளும்படியாக வழிநடந்து வருகின்ற அந்தஸ்திரீயானவள் வருந்தி - அதிகரித்த க்ஷயநோயானது துன்பப்படுத்த ஆகாயத்தில் பொருந்திய சூரியவெப்பத்தினால் அக்கினிமயமாய்ச் சுடுகின்ற பாலைநிலத்தினிடத்தில் விழுந்தாள்-எ-று.

(௩)

விழுந்தவுடன் புலைமுதியா ளாவியுடல் விடுபவத்தை விதந்தசொல்லாஞ்
சூழ்ந்தவருந் தவரோடுங் கண்டானின் றனபாரகோர் சோதிவானம்
போழ்ந்தொளிர்பொன் விமானமுடனிழிந்து பலகணநாதர்புவியிற்போதந்
தாழ்ந்தவளை யடிவணங்கி வரவென்கொ லென்னவவர் சாற்றலுற்றார்

(இ-பு.) விழுந்தவுடன் அந்தப்புலைச்சியாகிய கிழவியின் உயிரானது உடலைவிட்டு நீங்கும்போதுண்டான அவஸ்தையின் வகைகளையெல்லாம் நம்மைச்சூழ்ந்திராநின்ற முனிவர்களும் நாமும் பார்த்துக்கொண்டு அவ்விடத்திலிருந்தோம் அப்படியிருக்கும்போது அவ்விடத்தில் இருளைநீக்கிப்பிரகாசியாநின்ற சோதியுள்ள ஒருபொன்விமானமுடன் ஆகாயத்தினின்று மிழிந்து பலகணநாதர்கள் பூமியினிடத்திலே நாமகண்டு தாழ்ந்து அவர்கள்பாதத்திலே பணிந்து நீரிவ்விடத்திற்கு வந்தகாரண மென்னவென்று வினாவ அவர்கள் சொல்லத்தொடங்கினார்கள்-எ-று.

(௪)

மலைமகளை யொருபாகம் வைத்தபிரா னேவவிமானமீதில்
புலைமகளைக் கொடுபோவா னணைந்தனமென் றுரைசென்ற போழ்திவ்வானி

ன், நிலசூடர் விமானத்தை யிவளடைதன் மனறவேள்வி யிபற்றுசாலை
யுலகினிழி புடைக்குலைவாய் நுழைபுகுந்தேறுமதை யொக்குமாதோ

(இ-பு.) மலையரையன் புத்திரியாகிய பார்வதியை இடப்பாகத்திலே வைத்தருளிய பரமசிவன் கட்டளையிட்டனுப்பியதினால் இரத்தினங்கள் பதித்தவிமானத்தின்மேல் இந்தஸ்திரீயைக் கொண்டுபோகவந்தோமென்றார்கள் அவர்களப்படிச்சொன்னபோது விண்ணுலகத்திலிருந்துவந்து பிரகாசியாநின்ற ஒளியுள்ள இந்தவிமானத்தில் இவளேறுவது உலகத்திலிருக்குஞ் (ஜந்துகளுள்) இழிவையுடைய ஒலிக்காநின்ற வாயுள்ளநாயானது வேதவிதிப்படி செய்கின்ற யாகசாலையிற்சென்று (சுவர்க்கலோகத்துக்குப்போக) விமானத்திலேறுவதை யொப்பாகும்-எ-று.

(௫)

எனப்புகன்றேம் பின்னரும்பார்த் திழிபிறப்பினுள்ளக விரண்
டுமில்லாள், நினைத்துணையுஞ் சிவனினையுஞ் சிவனடியார் நிலையுமுளந் தெ
ரிந்ததில்லாள், வினைத்திறனன் மிகுபிணியாளெழுபிறப்பி னல்வினையி
ன் விழைவொன்றுமில்லாள், தனைச்சிவலோ கத்தினிடைக் கொடுபோவான்
சமைந்ததுநீர் சாற்றுகென்ன ... ... *

(இ-பு.) என்றுசொல்லிப்பின்னும் அவர்களைப்பார்த்து இழிவாகியபிறப்பினையுடையவளும் இரண்டு பார்வைகளு மில்லாதவளும் பரமசிவனுடைய நிலையினையும் சிவனடியார்கள் நிலையினையும் தினையளவு பொழுதாவது அறியாதவளும் வினைவலியால் மிகுந்த பிணியையுடையவளும் எழுவகைப்பிறவியினிடத்தும் புண்ணியத்தில் எவ்வளவேனும் விருப்பமில்லாதவளும் ஆகிய இவளைநீங்கள் சிவலோகத்துக்குக் கொண்டுபோகச் சம்மதித்துவந்த காரணமென்ன சொல்லுங்களென்று கேட்க-எ-று.

எழுவகைப்பிறப்பாவன-தேவர்-மனிதர்- மிருகம்- பக்ஷி -ஊருஞ்ஜந்து-நீரில் வாழுஞ்ஜந்து-தாபரம்-என்பவைகளாம்- தாபரமாவது-மலைமரமுதலான அசையாப்பொருள்.

(௬)

இருந்தவத்தின் மாமுனியே யிப்புலைச்சி திறங்கேட்கி னிறும்பூதெ
ய்துந், திருந்துபுகழ்க் கேகயநாட் டொருமறையோ னளித்தவருஞ் செம்
பொற்பாவை, சரிந்தமலர்க் கருங்குழலாள் சவுமினியெனனும் பெயராள்
சம்பாரி, வருந்துவனப் பிரதியெனு மணங்கினையு மழகழிக்கும் வனப்பி
ன்மிக்காள் ... ... *

(இ-பு.) பெருமைபொருந்திய தவத்தினால் மகத்தாகியமுனியே இந்தப்புலைச்சியினுடைய செய்திகளைக் கேட்கில் ஆச்சரிய முண்டாகும் (என்னவென்றால்) நல்ல புகழை யுடைய கேகயநாட்டி லிருக்கும் ஒரு பிராமணன்பெற்ற கிடைத்தற்கரிய செம்பொன்னினாற் செய்யப்பட்ட பிரதி

னமயொத்தவளும் பூமாலையணியப்பட்டுக் கருமைநிறமுள்ளதாய்த்தா
ந்த அளகபாரத்தையுடையவளும் சவுமினியென்னும் பெயரையுடைய
ளுமாய் மன்மதன்கண்டு மோகமடைந்து வருந்துதற்கேதுவாக அழகு
ளதெய்வப்பெண்ணாகிய ரதியினுடையசவுந்திரியத்தின்பெருமையுந்
டச்செய்யத்தக்க சுந்தரத்தில் மிருந்தவள்-எ-று. (எ

கொங்கைபடி கொண்டிளகிப் பணைத்திறுகிப்பிறுமாந்து குரும்பையேய்
ப, மங்கையெழிற் பருவமிவ னெய்துதலு மிடையறாத மனத்திறேர்ந்து
பங்கயமா முகத்தாளை யொருமறையோன் விதியின்விழாப் பண்ணலி
லெங்கயமும்பிடியுமெனக் கலவிநுகர்ந்திருவோரும் விழையுநாளில்

(இ-பு.) இத்தன்மையான அழகுள்ளவள் இரண்டு தனங்களும் அ
ந்து இளகலாய்ப் பருத்திறுகிப் பூரித்துத் தென்னங்குரும்பையை
பபாகும்படியான மங்கைப்பருவத்தை யடைந்தமாத்திரத்தில் இவள்
ப்பன் இனி விவாகஞ் செய்விக்கவேண்டுமென்று மனதில் உணர்ந்து
ந்தாமரை மலர்போன்ற முகத்தையுடையவளை ஒரு பிராமணன் வே
விதிப்படி விவாகஞ்செய்துகொள்ளக் கன்னிகாதானமாகக்கொடுக்க
வ்விய ஆண்யானையும் பெண்யானையும் இணைபிரியாமல்கூடிக்கொண்
ருப்பதுபோல இவ்விருவருங் கலவியின்பம் அநுபவித்துக்கொண்டு
ருப்பமுற்றிருக்கும்நாளில்-எ-று. பெண்களுக்குப்பருவம் - எழு - அவை
பேதை-பெதும்பை-மங்கை-மடந்தை-அரிவை-தெரிவை-பேரிளம்பெண்
என்பவைகளாம், பேதைப்பருவமானது- ஐந்துவயதுமுதல் - ஏழுவயது
வரைக்குமுள்ளது, பெதும்பைப்பருவமானது எட்டுவயதுமுதல் பதினெ
ருவயதளவுமுள்ளது, மங்கைப்பருவமானது - பன்னிரண்டு வயதுமுதல்
பதின்மூனறு வயதளவுமுள்ளது, மடந்தைப்பருவமானது - பதினான்கு
வயதுமுதல் பத்தொன்பது வயதளவு முள்ளது, அரிவைப் பருவமான
து இருபது வயதுமுதல்இருபத்தைந்து வயதளவுமுள்ளது, தெரிவைப்
பருவமானது - இருபத்தாறு வயதுமுதல் முப்பத்தொரு வயதளவுமுள்
ளது, பேரிளம்பெண் பருவமானது-முப்பத்திரண்டுவயதுமுதல்நாற்ப
துவயதளவு முள்ளது.

தன்னுயிர்போனீங்காத கொழுநனுக்கு வினைதாப்பச்சார்ந்த நோயால் (அ)
இன்னுயிர்விட்டவனிறப்பத் துணையிழந்தவன்றிலென விரங்கிமாழ்கிக் *
கன்னன்மொழிக் குயிலனையாள் கைம்மையுற்றபின்னரும்வெங்காமநோ
யான்,மன்னுபெருநிறையொருவிக் காளிகண் யாவரையு மருவுநாளின்

(இ-பு.) தன்னுயிர்போல விட்டுப்பிரியாதகணவனுக்கு -ஊழ்வினையா
ல நேரிட்ட வியாதியினால் - இனிய வுயிரைவிட்டு அவனிறந்து

போகவே துணையாகிய ஆண் அன்றிற் பறவையைப் பிரிந்த - பெட்டை
அன்றில்(இரங்குவதுபோல) கரும்பையொத்த மதுரமுள்ள சொல்லினு
ல்- குயில்போன்றவள் அழுது சோர்ந்துகைம்பெண்ணானபின்பும் - வெவ்
விதானகாமநோயினால் நிலைபெற்ற பெரிய கற்பினைநீங்கிச் சோரத்தன
மாக எல்லாரையும் புணர்ந்துகொண்டிருக்கும்நாளில்-எ-று. (௯)

வேறு.

உற்றுரயலா ருனாக்குமுனை கொள்ளாள்
கற்றோர் முதியார் கழறுவதுங் கைக்கொள்ளாள்
முற்று முகிழ்முலைப்பால் முற்றி முகங்கறுப்பப்
பற்று நகைப்பாள் கருப்பம் படைத்தனளே

(இ-பு.) (இவள்விபசரிப்பதையறிந்து) சுற்றத்தாரும் அன்னியரும் (நீ
நடக்கும் நடத்தையோக்கியமான தல்லவென்று) சொல்லும் வார்த்தை
யைக்கேளாதவளாயும்-கல்விகற்றவர்களும்-முதிர்ந்த வயதுள்ளவர்களும்
சொல்லும்வார்த்தையை யேற்றுக்கொள்ளாதவளாயும் (தன்னிஷ்டப்படி
நடந்துஉண்டென்று நிச்சயித்துக் குறிக்கக்கூடாத நுட்பமாகிய) இடை
யையுடையவள் முதிர்ந்துசாயாமல் குவிந்திருக்குந் தனங்கள் பால்நிறை
ந்து காம்புகள் கருமை நிறங்கொள்ளும்படி கருப்பம் அடைந்தாள்-எ-று.

அங்கதுகண் டுற்று ரயலா ரிவர்குழுமி
யெங்குலத்துக் கெல்லா மிருந்துபழி யீட்டுவாள்
தங்குத லிவ்வூர்க்குத் தகாதென்று நீக்குதலுஞ்
செஙகண் புனல் சொரிப்பச்சேயிழையாள்கானசென்றாள்

(இ-பு.) இந்தமாதானவள் கருப்பம் யடைந்ததையறிந்து சுற்றத்தாரு
ம் அயலாருமாயிருப்பவர்கள் கூடி இவளிவ்விடத்தி லிருந்து நம்முடை
ய குலத்துக்கெல்லாம் பழிசம்பாதிப்பவளாயிருக்கிறாள்(ஆதலால்) இவ்
வூரிலிருப்பது தகாதென்று நீக்கிவிடவும் கண்கள் நீர்சொரியும்படி (அ
ழுதுகொண்டு) காட்டிற் போய்விட்டாள்-எ-று. (௰க)

அத்தலைபோர் வேளாண் மரபி லடுகாளை
சித்தமயல் கொண்டவடோள் சேர்ந்துமனையிற்செறிப்பப்
புத்தமுத மென்னத் தணியனிணம் புழுக்கல்
துய்த்தங் கவன்மார்பிற் றேய்ந்துநல னுண்டிருந்தாள்

(இ-பு.) அவ்விடத்தில் வேளாளகுலத்தனாகிய துர்நடத்தையுள்ள ஒரு
விடபுருஷன்கண்டு மனதில்காம மயக்கங்கொண்டு அவள்தோளைச்சேர்
ந்து தன்வீட்டிற்கொண்டு போய் வைத்துக்கொள்ள புதியஅமுதம்போ

ள் கள்ளும் இறைச்சியுடன் சோறுமுண்டு அவன்மார்பிற்சேர்ந்து கலவி யின்பம் அநுபவித்துக்கொண்டிருந்தாள்.-எ-று. (௰௨)

பன்னவட்டக்குல மொருவி வேளாளன பன்னியாய்க்
கன்னிடன் சுவைக்கலவிக் காமபானாதியெல்லாம்
உண்டிடன் புதல்வர்ப்பே றுற்றுநெடு நாட்கழிப்பத்
தண்டிறலான் வேற்றூர்க் ககலுமிச் சேயிழையாள்

(இ-பு.) தான்பிறந்த பிராமண குலாசாரத்தை நீங்கிச் (சூத்திரகுலத்தாருகிய) வேளாளன் மனைவியாய் வெல்லக்கட்டிபோல இனிய மதுரத்தைத் தருகின்ற கலவிக்குரிய அதரபான முதலாகிய நுகர்வை அநுபவித்து இன்புறத்தக்க குழந்தைகளையும்பெற்று நெடுங்காலஞ் செல்லும்படி இருக்கும்போது (ஒருநாள்) மிகுந்தபலமுள்ள அந்த வேளாளனானவன் அயலூருக்குச் செல்லவும், இந்தப்பெண்பிள்ளையானவள்-எ-று. (௰௩)

மற்றொருவ ரில்லா மனையிற் றமியளாய்
அற்ற மிருட்டங்குல்லா வாற்றது காமத்தீ
பற்றா துவருந்தி யூன்றடி னபான் விரும்பிப்
பொற்றொடியா ளக்கிலையோர் தொழுத்திடைபுகுந்தாள்

(இ-பு.) வேறொருவரு மில்லாத வீட்டில் தான்மாத்திரம் தனியளாயிருந்து அன்று இருள்சூழ்ந்த இராப்பொழுதைச் சகித்துக்கொள்ளமாட்டாமல் காமாக்கினியைப்பொருந்தி மதுபானஞ்செய்து மாமிசந் தின்னவும் இச்சைகொண்டு அந்தவீட்டின் ஒருபுறத்தி லிருக்கும் ஒருதொழுத்திற்சென்றாள்-எ-று. (௰௪)

வெள்ளாடுஞ் சேதா வெடிவாற் குழக்கன்றும்
உள்ள வருந்த மதுவா லுணர்வழிந்து
தள்ளாடி யான்கன்றைப் பற்றித் தலையரியாப்
புள்ளாடு வேற்கண்ணா ளில்லிற் கொடுபுகுந்தாள்

(இ-பு.) பருந்து காக்கைமுதலாகிய பக்ஷிகள்கண்டு மேலேவட்டமிட்டுக்கொண்டு பறக்கத் தக்கதாய்ச்(சத்தவீரன் கையிலிருக்கும்) வேலாயுதம்போலவிட்டிய கூர்மையுமுள்ள கண்களையுடையவள் கள்ளுண்டவெறியால் அறிவழிந்து தள்ளாடிக்கொண்டுபோய் வெள்ளாடுவென்றும் கட்டைவாலையுடைய பசுவின் இளங்கன்றிதுவென்றும் பகுத்துப் பாராமல் ஒருபசுவின் கன்றைப்பற்றி அதன் தலையை அரிந்து வீட்டிற்கொண்டுவந்தாள்-எ-று. (௰௫)

வெந்ததடி நுகர்வா னெண்ணி விளக்கொளியின்
முந்துதசை யரிய வேண்டி முயல்போதின்

அந்திப் பிறைநுதலா ளான்கன் றெனவறிந்து
சிந்தித் தயர்ந்து சிவசிவவென் றோதினாள்

(இ-பு.) அந்திப்பொழுதில் தோன்றுகின்ற பிறையையொத்தநெற்றியையுடையவள் வெந்தமாமிசத்தைத் தினனவெண்ணி விளக்குத்தீபவெளிச்சத்தில்அந்தப்பசுவின்கன்றை அரிய விரும்பி எத்தனிக்கும்போது பசுவினகன்றென அறிந்து(தகாதகாரியஞ் செய்தோமேயென்று)சிந்தித்துச்சோர்வையடைந்து சிவசிவ என்று சொன்னாள்-எ-று. (௰௬)

கைதவமே செய்யு மதுவின் களியென்று
வெய்துயிர்த்து முப்புரமும் வேவக் குறுமூரல்
செய்தபெரு மானடியை யுள்ளந் தியானிப்ப
எய்துபடரால் இருகடிகைப் போதிருந்தாள்

(இ-பு.) மதுவின்மயக்கமானது துன்பத்தையே செய்யுமென்று எண்ணி நேரிட்ட வருத்தத்தினால் பெருமூச்சு விட்டுக்கொண்டு திரிபுரங்கள்வேகும்படி புன்னகைசெய்த பரமசிவனுடைய திருவடிகளைமனமானதுதியானஞ்செய்யக் கன்றை யரியவுட்கார்ந்த இடத்தில் இரண்டுநாழிகைவரைக்குமிருந்தாள்-எ-று. (௰௭)

ஊனருந்தும் வேட்கைதனை யூழின்வலி தூப்பக்
கானிருந்த தோதையந்தக் கன்றின்றசை மீட்டுந்
தானரிந்து நல்ல கருனை சமைத்தருந்தி
யேனையெலும்புந் தசையும் வீதியினிட் டிசைப்பாள்

(இ-பு.) மாமிசந்தின்னும் இச்சையை விதிவலியானது எழுப்ப வாசனைதங்கிய பூமாலையணிந்திருப்பவள் அந்தப்பசுவின் மாமிசத்தை நீக்கிவிடாமல் பின்னும்அரிந்து நல்ல பொரிக்கறியாகச் சமைத்து உண்டு உண்பதற்குதவாத எலும்பையும் மாமிசத்தையும் தெருவிற்கொண்டுவந்துபோட்டு இந்தவார்த்தையைச் சொல்லுகின்றாள்-எ-று. (௰௮)

அந்தோ கொடுவினையே னாவினிளங் கன்றுதனை
வந்தோ ருழுவை வதைத்துண் டொழிந்ததிது
நந்தோரணமுறு மனைப்பினத்தீர் காணுமென
கொந்தோலமிட்டு நுண்ணிடை போல் வாடினாள்

(இ-பு.) அய்யோ? கொடியபாவியாகிய எனதுபசுவினிளங்கன்றை ஒருபுலியானதுவந்து கொன்று உண்டுபோய்விட்டது இந்தக் கொடுமையைத் தோரணங்கள்கட்டியிருக்கும் நம்முடைய வீட்டிலிருக்கும் சுற்றத்தவர்களே பாருங்களென்று வருந்தி யோலமிட்டுத் தன்னுண்ணிய இடைவாடியிருப்பதுபோல வாடினாள்-எ-று. (௰௯)

அவ்வளவிற் கங்குல் கழிய வவள்கேள்வன்
செவ்வியிளங் கன்றிறந்த தீவினையைச்சேட்டேங்கி
நவ்விவிழிச் சேயிழைமாட் டெய்தி நடுநடுங்கி
வெவ்வினை யாளோடு மனையகத்தின் மேவினான்

(இ-பு.) அப்படி அவள் வாடுங்காலத்தில் இராப்பொழுது நீங்கியது (அ ஞ்ஞேரினவுடன் அவள் கணவனவந்து அழகிய இளங்கன் றிறந்துபோன பாவத்தைக்கேட்டிரங்கி மான்பார்வைபோன்ற பார்வையையுடையவளி டத்திற்சென்று (அப்பாபத்திற்காக) நடுநடுங்கி அந்தக்கொடியவளோடு வீட்டினிடத்திருந்தான்-எ-று. (உ0)

ஆங்கவனி நுவோரு மதனு மணங்கு மெனத்
தாங்கரிய வின்பந் தணவா தருந்துநாள்
பூங்குழலா ளுளிழப்பப் போமா றுயிர்பிணித்து
வீங்குபுயத் தூதுவர்போல் வெங்கூற்றின் முன்விடுத்தார்

(இ-பு.) அவ்விடத்தில் அவ்விருவரும் மன்மதனும் ரதியும்போல (ஒருவரையொருவர்விட்டுப்பிரியாமல்) பிறரொருவருக்குக் கிடைப்பதற்கரிய கலவியின்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் நாளில் பூவணிந்த குழலையுடையாளுக்கு வாழ்நாள் முடிவாகிவிட அவள் உடலைவிட்டுப் பிரிகின்ற உயிரைப் (பாசத்தினால்) கட்டிக்கொண்டுபோய்ப் பருத்ததோள்களையுடைய யமதூதர்கள் கொடுமையான தோற்றமுள்ள நமனெதிரில் விடுத்தார்கள்-எ-று. (உக)

கண்டநமன் பேதைமுகநோக்கி யிக்கயத்தி
பண்டிழைத்த வல்வினைதா னான்முகத்தாற் பார்த்தெண்ணிச்
சண்டநிரயம் புகுத்தத் தக்காய்நீ யல்லைநெறி
விண்ட புலைமகளாய் மேதினியி மேவுகென்றான்

(இ-பு.) தூதுவர்கள் கொண்டுவரக்கண்டநமன் அவள் முகத்தைப்பார்த்து இந்தக்கீழ்மையுள்ள புலைச்சி முன்செய்த வலிய வினைகளைச் சாஸ்திரத்தின் முன்னிலையில் விசாரித்தெண்ணி நீ கொடுமையுள்ள நரகத்தில் விழுத்தத்தக்கவளல்லை ஆயினும் முறைமைநீங்கிய புலையர்மகளாய்ப் பூலோகத்திற்பொருந்தக் கடவையென்று சொன்னான்-எ-று பசுவின் கன்றையறிந்தபோது சிவசிவவென்று சொன்னதினால் நரகத்தில்விழுத்தத் தக்கவளல்லளென்றது. (உஉ)

அவ்வண்ணங் கண்டத்தான் கூறவது கேட்டவளு
மவ்வண்ண மேனியளாய் வாடகண் ணிலளாகி

இவ்வண்ணம்பாரி னெழிலிழந்தா ரில்லையெனச்
செவ்வண்ண மின்மிப் புலையகளாய்ச் சென்றுதித்தாள்

(இ-பு.) யமதருமராசன் அவ்வாறுசொல்ல அதைக்கேட்டவள் கருமைநிறமுள்ளவளாயும் ஒளிபொருந்திய பார்வை யில்லாதவளாகியும் இப்படி அழகிழந்தவர்களில்லையென்று (கண்டவர்களெல்லாம்) சொல்லும்படி நல்ல அழகில்லாமல் நீச்சஸ்திரியாகவந்து பிறந்தாள்-எ-று. (உங)

அன்னவளை யீன்றோர் ருமலியயின்ற பிச்சில்
கன்னியிளஞ் சேதாவி னானேடுங் கன்றூட்டி
மன்னிவளர்க்க வளாவ தெலாம் வன்பிணியாய்த்
துன்னிவள ரமயத் தீனறோருந் துஞ்சினார்

(இ-பு.) அத்தன்மை யுடையவளைப் பெற்றவர்கள் நாயினுடைய மிகுதியான எச்சிலானும் மிகுந்த இளமையாகிய பசுவின்கன் றிறைச்சியும் கள்ளும் ஊட்டி ஆசைபொருந்தி வளர்க்க வளர்வதெல்லாம் தீராப்பிணியாய்ப் பொருந்தி வளருங்காலத்தில் பெற்றவர்களும் இறந்தார்கள்-எ-று. ()

அக்காலை நோயா லயர்ந்து மணஞ்செய்யத்
தக்கா ரிலாராக வெம்பசிநோய் தாங்கலளா
யெக்கால முப்புலையர் சேரிதொறு மேற்றுண்ணப்
புக்காவி தேய்வாளை மூப்பும் பொருந்திற்றே

(இ-பு.) தாயுந் தகப்பனு மிறந்தபின்பு முன்னமே தனக்குச் சம்பவித்திருந்த வியாதியால் சோர்வடைந்து தன்னை விவாகஞ் செய்துகொள்ளத்தக்கவர்களு மில்லாமையாக கேட்ட கொடியபசியாகிய நோயைத்தாங்கமாட்டாதவளாய் எப்போதும் புலையர்சேரிதோறும் இரந்துணணச்சென்று உயிர்மெலிகின்றவளைக் கிழத்தன்மையும பொருந்தியது-எ-று. ()

அத்தகைய நோயானு மூப்பானு மல்ல லுற்றுச்
சித்தம் பசிகவற்றத் தேய்ந்த நடையினளாய்
முத்தன் சிவநிசியிற் கோகன்ன முந்துறுவார்
தத்தங் குழுவோடு மங்கதிற் சார்ந்தனளே

(இ-பு.) அப்படிக்கொத்த நோயினாலுங் கிழத்தன்மையினாலுந் துன்பம் பொருந்திப் பசியானதுமனதை வருத்தப்படுத்தச் சோர்ந்த நடையையுடையவளாய்ப் பரமசிவனுக்குரிய சிவராத்திரியில் கோகன்னத்துக்குச்செல்லுகின்ற கூட்டத்தாருடன் தானும் அந்தக்ஷேத்திரத்துக்குப்போனாள்-எ-று. (உசு)

தீயபசியா லொரு மறுகைச் சேர்ந்திருந்து
தூயவிழி யில்லேற் களித்திடுமின் சோறன்னக்

கூயகுரல் கோட் டொருவன் கொழுங்களியன்
வயுமவள் கைத்தலத்தின் வில்வமுண வென்றளித்தான்

(இ-பு.) (கோகன்னத்திற் போனவள்) ஒரு வீதியிற்போயிருந்துகொண்டு பரிசுத்தமான கண்களில்லாத எனக்குச் சோறுகொடுங்களென்று கொடியபசியினால் கூவிய குரலைக்கேட்டு மிகுந்த இயமாப் புள்ளவனாகிய ஒருவன் தன்கையிலிருந்த வில்வத்தைக் கூவிக்கொண் டிருப்பவள் கையினிடத்தில் சோறென்று கொடுத்தான்-எ-று. (௨௭)

உண்ணவதை புணவென் றோர்ந்தா ளுணவன்மை
எண்ணியபலே யெறிந்ததனைழு காளியிட
நண்ணுபழைய சிவலிங்க நாயகன்றன்
வண்ண முடியின் மரகதம்போல் வாய்ந்ததுவே

(இ-பு.) (அவள்) அவன்கொடுத்த வில்வத்தைச் சோறென்றுண்ண நினைத்துப் பின்புசோறல்லவென்று தெரிந்துகொண்டு பக்கத்திலெறிந்துவிட வில்வமாகிய தழையானது பார்வதிதேவியார்பொருந்தியஇடப்பாகத்தையுடைய பழமையாகிய சிவலிங்கப்பெருமானுடைய அழகிய திருமுடியில் மரகதமணிபோலப் பொருந்தியது-எ-று. (௨௮)

அற்றை முழுநாளு முணவிலளா யவ்விரவிற்
பற்றுதுயி னீத்துப் பனித்தண் புனறோய்ந்த
பெற்றியளெண் ணாதெறிந்த வில்வமே பின்னுகன்றன்
பொற்புசிவப் பூசனையே போன்றதிரு ணீங்கிற்றால்

(இ-பு.)(அவளெறிந்த வில்வஞ் சிவலிங்கப்பெருமான்முடியில் தங்கினதுமல்லாமல்)அன்றுமுழுநாளும ஆகாரமில்லாதவளாய் அந்தச்சிவராத்திரியில் ஒருபோதுநீங்காதநித்திரையைநீங்கிக் குளிர்ச்சிபொருந்திய பனியாகிய நீரில்படிந்த முறைமையையுடையவள் இன்னதென எண்ணாமலெறிந்த வில்வமே பரமசிவனுடைய அழகுள்ள சிவராத்திரிபூசை அருச்சனைபோலாகியது இராப்பொழுதும் நீங்கிற்று-எ-று. (௨௯)

வெய்ய பசிமூப்பு நோயிவற்றுன் மெய்வருந்த
உய்யு முணவிலளா யோர்பூசைச்சி தோள்பற்றிக்
கையிற் றடியூன்றிக் கீள்ள மீள்போழ்து
ஊயுங்கருத்தா ணடுக்குற் றிவண் விழ்ந்தாள்

(இ-பு.)(இராப்பொழுது நீங்கினவுடன்) கொடியபசி கிழத்தன்மையென்னும்பிணிகளால் உடலானது வருத்தத்தைப் பொருந்த பிழைத்திருப்பதற்கேதுவான் ஆகாரமில்லாதவளாய் ஒருசிச்சஸ்திரியின் தோளைஆதாரவாகப்பற்றிக்கொண்டும் ஒருகையில்தடிபிடித்தூன்றிக்கொண்டும் (நடக்கை

யில் நடக்கக்கூடாமல்) கால்தள்ரும்படிவரும்போது வருந்துகின்றமனத்தையுடையவள் உடல்நடுங்கி இவ்விடத்தில்விழுந்தாள். (௩௰)

வேதமுனியே யிவளிறக்கும் வேலையினிற்
பாதிமதிவேணிப் பரமனெமைநோக்கிக்
கோதில்குணத்தாளைக் கொணர்வான் விமானமொடும்
போதிரெனப்பணிப்ப யாமிங்குப் புக்கேமால்

(இ-பு) பிரமரிஷியே (இவ்விடத்தில்விழுந்த) இவளிறக்குங் காலத்தில் ஒருபங்காகிய சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய கயிலாசபதியானவர் எங்களைநோக்கிக் குற்றமில்லாத குணத்தை யுடையவளை இவ்விடத்துக்குக்கொண்டுவர ஒருதேவவிமானங் கொண்டுபோங்களென்று கட்டளையிட்டருள நாங்களிங்கேவந்தோம்-எ-று. (௩௧)

எங்கெம் பரம னிடருழந்தோர் யாவரையுந்
தாங்குங் கருணைந் தலைவனெனுந்தன்மை
பாங்கொன் றறியா திழைத்த வருச்சனையாற்
றீங்கின் புலைச்சிக் கருளத் தெளிந்தோமே

(இ-பு.) (என்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்கள்)இன்றுசிவராத்திரியென்றும் இதுசிவலிங்கமென்றும் இந்நாளில் ஆகாரம் நித்திரை நீங்கிச்சிவார்ச்சனைசெய்தால் இன்னபலன்வருமென்றுந் தெரியாமற்செய்த அருச்சனையால் பாவத்தினுடைய இந்தப்புலைச்சிக்குக்கிருபை செய்ததினால் எம்முடையகடவுளானவர் இவ்வாறு துன்பம் அனுபவிக்கின்றவர்களையெல்லம் ரக்ஷிக்காநின்ற கிருபையுடைய தலைவனென்னுந் தன்மையை நாங்கள் ஐயமறத் தெரிந்துகொண்டோம்-எ-று. (௩௨)

வேறு.

இனையளித் துயருற லென்னை யென்றியேல்
முனிவர கேளிவண் முற் பிறப்பினில்
நினைவினு மடியிலிட் டுண்டி சேர்ந்திடா
வினையினாற் பசிதரு துன்ப மேயினாள்

(இ-பு.) சிவலோகத்துக்கு அழைப்பித்துக கொள்ளுமபடி பரமசிவன் கிருபைசெய்தருளத் தக்கதாகிய இவ்வகைத்தன்மையையுடைய இவள் இப்படிக்கொத்த துன்பத்தைப் பொருந்துதற்குக் காரணமென்னவென்று கேட்பையானால் சிரேஷ்டமுள்ளமுனிவனே,கேள் இவள் முனசென்மத்தில் நினைப்பினாலும் அன்னப்பிட்சையிட்டுப் பின்பு தான் உணவுகொள்ள எண்ணாத பாபத்தினால் பசிமிகுந்து (ஆகாரங்கிடையாமல்) அப்பசி கொடுக்கிற துன்பத்தை அடைந்தாள்-எ-று (௩௩)

தியர்கள் ஞான்டற னல்ல செய்தலால்
தூயகண் ணிழந்தனன் சுரபிக் கன்றென
ஆயிடை யறிந்தும் வன்னூ மருந்தலால்
நாயினு மிழிபவப் புலைமை நண்ணினன்

(இ-பு.) கொடியவர்களோடு பாபமான காரியங்களைச் செய்தமையால் பரிசுத்தமுள்ள பார்வையையிழந்தான் தீபவெளிச்சத்தினமுன் கொன்றுவெந்த பசுவின்கன்றென்று அறிந்து அந்த மாட்டிறைச்சியை உண்டதினாலே நாயைப்பார்க்கிலும் இழிவுள்ள சண்டாளப்பிறவியை அடைந்தான்-எ-று. கள்ளுண்ணுதலால் ஒழுக்கம் அறிவு நாண் புகழ் செல்வம் இவைகள் முதலாகிய நன்மைகள் கெடும்-இகழ்ச்சி-தன்னைமறத்தல்-நல்லவர்கள் அவமதித்தல் இவைகள் முதலாகிய தீமைகள்நேரிடும் என்பது பற்றி தீயகள்ளென்றார். (௧௪)

கைம்மையிற் பலரொடுங் கலந்த தீமையால்
இம்மையிற் குட்டநோய் முதல யாவையும்
வெம்மையி னலிதர வெட்டல் வேண்டுவார்
தம்மினத் தொருவரு மின்றிச் சாம்பினள்

(இ-பு.) கைம்பெண்ணானபின்பு பலபேரோடுசேர்ந்த பாவத்தினால் இப்பிறப்பில்குஷ்டநோய் முதலானபலநோய்கள் வெப்பத்துடன் வருத்தவும் தங்களினத்தில் தன்னைவிவாகஞ்செய்துகொள்ள விரும்புகின்றவர்கள் ஒருவருமில்லாமலும் சோர்ந்தாள்-எ-று. (௧௫)

உரைத்தவிக் குறிபல வுற்றுத் தோன்றினள்
திரைப்புவி யிடத்துமுற்செய் தீமை யாளரென்
முறையிடு மறையென வெண்ணுந் தூயவர்
விரைத்துண ரிதழியாற் கடிமை வேண்டுவார்

(இ-பு.) சொல்லியபலவாகிய இவ்விதக் குறிகளைப் பொருந்திப் பிறந்தவர்கள் அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தினிடத்துமுன்பிறப்பிற் பாவத்தைச் செய்தவர்களென்ன வேதமுறையிடுமென்று அறிந்தபரிசுத்தர்கள் வாசனைபொருந்திய கொத்துகளாக மலர்ந்திருக்கும் கொன்றைப்பூமாலையணிந்த பரமசிவனுக்கு அடிமைத் திறஞ்செய்ய விரும்புவார்கள்-எ-று. (௧௬)

அன்றியு மறலிதன் னவையத் திவள்
சென்றநா ளும்மையிற் சிவனை யுன்னிய
நன்றியா னெரியழ னரகம் புக்கவிந்
தொன்றிடுந் தீவினைக் குரிய ளல்லளால்

(இ-பு.) பரமசிவனுக்கு அடிமைத்திறஞ்செய்யவேண்டுமென்கிற விருப்பங் கொண்டவளல்லாம லிருந்தாலும் யமதருமராசன் சபையில் இவள்போனநாளில் முன்சென்மத்தில் பரமசிவனை நினைத்த புண்ணியத்தினால் எரிகின்ற நரகத்தில்விழுந்து அவிந்துகிடக்கும்படியான பாவத்துக்குரியவளல்லள் (என்றுசொல்லி)-எ-று. (௧௭)

ஆயினு மவனியி னிழிபிறப் படைந்
தோயும்வல் வினைப்பய னுண் டொழிந்தபின்
ஏயுநல் வினையினு லீசன பூசனை
மேய முத்தியுமதான் மேவுவா ளென்றான்

(இ-பு.) அப்படிநரகத்துக்குப் போகத்தக்கவளல்லாதவளாயிருந்தாலும் பூலோகத்தில் நீசப்பிறப்படைந்து ஓயும்படியான பாவத்தின் பயனை அனுபவித் தொழிந்தபின்பு பொருந்திய நல்வினையால்சிவபூசையும் அந்தப்பூசையினால் அழியாத மோக்ஷத்தையும் அடைவாளென்றுசொன்னான்-எ-று. (௧௮)

இன்ன தன்மைய ளிவளென் றப் பாவையைப்
பன்னக மவுலியான் பதத்தினேற் றுதும்
அன்னதுங் காணடியென் றவடனுவினை
யுன்னருந் திவ்விய வுருவஞ் சேர்த்தியே

(இ-பு) இவளித்தன்மை யுள்ளவளென்று சொல்லி (முனிவனே) இந்தமாதினைச்சர்ப்பங்கள் அணிந்திருக்கும் சடாமகுடத்தையுடைய பரமசிவன் பாதமாகியசிவலோகத்துக்குக் கொண்டுபோகிறோம் அதையும்பாரென்றும் அவளுடைய நினைத்தற்கரியதிவ்விய தேகத்திற்சேர்த்து (அதன்பின்பு)-எ-று. (௧௯)

விண்ணகம் போழொளி விமான மீக்கொடு
பண்ணிசை விஞ்சையர் பாட நாடகம்
எண்ணரு மரம்பைய ரியற்ற வேகினர்
அண்ணறன் றூதுவ ரவளைக் கொண்டரோ

(இ-பு.) சிவதூதர்கள் ஆகாயத்தினிடத்துள்ள இருளைநீக்குகின்ற ஒளியையுடைய விமானத்தின்மேல் அவளை ஏற்றிக்கொண்டு வித்தியாதரர்கள் பண்ணுடன்கூடிய இசைபாடிவரவும் இத்தன்மையானதென்று மனதினாலும்நினைத்தற்கரிய அழகுமுதலிய குணங்களையுடைய அரம்பைமாதர்கள் நடனஞ்செய்துவரவும் (ஆகாயமார்க்கமாகப்) போனார்கள்-எ-று. இனி-௨௧-வது-பாடல்முதல்-௨௫-வதுபாடல்வரையில் சிவலோகத்தின் பெருமையைச் சொல்லுகின்றது. (௨௰)

முக்குண வழிசெலு முயற்சித் திகையின்
எக்குணமுங் கடந் தின்பம் வேட்டவர்
தொக்குட னிருப்பதஞ் ஞானத் துணிவருள்
புக்கவர் யாவரும் பொருந் தொணாததே

(இ-பு.) முக்குணங்களின் வழியே செல்லுகின்ற முயற்சியாகிய பொலிவினையுடைய எவ்வித குணங்களையுங் கடந்து பேரின்பத்தை விரும்பினவர்கள் கூட்டமாகச் சேர்ந்திருக்கத்தக்க நிலைபெற்றதாகிய அருஞ்ஞான இருளிற்சேர்ந்தவர்க ளெல்லாரும் பொருந்தக்கூடாது- எ-று. முக்குணமாவன, சத்துவம் இராசதம் தாமதம் (௪௧)

பானுவின மிளிரொளி கெடுக்கும்பான்மைபோ
லானமுச் சுடர்களு மழுங்க வெங்கணு
தானிமி ரொளியது சதுர் மறைத்தரு
மேனியிர் சாகைக்கோர் வித்து மாயதே

(இ-பு.) சூரியதேவன் மின்மினிப் பூச்சியின் ஒளியைக் கெடுக்குந்தன்மைபோல மேன்மைபொருந்திய முச்சுடர்களும ஒளிமழுங்கும்படி எவ்விடத்தும் பிரகாசிக்கும் ஒளியையுடையது மேலுயர்ந்த சாகைகளையுடைய நான்குவேதமாகிய விருக்ஷத்துக்கு ஒருவிதையாயிருப்பது-எ-று. சாகை என்பது வேதத்தி னுட்பிரிவுக்கும் மரக்கொம்புக்கும் பெயராதலால் இவ்விடத்தில் இரண்டு அர்த்தமாகும்படிகூறினர். (௪௨)

திருமறுமார்பனும் கமலச் செல்வனும்
அருமையிற்பெறவின்ப வாழ் வளிப்பதாய்
இருமையு மிகத்தது மாயையாலெழுங்
கருமமுங் கடந்தவின் றருள் களிப்பதே

(இ-பு.) திருமாலும் பிரமதேவனும் அருமையாகப் பெற்றுக்கொள்ளப் பேரின் வாழ்வையளிப்பது இவ்வுலக வாழ்வினால் வருஞ் சுகதுக்கங்களையும் சுவர்க்கபோகத்தினால்வருஞ் சுகதுக்கங்களையும் தன்னிடத்தில்லாமல் இயல்பாகவே நீங்கியிருப்பது மாயையினால் உண்டாகிறகருமங்களையும் இயல்பாகநீங்கி எக்காலத்தும் அழிவின்றித்திருவருள் களிப்படைந்திருக்கின்றது-எ-று, ஆங்கு-அசை. (௪௩)

வேறு.

விஞ்சைய ரியக்கர்சித்தர் விண்ணவர் முனிவர்முத்தர்
வஞ்சிநுண் ணுசுப்பிற்றெய்வ மடந்தைய ரமுதகானம்
பஞ்சமத் தியற்றும்வீணை நாரதர் முதலோர்பாங்கின்
அஞ்சலித் தவக்குயவேதத் தந்தமு மஃதேயாமால்

(இ-பு.) வித்தியா தரர்களும் யக்ஷர்களும் சித்தர்களும் தேவர்களும் முனிவர்களும் முத்திபெற்றவர்களும் பூங்கொடிபோல நுண்மையாகிய இடையினையுடைய அரம்பாஸ்திரிகளும் அமுதம்போல மதுரத்தைத்தருகின்ற இசைப்பாடலைப்பஞ்சமம்என்னும்சுருதியில்வாசிக்கும வீணையையுடைய நாரதர்முதலாகியவர்களும் உரிமையுடன்நமஸ்கரித்துச் சஞ்சேவிக்கும்படியான வேதத்தின் முடிவும் அதுவேயாம்-எ-று. (௪௪)

எம்மையா ளுடையமாது மிளம்பிறை யமுதங்காலச்
செம்மையார் பவளவேணிச் செம்மலு மெடுத்ததாளச்
சும்மையானந்த ஞான நடனத்தின் சுவைசனித்த
இம்மையி னெம்மனோராற் புகல்வதோ விசலோகம்

(இ-பு.) எங்களை அடிமையாகவுடைய பார்வதிதேவியார் திருக்கரங்களில் எடுத்துத்தாக்குந தாளத்திலுண்டாகின்ற நாதத்தின் மதுரமும் இளந்திங்களானது அமுதகிரணமாகிய வெண்ணிலவைப் பொழிந்துகொண்டிருக்கவும் செம்மைநிறமாருதற்பொருந்திய பவளம்போன்ற சடைமுடியினையுடைய பரமசிவன் தாண்டவஞ்செய்கின்ற ஆனந்தநடனமதுரமும் முதிர்ந்திருக்கின்றது (ஆதலால்) இந்தச் சிறப்பினையுடைய எம்போலவர்களால் புகழ்ந்து சொல்லத்தக்கதோ சிவலோகமானது-எ-று. பார்வதியார் தாளம்போடப் பரமசிவன் தாண்டவஞ்செய்தது சங்காரதாண்டவமாம். (௪௫)

அன்னதன் மைத்தாயென்று மடைந்தவர் நீங்கலாத
நன்னெறி யுடைத்தாயார்க்கு நணுகருஞ் சிவலோகத்திற்
பன்னக மணிவானும பாவையுமுவந்து காணப்
பொன்னொளி விமானத்தோடும் பூவையைச் சேர்த்தினரே

(இ-பு.) அப்படிக்கொத்த தன்மையையுடையதாகியும் தன்னிடத்தில் அடைந்தவர்கள் எக்காலத்தும் நீங்காத நல்லமுறைமையையுடையதாகியும் யாவர்க்கும் பொருந்துதற்கரியதுமாகிய சிவலோகத்தில் பாம்பணிந்த சடாமகுடத்தையுடையகயிலாசபதியும் அவரிடப்பாகத்திலிருக்கும் உமாதேவியாரும் திருவுளத்தில்மகிழ்கூர்ந்துநோக்கும்படி பொன்னொளியையுடைய விமானத்தோடும் அம்மாதினைச் சேர்த்தினர்கள்-எ-று. (௪௬)

அருந்தவ மன்னகேளா யவனிலை யிஃதுநீயும்
வருந்தல்சோ கன்னமெனனும் வன்கர்மருவி யீசன்
திருந்துபூசனை புரிந்து சிவநிசித் துயிலொழித்தி
பெருந்தவப் தளிர்வில்வத்தா லருச்சிக்கின் வின்னனிவரும்

(இ-பு) அருமையாகிய தவஞ்செய்த மன்னவனேகேள் அந்தப்புலைச்சியினிலைமை யித்தன்மையாயது நீயும்வருந்த வேண்டுவதில்லை சோகன்ன

பென்கிற வளப்பம்பொருந்திய தலத்திற்சேர்ந்து நம்பிறைவனுகிய மாலலியகேசன் ஏற்றுக் கொள்ளத்தக்க பூசை சிவராத்திரிற்செய்து நித்தைநீங்கியிருந்து பசுமை நிறமுள்ள வில்வத்தளிரினால் அருச்சனைசெய்தால் உனனுடையதுன்பம் நீங்குமெ-எ-று. (௬௭)

வேறு.

என்றுவீறுயர் கோகன்ன மான்மிய மியம்பிக்
கொன்றை வேணியன் சிவநிசி விரதமுங்கூறி
வென்றி வேன்மனு வேந்துக்கு விடைகொடுத்தருளிச்
சென்று கோதமன் மிதிலையங்கநகர் சேர்ந்தான

(இ-பு.) இவ்வாறு இன்பமிகுந்த கோகன்ன மான்மியத்தைச் சொல்லிப் பின்னும் கொன்றைமாலை யணிந்த பரமசிவனுடைய சிவராத்திரிவிரதமான்மியமுஞ் சொல்லி வெற்றிபொருந்திய வேலாயுதத்தை யுடைய மனுச்சக்கரவாத்தியையொத்த அரசனுக்கு உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டுக் கோதமராணிவர் அவ்விடம் விட்டுச்சென்று காவலைக்கொண்ட அழகிய மிதிலைப்பட்டணத்துக்குப் போனார்-எ-று. (௬௮)

திசைவாரிறு படிந்த மகிழ்நுவே ஐரவோன
பூகவார்பொழிற் கோகன்ன மாநகர் பொருந்தி
யாகமாமதிச் சிவநிசி வரன்முறை நோற்றுச்
சோகமேதரு பழவினை முழுவதுந் தொலைத்தான்

(இ-பு.) சவுதமர்போனபின்பு வேலாயுதத்தையுடைய திண்மையுள்ள அவ்வரசனானவன் கமுகமா முதலாகிய விருக்ஷங்கள் நெருங்கி நீண்ட சோலைகள்சூழ்ந்த வளப்பம்பொருந்திய கோகன்ன மென்னுந தலத்திற்போய்ச்சேர்ந்து பெருமைதங்கிய மாசிமாதச் சிவராத்திரியில்முறைமைப்படி விரதமனுஷ்டித்து சிவபுத்தியினைக்கொன்ற பாதகத்தை நீக்கியதுமல்லாமல் முன்சனனங்களிற்செய்த சோகத்தையே தருகின்ற பழையவினைகளையெல்லாம் நீக்கினன்-எ-று. (௬௯)

மூன்றாவது-சிவராத்திரியிற்கன்மாடபாதராசன்
முத்திபெற்ற அத்தியாய
முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - ௧௩௪.

௨

சிவமயம்.

நான்காவது.

சிவராத்திரியில் விமரிசன்

முத்திபெற்ற அத்தியாயம்.

கருமணி யனையகண்டன் கதையினை யிவ்வாறென்று
தெருளுறச் சூதன்சொனனன் றெளிந்தனர் கேட்டுப்பின்னும்
இருவினை தொலையவின்னு மீசனதருளிற் சேர்ந்து
வருகதை புகறியென்ன முனிவரர் வழங்கலோடும்

(இ-பு.) நீலரத்தினம்போன்ற கண்டத்தையுடைய மகாபலலிங்கநாதன் சரித்திரமாகியசிவராத்திரிமானமியம் இம்முறைமையையுடையதென்று தெளிவுறும்படி சூதமுனிவர்சொன்னார் அதை நைமிசாரணியமுனிவர்கள்கேட்டுத் தெளிந்தவர்களாய் பின்னும் முனிவரே எங்களிருவினைகளும்நீங்கும்படி பரமசிவனுடைய கிருபையைப்பெறத்தக்கதாக நடந்திருக்குஞ் சரித்திரங்களை யின்னமும் நீர்சொல்லுமென்று சொல்லவும் (மேல்சூதமுனிவர்சொல்லத் தொடங்கினார்)-எ-று. (௧)

வேறு.

சிவநிசி யளவையு மன்பர் செய்கையு
நுவலருந் தகையவா மெனு நுவனறனம்
புவனியி லரன்றிருப் பூசை கண்டொரு
தவமிலான் பெற்றமை சாற்று வாமரோ

(இ-பு) சிவராத்திரி மான்மியமும் அந்தவிரதம்அனுஷ்டித்த அடியார்கள் செய்கையுஞ் சொல்லுதற்கரிய பெருமையையுடையதுகளாயிருந்தாலும் (எமக்குத் தெரிந்தமட்டில் சொனனேம்) இனி இந்தவுலகத்தில் பரமசிவனது சிவராத்திரி பூசையைக்கண்டு தவமில்லாதவனுகிய ஒருவன் அடைந்ததன்மையைச் சொல்லுகிறோம்-எ-று. (௨)

பாரிடைக் கிராதர்தம் பதிக்கு நாயகன
பேரிகல் விமரிச னென்னும் பெற்றியோன்
சோரிவேற் றனையான றாகத் தேரினன்
மாரியி னிருமிறி வழங்கும் வண்கையான்

(இ-பு.) இவ்வுலகத்திலிருக்கும் வேடரூர்க்கு நாயகனயிருப்பவன் மிகுந்த வலிமையுடைய விமரிசனென்றும்பெயரையுடையவன் பகைவர் உதி

ரத்திற்படியத்தக்க வேலேந்துஞ் சேனையை உடையவன் குதிரைகட்டிய தேகாயுடையவன் இரப்பவர்க்கு மேகம்போல மிகுந்த திரவியங்களைக் கொடுக்கும் வளப்பம் பொருந்திய கையையுடையவன் -ஏ-று. (இன்னும் எத்தன்மை யுள்ளவனெனின்) (௩)

நிதுறு தசைவரை வின்மித் தின்பதாற்
கோதறு வேட்டையிற் புரிந்த கொள்கையான்
வேதியர் மகளிரே முதல வெய்புலை
மாதரீ றனைவின மருவும் வேட்கையான்

(இ-பு.) குற்றம்பொருந்திய மாமிசங்களை அளவில்லாமல் தின்பதினால் பழுதுபடாத வேட்டையில் விருப்பங்கொண்ட செய்கையையுடையவன் (இதுவுமல்லாமல்) பிராமணஸ்திரீகள் முதல் கொடிய நீச்சஸ்திரீகளிறுதியாகச் சொல்லப்பட்ட (எல்லாவகைச் சாதிஸ்திரீகளையும்) நாள்தோறும் புணருகின்ற ஆசையையுடையவன்-எ-று. (௪)

வழிரண் டாந்திதி யெதிர்த நான்றெலாஞ்
சூழியங் கடகரி யுரித்த தோன்றலை
வாழிய வெனவிசே டித்து மாட்சியாற்
பாழியம் புயத்தவன் பூசை பண்ணுவான்

(இ-பு.) பலம்பொருந்திய அவ்வரசன் மேற்கூறிய கொடிய செய்கையை யுடையவனு யிருந்தாலும் சதுர்த்தசிவருகின்ற நாளிலெல்லாம் முகபடாங் கட்டத்தக்கதாகிய கபோலமதத்தையுடைய யானையை யுரித்த பரமசிவனை (சங்கரவாழ்கசம்புவாழ்கசதாசிவவாழ்க என்றுசிவநாமங்களையெடுத்துத்) தோத்திரஞ்செய்துமாட்சிமையுடன் பூசைசெய்வான்-எ-று. அம் சாரியை மாட்சிமையுடன்பூசைசெய்தலாவது பூசாத்திரவியமுதலாகிய உபகரணங்களிற் குறைவில்லாமற் செய்குதலாம். (௫)

பூசனை யிறுதியிற் புளக மீக்கொள
ஈசனை யேத்துவின் முடு மேழிசை
மாசறப் பாடும்பின் வணங்கு மற்றவ
னேசமித் தனையென நிகழ்த் தற்பாலதோ

(இ-பு.) இவ்வாறுசெய்யும் பூசையின்முடிவில் உடலில் புளகமுண்டாகும்படி பரமசிவனைத் தோத்திரஞ் செய்வான் நின்றுக்கொண்டு (பாதசாஸ்திரத்தின்கிரமப்படி) கூத்தாடுவான் சத்தசுரங்களும் வழுவாமல் கீதங்கள்பாடுவான் பின்பு (அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன்) பணிகுவன் அவனுடைய சிவநேச மிவ்வளவென்று அளவிட்டுச்சொல்லும் பான்மையையுடையதல்ல-எ-று. ஏழிசையாவன சஷ்ஜமம் ரிஷபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்பனவாம். (௬)

இன்னணம் புரிந்தவ னிறைமை பூண்டுதன்
சென்னெறிச் செயமகோ மிசைக்கண் மீச்செல
நன்னெறி யாவரு நடப்ப நன்கிலாப்
புன்னெறி துறந்தறம் புரக்கு நாளினே

(இ-பு.) இம்முறைமையாகப் பூசைசெய்கின்றவன் அரசாட்சிசெய்யுந்தன்மையினையுடையவனுய்ச்செவ்வையானமுறைமையையுடைத்தாகின்றதன் செங்கோலானது திக்குகளெங்குஞ் செல்லவும் எல்லாரும் நன்மார்க்கத்தில் நடக்கவும் நன்மையில்லாத தீயநெறிகளையெல்லாம் நீக்கித்தருமத்தைப்பாதுகாக்கும்நாளில்-எ-று. செங்கோலென்பது ராஜநீதி அந்தநீதி ஒருபக்ஷத்திற்சாயாமல் தராசுகோல்போலச் சமமாயிருத்தலால்செங்கோலென்று சொல்லப்பட்டது (௭)

வேறு.

ஆண்டகைகுமுத வதியெனுமனைவி யவனடிதொழுதிகல் வேலோய்
காண்டகுவனப்பி னீதியிற்றவத்திற் கல்வியினறிவினே ரில்லாய்
சேண்டருபிறையான் பூசனை வழாது செய்யுநீதிவினைக் கிடமாய்ப்
பூண்டவூனருந்தி நெறியிலாமடவார் போகமேறுகர்வது புகலே

(இ-பு) இபர்தொன்றிறுக்கும் அஞ்சாத வீரத்தன்மையையுடைய அவ்வரசன்மனைவியாகிய குமுதவதியென்பவள் (ஒருநாள்) தன்கணவன் பாதத்தைத்தொழுது (இயாவரும் வியப்புடன்) பார்க்கத்தக்க அழகிலும் நீதியிலும் தவத்திலும் கல்வியிலும் அறிவிலும் ஒப்பில்லாதவரே (தேய்வதும் வளர்வதுமில்லாமல்) எக்காலமும் ஒரேதன்மையா யிராநின்ற இளம்பிறைகளையணிந்திருக்கும் சந்திரசேகரராகிய பரமசிவனுடைய பூசையை ஆகமவிதிப்படி செய்கின்றநீர் பாவத்துக்கிடமாய்ப்பொருந்திய மாமிசங்களைத்தின்று முறைமையில்லாமல் ஸ்திரீகள்போகங்களையே அனுபவிக்கின்றது (என்னகாரணம்) சொல்லும்-எ-று. சேண்டருபிறை ஆகாயத்தில் ஊரும்பிறையெனினும் அமையும். (௮)

எனறவளுரைத்த வாசகங்கேளா விறைமகன் குறுநகைகோட்டிக்
குன்றெனவுயர்ந்த குவிமுலைமடவாய் கூறுவல் கேட்டிநீயென்ன
முன்றவப்பயனு லிறந்ததுநிகழ்வு முன்வருங்காலமு முணர்ந்தேன்
அன்றுமுற்பவத்தோர் சுமலியாய்ப்பம்பைபணிநகரதனின்வந்துதித்தே

(இ-பு.) (இப்படிக்கொத்த பாவகிருத்தியங்களைச் செய்வதற்குக் காரணமென்ன) சொல்லுமென்று தன்மனைவிசொன்ன வார்த்தையைக்கேட்டு அவ்வரசன் புன்னகைசெய்து பொன்மலைபோல் உயர்ந்து குவிந்த ஸ்தனங்களையுடையபெண்ணே? நான்சொல்லுகிறேன் கேளென்று பூர்வஞ்

செய்ததவப்பயனுல் இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் அறி
வேன் முன்பிறப்பாகிய அந்நாளில் (நான் என்ன பிறப்பையுடையவனு
யிருந்தேனென்ருல்) ஒரு நாயாய்ப்பிறந்து அழகுள்ளதாகிய பம்பைநகர
த்தில் வாசமாயிருந்தேன்-எ-று.

மாலயன்காணு வடிமுடிக்குரிசின் மதியணிபம்பை நாயகன்றன் (௯)
ஆலயங்குறுகிப் பலிக்கிடுமடிசி லருந்துவான் புகுந்திடுமௌவிற்
காலவன்றாத சிவனெனக்கண்டோர் கல்லினுற் கதையினுற்றாப்ப
வோலொடுவெருளியாலயம்வலங்கொண்டோடினேனுயிர்பிழைத்துய்வான்

(இ-பு) (பம்பைநகரத்தில் வாசமாயிருக்கும்போது) விஷ்ணு பன்றி
உருவங்கொண்டு பாதாளத்தைப் பிளந்துகொண்டுபோய்த் தேடியுங்கா
ணப்படாத திருவடிகளையும் பிரமன் (அன்னமாக உருவங்கொண்டு ப
றந்து மேலுலகம்போய்த் தேடியுங்காணுத திருமுடியையுமுடைய இ
றைவனுகிய பம்பையென்னுந் தலத்தில் வீற்றிராநின்ற பரமசிவனது ஆ
லயத்திற்சேர்ந்து பலிக்காகவைக்கும் அன்னத்தை உண்ணச்சென்ற கால
த்தில்பமனுடைய ஆதரிவர்களென்று சொல்லும்படி என்னைக்கண்டவ
ர்கள் கல்லினுலுந் தடியினுலும் அடித்துத்துரத்த நான்பயந்து குரைத்து
க்கொண்டு உயிர்தப்பிப்பிழைக்க அந்த ஆலயத்தைவலமாகச்சுற்றிக்கொ
ண்டோடினேன்-எ-று.

மனவலியிளைத்துப் பலிசொரிபீட மருங்குநின் றீசனைநோக்க (௰)
வினைகரமொருவிப் போகுவான்வழிக ணேடினேன் கண்டிலேன் றிகைத்தே
அனகனுக்கன்று சிவநிசியாக வருஞ்சுடர்த் தீபமோடெடுத்தல் [தேன
வினையறக்கண்டேன் கண்டிழியொருவன் வெஞ்சரந் தூரத்தலும் விளிந் [தேன்

(இ-பு.) (ஓடினநான்) அந்த ஆலயத்தை நீங்கிப்போவதற்கு வழிகளை
தேடிக்காணுமல் திகைத்து மனவலியும் இளைத்துப்பலிபோடுகின்ற பீட
த்தின் அருகில்நின்று சிவலிங்கப்பெருமானைப் பார்த்தேன் அன்றுசிவரா
த்திரியாதலினுல் நிர்மலனுகிய அந்த சிவலிங்கப் பெருமானுக்கு (யாவரு
ந்தரிசனஞ்செய்யக்) கிடைப்பதற்கரிய சுடரினையுடைய தீபாராதனைமு
தல் சில ஆராதனைசெய்வதை என்பாவங்க ளெல்லாம் நீங்கும்படிகண்
டேன் அப்படிகண்டவளவில் (ஒருவன்வில்லிலைத்து) கொடியபாணத்
தைப் பூட்டிப் பிரயோகஞ்செய்ய (அதனென்மேல் தைத்தவுடன்) நானிற
ந்தேன்-எ-று.

அருஞ்சுடர்த்தீப மெடுத்தபூசனையி னமலனை யாலயம்போது (௰௧)
விரிஞ்சனுங்காணு மணிமுடி தமியேன் விளிந்திடும் வேலைகண்டதனுற்
பராஞ்சுடர்கோயில் வலங்கொளப்புகுந்த பண்பினுற்பாரினிற்பகைஞ [ன
ருரஞ்சுடுகொடுவேலிறைவனுயுதித்தேன் காலமூன் றினையுமுற்றுணர்ந்தே

(இ-பு.) (அப்படிபிறக்குஞ்சமயத்தில்) பிரதோஷகாலமாகிய அந்திப்
பொழுதில் (செய்யுஞ்சோடசோபசாரத்தில்ஒன்றுகிய) அரியசுடர்த்தீப
மேந்தியபூசா காலத்தில் பிரமனுலுங் காணப்படாத பரமசிவனுடைய
திருமுடியைத் தமியேனுகிய நான் தரிசித்ததினுலும் அந்தப்பரஞ்சுட
ர் வீற்றிருக்கும் ஆலயத்தைப் பிரதக்ஷிணமாக வந்ததன்மையினுலும் இ
ந்தவுலகத்தில் பகைவருடைய மார்பைச்சுடத்தக்க கொடியவேலாயுதத்
தையுடைய அரசனுகப் பிறந்தேன் (அவ்வாறு பிறந்ததிலும்) திரிகாலங்
களையும் அறிந்தவனுனேன்-எ-று. (௰௨)

ஆதலாலிந்த நல்வினைப்பலத்தை யறிந்தது சிவநிசியென்று
மாதராயின்றும் வருமதிதோறும் வளர்பிறை தேய்பிறையிரண்டிற்
போதுமப்பக்க மேழிரண்டெய்திற் பொருந்துமச் சிவநிசிபோல
வேதகுபூசை யனுதினந்தன்னின் விசேடமாய் வழிபடுகின்றேன்

(இ-பு.) ஆதலால் பெண்ணே? சிவராத்திரியானது (உலகத்தில் இழி
வுள்ளசென்துவாகிய நாயாகப்பிறந்திருந்த எமக்கும் இப்படிக்கொத்த ரா
சபோகத்தை (அனுபவிக்கத்தக்க) நல்வினைப்பயனைக் கொடுத்ததென்று
ட்கொண்டு இந்தப்பிறப்பிலும் மாதமாதம் வருகின்ற பூர்வபக்ஷம் அப
ரபக்ஷம் என்னு மிரண்டு பக்ஷத்திலும் வருகின்ற பதினுன்காந்திதியா
கிய சதுர்த்தசி திதியில் (மாசிமாதத்தில் பொருந்துகின்ற மகாசிவராத்
திரியில் பூசைசெய்வதுபோல மேன்மைபொருந்திய சிவபூசனைநாள்தோ
றுஞ்செய்து வருவதிலும் விசேஷமாகச்செய்து வருகின்றேன்-எ-று. ()

இன்னணம்புரியும் பூசையிற்றீமை யகலுமோ வெனவினவுதியேன்
மன்னனைக்கயிலை வரதனைவழுத்தின் மலையெனக்குவித்தவிந் தனத்தைச்
செந்நிறப்பொறித்தீ நுழைந்துநீறக்குஞ் செய்கைபோற் பவமெலாந்தீர்க்
கும் அன்னதாளிய மானடிக்கமலத் தருச்சனை புரிதியாரணங்கே

(இ-பு.) தெய்வப்பெண்களை யொத்தவளே? இவ்விதமாகச்செய்யும் பூ
சையினுல் பாபங்கள் நீங்குமாவென்று கேட்பையாகில் (சொல்லுகிறேன்
கேள் தேவர்களுக்கெல்லாம் இறைவனும் ஸ்ரீகைலாசத்தில் வீற்றிருக்கு
ம் தேவசிரேஷ்டனுமாகிய சாம்பசிவமூர்த்தியை (ஒருதரம்) தோத்திர
ஞ்செய்தால் (அந்தத்தோத்திரத்தின்பலன்) மலைபோலப் போரிட்ட வி
றகுகளைச் செம்மை நிறமுடன் பொறிகளையுடைய தீயானது அந்தப்
போருக்குள் நுழைந்துசாம்பலாக்கிவிடுந் தன்மைபோல் பாபங்களையெ
ல்லாம் நீக்கிவிடும் ஆகையால் நீயும் பரமசிவனுடைய திருவடித்தாம
ரைகளில் அருச்சனைசெய்-எ-று. (௰௪)

என்றதுகேட்ட துடியிடைமடவா ளிளநிலா மூறுவன் முன்னேன்ற
மன்பதையுள்ளுங் காலமூன்றுணர வல்லையே யெனக்குமுற் பிறப்பின்

வண்டுந்தோற்ற முழுநுறையென்ன மல்லிகார்ச் சுனவரன்மன்னி
யின்புறுகோயிற் புறவதாயுதித்தாய் இருந்தபி யிறைஞவர்ந்துண்பான்

(இ-பு.) இவ்வாறு தன்கணவன சொன்ன வார்த்தையைக் கேட்ட தம
ருகம்போன்ற இடையினையுடைய அம்மாதானவள் சந்திரனது இளங்க
திர் நிலாப்போல் புன்சிரிப்புவிளங்கநீர் மனிதர்களினைக்கும் திரிகால
ங்களையும் அறியமாட்டுவீரானால் எனக்கு முன்பிறப்பில் என்னசென்ம
ம் கேட்டிருந்ததோ அந்தச்சென்மத்தையும் அதில்நடந்த செய்திகளையா
வையும் சொல்லுமெனறுவினவ மல்லிகார்ச்சுனேஸ்வரர் கிருபையுடன்
வீற்றிராநின்றகோயிற்புறவாகப்பிறந்து அவ்விடத்திலிருந்த நீ ஒருநாள்
இரைதேடியுண்ணுவதற்காக-எ-று. (௰௫)

செந்நிறத்தலைசியோன் றெடுத்துநீவா ளுஞ் சினவிழி யெருவைவந்த
ளுறுசி, யனைத்துவலிதிற் கவர்வனென்றுனை யழன்றுபின் றொடாதலும்
வெருவிப், பொன்னெடுங்கோயில் வலங்கொடுபறந்துபொருவிடைக்கொ
டிநெடுங்கம்பம், துன்னுபுகரந்தங் கொதுங்கிநீயிருப்பத் தொடர்ந்தவக்க
ங்கழுகுகண்டே ... ...*

(இ-பு.) செம்மைநிறத்தையுடைய ஒருமாமிசத்துண்டினை நீயெடுத்துக்
கொண்டு வரும்போது கோபம்பொருந்துதலால் சிவந்தகண்களையுடைய
ஒருபருந்துவந்துசேர்ந்து அந்தமாமிசத்தைக் கிரகித்துக் கொள்ளுவனெ
ன்று கோபித்து உன்னைப்பின்தொடரவே நீபயந்து பொன்னாற்செய்யப்
பட்ட அந்தப்பெரியகோயிலைப் பிரதக்ஷிணமாகப் பறந்துபோய்ப் போர்
செய்யத்தக்க ரிஷபக்கொடிகட்டும்பெரியகம்பத்தில்தங்கி மறைந்தொரு
பக்கத்திலிருந்தனை (அப்படிமறைந்திருந்தும்) உன்னைத்தொடர்ந்துவந்த
பருந்துகண்டு-எ-று. (௰௬)

குழியால்கரியின் றேட்டியிற்கூர்ந்த துவண்டவெம்படையிறைற்கொத்தி
வாழியவுன்னை யுயிர்செகுத்தந்த வன்றலை கழுகுகொண்டேக
விழுமியசன் சுனிதிப்பட்டு விளிதலான முன்வலஞ்செயலால்
ஆழிசூழுலகந் தராபதிமகளா யவதரித்தெம்மையுமடைந்தாய்

(இ-பு.) அப்படிகண்டபருந்தானது மூடபடாங்கட்டியயானையைக்கொ
ல்லுகிற அங்குசத்தைப்போலக்கூர்மையுள்ள தன்மூக்காகிய வெவ்விய ஆ
யுதத்தினால் உன்னைக்கொத்தி உயிரைக்கொன்றுநீ கொண்டுவந்த கொழு
த்தமாமிசத்தைப் பிடுங்கிக்கொண்டுபோய்விட (அச்ஸ்தம்பத்திலிருந்து)
விழுகின்றநீ சிவசந்நிதிக்கெதிரில் விழுந்து இறந்ததினாலும் முன்னேபி
ரதக்ஷிணஞ்செய்தலினாலும் நீர்நிறைந்த சமுத்திரஞ்சூழ்ந்தபூமிக்கிறைவ
னாகிய அரசன்புத்திரியாகப்பிறந்து அரசனாயிராநின்ற என்னையும் விவாக
ஞ்செய்துகொண்டாய்-எ-று. வாழிய முன்னிலையசை. (௰௭)

வேறு.

இவ்வாறுகொற்றமுடி மன்னனிறுத்த லோடுஞ்
செவ்வாய் மழலைக்கிளி யன்னவள் செப்பலுற்றாள்,
ஒவ்வாத வும்மையுட னின்மையுமுற் றுணர்ந்தேன்
எவ்வாறினிமே லிருவோரு முதிப்ப தென்றாள்

(இ-பு.) வெற்றியுள்ள மகுடவர்த்தனனாகிய அரசன் இப்படி சொன்ன
வுடன் சிவந்தவாயையும்மழலைச்சொல்லையுமுடைய கிளியொத்தவள் சொ
ல்லுகின்றாள் ஒவ்வாததாகிய முன்பிறப்பும் இப்பிறப்பும் நன்றாக அறிந்
துகொண்டேன் இனிமேல் நாமிருவரும் எவ்விதப்பிறப்பாகச்செனிப்
போமென்றாள் -எ-று. (மேல்அரசன்சொல்லுகிறான்) (௰௮)

கேளாயிரண்டாம் பவத்தன்மை கிளத்துவனியான்
வாளார் விழியாய் புகழ்ச்சிந்து நன்னாட்டில்வந்து
தாளார் கழன்மா முடிமன்னவர் தாழ்ந்திறைஞ்சுந்
தோளாடல் வேந்தா யரசாள்வ னித்தொல்லைஞாலம்

(இ-பு.) வாளொத்த கண்களையுடைய பெண்ணே? இனிவரும் இரண்
டாம் பிறப்பின் தன்மையை நான்சொல்லுகிறேன்கேள் புகழ்தங்கிய நல்
ல சிந்துதேசத்தில்பிறந்து வீரகண்டைகட்டிய காலையும் பெரிய கிரீடம்
அணிந்த (சிரசினையுமுடைய) அரசர்கள் தாழ்ந்து வணங்கும் படியான
வெற்றிபொருந்திய தோள்வலியையுடைய மன்னவனாகிப் பழைய தாகிய
இந்தப்பூமியானது(என்னுக்கினைக்குட்படும்படிஅரசாட்சிசெய்வன்)எ-று·

செல்லார் நறும்பூங் குழற்காமரு செல்விநீயு
மல்லார் புயன்றஞ் சயன்றந்த மடந்தையாகித்
தொல்லா ரணத்தின் முறையேதொடை சூட்டியெற்கே
யில்லாகி முல்லைவட மின்னிசையந்து வாழ்வை

(இ-பு.) நீருண்டமேகம்போற் கறுத்து வாசனைதங்கிய பூமாலையணி
ந்த அளகபாரத்தையுடைய அழகியபெண்ணே? நீயோவென்றால், பலம்
பொருந்திய தோளையுடைய தருசெயனென்னும் அரசன் புத்திரியாகிப்
பழைய வேதவிதிப்படி யெனக்கே மணமாலைசூட்டி மனைவியாகி முல்
லைப்பூமாலையணிந்த அருந்ததிபோலக்(கற்புள்ளவளாய்)வாழ்குவை-எ-று.
(அந்தப்பிறப்பு நீங்கினபின்பு.) (௨௰)

வேறு.

பாகிழைப் பாவையக்குற் பனிமொழி மனைக்குசேனா
யாகினமூன்றும் பவத்தி லணிசவு ராட்டிநாட்டில்

வாசவன் றிருவின்மிக்க மன்னனுய்த்தோன்றியந்த
காசினி முழுதும்யானே பொதுவறக் காவல்பூண்பேன்

(இ-பு.) பைம்பொன்னாற் செய்யப்பட்ட மேகலாபரணம் அணியும் பரந்த அல்குலையும் குளிர்ச்சிதங்கிய வசனத்தையுமுடைய பெண்ணே? இன்னமுஞ்சொல்லுகிறேன்கேள் குற்றமில்லாத மூன்றாம்பிறப்பில் அழகியசவுராட்டிநாட்டில் தேவேந்திரனை செல்வத்திலுமிகுந்த (செல்வமுள்ள)மன்னவனாய்ப்பிறந்து அந்தத்தேசமுழுவதும் பொதுவின்றி நானே அரசாட்சிசெய்வேன்-எ-று.

கொங்குணிக் கொழுகும்பைந்தார்க் குவிமுலை மணங்கேசீர் (உக)
மங்குல்கண் படுக்குந்தண்கா வளநிகழ் கலிங்கநாட்டிற
செங்கைவேற் கலிங்கர்கோமான் றிருமகளாகத் தோன்றி
யங்கெனக் குரிமையாகி வைகுவை வளப்பில்காலம்

(இ-பு.) முறுக்குடைந்து தேனொழுகா நின்ற பசிய பூமாலையணிந்த குவிந்ததனங்களையுடைய பெண்ணே? நீயும் மேகம் நித்திரை செய்யும்படி (உயர்வாகிய) குளிர்ச்சிபொருந்திய சோலைகள்சூழ்ந்த வளப்பமிகுந்த கலிங்கதேசத்தில் வேலேந்திய செங்கையையுடைய கலிங்கராசனுடைய திருமகளாய்ப்பிறந்து அந்தச்செனமத்திலும் எனக்குரிமையுள்ளமனைவியாகி அளவில்லாதகாலம் வாழ்ந்துகொண் டிருப்பை-எ-று. மேகம்நித்திரைசெய்தலாவது நீங்கமால் சூழ்ந்துகொண்டிருத்தல்.

குழலினிற் பாகிற்றேனிற் குயிலினிலமிழ்தினின்றேய்ந்த (உஉ)
மழலையஞ் சொல்லாய்நாலாம் புவத்தினின் மணிசெய்மாட
நிழலிருள் சீக்குஞ்செவ்வி நிறைந்தகாந் தாரநாட்டிற்
கழல்புனைந் துணைத்தாள்வைவே லிறைவனா யுலகங்காப்பேன்

(இ-பு.) அந்தமூன்றாம்பிறப்பு நீங்கினபின்பு வேய்ங்குழலினிசையிடத்தும் வெல்லப்பாகினிடத்தும் தேனினிடத்தும் குயிலோசையினிடத்தும் தேவாமிர்தத்தினிடத்தும் தோய்ந்ததுபோல மிகுந்தமதுரம்பொருந்திய மழலைச்சொற்களையுடையவளே நாலாவதுபிறப்பில் ரத்தினங்கள்பதித்திருக்கும் மாளிகைகளின் ஒளியானது இருளைக்கெடுக்கும்படியான அழகுநிறைந்த காந்தாரதேசத்தில் வீரகண்டையணியுங் கால்களையுடைய கூர்மைபொருந்திய வேலாயுதமேந்தும் அரசனாகிப் பூலோகத்தைரக்ஷிப்பேன்-எ-று.

நஞ்சினி லமிழ்தினிற்றோய்ந்து நலந்திகழ் நெடியவாட்கண் (உ௩)
வஞ்சிநுண் ணிடையாய்நீயு மகதர்கோன் மகளாய்த்தோன்றி
யஞ்சனக் கடல்சூழ்வைய மளிக்குமென் மனைவியாகிப்
பஞ்சின்மெல் லடியார்போற்றப் பரிவுடன் வாழ்வைமாதோ

(இ-பு.) விஷத்திலும் அமிர்தத்திலுந் தோய்ந்து அழகுடன் விளங்குகின்ற நெடியவாள்போன்ற கண்களையும் பூங்கொடிபோன்ற இடையினையுமுடையவளே? நீயும் மகததேசாதிபதி மகளாய்ப்பிறந்து கருமைநிறமுள்ள கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை ரக்ஷிக்கும் என்மனைவியாகிப் பஞ்சினைப்போல மிருதுவாகிய பாதங்களையுடைய மாதர்கள்போற்றப் பரிவுடன்வாழ்குவை-எ-று. பொதுவாகநோக்கும்போது வருத்தத்தையுஞ்சீடாக்ஷிப்பின்பு விருப்பத்துடன் நோக்கினால் அவ்வருத்தத்தை நீக்கிமகிழ்ச்சியைத்தருஞ் செய்கையை யுடையதாதலின் நஞ்சினிலமிழ்தினிற்றோய்ந்து நலந்திகழ்கண்ணென்றது.

வேறு.

பண்ணியன்மகர வீணையுங்குழலும் பழுத்தமு தளவியகுதலைப் [க்கும்
பெண்ணணங்கைந்தாம் பிறப்பினிலவந்திப் பெயருடைப்பெரியநா டளி
அண்ணலஞ்செங்கோ லரசன்யானுக வருவனீ தசாருகன்மகளாய் [ம்
மண்ணியவிழவில் மாலையென்புயத்தில்வனைகுவைமணந்தினி திருப்போ

(இ-பு) (அந்த நாலாம் பிறப்பு நீங்கினபின்பு) இசைபாடு மியல்பினையுடைய மகரவீணையைப்போலவும் - வேய்ங்குழலைப்போலவும்-மதுரமூறிய தேவாமிர்தத்தைக் கலந்ததுபோலிராநின்ற குதலைச் சொற்களையுடைய பெண்ணணங்கே! ஐந்தாம் பிறப்பில் அவந்தியென்னும் பெயருள்ள பெரியதேசத்தை அளிக்கும் பெருமைபொருந்திய அழகியசெங்கோல் செலுத்தும் ராசனாக நான்பிறப்பேன் நீதசாருகனென்னும் அரசன்மகளாய்ப்பிறந்து அலங்காரஞ்செய்த கல்யாண மண்டபத்தில் என்புசங்களில் மாலைசூட்டுவை. அதற்குமேல் நாமிருவருங்கூடிவாழ்குவோம்-எ-று. வீணைகளுள் பெரும்பான்மை யாகச்சொல்லப்பட்டவீணை- சு-அவை- பேரியாழ்- மகரயாழ்- சகோடயாழ்- செங்கோட்டியாழ் - என்பவைகளாம். (உ௪)

இறுபான்மையான்வரும் யாழுமுள.

வெண்பா.

பேரியாழ்பின்னு மகரஞ்சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர் - தார்பொலிந்து
மன்னுந் திருமார்பா வண்கூடற் கோமானே
பின்னு முளவோ பிற.

பெரியாழிற்கு நரம்பு - உக - மகரயாழிற்கு - ௰௯ - சகோடயாழிற்கு - ௰௪ - செங்கோட்டியாழிற்கு - எ.

ஒன்றே டிருப்பது மோரேழ்மேற் பத்துடனே
நின்றபதி னேழு நெடுங்காற் - குன்றாத

நால்வகை யாழிற்கு நன்னாய்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி.

மூலானது-மூங்கில்-சந்தனம்-வெண்கலம் - செங்காலி- கருங்காலி
என்னுமிவைகளில் ஒன்றாற்செய்யப்படுவது.

வாங்கிய மூங்கிலு மாசந்தம் வெண்கலமும்
பாங்குடைச்செங் காலிகருங்காலி பூங்குழலாய்
கன்னெனுவந்த கழைக் கினைக ளாமென்பார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து

மூங்கிலினாற்செய்வதே உத்தமம் - இவைகளெப்பதிகாரத்திற்காண்க.

வாளொனத்துளங்கிக் குருதிதோய்வேலின் வரிபரந்தமுதொடுவிடத்தின்
கோளுறப்பிறழு நெடுங்கணுயாருங் குலப்பிறப் பதிலாயானந்த
நீள்பெயர்நாட்டிற் காசனுவருவ னியும்போ யயாதிகன்னிகையாய்
நாளணிவிழவி னல்லணியணிந்தென் னன்மனையாகிவாழ் குவையால்

(இ-பு.) வாளாயுதம்போல ஒளிபொருந்தியும் பகைவருதிரந் தோய்ந்த வேலாயுதம்போல் வரிபொருந்தியும் அமுதம்போல நன்மையைத் தருவதும் விஷம்போலத் தீமையைத் தருவதுமாகப் பிரகாசிக்கும் நெடிய கண்களையுடைய நாயகியே! ஆறுவதாகிய மனிதகுலப் பிறப்பில் நீ ஆனந்தபுரியினுக்கு மன்னவனாய் வருவேன் நீயும் யயாதிராசன் மகளாய்ப்பிறந்து அலங்காரஞ்செய்யும் கலியாணத்தில் நல்லமுகூர்த்தத்தில் மாங்கலியசூத்திரந் தரித்துக்கொண்டு எனனுடைய நல்மனைவியாய்வாழ்வாயென்றுசொன்னன-எ-று.(அந்தஆறும்பிறப்புநீங்கினபின்பு)

வேறு.

வம்பைமுனிந்துமுகங்கருந்து மணிவாராறுத்து மதவேழக்
கொம்பைவெருண்ட துணைமுலையா யேழாம்பிறப்பிற்கூடற்கோ
லிம்பமளியுந் தமிழ்ப்பாண்டி நிருபன்றனக்கு மகளாகி
யம்பைதொழுந் காமனிவ னென்னவுலகி னவதரித்தே

(இ-பு.) கச்சினைமீறியும் முகங்கறுத்தும் அந்தக்கச்சினைச்சேர்த்த முத்திரையறுத்தும் மதமுள்ள யானைக்கொம்பைக் கெலித்த இரண்டாகிய தனங்களையுடைய நாயகியே? ஏழாவது பிறப்பில் மதுராபுரிக்கிறைவனாகிய வேப்பம்பூமாலையணியும் பாண்டிய ராசன் புத்திரியாய்ப் பஞ்சபாணங்களையும் கருப்புவில்லையும் ஒழித்துவந்திருக்கும் மன்மதனிவனென்று யாவருஞ்சொல்லத்தக்க அழகுடன் - இந்த வுலகத்திற் பிறந்து-எ-று.

(உஎ)

பதுமவருணை னெனும்பெயரும் படைத்துப்படைக்குங் கொடைதனக்கு
முதியவெண்ணெனன் கலைக்குரிகர் மொழியினிளையி லிவற்கென்ன
மதியம்வளரும் படியெனயான வளருநாளின் மாமயிலி
நதியம்வளங்கூர் விதேகவள நாட்டிறைசன மகளாக

(இ-பு.) பதும வண்ணனென்கிற பெயரும்பெற்று ஆயுதப்பயிற்சியுமியாகத்திலும் பழமையாகிய அறுபத்துநாலு கலைகளிலும் இவனுக்கொப்புச் சொல்லுவோமாகுல் வேறொருவரு மில்லையென்னும்படி பிறைவளருந்தன்மைபோல நான் வளரும்நாளில் பெருமைபொருந்திய மயில்போன்றவளே? நீ ஆற்றின்வெள்ளமிகுந்த வளப்பத்தையுடைய தாத்தக்க விதேக நாட்டரசன் புத்திரியாக-எ-று.

(உஅ)

முளரிப்பொகுட்டு வட்டவணை முருகுநாறு மலர்க்கோயின்
விளரிக்குதலைச் செநதிருவும் விழைபுமழகி னுடன்பிறந்து
வளருமேயுமை வசுமதியென் றொருபேர்புனைந்து வாழுநாள்
தளருமிடையின் றிருத்தாதை யமைச்சருடனே சாற்றுவான்

(இ-பு.) பூங்கொட்டையாகிய வட்டவடிவமுள்ள ஆசனத்தில் வாசனை கமழுகின்ற செந்தாமரைப் பூங்கோயிலில்வீற்றிராநின்ற இராகத்தையொத்த குதலைச்சொல்லையுடைய மகாலட்சுமியும்(ஆண்மையைத் தன்மைகொள்ளும்படி) விரும்பத்தக்க அழகுடன் பிறந்துவளருகின்ற வசுமதியென்கிற ஒப்பற்ற பெயர்பெற்று வாழும்நாளில் மெலிகின்ற (அணுவினதாகிய) இடையினையுடைய உன்னைப்பெற்ற சிறப்புள்ள பிதாவானவன் மந்திரிகளுடன் சொல்லுவான்-எ-று. ஆடவர்கள் - சவுந்தரியமுள்ள மற்றோராடவனைக்கண்டால் - தாங்கள் ஸ்திரிகளாகப்பிறந்து அந்த ஆடவர்களைச் சேரவேண்டுமென்று ஆசைகொள்வதும் - மாதர்கள் அழகுள்ள மற்றொருமாதினைக் கண்டால் அவ்வாறு எண்ணுவதும் இயல்பு - கம்பராமாயணம் - ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினுய்.

(உகூ)

பாலையனைய மொழிக்குமங்கைப் பருவம்வந்த திதபோழ்தின்
மாலையணியுஞ் சுயம்வரஞ்செய் மணிமண்டபமுங் கடிதினமைத்
தோலையெழுதித் திசைமன்னர்க் குய்யினென்ன வாங்கவருங்
காலைமணிமன் டபமியற்றித் தூதிரேலை கடிதுய்த்தார்

(இ-பு) (என்னசொல்லுகிறேனென்றால்) பாலின் மதுரத்தையொத்த மதுரமுள்ள சொல்லையுடைய நம்முடைய புத்திரிக்கு இப்போது மங்கைப்பருவம் வந்தது (ஆதலால்) பூமாலைசூட்டும் சுயம்வரஞ் செய்யும்படியான அழகிய மண்டபமும் விரைவாக ஏற்படுத்தி - கல்யாணவோலையெழுதி ஐம்பத்தாறுதேசத்துராஜாக்களுக்கும் அனுப்புமென்றுசெ

ல்ல (அந்தவார்த்தையைக்கேட்ட) மந்திரிகள் (அவ்வரசன்சொன்ன நாளுக்கு மறுநாள்) விடியற்காலமானபோது ரத்தினங்கள் பதித்தகல்யாணமண்டபம் அலங்காரஞ்செய்து - விவாகத் தூதர்களுடன் கல்யாணவோலையும் அனுப்பினார்கள்-எ-று. (௬௰)

முடக்குகற்பொருளை யுற்றுணர்ந்து மூரித்தேரின் முடங்குளைய
மடங்கல்வருவ தெனத்தமது நிகமங்கடல்போன் மருங்குலவக்
கடங்கள்கடந்து நதிகடந்து காடுநாடுஞ் சுழியப்போய்த்
தடங்கொள்விதேக நாட்டையுந் தார்வேன்மன்னர்திறர்புகல்வாம்

(இ-பு.) அந்தக் கல்யாணவோலைவந்து சேர்ந்தவுடன அதிலெழுதியிருக்குஞ்செய்தியை நன்றாகக்கேட்டுணர்ந்து (தங்கள்தங்கள்) பலம்பொருந்திய தேர்களிலேறிக்கொண்டு வளைந்த கழுத்தினை மயிரினையுடைய சிங்கங்கள் வருதல்போல- தங்கள் நகரத்திலிருப்பவர்களுங்கூடிக் கடல்போலவரும்படி அருநெறிகடந்தும் - காறுகள் கடந்தும் - காடுகளும் - நாடுகளும் பின்னிட்டுப்போய் விசாலமுள்ள விதேகநாட்டில் அடைகின்றவேலாயுதமேந்தும் அரசர்களின்னாரின்னாரென்றுசொல்லுகிறோம்-எ-று

கள்ளக்கருங்கட் கடைச்சியர்வாண் முகப்போற்கமலங் கவின்காட்டி
யள்ளற்பழனந் தோறுமலரு மயோத்திநகர மரசாளும்
வெள்ளக்கவிகைத் தனிச்செய்கோல் வேந்தன்வேந்தர் முடியுழுதாள்
வள்ளற்றகையாங் குருகுலத்தோர் மருமானரசர் பெருமானே

(இ-பு.) கள்ளத்தன்மையையுடைய கருமையாகிய கண்களுள்ள பள்ளஸ்திரிகளின் முகங்களைப்போல செந்தாமரைமலர்கள் அழகுகாட்டிக சேற்றினையுடைய வயல்கள்தோறும் மலருகின்ற அயோத்திநகரத்திலிருந்து அரசாட்சிசெய்கின்ற வெள்ளைக்குடையினையும் - தனிமையான செங்கோலையுமுடைய அரசனும் மறுதேசத் தரசர்களணிந்த மகுடங்கள் படும்படியான பாதத்தையும் இரப்பவர் முதலானவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுக்கின்ற பெருமைப் பாட்டினையுமுடையவர்களாகிய கௌரவ குலத்தாருக்கு மருமகனுமாகிய மன்னர் மன்னவனும்-எ-று. (௬௨)

வேறு.

வருகுல மகளிர்தங்கண் மனமெனத் திருந்துகோலான்
பெருகுலம் பொருதிண்டோட்பிறங்கலொளிர்ங்கோள்வேலான்
முருகுலவாதசெங்கேழ் முண்டக மடந்தைகேள்வன்
குருகுலந் தழையவந்த குனிசிலையப்போர் வேந்தன்

(இ-பு.) தாய்மரபு தந்தைமரபு என்னும் இரண்டுமரபிலும் சந்ததி பரம்பரையாய்க் கற்புநிலைதவறாமல் வருகின்ற குலஸ்திரீகள் மனம்போல நீதியில்தவறாத செங்கோலை யுடையவனும் பெரிய இரண்ட கல்லுகளின் வலிகெடச் செய்யத்தக்க மலையொத்த பலம்பொருந்திய தோளையுடையவனும் ஒளிபொருந்திய வேலையுடையவனும் வாசனைகெடாதசெம்மைநிறமுள்ள தாமரைமலரில் வீற்றிருக்கும் மகாலட்சுமியின் கணவனாகிய மகாவிஷ்ணுவைப்போல ரக்ஷிக்குஞ் செய்கையுடையவனும் வளைந்தவில்லைக்கொண்டு போர்செய்து செயம்பெறுகின்றவனுமாகிக் குருகுலம் பெருமைபெற்றோங்க வந்தராசனும்-எ-று. (௬௬)

மன்னவர்மகுடகோடு மணித்தொகையுழுததாளன்
கன்னவில் வயிரத்தோளான் கருணையங் கமலக்கண்ணான்
பொன்னவிர் சுணங்குபூத்த பொங்கிள முலையினார்தம்
மின்னகு வாள்விழிச்செய்கை மீழகாந்தாரவேந்தன்

(இ-பு.) அரசர்களுடைய மகுடங்களில் பதித்திருக்கும் ரத்தினங்கள் உராயும்படியான கால்களையுடையவனும மலைகளொப்பாகச் சொல்லுகின்ற பலம்பொருந்திய தோளையுடையவனும் கிருபைதங்கிய அழகியசெந்தாமரை மலர்போன்ற நேத்திரங்களையுடையவனும் பொன்போலப் பிரகாசியாநின்று தேமல்பரந்தவிளங்குகின்ற இளமைதங்கிய தனங்களையுடையஸ்திரீகள்கண்டு தமக்குள் சந்தோஷிக்கத்தக்க (அழகுள்ளவனும்) நீண்ட வில்லேந்திய செங்கையினையுடைய வீரனுமாகிய காந்தாரதேசத்துராசனும்-எ-று. (௬௭)

வேறு.

உதையகிரிக ளோரிரண்டி னுதிக்குமுபய தபனனெனச்
சிதைவின்மகர குண்டலங்க டிளைக்கக்கவினுந் திணிதோளான்
புதைகொள்பகழி மழைமுறை பொழியுமுகிலிற் சொரியுங்கைக்
குதைகொண்டிட வரிசிலைக்கைக் குந்திபோசன் குணமிக்கான்

(இ-பு.) இரண்டு உதயகிரிகளிருந்து அலைகளில் இரண்டு சூரியர்கள் உதயமானதுபோலக் கெடுதலில்லாத ரத்தின மகரகுண்டலங்கள்பொருந்த அழகுசெய்யுந் தோள்களை யுடையவனும் கட்டுகள்கட்டப்பட்ட பாணங்களை ஊழிக்காலத்தில் முறையாக மழைபொழிகின்ற மேகம்போலப் பிரயோகஞ்செய்யும்படியான வயிரம்பற்றிய குதையினையுடைய நீண்டபெரிய விற்பிடிக்குங் கையினையுடைய நல்லகுணத்திருல் உயர்ந்தவனு மாகிய குந்திபோசனென்னும் ராசனும்-எ-று. (௬௮)

வேறு.

விலைவரம் பறியலாகா வெயின்மணி யிமைக்குமார்பன்
கலைவரம் பறிந்தவுண்மைக் கருத்தினு னறத்தின்மிக்கான்

மலைவாம் பாயநூல வலயத்தில் வரிகொள்வேழச்
சிலைவாய் சொன்வேளுங் காமுறுஞ் சிந்துவேந்தன

(இ-பு.) இவ்வளவுபெருமென்று விலையினளவை அறியக்கூடாததலை னாய் ஒளியினையுடைய ரத்தினாபரணங்களிருந்து பிரகாசிக்கும் படியா ன மார்பினையுடையவனும் சாஸ்திரங்களினளவை அறிந்த மெய்ம்மை யான சித்தத்தையுடையவனும் தருமத்தில் மிகுந்தவனுமாகிய சக்கரவா ளகிரியை எல்லையாகவுடைய வட்டமாகிய இவ்வுலகத்தில் வண்டுகளாகி ய நாணிபொருந்திய கரும்புவில்லினால் மேன்மைகொண்டிருக்கும் மன் மதனும் (பெண்ணுருவங்கொண்டு புணரவேண்டுமென்று) விரும்பத் தகுகின்ற சிந்துதேசத்தரசனென ஒட்டிக்கொள்ளுக் வேளுங்காமுறும். * இறைவரி எனப்படுவது-ஆடவர்பெண்மையை அவாவுந்தோளினும் எனப்படுவதாம்.

கோளுறு மதியகாண்மீன் குழாத்திடை வருவதேய்ப்ப
வாளுறுங் தடக்கைமன்னர் புடைவர வருகின்றோன்
வேளுறு வனப்பின்மிக்கான் விரிதிரை வேலைஞாலந்
தோளுறப் பரிக்குமாணைத் தருபதன் றடச்செய்யுறுநன்

(இ-பு.) நவக்கிரகங்களி லொன்றாகப் பொருந்திய சந்திரன் நக்ஷத்திரக் கூட்டத்தினடுவில் வருவதைப்போல் வாள்பொருந்தியகையையுடைய அரசர்கள் நாலுபக்கத்திலுஞ் சூழ்ந்துவரும்படி மத்தியில்வருகின்ற பலம் பொருந்திய சேனையுடையவனும் - மன்மதன பெற்றிருக்கும் அழகிலு மிகுந்த அழகுள்ளவனும் பரவிய அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூமிபாரத்தைத் தன்தோளிற்பொருந்தத் தாங்கும்படியான ஆக்கினைச் சக்கரத்தையுடைய அருபதன் எனனும் பேருடையவனுமாகிய பிரகாசியா நின்ற ஆபரணங்களணிந்திருக்கும் அரசனும்-எ-று. (கஎ)

குடைநிழ லிருளைக்காட்டக் குரைகழன் மன்னர்செங்கைப்
படைவிழல் வெயிலைக்காட்டச் செல்லுமவாப் பரித்திண்டோன்
மடைவளர் சங்கமீன்ற மணியினைக் கருவெண் ணன்னம்
அடைகிடந் தலவுநாடுட் டவந்திய னரசர்கோமான்

(இ-பு.) குடைகளினிழ லிருளைக்காட்டவும்-ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த காலினையுடைய அரசர்கள் செங்கையிலிருக்கும் (வாளாயுதமு தலாகிய) ஆயுதங்களின் ஒளி (அவ்விருளைநீக்கும்படி) வெயிலைக்காட்டவும் (நால்வகைச்சேனையுடன்) செல்லும்படியான தாங்குகின்ற குதிரைகளைப் பூட்டிய பலம்பொருந்திய தேரையுடையவனும் வயல்மடைகளில் தவழ்கின்ற சங்கங்களீன்ற முத்துக்களை அன்னங்கள் தங்கள் முட்டைகளென்று

றெண்ணி அடைகிடந்து சஞ்சரிக்கும்படியான நல்ல அவந்தி தேசத்தை யாளுகின்றவனும் மன்னர்மன்னவனுமான அரசனும்-எ-று. (கஅ)

கண்ணகல் ஞாலமெல்லாங் கலிகடிந் தருளிற்காத்தோன்
வண்ணமே லைத்திறன்றன் பின்வந்த மழையாம்வண்ணத்
தண்ணன்று றுதித்தகோல்சி சொறுகுல மதனிற்றோன்றும்
புண்ணுறு புலவுவாட்கைப் புரவல னறிவின்மிக்கான்

(இ-பு.) (பாபத்தைநீக்கி உயிர்களிடத்தில்) கிருபைவைத்து இடமகன்ற பூமியெல்லாம் காப்பவனும் அழகியநீண்ட கலப்பை ஆயுதத்தையுடை யபலபத்திராமன் பின்வந்த நீருண்டமேகம்போல் கருமைநிறமுள்ள கிருஷ்ணமூர்த்தி திருவவதாரஞ்செய்த கீர்த்திபெற்ற பழமையாகிய எதுகுலத்திற்பிறந்த பகைவருடைய உடலூனில் புண்ணுண்டாகச் செய் வதற்கேதுவாய் வாள்பிடிக்கும் கையையுடையவனும் - அறிவில்மிகுந்த வனுமாகிய அரசனும்-எ-று. (கக)

புல்லிடு வெருளிவேகப் புழைக்கைமேற் புலரிக்காலை
யெல்லொளி யுதயக்கும்ப ரியைவதே போலத்தோன்றுங்
கல்லிடு திரடோளாற்ற காவலன் கரும்பின்வேலிப்
பல்லவ தேசமாளும் பார்த்திபன் பகைவர்ச்செற்றோன்

(இ-பு.) விடியற்காலத்தில் சூரியன் ஒளியையுடைய உதயகிரியில் பொருந்தியதுபோல் - புலியையுங்கொல்லுகின்ற கோபமும் வேகமுமுள்ள யானையின்மேல் தோன்றுகின்ற மலைகளையும் பிளக்கத்தக்க திரண்டபுஜ வலியையுடைய காவலனும் பகைவர்களை (யுத்தத்தில்) கொன்றவனுமா கிய கரும்புஞ்சோலைகளே வேலியாகச் சூழ்ந்திருக்கத்தக்க பல்லவதேசத் தையாளும் அரசனும்-எ-று. (௨௰)

காரணங் கடந்தஞானக் கண்ணுதல் சடையின்வாழும்
நீரணங்கூரிகாறு நித்தறு வளங்கூர்நாடன்
ஆரணம் பகலுநாவி னந்தணர்க் களிக்குங்கையான்
வாரணம் பொருந்துதானை வாரண வாசிமன்னன்

(இ-பு.) தனக்குமேலொரு முதலில்லாமல் (யாவர்க்கும்காரணத்துக்கா ரணமுதலாயிராநின்ற) நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் சடைமுடி யில் வாழ்கின்ற நீருருவமாகிய கங்காதேவியானவள் ஊழிகாலம்வரைக் கும் நீங்காமல் பெருகிக்கொண்டிராநின்ற வளப்பமிகுந்த நாட்டையு டையவனும் வேதமோதும் நாவினையுடைய பிராமணர்க்குத்தானஞ்செ ய்யுங் கையையுடையவனுமாகிய யானைகளுள்ள சேனையையுடைய வா ரணவாசிப் பட்டணத்திலிருக்கும் அரசனும்-எ-று. * பிரமணர்கள் அ

பூகிய சாந்தகுணமுள்ளவர்களாதலால் அந்தணரெனச்சொன்னார்-வீரர்களி போர்க்களத்தில் சண்டைசெய் திறந்தால் வீரசுவர்க்கம் அடையலாமென்கிற அபேக்ஷைகொண்டு போர்செய்கின்றவர்கள் யானை அப்படிச்சொ த்த அபேக்ஷையில்லாமல் கோபாதிசயத்தியால் சண்டைசெய்யத்தக்கதாகை யால் அரசருக்குள்ள நால்வகைப் படையுள் யானைப் படையை விசேஷ மாகச்சொல்வது.

(௬௧)

கொல்லுலை யகத்திற்காய்ந்து குருதிதோய் கொடியவேற்கண்
அல்லுருவனாந்தகோதை யணங்கனார்க் கமுதமன்னான்
எல்லுயர் கனகக்குன்றத் தெழுதிய பழுதிலாறல்
வில்லுயர் துவசத்திண்டேர் வில்லவன் சொல்லிவேந்தன்

(இ-பு.) கருமானுடைய உலைக்களத்திற் காய்ந்துபகைவருதிரத்தில் படிகின்ற கொடியதாகிய வேலாயுதம்போல (கூர்மையாகிப்) கண்களையு ம் இருளானது மயிருருவங்கொண் டிருப்பதுபோலக் கருமைநிறந் தங்கிய அளகத்தையுமுடைய தெய்வப்பெண்களையொத்த மாதர்களுக்கு (அழகிறால்) அமுதம்போலிருப்பவனும் ஒளியுடனுயர்ந்திராநின்ற பொன்மலையாகிய மகமேருவினிடத்தில் தீட்டியகுற்றமில்லாத பலமுள்ள உயர்ந்தவிற்கொடி கட்டிய தேரையுடைய கொல்லிமலைக்காரசனாகிய ராசனும்-எ-று, * மகமேருவில் கொடிதீட்டினவ னென்பதினால் அரசர்களை யெல்லாம் வென்றவனென்பதாயிற்று.

(௬௨)

பண்டைய மனுநூல்காட்டிப் படையெடுத் தடுபோர்வென்று
கண்டனைத் தனதுதேயத் தடைவது தவிர்த்தவீரன்
கொண்டலை யிபங்களென்று கோளரி முழங்கிச்சீறி
மண்டமர் புரியுநேரி மலையினன் வளவர்கோமான்

(இ-பு.) பழமையாகிய மனுவினால் முறையைக்காட்டிப் படையெடுத்துப்போய்க் கொல்லுகின்ற போர்செய்துவென்று யமதருமாரசனைத் தன்னுடைய தேசத்தில் சரவொட்டாமல் தடுத்தவனும் மேகங்களை யானையென் றெண்ணி ஆரவாரித்துச்சீறி யெதிரேற்றுப் போர்புரியும்படியான சிங்கங்கள் வாசஞ்செய்கின்ற நேரிமலையையுடையவனுமாகிய சோழராசனும்-எ-று.

(௬௩)

என்றிவர் முதலவேந்தர் யாவருஞ் சுயம்வரத்தின்
பொன்மிகழ் மண்டபத்தே புகுதயான் புகுதலோடு
மன்றலந் தண்டார்நின் மணிப்புயத் தணிதல்கண்டு
கன்றிய மனத்தராகிக் காவலர்வெகுளி மிக்கார்

(இ-பு.) ஆகிய இந்த அரசர்கள்முதலாகிய அரசர்களெல்லாரும் பொன்னாற்செய்யப்பட்டுப் பிரகாசியாநின்ற சுயம்வர மண்டபத்தில் வந்துசேர நானும்வந்துசேர்ந்தவளவில் நீ வாசனையும் குளிர்ச்சியுமுள்ள பூமாலையை என்னுடைய அழகியபுஜத்தில சூட்டுவதைவந்திருந்த அரசர்களெல்லாரும் பார்த்து மனம்வெம்பினவர்களாய் மிகுந்த கோபங்கொண்டார்கள்-எ-று. * மன்றலந்தண்-என்பதினிடையிலிருக்கும்-அம்-சாரியைஅழகெனவுங்கூறப்படும்.

(௬௪)

வேறு.

யாம்பலரொருவனீண் டிவன்மணஞ்செய்து
போம்பழிக்கியாமுளம் பொருந்திலோமென
வாம்பரித்தேர்கடாய வந்துமற்றவர்
பாம்பினங்கருடனை விரும்பும்பண்பினே

(இ-பு.)(இப்படி கோபங்கொண்ட) அந்தஅரசர்கள் நாம்பலபேராயிருக்கின்றோம் இப்போது மாலைசூட்டிக்கொண்ட இவ்வரசனொருவன் (அப்படியிருக்க) நமக்கெல்லாம் இகழ்ச்சிநேரும்படி இவன்விவாகஞ்செய்துகொண்டுபோவதை நம்முடைய மனதிலொத்துக்கொள்ளப்படாதென்று (தங்களில் ஆலோசனை பண்ணிக்கொண்டு) தாவுகின்ற குதிரைகள் கட்டிய தேர்களைச்செலுத்திப் பாம்புக்கூட்டங்கள் கருடனுடன் சண்டைசெய்ய விரும்பி யெதிர்க்குந்தன்மைபோல (என்னெதிரில்வந்து)எ-று.

வேறு.

அவரமரொதிர்தலு மழலெழுவிழியா
இவருயிர்பருகுவ னெளிதினியெனவே
யுவர்படுகடனில முவள்வுற வடுதேர்
பவனனில்விசையுறு பரிகொடுகடவா

(இ-பு.) அந்தஅரசர்கள் சண்டைசெய்ய எதிர்த்தார்கள் அப்படியெதிர்க்கவே நான் என்கண்களில் அக்கினிப் பொறியுண்டாகும்படி (அவர்களை) உறுக்கிப்பார்த்து இவர்களுயிரை யெளிதாக இப்போது வாங்கிவிடுகிறேனென்று உப்புநீர்பொருந்திய சமுத்திரஞ்சூழ்ந்த பூமியும் வாடும்படி பிளந்துகொண்டு செல்லுகின்ற என்னுடைய தேரை வாயுவைப்போல விசையுடன் செல்லுகின்ற குதிரைகளைக்கொண்டு அவர்களெதிரில் செலுத்தி-எ-று.

(௬௫)

தோரணிபரியணி சிறுதுகளுறவுந்
தாரணிபடையணி தரைமிசைகிடவுங்
கார்அணியெனமதி களிறுகள்விழவும்
போரணிகருவிகள் பொடிபொடிபடவும்

(இ-பு) தேர்ப்படை வகுப்பும் குதிரைப்படை வகுப்பும் திரைகள் போலாகவும் தும்பைப்பூமாலையணிந்த காலாட்படைவகுப்பு கால்வேறு கைவேறு தலைவேறாக அறுபட்டுப் பூமியில் விழவும் மேகவொழுங்குபோல் யானைவகுப்பு அறுபட்டுவிழவும் போர்செய்வதற்காகச் சாணை பிடித்திராநின்ற ஆயுதவர்க்கங்கள் பொடிப்பொடியாயுதிர்ந்துவிழவும்-எ-று.

மன்னவர்தேர்மிசை மந்திரமொழிவார்
சென்னிகள்விழவவர் தேர்மிசையிறையோர்
பொன்னவிர்முடிவிழ பூசலின்வெருவார்
அன்னவரேயிமை யவரடிகள்பகுவார்

(இ-பு.) (இவ்வாறு நடக்கின்ற போர்க்களத்தில்) ஒருபுறத்தில் அரசர்களிருக்குந் தேர்களினிடத்தில் மந்திரிகளுடைய தலைகள்விழ மற்றொருபுறத்தில் மந்திரிகளிருக்குந் தேரினிடத்தில் அரசர்களுடைய பொன்னாற் செய்யப்பட்டுப் பிரகாசியாநின்ற கிரீடம் அணிந்திருக்குந்தலைகள் விழ ஒன்ற சண்டையிற்பயந்து (இறந்தவர்கள்போகப் பிழைத்திருக்கும்) அரசர்களுமந்திரிகளும் காட்டிற்போயொளித்துக் கொள்ளுவார்கள்-எ-று.

வேறு.

சயமரத்தெதிர்ந்தோர்தம்மைத் துருபதன்றனையைக்காக
வயமலிசிலையால்வென்ற வாகைவேல்விசயனேபோற்
கயமலர்க்கண்ணிற்காகக் காவலர்தமைவென்று
புயமெடுபுரிசைக்கூட லின்னுடைப்புகுந்தபின்னர்

(இ-பு.) (இத்தன்மையாகப் போரில்தோற்று ஓடிப்போகும்படி) சுயம்வரத்திலெதிர்த்த அரசர்களைத் துருபதராசன்புத்திரியாகிய திரௌபதைக்காக வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அருச்சுனனானவன் வெற்றியிருந்த காண்டீபத்தினால் செயங்கொண்டதுபோல தடாகத்தில் மலர்ந்திருந்தாமரை மலரையொத்த கண்களையுடைய நாயகியே! உன்பொருட்டு எதிர்த்த அரசர்களையெல்லாம்வென்று உன்னை என்தேரில் வைத்துக்கொண்டு மேகமண்டலத்தை யளாவுகின்ற மதில்சூழ்ந்த மதுரையில்நானசேர்ந்தபின்பு-எ-று. துருபதராசனென்பவன் பாஞ்சாலராசன். (௬௧)

ஆயிழைநீயுநானு மளப்பருங்காலமின்ப
மோற்பத்துய்த்துக்கேடி யொருகுடைநிழல்கொண்டோச்சி
காவெரிக்கடவுண்முன்னர்க் கணக்கிலமகங்கள்செய்து
சேயுயர்விசும்பின்வாழுந் தேவர்தங்கடன்கழித்தும்

(இ-பு.) நல்ல ஆபரணங்களை அணிந்திருக்குந்தலைவியே நானும் நீயும் அனேககாலம் ஒழிவில்லாமல் இன்பமனுபவித்து இந்தப்பூமியை என்

ஒற்றைக்குடைநிழலில்வைத்துச் செங்கோல்செலுத்தியும் சுவாலைவிட்டெழுகின்ற அக்கினிதேவன் முன்னாக அளவில்லாத மகங்கள்செய்து மிகவும்உயர்ந்ததாகிய சுவர்க்கலோகத்தில் வாழுந்தேவர்கள் கடன்களைத் தீர்த்தும் -எ-று. யாகம்-ரு-அவை-பிரமயாகம்-தேவயாகம்-பூதயாகம்-பிதிர்யாகம்-மானுஷயாகம்-என்பனவைகளாம்-இவைகளில் -பிரமயாகமாவது-வேதமோதுதல்-தேவயாகமாவது-வேள்விசெய்தல்-பூதயாகமாவது பலியிடுதல்-பிதிர்யாகமாவது-தர்ப்பணஞ்செய்தல்-மானுஷயாகமாவது-இரப்போர்க்கு-ஆகாரமுதலானதுகள் கொடுத்தல். (௬௰)

அந்தணர்தங்கணெஞ்சந் தவாக்கொடுத்தானமீந்துஞ்
செந்தழல்பனையுமேனிச் சிவனடிபூசைசெய்தும்
பைந்தொடிநீயும்யானும் பண்டுசெய்தவத்தினாலோர்
மைந்தனையினவந்த மைந்தனுமறையோர்தம்பால்

(இ-பு.) பிராமணர்கள் மனதிலுண்டாகும் ஆசைநீங்கும்படி தானங்கொடுத்தும் சிவந்தஅக்கினியையொத்த திருமேனியையுடைய பரமசிவனது திருவடியைப் பூசித்தும் மாற்றுயர்ந்த பொன்னினாற் செய்யப்பட்ட வளையலணிந்த கையையுடையவளாகிய மனைவியே நீயும்நானும்பூர்வஞ்செய்ததபோபலத்தினாலே ஒருபுத்திரனைப்பெற அந்தப்புத்திரன்(வேதமுதலாகிய சாஸ்திரங்கள் கற்கிறதும்) பிராமணர்களிடத்தில் -எ-று.

கலைபலப்பயின்றுமுக்கட் கடவுளுக்கடிமைபூண்டு
நிலையிலாவுலகுதன்னி னிலைபெறப்புகழ்நிறீயுஞ்
சிலைவலித்திரடோளாற்றல் சேருநாளமைச்சர்தம்மோ
டலைகடற்பாரமெல்லா மவன்வயினளித்துயானும்

(இ-பு.) அறுபத்துநாலு கலைகளுங் கற்றுணர்ந்து திரிநேத்திரங்களையுடைய பரமசிவனுக்கு அடிமையாகி நிலையில்லாததாகிய உலகத்தில் தன்புகழ் நிலைநிற்கும்படி நிறுத்தி விற்போர்செய்யும் பலமுள்ள இரண்டுபுஜபலபராக்கிரமஞ்சேர்ந்தகாலில் மந்திரிகளையும் அலையுள்ள சமுத்திரஞ்சூழ்ந்த பூமிபாரமெல்லாவற்றையும் அந்தப்புத்திரனிடத்திற்கொடுத்து அதன்பின்பு நான்-எ-று. (௬௨)

பொய்யுடலெடுத்துமாயப் புணரிகணிற்றிநீந்தி
கையினைகடுத்துமீண்டக் கடலிலாழ்ந்திறந்துபோக
மையுறுபிறவிமாய்த்து மறைகளின்சிரத்தினிற்கு
மெய்யுறுநிலைமைதேர்வான் வேட்கைகூருளத்தனாகி

(இ-பு) பொய்யாகிய இவ்வுடலெடுத்து மாயையாகிய சமுத்திரங்களில்விழுந்து (அவைகடக்கவேண்டுமென்று) நீந்திநீந்திக் கைகளுங்கடுத்து

(களாசேர்க்கூட்டமையால்) பின்னும் அந்தச்சமுத்திரங்களில் அழுந்தி ருந்தபோருக்கடியான குற்றம்பொருந்திய பிறவியையொழித்து வேதங் களின்முடிவிலோதுகின்ற உண்மையாகியநிலையை அறியவேண்டுமென்கி விருப்பமிகுந்த மனமுள்ளவனாகி-எ-று. * காமத்தினால்மாயைகளை நீங வேண்டினால் மேலுமேலும் அம்மாயைகள் விருத்தியாகும் ஆகவேமனம் வருந்தும் என்பார். புணரிகளினின்று நீக்கயிலை கடுத்துமென்றார். ஏத் தினால்கூட்டமாம் என்பது துணிவு (ரு

பொன்னெடுங்குன்றமன்னபுணர்முலைப்பொலன்கொம்பொப்பா
யென்னெடுஞ் செல்வமெல்லா மெனதல வென்றுநீத்து
நின்னொடும் போதிவேலை நெடுங்கட லங்கைகொண்ட
மன்னெடுந் தவத்தின்மிக்க மாதவனிருந் தவாழும்

(இ-பு.) (உண்மை நிலையை அறியவேண்டுமென்கிற விருப்பம் என் னிடம் உண்டானதினால்) நெடிய பொன்மலையையொத்த நெருங்கிய தன ங்களையுடைய பொன்கொம்பினை நிகர்த்த நாயகியே அஞ்ஞானத்தினால் எனதுடையதென்று நினைத்துக்கொண்டிருந்த பெரியசெல்வங்களையெல் லாம் என்னுடையதல்லவென்று நீக்கிவிட்டு உன்னுடன் போய்க் கரையி யுடைய அளவிடக்கூடாத சமுத்திரத்தை உள்ளங்கையிலேற்றுண்ட ம லைபெற்ற பெரியதவத்தில் மிகுந்த அகஸ்தியமுனிவரிருந்து வாசஞ்செ யயும்-எ-று. (ரு

சந்தனப் பொதும்பர்சூழப் பொருநையங் தாம்பாற்றிச்
செந்தமிழ் முழுதுமன்றற் றென்றலங் கன்றுநல்குஞ்
சுந்தரப்பொதியக் குன்றைத் தொழுதன்ம வல்ங்கொண்டேத்திக்
கொந்தழ லங்கிருப்பண் கோதறு தவஞ்செய்காலை

(இ-பு.) சந்தனச் சோலை சூழ்ந்திருக்கத் தாம்பிரபருணி நதியென்னு ம் பூமாலையைத்தொங்கவிட்டு இயல் இசை நாடகமென்கிற தமிழ்மூ வகையும் வாசனைவீசுகின்ற இளந்தென்றற் காற்றினைத் தருகின்ற அ குள்ளபொதியமலையை நாம் பிரதக்ஷிணஞ்செய்து தொழுது தோத்தி ரஞ்செய்து நெருப்புப்பட்டெரிகின்ற பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண் குற்றமில்லாத தவஞ்செய்யுங் காலத்தில்-எ-று. (ரு

குறுமுனி வந்துதோன்றிக் கொடும்பவக் கடலைமாய்த்து
மறுவுறு பிறவிமாய மம்மர்நோய் கரிப்பின்னர்
அறு சமயங்களுக்கு மதிதமாஞ் சிவயோகந்தை
யுறுதியா யுப்தேசிப்ப யாமந்த வுபதேசத்தால்

(இ-பு) அகஸ்தியமுனிவர்வந்துகொடியதாயபாவக்கடலையொழித்த க் குற்றந்தங்கிய பிறவிநீங்கும்படி மயக்கமாகியபிணியைத் தொலைத்து

பின்பு அறுசமயங்களுக்கும் அதிதமாகிய சிவயோகத்தை உறுதியாக உப தேசிக்க நாம் இந்தஉபதேசத்தினால்-எ-று. * சிவயோகமாவது ஞானசாரி யார் திருவையினால் தனையுஞ்சிவத்தையுங் கண்டுதற்போதஞ்சிவியாமலி ருப்பது. (ருசு)

எள்ளுறு மெண்ணெய்போல வெங்கணும் பரந்துநின்ற
வள்ளறன் வடிவுகண்டு மனத்தினானந்தமூறி
விள்ளுத லில்லாவின்பம் விளைசிவ வனுபூதிக்கே
கள்ளுறு மலர்வீழ்வண்டின் முத்தியிற் களிப்பெய்கண்டாய்

(இ-பு.) எள்ளிற்பொருந்திய எண்ணெய்போல எவ்விடத்தும் நிறைந் திருக்கும் பரமசிவனது சொரூபத்தைக்கண்டு மனதிலானந்தமூறி ஒரு க்காலும் ஒழியாத பேரின்பம் விளையாநின்ற சிவானுபூதி யனுபவிக்கும் பொருட்டுத் தேன் இடைவிடாது பெருகாநின்ற மலர்களில்தங்கி அத் தேனையுண்ணும் வண்டுகளைப்போல போகத்தில் ஆனந்தமுற்றிருப் போம்-எ-று. (ருஎ)

வேறு.

என்றுமன்னவ னிருந்தனன் பினனரு மிசைத்தான
அன்றுநாயுரு வெடுத்தியானிறந்திடு மளவிற்
கொன்றையஞ்சடைக் குரிசிலைக் கண்ணுறுங் கொள்கை
தொன்றுபட்டதாற் பிறப்பெலாந் துரிசற வுணர்ந்தேன்

(இ-பு) இவ்வாறு பேரானந்தம் அடைவோமென்று சொல்லி அவ்வர சன்பின்னுஞ்சொல்வான் நான் முன்னாளில் நாயுரு வெடுத்திருந்து இறக் குங்காலத்தில் கொன்றைப்பூமாலையணிந்த அழகிய சடாமகுடத்தையுடை யபரமசிவனைத் தரிசிக்குந் தன்மை முன்னமேகிடைத்ததினால் பிறப்புகளை யெல்லாங் களங்கமற அறிந்தேன்-எ-று. (ருஅ)

வேறு.

பாவை யுலகிற் பதினாலாம் பக்கத்
திரவுதொறுஞ் சிவனை யேத்தி யடிபேணி
யர்வை பிறவி யகற்றுவா யென்று
குரிசின் மொழிந்தான் குலக்கொடியுங் கேட்டே

(இ-பு.) மனைவியே! சிவராத்திரியில் பரமசிவனைத் தரிசித்ததினாலே இப்படிக்கொத்தமேலான பதமடைந்தது ஆதலால் நீயுஞ்சமுத்திரஞ்சூ ழ்ந்தபூலோகத்தில் சிவராத்திரிதோறும் பரமசிவனுடைய திருவடிகளைப் பூசித்துத்தோத்திரஞ்செய்து பிறவியை நீக்கிக்கொள்ளென்று அரசன்சொ ன்னான் அந்தவார்த்தையை அம்மாதுகேட்டு-எ-று. (ருகூ)

நன்று சிவநிசியினன்மையென நவிலா
அன்று முதலானை யாயிழையும் பூசித்தாண்
மன்றல் கமழ்செழுந்தார் மன்னவனு மாதருமாய்ச்
சென்றுபிறப் பேழ்கழியச் சின்மயவீ டெய்தினர்

(இ-பு.)(இப்படியாகத்தன்கணவன்சொல்லியவார்த்தையைக்கேட்ட ஸ்திரீ சஸ்திரீயானவள்) சிவராத்திரியின்பலன் மிகவும் நன்மையானதா யிருக்கிறதென்றுசொல்லி அந்நாள்முதல் அவளும் சிவராத்திரியில்பரமசிவனைப்பூசித்துவந்தாள் (அப்படி பூசித்துக்கொண்டிருந்த) ஏழாம்பிறப்பு நீங்கினவுடன் வாசனைபரிமளிக்காநின்ற பூமாலை யணிந்திருக்கும அந்த ராசனும் அவன மனைவியுமாய் ஒரேதினத்தில் (இவ்வுலகத்தை விட்டுநீங்கி) மோக்ஷத்திற்போய்ச் சேர்ந்தார்கள்-எ-று. (கூ௦)

இத்தகைய வாமேன்றே யிரேழாம் பக்கத்தின்
மெய்த்திறனு மீசன் விளையாட்டின் வித்தகமும்
பத்தி வழியடியார் பான்மையுமற் றுந்தவர்தா
முத்தி பெறும்வழியு மென்றான் முனிவரனே

(இ-ப)பராசர முனியானவர் விமரிசாரசனைப்பார்த்து ராசனே? சிவராத்திரியின் உண்மையான மகத்துவமும் பரமசிவனுடைய திருவிளையாட்டின்மகத்துவமும்பத்திமார்க்கத்தில்செல்லும் அடியார்கள்தன்மையும்அந்த அடியார்கள் மோக்ஷம்பெறுகிற முறைமையும் இத்தன்மையதுகளாமென்று சொன்னார்-எ-று.மற்று-ஆங்கு-அசைநிலை (கூக)

வேறு.

போரிவின் மாமுனிவன் பின்னருநன்றோதினன்
வாரிபுடை சூழுலகின் மன்னுயிர்கள் யாவர்க்கும்
நீரணியும் வேணி நிமலனே தெய்வமும்
ஈரமுற கேளு மிருவர் குரவனுமே

(இ-பு) ஞானவறிவினையுடைய கவுதமரிஷியானவர் இதுவலாமற்சொன்னதுமல்லாமல் மேலும் விளக்கமுறச் சொல்லுகிறார் நாற்புறமுஞ் சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்திலிராநின்ற நிலையாகிய உயிர்களுக் கெல்லாம்கங்கையை அணிந்த சடையையுடைய பரமசிவனேதெய்வமும் அன்புள்ளகுறத்தாரும் அஞ்ஞானத்தைத் நீக்குகின்ற ஞானாசாரியருமவர் -எ-று. ❋ உடல் அநித்தியம் உயிர்நித்தியம் என்னு முறைமையபற்றி மன்னுயிரென்றார், (கூஉ)

எனனு முனமனக்கொண்டீசன் றனைநோக்கி
மனனு மகமுடிப்பார் மந்திரிகள் சிந்திப்பார்

அன்னை யுதரத் தடையார் மறந்துமெ
முன்னை யருமறைகள் யாவு மொழியுமால்

(இ-பு.) என்கிறவார்த்தையை மனதில் நம்பிக்கையாகக்கொண்டு(அந்தன்மையுள்ள)பரமசிவனை கருதித்து அழியாத யாகங்களைச்செய்கின்றவர்களும் மந்திரங்களை யுச்சரிப்பவர்களும் இவ்வுடலைவிட்டுநீங்கினபின்மறந்தும் தாய்வயிற்றிற் கருவாகத் தங்கார்களென்று பழமையாகியவேதங்களெல்லாஞ் சொல்லுகின்றன-எ-று ❋ மறந்துமென்றது பிறவாமையென்கிற துணிவுபற்றியெனக்கொள்க. (கூ௩)

வேத முறைசெய்த விதியேனுங் கைவிட்டுச்
சீத மதிவேணிச் சிவனடியைப் பூசிக்கும்
போதமுடைய புராதனரோ பொய்ப்பிறவி
வாதனையை நீக்கி மறைவீட்டின வைகுவார்

(இபு.) வேதங்களாற் சொல்லப்பட்ட விதிகளேயானாலும் அதுகளைச் செய்யாமல்விட்டொழிந்து குளிர்ச்சிபொருந்திய இளமதியங்களையணிந்த சடாபாரத்தையுடைய பரமசிவனது பாதங்களைப்பூசிக்கும் ஞானத்தையுடையபெரியோர்களே நிலையில்லாத பிறவித் துன்பத்தைநீக்கி வேதங்களிற்சொல்லப்பட்ட (நித்தியமாகிய) மோக்ஷத்தில் எக்காலமும் பொருந்தியிருப்பார்கள்-எ-று. (கூச)

வாழு மனைமேன் மதலையர்மேல் வான்பொருண்மேல்
வீழு மனமவற்றின வீழாது தாளூன்றிச்
தாழு மலர்ச்சடையோன் றாளிணையைப் பற்றுவரோ
யேழு பிறப்பகற்றி மேலும் புணைபெற்றார்

(இ-பு) வாழ்கின்ற மனைவியித்தும் புத்திரர்களிடத்தும் சிறப்புடைய பொருளிடத்தும் விருப்புறுகின்ற மனத்தை அவைகளைவிரும்பாமல் கங்கையை யுடைய பரமசிவன்றிருவடியிற் பிரகாசியாநின்றதொங்கிய சடையையுடைய பரமசிவன்றிருவடிகளைவிரும்பம்பெற்றவரோ ஏழுபிறப்பாகிய சமுத்திரங்களைகடந்து மோக்ஷமாகிய கரையி லேறுகின்றவராவார்கள்-எ-று. (கூரு)

கங்கையணி வேணியான் காமனைறனை வென்றோன்
மங்கையொரு பாகனறனக்குவழி யடியார்
தங்கள்பெருஞ் செல்வமெல்லாந் தாழா தளிப்பானறி
யிங்கமரி வாளா லரிந்துங் கொடுப்பாரோ

(இ-பு.) கங்கையையணிந்த சடையையுடையவரும் மன்மதனைவென்றவரும் பார்வதியையொருபாகத்தில்வைத்தருளியவருமாகிய பரமசிவனுக்குப் பரமபனாயாகிய அடியவர்கள் தங்களுடைய பெரியசெலவங்களை

யெல்லாம் கொடுத்து விடுவார்கள் அதுவுமல்லாமல் தங்கள் சரீரத்தை
ம்வாளால் அரிந்து கொடுப்பார்கள்-எ-று. (௬

வேறு.

கண்ணுதலா ன்யநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபாகனைப் பணியுந்தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங்கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நாவே நன்னாப்
பாவுசரிதை கேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழலினைக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் அடிமைபுகு மடிமையே யடிமை

(இ-பு.) நெற்றிக் கண்களையுடைய பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயங்
களைத்தரிசிக்குங் கண்களே நல்லகண்கள் காளகண்டத்தையுடைய அந்த
பரமசிவன்வீற்றிருக்கும் ஆலயங்களுக்குச் செல்லுகின்ற கால்களே ந
லகால்கள் பார்வதியை யிடப்பாகத்தில் வைத்தருளிய அந்தக்கடவுளை
வணங்குகின்ற தலைகளே நல்லதலைகள் பிஞ்ஞகனென்னு மொருதிருப்பெ
யரையுடைய அந்தக்கடவுளை அருச்சிக்குங் கைகளே நல்லகைகள் அவ
னுடையபுகழைப் பாடுகின்ற நாவேநல்லநா அந்தப் பரமனது சரிதங்களை
ப்பெரியோர்களால் கேட்கப்படுங் காதுகளே நல்ல காதுகள் பெருமை
யிற்சிறந்த அந்தக்கடவுளுடைய பொன் மயமாகிய வீரகழலையணிந்த
திருவடியைத் தியானிக்கும்மனமேநல்லமனம் அவருடைய திருவடி
களுக்கு அடிமையாகிற அடிமைத்திறமேநல்ல அடிமைத்திறம்-எ-று. (௬௭

வேறு.

குணமிலா ராயினுங் குலீன ராயினு
மணமலி கருங்குழன் மகளி ராயினும்
பணமணி யரவரைப் பரம னன்பரே
கணமலி புவியெலாம் பரவுங் காட்சியார்

(இ-பு.) நற்குணமில்லாதவர்களானாலும் நல்ல குலத்தினர்களானாலு
ம் வாசனை பொருந்தியகருமையாகிய அளகபாரத்தையுடைய மாதர்களா
னாலும் மாணிக்கம் பொருந்திய படத்தையுடைய பாம்பினைக்கச்சாகத்
தரித்திருக்கும் அரையினையுடைய பரமசிவனடியார்களே கூட்டமாக
வுள்ள திரிலோகத்தாரும் துதிசெய்யும்படியான பெருமை யுடையவரா
வார்கள்-எ-று. (௬அ

வேறு.

இன்ன தன்மைய தெனவிச னன்பரீர்
அன்ன வாசனனுக்கு மரிவ தன்றெனு

மன்னுமா தவத்தினீர் மனக்கொள் வீரெனப்
பின்னு மோர் பெருங்கதை பேசினனரோ

(இ-பு.) பரமசிவன் அடியார்களது புகழ் இத்தன்மையதெனப் பிரம
தேவனுக்கும் அறியத்தக்க தல்லவென்று அறியாத பெருமைதங்கியதவ
த்தையுடையனைமிசாரணியமுனிவர்களே? அறிந்து கொள்ளுங்களென்று
பின்னும் ஒரு பெரிய சரித்திரத்தைச்சொன்னார்-எ-று. (௬௯)

நான்காவது- சிவராத்திரியில் வியாதிசன்

முத்திபெற்ற அத்தியாயம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஐந்தாவது.

சனிப்பிரதோஷத்தில்சந்திரசேனன்

பூசைசெய்த அத்தியாயம்

அகழணி நாஞ்சில்சூழ் மாய்பொன் மூதெயில்
திகழுமுச் சீனியாஞ் செல்வ மாநகர்க்
கெழ்வருங் குணத்தினு லிறைமை பூண்டுளான்
புகழணி தகைமையான் புலவு வேலினான்

(இ-பு.) அகழியும் அழகியபசுறுப்புகளை யுடையதாய்ச் சூழ்ந்திருக்கும்
நல்ல பொன்னாற்செய்யப்பட்ட பழமையாகியமதிலும் பிரகாசியாநின்ற
செல்வமுள்ள உச்சீனியெனனும் நகரத்துக்கு இகழ்தற்கரிய நற்குணங்க
ளோடு அரசுத்தன்மைகொண்டிருப்பவனும் புகழையே ஆபரணமாகத்த
ரித்துக்கொள்ளும் தகுதியுடையவனும் பகைவருதிரத்தில் தோய்வதற்
கேதுவான வேலாயுதத்தையுடையவனும்-எ-று.* நகரத்துக்கு அரசுத்த
ன்மை கொண்டிருப்பவனென ஒட்டிக்கொள்ளுக பழமையான மதிலெ
ன்றது-இவ்வரசன் காலத்துக்கட்டப்பட்டதல்ல, இவன வம்சத்துக்குமூ
லபுருஷன் காலத்தே கட்டப்பட்டதெனத் தெரிவிக்கின்றது. (௧)

இந்திரன் றிருவென விளக்குஞ் செல்வத்தான்
மந்தர மலையென வளருந் தோளினான்
செந்திரு வனமுலை திளைக்கு மார்பினான்
சந்திர சேனனுந் தரணி மன்னனே

(இ-பு.) தேவேந்திரனுடைய செல்வத்துக்கு ஒப்பானதென்று சொல் த்தக்கதிருந்த செல்வத்தையுடையவனும் மந்தரகிரியைப்போல உயர் தோள்களையுடையவனும் மகாலட்சுமியின் அழகுபொருந்திய தன ம்புணருமார்பையுடைய மகாவிஷ்ணுவை யொத்தவனும் சந்திரசே னென்கிற பெயருடையவனுமாகிய இவ்வுலகத்தையாளும் அரசன் ஒ வனுளன் -எ-று. (௨

மன்னவ னந்நகர் மகா ளேசுவரன்
என்னவா றீசனை யிமயம் பூத்தருள்
கன்னியோர் பாகனைக் கருத்துட் கொண்டிய
பொன்னடி யருச்சனை புரியுங் காலையே

(இ-பு.) இத்தன்மையுள்ள அந்த அரசனானவன் அந்நகரத்தில் மகா ளேசுவரனென்று திருநாமத்தினையுடைய பரமசிவனாகிய மலையரையன் பெற்ற பார்வதியை யிடப்பாகத்திலுடைய கடவுளை மனதிலே தினைத் தியானஞ்செய்து அவருடைய அழகிய திருவடிகளில் பூசைசெய்யு காலத்தில்—எ-று. (௩

தானுவி னேவலிற் றராகைக் கெள்ள
மரணிலா வெனக்கண நாதர் நாயகன்
வேணவா வுளத்தினன் விலங்கற் றோளினன்
மாணிபத் திரனென வழங்கு பேரினன்

(இ-பு.) சிவநேசமிகுந்த மனதையுடையவனும் மலைபோலத் திண் யதோளையுடையவனும் மாணிபத்திரனென்று சொல்லப்படுகின்ற பெ ரையுடையவனும் நக்ஷத்திரங்களுக்கெல்லாம் பூரணசந்திரன் தலைவ யிருப்பதுபோல சிவகணநாதர்களுக்கெல்லாம் தலைவனுமாயிருக் மொருவன் பரமசிவனுடைய கட்டளையினாலே-எ-று. (௪

வந்துசந்திர சேனனை நோக்கி மன்னவனே
யுந்தபூசனைக் கிணையிலாய் நின்னுடை நட்பு
முந்தவேண்டுவ னென்றுதான் வந்தனம் மொழிய
அந்தவேந்தனு மகமகிழ்ந் தவனொடு நட்டான்

(இ-பு.) அவ்விடத்தில்வந்து சந்திரசேனனைப்பார்த்து ராசனே எர் யனுகிய பரமசிவன் பூசையில் ஒப்பில்லாதபத்தியை யுடையவனாகிய உ

னுடைய நட்புகொள்ள விரும்பினேனென்று தாழ்வந்தனைச்சொல்ல அதுகேட்டு அந்தராசனும் அந்தக்கணநாதனுடன் சினேகமானான்-எ-று. (௫)

இன்னவா றிவ ரிருவரு மொழுகுமந் நாளின்
மன்னனன் பினான் மாணிபத் திரனுள மகிழ்ந்து
துன்னுசோதிச் சிந்தாமணிச் சுடர்கெழு மணியை
நின்னதாகெனக் கொடுத்தனன் கொண்டனன் னிருபன்

(இ-பு.) இம்முறைபாக இவ்விருவரும் நடக்கும் நாளில்சந்திரசேன மகாராசனுடைய அன்பினுக்கு மாணிபத்திரன் மனமகிழ்ந்து சூரியனுக்கொப்பாகிய ஒளிபொருந்திய சிந்தாமணியென்கிற ரத்தினத்தை (இது) உனனுடையதாயிருக்கட்டுமென்று கொடுத்தான் அப்படிகொடுத்த மணியைஅந்தராசன் வாங்கிக்கொண்டான்-எ-று. (௬)

அந்தமாமணிப் பெருமையை யளப்பதற் கெளிதோ
சிந்தையாலதை நினைப்பினுஞ் செல்வமே கொடுக்குங்
கந்தநாண்மலர்க் கொப்பூழ்க் கவுத்துவ மணியு
நந்தவாளொளி விடுவது ஞாயிறொத் ததுவே

(இ-பு.) அந்தச்சிந்தாமணியின் பெருமையைநாம் அளவிட்டுச்சொல்லுவதற்கெளிதானதல்ல அதைமனதினால் நினைத்தாலும் செல்வத்தைக் கொடுக்கும் (அன்றியும்) வாசனை பொருந்திய செந்தாமரை மலர்பூத்த நாபியையுடைய திருமாலணிந்திருக்கும் கவுஸ்துபமணியும் கெடும்படி மிகுந்தஒளியை விடுவது (அநந்தங்கோடி) சூரியர்களையொத்தது-எ-று. (௭)

அரிதினுத்தம னளித்தசெம் மணியினை யணியாப்
புரைபடுத்தின னணிதலும் புரவலன் மார்பில்
மரகதக்குல மலையினின் மழகதிர்க் கடவுள்
இரதம்விட்டிழிந் திருந்தென வொளிதயங் கியதே

(இ-பு) உத்தமனாகிய மாணிபத்திரன் அருமையாகக்கொடுத்த சிவந்த நிறமுள்ள சிந்தாமணியைத் துவாரஞ்செய்து சந்திரசேனமகாராசன் தன் மார்பில் ஆபரணமாகத் தரித்துக்கொள்ளவும் உதயகாலசூரியன் தானிருக்குந் தேரைவிட்டிழிந்து நல்ல மரகதமலையினிடத் திருப்பதுபோல ஒளிவிட்டுப்பிரகாசித்தது-எ-று. (௮)

இனையநன்மணி யணிபவ னிறைமக னிருப்ப
வினையுமாமணித் திறனெலா மயலறக் கேட்டு
வினையமெண்ணிய திசைதொறு மேவிய வேந்தர்
புனையும்வேட்கையால் யாவருந் தூதரிற் புகன்றார்

(இ-பு.) இத்தன்மையுள்ள சிந்தாமணி யென்னும் ஆபரணத்தைச் சந்திரசேனமகாராசன் தரித்துக்கொண்டு வாழும் நாளில் அப்படி தரித்துக்கொள்ளப்பட்ட மணியின் பெருமையினை யெல்லாந்தேசங்கள்தோறும் பொருந்திய அரசர்களெல்லாரும் சந்தேகமில்லாமல் கேள்விப்பட்டு அதைத்தாங்கள் தரித்துக்கொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தினால் தூதர் முன்னிலையிற் சொல்லியனுப்பினார்கள்-எ-று. (க)

அன்பின்வேட்டனர் சிலர்சிலர் வினையின்ட யடுபோர்
வன்பில்வேட்டன ரன்னது மனக்கொண்டமறவோ
னெனபுயங்களு மொனனுடை வாங்களு பிறந்து
பின்புகல்குவேன் மணியென வஞ்சினம்பிடித்தான்

(இ-பு.) சிலபேர் சிநேகத்தினால் விரும்பினவர்களாய்க் கேட்டனுப்பினார்கள் சிலபேர் (அரசர்கள் ஒருவரோடொருவர் அடையவேண்டுமென்னும் செய்யுஞ்) செய்கையில் ஒன்றுமில்லாமல் போர்செய்து வலியினால் வாங்கிக்கொள்வதாக விரும்பிச் சொல்லியனுப்பினார்கள் அப்படியவர்களால் சொல்லியனுப்பப்பட்ட தூதர்கள்வந்து சொல்லியதை மனதில் அறிந்துகொண்டு சந்திரசேனமகாராசன் எனபுசபலமும்யான்பெற்ற வாளுமுண்டு அதைப்பின்பு யென்னிடத்திலிருக்கும் சிந்தாமணியைத்தருவேனென்று தூதர்களுக்குச்சொல்லி யனுப்பிவிட்டு தன்மனதில் வைராக்கியங்கொண்டு வனுன் ஏ-அ. பகையில் தாம் வலியனென்று கருதியஅரசர்கள் போர்செய்துவாங்கவினைந்தார்கள் பகையிற் சமானவர்களும் மெலியவர்களுமாயிருப்பவர்கள் நட்பினால்வாங்கக் கருதினார்கள் குறள் - வினைசெயல்வகை. ஒன்றுமோர் யெல்லாம் வினைநன்றே யெல்லாக்காறு செல்லும்வாய்நோக்கிச்செயல், என்பதனாலுமறிக. (உ)

அன்னவாசகங் கேட்டவு மவனிகா வலரின்
மன்னுமாகதாரியர் மாந்திரர் மாடர்
துன்னுகேகயர் சாளுவவங்கியர் மருக்கர்
பின்னுகோசலர் சஞ்சையர் கவுசவா விராட

(இ-பு.) சந்திரசேன மகாராசன் சொல்லி யனுப்பியவார்த்தையைக்கேட்டமாத்திரத்தில் இவ்வுலகத்தை யாளுகின்ற அரசர்களில் பொருந்திய மகததேசத்தாரும் ஆரியதேசத்தாரும் மாத்திரதேசத்தாரும் மாடதேசத்தாரும் நிலைபெற்ற கேகயதேசத்தாரும் சாளுவதேசத்தாரும் அங்கிதேசத்தாரும் மருக்கதேசத்தாரும் பிரகாசிக்கின்ற கோசலதேசத்தாரும் சஞ்சைய தேசத்தாரும் கவுசவதேசத்தாரும் விராடதேசத்தாரும்-எ-று. (௰௩)

(இ-பு.) வேதங்களிலும ஆகமங்களிலும் சொல்லப்பட்ட மந்திரங்களையெல்லாம்குறைவுபடாமற்சொல்லித் தோத்திரஞ்செய்து அருளினால் ஆசாரியர் அனுக்கிரகஞ்செய்த முறைமையின்படி பூசைசெய்து சமுத்திரத்தில் உண்டாகிய விஷந்தங்கிய கண்டத்தையுடையமகாகாளேசுவரனுடைய திருவடிகளைத் தியானித்தான்-எ-று. (௰௪)

இவ்வாறு பூசையிறை வன்புரியுமெல்லைவ
யவ்வால யத்தணுகி பாயர்குல மன்னுஞ்
செவ்வாய் மடக்கிளிப ஞன்றெனவொருவே
மைமவாரணத் துரிவை யானடி வணங்கா

(இ-பு.) சந்திரசேன மகாராசன் இத்தன்மையாகப் பூசை செய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் ஆயர்குலத்திற்பிறந்த சிவந்த வாயையும் அறியாமையும் கிளிமொழியின் (மொழியொத்த இனியமொழியையுமுடைய) ஒருத்தனவன் தன்புத்திரனுடன் அந்த ஆலயத்திற் போயங் கருமையினையுடைய யானைத்தோல் [illegible] போர்வையாகப் போர்த்திருக்கும் மகாகாளேசுவரன் திருவடிகளைவணங்கி-எ-று. (௰௫)

மனையிற் றிரும்பிவர வும்மட னமைந்த
வினைவற்ற தென்னவிடை நீண்முடி மகிபன்
முனைவிற் றெரிப்பலக ளைடதனை முன்றுறு
நினைமுற்று போதுகொடுகாடிவழிபடுவான்

(இ-பு.) தன்வீட்டில் திரும்பிவரவும் (மருதான்) அவள் புத்திரன் நெடியமகுடத்தையுடைய சந்திரசேனமகாராசனை முன்னுள் மாகாளேசுவரனை மனதில் தியானித்துத்தொழுததன்மையைத்தன்மனதில் நினைத்து அரும்புகள்முதிர்ந்த மலர்களைக்கொண்டு முறைமையினோடு பூசைசெய்கின்றவன்-எ-று. (௰௬)

வினையுற்ற மாலினை விளக்குவடி தென்னவிர்
புனையற்ற தெள்ளமுது பொன்னணிகளாவுட
தனையுற்ற பாசனட மணற்கொடுசமைத்தாங்
குனையற்ற பூசனை சமாதிநிலை யுற்றான்

(இ-பு.) பூசாத் திரவியங்க ளெல்லாந் தனக்கு நேரிடாமையால்) மணலையும் அவ்விடத்திலிருக்கும்பச்சிலைகளையும் இதுகள்வாசனைபொருந்தியபூமாலையென்றும் இதுகள் தீபங்களென்று இது வடித்த தெளிவாகியபொருமஞ்சனமென்றும் இது குற்றமற்ற நல்ல அமுதமென்றும் இதுகள் பொன்னாபரணங்களென்றும் இதுகள் வஸ்திரங்களென்று ஏற்படுத் தி

என்றுபேர்பெறு மன்னவர் யாவரு மிகலிக்
கன்றநெஞ்சினர் கடற்படை தன்னொடுங் கடுகி
வென்றுகோடுமுச் சினியை யென்பது விளம்பிச்
சென்றுசூழ்ந்தனர் சூழ்தலுஞ் சந்திர சேனன்

(இ-பு.) என்றுசொல்லப்பட்ட பெயர்பெற்ற அரசர்களெல்லாருமப கொண்டு கோபமுள்ள மனதையுடையவர்களாய்ச் சமுத்திரம்போல அளவிடப்படாத சேனையுடனெழுந்து உச்சினி பட்டணத்தை வென்று நம்முடைய வசப்படுத்திக் கொள்ளுவோமென்று சொல்லிக்கொண்டு அந்தப்பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டார்கள் அப்படி சூழ்ந்தமாத்திரத்தில் சந்திரசேனமகாராசன்-எ-று. (௰௫)

பகைஞர்வந்து தன்பதியினைச் சூழ்ந்தனகேட்டு
மிகையுமெஞ்சினன் வெருவலன் வினைமொன்றெண்ணான்
முகைகொள்கண்ணியுஞ் சந்தனமொய்யொளிக்கலனும்
புகையுந்தீபமுமின்னியும் புனலொடு மேந்தி

(இ-பு.) பகைவர்வந்து தன்னகரத்தைச் சூழ்ந்துகொண்டார்களென்று கேள்விப்பட்டுத் தளராத மனதையுடையவனும் அஞ்சாமலும் வேறொருகாரியஞ்செய்ய எண்ணாமலும் மலரும் பக்குவமுள்ள அரும்புகளால்தொடுக்கப்பட்ட பூமாலையும் சந்தனமும் மிகுந்த ஒளியுள்ள ஆபரணங்களும் தூபமும் தீபமும் அன்னமும் திருமஞ்சனமும் ஏந்திக்கொண்டு-எ-று. (௰௬)

வேறு.

மாகாளமென்றுபேர் பெற்றுயர்ந்த மனைசூழ்
மாகாட்சிச்செல்வனுறைந் திடைவிடா யோகி
போகாந்தமுமுடைய [illegible]
மோகா திக்குலைவு முனிவில்புற மாக்கி

(இ-பு.) மாகாளமென்றபெயருள்ளதாய்ப் பரமசிவன் வீற்றிருக்கின்ற கமுகஞ்சோலைசூழ்ந்த ஆலயத்திற்போய் பரமசிவத்தின் திருவடியில் மனம் அமிழ்ந்ததாகும்படியான நிஷ்டையிலிருந்து இருதயத்திற்பொருந்திய மோகமுதலாகிய பொய்களையெல்லாங்கடிந்து புறமாகநீக்கி-எ-று. ()

மறையாக மங்களிடை மந்திர மனைத்துங்
குறையாமலோதியரு ளின்குரவர் கூறு
முறையாலருச்சனைசெய் தன்மநெறி முந்நீர்க்
கறையார வத்தனடி யைக்கருதி யூனை

கொண்டு சொல்லுக் கடங்காத தன்மையுள்ள பூசைசெய்தலாகிய சிவநிஷ்டையிலிருந்தான் எ-று. (௰௮)

ஐம்புல வழிச்செலு மனத்தையு மடக்கி
நம்புசிவ நிட்டையி லிருக்குமிடமன்னைக்
கும்பமுலை யன்னைமக னின்பசி குறித்தே
யெம்பியனை வாவென வியம்பவு மெழாதே

(இ-பு.) ஐம்புலன் வழியில் செல்லுகின்ற மனதை உள்ளேயடக்கி நம்புகின்ற சிவநிஷ்டையிலிருக்குமிடத்தில் கும்பம் போன்ற தனங்களையுடைய தாயானவள் தன்புத்திரனுடையபசியைக்குறித்துப்போய் அப்பா போசனஞ்செய்ய வீட்டுக்கு வாவென்று அழைக்கவும் அவன் எழுந்திராமல்-எ-று. (௰௯)

ஈன மடிக்கமல மீதுதய வன்னை
பாசமுற [illegible] விருந்தபடியெல்லா
[illegible]
மாசிலுண வுண்பது மறந்ததெதுபோலாம

(இ-பு.) பரமசிவனுடைய திருவடித்தாமரையினிடத்தில் தன் இருதயமாகிய வண்டினை அன்புபொருந்த வைத்து தன் மகனிருக்கும் தன்மைகளையுந்திண்ணத்தில் ஆசைமிகுந்த தாயானவள் அறியாமல் இத்தினையாட்டோன்று உண்டாக நல்லபோசனஞ்செய்வதை மறந்திருப்பதுஎன்ன காரணமோ-எ-று. போலும்-ஆம்-அசை. (௨௰)

என்று வெகுளாமகனை யெற்றினள டார்த்தாள்
வன்றிறலி னுனும் மறுசொன்னென வைத்த
மின்றிகழ் கருஞ்சிலை யெடுத்தகல வீசிக்
கனறிய மனத்தன்மனை யிற்கடிது போனள்

(இ-பு.) இவ்வாறுசொல்லிக்கோபித்துமகனைக்கையால் மோதியடித்தாள் (அதுவுமல்லாமல் சிவபூசையில்) மிகுந்த உறுதிப்பாட்டையுடைய அந்தப்புத்திரன் சிவலிங்கப்பெருமானாகப் பாவனைசெய்துவைத்த ஒளிவிளங்குகின்ற கருங்கல்லையெடுத்துத் தூரத்தில் எறிந்துவிட்டு வெம்மையான மனதையுடையவளாய் தன்வீட்டில் விரைவாகச்சென்றாள் -எ-று. (௨௰௧)

எந்தையை யெடுத்திவ ணகற்றின ளெனத்தன்
சிந்தைமிக நொந்துமுறை யிட்டழுது சேயோன்
வெந்துயர் பெருமலிரு கன்னல்விழி யாறுப்
பொந்திய வுயிர்ப்புமற மூர்ச்சனை யடைந்தான்

(இ-பு). (அவன் எதிர்ந்துவிட்டுப் போனதைப்பார்த்த பரிசுத்தனான அந்தப்புத்திரன்) என்னையுடைய பரமசிவனே யிவ்விடத்திலிருந் தெழுந்தெரிந்துவிட்டானென்று தன்மனமிகவும் வருந்தி முறையிட்டழுது தனக்கு நேரிட்ட துயரத்தைச் சகிக்க மாட்டாமல் இரண்டு நாழிகைவரையில் கண்களைத்திறவாமல் சுவாசமுமில்லாமல் மூர்ச்சையையடைந்தான்-எ-று.

வேறு.

விழித்தனன்விழித்துநோக்கலும்பழமையனையெலாம்வாளிவிளக்கம்
பழித்துநின்றிமைக்கும் புரந்தரன்மயன்பொற்பமுதற்கினிக்குநல்கண்டா
னொழித்தனன்கடித்தவிலிங்கத்திப்பிபாரொளிமணியொண் சுடர்ச்சேரொழித்துநினைந்த தன்மைகண்டுள்ளங் குளிர்தன னதிசயங்கொண்டான் ... ... *

(இ-பு.) அப்படி மூர்ச்சனையாகிப் பின்பு மூர்ச்சைதெளிந்து கண்களைத்திறந்துபார்க்கவே பழையதாயிருந்த வீடுமுழுவதும் நவரத்தினங்கள் ஒளிமிகுந்து மாறாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற தேவேந்திரன் சேர்வில்போன் விளங்குவதைக் கண்டான் பின்னும் தன் தாயானவள் எடுத்தெறிந்துவிட்ட சிவலிங்கமானது திவ்வியமானதாய் ஒளியுள்ளரத்தினம்போலக் கிரணமுள்ள சோதியைக் கொழித்துக்கொண்டு அழியாத தன்மையுடன் இருப்பதைக்கண்டு மனங்குளிர்ந்து அதிசயங்கொண்டான்-எ-று. (௨௩)

தொல்லையம்பிறவிக் கடற்கரையேறத் தொண்டெனு மமபியைகாட்டும்
அல்லணிகண்டன் பூசனைப்பயனே வல்லதுதிருவினைபாட்டோ
முல்லையங்கண்ணி யெங்குலமுதல்வர் முறைசெய்த நல்வினைப்பயனோ
எல்லையிறவத்தோர் தமக்குமெய்தாத தெளியனுக் கெய்தியதென்னே

(இ-பு) பழமையாகிய பிறப்பென்னுஞ் சமுத்திரத்தைக்கடந்து (மோக்ஷமென்னுங் கரையிலேறும்படி) அடிமைத் திறமென்னுங் கப்பலைக்காட்டிய திருநீலகண்டத்தை யுடைய பரமசிவனைப் பூசித்தலால் உண்டாகும் பிரயோசனமோ அல்லது அவருடைய திருவிளையாட்டோ முல்லைப்பூவால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையணிந்தவெங்குலமுதலோர் முறை தவறாமல் செய்த புண்ணியத்தினால் உண்டாகும்பயனோ அளவில்லாத தவத்தையுடையவர்களுக்கும் கிடைப்பதற்கரிய நன்மையனியனுக்குக் கிடைத்தது என்னகாரணம்-எ-று. (௨௪)

சிறியருக்கியல்பு பிழைத்தல் பெரியவர் சிறப்பதென்
றறிஞருக்கியல்பு பொறுப்பதென் றுரைப்ப வதலா லடியனேனன்னை
நெறியிலா திழைத்த சிறியல்பொறுத்தி நிமலனே கருணையங்கடலே
மறுவறுகரத்து வரதனேயென்ன வாழ்த்தினன் மாசிலாத்தவத்தோன்

(இ-பு.) என்று இவ்வாறு துதிசெய்த குற்றமில்லாத தவத்தையுடைய அந்தப் பிள்ளையானவன் (பின்னும்) பிழைசெய்தல் சிறியோர்களுக்கியல்பு சிறியோர்கள் பிழைசெய்த லிவ்வாறுதானென்று பொறுத்துக்கொள்ளுதல் பெரியோர்கள் கடனென்று சொல்லுவார்கள் ஆதலால் அடியேன் தாயானவள் முறைமை யில்லாமல்செய்த குற்றத்தை நீபொறுத்துக்கொண்டருள் நிருமலனே? அழகியகிருபைக்கடலே மான்பொருந்திய கையையுடைய கடவுளேயென்று வாழ்த்தினன்-எ-று. (௨௫)

தன்மனைபுகுந்து தயின்றாற்றுயும் விழித்தலுந் தன்மனையெல்லாம்
பொன்மயமாகக் கண்டுமெய்ப்புளகம் பொங்கிட மகவினைநோக்கி
நன்மகவின்றே னென்றுளங்களித்து நரபதிக் குரைப்பனென் றெல்லை
மன்மனைகுறுகிப் புகுந்தவாறெல்லா மன்னனுக் குரைத்தலுமன்னன்

(இ-பு.) இவ்விடத்தில்இவனிப்படியிருக்கத்தன் மகன்சிவலிங்கமாகப்பாவனைசெய்தானென்று நினைத்து (கருங்கல்லை யெறிந்துவிட்டு) தன்வீட்டிற்போய் நித்திரைசெய்த தாயானவளும் அத்திநித்திரைதெளிந்து பார்த்தமாத்திரத்தில் தன்வீடெல்லாம் பொன்மயமாயிருக்கக்கண்டு சரீரத்தில் புளகமுண்டாகப்புத்திரனைப்பார்த்து நல்லபுத்திரனைப்பெற்றேனென்று மனங்களித்து (இந்தச்செய்தியை ராசனுக்குச் சொல்லுவேனென்று விரைவாக அரண்மனைக்குப்போய்க்கண்டு நடந்தசேதியெல்லாம்சொன்னாள் அதைக்கேட்ட அரசன்-எ-று. (௨௬)

மந்திரவிதியி னமைச்சருமாதி மறைவலாளருப்புடைசூழத்
தந்திரத்தழுவச் சேரிசென்றணுகித் தமனியமனைவனோக்கி
யந்தரத்தகடு கிழியநீள்பசும்பொ னாலயம்வலங்கொடு புகுந்து
சந்திரசேனன் சந்திரமவுலி தாளிணைவிதிமுறைதொழுதான்

(இ-பு.) மந்திராலோசனையின் முறைமையுணர்ந்தமந்திரிகளும் முதன்மையாகிய பிராமணர்களும் புடைசூழ்ந்துவரவும் நால்வகைச்சேனைகளும் பக்கங்களிற்பரவிவரவும் ஆயர்சேரியிற்போய்ச்சேர்ந்து பொன்மயமாய் பிரகாசிக்கின்றவீட்டின் வளப்பத்தைப்பார்த்து அண்டமுகடு கிழியும்படியாக உயர்ந்திராநின்ற ஆலயத்தைப் பிரதக்ஷணஞ்செய்து சன்னிதியிற்போய்ச் சந்திரசேனனென்னும் அந்த அரசன் சந்திர சேகரனாகிய பரமசிவனுடைய திருவடியை முறைப்படி தொழுதான்-எ-று. (௨௭)

வேதமும்வேத விரிஞ்சனுமாதி விண்டுவு மண்டருங்காணா
ஆதியம்பரமனடியவர்க்குருகி யருளினு லடைந்தனனென்னும்
காதலிற்பொருவர் மதலையைத்தழுவிக் காவலன் களிமகிழ்வெய்த
ஓதநீருலவி ஞெலித்தெண்முத்தா ருவகையாலொலி யெடுத்தவே

(இ-பு.) அப்படித்தொழுத அரசன் நான்குவேதங்களும் வேதங்களையு
ர்ந்தபிரமதேவனும் அப்பிரமனுக்கு ஆதியாகிய விஷ்ணுவும் மற்றுமு
ள்ள தேவர்களுங் கண்டறியாத யாவர்க்கு மாதியாகிய பரமசிவன் அடி
ர்க்காகத் திருவுள மிரங்கிக் கிருபையினால் திருக்கோயில் கொண்ட
ந்தாரென்கிற அன்பினால் அந்தஇடைப்பிள்ளையைத்தழுவிக்கொண்டு
ந்தமகிழ்ச்சியை அடைய (அதைக்கண்ட) அந்தப்பழமையாகிய நகரத்
ருக்குண்டாகிய சந்தோஷத்தினால் கோஷித்த ஆரவாரமானது பர்வகா
த்தில் சமுத்திரங் கோஷிப்பதுபோல் இருந்தது-எ-று. (௨

வரதவமதலை பூசனைபுரிந்த வண்மையுந் தன்மதிக்குழவிப்
புரிசடையண்ண லருளினுங்கசிந்த புதுமையும் புரவலன்கண்டு
களையிலாவுவகை யுற்றதுகதிரக் களிப்பதுங் காணவந்தனன்போற்
குணகடனடுவட்கதிர்குலம்பரப்பி யெழுந்தனன்குண திசைவெய்யோ

(இ-பு.) சிரேஷ்டமுள்ள தவத்தையுடைய அந்த [illegible] ஞானவன் பூசை
செய்தவளப்பமும் [illegible] இளமபிறையை அணிந்தகட்
பட்ட சடாமகுடத்தையுடைய பரமசிவன் திருவருளினால் அவ்விடத்தி
திருக்கோயில்கொண்டமர்ந்த அற்புதமும் சந்திரசேனமகாராஜன்கண்
அளவில்லாத சந்தோஷம்அடைந்ததையும் நகரத்தாரெல்லாங்களிப்ப
ந்ததையுங்காணவந்தவன்போல ஒலிக்காநின்ற சமுத்திரத்தி னடுவில்
யிரங் கிரணங்களையும் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் சூரியன்உத
மானான்-எ-று.

மூதெயில்வளைந்த காவலரொற்றர் முழுதுமற்புதமெனவேகித் (௨
[illegible] தமிழ்ச் சடிலவானவனைச் சனிப்பிரதோடத்தி லொருநாள்
காதலேன் [illegible] வழிபடக்கண்ட காளைசெய்பூசனை முதலா
ஆதியெம்பரமன் றோன்றியவளவு மவரவரரசருக் குரைத்தார்

(இ-பு.) பழமையாகிய மதிலைச்சூழ்ந்துகொண்ட அரசர்களுடைய ஒ
றர்களெல்லாம் இது அதிசயமென்று பேசிக்கொண்டுசென்று மகரந்த
துடன்மலர்ந்த கொன்றைப்பூமாலையணிந்த சடாமகுடத்தை யுடைய
மசிவனைச் சனிப்பிரதோஷத்தில் ஒருநாள் கொலைசெய்யத்தக்க வேலா
தத்தையுடைய சந்திரசேனமகாராஜன் பூசைசெய்யக்கண்ட இடைப்பி
ளையானவன்செய்த பூசைமுதலாகஆதியாகியநம்மிறைவன் தரிசனங்கொ
டுத்தவளவும் (வழுவாமல்) அவரவர் அரசர்களுக்குச் சொன்னார்கள்-எ-று

தம்முடிதுளக்கிக் கேட்டவேல்வேந்தர் தனித்தனி துண்ணெனவெருவிக்
கொம்மையங்கொங்கைக் கொடிபுரைநுசுப்பிற் கோகிலமிரங்குதீங்குதலி
யம்மைபங்கரா னடியவனிந்த வரசனை யவமதித்தந்தோ வெம்மையின்
[illegible] மெனத்தளமுலிந்து மேற்செயும் வினையயீதென்னே

(இ-பு.) ஒற்றர்கள்வந்துசொல்லியசேதியைக் கேள்விப்பட்ட வேலேந்
தும்அரசர்கள் (இது ஆச்சரியமான காரியமாயிருக்கிறதென்று) தனித்தனி
யாகத் தங்கள்தங்கள்சிரங்களை அசைத்துநடுக்கமுறப்பயந்து இந்தச்சந்தி
ரசேனமகாராஜன்குவிந்த அழகுள்ள தனபாரத்தையும்பூங்கொடியையொ
த்த இடையினையும் குயிலோசைபோல வசனிக்கும் மதுரமுள்ளமழலைச்
சொல்லையுமுடைய் பார்வதிதேவியை இடப்பாகத்தில்வைத்தருளியபரம
சிவனுடைய மெய்யன்பனாயிருக்கிறான் (இதையறியாமல்) இவனை அவமதி
த்துப் பகைகொண்டுவந்தோமென்று தங்களைத்தாங்கள் வெறுத்துக்கொ
ண்டு இனிநாம்செய்யவேண்டியகாரிய மிதுவென்கிறதாக-எ-று. (௯௧)

கடர்படையனைத்துந் தத்தமூர்க்கேகக் கருமெனப் பிணித்தமரெதிர்த்தா
ரடற்கருஞ்சேனைச் சந்திரசேன னன்பதே யமையுமென்றெண்ணிப்
படைக்கலந்துரந்த கையினராகிப் பதிபுகுந் தரசனைப்பணிந்து
விடர்கருநட்ட [illegible] னரிவனும் விள்ளலாநட்பெதிர்விழைந்தான்

(இ-பு.) சமுத்திரம்போல [illegible] சேனைகளையெல்லா
ம் தங்களூருக்குப்போகும்படி விரைவாகஉத்தரவுசெய்தனுப்பிவிட்டுயா
வராலும் போர்செய்வதற்கரிய சேனைகளையுடைய சந்திரசேனமகாராச
னுடையசிநேகமேநமக்குப்போதுமானதென்று கருதிக்கொண்டு தங்கள்
கைகளிலிருந்த ஆயுதங்களையெல்லாம்நீக்கினவர்களாய்உச்சினி பட்டண
த்திற்போய் அந்த அரசனைக்கண்டுவணங்கி ராசனே? உம்முடைய சிநே
கமெப்போதும் நீங்காமலிருக்கும்படி எங்களுக்குவேண்டுமென்று பிரா
ர்த்தித்தார்கள் அதைக்கேட்ட அவ்வரசனும் (அவர்களைப்பார்த்து) அரச
ர்களே! உங்களுடைய சிநேகமும் என்னிடத்தி லெப்போதும் நீங்காமலி
ருக்கும்படி நானும் விரும்பியிருக்கிறே னென்றான்-எ-று. (௯௨)

மன்னனுநட்பின் மன்னருமேகி மாகாளநாதனை வணங்கிப்
பின்னரோதொறுவன் பூசனைக்கெதிர்ந்த பிஞ்ஞகன் றாளிணைதொழுது
முன்னர்நின் றிறைஞ்சுமதலையைத்தழுவி முகமனாற்கமகிழ்ந்துரையா
இந்நிலத்தாயர் குலங்கட்குநீயே யிறைமகனெனவிசைத்தார்

(இ-பு.) இவ்வாறு சிநேகங்கொண்டபின்பு சந்திரசேனமகாராசனும்-ந
ட்பினராகிய மறுதேசத்தரசர்களும்போய்மாகாளேசுவரனை வணங்கியு
டனே இடைப்பிள்ளைசெய்த பூசைக்காக எழுந்தருளிவீற்றிராநின்ற சிவ
லிங்கமூர்த்தியையும்பணிந்து தங்களெதிரில் நின்றுவணங்கிய அந்தப்பிள்
ளையைத் தழுவிக்கொண்டுமகிழ்ச்சியுடன்நல்ல உபசாரவார்த்தைகள்சொ
ல்லி இந்த உலகத்திலிருக்கும் ஆயர்குலத்துக்கெல்லாம் நீயேயிறைவனாயி
ருக்கக்கடவையென்று சொன்னார்கள்-எ-று. (௯௩).

(வேறு.)

அக்காலை யின்வந்தா னடலடையார் புரநூறப்
புக்கார் கவியிலங்கைப் பதிபுகையத் தழன்மடுத்துக்
கைக்கார் முகநெடியோன் றனக்குதவுழன் றனிற்பொருத்த
மிக்கான் கவிகுலநா யகனனுமா னெனுமேலோன்

(இ-ள்.) இவ்வாறு அரசர்கள் சொன்னபோது பலம்பொருந்திய பகைவராகிய அரசர்களுடைய பதியை அழிக்கும்படிபோய்ச் சமுத்திரத்தினடுவிலிருக்கும் இலங்கையானதுபுகைந்தெரியத்தக்கதாகத்தீமூட்டி க்கையினிடத்துக்கோதண்டத்தையுடைய இராமமூர்த்தியைப்போர்க்களத்தில் கருடனைப்போல வாகனமாய்த்தாங்கி மிகுந்த பராக்கிரமசாலியும் வானரர்களுக்குப் படைத்தலைவனுமாகிய அனுமானென்னும் பெயருடையமேலானவன்-எ-று. (௧௪)

அம்மாருதி வரக்காண்டலு மடிவீழ்ந் தடல்[illegible]
செம்மாந் தலர்[illegible]கள்செய்தே
யெம்மா னிவ[illegible] தவமென்செய் [illegible]
விம்மா வுளங்களித் தார்வமொடிருப்பக் கவிவீரன்

(இ-ப.) அத்தன்மையுள்ள அனுமான் வந்ததைக் கண்டமாத்திரத்தில் பலமுள்ள சந்திரசேனமகாராசன் அவர்பாதத்தில் சேவித்துக்கொண்டு மிகுந்த களிப்படைந்து மேகம்பொழிவதைப்போல மலர்களைச் சொரிந்து பலவகையாகிய ஆராதனைகள்செய்து எம்மிறைவன் இந்நாட்டில் வரும்படிநாங்கள் என்னதவஞ் செய்தோமோவென்று துதிசெய்து மனக்களிப்படைந்து ஆசையுடனிருந்தான் அப்படியிருக்கும்போது அனுமான் எ-று. (௧௫)

கோபாலர் தங்குலச்சே யினைக்குளிர்மார் புறவணைத்தே
பூபாலர்கள் கேண்மினுறு பொருளொன்றையு முணரா
மாபாலனிவ் சிவன்செய்திடு வழிபாட்டினு மகிழ்ந்தே
காபாலிவந் தருள்செய்தமை கண்டீரிவை யெல்லாம்

(இ-பு.) ஆயர்குலப்புத்திரனைக் குளிர்ச்சி பொருந்திய தன்மார்பில் அணைத்துக்கொண்டு அரசர்களே கேளுங்கள் உலகிற்பொருந்திய யாதொருபொருளையும்அறியாத பெருமைப்பொருந்திய இந்தப்புத்திரன்செய்த ஆராதனைக்குத் திருவுள மகிழ்ந்து பரமசிவன் தரிசனந் தந்தருளியதை கண்டீர்களே இவைகளெல்லாம்-எ-று. (௧௬)

இறைச[ந்தி]ர சேனன்புவி யெழும்புக ழுடைவேந்[தே]
அறை[யு]ஞ்சனிவாரப்பிரதோடந்தனி னரனை

மறையின்படி வழிபட்டமை கண்டீங்குள மதலை
பொறையொன்றிய மனத்தாற்புரி பூசாபலம்போலும்

(இ-பு.) ஏழுலகமும் புகழத்தக்கவல்லமையுடையவனுகிய சந்திரசேன மகாராசன் (வேதாகமங்களால்) விசேஷமாகச் சொல்லப்படுகிற சனிப்பிரதோஷத்தில் முறைமைப்படி பரமசிவனைப் பூசித்ததைக்கண்டு இந்தப்புத்திரன் சாந்தந்தங்கிய மனத்துடன்செய்த பூசையின்பலமாகும்-எ-று.

அப்பூசனை கண்டார்பெறும் பேறித்துணை யளவோ
இப்போதிவன் வழியாவரு மெட்டாந்தலை முறையிற்
கைப்போதகமழைக்கும் மழைக்கார்வண்ணனை வளர்[ப்பான்]
மெய்ப்போதத்துநந்தனெனுங் கோன்றோன்றுவன்விளங்க

(இ-பு.) அத்தன்மையுள்ள சனிப்பிரதோஷ பூசையைக்கண்டவர்கள் பெறும்பேறு இவ்வளவினதாகுவதோ? இப்போது பூசைசெய்த இந்தப்புத்திரனுடைய சந்ததியாய்வருகின்ற எட்டாந் தலைமுறையில் (முதலைவாயிற்கைப்பட்டுக்கொண்ட) கஜேந்திரனுக்கு ஒருகாட்டானையானது அழைக்க அதைரக்ஷித்த மேகவண்ணங்கொண்ட மகாவிஷ்ணு (கிருஷ்ணவதாரஞ்செய்வார்) அவரைவளர்க்க உண்மை யறிவையுடைய நந்தனென்கிற ஆயர்கோனொருவன் அந்தக்குலம் விளங்கும்படிதோன்றுவன்-எ-று. (௧௮)

இன்றேமுதல் வேல்வேந்தர்க ளெல்லீருமற் றிவனை
நன்றேதரு புகழச்சீதர னெனவேபெயர் நவில்வீர்
என்றேயட லனுமான்சிவ பூசாபலத் தியல்பை
யன்றேதவ மதலைக்கினி தருள்செய்தனன் போனான்

(இ-பு.) வேலாயுதத்தையுடைய அரசர்களே? நீங்களெல்லாரும் இன்றுமுதல் இந்தப்புத்திரனை நன்மையைத்தருகின்ற புகழினையுடைய சீதரனென்று பெயரிட்டழையுங்க ளென்றுசொல்லி மேலும்பராக்கிரமமுள்ள அனுமான் அப்போதே சிவபூசையின் கிரமத்தை தவத்தையுடைய அந்தப்புத்திரனுக்கு இனிதாக உபதேசித்தருளிப்போனார்-எ-று. (௧௯)

காற்றின்புதல் வன்போயபின் கருதாதமர் சொல்லி
மாற்றஞ்சிய படைமன்னரை வழிக்கொள்ளுநும் பதிக்கென்
றாற்றந்தரு கரிதேர்பல யொண்பூண்டுகி லுதவிப்
போற்றுந் தவக்கோபாலனொ டிருந்தான்புனை தாரான்

(இ-பு.) வாயுதேவன் புத்திரனாகிய அனுமான் போய்விட்டபின் எண்ணாமல் போர்செய்வோமென்று சொல்லிக்கொண்டுவந்து பின்பு சண்டைசெய்யப்பயந்த சேனையுள்ள அரசர்களைப்பார்த்து நீங்கள் உங்களு

ருக்குப்போங்களென்றுசொல்லி வலிபொருந்திய யானைகளுந் தேர்களு ம் குதிரைகளும் ஒளியுள்ள ஆபரணங்களும் வஸ்திரங்களும் வெகுமதியாகக்கொடுத்து அனுப்பிவிட்டுப் பூமாலையணிந்திருக்கும் அவ்வரசன் போற்றுகின்ற தவத்தையுடைய அந்தப்புத்திரனுடன் தன்னகரத்திருந்தான்-எ-று. (௪௰)

நெடுநாளிரு வோருந்திரு நிலமாமகள் போகங்
கடவாதினி தருந்திச்சிவன் கழல்பூசனை புரிந்தே
முடியாவிரு தியினேறினர் முத்திக்கரை யென்றுப்
படுபாதக வினைவென்றவர்க் குரைத்தான்பழந் தவத்தோன்

(இ-பு.) அரசனும் ஆயர்குலப்புத்திரனும் நெடுங்காலவரைக்கும் ஒருநாளாவது முட்டுப்படாமல் இவ்வுலகத்தின்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்து பரமசிவனுடைய திருவடிகளையும் பூசித்து முடிவில்லாத அந்தியத்தில் மோக்ஷமாகிய கரையிலேறினார்களென்று பிறவித்தொடும் பொருந்திய தீவினையைவென்ற நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொன்னார் [illegible]-எ-று. (௪௧)

ஐந்தாவது - சனிப்பிரதோஷத்தில் சந்திரசேனன்
பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று.
ஆக விருத்தம் - உ௱அ௰.

உ

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது.

சத்தியாதனன் பூசைசெய்த அத்தியாயம்

பின்னுநான்மறை முனிவரர் பெருந்தவத் தோனே
முன்னரோதுபிர தோடமும் பூசையின் முறையு
மன்னிநாடோறும் வழிபடு மவர்பெறு வாறும்
இன்னுமெங்களுக் கிருளற வியம்புதி யென்றார்.

(இ-பு.) இவ்வாறு (சூதமுனிவர்சொல்லக்கேட்டு) பின்னரும் நான்கு வேதங்களுமுணர்ந்த நைமிசாரணிய முனிவர்கள் (சூதமகாரிஷியைப்பார்த்து) மிகுந்ததவத்தையுடைய சுவாமிகளே! முன்னஞ்சொல்லிய பிர

தோஷகாலமும் அந்தப்பிரதோஷபூசையின் கிரமமும் இடைவிடாமல் நாள்தோறும் பூசிப்பவர்கள் பெறும்வரமும் இன்னமும் எங்களுக்கு மயக்கந்தீரும்படி சொல்லுமென்றார்கள்-எ-று. (௧)

முந்தைநான்முனி யன்னவை மொழிவலென் றுரைத்தான்
சிந்தைசெய்குதிர் பதின்மூன்றும் பக்கமாந் திவாவின்
அந்தமாகிய மாலையே பிரதோட மாகும்
இந்துசேகரன் விரும்பிய காலமு மிஃதே

(இ-பு.) அவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள் பதின்மூன்றாநாளாகிய திரயோதசி தினத்தில் பகற்பொழுதின் முடிவாகிய மாலைப்பொழுதே பிரதோஷமாம் சந்திரசேகரனாகிய பரமசிவன் விரும்பியகாலமும் அதுவேயாமென்று வேதமுணர்ந்த சூதமகாரிஷியானவர்சொன்னார்-எ-று.

ஆயகாலையி னடையலர் திரிபுர மழலிற்
றீயவிணைக் முகிழ்த்தருள் செம்மலை யல்லான்
மாயனுன்முகன் முதலிய தேவரை வணங்கி
மேயபூசனை புரிபவர் நரகிடை வீழ்வார்

(இ-பு.) அந்தப்பிரதோஷகாலத்தில் தேவர்களுக்குப்பகைவர்களுடைய திரிபுரங்கள் அக்கினியால் வெந்துபோம்படி ஒளிபெருந்திய புன்னகைசெய்தருளிய பரமசிவனைப் பூசிக்காமல் விஷ்ணு பிரமன் முதலாகிய தேவர்களைவணங்கி விரும்பிப்பூஜைசெய்கின்றவர்கள் நரகத்தில் விழுவார்கள்-எ-று. (௨)

சொன்ன காலையி லீசனை வழிபடு தூயோர்
மன்னுமார்க்கட லுடுத்தபார் முழுவதும் வணங்க
முன்னுபோகங்கள் யாவையு முறையினிற் றுய்த்துப்
பின்னர்வீற்றினி திருப்பராற் பேரின்ப வீட்டின்

(இ-பு.) மேற்சொல்லிய பிரதோஷகாலத்தில் பரமசிவனைப் பூசைசெய்கின்ற பரிசுத்தர்கள் அலைபெற்ற பெரியகடல்சூழ்ந்த பூலோகத்திலிருப்பவர்களெல்லாரும் வணங்கும்படி (அரசர்களாய்) நினைக்கின்றபோகங்களை யெல்லாங் கிரமமாக அனுபவித்துப் பின்புமறுபிறப்பில் மோக்ஷவீட்டில் இனிதாக வீற்றிருப்பார்கள்-எ-று. (௩)

அனையகாலையி னருச்சனை புரிந்துவீ டடைந்தார்
எனையரென்றுநீர் வினவுதிரோ லஃதிசைக்கேன்
வினைய வென்மியால் விதப்பதே சாதிபனெழிலார்ந்
றனையொவ் வாதவேள் காமுறுஞ் சத்தியாதனனே

(இ-பு.) அத்தன்மையுள்ள பிரதோஷகாலத்தில் பரமசிவனை அருச்சித்துமோக்ஷம் அடைந்தவர்கள் யாவரென்று நீங்கள் கேட்பீர்களானால்

அனைத்தச் சொல்லுகிறேன் போர்த்தொழில்செய்துபெற்ற வெற்றியையுடையவனும் விதற்ப தேசாதிபதியு மாகிய அழகினால் தனக்கொப்பில்லாத மன்மதனும் இச்சைகொள்ளத்தக்க(சவுந்தரியமுள்ள)சத்தியாதனனென்னும்பெயருள்ள ஒருஅரசன்-எ-று. காமமுறுமென்பது-விகாரவகையான் காமுறுமெனநின்றது. காமம் உறும் எனப்பிரித்துக்கொள்க. ()

அறிவினீதியின் வாய்மையி னமைச்சினி னழகிற்
பிறிதில்கல்வியிற் பெருமையி லிருநிதிப் பெருக்கிற்
செறியுமூதர ணுடைமையின் வீரத்திற் றிறல்வேல்
எறியவுறஞ்சாக் கடற்படை யுடைமையி னிசையின்

(இ-பு.) அறிவினாலும் நீதியினாலும் சத்தியத்தினாலும் ஆலோசனையினாலும் சவுந்தரியத்தினாலும் ஒப்புவேறில்லாத கல்வியினாலும் பெருமையினாலும் பெருமைபொருந்திய பொருள் மிகுதியினாலும் அழியாமல் பழமையாகிய நால்வகை யரண்களை யுடைமையினாலும் வீரத்தினாலும் வெற்றிபொருந்திய வேலாயுதத்தைப்பகைவர்கள் தங்கள்மேலெறிய அதுகள்வந்துபடும் அதற்குப்பயப்படாத சமுத்திரம்போன்ற சேனைகளையுடைமையினாலும்புகழினாலும்-எ-று. நால்வகை அரண்களாவன மதிலரண் அகழரண் மலையரண் காட்டரண் என்பவைகளாம். (சு)

மற்றுமின்னன தருமிறை மாட்சியின் மலிவிற்
சொற்றவேந்தரி னவனியி னிகரிலாக் குரிசில்
பற்றலார்கள்வந் தடிதொழு நானிலம் புரத்தாங்
குற்றநாளினி லவன்பகை யாகிய வரவோர்

(இ-பு.) முன்சொன்னவைகளுமல்லாமல் இவைகள்போல இன்னும் விசேஷமான குணங்களுண்டா யிருக்கும் அரசுக்குரிய பெருமையின் மிகுதியினாலும் செயம்பெற்றிருக்கும் வேந்தர்களுக்குள் இந்த வுலகத்தில் ஒப்பில்லாத அரசன் அத்தன்மையுள்ளவன் பகைமன்னவர்வந்து தன் பாதத்தை வணங்கும்படி தன்னுடையதேசத்தை யாண்டு கொண்டிருக்குநாளில் அவனுடைய பகைவர்களாகிய பலமுள்ளவேந்தர்கள்-எ-று. ()

விண்டலப்புகழ் சாலுவ தேசத்தின் வேந்தர்
கொண்டலன்னதுன் மருடணன் முதலியோர்குழாங்கொண்
டெண்டிசாமுகந் தூளியின் மறைந்திட வெழுந்து
மண்டுதானையாற் சத்தியா தனன்பதி வளைத்தார்

(இ-பு) தேவலோகத்தாரும் புகழத்தக்க பெருமையுள்ள சாலுவதேசத்தரசர்களாகிய மேகத்தையொத்த துன்மருஷணன் முதலானவர்கள் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு அஷ்டதிக்குகளும் தூளியினால் மறையும்படி எதிர்சென்று போர்செய்யத்தக்க நால்வகைச் சேனைகளோடும்புறப்பட்டுச் சத்தியாதனனுடைய நகரத்தை வளைந்துகொண்டார்கள்-எ-று

முகையுடைந்துதார் மதுமழை பிலிற்றிட முல்லை
நகைமடந்தையர் முலைபொரு நலந்திகழ் மார்பன்
பகைஞர்வந்துதன் பதிவளைந் தனரெனப் பகரு
மிகையுடைந்தசொற் கேட்டலு நக்கிவை விளம்பும்

(இ-பு.) அரும்புகள் முறுக்குவிரிந்து தேன்மழை பொழியும்படியாக முல்லையரும்புகளையொத்த பற்களையுடைய மாதர்தனங்கள் பொருந்தத்தக்கபூமாலையணிந்திருக்கும் அழகு விளங்காநின்ற மார்பை யுடைய சத்தியாதன மகாராசன் பகைவர்கள்வந்து தன்னகரத்தை வளைந்து கொண்டார்களென்கிற குற்றம்பொருந்திய சொல்லைக்கேட்டமாத்திரத்தில் நகைத்துக்கொண் டிந்தவார்த்தைகளைச்சொன்னான்-எ-று. (கூ)

மன்றறங்கிய மாலைவேற் றுணைமாற் றரசர்
வென்றியப்புயத் தருக்குமென் றடப்புய விறலு
மின்றுகாண்குவன் கடற்படை யெழுகென வியம்பித்
துன்றுதாரவ னேறினன் சுடர்மணி நெடுந்தேர்

(இ-பு.) வாசனைதங்கிய மாலையணிந்த வேலாயுதத்தை யுடையபகைமன்னவர் வெற்றிபொருந்திய அழகிய புஜவீறுப்பையும் என்னுடையபெரிய புஜபலத்தையும் இன்றறிகிறேனென்று சமுத்திரம்போன்ற சேனைகளைப்புறப்படச்சொல்லி உத்தரவுசெய்து நெருங்கிய பூமாலையணிந்திருக்கும் அந்தராசன் பிரகாசியாநின்ற பெரியதேரிலேறினான்-எ-று. (௰)

இருவர்தம்பெருஞ் சேனையு மேற்றெதி ரிகலிப்
பொருகளந்தனின் விளைந்தபோ ரமலையிற் புழுங்கிக்
கருவழிந்துரு முதிர்ந்தன கார்க்குல மென்றுற்
பாவைமாநிலம் வெருவருந் தன்மையார் பகர்வார்

(இ-பு.) சத்தியாதன மகாராஜன்ரதத்திலேறிக்கொண்டுபோர்க்களத்திற் சென்றவுடன் இருவர்சேனையும் எதிர்த்துப் பகைகொண்டுயுத்தஞ்செய்யும் போர்க்களத்தில் உண்டாகிய பெரிய ஓசையினால் மேகங்களும் பயந்துகருவழிந்து இடிகளைக் கக்கினவென்றால் சமுத்திரத்தினாற் சூழப்பட்ட இவ்வுலகத்தார் பயமுற்றதன்மை (யெப்படிக்கொத்ததென்று)தெரிந்துசொல்லுகின்றவர்கள்யார் (ஒருவருமில்லை)-எ-று. (௰க)

திணைநெடும்படை தீக்கலி னெடுஞ்சுடர் சரிந்து
மணமலிந்ததார் செட்புய மணிக்கரந் துணிந்து

பிணம்விழுந்தவக் களவயிற் றுணங்கைப்பே யுடனக்
கணமெழுந்துநின் றுடின வெண்ணிலாக் கவந்தம்

(இ-பு.) பகைவர் நிணங்கள் பொருந்திய பெரியஆயுதங்கள் படுகிறதி னால் நெடியகுடல்கள்சரிந்து வாசனை தங்கிய மாலையணிந்திருக்கும் சிலதலைகளும் புசங்களும் அழகியகைகளும் அறுபட்டுப் பிணங்கள் விழுந்த அந்தப்போர்க்களத்தில் சந்தோஷித்துக்கொண்டாடுகின்ற பேய்களுடன்அப்பொழுதே அளவில்லாத கவந்தங்களும் எழுந்துநின்றுடின-எ-று. * கவந்தம் என்பது தலையறுந்தஉடல்கள் (ருஉ)

வினையமெண்ணுறு மந்திரத் தலைவரும் விரைத்தார்
புனையுந் திண்புயச் சேனை காவலரும் விண்புகுந்தா
ரினையபூசலிற் றன்மரு டணன்கொல விறந்தான்
வனையும் வார்கழற் சத்தியா தனனெனு மறவோன்

(இ-பு.) இப்படியாக(நடக்கும் போர்க்களத்தில்)நடக்குங்காரியங்களை ஆலோசிக்கத்தக்க மந்திரிகளும் வாசனையுள்ள வெற்றிமாலையணியும் புசங்களையுடை சேனாதிபதிகளும் இறந்துவீரசொர்க்கஞ் சேர்ந்தார்கள்அத்தன்மையுள்ள யுத்தத்தில் நீண்ட வீரகண்டை யணிந்திருக்கும் சத்தியாதனனென்னும் அரசன் துன்மருஷணனாற் கொல்லப்பட்டிறந்தனன் எ-று * யுத்தமுகத்தில் பின்னிடாமல் சண்டைசெய்திருக்கின்றவர்கள் வீரசொர்க்கஞ்சேர்ந்து அங்குள்ளதேவஸ்திரீகளுடன்இன்பம் அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். (ருங)

(வேறு.)

வென்றவேந்தர் தம்மணியை விளித்துமாய்ந்தோன் வியன்பதியை
யின்றுகொண்டுகூட்டுண்மினென்னுமவெஞ்சொற்பொருள்போல
கன்றுசிந்தைக கதிரவனுங் காயுங்கதிரை யறச்சுருக்கிக்
குன்றினின்றுந் தேரோடுங் குடபாற்கடலிற் குப்புற்றான்

(இ-பு.) இவ்வாறு சயம்பெற்ற அரசர்கள் தம்முடையசேனைகளை அழைத்து இறந்துபோன சத்தியாதனனுடைய பெரிய நகரத்தைக் கொள்ளையிடுங்களென்று சொல்லியது கேட்டுச் சகிக்காத மனதையுடையவன் போலச் சூரியதேவன் காய்கின்ற தன்னுடையகிரணங்கள் முழுவதையுஞ் சுருக்கிக்கொண்டு உதயகிரியினின்று தேருடன் மேற்குச்சமுத்திரத்தில் குதித்துவிட்டான்-எ-று, * சூரியதேவன் மேற்குச்சமுத்திரத்தில்குதித்தானென்றதால் பகற்பொழுது போயிற்றென்பது தாற்பரியம் (ருச)

கங்குல்வந்து புகுமளவிற் கருதார்சேனை பதிபுகுத
மங்குபோர்ச்சத் தியாதனன்றன் மனைவிசதியா மடநல்லாள்

அங்கைகொண்டு வயிற்றெற்றி யந்தோவினையே னெனவரற்றிப்
பொங்குமிருளிற் றமியளாய்க் கரந்துகுடபாற் போயினாள்

(இ-பு.) இராத்திரிகாலம் வந்தவளவில் நகரத்தைக் கொள்ளையிடும்படி அந்தச்சேனைகள் பிரவேசித்ததை அறிந்து போரில் இறந்துபோன சத்தியாதனன் மனைவியாகிய சதியென்னும் பெயருள்ள மாதானவள் இரண்டுகைகளினாலுந் தன்வயிற்றி லடித்துக்கொண்டு அய்யோபாவியானேனென்றழுது அந்த இராப்பொழுதில் ஒருவருந் துணையில்லாமல் தனியளா யாருக்குந் தெரியாமல்மேற்குத்திசைநோக்கிப்போய்விட்டாள்-எ-று

(வேறு.)

துன்பத்துணையே யன்றிமற்றோர் துணையொன்றயலிற் காணாதா
ளன்பிற்சேவற் றுணையிழந்த வன்றிற்பெடைபோ லழுதிரங்கி
வனயிற்செலவுங் கருமுதிர்ந்த வருத்தமுறலா னடைமாய்ந்து
முன்புற்றறியா நெடுங்கான வாவிக்கரையை முடுகினாள்

(இ-பு.) மேற்குத்திசைநோக்கிப் போனவள் துன்பமாகியதுணையேயல்லது வேறொருவரைத் துணையாக அயலில்காணாதவளாய் அன்பினையுடைய ஆணன்றிலைப்பிரிந்த பெட்டையன்றில் அழுவதுபோல அழுதிரங்கி நடக்கமாட்டாமல் நடந்துபோகவும் கருப்பமுதிர்ந்த வருத்தத்தையடைவதினால் நடைதள்ளாடிக்கொண்டுபோய்ஒருக்காலும்போய்க்கண்டறியாத பெரியகாட்டிலிருக்கும் ஒருதடாகத்தின் கரையிற்சேர்ந்தாள். எ-று. (ருசூ)

(வேறு.)

நல்வினை தணக்குமாறுந் தீவினை நணுகுமாறு
மொல்லையி னுறவதென்று முணருமென் றறிவிப்பாள்போற்
பல்லியந் துவைக்குமனையில் விழாக்களி பகலிற்றுய்த்தா
ளல்லினிற் றமியளாகி யணங்குறை வனத்தளானாள்

(இ-பு.) நல்வினைப்பயன் நீங்குமுறைமையும் தீவினைப்பயன்வந்து சேருமுறைமையும் விரைவாகப் பொருந்துவதை யென்னால் அறிந்துகொள்ளுங்களென்று தெரிவிக்கின்றவள்போல பலவாத்தியங்கள் சத்திக்கும்படி தன் அந்தப்புரத்தினிடத்தில் நடக்கும் சிறப்புகளைக்கண்டு பகற்பொழுதில் சந்தோஷத்தை யனுபவித்தவள் இராப்பொழுது வந்த போது தனிமையானவளாய் வனதேவதைகள் வாசஞ் செய்யத்தக்க காட்டிலிருப்பவளானாள்-எ-று. (ருஎ)

எற்றிய வருந்தத்தாலுமெழுச்சியி னடையினாலு
முற்றிய கருப்பமேன்மேல் வேதனை முதிர்ந்துகாட்டப்

பெற்றன ளென்பமன்றோ பெரும்பகை யிளைத்துச்செற்ற
கொற்றவர்க் கிடந்துடிப்பக் குமரனைக்கொலைவேற் கண்ணாள்

(இ-பு.) பகைவரைக்கொலைசெய்யத்தக்க வேல்போன்றகண்களையுடைய அந்தாராஜஸ்ரீயானவள் தனியே காட்டிற் போனவுடன் புருஷனிறந்துபோனபோது அடித்துக்கொண்ட வருத்தத்தாலும் வழிநடந்த வருத்தத்தினாலும் முதிர்ந்த கருப்பமானது அதிவேதனையைக்காட்ட பகைகொண்டு போர்செய்துவென்ற அரசர்களுக்கு இடத்தோளும்இடக்கண்ணும் துடிக்கும்படி ஒருபுத்திரனைப்பெற்றாள்-எ-று. (௧௮)

அருநெறி நீந்தலானு மரசனைத் தணத்தலானும்
திருமகன் றன்னையீன்ற வேதனைத் தியக்கத்தானும்
ஒருமக னுண்ணுநீர்வேட் டோடையி னிறங்கலோடுங்
கருநிறக் கொடியமுற்றங் கராமுயிர் கவர்ந்ததன்றே

(இ-பு.) அருமையான வழியைக்கடந்து வந்ததினாலும் தன்கணவனாகிய அரசனையிழந்ததினாலும் சிறந்தபுத்திரனையீன்ற உபத்திரவமுள்ளமயக்கத்தினாலும் ஒப்பற்ற அந்தாராஜஸ்ரீயானவள் நீருண்ணவிரும்பி ஒரு நீரோடையி லிறங்கினமாத்திரத்தில் கரியநிறமுள்ள கொடியதாகிய கோபங்கொண்ட முதலையானது அவளுயிரைவாங்கிக்கொண்டது-எ-று.

உதிரமு நிணமுமுண்ட கராமுலை யுழையிற்போத
அதிர்கடல்வளியாள வவதரித் தானைக்காண்பான்
கதிரவன் றனைபோலக் கதுமெனக் கடலின்வந்தான்
மதலையைப் புரப்பாரின்றி வாய்திறந் தரற்றுங்காலை

(இ-பு.) அவளுடைய உதிரத்தையும் மாமிசத்தையும் முதலையானது சேற்றினிடத்திலேபோக ஒலிக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தையாள்வதற்காகப் பிறந்தபுத்திரனைக் காணஅவன்பிதாவைப்போலச்சூரியன கடலினிடத்தி லுதயஞ்செய்தான் அந்தக்குழந்தையை ஆதரிப்பவர்களில்லாமல் வாய்திறந்தழும்போது-எ-று. (௨௰)

கமையினுள் கைமையுற்றாள் பார்ப்பனி வறுமைபூண்டா
ளமைவுறு கரத்திற்றன்சே யாண்டொன்று புக்கான்றன்னை
சுமையென மருங்குனின்று துவண்டிடக் கையிற்றாங்கி
யுமையெனும் பெயரினாள் வோடையின் றீரமுற்றாள்

(இ-பு.) பொறுமையினையுடையவளும் கைம்பெண் தன்மையடைந்தவளும் தரித்திரமுள்ளவளும் உமையெனும் பெயரையுடையவளுமாகிய ஒரு பிராமணஸ்ரீயானவள் ஆசைபொருந்திய ஒருவருஷத்துக் குழந்தையாகிய தன்புத்திரனை ஒருபளுவைச் சுமப்பதுபோலாக இடையி

னது துவளும்படி கையிலேந்திக்கொண்டு அந்தத்தடாகத்தின் கரையிற் சேர்ந்தாள்-எ-று. (௨௧)

தாயிழந் தாருமின்றித் தரையினிற் கிடந்துசெய்ய
வாய்திறந் தரற்றுகின்ற மதலையை யுற்றுநோக்கிக்
காய்கதிர்க் கடவுள்விம்பங் கடலினின் றுதித்ததேபோ
லேயுமிச் சேயையீன்றாள் யாவளோ வென்றுதேர்வாள்

(இ-பு.) தாயையிழந்து வேறொருவரு மில்லாமல் மண்ணிற்கிடந்து சிவந்தவாயைத்திறந்து அழுகிறகுழந்தையின் சமீபத்திற்போய்ப் பார்த்துச் சூரியதேவன் சமுத்திரத்தினின்றும் உதயமானதுபோலத் தேசுபொருந்திய இந்தக்குழந்தையைப்பெற்றவள் எவளோவென்று யோசிக்கின்றாள்-எ-று. (௨௨)

அரசிளங் குமரனாக வந்தணன் முதலையாக
விருநிலத் திவரேயன்றி யாவரோ பெறுதற்பாலார்
நிரைவளை புனிற்றினுண்மற்றி யாண்டையாய் நின்றாண்மைந்தன்
புரிகொடி நாபியின்னு மறுத்திலாள் புகுந்ததென்னோ

(இ-பு.) (இந்தப்பிள்ளை) இராசகுமாரனாக வேண்டும் அல்லது பிராமணப்பிள்ளையாகவேண்டும் பெரிய இந்தவுலகத்தில் மேற்சொல்லியவர்களல்லாமல் இப்படிக்கொத்த அழகுள்ளபிள்ளையை மற்ற எவர்கள் பெறுந்தன்மையை யுடையவர்கள் இதைப்பெற்றவள் எவ்விடத்திலிருக்கின்றாளோ இந்தக்குழந்தையின் கட்டுப்பட்டிருக்குந் தொப்புள்கொடியை இன்னமும் அறுக்காதவளாயிருந்தாள் மத்தியில் என்னசம்பவித்ததோ-எ-று. (௨௩)

என்னிளங் குழவிக்கின்றோ ரிளவலா யின்பாலூட்டி
மன்னிய காதல்கூர வளர்ப்பனோ வென்னவெண்ணு
மன்னிய வருணத்தானே லந்தணர்க் கடாதேயெனனுந்
தன்னிளங் குமரனோடு தராபதி மகவைப்பார்க்கும்

(இ-பு.) என்னுடைய இளங்குழந்தைக்கு இவன்தம்பியாக இனியபாலூட்டி நிலையான ஆசைமிகுதியாகும்படி வளர்ப்பேனோவென்று எண்ணுவாள் மேற்சொல்லிய இரண்டுவருணமு மில்லாமல் அன்னியகுலத்துப்பிள்ளையானால் பிராமணகுலத்துக்குத் தகாதேயென்றெண்ணுவாள் தன்னுடைய புத்திரனோடு இராசகுமாரனைப் பார்ப்பாள்-எ-று. (௨௪)

இத்திற மையமெய்தி யிடைந்திவ ணிற்கும்வேலை
சத்திரங் கரகங்கொண்டோர் தவமுனி யோடைசார்ந்து

புத்திர சோகமுற்றுப் பொன்னனு ணின்றவாறு
முத்தமக் குமரன்வந்த வரவையு முணர்த்தினேர்ந்தான்

(இ-பு.) இப்படியாகச் சந்தேகத்தைப் பொருந்திய யிவளிவ்விடங்கு நிற்கும்போது ஒருகையில்குடையும் மற்றொருகையில் கமண்டலமுமுடையவராய் ஒருரிஷியானவர் அந்தமடுவினிடத்தில்வந்து புத்திரசோகத்தையடைந்து மகாலட்சுமிபோன்ற அழகுள்ள அந்தப் பிராமணஸ்திரீயானவள் நிற்கும்தன்மையையும் நன்மையுள்ள இராஜகுமாரன் பிறந்தவகையையும் தமது மனதில் ஞானதிஷ்டியினால் அறிந்தார்-எ-று. (௨௫)

வேறு.

ஐய மெய்தி யந்தண மாதுகே
ளுய்ய வோளையிற் றேன்றிய தோன்றலை
மைய லின்றி மருவி வளர்த்திடி
னுய்யு முங்கள் குலமு முலகுமே

(இ-பு.) சந்தேகப்பட்டுக்கொண் டிருக்கும் பிராமணமாதேகேள் நல்ல லக்கினத்தில்பிறந்த இந்தராசபுத்திரனைச் சந்தேகமில்லாமல் விரும்பிவளர்த்தால் உங்கள்குலமும் இந்தவுலகமும் கடைத்தேறும்-எ-று. ()

என்னவச்சமுனி கூறலு மேந்திழை
மன்னு மாநிதி போன்மகவுட
னின்ன நீரவெடுத் துக்கொண் டேகினுள்
மன்னர் மன்னன மகனை மற்றென்பவே

(இ-பு) இப்படியாகவந்த முனிவர் சொல்லலும் அதைக்கேட்ட பிராமண ஸ்திரீயானவள் நிலையானபெரிய நிதியொத்த தன் பிள்ளையுடன் சத்தியாதனன் புத்திரனைத் துன்பந்திரும்படி யெடுத்துக்கொண்டு போனுள்-எ-று. (௨௭)

போதலுற்ற புரிகுழற் பார்ப்பனி
மாகமுட்டிய மாளிகை வான்றலை
மேகமுற்று விழைவுடன் கண்படு
மேகசக்கர மாநக ரெய்தினுள்

(இ-பு) இராஜகுமாரனை யெடுத்துக்கொண்டுபோகின்ற கட்டுப்பட்ட அளகத்தையுடைய பிராமணஸ்திரீயானவள் ஆகாயத்தை யளாவிய மாளிகைகளின் பெரியசிகரங்களில் மேகங்கள்வந்து சந்தோஷத்துடனித்திரைசெய்யும்படியான ஏகசக்கிரமென்னும் பெயராயுடைய நகரத்திற் போனுள்-எ-று. (௨௮)

ஈண்டு நல்குர வாற்பலி யேற்றுண்டு
மாண்ட செல்வ மகவிரு வோரையும்
ஆண்டு நன்சிறப் பால்வளர்த் தாக்கினுள்
பூண்ட வேதமுந் நூலும் புனைவித்தே

(இ-பு.) ஏகசக்கர புரத்துக்குப்போன (அந்தப்பிராமணஸ்திரீயானவள்) பொருந்திய வறுமையினுல் அங்காரத்தில் பிக்ஷையெடுத்துண்டு மாட்சிமைபொருந்திய செல்வம் அடையத்தக்க இரண்டு பிள்ளைகளையும் மிகுந்தசிறப்புடன்வளர்த்து உபநயன கல்லியாணஞ்செய்வித்து விதிகிலக்குகளைச்சொல்லுந் தன்மையுள்ள வேதமு மோதுவித்தார்-எ-று. (௩௧)

மக்க ளோரிரு வோரு மறையவர்
புக்கி றேறுஞ்சென் றேற்றிடும் போனகந்
தக்க தாயுட னுண்டு சதுர்மறை
யொக்க வேதியர் தம்மொடு மோதினுர்

(இ-பு) அந்தப்பிள்ளைக ளிருவர்களும் பிராமணர்கள் வீடுதோறுஞ்சென்று பிக்ஷையெடுத்துக்கொண்டு வருகிற அன்னத்தைக் கற்புள்ள தாயுந் தாங்களுமுண்டு நான்குவேதங்களையும் ஒருங்கே பிராமணப்பிள்ளைகளுடன் அத்தியானஞ் செய்தார்கள்-எ-று. நான்குவேதங்களாவன இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பனவைகளாம். (௩௨)

அரிய வேதமு மங்கமும் விற்படைக்
குரிய கல்வி முதல வுலகினின்
விரியு மெண்ணெண் கலையின் விகற்பமுங்
கரியமாலும் பின்றேனு மெனக் கற்றுர்

(இ-பு.) அருமையாகிய வேதங்களும் ஆறங்கங்களும் வில்லாதியான ஆயுதப்பயிற்சிக்குரிய கல்வியும் இவைமுதலாக உலகத்திற்பரந்த அறுபத்துநாலுகலைகளின் விகற்பங்களும் இராமலட்சுமணர்கள்போலக் கற்றார்கள்-எ-று. வேதாங்கமாவன, மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பனவைகளாம். * அறுபத்துநாறு கலைகளாவன, அக்ஷரலக்ஷணம் லிகிதம் கணிதம் வேதம் புராணம் வியாகரணம் நீதிசாஸ்திரம் சோதிடசாஸ்திரம் தருமசாஸ்திரம் யோகசாஸ்திரம் மந்திரசாஸ்திரம் சகுனசாஸ்திரம் சிற்பசாஸ்திரம் வைத்தியசாஸ்திரம் உருவசாஸ்திரம் இதியாசம் காவியம அலங்காரம் மதுரபாடணம் நாடகம் நிருத்தம் சத்தப்பிரமம் வீணை புல்லாங்குழல் மிருதங்கம் தாளம் அஸ்திரபரிட்சை கனகபரிட்சை இரதபரிட்சை கசபரிட்சை அசுவபரிட்சை இரத்தினபரிட்சை பூமிபரிட்சை சங்கிராமவிலக்கணம் மல்யுத்தம் ஆக்கிருஷணம் உச்சாடனம் வித்துவேஷணம் மதனசாஸ்திரம் மோ

கனம் வசிகரணம் இரசவாதம் காந்தருவவாதம் பைபிலவாதம் சராத்த சவாதம் தாதுவாதம் காருடம் நஷ்டம் முஷ்டி ஆகாயப்பிரவேசம் ஆகாயகமனம் பரகாயப்பிரவேசம் அத்ருசியர் இந்திரசாலம் மகேந்திரசாலம் அக்கினித்தம்பம் சலத்தம்பம் வாயுத்தம்பம் திட்டித்தம்பம் வாக்குத்தம்பம் சுக்கிலத்தம்பம் கன்னத்தம்பம் கட்கத்தம்பம் அவத்தைப்பிரயோகம் என்பவைகளாம். (௬௧)

வேறு.

இவ்வாறுமைந்தர் வளர்கின்றகாலை யிவரோடுமன்னை யுமைபோய்
மைவார்ணத்தி னுரியாளர்கோயில் வழிபாடுசெய்து வருநாட்
சைவாகமத்தி னெறிமுற்றுணர்ந்த சாண்டில்லிய னென்னுமுனிவன்
செவ்வாய்மலர்ந்து வுமையோடுவர்து தெருளத்தெருட்டல் புரிவான்

(இ-பு.) இவ்வாறு அந்த இரண்டு புத்திரர்களும் வளர்கின்றகாலத்தில் இவர்களுடன் தாயாகிய உமையென்பவள் கறுத்த யானைத்தோல்போர்த்த பரமசிவனுடைய ஆலயத்திற்குப்போய் வந்தனைவழிபாடுசெய்துவருகிற நாளில் ஒருநாள் சைவாகமங்களைப் பழுதறவுணர்ந்த சாண்டில்லிய னென்கிற ஒருமுனிவர் மகிழ்ச்சியுடன் உமையென்பவ ளிடத்தில்வந்து அவளுக்குத் தெ ம்படி திருவாய்மலர்ந்து சொல்லுகின்றார்-எ-று.

அந்தோசிவன்றன் விளையாட் யாவு மரியாதிதேவ ரறியார்
மைந்தோரிலிந்த விளையானுனக்கு மகவாகிவந்த செயலை
நந்தாதுரைக்க முடியாததென்று நவிலாமு னங்கைபணியா
முந்தாவெனக்குண் மகிழத்தெரித்தி முறையாயென் மைந்தன்வரவே

(இ-பு.) அதிசயமும் இரக்கமும் உண்டாக முனிவர் சொல்லுகிறதாவது உமையென்பவளே பரமசிவனுடைய திருவிளையாடலையெல்லாம் விஷ்ணுமுதலாகிய தேவர்களு மறியமாட்டார்கள் புத்திரர்களில் இந்த இளையவன் உனக்குப் புத்திரனாகி வந்தசெய்கையை விவரித்துச் சொல்ல முடியாதென்று சொல்வதற்குமுன் அவள்வணங்கிப் பெரியவரே மனமகிழ்ச்சி யுண்டாகும்படி இளையபுத்திர னுற்பத்தியை முறைமையாக எனக்கருளிச்செய்யவேண்டுமென்றாள்-எ-று. * [மைந்தர் எனனுஞ்சொல் ஈண்டு மைந்தோரென நின்றது.] (௬௨)

வேறு.

எனனுமுமைக்கு மாமுனிவ னிசைத்தானிந்த மாமதலை
தன்னையீன்றதாதைபெயர் சத்தியாதனனாந் தார்வேந்தன்
மன்னர்மன்னன் வைதர்ப்ப நாடனவன்போர் மருவலராற்
கன்னியமரி னுயிரிழந்தான் மனைவிசதியுங் கானடைந்தாள்

(இ-பு.) இளையபுத்திரன் உற்பத்தியைச் சொல்லவேண்டுமென்று கேட்ட உமையெனபவளுக்குப் பெருமைபொருந்திய முனிவர் சொல்லுகின்றார் இந்தப்புத்திரனைப்பெற்றதகப்பன்பெயர் சத்தியாதனனென்பதாம் (அவனென்னவருணத்தானென்றால் மாலையணிந்திருக்கும்அரசனுகியக்ஷத்திரியவருணத்தான் அரசர்க்கெல்லாம் அரசனு யிருப்பவன் வைதர்ப்ப தேசத்தையுடையவன் இத்தன்மையுள்ளவன் வலியபோர்செய்கின்ற பகைவரால் அறிவில்லாத யுத்தகளத்தில் உயிர்விட்டிறந்தான் அந்த யறிந்த அவனமனைவியாகிய சதியென்பவள் காட்டிற்போய்விட்டாள்-எ-று.()

அடைந்தவனத்தி னிம்மகவை யரிதினீன்ற வருத்தத்தாற்
குடைந்துநீருண் பருவேட்டு வாவியிடத்திற் குறுகுங்கான்
மிடைந்துவன்மீ னுயிர்கவர வீந்தாள்பாலன் தனித்தழுதா
னுடைந்த குரல்கேட் டுன்மகவா யெடுத்துவளர்த்தா யெனவுரைத்தான்

(இ-பு) அப்படியாகச் சென்றவனத்தில் சதியென்பவள் இந்தப்புத்திரனை யரிதாகப்பெற்ற வருத்தத்தினுல் சரீரத்தைச் சுத்தி செய்து கொண்டு நீருண்ண வேண்டுமென்கிற விருப்பத்தினுல் ஒரு தடாகத்தி லிடத்தில் போனபோது அதிலிருக்குமுதலையானதுவந்து பிடித்துக்கொண்டு விழுங்க உயிரிழந்தாள் பிறந்தபுத்திரன் யாரும் ஆ ல்லாமல்தனியாயழுதுகொண்டிருந்தான் நீ அவனழுங்குரல் ட்டுப் போயெடுத்துவந்து உன்புத்திரனுக வளர்த்தாயென்று சொன்னார்-எ-று. (௬௩)

கேட்டவுமையு மிறும்பூது கிளரவிந்த மகவீன்றோன்
வாட்டமிலனு யரசாட்சி வரும்போகத்தை நுகர்போதிற்
றேட்டுமமரு ளவனுவி யொன்றார் தொலைக்கத்தொலைந்ததுவும்
காட்டினடைந்து மிவன்னை கராவாலிறந்த காரணமும்

(இ-பு.) தன் இளைய புத்திரன் உற்பத்தியைச் சாண்டில்லிய முனிவர் சொல்லக்கேட்ட உமையென்னும் பிராமண ஸ்திரீயானவள் மிகுந்த ஆச்சரியமடைந்து (அந்த முனிவரைப்பார்த்துப் பின்னுங்கேட்கிறாள் ஐயரே) இந்தப்புத்திரனைப் பெற்றவரசன் மனவாட்ட மில்லாதவனுய் அரசாட்சியினுல்வருகிற போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்குங்காலத்தில் கூட்டமாகக்கூடிய போர்க்களத்தில் பகைவர்கள் யுத்தஞ்செய்துகொல்ல அவனுயிரிழந்தகாரணமும் இந்தப்புத்திரனுக்குத் தாயானவள் நம்முடையகணவன் இல்லாத நகரத்திலிருந்தா லேதாவது அபாயம் நேரிடுமென்றுகாட்டிற்சென்றும் முதலையினுல் உயிரிழந்தகாரணமும்-எ-று()

இந்தமகவு மாசுரிமை யெய்துங்கால மென்றெனவு
மந்தமறைபின் சேய்வறுமை யகன்றுவாழ்வ தென்றெனவு

முந்தைவைசன் மறைமுனிவன் மொழியாற்றெளிந்து வளர்த்தேற்குச்
சிந்தைமகிழ வருந்தவனே செப்புகென்றான் செப்புவான்

(இ-பு.) முன்னொருநாள் நான்வனத்திற்குப் போனபோது (இந்த இளைய புத்திரன் சிசுவாயழுதுகொண் டிருக்கக்கண்டு இது யார்பெற்றதோவென்று நான்சந்தேகப்படும்போது) அவ்விடத்தில்வந்த ஒருபிராமணமுனிவர் சொல்லத்தெளிந்து எடுத்துவந்து இந்தக்குழந்தை தனக்குரிய அரசாட்சியை யெக்காலம் அடையுமோ வென்றும் அந்தப் பிராமணப்பிள்ளை தரித்திரம்நீங்கி யெக்காலம் செல்வத்தை யடைவானோவென்றும் எண்ணிக்கொண்டு வளர்த்தவெனக்கு மனமகிழ்ச்சி யுண்டாகும்படி அரியதவமுள்ள முனிவரேசொல்லுமென்றாள் அவருஞ்சொல்லுவாரா-எ-று. ()

காளையிவன்றன் முந்தைமுனங் கழிந்தபவத்திற் கைதவர்கோன்
பாளைவிரிந்து மணங்கமழு மதுராபுரிக்குப் பார்த்திபனாய்
வாளைமுனிந்து நடைசிவந்த வரிக்கண்மடவார் மாரனெனத்
தாளைவணங்கார் முடிவணங்கத் தருமச்செங்கோற் செலுத்தினான்

(இ-பு.) உமையே? நீ கேட்ட இரண்டு காரணமுஞ் சொல்லுகிறேன் கேள் இந்த இளையபுத்திரனுடைய பிதாவானவன் முன்பிறப்பில் பாண்டியராஜன் பாளைவிரிந்து வாசனைவீசும்படியான (வளப்பத்தையுடைய) மதுராபுரிக்கு அரசனாகியும் வாளாயுதத்தைக் கோபித்துக் கடைசிவந்து செவ்வரிபரந்த கண்களையுடைய மாதர்களுக்கு மன்மதனைபோல அழகுள்ளவனாகியும் பகைவர்கள் தங்கள்முடியினால் தன்பாதத்தை வணங்கத்தக்கதாகத் தருமநெறியில் வழுவாமல் செங்கோல்செலுத்திக்கொண் டிருந்தான்-எ-று. (௩௮)

ஈசனெண்ணெண் விளையாட்டு மியற்றினோனங் கயற்கண்ணி
நேசன்றொண்டு பூண்டுசிவ நேசநிசியின் முகந்தோறும்
வாசவன்போல் வழிபட்டு வருபன்னாளி னொருஞான்று
பேசுபதின்மூன் றுந்தினம்வந் தெதிர்ந்ததற்றைப் பிரதோடத்தின்

(இ-பு.) அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளினவரும் மீனாக்ஷியம்மையின் மணவாளருமாகிய சோமசுந்தரக்கடவுளுக்கு அடிமைபூண்டு பரமசிவன் விருப்பமுறத்தக்க பிரதோஷகாலந்தோறும் தேவேந்திரன் பூசைசெய்ததுபோலப் பூசைசெய்துகொண்டு வருகின்ற பலநாள்களில் ஒருநாள் திரயோதசிதினம்வந்தது அந்தத்தினத்தின் பிரதோஷகாலத்தில்-எ-று. (௩௯)

ஆலவாயி னரன்றன்னை யரசன்வழிபட் டலர்தூவும்
வேலைவளவன் முதலபல வேந்தரமர்க்கு மேவினரொன்

றோலையோடு தூதர்வர வுவாநீர்க்கடலி னொலியெழுந்து
ஞாலம்புகழுந் தமிழ்மதுரை நடுங்கவரச னுருத்தெழுந்தான்

(இ-பு.) திருவாலவாயில் வீற்றிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளை இந்தப் பாண்டியராசன் ஆராதனைசெய்து மலரால் அருச்சிக்கும்போது சோழராஜன் முதலாகிய பலதேசத்து மன்னவர்கள் படைகொண்டுபோர்செய்ய வந்தார்களென்று தூதர்கள் ஓலைகொண்டுவர பர்வகாலத்துச்சமுத்திரத்து ஓசையைப்போல ஒருபேரோசை யுண்டாகிப் பூலோகத்தி லுள்ளவர்களெல்லாரும் புகழும்படியான தமிழ்நாட்டிலுள்ள மதுரையிலிருப்பவர்களெல்லாரும் பயந்து நடுங்கவே பாண்டியராசன் கோபித்தெழுந்தான்-எ-று. ஆலவாயென்பது சொக்கநாதர் வீற்றிருக்கும் ஆலயத்தின்பெயர் (௪௦)

கொன்றையங்கண்ணிக் கடவுள்பூசனையு முடித்திலமென்பது குறியான்
கன்றியமனத்தன் சேனைகாவலனைக் கதுமென வம்மின்களென்றுங்குன்
றுறழ்மணித்தேர் பண்ணுதி வலவகொணர்தி நீயென்றென்றுங்கூறிச், செ
ன்றனன்கொழும் பொற்கோயில்வாய்கடந்து வீதிவாய்ச்செல்கின்றவேலை

(இ-பு.) கொன்றைப் பூமாலையணிந்த பரமசிவனுடைய பூசனையை முடித்திலோ மென்பதையுங் கருதாதவனுய்க்கொதிப்புள்ள மனத்துடன் சேனாதிபதிகளைப் பார்த்து நீங்கள் சேனைகளைக் கூட்டிக்கொண்டு விரைவாக வாருங்களென்றும் தேர்ச்சாரதியைப்பார்த்து நீதேரைப்பூட்டிக்கொண்டு வாவென்றும் சொல்லிப் புறப்பட்டுச் செழுமையுள்ள பொன்னாற்செய்யப்பட்டதன் ஆகாரவாசல் கடந்து வீதியினிடத்திற்செல்லும் போது-எ-று. (௪௧)

மந்திரக்கிழவன் மாபெலவேந்தன் வாதனைப்பூசனைபுரிதல், சிந்தையினெண்ணி நாற்படைசூழச் சேனைகாவலனொடுஞ்சென்று, தந்திரமிரியப்பொருது செம்பியனைத் தருக்கறப்பிணித்தனன்கொணர்ந்து, செந்தமிழ்மாறன் றிருமுனம்விடலுஞ் செழியர்கோன் வாளினுற்றடிந்தான்

(இ-பு.) இவ்வரசன் சிவபூசையையும் மத்தியில்நிறுத்திவிட்டு யுத்தஞ்செய்யப்புறப்பட்டது தெரியாமல் அவனுடையமந்திரியானவன் பகைவர் போர்செய்ய வந்திருக்கிறார்களென்பதைக் கேள்விப்பட்டவுடன் இப்போது நம்முடைய ராஜன் சிவபூசை செய்துகொண் டிருப்பதினால் இந்தச் சேதியை அவருக்குத் தெரிவித்தால் சிவபூசைக்கு விக்கினமாகும் ஆதலால் நாமேபோய்ப் போர்செய்து சயம்பெற்று வருவோமென்று மனதிலெண்ணிக்கொண்டு (தேர் யானை குதிரை பதாதி என்கிற) நால்வகைச்சேனைகளுஞ் சூழ்ந்துவரப் படைத்தலைவர்களோடும்போய் எதிரியினுடைய சேனைகளெல்லாம் ஓடும்படிபோர்செய்து சோழராசனை இறுமாப்பு

கெடக் கட்டிக்கொண்டுவந்து செவ்விய தயிமைழவிர்த்திசெய்த பாண்டிய னெதிரில்விட அவ்வரசனைத் தன்வாளினுற்கொன்றான்-எ-று. (சஉ)

அடையலர்ச்செகுத்தசெருக்கினுற்றென்னனுலவாயான்றிருப்பூசை
யிடையினிற்றணந்தே முடித்திலமென்ப தெண்ணிலனெல்லியினயின்
மடைவளஞ்சுரப்பவருந்தினனந்தமடமையான்மறுமையிற்போகங்
கடைசெலவருந்தா திடையிலேயொன்னார் கருவியாற்களத்தினின்மடிந்தான்

(இ-பு.) பகைவனைக்கொன்ற இறுமாப்பினுல் பாண்டியனானவன் திருவாலவாயில் வீற்றிருக்கும் சொக்கனாதர் திருவாராதனையை மத்தியில் நீங்கி நிறைவேற்றவில்லையே யென்பதை நினையாமல் இராப்பொழுதில் அறுசுவையுங்குறைபடாமல் வாய்க்குஇனிமையைத்தரத்தக்கதாக அன்னம் உண்டான் அந்த அறியாமையினுல்மறுபிறப்பில்பூர்ணாயுசுடனிருந்து போகங்களை அனுபவிக்காமல் நடுவது பாதியிலேதானே பகைவருடைய ஆயுதத்தால் போர்க்களத்தில் இறந்தான்-எ-று. (சந)

அன்றுமிக்குமா னந்தவேல்வழுதிக் கரும்பெறற் குமாரனுதித்துத்
தன்றிருத்தாதை செய்கைபோற்றானுந் தரியலர்ச்செகுத்தன னென்னும்
வென்றியிற்களித்துத் தாதையோடயின்று வினையெனுன்றுயில்கொடு
கழித்தான், மென்றுபட்டுளவாந்தீமையாலென்ன வறுமையாந்துயர்க்கடல்
குளித்தான்

(இ-பு.) அந்நாளிலு மிந்தப்புத்திரன் வேலாயுதத்தையுடைய அந்தப் பாண்டியனுக்குப்பெறுதற்கரிய புத்திரனாய்ப்பிறந்துசிறப்புள்ளதன்தகப்பன்செய்கைபோலத் தானும் பகைவனைக்கொன்றேனென்கிறவெற்றியால் மமதையடைந்து சொக்கநாதர்பூசை நிறைவேறாமையால் தீவினைவந்து சம்பவிக்குமென்பதை யெண்ணாமல்தகப்பனுடன் அன்னம்உண்டுநித்திரைசெய்து இராப்பொழுது கழித்தான் இவ்வாறுபழமையாய் வருகின்ற பாவத்தினுல் இத்தன்மையுள்ள தரித்திரமாகிய துக்கசமுத்திரத்தில்முழுகினன்-எ-று. (சச)

மற்றிவன்றாயு மந்தவாள்வழுதி மனைவியாய்வாழுமுற் பவத்தின்
வெற்றிவேன்மன்னன் பன்னியராய வேறுளமடவியர்க்கெல்லாம்
குற்றமேபுரிந்து தீவிடமருத்திக் கொலைபுரிபாவமே யிவளைப்
பெற்றநாளந்த முதலைவாய்ப்படுத்திப் பெய்வளையுயிர்கவர்ந்ததுவே

(இ-பு.) இவ்வாறு துக்கசாகரத்துள் அழுந்திய இவன் தாயானவளும் வாளாயுதமேந்திய அந்தப்பாண்டியராசன் மனைவியாய் வாழ்ந்திருந்தமுன்பிறப்பில் வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடைய அவ்வரசன்மனைவியர்களாகிய மற்றுமுள்ள மாதர்களுக்கெல்லாம் குற்றங்

களையேசெய்து கொடியதாகிய விஷமிட்டுக்கொலைசெய்தபாவமானதே இவளைப்பெற்றநாளில் அந்தமுதலைவாயில் அகப்படச்செய்து அவளுடைய பிராணனைக் கவர்ந்துவிட்டது-எ-று. (சரு)

(வேறு.)

ஆதியம் பரமனை யருளி னுழியை
காதலின் முற்பவம் வழிபடாக் கலா
வேதனை யுறுமையான் மெலிந்து மிப்பவங்
கேதமோ டுடுபவி யெடுப்ப ரின்சொலாய்

(இ-பு.) இனியசொல்லை யுடையவளே ஆதியாகிய பரமசிவனை திருவைக்கடலை முன்பிறப்பில் அன்புடன் பூசைமுற்றச்செய்யாமையால் சம்பவித்த வேதனையைத்தருகின்ற தரித்திரனுல் வருந்தியும் இப்பிறப்பில் துன்பத்துடன் பிச்சையையெடுக்கின்றார்கள்-எ-று. (சசு)

மல்கிய செல்வமும் வளனு மைந்தரும்
பல்கிய கிளைஞரும் பழுக்க வாழுநர்
நல்கிய கிரீசனை நாளு நாடியே
யல்கலிற் பவந்தொறு மருச்சித் தேத்தினார்

(இ-பு.) நிறைந்தசெல்வமும் வளப்பமும் புத்திரர்களும் மிகுந்த சுற்றத்தாரும் செழித்திருக்கும்படி வாழ்கின்றவர்கள் மேற்சொல்லியவைகளை யெல்லாம் அருளிச்செய்கின்ற கயிலாசபதியை நாள்தோறு மனதில் தியானஞ்செய்து குறைவில்லாத சநநங்கள் தோறும் அருச்சனைசெய்து துதிசெய்யப்பெற்றவர்களாவார்-எ-று. (சஎ)

வேறு.

மறையு மங்கமு மாகில் புராணமுஞ்
செறியு மாகம முந்நின்று செப்புமாற்
பொறியி னல்வினை போக்கிமெய் வீட்டின்ப
மறிய நல்கு மரனடி யென்னவே

(இ-பு.) அந்தச்சிவபூசையின் பலனானது ஐம்பொறிகளால் அனுபவிக்கத்தக்க தீவினையைநீக்கி உண்மையாகிய மோக்ஷ இன்பத்தை அறிந்து ஆநந்தம் அடையும்படி பரமசிவனுடைய திருவடியைத் தருமென்று வேதங்களும் குற்றமில்லாத பதினெண்புராணங்களும் பொருந்திய இருபத்தெட்டாகமங்களும் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் நின்றுசொல்லுகின்றன-எ-று. (சஅ)

சொன்ன விப்பர தோடத்திற் கித்துணை
மன்னு மான்மியம் யாதெனின் மாதுகேள்

கன்னல் வேளை யெரித்தநங் கண்ணுத
லின்னதாயர சனிப் ப்ரதோஷத்தினே

(இ-பு.) சொல்லிய இந்தப்பிரதோஷத்துக்கு நிலைபெற்ற இவ்வளவு மகத்துவம் உண்டான தென்னவென்றால் அந்தண மாதேசொல்லுகிறேன் கேள் கரும்புவில்லையுடைய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணையுடைய கம்முடையபரமசிவன் இத்தன்மையுள்ளதாகிய பிரதோஷகாலத்தில் எ-று. (௪௯)

(வேறு.)

விண்டலமளக்கும் வெள்ளிவேதண்டத் தாதிதவிசியநெடுஞ்சிகரத்
தெண்டிசாமுகமு மிருள்கெடவிளக்க வெழுந்தபே ராலயமன்றினாடி
டையாயசிகன்ன டுவந்தெழில்ரிமா ஞசனத்தினிதுவீற் றிருப்பச்சொண்
டமிளிறத்தோன்கொண்டலினுருமிற்குடமுழாக்குடங்கையின்முழக்க*

(இ-பு.) ஆகாயத்தை யளக்கும்படியான கயிலாசகிரியில் விசாலமுள்ளதாய் உயர்ந்திருக்குஞ் சிகரங்களையுடைய அஷ்டதிக்குகளிடத்திலும் இருள்கெடும்படி பிரகாசிக்க ஓங்கிய விசாலமாகிய தம்முடைய ஆலயமகிபசபையில் பார்வதிதேவியார் நோக்கிச் சந்தோஷித்து அழகுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கவும் விஷ்ணு இடிமுழக்கம்போலக் குடமுழாவென்னும் வாத்தியத்தைத் தன்னுடைய உள்ளங் கையினால் முழக்கவும் எ-று. (௫௰)

தும்புருவோடு நாரதர்பாடப் புரந்தரன் சுதியினிற்கூட்டி
அம்புயமடந்தை தோரியவளிதை யாகியே மகாயாழ்தடவ
வம்பணிமுலையிற் கோடுறத்தழுவி மாடகமலர்க்கையான் முறுக்கி
யம்பவளத்தின் வாய்மலர்திறந்து நாமக ளமுதப்பாட்டயர

(இ-பு.) தும்புருநாரதர்கள் இசைபாடவும் அதைத்தேவேந்திரன் சுதியிற்கூட்டவும் திருமகளானவள் ஒத்துப்பாடுகின்ற மகளிர்போல மகாவீணைவாசிக்கவும்சரஸ்வதிகச்சணிந்த தன்னுடைய தனங்களினிடத்தில் வீணைத்தண்டுபொருந்தும்படி சார்த்திக்கொண்டுசெந்தாமரைமலர்போன்ற கையினால்முறுக்காணியைமுறுக்கி அழகியபவளத்தையொத்தவாயைத்திறந்து அமுதம்போல மதுரமுள்ள இசைபாடவும்-எ-று. (௫௧)

அவனியையின்றவிரிஞ்சசோர்பதின்மர்க்காதியாஞ்சதுர்முகவிரிஞ்சன்
புவனிவாழுலகுஞ்செவிசெவிடெறியப்பொற்சாத்தாளத்தைதச்சதியிற்
சிவனுடைநடத்துக்கிசையவேதாக்கத்தேவர்களனைவருமேத்தத்
தவளவெண்ணீற்றோனளவில்பல்கோடிதபனரினுருவெடுத்தாடும்

(இ-பு.) இப்பூலோகத்தைச் சிருட்டித்த பத்துப்பிரமகளுக்கு ஆதியாஞ்சதுர்முகப்பிரமதேவன்பூலோகத்திலுள்ளவர்களுக்கும் தேவலோகத்திலுள்ளவர்களுக்கும் காதுகள்செவிடுபடும்படி அழகியகைத்தாளத்தை தாளக்கிரமப்படி சிவனுடைய நடனத்துக்கு இசைவுபெறத்தாக்கவும் தேவர்களெல்லாருந் துதிசெய்யவும் வெண்மைநிறமுள்ள விபூதியணிந்திருக்கும்பரமசிவன் அளவில்லாத பலகோடிசூரியர்கள் போலத் திருவுருவங்கொண்டு தாண்டவமாடும்-எ-று. (௫௨)

விண்டுவேமுதலாந் தேவர்களெவரும் விதுவுறைசடிலவானவன்றன்
றிணடலினிருத்தங் காணியவேகுந் தன்மையாலன்னவ ரெல்லா
மண்டுநீருலக மாதியஞ்சுடரை வழிபடுபூசனை தமதாய்க்
கொண்டுநின்றுவப்ப ரென்றுநான்மறையுங் கூறுமாகமங்களுங்கூறும்

(இ-பு.) விஷ்ணுமுதலாகியதேவர்களெல்லாரும் சந்திரன்பொருந்திய சடாமகுடத்தையுடைய பரமசிவனது சதானந்த நிருத்தத்தைத் தரிசிக்கச் செல்லுகின்ற தன்மையால் அவர்களெல்லாரும் சமுத்திரஞ் சூழ்ந்த இந்தவுலகத்தில் ஆதியாகிய பரமசிவனை ஆராதனைசெய்யும் பூசனைதங்களுடைய தாகக்கொண்டு எந்நாளும் மகிழ்ச்சி அடைவார்களென்று நான்கு வேதங்களுஞ் சொல்லுகின்றன (அவ்வாறே) இருபத்தெட்டு ஆகமங்களுஞ்சொல்லுகின்றன-எ-று. (௫௩)

அன்றியும்-வாய் நின்வயினுதித்த வரும்பெறற் காளைவேதியன்றன்
சென் றிடு [illegible]மப் பிறப்பின்வேதியருட் செல்வமிக்குடையனுயிருந்து
ம், கன்றியவுலோபஞ் சிந்தையைக்கவற்றக் கைவிரித்தெவரளி[illegible]யும்
நன்றெனவேற்ற வளநிதியோடு நாடொறும் பாவமுமீட்டி

(இ-பு.) இதுவுமல்லாமல் உன்னிடத்திற்பிறந்த இந்தப் பிராமணப் பிள்ளையானவன் முன்பிறப்பில் பிராமணகுலத்தில் மிகுந்தசெல்வமுடையவனாயிருந்தும் கொடிதான லோபகுணமானது தன்மனதைப்பிடிப்பதினால் (தனக்குள்ளதைவைத்துக்கொண்டுண்ணாமல்)எவர்கள்கொடுத்தாலும்கைவிரித்ததைத் தானமாக வாங்கிக்கொள்ளும் பொருளுடனே பாவத்தையும் நாள்தோறும் சேர்த்து-எ-று. * புண்ணியவான்களுடைய சொத்துவாங்கலாம் பாபிகளுடையசொத்து வாங்கலாகாது. (௫௪)

வாழுநாளகத்து ளொருபகலேனும் வறியவர்க் கிட்டுணுதொழிந்த
பீழையால்வறுமைப் பிணிபிடித்திந்தப் பிறப்பினிலின்னண முழன்றான்
போழிளமதிய முடித்தசேகரனைப் பூசனைபுரிவோன் மைந்தர்க்
கூழுறவறுமை பரிதிவானவன்முன் னுள்ளிருட்பிழர்பெனவொழியும்

(இ-பு.) இவ்வாறு வாழுநாளில் தன்வீட்டில் வருகின்ற யாசகருக்கு ஒருநாளாவது பிட்சையிட்டுண்ணாத குற்றத்தினால் வறுமைநோயடைந்து இந்தப் பிறப்பில் இவ்விதமாக வருத்தமடைந்தான் ஒரு கலையாகிய இள

ஞ்சந்திரனையணிந்த திருமுடியையுடைய பரமசிவன் (சனிப்பிரதோஷத்தில்) பூசனைசெய்வார்களானால் இந்தப் புத்திரர்களுக்கு ஊழினால் கேட்டிருக்கிற வறுமைநோயானது சூரியனைக்கண்ட மிகுந்த இருட்கூட்டம் நீங்குவதுபோல நீங்கிவிடும்-எ-று. (௰௫)

இவ்வண்ணமுரைத்தமுனி வான்மொழியை யின்பொடு விருப்புறக்கேட
டாங்,கவ்வண்ணமெல்லா மனக்கொடுமகிழ்வுற் றன்னவள்பின்னருமத்
வெவ்வினையறுத்த முனியுடன்கேட்ட கதையெலாம்விளம்புவனென்று
செவ்வண்ணவேணிச் சூதமாமுனிவ னெருளுறச் செப்பினனன்றே

(இ-பு) இப்படியாகச்சொன்ன முனிவனுடைய வார்த்தையைச் சந்தோஷமும் இன்பமும் உண்டாகக்கேட்டு அம்முறைமைகளையெல்லாம் மனதில் அறிந்துகொண்டு மகிழ்ச்சியடைந்து அந்தப் பிராமணஸ்திரீயானவள் தீவினையொழித்த அந்தமுனிவனிடத்தில் மேலுமேலும் கேட்டகதையெல்லாஞ் சொல்லுகிறேனென்று செம்மைநிறமுள்ள சடையையுடைய சூதமுனிவரானவர் நைமிசாரணிய முனிவர்களுக்குத் தெளிவுண்டாகும்படி சொன்னார்-எ-று. (௰௬)

ஆறாவது.- சத்தியர்தனன்
பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று.
ஆ விருத்தம் - ௯௯௬.

உ

சிவமயம்.

ஏழாவது.

பிரதோஷபூசைமகிமை அத்தியாயம்

மன்னியகற்பி னருந்ததியனைய மடவரலுடையவள் கேட்டுத்
தன்னிருகரமு முச்சிமேற்குவியத் தவமுனிமலரடி தாழ்ந்து
பன்னகாபரணன் பூசனைபுரியும் படியெலா மடியனேனறிய
மின்னருள்புரிந்து வாய்மலர்திறந்து விகழ்த்தெனநெடுந்தவ னுரைத்தான்

(இ-பு.) நிலைபெற்ற கற்பினையுடைய அருந்ததியையொத்த பதிவிரதாபாவத்தினை வரலாறாக உடைய உமையென்னும் பெயருள்ள பிராமணஸ்திரீயானவள் முனிவர் சொல்லியதை யெல்லாங் கேட்டுத் தன்னுடைய இரண்டுகைகளையும் உச்சியின்மேல்குவித்து வைத்துக்கொண்டு நமஸ்கரித்து அந்த முனிவருடைய தாமரை மலர்கள்போன்ற பாதங்களில் சேவித்துப் பரமசிவனுடைய பூசைசெய்யுங் கிரமமெல்லாம் அடியேன் தெரிந்துகொள்ளும்படி கிருபைசெய்து உம்முடைய திருவாய்மலர்ந்துசொல்லுமென்றாள்-எ-று. (௧)

வேறு.

திங்கடோறுங் குறையாது திகழுமிரண்டு பக்கத்துக்
கங்குன்முகங்கள் பன்மூன்றுந் தினத்துவந்த காலமெலாம்
பொங்குந்தூய புனலாடிப் பகற்போதுண்டி பெருந்தாம
லங்கண்மாலைப் போதுவர வலர்கம்பலத்தின் விதானித்தே

(இ-பு.) மாதந்தோறுங் குறையாமல் விளங்குகின்ற இரண்டுபக்ஷத்துப் பதின்மூன்றாந்திதியில் பிரதோஷம்வருகிற காலமெல்லாம்மிகுந்த பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து பகற்பொழுதில் ஆகாரங் கொள்ளாமல் அந்நாளில் மாலைப்பொழுது வருகிறகாலத்தில் பிரகாசிக்கின்ற பலவித சித்திரங்களெழுதிய சிவப்புப்புடைவையினால் மேல் விதானங்கட்டி-எ-று. இரண்டுபக்ஷமாவது பூர்வபக்ஷம் அபரபக்ஷம் என்பவைகளாம் பந்தல்போட்டு அதற்குள் மேல்விதானங் கட்டுகிறது முறைமையாதலால் விதானித்து என்று சுருக்கிச்சொன்னார்-எ-று. (௨)

புனிதமணிமண் டபம்புகுந்து புரிநூற்கும்ப மண்டலங்கண்
முனிவில்விதான முறைபிறழா தியற்றிக்குரவன் மொழிபேணி
நனிசேர்சைவா கமவிதியும் புராணவிதியு நான்மறையி
னினியவிதியு மலைவுபடா தொன்றும்விதியி னியல்போர்ந்து

(இ-பு.) இப்படியாகப் பந்தல்போட்டு மேல் விதானங்கட்டின பரிசுத்தமான அழகிய மண்டபத்தில் பிரவேசித்துக் கும்பங்களுக்குநூல்சுற்றி மண்டலங்கள் குற்றமில்லாத சாத்திரமுறைக்கு மாறுபடாமல் ஏற்படுத்திக் குருசொல்லிய உபதேசமொழியைவிரும்பி சைவாகமவிதியும் புராணவிதியும் இனியதாகியவேதவிதியும் ஒன்றுக்கொன்றுமாறுபாடமல் சரியொத்திருக்குமுறைமையை யுணர்ந்து-எ-று. (௩)

ஐந்துபுலனுமொருவழியே நிறுவிமனத்தி னழுக்ககற்றிச்
சிந்தையாரப் பாவித்து வாயாற்றிருமந் திரஞ்செப்பி
முந்துகரத்தா லலர்முதல வழிபாடொன் முறைமுடித்துக்
க[illegible]லரும் நாற்றமும்போ லபேதமாய் கருத்தினுய்

(இ-பு.) ஐம்புலன்களையொருவழிப்பட நிறுத்திக்காமவெகுளியை நீக்கிச்சித்தத்திற்பொருந்தப்பாவித்து வாயினால்பஞ்சாக்ஷரத்தைச்சொல்லி

முந்தியவைகளினால் மலர்கள்முதலாகிய சோடசோபசாரபூசைசெய்
வும் அதன்வாசனையும் பேதமில்லாமலிருப்பதுபோல பேதப்படாத்
தன்மையுடையவனும்-எ-று.

வெற்புக்கரையன் திருமயிலை மின்னிற்பொலியு மேனியளை
யற்பமருங்கிற் கிடர்செய்யு மணிபூத்திருக்கு முலையாளை
கற்புக்கரசி தனைச்சந்திர கலையார்மேகக் கருங்குழலைப்
பொற்புக்கழகு தரும்வதனப் பொலம்பூங்கொம்பிற் பொலிவாளை

(இ-பு.) மலையரையன் புத்திரியாய் மயில்போலச் சாயலையும்மின்னைப்போலப் பிரகாசிக்குந் திருமேனியையும் சிறியமருங்குலுக்குத்துன்பஞ் செய்யத்தக்கதாய் அழகுகொண்டிருக்குந் தனங்களையும் பதிவிரதாதருமத்துக்கு அரசியென்று சொல்லத்தக்கதன்மையும் சந்திரகலையென்னும் ஒருவிதஆபரணந்தங்கிய கரியஅளகத்தையும் அழகுக்கு அழகினைத்தருவதாகிய திருமுகத்தையுமுடைய பொன் கொம்புபோல விளக்கும்பார்வதிதேவியாரை-எ-று.

வாமபாகத் தருமித்துவழிபட்டேத்தி மணித்தவிசிற்
காமனுக மடலைசெய்த கனைவிழந்த கட்கரும்பைப்
பூமனார் தஞ்சிரங்கழுழுப்புலவைவொழிப்பப்பொற்கொன்றைத்
தாமமாற்றத் திசைகமழு மணிமா புடைய தனிப்பொருளை

(இ-பு.) இரத்தினங்கள் பதித்த ஆசனத்தில் பரமசிவனுடைய இடப்பாகத்தில் எழுந்தருளப்பண்ணி அருச்சனையுடன் ஆராதனை செய்து மன்மதனுடைய சரீரத்தை நீறுசெய்த நெருப்பையுடைய நெற்றிக்கண்ணையுடையவராய் அடியார்களுக்குக் கரும்பு போலிருக்கும் கடவுளைப் பிரமதேவனுடைய தலையினின்றும் நாறுகின்ற புலால் நாற்றத்தை நீக்கப்பொன்னிறமுள்ள கொன்றைப் பூமாலையின் வாசனையானது அஷ்டதிசைகளுக்கும் பரிமளிக்கும்படி அணிந்திருக்கும் அழகிய மார்பையுடைய ஒப்பற்ற பரம் பொருளை-எ-று.

வெள்ளிமலையின் மாணிக்க வெற்புவருதல் போல்விளங்கும்
பள்ளியரக மால்விடையிற் பவனிபோதம் பாஞ்சுடரைத்
தள்ளிமறியோர் டிகவியலை ததும்புங்கங்கைச் சடையானைப்
புள்ளியிளமான் கன்றுகளும் புண்டரீகக் கரத்தானை

(இ-பு.) வெள்ளிமலையின்மேல் மாணிக்க மலைவருவதுபோல விளங்குகின்ற சர்ப்பசயனத்தில் பள்ளிகொள்ளும் விஷ்ணுவாகிய ரிஷபவாகனத்தில் பவனிசெல்லுகின்ற பாஞ்சுடரும் சந்திரனுடன் பகைத்துத் துள்ளி அலைகள் ததும்பிக்கொண்டிருக்குங் கங்கையை அணிந்த சடையையுடைய வரும் இளமையாகிய புள்ளி மான் கன்று விளங்கிக் கொண்டிருக்கும் செந்தாமரைமலர்போன்ற திருக்கரங்களையுடையவரும்-எ-று. (எ)

தாங்குமலைநீர் வாரிதியு மலையுநிலனு மற்றெவையுந்
தாங்குபுயங்க நூபுரத்தின் மறைநின்றிரைக்குந் தாளானை
வீங்குபுனரி யாலால விடமுண்டிருண்ட களத்தானை
யோங்குசிகைமுத் தீயென்ன வொளிருங்கழுமுட் படையானை

(இ-பு.) உலகத்தைச் சூழ்ந்திருக்கும் அலைநீரையுடைய சமுத்திரத்தையும் மலைகளையும் பூமியையும் மற்றுமுள்ள எல்லாவற்றையும் தாங்குகின்ற ஆதிசேஷனுடன் வேதமாகிய சிலம்புகள் சத்தித்துக்கொண்டிருக்குந் திருவடிகளையுடையவரும் நீர்மிகுந்த சமுத்திரத்தில் உண்டாகியஆலகாலவிஷத்தைஉண்டு கறுத்தகழுத்தினையுடையவரும் ஓங்குகின்ற சிகையினையுடைய முத்தீபோலஒளிருகின்ற சூலாயுதத்தையுடையவருமாகிய பரமசிவனை-எ-று. (அ)

அன்பினிருத்திச் சிவாகமத்தி னமைவிற்கருப்பூரத்தீப
மின்பநிறைக்கு நறுந்தூப மியாவுங்குறையா தினிதமைத்து
நன்பொன்மலர்த்தார் முடித்தசடை நாதன்றுணைத்தாள் வழிபட்டாற்
றுன்பமில்லை யார்மாட்டு மென்றுசுருதி முறையிடுமே

(இ-பு.) அன்புடன் ஆசனத்தி லெழுந்தருளப்பண்ணிச் சிவாகமத்திற் சொல்லியிருக்கு முறைமைப்படி கர்ப்பூரதீபமும் நல்லவாசனையைத்தருகின்ற தூபமும் மற்ற எல்லா வுபசாரமுங் குறைவுபடாமல் இனிதாகச் செய்து நல்ல பொன்னிறமுள்ள கொன்றைப் பூமாலையை அணிந்த சடையையுடையபரமசிவன் இரண்டுதிருவடிகளையும் ஆராதித்தால் யாவரிடத்திலுந் துன்பமில்லையென்று வேதங்கள் முறையிடுகின்றன-எ-று. (கூ)

(வேறு).

இத்திற மிருவரு மியற்றுவா ரெனிற்
கொத்திணை ரிதழியான் கொண்டிபூண்டிடும்
பத்தியின் முன்னவன் வறுமை பாழ்படுஞ்
சத்திரத் திளவலுந் தாரணி காக்குமோ

(இ-பு.) இப்படியாக இந்த இரண்டுபேரும்பிரதோஷகாலத்திற்பூசை செய்வார்களானால் கொத்தாகிய கொன்றைப்பூமாலையணிந்த கயிலாசபதியின் அடிமைத்திறம்பொருந்திய பத்தியினாலே மூத்தவனுடைய தரித்திரமானதுபாழ்பட்டுப்போம் இளையவன் அரசனாகி ஒருகுடையின் கீழிருந்து பூலோகத்தைக்காப்பன்-எ-று. (௰)

(வேறு.)

என்று முன்ன மெழுந் திறைஞ்சினர்
மூன்று முன்னிய வேதை முற்புற
அன்று நின் னடியே மருந்தய
ருன்று லேகடவுய்ந்து வாழ்ந்தனம்

(இ-பு.) இவ்வாறு முனிவர்சொல்வதற்கு முன் அவர்களெழுந்துவணங்கினவர்களாய் எங்களுக்குத் தாயையொத்த மகானுபாவரே உம்மால் நாங்கள் முன்னாலே கருதிய மகிழ்ச்சிபொருந்தவும் அருமையாகிய துயமானதொழிந்து போகவும் நிதினியினாறும் பிழைத்து வாழ்வை யடைந்தோம்-எ-று. (௰௧)

என்று நன்பி னிறங்கி மாமுனி
நன்று கென்று நயந்து மைந்தர்பாற்
றன்று ணெஞ்சுக ஞூச்சி சாத்தியே
குன்று மந்திர மூலங் கூறினன்

(இ-பு) அன்புடனே இவ்வாறு சொன்னார்கள் அதைக்கேட்ட முனிவரானவர் இருபைவைத்து உங்களுக்கு நன்மையுண்டாகக் கடவதென்று ஆசிர்வதித்து அந்தப்புத்திரர்களுடைய சிரசிலும் நேத்திரங்களிலும் இருதயத்திலும் தம்முடைய பாதத்தை வைத்து அறிவுபடாத மூலமந்திரத்தை உபதேசித்தார்-எ-று. (௰௨)

கேட்டார் வல்வினை வேரோடே கெட
ஊட்டா நல்வினை மேது மோங்கிடச்
சேட்டார் மைந்தர்க டேசிகன் பதஞ்
சூட்டா நின்றனர் பின்னுஞ் சொல்லுவான்

(இ-பு.) அவ்வாறு முனிவருபதேசித்த மந்திரத்தைவலிய தீவினைகள் ஆணவமலத்துடன் கெடவும் ஆகாமிய மேறச்செய்யாத நல்வினை மேன்மேலும் விர்த்தியாகவும் கேட்டுக்கொண்டு இளமைப் பருவத்தையுடைய அந்தப்புத்திரர்கள் ஆசாரியராகிய முனிவருடைய பாதங்களைத்தொழுதார்கள் (அவர்கள்தொழுதவுடன்) முனிவர்பின்னுஞ் சொல்லுகின்றனர்-எ-று. (௰௩)

வேறு.

வல்லமறையோன் மதலைசுசி விரதன்றனவு மணிவயிரக்
கல்லிற்றிரடோ ளாகிளங்கோக் கடளைதரும குத்தனென்வுஞ்
சொல்லக்கடவ துலகமெனச் சொல்லி முகமன் பலபயிற்றிச்
செல்லறவீர்த்து மகிழ்வோடிங் குமரர்தம்மைச் செல்கென்றான்

(இ-பு.) வல்லமையையுடைய பிராமணபுத்திரனைச் சுசிவிரதனெனவும் அழகிய வயிரக் கல்லைப்போலப் பலமுள்ளதாய்த் திரண்ட தோளையும் இளமைப்பருவத்தையு முடையராசகுமாரனைத் தருமகுத்தனென்றும் உலகத்தார் சொல்லக் கடவதென்று பெயர்கூறி அன்றியும் உபசாரவார்த்தைகள் பலவாகச் சொல்லித் துன்பத்தைநீக்கி மகிழ்ச்சியுடன் அவ்விரண்டுபுத்திரர்களையும் போங்களென்று உத்தரவுகொடுத்தார்-எ-று. தருமகுத்தன் என்பதற்குத் தருமத்தைப் பாதுகாப்பவன் எனப் பொருள்கொள்க (௰௪)

வேதமுனிவன் விடைகொடுப்ப விளங்குகுமர ரிருவோரும்
போதமுறுதம் தாயருடன் மனையிற்புகுந்து புரமெரித்த
நாதனறன்னை நிசிமுகத்தி னாளுநாளும் விசேடிதமாய்ப்
பாதகமலந் தொழுதேத்தி வழிபாடனைத்தும் பண்ணியே

(இ-பு.) வேதங்களுணர்ந்த முனிவரானவர் உத்தரவுகொடுப்ப விளங்குகின்ற இரண்டு புத்திரர்களும் தெளிவுபெற்ற தாயாருடன் வீட்டில் வந்து திரிபுரதகனஞ்செய்த பரமசிவனைப் பிரதோஷகாலத்தில் நாளுக்குநாள் விசேஷமாய்ச் சோடசோப சாரத்துடன் பூசைசெய்து பரமசிவனுடைய திருவடித்தாமரைகளைவணங்கி-எ-று. (௰௫)

இங்கனொருநாள் இவ்வாறு செல்லச்செல்வ ரிருவோரிற்
பொங்குபுரிநூற் சுசிவிரதன் புனிதநதியிற் புனலாட
அங்கணொருசா ரோருதலுந்தெண்ணவீர்பொருத வகன்கரைவாய்க்
கொங்கைக்குவமை சான்றதொரு குடத்தினிதியங் கண்ணுற்றான்

(இ-பு.) இவ்வாறு நாலுமாதஞ்செல்ல அந்தப்புத்திரர்களிருவரில் பூணுநூல்விளங்கு மார்பினையுடையசுசிவிரதன் அவ்விடத்தில் ஒருபுறத்திலுள்ள பரிசுத்தமான நதியில் ஸ்நாநமாடச் சென்றான் அப்படிசெல்லவும் தெளிந்த அலைநீர் மோதுகின்ற கலையிணிடத்தில் மாதர்கள் கொங்கைக்கு ஒப்புள்ளதான ஒருகுடத்தில் திரவியமிருக்கக்கண்டான்-எ-று. (௰௬)

ஓகையொடுநான்மறைவல்லோ [illegible]உற்றபொருள்கண் ணுற்றிடலும்
பாகைவிரவு மொழியுடையாள் [illegible]நாதனபூசைப்பலனென்றே
தோகைபாகன் புகழ்பாடித் தே[illegible]விற்கு மக்குங் குடநிறைந்த
நகையோடு மனையகத்தி லெய்[illegible]த்தாயர்க் கிதுசொன்னான்

(இ-பு.) தான்கண்டறியாத தி[illegible]வியத்தைக்கண்டவளவில் பிராமணப்பிள்ளையானவன் சந்தோஷித்து[illegible]ன் வெல்லப்பாகினை யொத்த மதுர வசனமுள்ளபார்வதிதேவியாரை யி[illegible]டப்பாகத்திலுடைய பரமசிவனைப் பூசித்தலால் கிடைத்தபலனிதுவெ[illegible] அவருடைய புகழை யெடுத்துப்பா

டித் தோத்திரஞ் செய்து பொன்விளைந்த அந்தக் குடத்தை யெடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு வீட்டில்வந்து தாயாருக்கு இந்தவார்த்தை யைச்சொன்னான்-எ-று. (௰௭)

அன்பர்க்கெளியன் வெள்ளிமலையமர்ந்தமுதல்வனருள்போலி
யின்புற்றியற்றும் பூசனையி னெய்தபயன்கா ளிதுவென
துன்பக்கடலி னழுந்துமுமை தூயபுதல்வன் சொற்கேளா
என்புற்றுருகி யகங்குளிர்ந்தந் நிளையான்முகம்பார்த் திதுசொல்வாள்

(இ-பு.) அன்பர்க்கெளியவரும் வெள்ளிமலையில் வீற்றிருப்பவருமாகி ய பரமசிவனுடைய திருவருளைவிரும்பி இன்பம்பொருந்திச் செய்யும் பூசனையினால் அடையும்பலன் இதுவென்று பரிசுத்தனாகிய தன்புத்திரன் சொல்லியவார்த்தையைக்கேட்டு மூன்துக்கசாகரத்தில் அழுந்திய உமை யென்னும் பெயரையுடைய தாயானவள் எலும்பு நெக்குவிட்டுருகி மன மகிழ்ச்சியடைந்து அந்த இளையபுத்திரன் முகத்தைப்பார்த்து இந்த வச னஞ் சொல்லுகிறாள்-எ-று. (௰அ)

மைந்தர்நீங்க ளிருவிரு மாசறுபவித்து கொண்டிவ்வா
கந்துங்கழையும் பொருங்களிற்றுங் கழற்கால்வேந்தன் றிருப்புதல்வன்
அந்திவண்ண னளித்ததி தவற்கேயீந்தக்கு மவனளிக்கும்
புந்தியவலு மொழிகென்னத் தாயர்க்கெழுந்து புகன்றனனே

(இ-பு.) புத்திரர்களே நீங்களிருவரும் இந்தத்திரவியத்தைப் பங்கிட் டுக்கொள்ளுங்களென்றுசொல்ல, கட்டுத்தறியையும் குத்துக்கோலையும் மு றிக்கத்தக்க யானைகளை யுடைய வீரகண்டை கட்டிய காலினனுகிய ராச புத்திரன்சொல்லுகிறான் தாயே இதுபரமசிவன் என்தமையனுக்கு அரு ளிச்செய்ததாகையால் அவருக்கே யுரியதாம் எனக்கும் அந்தக்கடவுள்கி ருபைசெய்வார் உன்மனதிலிருக்குந்துயரத்தை நீங்கென்று தாயை வண ங்கிச்சொன்னான்-எ-று. (௰௯)

வேறு.

மற்றவன் கூறிய வண்ணம் மைந்தருஞ்
செற்றமி லன்னையுஞ் செல்வ மோங்கவே
யுற்றநல் குரவினை யொழிந்து செல்குநாட்
கொற்றவன் காதலன் கொள்கை கூறுவாம்

(இ-பு.) ராஜகுமாரன் சொல்லிய பிரகாரமே குற்றமில்லாத தாயும்பு த்திரர்களும் நெடுநாளாகப் பொருந்தியதரித்திரத்தை யொழிந்து செ ல்வம் அதிகரிக்க வாழும்நாளில் அந்தராஜகுமாரனுடைய செய்கையை ச் சொல்லுகிறோம்-எ-று. (உ0)

ஐம்புல னொருவழி யடக்கி யாறணி
பைம்பொனு றிதழியம் படலை வேணியான்
வம்பறு மலரடி வணங்கி யேத்தலும்
இம்பரிற் றிங்களா றிரண்டு சென்றவே

(இ-பு.) பஞ்சேந்திரியங்களையும் ஒருவழியில் அடக்கிக்கங்கா நதியை யும் மாற்றுயர்ந்த பொன்னிறமுள்ள கொன்றைப்பூமாலையையும் அணிந் த சடையினையுடைய பரமசிவனது வாசனைநீங்காத திருவடித்தாமரைக ளை இவ்வுலகில் வணங்கித் துதிசெய்துகொண்டு வருகையில் பன்னிர ண்டு மாதஞ்சென்றன-எ-று. (உக)

அன்னது நிகழவோ ராழி மேயதேர்
மன்னவன் வடதிசை வழிக்கொண் டேகுநாட்
சன்னலஞ் சிலைமதன் விழவு காணிய
வின்னிள வேனில்வந் திறுத்த தென்பவே

(இ-பு.) அத்தன்மையாகப் பன்னிரண்டுமாதம் அவன் பூசைசெய்து கொண்டிருக்க ஒருவண்டில்பூண்டதேரையுடைய சூரியன்வடதிசையை நோக்கிச் செல்லுநாளாகிய உத்தராயணத்தில் கரும்புவில்லையுடைய ம ன்மதனுக்குரிய திருவிழாவைக்காண இனியதாகிய இளவேனிற்காலம்வ ந்தடைந்தது என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்-எ-று. இளவேனிற் காலமாவது சித்திரை வைகாசிமாதம். (உஉ)

நறுமலர்ப் பாடலந் துணர்த்த நாகங்கள்
குறுமுகை வெண்மலர் கொழித்த கோங்கினந்
துறுமலர் பொதுளிப்பொன் னணிந்து தோன்றின
வெறிமலர்க் காஞ்சிப்பூப் பரந்த வீறினே

(இ-பு.) இளவேனிற் காலம் வந்தபோது வாசனைபொருந்திய மலர்க ளையுடைய பாதிரிமரங்கள் கொத்துக் கொத்துகளாகப் பூத்தன புன்னை மரங்கள் சிறிய அரும்புவிட்டு வெண்மலர்களைப் பூத்தன கோங்கம் விருக்ஷங்கள் நெருங்கியமலர்களைப் பொருந்திப் பொன்னையணிந்துகொ ண்டதுபோலத் தோன்றின வாசனைதங்கிய காஞ்சிமலர்கள் செழுமையு டன் பசலைநிறமுள்ளதாயிருந்தன-எ-று. (உ௩)

பாசிலை யுதிர்த்தன பழுவப் பாதவம்
வீசிய பணைதொறுந் தளிரின் வேய்ந்தன
காசறு பசும்படா மொருவிக் காய்கதிர்
பூசறு செம்படாம் போர்த்த போலுமே

(இ-பு.) ஆலமரங்கள் பச்சை இலைகளையெல்லாம் உதிர்த்தன (அப்படி யுதிர்த்தபின்பு) நீண்டகொம்புகடோறும் துளிர்களைவிட்டு அலங்கரி

க்கப்பட்டன போலிருந்தன (இவ்வாறு பச்சிலைகளுதிர்ந்து செந்தளிர்த ளிர்த்தன எப்படியிருக்கின்றனவென்றால்) குற்றம் நீங்கியபச்சைப்போ ர்வையை நீக்கிவிட்டுச் செந்தளிர்மிகுந்த சிவப்புப் போர்வையைப் போர் த்துக் கொண்டனபோலிருந்தன-எ-று. (௨௪)

கொடியவு மிளந்தளிர் குழைத்த கோட்டவுங்
கடிமலர் குடைவன கள்ளுண் வண்டினம்
பெடையொடு குயிலினம் பிறங்கு தண்முறி
யிடையிடை கோதுவ் கான மெங்குமே

(இ-பு.) இவைகளுமன்றி அந்த வனமெங்கும் மதுவை யுண்கின்ற வ ண்டினங்கள் கொடிகளில் உள்ளனவும் இளந்தளிர்கள் துளிர்த்த கொ ம்புகளில் உள்ளனவுமாகிய வாசனைபொருந்திய மலர்களைக்குடைவன வாம் மாமரங்களி னிடந்தோறும் ஆண்குயில்களும் பெட்டைக் குயில்க ளும் பிரகாசியாநின்ற குளிர்ச்சிபொருந்திய துளிர்களை மூக்கினால் கோ துவனவாம்-எ-று. (௨௫)

கலைமகள் வடிவின் நிறங் கவர்ந்தன
மலைமக ளெழிலினைப் பூவை வாங்கின
கொலைபகள் கவினைநீ டிலவங் கொண்டன
அலைமக ளழகினை யசோக ணிந்தவே

(இ-பு.) சரஸ்வதியின் சரீரநிறத்தை வெண்கடப்பமலர்கள் கவர்ந்து க்கொண்டன பார்வதிதேவியாருடைய அழகாகிய திருமேனிநிறத்தைக் காயாமலர்கள் கவர்ந்து கொண்டன துர்க்கையினுடைய நிறத்தைப் பெ ரிய இலவமலர்கள் கவர்ந்துகொண்டன. திருமகள்நிறத்தினை அசோ கமலர்கள் கவர்ந்துகொண்டன-எ-று. எனவே * கடப்பமலர் வெள்ளைநி றமென்றும் காயாம்பூ கறுப்புநிறமென்றும் இலவம்பூ சிவப்புநிறமென்று ம் அசோகம்பூ பொன்னிறமென்றுங் கொள்ளப்படும். (௨௬)

கிளிகளுங் குயில் களுங் கேசரங்களு
மளிபடு தாதினூ டளைந்த தென்றலுந்
துளிபடு சினைதொறுந் துவன்றி மேவலாற்
களிமதன் பாசறை போன்ற கீர்வெலாம்

(இ-பு.) கிளிப்பிள்ளைகளும் குயில்களும் வண்டுகளும்வண்டுகள்பொ ருந்திய பூந்தாதுகளைப்பூசிய தென்றற் காற்றும் தேன்துளிபொருந்தியகி ளைகள்தோறும் நெருங்கி யிருப்பதினால் அவ்வின மெல்லாம் களிப்பினை யுடைய மன்மதனது பாசறையென்னும் படைவிடுபோலிருந்தது-எ-று. * மன்மதனுக்கு கிளி குதிரை குயில் புக்காளமென்கிற ஊதப்பட்ட வா

த்தியம், வண்டுகள் வில்லிற்பூட்டும் நாண், தென்றற் காற்று-தேர், இக்கார ணம்பற்றிப் படைவீடென்றார். இரத்தினச் சுருக்கவேண்பா.- ஆலைக்கரு ம்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு, மாலைக்கிளிபுரவி மாருதந்தேர், வே லை, கடிமுரசங்கங்குல் களிறுகுயில்காளங், கொடிமகரந் திங்கள்குடை. ()

அந்தர வகடுபோழ்ந் தகன்ற தண்டலைப்
பைந்தருத் தொறுங்கொடி படர்ந்து பற்றின
சுந்தர மிழந்துமூப் படைந்த தொன்மையோர்
மைந்துட னரம்புயர் வன்மை போன்றவே

(இ-பு.) ஆகாயத்தி னடுவைப் பிளக்கும்படியான உயரமுள்ளதாய்ப் பரந்தசோலையிலிருக்கும் பசிய மரங்கள் தோறும் கொடிகள்படர்ந்து ப ற்றிக்கொண் டிருக்குந்தன்மை யெப்படியிருக்கிற தென்றால் அழகினையி ழந்து மூப்புப்பருவம் அடைந்தகிழவர்கள் (அவயவத்தில்) வலிமையுடன் நரம்புகள் மேலிட்டிருப்பனபோ லிருந்தன-எ-று. (௨௮)

தேசுறு கிளியின மொழுங்கிற் சேண்வழி
வீசிய சிறையவாய்ப் பறத்தல் வேனிற்வேந்
தாசறு முலகங்கொண் டதற்குக் கட்டிய
பாசிலைத் தோரணப் பான்மை போன்றவே

(இ-பு.) பச்சென்ற ஒளியினையுடைய கிளியினங்கள் ஆகாயமார்க்கத் தில் சிறைகளை வீசிக்கொண்டு ஒழுங்காகப்பறந்து செல்லுதல் வசந்தகா லத்துக்கு அரசனாகிய மன்மதனானவன்வந்து எட்டுத்திக்கிலுஞ் சூழப்ப ட்ட இவ்வுலகத்தைத் தன்வசப்படுத்திக் கொண்டதின்பொருட்டுப் பச் சிலைத்தோரணங்கட்டிய தன்மைபோ லிருந்தன-எ-று. (௨௯)

அரும்பவிழ் நறுமலர்ச் சுழல வாயிடைச்
சுரும்பினந் தருமுத லனைத்துஞ் சூழ்தர
நிரம்பிழுப் புடுதலின் வழாத மைந்துற
இரும்பினாற் பூண்பிடித் திட்ட தொத்தவே

(இ-பு.) அரும்புகள்விரிந்த நறியமலர்களி னிடத்துச் சுழன்று தேனு ண்ணுவதற்கு வண்டுகள் அவ்விடத்திலிருக்கும் விருக்ஷங்கள் முதலான வைகளிடத்தில் சூழ்ந்துகொண்டிருத்தல்எத்தன்மையாகஇருக்கின்றதெ ன்றால் விருக்ஷங்கள் கிழத்தன்மை யடைந்தபடியினால் இனியொடிந்து போமெனக்கருதி யொடியாம லிருக்கும்வண்ணம் இரும்பினால் பூண் செய்து அமைத்தது போலிருந்தன-எ-று. (௩௰)

அலங்கல்வெண் கவிகைபோ டினோநீட்டமு
மிலங்கிழை மகளிரோ டினோநீட்டமும்

பொலங்கொடி மாளிகை நீங்கிப் போந்தளி
துலங்குபூங்காவகந் தன்னிச் சேர்ந்தவே

(இ-பு.) வெற்றி மாலையினையும் வெள்ளைக் குடையினையும்வேலாயுதத்தையுமுடைய அரசர் கூட்டமும் பிரகாசியாநின்ற ஆபரணங்கள் அணிந்திருக்கு மாதர்கூட்டமும் வாலிபர்கூட்டமும் பொன்னாற் செய்யப்பட்டகொடிகள்கட்டிய மாளிகைகளை விட்டுச்சென்று வண்டுகள் விளங்கிக்கொண்டிருக்கு மலர்களையுடைய சோலையினிடத்தில் நெருங்கிச்சூழ்ந்தன-எ-று. சோலையானது தளிர்விட்டுத்தழைத்து அரும்புகள்மலர்ந்து அதிகுளிர்ச்சியா யிருத்தலால் நீர்விளையாடியும் போதுகொய்தும்இன்பம் அனுபவித்தலின்பொருட்டுச் சென்றதெனக்கொள்க (௯௨)

இருநில மன்னர்மார் பிலகு மாரம்போல்
அருவரை நெற்றித்தா ழருவி யாடியு
முருகயர் புலமென மகளிர் முண்டக
மருவிரி வாவியங் கரையின் வைகியும்

(இ-பு.) பெரிய இவ்வுலகத்தை யாளுகின்ற அரசர்கள் மார்பில்பிரகாசித்துக்கொண்டிருக்கும் முத்துமாலைபோல பெரியமலையி னுச்சியிலிருந்து விழுகிற அருவிநீரில் விளையாடியும் வாசனைவிரிச்செய்கின்ற நந்தனவனத்திற் பொருந்தி வதுபோல மாதர்கள் தாமரை மலர்கள் வாசனையுடன் மலருகின்ற அழகிய தடாகக்கரையில் பொருந்தியும்-எ-று. (௯௩)

சிலம்பெதிர் கூவியுஞ் சிற்றில் கோலியு
முலைப்பொரு குவவுத்தோ ளுழுத கொங்கைமேற்
கலப்பல திருத்தியுங் கலவையாடியு
நலப்பல துய்த்தனர் நதியின்பாங்கரோ

(இ-பு.) மலைகளுக்கெதிரில் கூவியும் நதியின்கரையில்சிறுவீடுகட்டி விளையாடியும் (தத்தங்கணவர்களுடைய)திரண்ட(வயிரச்)சிலையொத்ததிரட்சியாகியபுயங்களில்படிந்ததனங்களின்மேலபல்வித ஆபரணங்களை அணிந்தும் வாசனைத் திரவியஞ்சேர்ந்தசந்தனக்குழம்புபூசியும் இவ்வாறு பல இன்பங்களை அனுபவித்தார்கள்-எ-று. * மலைகளுக்கெதிரில்கூவினால் அதனிடத்தில் கூவுகின்றவர்கள் ஓசைபோலாவது அவர்கள் வசனம்போலாவது தொனியுண்டாகும் ஆதலால் அதுவுமோர் விநோதமாகக்கூடன் கூடினவர்களுக்கு மகிழ்ச்சி யின்மையால் மற்றொரு விநோதத்திலுள்ளுதலொருவகை,கிள்ளை குயில் இவைகளுடன் பேசலாகாதோ வெனின் அவைகளின் ஓசைவிரசத்துக்கேதுவானது கம்பராமாயணம்- வரைக்

காட்சிப்படலத்தில்(௨௮) வது, செய்யுள். வெயினிறங்குறையச்சோதியினிழல்பரப்பமுன்னர்த், துயிலுணர்செவ்வியாருந்துனியுறு முனிவினோருங்,குயிலொடுமினிதுபேசிச்சிலம்பொடுமினிதுகூவி,என்பதனானுமறிக.

இத்தலை யின்னண நிகழவெண்ணில் சீர்ச்
சத்தியா தனன்றரு தரும குத்தனு
மெய்த்தவத் தோழனை நீங்கி வேறொரு
பத்திரம் பொதுளிய பழுவ மெய்தினான்

(இ-பு) இவ்விடத்தில் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்க அளவில்லாதசிறினையுடைய சத்தியாதனனீன்ற தருமகுத்தனென்பவன் உண்மையாகிய தவத்தினையுடைய தன்தோழனைவிட்டுநீங்கி இலைமுதலானவைகள் நிறைந்துள்ள வேறொருவனத்திற்சென்றான்-எ-று, (௯௪)

வேறு.

மஞ்சுசூழ்குடுமி வெள்ளிவேதண்ட மழுவலான் செவிக்கிசை நிறைக்கும், விஞ்சையர்பெருமான் றிருமகளாய வெள்வளைத்தோழியாங் கொருத்தி,வஞ்சிநுண்ணிடையார் பண்ணையுளாடும் வனப்பினைக்கண்டலு மயங்கிச், குஞ்சரநுகர்ந்த வெள்ளில்போன்மாழ்கிக் குழைந்துதன்னுளந் தனிற்குணித்தான் ... ... *

(இ-பு) அப்படிபோன தருமகுத்தனானவன் மேகங்களால் சூழப்பட்ட சிகரங்களையுடைய கயிலாசகிரியில் வீற்றிருக்கும் பரமசிவனுடைய திருச் செவிகளிற்பொருந்த இசைபாடுகின்ற வித்தியாதர மன்னவன் புத்திரியாகியசங்குவளையலணிந்தகையினையுடையஒருமாதானவள் அவ்விடத்தில்பூங்கொடிபோல நுண்ணிய இடையினையுடைய தோழிமார் கூட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் அழகைக்கண்ட மாத்திரத்தில் மனமயங்கிவேழமுண்ட விளாங்கனிபோல சோர்வுடன்மெலிந்துதன்மனதில் இவ்வாறுநினைத்தான்-எ-று, வேழமுண்ட விளாங்கனி யெப்படியிருக்குமென்றால் தேரைமோந்த தேங்காய்போலிருக்கும். வேழமென்பது விளாங்கனிக்குரியதோர் நோ யென்றும் அதுதேங்காய்க்குத் தேரையென்றொரு நோயிருப்பதுபோலென்றும் நச்சினார்க்கினியார் சீவகசிந்தாமணியில் ஒருசெய்யுளுரையில் எழுதியிருக்கின்றனர் சிலவுரைகாரர் யானையுண்ட விளாங்கனியென்பர். (௯௫)

பூவுறைதிருவோ நாகர்பூங்கொடியோ பொருப்புறைசூரமகளாய் மயிலோ, தேவர்தமுலகி னின்றிழிந்தருளுஞ் செய்யவாய்மடமொழிக் கிளியோ, யாவளிங்கிருந்த வேற்றிழையென்ன விறைமகனெண்ணமுந் திரையோ? ... கோவிளங்குமரன் வனப்பினைநோக்கிக் கொடியிடைமடந்தையுங் குறித்தாள் ... ... *

(இ-பு.) இங்கிருக்கின்ற மாதானவள் செந்தாமரைப்பூவில் வீற்றிருக்குந்திருமகளோ நாகலோகத்தில் வாசஞ்செய்யும் நாககன்னிகையோ மலையில்வாழும் செவ்வல்லி மலர்போன்ற வாயினையுடைய வரையரமகளோ தேவருலகத்திலிருந்துவந்த சிவந்தவாயையும் மழலைச்சொல்லையு முடைய கிள்ளையொத்த ரம்பாஸ்திரீயோ இன்னுளென்று தெரியவில்லையேயென்று அந்தராஜகுமாரன் எண்ணங்கொண்டு (காமவிகாரத்தினால்) வியாகுலமுடையவனா யிருக்க அவனுடைய சவுந்தரியத்தைப்பார்த்துக் கொடிபோன்ற நுண்ணிய இடையையுடைய அந்தஸ்திரீயும் இச்சைகொண்டாள்-எ-று. (௩௬)

பண்ணுறுகான விஞ்சையருலகிற்பாகசாதனன்றிரு நாட்டின், மண்ண
கவரைப்பி னிளமையினலத்தின் வடிவினிலிவன்றனக் கிணையார், கண்ம
ணிகுளிர்ப்ப வடிவுகொண்டிறந்த காமனேவந்தன னென்று, வுண்ணி
றையழிய வுலையிடுமெழுகொத் தொருமொழிதோழியர்க் குரைத்தாள் *

(இ-பு.) இசைபொருந்திய கானம் பாடுகின்ற வித்தியாதர ருலகத்திலாவது தேவேந்திரனுடைய உலகத்திலாவது பூலோகத்தினிடத்திலாவது இளமைப்பருவத்திலும் சவுந்தரியத்திலும் உருவத்திலும் இவனுக்கு ஒப்பானவர்கள் யாரிருக்கிறார்கள் முன்னிறந்த மன்மதன் (பார்க்கின்றவர்களுடைய) கண்மணிமகிழ்ச்சியடையும்படி உருவங்கொண்டு வந்தானோவென்று உள்ளத்தி லிருக்கும் கற்பு முதலானவை அழியத் தக்கதாக (குமாரனுடைய) உலைக்களத்தியில் இட்டமெழுகைப்போல (மனமுருகி) தோழிகளைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லினாள்-எ-று. (௩௭)

மங்கைமீர்நீவி ரனைவருமிந்த வனத்தினுக் கப்புறம்போகி
பொங்கரிற்புகுந்து நறுமலர்கொய்து போதுமினென்றவர்ப் பணியா
அங்கவர்யாருந் தணந்தபினிந்த வணங்கொருதமியளா யெதிர்ந்து
பங்கயமுகத்துக் குமரன்மாட்டணுகிப் பரிவுடனினையன பகர்ந்தாள்

(இ-பு.) தோழிகளே நீங்களெல்லாரும் இந்தவனத்துக்கப்புறம்போய்ச் சோலையிற்சேர்ந்து வாசனைபொருந்திய மலர்கள் பறித்துக்கொண்டு வாருங்களென்று அவர்களுக் குத்தரவுசெய்து அவர்களெல்லாரும் நீங்கிப்போனபின்பு இந்தமாதானவள் தானொருத்தியுந் தனிமையாகப் போய்த் தாமரைமலர்போன்ற முகத்தினையுடைய ராஜகுமாரன் சமீபத்தில் அடுத்து விருப்பத்துடன் இந்த வார்த்தையைச்சொன்னாள்-எ-று. (௩௮)

கன்னலஞ்சிலைவே ளுருவுகொண்டனைய காளையீண்டடைந்த காரணமு
நின்னுடைநாடு நின்றிருமரபு நின்றிருப்பெயருமியா வென்னப்
பொன்னிளமுலையாள் வினவலுங்கேட்டுப் புந்தியினவள்குறிப்புணர்ந்து
மின்னணிமவுலி வேந்தர்கோனளித்த விடலையுமனமகிழ்ந் துரைத்தான்

(இ-பு.) கரும்புவில்லையுடைய மன்மதனானவன் முன்போல உருவுகொண்டதுபோன்ற வாலிபனே நீயிவ்விடத்திற் குவந்தகாரணமும் உன்னுடையதேயமும் உன்னுடைய(விசேட) குலத்தினமும் உன்னுடையநாமதேயச்சிறப்பும் யாவையென்று பொன்னிறமுள்ள தேமல்பரந்த இளமைபொருந்திய தனங்களையுடையவள் வினவவும் அதைக்கேட்டுத் தன்மனதில் அவள் குறிப்பை அறிந்துகொண்டு ஒளிபொருந்திய மகுடம் அணிந்த மன்னவ னீன்ற ராஜகுமாரன்மனமகிழ்ந்துசொல்லுகின்றான்-எ-று. (௩௯)

விரைமலர்நாற்றம் யோசனைகமழும் விதர்ப்பதேசாதிபன் விரிந்த, தரை
யெலாநிழற்று முழுமதிக்கவிகைச் சத்தியாதனன்றனக் கமைந்த, மனைம
லர்த்திருவே யனையவள்சதியா மடவார்வயிற் றுதித்தே, னிரைவளை
க்கரத்தாயெந்தைபோர்ப்பகைஞர் நெடும்படைக்களத்திடைமடிந்தான் *

(இ-பு.) மலர்களின் வாசனையானது ஒருயோசனைதூரவளையில் பரிமளிக்கும்படியான (சோலைகளால்சூழப்பட்ட) விதர்ப்பதேசத்துக்கு அரசனுகிப் பரந்த உலகத்திலிருக்கும் உயிர்களுக்கெல்லாம் நிழலைச் செய்துகொண்டிருக்கின்ற பூரணசந்திரனை யொத்த வெள்ளைக் குடையினையுடையவனுமா(யிராச்சியபாரஞ்செய்த)சத்தியாதன மகாராசாவுக்கு அமைந்த மனைவியாகிய வாசனைதங்கிய தாமரைப்பூவில் வீற்றிருக்குந் திருமகளை யொத்த (சவுந்தரியமுஞ் செல்வமுமுள்ள) சதியென்னும் பெயரையுடையாள் வயிற்றிற்பிறந்தேன் வரிசையாகவளையலணிந்தகையையுடையமாதே? என்பிதாவானவர் போர்செய்யவந்த பகைவருடைய பெரியயுத்தகளத்தினிடத்தில் (எதிர்த்துப்போர்செய்து) மடிந்தார்-எ-று. அரசன் குடையின்கீழிருந்து நீதியுடன் அரசுசெய்ய உயிர்கள் சவுக்கியமுற்றிருப்பதினால் உயிர்களுக்கு நிழலைச்செய்யுங் குடை யென்றது. (௪௰)

ஈன்றவெம்மாயு நீருணுங்கயத்தி னிடங்கர்வாய்ப் பட்டனண்மடி
யத், தோன்றியவுயையாம் பார்ப்பனியெனைத்தன் றோன்றலுக்கிளவலா
ய் வளர்த்தாள், சான்றுசான் முனிவனெனக் குறுநாமந்தரும குத்தனனெ
னச்சாற்றி, யான்றவெந்துயரி னழிவுறுவண்ண மரனடிக்கென்னையாட்
கொடுத்தான்... ... ... *

(இ-பு.) என்பிதா இறந்துபோகவே என்தாயானவள் நகரத்தை விட்டுத் தனியே வனத்திற்போய் அவ்விடத்தில் என்னைப்பெற்றிருக்கும் ஒருகுளத்தில் நீருண்ணப்போய் அங்கிருக்கும் முதலைவாயில் அகப்பட்டுக்கொண்டு இறந்துபோனாள் (அப்படி என்தாயானவள் இறந்துபோகவே நான் சிசுவாய் அழுதுகொண்டிருக்குந்தருணத்தில்) அங்கேவந்த உமையென்னும் ஒருபிராமணஸ்திரீ யென்னையெடுத்துக் கொண்டுபோய்த்த

ன் புத்திரனுக்கு இளையவனாக வளர்த்தாள் (அப்படிநான் வளரும்நாளி
ல்) மேன்மைமிகுந்த சாண்டில்லியர்என்னும் ஒருமுனிவர்வந்து எனக்கு
த் தருமகுத்தன் எனப் பொருத்தமுள்ளதான பேர்கூறி மிகுந்த கொடி
தானபிறவித்துன்பத்தில் வருந்தாத வகையாகப் பரமசிவனுடைய திரு
வடிகளுக்கு என்னை அடிமையாகக்கொடுத்தார்-எ-று. (௬௧)

உமையவடலைவன் றனைவழிப்பட்ட உறுதியாலொருவரு மொவ்வாக்
கனமயினும்மின்னை யெதிர்ந்தனனல்லோர் காட்சியாலெய்துதல்சிறந்த
வமையளித்திறந்தோ னிழந்தவான்றிருவுமிருநிலக்கிழமையுமெதிர்ந்தே
ன்,அமையிளந்தோளாய் மாபுநின்பதியு மறைகுதிபெயரொடுமென்றான்

(இ-பு) பார்வதி கணவனாகிய பரமசிவனைப்பூசித்த உறுதியினாலே ஒ
ருவரும் ஒப்பில்லாத கற்புக்குரிய பொறுமையினை யுடையவளே? உன்
னை யெதிர்ப்பட்டேன் நல்லவர்கள் தரிசனத்தினால் அடையும்பேறு சிறி
தோ.எனனைப்பெற்று இறந்தபிதாவானவர் பகைவராலிழந்த சிறப்புள்ள
செல்வமும், பெருமைபொருந்திய ராச்சியபாரமும், அடைந்தேன் பசி
யமூங்கிலையொத்த தோளையுடையமாதே? உன்குலமும் உன்னாரும் உ
ன்பெயரும் சொல்லுதியென்றான்-எ-று. (௬௨)

அயிலெயிற்றுழுவை யதளசைத்தாடு மாணிரந்தாமினி துறையுங், கயிலை
யிற்றென்பாற் சேடியுள்வாழுங் கந்தர்ப்பர்தொழுங்கழற் குரிசில், புயிலு
றழ்தடக்கைத்திரமிடனென்னப் பொறித்திடுந்திருப்பெயரவற்குக், குயி
ன்மொழித்துவர்வாய்த் தாரணிவயிற்றிற் றேன்றினேனென்றவள்கூறி*

(இ-பு.) கூர்மையுள்ள பற்களையுடைய புலியின்தோலையுடுத்து நடன
ஞ்செய்யும் பரமசிவன் மகிழ்ச்சியுடன் திரந்தரமாக வாசஞ்செய்யுங் கயி
லாசகிரிக்குத் தென்புறத்திலிராநின்ற சேடியென்னும் நகரத்தில் வாசஞ்
செய்கின்ற கந்தருவர்கள் தொழும்படியான அரசனாகியமேகத்தையொ
த்த பெரியகையையுடைய திரமிடனென்று சொல்லப்பட்ட அழகியபெ
யருள்ளவனுக்கு (அவன்மனைவியாகிய)குயிலோசைபோன்ற இனியசொ
ல்லையும் பவளம்போன்ற வாயையுமுடைய தாரணியென்பவள் வயிற்றி
ற் பிறந்தேனென்று அவள்சொல்லி-எ-று. (௬௩)

என்பெயரஞ்சு மதியெனவுரைப்பர் யானுமென் றோழியருடனே, நன்ட
யறமுவும் பொதும்பரின்பொழில்வாய் நறுமலர் கொய்குவான் புகுந்தே
ன், அன்புடையாயம் போக்கிநீ தோறு டிவாவினிற்றமியளா யடைந்தே
னின்படிவமுமெய்யழகையுங்கண்டேனினைதொறுநிறையழிந்தயர்ந்தேன்

(இ-பு.) என்பெயர் அஞ்சுமதி யென்றுசொல்லுவார்கள் நீருண்டமே
கம் தவழும்படியான இவ்வனத்தி லுள்ள இனிய சோலையினிடத்தில்வாச

னைபொருந்திய மலர்கள் கொய்யவந்தேன் (அப்படிவந்தாள்) உன்னைப்
பார்க்கவேண்டுமென்கிற ஆசையினால் என்னிடத்தில் அன்பினையுடைய
தோழிகளை அப்புறம் அனுப்பிவிட்டுத் தனியாளாய்வந்தேன் வந்து உன்
வடிவத்தையும் அழகையுங்கண்டு நினைக்குந்தோறும் கற்புநிலைமாறிச்
சோர்வினையடைந்தேன்-எ-று. (௬௪)

வானவர்வியப்ப மகரயாழ்வீணை வரிநரம்பனுமிட றென்னக், கானகன்
ணர்ந்தோ ராயினுமுணராக் கானவிஞ்சைகண் முழு துணர்ந்தேன், ஞா
னநன்னிலையால் யாவர்தங்கருத்தும் நசையையுங் குறிப்பினி லறிவேன்
வேனில்வேள்ளையா யென்னுமைழிநினக்கு வேட்கையுண்டென்பதுங் குறி
த்தேன்... ... ...*

(இ-பு.) தேவர்களும் வியப்படையும்படி மகரவீணைவாசித்துக் கட்டு
ப்பட்டிருக்கிற தந்திரிகள் ஓசை யிதுவென்றும் கண்டத்தினோசை யிது
வென்றும் நன்றாகக்கானம்பாடுதலை யுணர்ந்தவர்களேயானாலும் அறியப்
படாமல் பாடும்படியான கானவித்தைகள் முழுவதும்தெரிந்திருக்கிறே
ன் இதுவுமன்றி நல்லஞானநிலையினாலே எல்லாருடைய கருத்தையும் அ
வர்களிச்சையையுங்குறிப்பாக அறிந்துகொள்வேன் வசந்தகாலத்துக்குரி
ய மன்மதனையொத்தவனே? (இப்போது)என்னிடத்தில் உனக்கு ஆசை
யுண்டென்பதையும் அறிந்துகொண்டேன்-எ-று. (௬௫)

இன்னணமன்னி யெமக்கியல்பாய திவ்வழிநேரு மணமதுதான்
கன்னவிறோளா யெண்வகைமணத்திற் கந்தர்ப்பமணமெனு மறைநூல்
அன்னதாலெனது கைக்கிளையாகா தண்ணலுமன்பினை யாதன் [தாள்
முன்னையூழ்வினையின் முடிந்ததென்றந்த மொய்குழலுரைத்திது செய்

(இ-பு.) இவ்விதமான வார்த்தைகளைச்சொல்லிப் (பின்னுஞ்சொல்லுகி
றாள்) மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற தோள்களையுடைய ராசகுமார
னே அருமையாகிய காந்தர்வவிவாகம் எங்களுக்கு இயல்பாயிருப்பது அ
ந்தவிவாகமானது எட்டுவகைமணத்தில் ஒன்றென்று வேதசாஸ்திரங்க
ள் சொல்லுகின்றன வேதசாஸ்திரங்கள் அப்படி சொல்லியிருக்கின்
றபடியினாலே எனக்குண்டாகிய ஒருதலைக்காமத்தின் மட்டாகாமல் நீயு
ம் என்னிடத்தில் மோகங்கொண்டவனானது பழைய ஊழ்வினையினால் நே
ரிட்டதென்று நெருங்கிய அளகத்தையுடைய அந்தமாதுசொல்லி அதற்
குமேல் இந்தக்காரியத்தைச்செய்தாள் (அது என்னவென்றால்)-எ-று. *எ
ட்டுவகைமணமாவது பிரமம் பிராசாபத்தியம் ஆரிஷம் தெய்வம் காந்த
ர்வம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்பனவைகளாம். (௬௬)

இவற்றுள் (பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது
பிரமணம்) (தலைமகனினத்தார்வேண்டத் தலைமகளினத்தாருட் பட்டவ

ளைத் தீமுன்னர்க்கொடுப்பது பிரசாபத்தியம்) (ஒன்றிரண்டு பசுவுமெ ருதும் வாங்கிக்கொண்டு கன்னிகையைத்தீமுன்னர்க் கொடுப்பது ஆரிஷம்) (வேள்வியால்வந்த கன்னிகையைத் தீமுன்னர் கொடுப்பது தெய்வம்)(கொடுப்பாருங் கேட்பாருமின்றி யிருவருந்தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமேகூடுவது- காந்தர்வம்) (பெண்ணுக்குப் பொன்சூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன்வேண்டுவன கொடுத்துக் கொள்வது -அசுரம்) (பெண்ணும் பெண்ணினத்தாரு முடன்படாமல் வலிதிற் கொள்வது-இராக்கதம்) (பெண்ணுறங்குமிடத்துத் துயின்றுளைச்சென்று கூடுவது- பைசாசம்.

கொங்கையங்குவட்டிற் றாளமாலிகையைக் கொழுஞ்சுடர்க்குருமணியாழி, யங்கையினேந்திமணிச்சிலம்பாற்றவன்னங்களலயலர்நடந்து சிங்கவேறனையானுலம்பொருதடந்தோட்சேர்த்தினுள்சேர்த்தலுமரச புங்கவன்சிறுவனுவகையூத்தந்தப்பொலங்கொடிக்கினையனுரைகின்றான்

(இ-பு) பொன்மலையையொத்த தனங்களினிடத்தில் அணிந்திருக்கு முத்துமாலையைச் செழுமையுள்ள ஒளியினையும் நிறத்தினையுமுடைய ரத்தினங்கள் பதித்தமோதிரம் அணிந்த கையினுல்கழற்றி யேந்திக்கொண்டு மணிகள்பதித்த சிலம்புசத்திக்கவும் அன்னப்பக்ஷிகள் மயங்கவும் நடந்து ஆண்சிங்கம்போன்ற ராசகுமாரனுடைய இரண்டகல்லையொத்த புசங்களில் அணிந்தாள் அப்படி அணிந்தமாத்திரத்தில் ராஜசிரேஷ்டனுகிய சத்தியாதனமகாராஜாவின் புத்திரன் சந்தோஷம் அடைந்து பொற்கொடியையொத்தஅந்தமாதைப்பார்த்து இந்தவார்த்தைசொன்னுன்-எ-று.

அரசிழந்தந்தோ வறுமைபூண்டுழல்வ னணியநின் ஹாரமாலிகையைத் திரமிடனெனுமுன் றுதைநேராது சேர்த்தினையிஃதுளந்தேரிற், பரவுந் தீதிற் பைந்தொடிமுறையின் பகுதியென்னேயெனப்பகர, மருமலர்க் குழலாள் குறுநகைகோட்டி வணங்கிவாய்புதைத்துநின் றுரைத்தாள்

(இ-பு.) அரசாட்சியையிழந்து தரித்திரமுள்ளவனு யுழன்றுகொண்டிருக்கிறயான் அணிந்துகொள்ளும்படி உன்முத்துமாலையைத் திரமிதென்கிற உன்பிதாவின் சம்மதியில்லாமல் என்புசத்தில்தரித்தது இந்தச்செய்கையை மனதில் ஆலோசிக்குமிடத்தில் புகழ்தற்கரிய பதிவிரதாதருமத்தையுடையவளே நீதியின்பாற்பட்டதல்லவே என்று அவன்சொல்ல வாசனைதங்கிய பூமாலையணிந்த அளகத்தையுடைய அந்தக்கந்தருவமாதானவள் புன்னகைசெய்துவணங்கி ஒருகையால் வாயைப்பொத்திக்கொண்டு நின்றுசொல்லுகிறாள்-எ-று. (௬௮)

மன்னவன்சிறுவ கேட்டிநீயுரைத்த வாசகமுழுதே யடிச்சி நின்னுடைக்கருத்தி னெண்ணியமுறையே நிரப்புவ னுனையுமீள

இந்நெடுவனத்தி னெய்துதியென்று வேந்திழையாயமோ டேகத் தன்னிகரில்லான் றுணைவனுக்கிதனைச் சாற்றினன் றன்னகரடைந்து

(இ-பு.) ராசகுமாரனே நான் சொல்லுகிற வார்த்தையைக் கேள் நீசொன்னவார்த்தை அழகுள்ள தாயிருக்கின்றது அடிச்சியாகிய நான் உன்னுடையமனதில் நினைத்தவைகளைமுறைமைப்படி நிறைவேற்றுகிறேன் மறுபடி நாளையதினமும் நெடிதாகிய இவ்வனத்தில் வாவென்றுசொல்லி அந்தக் காந்தர்வ ஸ்ரீயானவள் தன் தோழிகளுடனேபோகத் தனக்கு ஒப்பில்லாதவனுகிய ராசகுமாரன் இந்தச்சேதியைத் தன்தமையனு யிருப்பவனுடன்சொல்லித் தன்பதியைச்சேர்ந்து-எ-று. (௬௯)

உமையெனுமன்னைக் கெதிர்ந்தனவாய வுவகையைப்படியுரைத்துச் சுமையுடைத்திங்கட் சடிலவானவனைத் தொழுதுவந்தனைத்தொழிலியற்றி, யெமையுமீத்தருணி யென்றுகொண்டந்த வேந்திழையுரைத்திடும்வழி நாள், அரும்பிணர்தோங்கவனந்தனிற்புகுந்தியா மரசனோ டரிவையைக் கண்டார் ... ...

(இ-பு.) தன்பதியிற்போன ராசகுமாரன் உமையென்னும் பெயரையுடைய தன் தாயைக்கண்டு தனக்குநேரிட்ட சந்தோஷ சமாசாரத்தை நடந்தபடிசொல்லி இளந்திங்களை யணிந்திருக்குஞ் சடாபாரத்தையுடைய பரமசிவனைத்தொழுது ஆராதித்து அடியேங்களை ரக்ஷித்தருளுமென்று வேண்டிக்கொண்டு அந்தக்காந்தர்வ ஸ்ரீவரச்சொன்ன மறுநாள் மூங்கில்கள் வரிசைவரிசையா யோங்கிவளர்ந்திராநின்ற அந்த வனத்தில் போய்க் கந்தர்வ ராசனையும் அந்த மாதினையுங் கண்டான்-எ-று. (௭௦)

கண்டவர்தம்மைக் கண்டியாழ்விஞ்சைக் கதிர்முடியரசுவப்போடு வண்டிமிர்தெரிய லரசிளங்களிறே வருகெனவாங்குபு தழீஇ யண்டரிலொருவ னுனவேதியனை யடுத்தனன்புல்லியாங்கிருத்தித் துண்டவெண்பிறையான் கூறியமாற்றஞ் சுடர்முடியரசகேளென்றான்

(இ-பு.) ஒளிபொருந்தியகிரீடம் அணிந்திருக்கும் வித்தியாதரர் மன்னவன் தன்னைக்கண்டவர்களைத் தானும்பார்த்துச் சந்தோஷத்துடன் வண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும்படியான பூமாலையணிந்த யானையையொத்த ராசகுமாரனே வாவென்று சமீபத்தில் வரவழைத்துத் தழுவிக்கொண்டு தேவர்களில் ஒருவனான பிராமணனையும் அடுத்துத்தழுவி அவ்விடத்தில் தன்னுடன் இருக்கும்படி வைத்துக்கொண்டு வெண்மையாகிய இளந்திங்களையணிந்த பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைப்பிரகாசந்தங்கிய மகுடத்தையுடைய அரசனே கேளென்று சொன்னுன்-எ-று. (௭௧)

டுள

விண்ணைகடணவும் வெள்ளியங்கிரியின் விளங்குமாமணிசெய்மண்
டபத்திற், பண்ணவர்பெருமா னிணையடிக்கமலம் பணியயானென்னலி
னடைந்தேன், கண்ணுதலடியர்க் கெளியவனமலன் கருணைவா ரிதியெ
னைநோக்கி, யுண்ணிறைவுவகை புறம்பொழிந்தோங்க வகமகிழ்ந்தின்னவா
றுரைத்தான் ... ... *

(இ-பு.) அண்டமுகட்டைப் பொருந்திய அழகியவெள்ளிமலையாகிய க
யிலாயகிரியில் பிரகாசித்துக் கொண்டிராநின்ற மாணிக்கமுதலாகிய ரத்
நங்களினுற்செய்யப்பட்ட மண்டபத்தில் எழுந்தருளி யிருக்கிற தே
வர்களுக்கெல்லாம் இறைவனுகிய பரமசிவனுடைய இரண்டு திருவடித்
தாமரைகளையும் வணங்க நான் நேத்துப்போனேன் போனவிடத்தில் நெ
ற்றிக்கண்ணையுடையவரும் அடியார்க்கெளியவரும் நிர்மலமானவரும்
கிருபைக்கடலானவருமாகிய கயிலாசபதியானவர் அடியேனைப்பார்த்து
உள்ளே நிறைந்தசந்தோஷமானது புறத்தில்பெருகி யோங்கத்தக்கதாக
த்திருவுளமகிழ்ந்து இவ்வாறு சொல்லியருளினர்-எ-று. (௫௨)

ஆசில்சீர்க்குமர நின துநற்றாயு மத்தனுமிறந்தது மதன்பின்
மாசிலாளொருத்தி பார்ப்பனிவளர்க்க வறுமையங்கடலிறழ்ந்ததுவுந்
தேசிகமுனியுன் பிறப்பெலாந் தெருட்டிச் சிவனையேபூசியென்றதுவும்
ஈசனதடியி னன்பினுன்மலர்பெய் தேத்திநீபூசைபண் ணியதும்

(இ-பு.) குற்றமில்லாத புகழினையுடைய ராசகுமாரனே உன்னுடைய
நல்லதாயுந் தகப்பனும் இறந்துபோனதும் அதன்பின் உத்தமியாகிய ஒ
ருபிராமண ஸ்திரீயானவள் உன்னை வளர்க்க வளருநாளில் நீங்கள் தரித்தி
ரமாகிய சமுத்திரத்தில் மூழ்கியிருந்ததும் ஒருமுனிவனுகிய ஆசிரியன்
வந்து உன்பிறப்பின் விவரத்தைத் தெரிவித்து நீ சிவனையே பூசித்துக்
கொண்டிருவென்றுசொல்லியதும் அவர்சொல்லியபடி நீ பரமசிவனுடை
ய திருவடியில் அன்புடன் மலர்களால் அருச்சித்துத் துதிசெய்து பூசை
செய்ததும்-எ-று. * வறுமையங்கடல் என்பதினிடையிலிருக்கும் -அம்-
சாரியையாகக்கொள்க. (௫௩)

அன்னதாலுன்னாட் டன்புமிக்குடையே மென்பதுமறிகென வுரைத்துப்
பின்னருகினது தாதையைமாய்த்துப் பெரும்பதிவளனெலாங்கவர்ந்த
மன்னரைவீட்டிக்கடற்படைதுணித்துவாகைகொண்டரசிளங்குமரன்
றன்னருட்கவிகைபுலகெலாநிழற்றத்துக்கொடுதணைசெய்வாயென்றான்

(இ-பு.) இந்த முனிவர் சொற்படி பூசைசெய்த தன்மையினுல் அவனி
டத்தில் மிகுந்த கிருபைவைத்திருக்கிறோமென்பதும் அறியக்கடவையெ
ன்று சொல்லிப் பின்னும் அவன்தகப்பனைக்கொன்று பெரியநகரமுதலா

கிய வளப்பங்களையெல்லாம் அபகரித்துக்கொண்ட அரசர்களைக்கொன்
று அவர்களுடைய கடல்போன்ற அளவற்றசேனைகளையுங்கொன்று வெற்
றியடைந்து அந்தராஜபுத்திரன் (ராச்சியபட்டாபிஷேகஞ்செய்துகொண்
டு)உயிர்களுக்கெல்லாம் கிருபைசெய்யத்தக்க தன்குடையானது நிழல்செ
ய்யும்படி தருக்கொடு துணைசெய்யென்று எனக்குக் கட்டளையிட்டாரெ
ன்றுசொன்னுன்-எ-று. * ராஜகுமாரன் முனிவன் சொற்படி நம்மைப் பூ
சித்ததினுல் தன்பகைவனைவென்று அரசாட்சிசெய்வான் அந்தக்காலத்தி
ல் அவனுக்கு சகாயஞ்செய்யென்று பரமசிவன் தனக்குக்கட்டளையிட்ட
தாக வித்தியாதரன சொன்னுன் எனபது தாற்பரியம். (௫௪)

முத்தலைச்சூலஞ் சுவன்மிசையிருத்து முழுமுதற்றுணைதலை மேற்கொண்
டத்தலைநின்று நகரின்வந்தணைவேற் கணங்கிவ ளரனுரைப்படியே
கைத்தலநெல்லிக் கனியினின்மரபுங் கவினும்வந்துரைத்திடக்கேளா [தோ
இத்தலைவந்தேன் சிவனருள்பெற்றோர்க் கெய்திடாப் பொருளுமென்றுள

(இ-பு.) மூன்றுபிரிவாகிய தலையினையுடைய சூலாயுதத்தைத் தமதுபி
டரியிலிடத்து வைக்கும் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைச் சி
ரன்மேல்ஏற்றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து என்னகரத்தில் வந்துசே
ர்ந்த எனக்கு எனபுத்திரியாகிய இந்தக்கன்னிகையானவள் வந்து பரமசி
வன அருளிச்செய்த திருவாக்கின்படி கையினிடத்திற் பொருந்திய நெ
ல்லிக்கனிபோல உன்னுடைய மரபினையும் அழகினையும் சொல்லக்கேட்
டு(உன்னைக்காணும்பொருட்டு)இவ்விடத்தில்வந்தேன் பரமசிவனுடைய
கிருபையைப் பெற்றவர்க்குக் கிடையாத ஒருபொருளு மிருக்கின்றதோ
-எ-று. * இவ்வுலகமெல்லாம் சிருஷ்டியாதவற்கு முன்னமே யிருப்பவரு
ம் அவையெல்லாம் இறுதி யடைந்தபின்னும் இருப்பவரும் எல்லாவற்றி
ற்குங் காரணராயிருப்பவரு மாதலால் பரமசிவனை முழுமுதலென்றது
இதனை ஆதியும் அந்தமுமாயினுர்க்கு என்னுந் திருவாசகத்தானுமுணர்க.

ஆதலாலஞ்சு மதியிவணினக்கே யடிப்பணிசெய்கென வளித்தேன்
காதலாயெனப்பொற் கரகநீரவன்றன் கரத்தினின் விடுத்தபின்கமல
மாதுநேர்மகளிர் நவமணிகனக மால்கரித்தேர்பரி பதாதி [ன்
மோதுபோர்க்கணிபங் கவசம்விற்றூணி மூரிவேல்வாளிவை கொடுத்தா

(இ-பு.)இந்த முறைமையினுல் அஞ்சுமதியென்னும் பெயரையுடைய என்
புத்திரியாகிய) இந்தக்கன்னிகை உனக்குப்பணிவிடைசெய்யக் கடவளெ
ன்று விருப்பத்துடன் கொடுத்தேனென்று பொற்கரகத்திலிருக்கும் நீரை
அவன்கையில்விட்டபின்பு திருமகளையொத்த(அழகுள்ள)தோழிகள் நவ
ரத்தினங்கள் சுவர்ண்ணம் பெரிய யானைகள் தேர்கள் குதிரைகள் பதாதி
கள் தாக்கும்படியான மழுவாயுதம் கவசம் தனுசு அம்பறாத்தூணி பன

ம்பொருந்திய வேலாயுதம் வாளாயுதம் முதலியவைகளையுங் கொடுத்தான்-எ-று. (௫௬)

வேறு.

முனிவரன் புதல்வனாய மழுமழு விராமன்போல
அனிகமோ டெய்தித்தெவ் வருங்கிளை யறுத்துச்செங்கோ
லினிதிநேச்சியபின் மைந்தற் கிறைமையீ தெம்பாலெய்தித்
தனிமுதல் பதத்திற்சேர்தி தையலோ டசவென்று

(இ-ப.) இவைகளைக்கொடுத்த வித்தியாதரன் பின்னுஞ்சொல்லுகிறான். ராஜகுமாரனே? நீயிச்சேனைகளுடன்சென்று சமதக்கினியென்னும் முனிவரனுடைய புத்திரனாகிய மழுங்காத பரசாயுதத்தையுடைய பரசுராமன் பகைவரைவென்றதுபோலவெல்லுதற்கரியபகைவரைச்சுற்றத்தாருடன்கொன்று உயிர்களுக்கெல்லாம் இன்பமுண்டாகும்படி செங்கோல் செலுத்திப் (புத்திரசம்பத்துமுதலாகிய அஷ்டசம்பத்துகளுடன் வாழ்ந்துகொண்டிருந்து) அதன்பின்பு உன்புத்திரனுக்கு அரசாட்சிகொடுத்து உன்மனைவியுடன் எம்மிடத்திில்வந்து ஒப்பற்றபரமசிவனுடைய திருவடியிற்சேரக்கடவையென்றுசொல்லி-எ-று. பரசு- கோடாலி. (௫௭)

எடுத்துற முயங்கின்ற வேந்திழைக் கினிதுகூறி
யடுத்தநற் சேனைமுற்று மவன்றுணையாகத் தூண்டி
மடுத்தொலி முரசமார்ப்ப வாழ்த்திவன் மருமான்றன்னை
விடுத்தயன் விமானமூர்ந்து வெள்ளிவேதண்டஞ் சேர்ந்தான்

(இ-பு.) தன்புத்திரியையெடுத்து முகத்தோடுமுகமுறத் தழுவிக்கொண்டு அந்தமாதுக்கு இனியஉபசார வார்த்தைகள்சொல்லிப் பொருந்திய சேனைகளையெல்லாம் ராசகுமாரனுக்குத் துணையாகச் செல்லும்படி அனுப்பி ஒளிபொருந்திய பேரிகைவாத்திய முழங்கத் தக்கதாக வாழ்த்துதல் செய்துமருமகனுக்குவிடைகொடுத்து (அதற்குமேல்அந்தவித்தியாதான்) பிரமலோகத்து விமானத்தி லேறிக்கொண்டுபோய் வெள்ளியங்கிரியிற் சேர்ந்தான்-எ-று (௫௮)

குங்குமக் குவடுபோலக் குவிந்தெழு வயிரத்தோளான்
மங்கையர்க் கரசியஞ்சு மதியெனுந் திருவினோடும்
பங்கயத் தண்டார்முன்னோன் புடைவரப் பதாதிசூழத்
தங்குலக் குரிமையான விதர்ப்பதேசத்தைச் சார்ந்தான்

(இ-பு.) வித்தியாதரன்போனபின்பு குங்குமமலைபோலத் திரண்டுயர்ந்த திண்ணிய தோள்களையுடைய ராசகுமாரனானவன் (அழகு முதலியவைகளால்) மாதர்களுக்கு அரசியாகிய அஞ்சுமதியென்னுந் தன்மனைவியுடன் குளிர்ச்சிதங்கிய தாமரைமலரால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த பிராமணனாகிய தமையன் தன்அருகில்வரவும் சேனைகள்சூழவுஞ்சென்று தன்குலத்தாருக்கு உரியதாகிய விதர்ப்ப தேசத்தைச்சேர்ந்தான்-எ-று

நெடும்படைப் பகைவரெல்லா நேர்ந்துபோர் தருகவன்றேல்
அடும்படைத் தொழில்கைவிட் டெம்மடிப்பணி செய்கதத்த
மிடும்பினைத் தடியவந்தேம் யாமென விறைமைசாற்றி
முடங்கலிற் பொறித்துத்தூதிற் போக்கினன் முழவுத்தோளான்

(இ-பு.) இப்படியாக விதர்ப்ப தேசத்தைச்சேர்ந்த மத்தளம் போலத் திரண்டதோள்களையுடைய தருமகுத்தனென்னும் ராசகுமாரனானவன் மிகுந்தசேனைகளையுடைய பகைவர்களாகியமன்னவர்களே நீங்களெல்லாரும் வந்துசண்டைசெய்யுங்கள் இல்லாவிட்டால்போர்த்தொழிலை விட்டு நம்முடைய பாதத்தைவணங்கிக் குற்றேவல்செய்யக்கடவீர்கள் உங்களுடைய அகங்காரங்களை அடக்காம்வந்தோமென்று ராசவீரத்தைஓலையிற்செப்பியெழுதித் தூதர்கள்கையிற்கொடுத்தனுப்பினன்-எ-று. (௫௯)

கேட்டமன்னவர்க ளெல்லாங் கிரித்திண்டோள் குலுங்க நக்காங்
கூட்டுச்சுக்கனைய செங்கண் சிவந்திவ னொருவனேவெம்
வாட்டிறற் கெதிர்வனென்று வந்துவெங் களத்தாளர்
கோட்டமில் குணத்துத்தன்ம குத்தனும் போரினேற்றான்

(இ-பு.) இவ்வாறு அனுப்பப்பட்ட ஓலையை வாசிக்கச்சொல்லக் கேட்ட அரசர்களெல்லாரும் மலைபோன்ற புசங்கள்குலுங்கும்படி நகைத்துச் செந்தாமரை மலர்போன்றகண்கள் செம்மைநிறமேற்றிய அரக்குப்போலச் சிவக்கத்தக்கதாகக்(கோபங்கொண்டு)இச்சிறுவனொருவனோ எங்கள் வாள்வலிக்கு அஞ்சாமல் எதிர்க்கத்தக்கவனென்று (அவமதிப்பாகப்பேசித்தங்கள்தங்கள்சேனைகளுடன்)வெவ்விதாகிய யுத்தகளத்தில்வந்து சேர்ந்தார்கள் மாறுபடுதலில்லாத நற்குணத்தையுடையதருமகுத்தனும்போர்க்களத்தில் எதிர்த்தான்-எ-று. நக்காங்கு-இதிலிருக்கும்ஆங்கு அசைநிலை

எற்றெதிர் மலையவேந்த ரெறிபடை வடிவேலேந்திக்
கூற்றென வுடன்றுசாபங் குழைத்தடு பகழிதூர்த்தார்
வேற்றடந் தானைவீரர் வெருவந்து ரஞ்சியாங்கே
யாற்றல ராறாரன்ன தாசிளங்குமான் கண்டான்

(இ-பு.) இவ்வாறு எதிரிட்டுயுத்தஞ்செய்ய பகைமன்னவர்கள் எறிந்து கொல்லத்தக்க ஆயுதங்களையும் வடித்தவேலையும் ஏந்திக்கொண்டு நமன் போலக் கோபமுள்ளவர்களாய் வில்லைவளைத்துப்பாணங்களைப்பிரயோகஞ்செய்தார்கள் (அந்தப்பாணங்கள் பட்டுத்தேர்ப்பாகர் முதலானவர்க

ன்) தலைமுதலாகிய அவயவங்கள் அறுபடுவதைக்கண்டுபயந்து தன்படை வீரர்களெதிர்நின்று போர்செய்யமாட்டாதவர்களாய்ப் பின்னிட்டோடி னார்கள் அதைத்தருமகுத்தனென்னும் ராசகுமாரன்கண்டான்-எ-று. ()

வரிசிலை குழையவாங்கி வடிக்கணை தொடுத்துமாற்றார்
விரிபிணக்குவையின் குப்பை வெற்பென மலியவிட்டிப்
புனையுறு வடிவேலேந்தித் தாதையை முன்னம்போரிற்
றனையினிற் செற்றான்செம்பொற் றலையறத் தடிந்திட்டானே

(இ-பு.) நீண்டவில்லை நன்றாகவளைத்துக் கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகஞ்செய்து பகைவருடைய பிணக் குப்பைகள் எங்கும் பர்வதங்களைப்போலக் குவியும்படிகொன்றுமுன்பு வேலாயுதத்தையுடையவனாய் வந்துபோர்க்களத்தில் தன்பிதாவின் தலையானது பூமியில்விழும்படிசெய்தவனுடைய பொன்னாலாகிய மகுடமணிந்த தலையை யறுத்துத்தள்ளினான்-எ-று. (கூக)

படையலை வொழிகவென்னப் பணைமுரசறைவித்தம்பொற்
குடைபுவி நிழற்றமன்னர் குரைகழற் றளின்வீழ
இடையிடையமைச்சர் பாதத் தேத்துபுவணங்கிநிற்பத்
தொடையணி மார்பன்றங்க டொன்னக ரடைந்துபின்னாள்

(இ-பு.) தருமகுத்தனென்கிற ராஜகுமாரன் தன்பகைவனுடைய தலையைஅறுத்துத்தள்ளினவுடன் இனிப்போர்செய்வதை யொழியுங்களென்று பெரியபேரிகை சாற்றும்படி உத்தரவுசெய்து அழகிய பொன்மயமாகிய வெற்றிக்குடையானது பூமிக்கெல்லாம் நிழல்செய்யவும் போர்செய்ய வந்த மற்ற அரசர்கள் சத்தியாநின்ற வீரகண்டையணிந்த தன்னுடைய பாதத்தில் விழுந்துபணியவும் செல்லுமிடந்தோறும் வரிசை வரிசையாகநின்று மந்திரிமார்களும் தன்பாதத்தைத் துதிசெய்து வணங்கிநிற்கவும்வெற்றிமாலையணிந்த மார்பையுடையவனாய்ப் பழமையாகிய தங்கள் நகரத்திற் போய்ச்சேர்ந்து மறுநாள்-எ-று. (கூச)

மந்திரக்கிழ்வர்சூழ வணங்கலர் வணங்கிவாழ்த்தத்
தந்திரத் தலைவர்போற்றத் தமனிய மகுடஞ்சூடி
யைந்தருக் கொடைகண்டேத்த வவனியை முழுதுங்காத்தான்
கந்தினைத் தழன்றுபாயுங் கடாமுகக் களிற்றினானே

(இ-பு.) மந்திரிகள் சூழ்ந்திருப்பவும் பகைமன்னராயிருந்தவர்களெல்லாரும் வணங்கிவாழ்த்தவும் சேனாதிபதிகள் போற்றிசெய்யவும் பொன்னாற்செய்யப்பட்ட மகுடமணிந்துகொண்டு தேவலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களும் தான்கொடுக்குந் தியாகத்தைக்கண்டு புகழவும்கோபங் கொண்டு ஆரவாரித்துக் கட்டுத்தறியைப் பாய்கின்ற மதசலம்பெருகும்படியான கவடுதங்கியமுகமுள்ள யானைகளையுடைய தருமகுத்தராசனானவன்பூமிமுழுவதையுங்காத்தான்-எ-று,* யானைவெறிமிகுந்தால்கட்டுத்தறியாகிய ஸ்தம்பங்களை முறித்துவிட்டு வெளியேபுறப்படுகிறசெய்கையுள்ளனவாதலால் கந்தினைப் பாய்கின்றவென்றது * பஞ்சதருக்கள் அரிச்சந்தநம்-கற்பகம்-சந்தாநம்- பாரிசாதம் - மந்தாரம்- இவைகேட்டபொருளைக் கொடுக்கத்தக்கவைகள் (கூரு)

வேறு.

மைமணிகண்டன்றனையருச்சித்துவருஞ்சிரதோடத்தின்பலத்தாம்,செய்யகோறிசைகண் மீச்செலமாலைத் திங்கள்வெண் குடைபுவி கவிப்ப,ஐயரின்னடிமை யாமெனத்தெவ்வ ரடிதொழப் புவிமுழுதாண்டு, ஐயபோகந்துய்த்துநுகர்ந்து பின்னிறந்து துணைவியோடரன்பத மடைந்தான்

(இ-பு.) கருமைநிறந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவனைச் சனிப்பிரதோஷத்தில் அருச்சனைசெய்துவந்த பலத்தால் செங்கோலானது அஷ்டதிக்கு வரையில்செல்லவும் பர்வதினத்தின் சாயுங்காலத்தில் உதயமாகாநின்ற பூரணச்சந்திரனையொத்த வெள்ளைக்குடை பூமிமுழுவதையும் கவித்துக்கொள்ளவும் பகைவராகிய அரசர்கள் இறைவனே நாங்கள் உன்னுடைய அடிமையென்று பாதத்தை வணங்கவும் பூமிமுழுவதையுமாண்டு நல்லபோகங்களை அநுபவித்துப்பின்பு இவ்வுடலத்தைவிட்டுத்தன்மனைவியுடன் சிவபதஞ்சேர்ந்தான்-எ-று, (கூசு)

இன்னதேயருளுமிப்பிரதோட மென்னயாம்வழுத்துதற் கெளிதோ
அன்னவாகனனுங்கலுழவாகனனு மறிவதன்றதனுடைப்பெருமை, பன்னகாபரணன் பூசையிலிதுபோற்பலந்தரும் பூசையின்றென்று, முன்னை நான்முழுதுமுணர்ந்தவன்மொழிந்தான் முனிவரானோவரு மகிழ்ந்தார்

(இ-பு.) சனிப்பிரதோஷ பூசையின்பலனானது இத்தன்மையுள்ள இசுவரியங்களைத் தருமென்று நாம் விவரித்துச் சொல்வதற் கெளிதல்ல அதனுடையபெருமை பிரமதேவனாலும்விஷ்ணுவினாலும் அறியதக்கதல்ல, சர்ப்பாபரணங்களை அணிந்திருக்கும் பரமசிவனுக்குரிய பூசைகளில் இந்தப்பூசையைப்போல பலனைத்தரும்பூசைவேறொன்றுமில்லையென்று வேதாகம சாஸ்திரங்களையெல்லாம் உணர்ந்த சூதமுனிவர் சொன்னார் அதுகேட்டு நைமிசாரணியமுனிவர்கள் மனமகிழ்ந்தார்கள்-எ-று. ()

ஏழாவது-பிரதோஷபூசைமகிமை
அத்தியாயம் - முற்றிற்று.
ஆ விருத்தம்- ௱௩.

உ

சிவமயம்.

எட்டாவது.

சோமவாரவிரதமான்மிய அத்தியாயம்

சீதமதிப்பிள்ளைவெள்ளை யமுதங்காலுஞ் செஞ்சடைமைக் கருமிடற்றுப்பசியசாயன்,மாதுவளொருபுறத்து,நீறுபூத்தமாணிக்கமலையனைய வருணமேனி, நாதனதுசரித்திரத்தின் மேன்மையின்னு நவில்வனெனத் தவமுனிவரெவருங்கேட்பச், சூதனெனும்புராணமுனி முறைகளென்குஞ் சொன்னமுனியடிதொழுது பின்னுஞ்சொன்னான்... ... ...*

(இ-பு.) குளிர்ச்சிபொருந்திய இளந்திங்கள் வெண்மைநிறமுள்ள அமுதகிரணத்தைப் பொழிந்துகொண் டிருக்கும்படியான சிவந்தசடைமுடியினையும் மேகம்போன்ற காளகண்டத்தினையும் பச்சைநிறமுள்ள பார்வதிதேவியார் அமர்ந்த இடப்பாகத்தினையும் நீறுபூத்தமாணிக்க மலையையொத்த செம்மைநிறமுள்ள திருமேனியையுடைய பரமசிவனது சரித்திரத்தின் மேன்மையை யின்னுஞ்சொல்லுகிறேனென்று நைமிசாரணியத்தில் தவஞ்செய்யு முனிவர்களெல்லாருங் கேட்கும்படி சூதனென்கிற புராணமுனிவரானவர் நான்குவேதங்களுஞ்சொன்ன வியாசமுனிவர் பாதங்களை மனதில் சிந்தித்து வணங்கிப்பின்னுஞ் சொல்லுகின்றார். ()

நித்தியமா யானந்தவுருவமாகி நிறைவுபடும் பொருளாகிக் குறைபடாது, சத்தியமா யனைத்துயிர்க்கு முள்ளீடாகிச் சங்கற்பவிகற்பங்கட்கயலதாகி,வைத்தசிவதத்துவத்தினியல்புதன்னை வருகுரவ னருளினினிதுணர்ந்துவாழும், அத்தகையர் பிறப்பாழி யிடைநின்றேறி யழியாத சிவகதியினடைவரன்றே ... ... *

(இ-பு) நித்தியப்பொருளாயும் ஆநந்தமே திருமேனியாகக்கொண்டபொருளாகியும் குறைபடாமல் எங்கும்நிறைந்த பொருளாகியும் சத்தியமானபொருளாயும் எல்லாவுயிர்க்குள்ளும் உயிராகியும் சங்கற்பவிகற்பங்களுக்கும் அன்னியமாகியும் பொருந்திய சிவதத்துவத்தின் இயற்கையைக் கிருபையால் எழுந்தருளிய ஆசாரியர் அநுக்கிரகித்த முறைமையினுலுணர்ந்து வாழ்கின்ற தன்மையுடையவர்கள் பிறவிச் சமுத்திரத்தில் நின்று கரையேறி அழியாதசிவகதியை அடைவார்கள்-எ-று. சங்கற்பம் என்பது மனவியாபாரம்

(உ)

வாங்குதிரைக் கடலுடுத்த ஞாலமீதின் மண்ணாசை பொன்னாசை மகளிராசை, நீங்குதருமெனக்கருதித் துறந்துதங்கள் சிந்தனையைப் புலநெறியிற் செலுத்தாராகிப், பூங்கனக வரைச்சிலைகொண் டவுணர்மாயப் புரமெரித்த கயிலைமலைப் புனிதன்றாளி, னோங்குமறை நெறியின்வழிபாடுசெய்வோ ருதாவழி வருங்கவலை யொழிப்பர் மாதோ-

(இ-பு.) அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தினிடத்தில் மண்ணாசை பொன்னாசை பெண்ணாசைஎனனுமிம்மூன்றாசையும் பொல்லாங்கினைத்தருமென்றுகருதித்துறந்துதங்களானதையையும்புலன்வழியிற்செலுத்தாதவர்களாய்ப் பொலிவுள்ளமகமேருவாகியவில்லினால்அவுணர்களெல்லாரும்மாயும்படித்திரிபுரங்களையெரித்த கயிலாசவாசியாகியபரமசிவனுடையதிருவடிகளில்ஓங்கியவேதவிதிப்படிபூசைசெய்கின்றவர்கள்தாய்வயிற்றில்தங்கிப்பிறக்கும்படியானதுன்பத்தைநீங்குவார்கள்-எ-று.

எண்ணரிய விடயங்களுடனேகூடி யிடைவிடா தொழுகிடினுமியாவரேனுங், கண்ணுதல்வா னவனடியை மறவாராகிக் கருத்தினின்வைத்துறுங்காலங் கழிக்குமாந்தர், மண்ணகநீள் வரைப்பின்வரு போகமெல்லாம் வைகறுரு நுகர்ந்துடல மாயமேலை, விண்ணகரா டதனிடைச்சென் றடையுங்காலை விடயத்தான் வருந்துயர மிலவரன்றே.

(இ-பு.) எண்ணுதற்கரிய விஷயங்களுடனேகூடி இடைவிடாமல் காலங்கழித்தாலும் யாவர்களேயானாலும்நெற்றிக்கண்ணையுடையபரமசிவன் திருவடிகளை மறவாதவர்களாய்த் தங்களிருதயத்தில்வைத்துப் பொருந்தியகாலங்கழிக்குமாந்தர்கள் இப்பெரிய உலகத்தில்வரும் போகங்களையெல்லாம் நாள்தோறும் அனுபவித்து இவ்வுடலம்நீங்கி மேலுலகமாகிய தேவலோகத்தில் செல்லுங்காலத்தில் முன அனுபவித்த விஷயங்களால் நேரிடத்தக்க துயரங்களை அனுபவிக்கமாட்டார்கள்-எ-று. (௩)

நீடுபெரும் போகநுகர் வேட்கையெல்லா நீத்தறியா வொருவனிருவினையினீங்கி, வீடுபெறக் கருதியருந் தவங்கள்செய்தும் வேறுசமயத்தடைந்து மாவதுண்டோ, கோடுயரு நெடுங்கயிலை மலையின் மன்னுங் கொழும்பவள மணிவரையி னருணபாதந், தேடவிழு மலரின்வழி படுவனுயி லிரும்போக நுகர்ந்துயர்வீ டெய்துவானே.

(இ-பு.) மிகுதியானபோகங்களை அனுபவிக்க வேண்டுமென்கிற ஆசைகளை நீக்கஅறியாத ஒருவன் நல்வினை தீவினையென்னும் இருவினையினின்றும் நீங்கிமோக்ஷத்தை அடையவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அருமையாகிய தவங்கள்செய்தும் மற்றொரு சமயத்தில்சென்றும் கிடைப்பதுண்டோ சிகரங்களுயர்ந்த கயிலாயகிரியில் வீற்றிருக்குஞ்செழுமையான பவளமலைபோன்ற பரமசிவனுடைய சிவந்த திருவடிகளில் இதழ்களவிரிந்த மலர்களால் ஆராதிப்பானாகில் இம்மை மறுமை யின்பங்களை

அனுபவித்து அதற்குமேல் பதவிகளுக்கெல்லா மேலாகிய மோக்ஷத்தை
அடைவான்-எ-று. (௫

பிறையிறைஞ்சு நறைமிகுத் தொடையும்வானிற் பெருகிவருங்க
ங்கையு முடித்தவேணிச், கறையணியு மணிமிடற்று முக்கட்செய்ய கள்
ளுரிவை யந்தணன்றாள் பணியுமாந்தர், மறைகளொரு நான்குமவற்றங்
கமாய மன்னுபுராணங்கள் பதினெட்டுநாடி, யறையவரி தாயடிய
ரிற்றேரு மழிவில்பெருஞ் சிவகதியை யடைவர்தாமே.

(இ-பு.) இளஞ்சந்திரனுடன் வாசனைதங்கிய கொன்றைப் பூமாலையு
ஆகாயத்திற் பெருகி வருகின்ற கங்கா நதியையு முடித்திராநின்றசட
மகுடத்தையும் விஷந்தங்கிய காளகண்டத்தையும் திரிநேத்திரத்தையு
யானைத்தோற்போர்வையையும் உடையபரமசிவனது திருவடியைப்பணி
யுமாந்தர்கள் நான்குவேதங்களும் அவைகளுக்குரிய ஆறங்கங்களும் நிலை
பெற்றதாகிய பதினெண்புராணங்களும் ஆராய்ந்தறிந்து சொல்வதற்கரி
தாய அடியவர்கள்எளிதில்உணரும்படியான அழிவில்லாதபெரியசிவகதி
யை அடைவார்கள்-எ-று.* செய்யகளிறு என்றது யானைகளுக்குக்கூறு
லக்கணங்க ளமைந்ததென்னுங் கருத்தாகக்கொள்க.* பரமசிவன்தேவ
களுக்குள் பிராம்மணனாதலால் அந்தணனென்றார். (க

சொன்னவிவை யெவற்றினுக்கு மேலதாகிச் சுருதி சிவாகமம் பு
லுஞ் சோமவார, மன்னிவரும் பிரதோடந் தோறுஞ் செம்பொன் மகி
ச்சிலை வானவனை யுலகங்களீன்ற, கன்னியுடனாகமத்தின் வழிதப்பாது
டிமலரின் வழிபாடு புரியுமேலோர், ரின்னலெனும் பெருங்கடலின் கரை
கின்றேறி யிகபரத்துறும் போகநுகர்ந் திடுவரன்றே.

(இ-பு.) பரமசிவனைப் பூசிக்கும்படி யிதுவரையிற் சொல்லிவந்த பூசை
களெல்லாவற்றிலும் உயர்ந்ததாய் வேதங்களிலும் சைவாகமங்களிலும்
சொல்லப்படுகிற சோமவாரதினங்களில் பொருந்திவருகிற பிரதோஷ
தோறும் மகமேருமலை வில்லாகவுடைய பரமசிவனை உலகத்துயிர்களை
ன்ற கன்னியாகிய பார்வதிதேவியாருடன் ஆகமவிதிதவறாமல் வாசனை
பொருந்திய மலர்களால் ஆராதனைசெய்யும் பெரியோர்கள் துன்ப
ன்கின்ற பெரிய சமுத்திரத்தின் கரையிற்சென்றேறி இம்மைப் பயனை
மறுமைப்பயனையும் அனுபவிப்பார்கள்-எ-று. (எ

இல்லறத்தின் கிழமைதனைப் பூணுமாந்த ரியல்புடனில்லறக்கிழமை
பூண்டமாந்தர், தொல்லறத்தின் கொழுநருடன் வாழுமாதர் துணைவ
தமையிழந்து கையருழக்குமாதர், புல்லறத்தை யொருவியரன் சோமவ
ர பூசனையே புரிவரெனிற் புவனமீதில், னல்லலறுத் தன்னவருண் ணிவை
ந்தவெல்லா மவர்நினைவின் படியேவந் தடையுமன்றே.

(இ-பு.) இல்வாழ்க்கையி னுரிமையைப் பூணுதலர்களும் சிரமமா

இல்வாழ்க்கையைப் பூண்டவர்களும் பழமையாகிய அந்தஇல்வாழ்க்கையி
லேதங்கள் கணவருடன்வாழுமாதர்களும் கணவர்களையிழந்து துயரமனு
பவிக்கு மாதர்களும் பொருந்திய அந்த இல்வாழ்க்கையை நீங்கிப்பரமசி
வனது சோமவாரபூசையே செய்வார்களானால் இவ்வுலகத்தி னிடத்தில்
துன்பங்களை நீங்கி அவர்கள்மனதில் கருதியபொருள்களெல்லாம் அவர்
கள் கருத்தின்படி வந்துபொருந்தும்-எ-று. (அ)

என்றுபல தருமமெடுத் திசைத்தேமிப் பிமயமலை யரையன்பெற்ற
ப் பாவைகேள்வன், றொன்றுபடு மாகமங்க டோறுமுண்மைச் சுருதி
தொறும் புகன்றருளுஞ் சோமவாரத், தென்றுபெருங் கதையனைத்து ம
வற்றுள்மின்னு மொளியிழைசீ மந்தனியென் றும்மை போற்றுந், குன்ம
னைய பெருந்தவத்துக் கோதிலீதிக் கொம்பனையா ளேற்றதனை கூறு
வாமே.

(இ-பு.) முனிவர்களே இதுவரையில் பலவாகியசிவதரும சரித்திரத்
தைச் சொன்னோம் இன்னமும் பார்வதிதேவியார் கணவனாகிய பரமசிவ
ன் பழமையாகிய ஆகமங்கள்தோறும் உண்மையாகிய வேதங்கள்தோறு
ம் சொல்லியருளிய சோமவாரப் பூசையைக்குறித்தசரித்திர மனந்தம்அ
வைகளுக்குள் மின்னலையொத்த மாதர்களுக்கு ஆபரணம்போன்ற அழ
குள்ள சீமந்தனியென்று உலகத்தார்சொல்லப்பட்ட மலைபோன்ற தவத்
தினையும் குற்றமற்றதீதியினையுமுடைய ஒருமாது சோமவாரவிரதம் அ
னுஷ்டித்த கதையைச் சொல்லுகிறோம்-எ-று.* மின்னுமொளியிழை சீமந்
தனி என்பதற்கு மின்போலஒளிபொருந்திய ஆபரணமணிந்த சீமந்தனி
எனப்பொருள் கூறினு மமையும். (௯)

(வேறு.)

இளங்கதிர் நுழைகலா விருள்கொள் பூம்பொழில்
வளங்கெழு மாரிய வருத்த நாட்டினன்
விளங்கொளி மணிமுடி மிலைந்த வேந்தர்கோ
னளந்தறிவருங்கலைக் காழி யேயனான்.

(இ-பு.) சூரியனது இளங்கதிரும் நுழையக்கூடாத இருள்சூழ்ந்த பூ
ஞ்சோலைகளும் வளப்பங்களும் பொருந்திய ஆரியவர்த்தநாட்டையுடை
யவன் விளங்குகின்ற ரத்தின மகுடமணிந்த அரசர்களுக்கு அரசனாயிரு
ப்பவன் அளந்தறிதற்கரிய கல்வியுணர்ச்சியில் சமுத்திரத்தை யொத்
தவன்-எ-று. (௰)

எண்டிசை முழுவது மெழுது வண்புகழ்
மண்டலீகர்க்கெலா மகுடம் போல்பவன்
புண்டரு கொழுநிணப் புலவுகாறுவேற்
றிண்டிறற் சித்திர வருமனென்பவே.

(இ-பு.) அஷ்டதிக்குகளிலும் எழுதிய வண்மை தங்கிய புகழுள்ள அரசர்களுக்கெல்லாம் மகுடம்போலிருப்பவன் போர்முகத் தெதிர்க்கும் பகைவருடைய சரீரத்திற்பட்டுப் புண்ணிலுண்டான கொழுமையுள்ள நிணத்தின் புலால்நாற்றம் நாறுதற் கேதுவான வேலேந்திய திண்ணிய வெற்றியையுடைய சித்திரவருமனென்னும் பெயருள்ளவனென்று சொல்வார்கள்-எ-று. (௰௧)

ஆயவ னெண்ணிலா யாகங்க ளாற்றியுந்
தாயென வுயிரெலாந் தழையப் போற்றியு
மீயுறு முகிலென செறிக்கை மாமழை
தூயநன் மறையவர் சுமப்ப நல்கியும்.

(இ-பு.) அந்தச் சித்திரவருமனென்பவன் அளவில்லாத யாகங்கள் செய்தும் தாயைப்போல உயிர்களெல்லாந் தழையும்படி ஆதரித்தும் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகம்போலப் பொன்மழையைப் பிராமணர்கள் சுமந்துகொண்டு போம்படிகொடுத்தும்-எ-று. (௰௨)

மரகத வரையென வயங்கு மாதவன்
சுரைகழல் வணங்கியுங் குன்ற வில்லினுற்
புரமெரி கொளுவிடப் பொருத வன்கழ
லிரவினும் பகலினு மலர்பெய் தேத்தியும்.

(இ-பு.) மரகதரத்தின மலையையொத்த பச்சைநிறமுள்ளமகாவிஷ்ணுவின் ஒலிக்கும் வீரகண்டையணிந்த திருவடிகளைவணங்கியும் மகமேரு வில்லினால் திரிபுரத்தில் தீபற்றப்பொருத பரமசிவனுடைய திருவடிகளைப் பூவிட்டருச்சித்து இரவினும்பகலினும் தொழுதுஞ்செய்தும்-எ-று. (௰௩)

முழவொலி படுகடன் முத்தவெண்குடை
நிழலிடை யுலகெலா நெறியிற் காக்குநாட்
குழன்மொழி மனைவியர் வயிற்றிற் கொல்சின
மழவிடை யெனச்சில மகப்பெற் றனரோ.

(இ-பு.) முழவம்போல ஓசைபொருந்திய கடலினிடத்துண்டான முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளைக்குடை நிழலில் முறையாக உலகத்தைக் காக்குநாளில் வேய்ங்குழல்போல இனிமையுள்ள வசனத்தையுடைய மனைவியர்கள் கருப்பத்தினிடமாக இளவயதுள்ள ரிஷபமென் சொல்லத்தக்க சிலபுத்திரர்களைப் பெற்றான்-எ-று. * கொல்சினவிடை எதிரிட்டவர்களைக் கொல்லத்தக்க கோபத்தையுடைய ரிஷபம். (௰௪)

பெற்றபி னிறைமகன் பெண்மகாரெமக்
குற்றில வெனநினைந் தோன்ற லாதன
நற்றவ மிழைப்பவோர் மனைவி நாண்மலர்ப்
பொற்கொடி யெனவொரு திருவைப் பூத்தனள்.

(இ-பு.) புத்திரர்களைப்பெற்றபின் அவ்வரசன் பெண்குழந்தைகள் நமக்குண்டாகவில்லையேயென்றுகருதிப் பலபல நல்லதவங்களைச்செய்ய ஒரு மனைவியானவள் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் மகாலட்சுமிபோல ஒருபுத்திரியைப் பெற்றாள்-எ-று. (௰௫)

(வேறு.)

தாமந்திகழ்தரு மெய்ப்பொடு தன்புதல்வியை யருமன்
சேமந்தனி யெனவேயருள் செல்வத்தக மகிழ்வா
ஞமந்தனை மறைநீதியி னன்னாளிடை நவிலா
வாமந்திக ழுமையைத்தரு மிமவானின் மகிழ்ந்தான்.

(இ-பு.) வெற்றிமாலை பிரகாசித்துக் கொண்டிருக்கும் புஜங்கள் பூரிக்க மனப்பூரிப்பையுமுடைய சித்திரவருமன் தான்பெற்ற புத்திரிக்குமனமகிழ்ச்சியுடன் வேதவிதிப்படி நல்லதினத்தில் சீமந்தனியெனப்பெயர்சூட்டி சவுந்தரியமுள்ள உமையவளைத் தனக்குப் புத்திரியாகப்பெற்ற மலையரையன்போல மகிழ்ச்சியடைந்தான்-எ-று. (௰௬)

மதவெங்களி விறல்யானைய மன்னன்றரு மேவற்
குதவுந்தன தமையோர்களை யுயர்சோதிட நாலின்
விதமொன்றிய மறைவாணரை யழையின்னென விடுப்பக்
கதமொன்றிய காலிற்கடி தேகிக்கொடு வரவே.

(இ-பு.) மதத்தினால் வெவ்விய மயக்கங்கொண்டிருக்கும் வெற்றிபொருந்திய யானைப்படையுள்ள அவ்வரசன் தான் உத்தரவுசெய்யும் ஏவலுக்குத் தடையில்லாமல் உதவுகின்றவர்களாகிய ஏவலாளிகளை நோக்கி உயர்ந்த சோதிஷ சாஸ்திர வகையெல்லாம் உணர்ந்த சாஸ்திரிகளை அழைத்துக்கொண்டு வாருங்களென்று அனுப்ப அவர்கள் சண்டமாருதம்போல அதிவிரைவாகச்சென்று அழைத்துக்கொண்டுவர-எ-று. (௰௭)

கண்ணுற்றன னவராப்பல கணிதத்துறை வல்லீர்
பெண்ணிற்கணி யெனயானருள் பெண்ணின்றிற னெல்லா
மண்ணிற்கரு தொண்ணுநிலை வருசோதிட விதியா
லெண்ணித்துணி வுறுசாதக மிதுவென்றினை சொன்னான்.

(இ-பு.) வந்த சோதிஷசாஸ்திரிகளைப் பார்த்துப்பலவாகியசோதிஷசாஸ்திரமுணர்ந்தவர்களே பெண்களுக்குஆபரணம்போல நான்பெற்றபெண்ணின் திசாபலன்களையெல்லாம் இவ்வுலகத்தில் அறிதற்கரியநிலைமையுடைய சோதிஷசாஸ்திரவிதியால் ஆராய்ந்து நிச்சயமான சாதகமெழுதுங்களென்று அவ்வரசன் சொன்னான்-எ-று. (௰௮)

என்றான்முன மொருவேதிய னவடன்னிரு விழியு
முன்றானிலை பெருசாதக முற்றம்படி யெழுதிப்
பொன்றார்களை கழன்மன்னவ புவிமாமகள் புணரு
மன்றாமினை வேண்மோவென வழுவாதுரைசெய்தான்

(இ- பு) இவ்வாறு சொல்வதற்குமுன் ஒருபிராமணன் அந்தப் பெண்ணினுடைய இருவினையையும் ஆராய்ந்து நிலைபெற்ற சாதகமுங்குறைவிலாமலெழுதிப் பொன்னாற் செய்யப்பட்ட வீரகண்டையணிந்த மன்னவனே! பெருமைபொருந்திய பூமிதேவி சேரும்படியான மன்னவனே இவை கேளென்று தலைகுனிந்து சொன்னான்-எ-று. ஏனை சொன்னானென்றால்

(வேறு.)

மனத்தினி லுமையாள் மகப்பெறுஞ்சதி வடிவினி லுயர்தமயந்தி
குணத்தினிற்கமலை கற்பினிற்சனகி கொழுங்கலைக்கியன்மகளென்னப்
பணைத்துறையுலக முழுவதும்புகழும் படிபதினாயிரம் பருவந்
தனைப்பிள்ளாக் கொழுநனோடுறையுந் தாரபதி நின்மகளென்றான்.

(இ-பு) அரசனே! உம்முடையபுத்திரிகல்லியாணத்தில் உமையவளென்று சொல்லத்தக்கவள், புத்திரர்களைப் பெறுவதில் அதிதியென்று சொல்லத் தக்கவள், சவுந்தரியத்தில் உயர்ந்த தமயந்தியென்று சொல்லத் தக்கவள், நற்குணத்தில் திருமகளென்னத்தக்கவள், பதிவிரதா தருமத்திற் சீதையென்னத்தக்கவள், செழுமையுள்ள கலைகளுக்குஞ் சரஸ்வதி யென்று சொல்லத்தக்கவளென்றுசொல்லி ஆதிசேஷன்முடியில் பொருந்திய இவ்வுலக முழுவதும் புகழும்படி பதினாயிரம்வருஷம் கணவனை விட்டுப்பிரியாமல் வாழ்ந்துகொண்டிருப்பாள்-எ-று. (உ0)

என்றவனுரைத்த சாதகப்பொருளி னியல்பெலாங் கேட்டுள மகிழ்ந்து பொன்மணிமூதினித்தோட் புரவலனவற்குப் பொருணனிகொடுத்தனனிருப்ப, பின்னையுமொருவ னேமிரண்டாண்டிற் பிறைநுதன் மங்கலமிழக்கும், வென்றிவேலிறைவ வென்றனு நிருபன் வெய்துயிர்த்தணைமிசைவிழுந்தான்.

(இ-பு.) இவ்வாறு அந்தப்பிராமணன் சொல்லின சாதகப்பொருளினியல்பையெல்லாம் கேட்டு மனமகிழ்ந்து அழகுநிறைந்த திண்ணிய தோளையுடைய ராசன் அவனுக்கு மிகுந்தபொருள்கொடுத்து (சந்தோஷத்துடன்) இருக்க மற்றொருபிராமணன் (சாதகம்பார்த்து) வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசனே இந்தப்பெண்ணானவள் பதினாலாம்வருஷத்தில் மங்கிலிய மிழப்பாளென்றுசொன்னான் (அப்படிச்சொல்லவே) அவ்வரசன் பெருமூச்சுவிட்டுக்கொண்டு சோகத்தினால் ஆசனத்தின்மேல் விழுந்துவிட்டான்-எ-று. (உக)

பைவிரிஅரவ மிடிவிழ வெருவும் பான்மைபோலரசன்னல்
வெய்துயிர்த்திருந் தகணிதரைப்போக்கி விதிவலியறிகுவமென்ன, மெய்த
வழ்வடிவேற் புரவலனுளத்தி னினைவுடனொழுகு நாளினின், மைவிழிச்
செவ்வாய் வெண்ணகையவட்கு மங்கையம்பருவம் வந்ததுவே.

(இ-பு.) படத்தைவிரிக்காநின்ற சர்ப்பமானது இடிவிழுந்தால் பயந்து

சுருண்டுவிழுந் தன்மைபோல இரண்டுநாழிகைவரைக்கும் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்து பின்பு ஒருவாறுதெளிந்து சோதியர்களை அனுப்பிவிட்டு ஊழ்வினையின் வன்மையை அறிவோமென்று பகைவர் உதிரத்தில் தவழும்படியான வடித்தவேலையுடைய அவ்வரசனானவன் மனதில் ஞாபகத்துடனிருக்கும்நாளில் மையணிந்த கண்களையும் சிவந்த வாயினையும் வெண்மைநிறம் பொருந்திய தந்தங்களையுமுடைய அந்தக் கன்னிகைக்கு அழகிய மங்கைப்பருவம் வந்தது-எ-று. (உஉ)

மங்கையம் பருவம் வருதலுமவளை வழிபடுசேடியர் குறுகித்
திங்களிவானுதலீ யேழிரண்டாண்டிற் றிருவிழந் திருக்குவையென்ன
வங்கவள் வெருவி யர்க்கியவர்க்கி யாகியமுனிவரன் மனைவி
தங்கியசாலை சென்றவட்டொழுது தன்றுயர் நிலை சொன்னாள்

(இ-பு) மங்கைப்பருவம் வந்தமாத்திரத்தில் அவளைப் பூசித்துச்செய்துகொண்டிருக்கிற தோழிகள்வந்து இளந்திங்கள்போல வளைவாகிய ஒளிதங்கிய நெற்றியினையுடையவளே நீபதினாலாம்வருஷத்தில் மங்கிலியமிழந்துவிடுவை யென்றுசொல்ல (அதைக்கேட்டு) அவள்பயந்து யர்க்கியவர்க்கிமுனிவர் பத்தினியாகிய மயித்திரை யென்பவளிருக்கும் பன்னசாலைக்குப்போய் அவளைத்தொழுது தனக்குநேரிட்டிருக்கிற துயர் நிலையைச் சொல்லுவாள்-எ-று. (உ௩)

அருந்ததியனைய கற்புடையன்னா யடியனே னுரைப்பதொன்றுளதால்
பெருந்திருவிழப்பன்யானெனக்கணிதர் பிதாவுட னுரைத்தனரதனாற்
றிருந்தியநின்னை வந்தடைந்தனனித் தீவினைப்பிணி யகற்றுதற்கோர்
மருந்தருள்கென்றென் றடிதொழுதிரப்ப மயித்திரையும் பின்னுரைத்தாள்

(இ-பு) அருந்ததியையொத்த கற்பினையுடையதாயே, அடியேன் சொல்லுவதோர் வார்த்தையிருக்கின்றது (அதுஎன்னவெனில்) நான் பதினாலாம்வருஷத்தில் மங்கிலியம் இழப்பேனென்று சோதிஷர்கள் என்பிதாவுடன் சொன்னார்கள் அதனால் கற்பினால் மேன்மைபெற்ற உன்னைச் சரணென்றடைந்தேன் இந்தத்தீவினையாகிய நோயை நீக்குவதற்கு ஒரு அவுஷதம் கிருபைசெய்யென்று பாதத்தைவணங்கி பிரார்த்திக்க ஜேஷ்டமுள்ள மயித்திரை பின்புசொல்லுகிறாள்-எ-று. (உ௪)

புரிகுழலணங்கே சோமவாரத்திற் புனிதநீ ரினிதுடனாடிப்
பரிவுடனுணவு முதலியதுறந்து மோனமாய்ப் பவித்திரமாகித்
தெரிமலர்கொணர்ந்து பரமனேடுமையைச் சிவாகமவிதிமுறை வழுவா
துரியபூசனைசெய் தருமறையவர்க்கு முவப்புடனன்னமு மளித்தே

(இ-பு) கட்டுப்பட்ட அளகத்தையுடைய பெண்ணே! சோமவாரத்தில் பரிசுத்தமாகிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து வெறுப்புடனே ஆகாரமுதலானதுகளை நீக்கி மவுனமாய்ப் பரிசுத்தையாய் மலர்களை ஆய்ந்து கொ

ண்டுவந்து பரமசிவனுடன்பார்வதிதேவியாரையும் சைவாகமவிதி
ருமல் உரியபூசைசெய்து அரிய பிராமணர்களுக்குச் சந்தோஷத் துட
அன்னமுங்கொடுத்து-எ-று. (உ

இன்னணபரனை யேத்திநீவழிபட் டீசனே யென்னுறு துணையே
யுன்னுடையருளே வேண்டுவனென்ன வுரைத்துநல்விரதமு முடித்த
மன்னியவிரதந் தரும்பெருநலத்தான் மாதுநின் கணவனுக்குரிய
தன்னுடைஞால மல்லதுவேண்டுந் தாரதலமளவிலவுளவாம்

(இ-பு) இந்தப்பிரகாரம் பரமசிவனை ஆராதித்துத் துதிசெய்து
னே! எனக்குப்பொருந்திய துணையே தேவரீருடைய திருவருளையே
ருப்புகிறேனென்றுசொல்லி நீநல்விரதத்தையும் நிறைவேற்றினால்
பெற்ற இவ்விரதந்தரும் பெரியபலத்தினால் மாதே உன்னுடையகணவ
க்குரிய சொந்தத்தேசமு மல்லாமல் அவன்விரும்புந்தேசம் லவுண்
கும்-எ-று விரதமுடித்தலாவது-உத்தியாபனஞ்செய்தல் (உ

சந்தமுமலரு மரிசனத்துடனே சாத்தினால்வளம்பல தழைக்கும்
நந்தலிற்றூப மளித்திடி னுடல நறுங்கடிசமழும தல்லா
னந்தமிறீப மளிக்கினேருளவா மவியளித்திடினுண வுளதாம்
கைபசந்தொடிபாகு வெள்ளிலைபளிக்கிற் பதுமமாளிகை மயில்சேரும்

(இ-பு) சீமந்தனியே மஞ்சளுடன் சந்தனமும் மலர்களும் சாத்தினு
பலவளங்கள் உண்டாகும், கெடுதலில்லாத தூபங்கொடுத்தால் சரீரம்
லவாசனை கமழ்ந்துகொண்டிருக்கும், இதுவு மல்லாமல் குறைவு பட
தீபங்கொடுத்தால் அழகுண்டாகும், அன்னம் நிவேதித்தால் ஆகாரம்
ண்டாகும், பாக்கும் வெள்வெற்றிலையும் நிவேதித்தால் தாமரை மல
ய ஆலயத்தில் வீற்றிருக்கும் திருமகள் நிவாசங்கிடைக்கும்-எ-று (உ

அஞ்செழுத்தோதி னட்டமாயோக மடைந்திடுமாகுதிபண்ணி
னெஞ்சினினினைத்த கருமங்கள்யாவு நினைத்தவா றெளிதினிற்கூடும்
வஞ்சிநுண்ணிடையா யந்தணர்க்கடிசின் மகிழ்வுடனுழங்கின்மற்றத
லெஞ்சலிற்றருதிக் கடவுளரெவரு மிருங்களியெய்துவாரறிநீ

(இ-பு) பஞ்சாக்ஷரஞ் சபித்தால் அஷ்டாங்கயோகஞ் சித்தியாம்,
வயாகஞ் செய்தால் மனதில் நினைத்த காரியங்க ளெல்லாம்நினைத்தப
ளிதிற்கைகூடும், பூங்கொடிபோல நுண்ணிய இடையையுடையவளே
மகிழ்ச்சியுடன் முனிவர்களுக்கு அன்னங்கொடுத்தால் அதனால் குறைவி
ல்லாத மேம்பாட்டினையுடைய தேவர்களெல்லாரும் மிகுந்தகளிப்பை
டைவார்களென்று நீயறிவாயாக-எ-று (உ௮

என்றுரைவழுவால் யான்மொழிந்தருளு மிந்தவாறிளமதிக்கொழுந்து
ன்று செஞ்சடில வானவன் றன்னை மாதுடன் வழிபடத் துணிந்த

லுன்னுடை யுளத்திற் கவலையுந்துயருமொழிந்திடுமுண்மையீ தென்னப்
பன்னருஞ்சிறப்பிற் பார்ப்பனியுரைத்துப் பைந்தொடியேயெனப் பணித்
தாள்.

(இ-பு) என்சொல் தவறாமல் நான்சொல்லிய பிரகாரம் இளந்திங்
கட் கொழுந்துபொருந்திய செஞ்சடையை யுடைய பரமசிவனைப் பார்வ
தியாருடன் ஆராதனைசெய்யத் துணிந்தால் உன்னுடைய மனவியாதியு
ம் துயரும் நீங்கிவிடும் இதுநிச்சயமென்று சொல்லுதற்கரிய சிறப்பினை
யுடைய பிராமணஸ்திரீயாகிய மயித்திரேயி யென்பவள் சொல்லிப் பசிய
பொன்னாற் செய்யப்பட்ட வளையலணிந்த கையினை யுடையவளாகிய மா
தே! நீ செல்லென்று உத்தரவுசெய்தாள்-எ-று (உக)

தொழுதுகைத்தணங்கு புகன்றவைகேட்டுச் சோமவாரந்தொறுஞ் சிவனை
வழுவறவுமையோ டாகமவிதியின் மட்டவரல் வழிபடு நாளி
னெழுமுறழ்திணிதோ ளனன்றருகுமர னிந்திரசேனன்மா மதலை
முழுவலிபெறுசந்திராங்கதனென்போன்முருகனிற்கட்டழகுடையோன்

(இ-பு) பிராமணகுலமாதாகியமயித்திரேயி சொன்னவைகளைக்கேட்டுச்
சீமந்தனியென்பவள் சோமவாரந்தோறும் குற்றமில்லாமல் ஆகமவிதிப்
படி பார்வதிதேவியாருடன் பரமசிவனை ஆராதனைசெய்யுநாளில் எழு
த்தம்பத்தையொத்த பலம்பொருந்திய தோள்களையுடைய நளச்சக்கிரவ
ர்த்திபெற்ற புத்திரனாகிய இந்திரசேனனுடைய பெருமையுள்ள புத்திர
ன் மிகுந்த பராக்கிரமம் பொருந்திய சந்திராங்கத னென்பவன் சுப்பிர
மணியரைப்போல மிகுந்த சவுந்தரியமுள்ளவன்-எ-று (ஙி0)

அன்னவன்றனக்குச் சித்திரவருமனரியமாதவத்தினி லீன்ற
தன்னுறுதனயை வனிதையர்க்கணங்காய்த் தயங்குசீமந்தனி யென்னுங்
கன்னியைமகிழ்ந்து கொடுத்தலும்விதியிற் கடிமணமுடித்துநன் னலங்க
ளின்னமுதாகச் சிறிதுநாளுகர்ந்தங் கிருந்தனனிருந்திடு நாளின்

(இ-பு) அத்தன்மையுள்ள சந்திராங்கத னென்பவனுக்குச் சித்திரவரு
மனென்னும் அரசன் பெருமைபொருந்திய அரியதவத்தினாற்பெற்றதன்
னுடைய புத்திரியாய மாதர்களுக்கெல்லாம் தெய்வம்போல் விளங்கும் சீ
மந்தனியென்னுங் கன்னிகையை மகிழ்ச்சியுடன் கொடுக்கவும் சாஸ்திர
விதிப்படி விவாகஞ்செய்துகொண்டு சிலநாள் நல்ல இன்பங்களை யினிய
அமுதம் போல அனுபவித்துக்கொண் டிருந்தான் அப்படி யிருக்கும் நா
ளில்-எ-று (௩௧)

(வேறு)

தருவெண் வழங்குவண்கைச் சந்திராங்கதனு நண்பின்
மருவியதோழர்தாமு மணிநிற யாணர்நன்னீர்

பெருகிய யமுனையாற்றிற் பெயர்தரு தோணிமீது
வெருவில ராகியன்றே றேறினர் விதியின்கோட்பால்

(இ-ப) கற்பகவிருக்ஷம்போலக்கொடுக்கத்தக்க வளப்பம் பொருந்தி கையினையுடைய சந்திராங்கதனும் நட்புடன்பொருந்திய தோழர்களுமாகிய இவர்கள் மணிநிறம்பொருந்திய அழகியநல்ல நீர்பெருகுகின்ற யமுனையாற்றினிடத்தில் செல்லுகின்ற தோணியின்மேல் விதிவசத்தால் அச்சமுறாதவர்களாய் ஏறினார்கள்-எ-று (௧

திரையெடுத் தெறிதலானுஞ் செலவிடு கடுப்பினாலும்
நிரைநிரைமாந்தர்தொக்கு நெருங்குதலானும் நீருள்
விரைவொடு சுவன்றிப்பீரயும் வேகமிக் கிடுதலானுங்
கரைகடப் பரிதாயோடங் கவிழ்ந்தது கவிழ்தலோடும்

(இ-பு) அலைகளெடுத்து வீசுவதினாலும் செல்லும்படி விடுகிற விசையினாலும் வரிசைவரிசையாக மனிதர்சேர்ந்து நெருங்கியிருப்பதினாலும் நீரினிடத்து விரைவுடன் பொருந்திப்பாயும் வேகமிகுந்து தள்ளுதலினாலும்கரைகடப்பதரிதாய்ப் படவானது கவிழ்ந்தது அப்படிக்கவிழ்ந்தமாத்திரத்தில்-எ-று (௧

சந்திராங் கதனுந்தோழர் தாங்களும் புனலினுழை
வெந்திற லிடங்கரந்தத் தோழரை விழுங்கவேந்தன்
முந்தைநல் வினையின்பான்மை முளைத்தெழ வுரகர்வாழு
மந்தமில் பிலத்துப்புக்கோ ரருநதிக் கரையைச் சார்ந்தான்

(இ-பு) (அந்தத்தோணியிலிருந்த) சந்திராங்கதனுந் தோழர்களும் நீருக்குள் முழுகிவிட (அப்படிமுழுகினவர்களில்) வெவ்விதான வலியுள்ள முதலைகள் அந்தத்தோழரை விழுங்கின (சந்திராங்கதனென்னும்) அரசனோவென்றால் முன்சனனங்களில்செய்த தருமமானது முளைத்துவந்துதவ நாகங்கள்வாழும்முடிவில்லாதபிலத்துக்குட்போய்அவ்விடத்திருக்கும் அரியநதிக்கரையைச் சார்ந்தான்-எ-று (௧

நதியினி லாடுகின்ற நாகர்த மகளிர்நோக்கி
யதிசய மெய்தியின்னோ னார்கொலென் றருகுசேர்ந்து
புதியவன் றன்னைத்தங்க டக்ககன் புரவுபூண்டு
வதிதருங் கோயிலாங்கண் வருகெனக் கொண்டுபுக்கார்

(இ-பு) அந்த நதியில் விளையாடுகின்ற நாகக்கன்னியர்கள் பார்த்து ஆச்சரியமுற்று இவன் யாவனென்று அவனருகில்வந்து விருந்தினனாய் வந்தவனைத் தங்கள் அரசனாகிய தக்ஷகன் காவல்கொண்டு வாசமாயிருக்கிற அரண்மனையினிடத்துக்கு வாவென்று அழைத்துக்கொண்டுபோனார்கள்-எ-று (

புக்கவ ரவனைவாயிற் புறத்தினி னிறுவிப்போகித்
தக்ககன் றிருமுன்காலை யடைந்தமை சாற்றலோடு

மக்கணைத் தவனைநீவி ரழைமின்க ளென்னமாதர்
மக்களிற் றிலகவீண்டு வருகென வேந்தர்வேந்தன்

(இ-பு) சந்திராங்கதனை அழைத்துக்கொண்டுபோனவர்கள் அவனைவாயிலினிடத்து நிறுத்திவிட்டுத் தாங்கள்மாத்திரம் உள்ளேபோய்த்தக்ஷகன் சமுகத்தில் சந்திராங்கதன் வந்திருப்பதைச் சொல்லவும் அப்பொழுதே அழையுங்களென்றுசொல்ல அந்தமாதர்கள்போய் மனிதர்களுக்குள் திலகம்போன்றவனே யிங்கு வாவென்று கூட்டிக்கொண்டு போகப் போனஅவ்வரசன்-எ-று (௧௬)

ஆயிரந் தபனர்தொக்காங் கவிர்கதிர்சொரிவதேய்ப்ப
பாயொளி மவுலிதோறும் பருமணி யிமைக்கவைகு
நாயகன் றன்னைநாக மடந்தையர் நடுவட்டோன் றிச்
சேயுயர் விசும்பிற்றேவிற் பொலிதரு தேவைக்கண்டான்

(இ-பு-) ஆயிரஞ் சூரியர்கள் ஒன்றாகச்சேர்ந்து விளங்குகின்ற கதிர்களைச் சொரிவதையொப்பாகப் பரவுகின்ற ஒளியையுடைய பணமகுடந்தோறும் பருத்தமாணிக்கம் பிரகாசிக்கும்படி வீற்றிருக்கின்றதக்ஷகனென்னும் நாகராசனாகிய நாககன்னியர் கூட்டத்தினடுவில் தோன்றி மிகவும் உயர்ந்ததாகிய விண்ணுலகி லிருக்கும் இந்திரன்போல விளங்குகின்ற தேவனைக்கண்டான்-எ-று.நாகராசனாகிய தேவைக்கண்டான் என்க ()

கண்டடி தொழுதுநின்ற காளையக் காளைதன்னைத்
திண்டிறல் வேலினாய்நின் றேயமுங் குலனுமற்று
மொண்டிறற் றாதைபேரு முரைத்தியென் றுரைத்தலோடு
முண்டக முகைபொற்செங்கை கூப்புபு மொழியலுற்றான்

(இ-பு) கண்டு தன்பாதத்தை வணங்கிநின்றபோது (தக்ஷகராசன்) அந்தராசகுமாரனைப்பார்த்துப் பலமும் வெற்றியுமுள்ள வேலாயுதத்தையுடையவனே! உன்னுடைய தேசமும் குலமும் எங்குள் விளங்கும்படியான வெற்றியையுடைய உன் பிதாவின் பெயரும் சொல்லென்று சொன்னவுடன் தாமரை யரும்புபோல் கைகளைக் குவித்துக்கொண்டு சொல்லத்தொடங்கினான்-எ-று (௧௮)

நெடுங்கடல் வளாகவைப்பி னிடதநா டெனதுநாடு
கடுங்கலிக் கிகலாய்வந்த மன்னவன் கருதலார்க
ளடங்கிடப் பொருதவைவே லாற்றலா னறத்தின்மிக்கா
னடுங்கலின் மனத்துச்செங்கோ னளனென வுளனோர்வேந்தன்

(இ-பு) நெடிய சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தினிடத்தில் நிடததேசமென்று சொல்லப்படுவது என்னுடையதேசம் கொடியதாகிய பாவத்துக்குப் பகையாய்வந்த அவனும் பகைவராயிருப்பவர்கள் அடங்கத்தக்க

தாக யுத்தஞ்செய்துவென்ற கூர்மைதங்கிய வேலாயுதமேந்தும் பராக்கிரமமுள்ளவனும் தருமத்தில் மிகுந்தவனும் நடுக்குதலில்லாத மனத்தையுடையவனுமாகிய செங்கோலென்னும் (நீதிசெலுத்துகின்ற) நளனென்னும் பெயருடைய ஒருராசனுள்ளன்-எ-று (௩

கொடையினி னறிவின்மானக் குலத்தினிற் புகழினேரி
னடையலர்ச் செருக்கும்வைவே லாற்றலி னொருவனவ்வான்
றொடையணிந் துடையதேவி தொழத்தகு வடமீனென்ன
நடையறி புலவரோற்றி நவில்தமயந்தியென்பாள்

(இ-பு) அவ்வரசன் இன்னுமுளத்தன்மையுள்ளவனென்றால் கொடையிலும் அறிவிலும் மானமுள்ள குலத்திலும் புகழிலும் அழகிலும் சத்துருக்களைப் போர்செய்துகொல்லத்தக்க பராக்கிரமத்திலும் தனக்கு ஒருவருமொவ்வாதவன் மாலைசூட்டியஇவ்வரசன்மனைவியானவள் எல்லாரும் வணங்கத்தக்க அருந்ததியென்று ஒழுக்கமாவது இத்தன்மைய தென்று அறிந்து நடக்கும் அறிஞர்களாகிய பெரியோர்கள் புகழ்ந்து சொல்லத்தக்க தமயந்தியென்பவள்-எ-று (௪

அவடிரு வயிற்றின்வந்த வரும்பெறற் புதல்வனும்
இவள்பரி திருப்பனிநதி சேனன்மற் றெனதுதாதை
கவளமால் யானைச்சந்திராங் கதனெனும் பெயரினேன்யான்
தவளவாண் முறுவற்சீமந் தனியைவேட் டுறையுநாளின்

(இ-பு) அந்தத் தமயந்தியின் அழகிய கருப்பத்தினின்றும் உற்பவித்த பெறுதற்கரிய புத்திரனாகிய இடக்குச்செய்யாமல் வீராவசிப்பட்டுச்செலுத்தக்க குதிரைப்படையையுடைய இந்திரசேனமகாராசனென்னுடைய பிதா (போர்முனையில்) பெரிய யானையைப்போத்தவனாகிய சந்திராங்கதனென்னும் பெயரையுடைய நான் வெண்மைநிறந்தங்கிய ஒளியுள்ள பற்களையுடைய சீமந்தனியை விவாகஞ்செய்துகொண்டுவாழும்நாளில்-எ-று கவளயானை-கவளமுண்ணும்யானை (௪

தோழரும் யானும்வாவு துணைபரி கடாவுமாபோ
லாழுறு வினையாலொன்று முணர்கிலா தோடமேறி
யாழுநீர் யமுனையாற்றுள் விடுதலு மம்பிதாழ்ந்து
காழுறு கழையந்தள்ளிக் கவிழ்கதனு கவிழ்ந்தவேலை

(இ-பு) தோழர்களும் நானும் தாவுகின்ற விரைவினையுடைய குதிரையைச் செலுத்துவதுபோல பழமையாகப் பொருந்திய வினையினால் ஒன்றும் யோசியாமல் தோணியிலேறி ஆழ்ந்தநீரையுடைய யமுனையாற்றில் அதிவிரைவாகச் செல்லும்படி விடவும் அந்தத்தோணி தாழ்ந்து வயிரம்பொருந்திய மூங்கிற்கோலையுந் தள்ளிக்கொண்டு கவிழ்ந்துவிட்டது அப்படிக் கவிழ்ந்தபோது-எ-று (௪

இறந்தனர் நண்பரெல்லாம் யானினை யெய்தவூழாற்
றுறந்துயிர் விடாதுவந்து தொழுதன னென்றுகூற
அறந்தரு சிந்தையானு மதிசயித்தரசேநீங்க
ளுறந்தெரிந் தேத்துந்தேவன் யாரென்றான் செம்மல்சொன்னான்

(இ-பு) என்னுடைய தோழர்களெல்லாரும் இறந்துபோனார்கள் நான் உன்னை அடையும் ஊழினால் உயிர்துறந்துபோகாமல்வந்து தொழுதேனென்றுசொல்லத்தருமந்தங்கியமனத்தையுடைய நாகராசன் ஆச்சரியமுற்று அரசனே! நீங்கள் உண்மையறிந்து துதிசெய்யுங்கடவுள் யாவனென்றான் அதற்குப்பெருமையிற்சிறந்தவனான சந்திராங்கதன் சொல்லுகின்றான்-எ-று (௪௨)

(வேறு)

யாவனொருவ னெவ்வுயிரு மெல்லாவுலகங் களுமுடையான்
யாவனொருவன் கடவுளருக் கெல்லாமிறைமை பூண்டுள்ளான்
யாவனொருவன் றிரிபுரமு மெரியக்கனகச் சிலைகுனித்தான்
யாவனொருவன் விடநுகர்ந்தா னவனேயெங்கட் கிறையோனே.

(இ-பு) எல்லாவுயிரையும் எல்லா வுலகங்களையுமுடைய ஒருவர் எவரோ தேவர்களுக்கெல்லாம் தேவராயிருக்கும் ஒருவர் எவரோ திரிபுரங்களும் எரியும்படி பொன்மலையை வில்லாகவளைத்த ஒருவரெவரோ விஷமுண்டவர் எவரோ அவரேயெங்களுக்குக்கடவுள்-எ-று. (௪௩)

என்றுமெவனி ராசதத்தி னயனையின்று படைப்பிப்பா
னென்று மெவன்சாத் துவிதத்தி னரியையின்று புரப்பிப்பா
னென்று மெவனே தாமதத்தி னரனையின்று துடைப்பிப்பா
னென்று மவனே யெங்குலத்தை யினைத்தாணிழ லளிக்குமால்.

(இ-பு) எந்நாளும் இராசதகுணத்தினிடமாகப் பிர்மதேவனை உண்டாக்கி இவ்வுலகங்களைச் சிருஷ்டிக்கச்செய்கின்றவரெவரோ எக்காலமும் சத்துவகுணத்தினிடமாக விஷ்ணுவையுண்டாக்கி ரக்ஷிக்கச்செய்கின்றவரெவரோ எக்காலமும் தாமதகுணத்தினிடமாக அரனை உண்டாக்கி உயிர்களைச்சங்கரிக்கச் செய்கின்றவரெவரோ அவரே எக்காலமும் எங்களைத் தம்முடைய திருவடிநீழலில்வைத்து ரக்ஷிப்பார்-எ-று. (௪௫)

(வேறு)

ஆரணந் தனக்குமுன்னே யாரணமாகி மன்னுங்
காரணங் களுக்குமுன்னைக் காரணமாகித் தோன்றும்
பூரண வொளிகட் கெல்லாம் பூரண வொளியாய் நின்று
நாரணனுணர்கிலாத நாதன்யா முணருநாதன்.

(இ-பு) வேதங்களுக்கெல்லாம் முதல்வேதமாகியும் நிலைபெற்ற காரணங்களுக்கு முதற்காரணமாகியும் தரிசனப்படுகிற பூரணவொளிகளு

க்கெல்லாம் பூரணவொளியாயுமிருந்து விஷ்ணுவினாலும் அறியப்பட
த நாதன் நாங்கள் தியானஞ்செய்யுநாதன்-எ-று. (சக

வானமே முதலாம்பூத வகைதொறு முள்ளீடாகித்
தானரு ளுயிர்கட்கெல்லாஞ் சான்றுமா யவற்றினெல்லா
மானபற் றென்றுமின்றி யரியதன் வில்லமையாலே
யூனமி லுலகமெல்லாந் தன்வயத் தொழுகநின்றும்.

(இ-பு) ஆகாயமுதலாகிய பஞ்சபூதங்கள்தோறும் அணுவசனுக்குள்
டாகியும் தாம் அருளப்பட்ட உயிர்கட்கெல்லாம் சாக்ஷியாகியும் அவை
களெல்லாமாகிய பற்றுக்களில் தாக்கொரு பற்றுமில்லாமல் அருமை
யாகிய தன்வல்லமையினால் கெடுதலில்லாத உலகமெல்லாம் தன்வசப்
பட்டு நடக்கநின்றும்-எ-று. பஞ்சபூதங்களுக்குத் தனித்தனியே உள்
ளாயிருப்பது என்னவெனில்? பிரிதிவி என்னும் பூதத்தில்-சத்தம் பரிசம்
ரூபம் ரசம் கந்தமாயும், அப்புவினிடத்தில்-கந்தநீங்கலாக மற்ற நான்கா
கியும், தேயுவில்-ரசமுங்கந்தமுநீங்கலாக மற்றமூன்றாயும், வாயுவில்-சத்
தம்பரிசமாகியும்-ஆகாயத்தில் சத்தமாகியுமிருப்பது. (சஎ)

ஒருவனுப் முதல்வனாகி யுறுவரங் கொடுப்போனாகி
மருவுமுக் குணங்கணீத்து மனத்திடை நினைத்தற்கொண்ணாத்
திருவரு ளுடையவுண்மைத் திகழொளி யாயதெய்வந்
குருபரனருளின் யாங்கள் வழிபடக் குலவுந்தேவே.

(இ-பு) தனக்குமேலொரு கடவுளில்லாமல் தானொருவனே கடவுளா
கியும் எல்லாவற்றிற்குங்காரணனாகியும் அன்பர்களுக்குமிகுந்தவரங்கொ
டுப்பவனாகியும் பொருந்திய முக்குணங்களையுநீக்கி மனதினிடத்தி னி
னைத்தற்கரிய திருவருளையுடைய உண்மையாய்விளங்குகின்ற சோதியா
யிருக்குந் தெய்வமே குருபரனருளினாலே நாங்களாராதனைசெய்யத்தி
ருவுளமிரங்குந் தெய்வமாம்-எ-று. (சஅ)

வினைவரும் பாதகங்க ளைந்தையு நீக்கியின்பக்
கனைகட றவைப்பண்ணுஞ் சண்ணுதல் கருத்திலாது
வினையவ வடியர்செய்த சிற்றியற் பூசையேனும்
பனையள வாகக்கொள்ளும் பரமனெம் பரமனாவான்.

(இ-பு) நினைத்தற்கரிய பஞ்சமாபாதகங்களையும் அடியார்க்கு நீக்கிப்
பேரின்பமாகிய கடலினிடத்துப் பொருந்தச்செய்யும் பரமசிவனும் உரி
த்தில்லாமல் தினையளவாக அடியார்கள்செய்வது சிறிய இயல்பினையு
டைய பூசையேயாயினும் பனையளவாகக்கொள்ளும் பரமனுமானவனே
எங்களுக்குக் கடவுளானவர்-எ-று. கனை என்பது ஒலி-சிற்றியற்பூசையா
வது ஆகமவிதியின்றிச்செய்யும்பூசை. (சக)

கங்கையை முடியிற்சூட்டிக் கவுரியைப் பாகம்வைத்துப்
பொங்கர வங்கடம்மைப் புரிகுழை யணிந்துபாதச்
செங்கமலத்தைவேதச் சிரத்தினி னிருத்திதேவ
ரங்கையா லடப்பநின்ற வவனெம்மை யளிக்குந்தேவே.

(இ-பு) கங்கையைத் திருமுடியிலணிந்து பார்வதியை இடப்பாகத்தி
ல்வைத்து விளங்குகின்ற சர்ப்பங்களை விரும்புங்குண்டலமாகத் திருச்
செவியில்தரித்துத் திருவடித்தாமரைகளை வேதமுடியில்வைத்துத் தே
வர்களெல்லாரும் அழகியகைகளைக்குவித்துத் தொழநிற்கும் தேவனே
எங்களைரக்ஷிக்குந்தேவனும்-எ-று. (ருய)

ஆதவா வென்னுந்தூய வருமணந் தவிசினந்த
னுத்தம மூர்த்தியாகி யுயர்குணங் கடந்துவைகு
நித்தனே யெமக்குநாத னீண்முடி வேந்தேயென்று
கொத்தலர் நறிய பைந்தார்க் கோமக னுரைத்தலோடும்.

(இ-பு) ஆறத்தன்மைகளாகிய பரிசுத்தமுள்ள அழகிய ஆசனத்தினிட
த்தில் உத்தமமூர்த்தியாகிய உயர்ந்தகுணங்களைக்கடந்து வீற்றிராநின்ற
நித்தியனே எங்களுக்குக்கடவுள்-நீடிய மகுடமுள்ள நாகராசனேயென
று கொத்தாகிய மலர்களால் தொடுக்கப்பட்ட வாசனைதங்கியமாலையணி
ந்தராசகுமாரன்சொல்லவும்-எ-று. * ஆறத்துவாவாவன-மந்திரம் பதம்
வன்னம் புவனம் தத்துவம் கலை. (ருக)

ஒறியனீ யாயுமென்முன் சிவனது தகுதியெல்லா
மறிவுற மொழிதலாலே யருங்களி யெய்துகின்றேன்
நெறிகமழ் தொடையாய் நினபால் விளம்புவ தொன்றுண்டென்ன
பொறிவரிப் பகுவாய்நாகர் புரவலன் புகலலுற்றான். [ப்

(இ-பு) வாசனைகமழ்கின்ற பூமாலையணிந்த ராசகுமாரனே! நீ சிறியவ
னாயிருந்தும் பரமசிவனுடைய பெருமைப்பாட்டினையெல்லாம் என்னி
டத்தில்தெரியும்படி சொன்னமையால் மிகுந்த களிப்பினை யடைந்தேன்
ஆதலாலினி உன்னிடத்தில் நான்சொல்லும்வார்த்தை யொன்றுண்டென்
று பொறிகளையும் வரிகளையும் பகுப்பாகிய வாய்களையுமுடைய நாகரா
சன்சொல்லுகிறான்-எ-று. (ருஉ)

இவ்வுல கனைத்துஞ் செய்ய வெரிமணி மயமதாகு
மவ்விய மகன்றநாக மகளிரு மரம்பையன்னார்
துவ்விடு புனல்கள்யாவுஞ் சுராருணு மமுதமாகுந்
திவ்விய பொழில்க ளெல்லாஞ் செழுந்தரு வாகுமன்றே.

(இ-பு) இந்தவுலகமெல்லாம் செவ்விதாகிய நீயையொத்த நிறமுள்ள
மாணிக்கமயமாயிருக்கின்றது-பொறாமையாகிய குற்றம்நீங்கியநாகமகளி
ரோவென்று லரம்பாஸ்திரீகளையொத்தவர்கள் உண்ணுகின்ற நீரெல்லா

ம் தேவருண்ணும் அமிர்தமாயிருக்கின்றது - இவ்விய மானசோலை
ல்லாம் செழுமையுள்ள கற்பகச்சோலையாயிருக்கின்றது-எ-று. (௫

நாைதிரை மருவாவெய்ய நமன்றமர் நணுகல்செய்யா
ருரைதரு குரிசினீயிங் குறைசென வுரைத்தலோடுந்
தரைபுகழ் மெந்தையா வென்பன் றித் தாயரில்லான்
றிரைதரும் பவளவாயென் மனைவியுஞ் சிறியனென்றான்.

(இ-பு) மேன்மைபொருந்திய ராசகுமாரனே இங்கிருப்பவர்களை ந
யுந்திரையும்பொருந்தா,யமதூதர்களிவ்விடத்துக்குவாரார்கள்? ஆதலா
யிவ்விடத்திலேதானேவாசமாயிருவென்றுசொன்னவுடன்ஐப ... லே
த்தாராற்புகழப்பட்டஎன பிதாவானவர் என்னையல்லது வே ... இ
ல்லாதவர் கடலிலுண்டாகும் பவளம்போன்ற செவ்வாயை ... டைய எ
மனைவியுஞ் சிறியனென்றுசொன்னான்-எ-று. (௫

அன்றியு மன்னோரம்பி கவிழயா ளுற்றுளாழ்ந்
பொன்றின னென்னவன்றே பொன்றுதல் பொருந்தினரோ
கன்றிய காலஞ்செய்த கற்பனை யறிகிலேன்யான்
வென்றிவேல் விறைவவெம்மூர் மேவுவன் விடுத்தியென்றான்.

(இ-பு) இதுவுமல்லாமல் ஆற்றில்தோணிகவிழ நான் அதில் அமிழ்
இறந்தேனென்று அப்போதே அவர்களிறந்துபோனார்களோ வெவ்வி
காலஞ்செய்த கற்பனையின்னதென்று நானறிகிலேன் ஆதலால் வெற்
பொருந்திய வேலையுடைய நாகராசனே எங்களூர்க்கு நான்போகிறே
உத்தரவுகொடுவென்று ராசகுமாரன்சொன்னான்-எ-று. (௫

ஈதவ னுரைத்தலோடு மெருந்தபே ருவகைபொங்க
கோதறு குணத்துநாகக் குரிசிலு முனைழயர்க்கூவி
மேதகு கலன்களாடை நிதலம் வெறுக்கைமற்றுங்
காதலிற் கொணர்திரென்று காவலற் களித்துப்பின்னும்.

(இ-பு) அந்தராசகுமாரன் இந்தவார்த்தைசொன்னபோது மனதிலு
ண்டாகிய மிருந்தசந்தோஷம்பொங்கக் குற்றமற்றகுணத்தையுடைய நா
கராசன் வலாளிகளையழைத்துமேன்மைபொருந்திய ஆபரணங்கள் வஸ்
திரங்கள்முதலாகியவைகளும் பொன்னும்மற்றுமுள்ளவைகளும ஆசை
யுடன்கொண்டுவாருங்களென்று (உத்தரவுசெய்து அவர்களால் கொண்டு
வரப்பட்ட அப்பொருள்களையெல்லாம்) அவ்வரசனுக்குக் கொடுத்துப்பி
ன்னும்-எ-று. (௫௬)

திரைக்கட லேழுஞ்சூழ்ந்து சேண்முக டளக்குநேமி
வரைத்தலை தன்னையொல்லை மண்டலமிட்டு மீளு
முரைப்பரி தாயவேகத் தொருவயப் பரியுநல்கி
விரைக்களி கலவைச்சாந்தும் வேண்டுவ வெறுப்பால்கா.

(இ-பு) அலைகளையுடைய ஏழுகடலையும் ஒவ்வொன்றாகச் சூழ்ந்துவந்து
அண்டமுகட்டையளக்காநின்ற சக்கிரவாளகிரியின் சிகரத்தினிடத்தை
யும் அதிகவிரைவாக மண்டலமிட்டுவரும்படியானசொல்லுதற்கரியவே
கத்தையுடைய பலமுள்ள ஒருகுதிரையுங்கொடுத்து வாசனை தங்கிய கூ
ட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பும் வெறுக்கும்படிகொடுத்து-எ-று.()

அளித்தவை சுமப்பமற்றோ ரயிலெயிற் றரக்கன்றன்னை
விளித்துடன் விடுத்துப்பின்னும் வேறொரு புயங்கராசன்
களிப்புறு குமரன்றன்னைக் காக்கெனப் பணித்தலோடுந்
துளித்தலை முகிலன்னானுந் தொழுதனன் விரைவிற்போகி.

(இ-பு) கொடுத்த இப்பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு போவ
தற்காகக்கூர்மையானபற்களையுடைய ஒருராக்ஷதனை அழைத்து அவ்வர
சனுடன் அனுப்பி மேலும் வேறொரு நாகராசனையழைத்துக் களிப்புப்
பொருந்திய இந்தராசகுமாரனைப் பாதுகாத்துக்கொண்டுபோவென்று
உத்தரவுசெய்தான்-இப்படி உத்தரவுசெய்தவுடன்துளியாக முதற்பெய
லைச்சொரியும் மேகத்தையொத்த ராசகுமாரனும் நாகராசனைவணங்கி
விடைபெற்றுக்கொண்டு விரைவுடன்சென்று-எ-று. (௫௮)

குனைபுன லதனுணக குமரனு நிருதன்றானும்
புனையறு மனத்தராகிப் புரிவுகொண் டருகிற்போத
வினைபுரி புகைத்தநீருள் வெய்யவ னெழுதன்மானத்
தனைபுகழ் குருசிலேறன்றி யமுனையங் கரையைச்சார்ந்தான்.

(இ-பு) ஒலிக்கும் நீரையுடைய யமுனையாற்றினிடத்தில் நாககுமாரனு
ம் அரக்கனும் குற்றமில்லாத மனத்தையுடையவர்களாய்ப் பாதுகாத்து
க்கொண்டு தன்னருகில்வர விரைவுடன்செல்லுகின்ற குதிரையைச்செ
லுத்திக்கொண்டு சமுத்திரத்தினிடத்துச் சூரியன் உதயமாவதுபோல
உலகம்புகழ்கின்ற ராசகுமாரன் நீர்மேலெழுந்து அழகிய யமுனையாற்றங்
கரையைச்சார்ந்தான்-எ-று. (௫௯)

பாதலந் தன்னின்வீழ்ந்து படருழ வாதுவந்த
தாதவிர் நறியமாலைத் தராபதி குமரன்செய்கை
யோதின னிப்பாலன்னோ னுற்றதற் சுற்றமுற்ற
தீதறு துயரமெல்லாந் தெளிவுறச் செப்பலுற்றேன்.

(இ-பு.) பாதாளத்தில்வீழ்ந்து துன்பம் அடையாமல்வந்தமகரந்தத்து
டன மலர்கின்ற வாசனைதங்கிய மாலையணிந்தராசகுமாரன்செய்கையை
இதுவரையிற்சொன்னேன் இனி அவன் ஆற்றில்வீழ்ந்ததற்காகஅவனுடை
ய சுற்றத்தார்பொருந்திய கொடியதுயரங்களையெல்லாம் விவரமாகச்
சொல்லுகிறேன்-எ-று. (௬௰)

நெளிதிரை யமுனையாற்றி னீர்விளை யாடல்செய்து
தளிதரு புயலினல்குஞ் சந்திராங் கதனுமன்னு
ளிபெறு தோழன்மாரு மம்பியிற் கவிழ்ந்துநீரின்
விளிதரு தன்மையெல்லா மாதலன் வினாவிற்கேட்டான்.

(இ-பு.) நெளிகின்ற அலையையுடைய யமுனையாற்றினீரில விளையாடித் துளியைத்தருகின்ற மேகம்போலத் தானங்கொடுக்கத்தக்க சந்திராங்கதனும் அவனுடைய தயையைப்பொருந்திய தோழர்களும் தோணியுடன்கவிழ்ந்து நீரில் இறந்துபோனதன்மையெல்லாம் அவன்மாமனாரான இந்திரவர்மன் அப்போதேதேள்விப்பட்டான்-எ-று. (௬௧)

கேட்டலு மெழுந்தியாற்றின் கிளர்கரை குறுகிவந்து
வாட்டிறற் குரிசிலேயென் மருகவோ மருகவோவென்
றீட்டிய துயரமீக்கொண் டெடுத்தெடுத் தழைத்தல்[illegible]ளாக்
கோட்டமின் மனத்துமன்னன் குமரரு மயங்கி[illegible]ந்தார்.

(இ-பு.) கேள்விப்பட்டமாத்திரத்தில் எழுந்து [illegible] நதியின்கரையில் வந்துசேர்ந்து வாள்யுத்தஞ்செய்யத்தக்க வல்லமையையுடைய ராசனே! என்மருமகனேஎன்மருமகனேயென்றுநேரிட்டதுயரம் அதிகமாகக்கொண்டு எடுத்தெடுத் தழைத்தலைக்கேட்டு மாறுபடுதலில்லாதமனதையுடைய அவ்வரசன்புத்திரர்களு மயங்கிச்சோர்ந்தார்கள்-எ-று. (௬௨)

மற்றவன் மனைவிமாரு மனங்குழைந் தழுதுளைந்தார்
செற்றமில் கமலையன்ன தெரிவைசீ மந்தனிக்குஞ்
சொற்றன ரவளுங்கேட்டுச் சுடுதொழி லுருமுவீழப்
புற்றர வழுங்குமாபோற் புரண்டனள் புலம்புகின்றாள்.

(இ-பு) அவனுடைய மனைவியர்களு மனமுருகி அழுதுமெலிந்தார்கள் குற்றமில்லாத திருமகளையொத்த சீமந்தனியென்னு மாதுக்குஞ்சொன்னார்கள் - அவள் அந்தச்சேதியைக் கேட்டுச் சுடுகின்ற செய்கையையுடைய இடிவிழுந்தால் புற்றிலிருக்கும் சர்ப்பங்கள் வருந்துவது போலப் புரண்டுபுரண்டு அழுகின்றாள்-எ-று. (௬௩)

(வேறு,)

நீர்மலிந்த பண்ணை நிடதத்தார் மன்னவனே
தார்மலிந்த மார்பா தமியே னுயிர்த்துணையே
சீர்மலிந்த சொல்வாணர் தீயகலிக் கோடைதெறுங்
கார்மலிந்த வண்கைக் களிறே களிறேயோ.

(இ-பு) நீர்நிறைந்த வயல்களையுடைய நிடததேசத்தி லிருப்பவர்கள் அரசனே! பூமாலைநிறைந்த மார்பையுடையவனே! தமியேனுகியஎன்னுயிர்த்துணையே! சீர்பொருந்திய பாவலர்களுடைய கொடியவறுமையாகிய கோடையைக் கெடுக்கத்தக்க மேகம்போன்ற வளப்பந்தங்கிய கையையுடைய மதகசமே! மதகசமே-எ-று. (௬௪)

புன்னைச் செழுங்காவிற் பூவணையின் யாமுயங்கு
முன்னைப் பெரும்போகம் வேண்டாய் முனிந்துதா
னென்னைப் பிரிந்தாய்நீ யென்றாலும் யானறமியே
னுன்னைப் பிரிந்தாவி யுய்யேன்மற் றுய்யேனே,

(இ-பு.) செழுமைதங்கியபுன்னைவனத்தில் மலர்மஞ்சமேல் நாமிருவருஞ்சேருகின்ற மிகுந்ததாகிய முன்போகத்தைவிரும்பாமல் வெறுத்து நீயென்னைப்பிரிந்துவிட்டாலும நானுன்னைப்பிரிந்து தமியளாயுயிர்பிழைத்திரேன் பிழைத்திரேன்-எ-று. (௬௫)

[illegible]றென் றாற்றி யிலங்கிழைதன் கைமலராற்
[illegible]றென்று கொங்கை குழையும்படி புடைத்து
நின்[illegible]ன்றுஞ் சொல்லா னெருப்பிடைபுக் கியான்விழுந்து
பொன்[illegible]ம் பொழுதன்றிப் போமோ துயரென்றாள்,

(இ-பு.) சீம[illegible]னியானவள் இவ்வாறு சொல்லிச்சொல்லி யழுது செந்தாமரை மலர்போன்ற தன்கைகளால் மலையையொத்த தனங்கள்குழையும்படி அடித்துக்கொண்டு நின்று யாதொரு பேச்சும்பேசாமல் நான் போய் நெருப்பினிடத்தில்விழுந்து இறந்தகாலத்திலல்லது இந்தத்துக்கந்தீராதென்றாள்-எ-று. (௬௬)

இங்கிவட னிவ்வண்ண நைபவிகல் வேந்தன்
பொங்குதுயர் மாதவராற் போக்கியுளந் தெளிந்து
திங்கடிரு வான்முகத்துச் சீமந்தனி யுறையு
மங்குறுழு சென்னிமணிக் கோயில்வந் தடைந்தான்,

(இ-பு.) சீமந்தனியானவள் இவ்வாறு துயரப்பட்டுக்கொண்டிருக்க பலமுள்ள ராஜனானவன் தனக்குண்டான துயரத்தை முனிவர்களால்நீக்கி மனந்தெளிந்து சந்திரனையொத்த அழகினையும் ஒளியினையும்பொருந்திய முகத்தினையுடைய சீமந்தனியிருக்கும் மேகத்தையளாவுகின்றசிகரத்தையுடைய ரத்தினங்கள்பதித்த மாளிகையிற்சேர்ந்தான்-எ-று. (௬௭)

தாதையைக்கண் டுள்ளந் தளரா வடிவீழ்ந்த
மாதினைத்தன் கையார வாங்கி யெடுத்தணைத்துப்
பூதலத்து யாவர் வினையைப் புறங்கண்டார்
காதலித்து மாதே கவலா தொழிகென்றான்.

(இ-பு) வந்தபிதாவைக்கண்டு மனந்தளர்ந்துபாதத்தில்விழுந்த புத்திரியைத் தன்கைகள்பொருந்தவாரி யெடுத்தணைத்து மகளே! பூலோகத்திலிருப்பவர்களில் வினையைக்கடந்தவர்கள் யாருமில்லை (ஆதலால்)கணவனிடத்தில் விருப்பம்வைத்துத் துயரப்படாதேயென்றான்-எ-று. (௬௮)

என்னு முரையு மிகந்து படருழந்து
தன்னு ளயர்ந்து தலைவன் றனையடைவான்

வன்னி புகுவதன்றி வாழே னெனவரற்று
மின்னி னுணுகிடையை வேந்தன் விலக்கினான்,

(இ-பு) இவ்வாறு தன்தகப்பன்சொன்ன சொல்லையுந்தவிர்த்தா னக்குள் துன்பம் அடைந்து சோகங்கொண்டு கணவனிடத்திற்போ சேர அக்கினிப்பிரவேசமாவதேயல்லாமல் இனியுயிருடன் வாழேனெ ன்றுசொல்லி அழுகிற மின்னலைப்போல நுண்ணிதான இடையையுடை ளாகிய தன்மகளை அக்கினிப்பிரவேசமாகவொட்டாமல் அவ்வரச லக்கினான-எ-று.

தந்தை விலக்கத் தரியலாள் சாவோரீஇச்
சிந்தை நலியுந் துயரஞ் சிறிதகற்றிப்
புந்தி தெளியச் சிவனையே பூசைசெய்வே
னெந்தை யறிவா யெனக்கயினி யாயினாள்,

(இ-பு) தன்பிதாதடுத்ததினால் மங்களிர்போல் சாயலையுடை மந்தனியானவள் சாதலையொழிந்து மனம்வருந்தும்படியான துயரம் நீங்கிப் புந்திதெளிவடைந்ததினால் இனிப் பரமசிவனையே பூசை வேன் என்னையனே நீயறிவாயென்றுசொல்லி யிருந்துவாளுள்-எ-று.

எண்ணார் தொழவா ழிகலிந்திர சேனன
றண்ணார் புனல்வீழ்ந்து தன்மதலை மாய்ந்ததுவும்
பேண்ணா ரணங்குகைமை பெற்றதுவுங் கேட்டாற்றிக்
கண்ணா ரவலப் புனலாற் கடல்செய்தான்,

(இ-பு) பகைவரெல்லாம்வணங்கும்படி வாழ்கின்ற பலமுள்ள ரசேனமகாராசன் தன்புத்திரன் குளிர்ச்சிபொருந்திய யமுனையாற் விழுந்து இறந்ததுவும் மருமகள் கைம்பெண்ணானதுவுங்கேள்விப்ப அழுது கண்களிலிருந்து பெருகாநின்ற துக்கநீரினால் சமுத்திரமொ ண்டாக்கினான்-எ-று.

சுற்றமு மற்றாருந் துயர்க்கடலின் மூழ்கினார்
மற்று நிடதத்தா ரெல்லா மனங்கவன்று
கொற்றவனே யெங்கொளித்தா யென்றுட் குழைந்தழுதார்
பற்றலருங் கேட்டார் பழம்பகைதீர்ந் தோமென்றார்.

(இ-பு) பந்துசனங்களா யுள்ளவர்களும்நல்ல தாயுந் துக்கசாகர ல்முழுகினார்கள்-இவர்களுமன்றி நிடததேசத்தாரெல்லாரும் மனக்க யுற்று எங்களரசனே யெங்கேயொளித்தாயோவென்று மனங்குழை அழுதார்கள்-பகைவர் இந்தச்செய்தியைக் கேள்விப்பட்டுப் பழம்ப ர்ந்தோமென்றார்-எ-று.

காலமிஃ தென்னக் கலிமாவ   கைமாவும்
வேலிலகு தானையுடன்   யார் சமர்வேட்டுக்

கோலியம ராடிநளன் கோமகனைத் தேவியுடன்
ஞாலமெலா நொந்து நடுங்கச் சிறைவைத்தார்.

(இ-பு.) அப்படிக்கேள்விப்பட்ட பகைவர்கள் இந்திரசேனனைவெல் தற்கு இதுதான்காலமென்று கனைக்காநின்ற குதிரைகளுந் துதிக்கை யையுடையயானைகளும் வேலேந்தியபதாதிகளுடன்மைச் சென்றுயுத்த ஞ்செய்தலைவிரும்பிச் சூழ்ந்துபோர்செய்து நளச்சக்கிரவர்த்தியினுடை ய புத்திரனாகிய இந்திரசேனனை அவன்மனைவியுடன் கொண்டுபோய்த் தேசமெல்லாம் நொந்துநடுங்கும்படி சிறையில்வைத்தார்கள்-எ-று (௭௩)

மல்கு நிதியும் வளநாடு மாநகரும்
செல்வ முழுதுஞ் செருநரோ கைக்கொண்டு
பல்பகல்வந் தாளுநாட் பாதலத்தை விட்டெழுந்த
வில்கெழுதோள் மைந்தன் வினையம் விளப்புவாம்.

(இ-பு.) நிறைந்த நிதிகளையும் வளப்பம்பொருந்திய நாட்டினையும் பெருமைபொருந்திய நகரத்தையும் மற்றுமுள்ள செல்வமெல்லாவற்றை யும் பகைவர்கள் கைக்கொண்டுவந்திருந்து பலநாள் ஆண்டுகொண்டிருக் கும்நாளில் பாதாளத்தைவிட்டுவந்த வில்பொருந்திய புசத்தையுடைய ச ந்திராங்கதனுடைய செய்தியைச்சொல்லுகிறோம்-எ-று. (௭௪)

(வேறு.)

நன்னதிக் கரையின்வந்து நளன்றரு மிந்திரசேன
னின்னருண் மதலைநாமா வியல்புட னேறுமெல்லை
யன்னவன் மனைவியாயத் தவர்களோ டணுகித்தானும்
பொன்னிரு கரையுஞ்சிந்தும் பூம்புன லாடவந்தாள்.

(இ-பு.) நளச்சக்கிரவர்த்திபெற்ற புத்திரனாகிய இந்திரசேனனுடைய இனிதாகிய அருள்பெற்றபுத்திரனானவன் நல்ல யமுனையாற்றங்கரையில் வந்து தாவிச்செல்லுங்குதிரையின்மேல் இயல்புடனேறும்போது அவன் மனைவியாகிய சீமந்தனியானவள் தோழிக்கூட்டங்களுடன்சென்று இர ண்டுகரையிலும் பொன்சிந்துகின்றயமுனையாற்றில்நீராடவந்தாள்-எ-று.

ஐயிரு காதஞ்சந்தத் தருங்கடி கமழச் செம்பொன
மெய்யணி திகழநொய்ய வெண்டுகின் மருங்கிற்சாத்தித்
துய்யவ ரிருவர்காணத் துனைப்பரி யேறிபாடு
மையறு குமாரற்கண்டு மனமறு குற்றநின்றாள்.

(இ-பு.) நீராடவந்தவள் பத்துக்காதம்வரையில் கிடைப்பதற்கரியசந்த னவாசனை பரிமளிக்கவும் சரீரத்திலணிந்திருக்கும் ஆபரணங்கள்பிரகா சிக்கவும் நுண்ணியதாகிய வெள்ளைவஸ்திரம் இடையிலணிந்து பரிசுத் தர்களான நாகராசனும் இராக்கதனுமாகிய இருவரும்பார்க்கும்படிவே

கமாகச்செல்லத்தக்க குதிரையிலேறிக்கொண்டு விளையாடுகின்ற குற்ற
நீங்கிய அந்தராசகுமாரனைக்கண்டு மனங்கலங்கினின்றாள்-எ-று. (௭

மங்கல மிழந்துபெய்யின் மணவணி துறந்துநின்ற
கொங்கலர் கோதைதன்னைக் குமரனுங் குறுகிநோக்கித்
திங்கள்வா ணுதலீயார்கொ றிருமணம் புணர்ந்தான்யாவ
னிங்குநீ கைமையான காரணமென்கொ லென்றான்.

(இ-பு.) மங்கிலியசூத்திரமிழந்த அங்கத்திலணியும் மங்களத்துக்கு
ய ஆபரணங்களையுமிழந்துநின்ற சீமந்தனியைச் சந்திராங்கதன்சென்று
ண்டு உன்னைச்சிறப்புடன்விவாகஞ்செய்துகொண்டவன்யாவன்? நீப்பே
து நீகைம்பெண்ணாயிருக்குங் காரணமென்னவென்றான்-எ-று.
னத்திரவியம் கைம்பெண்ணானகாலத்தில் அணிவதில்லையாதலும் அ
கத்துக்குள்ள இயல்பைக்குறித்துச் சொன்னதாகக்கொள்ளுத லொன்
அன்றியும் கொங்கலர்கோதை என்பது அன்மொழித்தொகையாதலா
பதம்பிரித்துப் பொருளுரைக்கவேண்டுவதின்று. (௭

அன்னவ ளினவலோடு மரிவையு நாணிநிற்பக்
கவலுற மவட ன்றோழி பொருமகள் கழறுகின்றா
ளிவள்பிதாச் சித்திரவன்ம னிருநில முழுதுங் காக்குந்
தவலருங் கேள்விச்சந்திராங் கதனிவ ளுலைவனுமால்.

(இ-பு.) இவ்வாறு அவன்வினவினமாத்திரத்தில் சீமந்தனிநாணத்தி
னடைந்ததினால் கவலையடைந்திருக்கும் அவளுடைய தோழிமார்களில்
ருத்தி சொல்லுகின்றாள் (ராசகுமாரனேகேள்) இவளுடையதகப்பன
த்திரவன்மன் இவள்கணவனேவென்றால் பெருமைபொருந்திய பூமிபு
முவதையுங்காக்கும் கெடுதலில்லாத நல்லகேள்வியையுடைய சந்திராங்க
தனென்பவன்-எ-று. (௭

கொடுவினை யாப்பமற்றுக் கோமகன் றனுமுன்னாட்
டொடுபுனல் யமுனையாற்றுட் டுஞ்சிடத் துயரமெய்தி
யுடுபதி யிழந்துமாழ்கு மூரோணிபி ரெனிவயந்தத்
வடுவகல் கற்பினங்கை மங்கலமிழந்து நின்றாள்.

(இ-பு.) (இவள்கைம்பெண்ணானதற்குக்காரணமென்னவெனில் இவ
வாழ்ந்துகொண்டிருக்குநாளிலொருநாள்) கொடியவினையானது இழுத்து
கொண்டு போகப்போய் ஆழ்ந்தபுனலையுடைய யமுனையாற்றில் இவள்க
ணவனாகிய அந்தராசகுமாரன் இறந்துபோனதினால் துயரம்அடைந்து
ந்திரனையிழந்து விசனப்படுகின்ற ரோகணிநக்ஷத்திரம்போல வெளி
முந்து குற்றமில்லாத கற்பினையுடைய இந்தமாதானவள் மங்கலமிழந்தி
ருக்கின்றாள்-எ-று. * அசுவினிமுதலாகச்சொல்லப்பட்ட இருபத்தேழு
நக்ஷத்திரங்களும் சந்திரன்பனிவியர்களென்றும் அவர்களுக்குள் உரோ

கணியினிடத்தில் சந்திரனுக்கு மிகுந்தபிரியமென்றுஞ் சொல்லப்படுவ
தினால் சந்திரனையிழந்த உரோகணிபோலென்றார். (௭௧)

மங்கல மிழந்துசென்ற வருடமூன் றாகுமையா
திங்களங் கண்ணிவேய்ந்த சிவனது சோமவாரங்
கொங்கையங் கண்ணி நோற்பாள் குளிர்புன லாடல்வேண்டி
யிந்நெறி லாயமெல்லாஞ் சூழ்வர வெய்தினாளே.

(இ-பு.) ராசனே! மங்கலியமிழந்து மூன்றுவருஷமாகின்றது - அன்று
முதல் இவள்சந்திரனாகிய அழகியமாலையணிந்த பரமசிவனுக்குரிய சோ
மவாரவிரதம் அனுஷ்டிக்கின்றாள் அதன்பொருட்டு நீரில் ஸ்நானஞ்செ
ய்யவிரும்பி அழகுள்ளதோழிமார்கூட்டஞ்சூழ்ந்துவர இவ்விடத்தில்வ
ந்தாள்-எ-று. (௭௨)

அன்றியு மிவடன்கேள்வ னருட்பெறற் றாதைதன்னைக்
கன்றிய தெவ்வர்பற்றிக் கடுஞ்சிறை வைத்துநீதி
பொன்றிய நாட்டையெல்லா மொருங்குடன் புரவாகின்றார்
வென்றிவேற் குமரகேண்மோ வென்றவள் விளம்புங்காலை.

(இ-பு.) இதுவுமல்லாமல் இவள்கணவனுடைய தகப்பனைப் பகைகொ
ண்டு சத்துருக்கள் பிடித்துக்கொண்டுபோய்க் கொடியசிறையில்வைத்
து நீதிபொருந்திய நாட்டையெல்லாம் ஒருங்காக அரசுசெய்கின்றார்கள்
வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசனே! கேளென்று அந்த
த்தோழிசொன்னபோது-எ-று. (௭௩)

நாணொடு நின்றநங்கை நாணிகந் தவிருஞ் செம்பொற்
பூணணி மார்பனோநீ புதுமலர்ப் பகழிசேர்க்குந்
தூணியுஞ் சிலையுமில்லாத் தொடுகழன் மதனோவன்றிச்
சேணுயர் விசும்பிற்றேவ குமரனோ செப்புகென்றாள்.

(இ-பு.) நாணத்துடனின்ற சீமந்தனியானவள் பின்புநாணம்விட்டுப்பி
ரகாசியாநின்ற செம்பொன்னாலாகிய ஆபரணங்களணிந்த மார்பையுடை
ய மன்னவனே! நீ புஷ்பமலர்க்கணைகளைவைக்குந் தூணியுங் கருப்புவில்
லுமில்லாத வீரகண்டையணிந்த மன்மதனோ? அல்லது மிகவுமுயர்ந்த
தேவலோகத்தில்வாசஞ்செய்யுந்தேவகுமாரனோ? சொல்லென்றாள்-எ-று.

என்றவண் மீட்டுமென்ற வின்னலே முதலவெல்லா
மொன்றறப் புகலக்கேட்டே யெனையுநீ யுணர்திகொல்லோ
கன்றிய மனத்தேனின்னைக் கனவிடைக் கண்டேன்போது
நின்றநீ யாவனின்னை நிகழ்த்துதி காவாதெனறாள்.

(இ-பு.) அவளிவ்வாறுசொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறாள்- எனக்குநே
ரிட்ட துன்பங்களாகிய துலாவைகளையெல்லாம் ஒன்றும்வழுவாமற்கேட்

டாய் நீ என்னையறிவையோ வருந்திய மனதையுடைய நான் உன்னைக் னவில்கண்டேன் இங்குநின்ற நீயாவன் ஒளிக்காமலிப்பொழுதே சொ லென்றாள்-எ-று. (அ

மற்றவ ளுரைத்தான் யானோர் மானிடனல்ல னெண்ணிற்
செற்றமில் குணத்தாய் சித்திபெற் றுடையதேவ
னற்றமில் புவனமெங்கு மொல்லையி னடைந்துமீளக்
கற்றவ னுவனென்று காந்தளஞ் செங்கைபற்றா.

(இ-பு.) அவளிவ்வாறுவினவ சந்திராங்கதன்சொல்லுகிறான்- குற்றமில்லாத குணத்தையுடையமாதே! நான்மனிதர்களுக்குள் ஒருவனல்லன் எண்ணில்லாத சித்திகள்பெற்ற தேவரிலொருவன் பழுதில்லாத உலகங்களெங்கும் அதிவிரைவாகச்சென்றுவரக் கற்றவனென்றுசொல்லி அவளுடைய செங்காந்தள்மலர்போன்ற கையைப்பிடித்துக்கொண்டு-எ-று.

அருகுற வழைப்பமாத வாயுற வெய்திப்பின்னும்
பருகுவார் போலநோக்கிப் பணைமுலை புளகங்கொள்ள
வெருவினர் நிற்பமன்னன் மின்னிடைச் செவியின் மெல்லென்
றொருமொழி யுறுதியாக வுவப்புட னுரைப்பதானான்.

(இ-பு) சமீபத்திலிருக்கும்படி அழைக்க (அதைக்கண்ட) தோழியர் சந்தோஷமுற்றுப் பின்னும் (அவ்வரசனை) உண்ணுமவர்களைப்போலப் பார்த்துப் பருத்ததனங்கள் புளகத்தையடைவதுமன்றிப் பயந்து நிற்க சந்திராங்கதன் சீமந்தனிகாதில் மெதுவாக ஒருவார்த்தை யுறுதியாய் சந்தோஷத்துடன சொல்லலானான்-எ-று. (

உன்னுறு துணைவன்வேறோ ருலகத்தி னுள்ளான்மாதே
யன்னவன் றனக்குயானு மாருயிர்த் தோழனந்த
மன்னனு மிரண்டுநாளின் வந்துன தவலநீக்கு
மின்னது புகல்வான்வந்தே னென்றன னெழிலின்மிக்கான்.

(இ-பு.) மாதே உன்கணவன் வேறோருலகத்திலிருக்கிறான் அவனுக்கு நான்உயிர்போன்ற சிநேகன் அந்தமன்னவனு மிரண்டுநாளையில் உன்னுடைய துக்கத்தை நீக்குவான் இந்தச்சேதியுனக்குச்சொல்ல வந்தேனென்று அழகில்மிகுந்த சந்திராங்கதன்சொன்னான்-எ-று. (

நெஞ்சினி னவலநீத்தி நெற்றியங் கண்ணனாணை
வஞ்சிநுண் ணிடையா யன்னோன் வருவதேதிண்ணமாகுந்
தஞ்சமென் றிதனையார்க்குஞ் சாற்றலை யென்றுசாற்றிப்
பஞ்சின்மெல் லடியினாட்கு மீட்டிது பகரலுற்றான்.

(இ-பு) (சந்திராங்கதன் பின்னுஞ்சந்தேகநீங்கச்சொல்லுகிறான்) கொடிபோன்றநுண்ணிய இடையையுடையவளே! உன்மனதி லிரு

துன்பத்தை நீக்கு நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனாணைப்படி அவன் வருவது நிச்சயமாம் நான்சொன்னவார்த்தையை எளிதாகக்கருதி யாருடனுஞ் சொல்லாதேயென்றுசொல்லிச் செம்பஞ்சினுமெல்லியபாதத்தையுடைய சீமந்தனிக்கு மறுபடியுமிந்தவார்த்தை சொல்லுகின்றான்-எ-று.

தெரிவையின் கொழுநற்குற்ற திறமெல்லாந் தெரியச்சொன்னேன்
பரிவுறு மெனதுதாதை தாயர்தம் பரிவுநீக்க
விரைவினி னெனதுதேயத் தேகுவனென்று வேகக்
குரகதந் தூண்டிவைவேற் குரிசிலுங் கடிதிற்போனான்.

(இ-பு) மாதே! உன்கணவனுக்குப்பொருந்திய செய்கையெல்லாம் உனக்குத்தெரியும்படிச்சொன்னேன் (இனி) என்னிடத்தில் விருப்பம்வைத்திருக்கும் என்தாய்தந்தையருடைய வருத்தத்தை நீக்க விரைவாக என்தேசத்துக்குச் செல்லுகிறேனென்றுசொல்லிக் கூர்மைதங்கியவேலாயுதத்தையுடைய சந்திராங்கதனானவன் வேகமாகச்செல்லத்தக்க குதிரையை நடத்திக்கொண்டு துரிதமாகப்போனான்-எ-று. (அஅ)

சேயொளிக் குரிசில்போய பின்னரத் திருவினல்லாண்
மாயமோ வன்றிநெஞ்சின் மயக்கமோ கனவுகொல்லோ
போயவ னுரைத்தவெல்லாம் பொய்கொலோ மெய்கொலோவென்
றாயவ ளழுதுதேம்பி யவலங்கொண் டினைய சொன்னாள்.

(இ-பு) செவ்விதான ஒளியையுடைய சந்திராங்கதன் போய்விட்டபின்பு திருமகளினுஞ்சிறந்த அழகுள்ள சீமந்தனியானவள் இப்போதுபோன இந்தத்தேவகுமாரன் சொன்னதெல்லாம் மாய்கையோ? அல்லது நம்முடைய மனதிலிருக்கும் மயக்கமோ? அல்லதுசொப்பனமோ? பொய்யோ? அல்லது மெய்யோவென்று அழுது தேம்பித்துன்பங்கொண்டு இந்தவார்த்தைசொன்னாள்-எ-று. (அகூ)

(வேறு)

என்னுற சிந்தை யென்கண வன்பால்
மன்னுவ தல்லது மற்றொரு வன்மேற்
றுன்னுவ தன்று விளைந்தமை சொல்லி
னன்னவ னேயெனை யாளு நலத்தோன்.

(இ-பு-) பொருந்திய என்மனமானது என்கணவனிடத்திற் பொருந்துமேயல்லது மற்றொருவனிடத்திற் பொருந்துவதன்று (ஆதலால் இப்போது) நடந்ததை ஆலோசிக்குமிடத்தில்இங்குவந்துபோன மகாபுருஷன் என்னையாளத்தக்க தன்மையையுடைய என்கணவனேயாகும்-எ-று. ()

யாக்கிய வர்க்கார மில்லுறை நல்லாள்
வாழ்த்திய பசிய மழுப்படை வள்ள

லாக்கினை யாலவ னுக்கருள் பூசைப்
பாக்கியம் வந்து பலித்தது கொல்லோ.

(இ-பு) யாக்கியவர்க்கென்னு முனிவருடைய பத்தினியாகிய ம
த்திரைசொல்லிய வார்த்தையைநம்பி மழுவாயுதமேந்திய பரமசிவன
ஆக்கினையாகிய சைவாகமவிதிப்படி அவனுக்குச்செய்த பூசைப்பாக்கி
ம் நமக்குவந்து பலித்ததுவோ-எ-று. (கூ

அன்றியு முன்னமோ ரந்தண னென்னதக்
குன்றிரு வோர்பதி னாயிர கால
மன்றல்செய் தோனுடன் வாழ்குவளென்ற
நன்றறி சொன்மொழி நண்ணியதேயே.

(இ-பு) இதுவுமல்லாமல் முன்னமொருபிராமணன் உன்குமா
ரி பதினாயிரவருஷம் கணவனுடன்வாழ்வாளென்று என்பிதாவுடன்சொ
ன்ன நன்மையறிந்த சொல்லின் முறைமை பொருந்தியதோ-எ-று. (கூ

நேர்ந்தா நற்சொ னிமித்தமு முண்டா
னார்ந்தா நறுங்குழ லுமைபாகன்
வரந்தரு பூசை மகிழ்ந்தெமை வாழ்வித்
தாந்தை கெடுப்பதை யாரறிகிற்பார்,

(இ-பு) எப்போதும் நல்லவாக்கியங்களாகிய சகுனங்களுமுண்டா
ன்றது மயிர்ச்சாந்தணிந்த வாசனைதங்கிய அளகத்தையுடைய பார்வதி
தேவியானை யிடப்பாகத்திலுடைய பரமசிவன் அனுக்கிரகஞ்செய்ய
தக்கதாகிய நாம்செய்தபூசைக்கு மகிழ்ந்து நம்மைவாழ்வித்துத் தான்ப
கெடுப்பதை யாரறிகின்றவர்கள்-எ-று. (கூ

பாவிய னேது பகுத்தறி வேனென்
னாவிய னனடை யுமிவ னென்றென்
றேவிய மாசுற லொத்தவள் கைகிக்
காவியி னேர்தரு கண்கள் கலுழ்ந்தாள்.

(இ-பு) பாவியாகிய நான் என்னென்று பிரித்தறிவேன் என்னுயிர்
போன்ற கணவன் எந்நாள் இங்குவந்துசேர்வானோவென்று சித்திரம்அழு
க்குறுவதையொத்தவள் தனித்திருந்து நீலோற்பலமலர்போன்ற கண்
ணில் நீர்சோரும்படி அழுதுகொண்டிருந்தாள்-எ-று. (கூ

இருந்து புலம்பு மிளங்கிளி தன்னை
வருந்தல் வருந்தன் மடக்கொடி யென்றே
பொருந்திய தோழியர் பூம்புனலாட்ட
அருந்ததி கோயி லடைந்தன ளிப்பால்.

(இ-பு) இப்படி அழுகிற இளங்கிளிபோல்பவளைத் தாயே!வருந்த
தே வருந்தாதேயென்று தேறுதல்சொல்லித் தோழிமார் ஸ்நானஞ்செ

விக்க அருந்ததியையொத்த கற்புள்ள சிமந்தனியென்பவள்தன்மாளிகை
யிற்போய்ச்சேர்ந்தாள் அதற்குமேல் நடந்ததென்னவெனில்-எ-று. (கூரு)

போரணி மாமிசை போகியவேலோ
னீரணி சூழ்நிட தத்திரு நாட்டிற்
றோரண மீடிய தொன்னகர் முன்னர்க்
காரணி சோலை களிப்பொ டடைந்தான்.

(இ-பு) போர்க்கோலமணிந்த குதிரையின்மேற்சென்ற வேலையுடை
ய ராசகுமாரன் நீர்வளமிகுந்த அழகிய நிடதநாட்டில் தோரணங்கள்
ஓங்கிய பழமையாகிய நகரத்துக்கு முன்னிருக்கும் மேகமண்டல மளா
வியசோலையினிடத்தில் களிப்புடன்சேர்ந்தான்-எ-று. (கூசு)

சேண்வழி வந்திடு செல்ல லகற்றிப்
பூண்மலி கின்ற பொலந்திரு மார்ப
னாண்மரு வுஞ்சிலை நாக குமாரன்
வாண்முக நோக்கியொர் மாற்ற முரைத்தான்.

(இ-பு) அதிதூரமாகிய வழியில்வந்தவருத்தத்தை நீக்கிக்கொண்டு
ஆபரணங்கள்நிறைந்துள்ள பொன்னிறந்தங்கிய அழகிய மார்பையுடைய
அந்தராசகுமாரன் நாணிபூட்டத்தக்க வில்லையுடையநாககுமாரனது ஒளி
பொருந்திய முகத்தைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லுகின்றான்-எ-று.

பாதல மேவிய அம்மணி நாதன்
மேதகு மெய்வர நல்கிய தும்மிப்
பூதல முற்றது மின்று பொருந்தாரக்
கோதறி யின்னமு மோதுவ துண்டால்.

(இ-பு) யமுனையாற்றில் வீழ்ந்தநான் பாதாளலோகத்தில் சென்ற
தையும் அங்கிருக்கும் நாகராசன் எனக்கு வரங்கொடுத்ததையும் அந்தவ
ரம்பெற்றுக்கொண்டு பூலோகத்தில் வந்ததையும் இப்போது நீபோய் ந
ம்முடைய பகைவருக்குச்சொல்லு இதுவுமல்லாமல் இன்னமுஞ் சொல் (கூஅ)
வதுண்டு அதென்னவெனில்-எ-று.

என்னுற தாதை யிருஞ்சிறை யோடெங்
கண்ணக னாடிது காலம் விடாரேன்
மண்ணுல காளு மதிப்பை யொழித்தே
விண்ணுல காள விடுக்குவ னென்பாய்.

(இ-பு) யாவரு மதிக்கத்தக்க என்பிதாவின் சிறையையும் எங்களு
டைய இடமகன்ற தேசத்தையும் இப்போது விடாராகில் மண்ணுலகத்
தை யாளும்படி அவர்க்குள்ள எண்ணத்தையொழித்து விண்ணுலகத் (கூகூ)
தை யாளும்படி அனுப்புவேனென்றுஞ்சொல்லுவ-று.

என்றவ னேவ லியைந்தன னேகிக்
குன்றென நீடிய கோபுர மூதூர்ச்
சென்று புகுந்தடு சேரலர் தம்பாற்
கன்றிய நெஞ்சொடு கட்டுரை செய்வான்.

(இ- பு) இவ்வண்ணஞ்சொல்லிய ராசகுமாரனேவலுக்கு நாககுமார
ன் சம்மதித்தவனாகிச்சென்று மலைபோலுயர்ந்த கோபுரத்தையுடைய ப
ழமையாகிய நகரத்திற்சேர்ந்து கொல்லுகின்ற பகைமன்னரைக்கண்டு
கோபங்கொண்ட மனதுடன் உறுதியானவார்த்தை சொல்லுகின்றான்
என்றவாறு. (௱

இந்திர சேன னெனும்புகழ் மன்னன்
மைந்த னடுந்திறல் வாகு வலத்தா
னிந்திர மேவிய தக்க கனல்கு
அந்த மிலாத வரங்கொ டடைந்தான்.

(இ-பு) இந்திரசேனனென்னும் பெயர்பெற்ற புகழுள்ள மன்ன
னுடைய புத்திரனாகிய சத்துருக்களைப் போர்முகத்தில் கொல்லும்பு
யான புசபலத்தையுடையவன், நாகப்படைகளையுடைய தக்ஷகனென்னு
ம் நாகராசன்கொடுக்க அளவில்லாத வரங்கள்பெற்றுக்கொண்டுவந்திரு
க்கிறான்-எ-று. (௱க

ஆதலி னவனோ டமராடல்
பேதைமை யென்றறி வீர்பிழை செய்தீர்
தாதையும் விட்டுயர் தன்னடை யும்விட்
டேத முறுவகை யேகுதி ரென்றான்.

(இ-பு) ஆகையாலவனுடன் போர்செய்தல் உங்களுக்கு அறிவி
லாமையென் றறியுங்கள் நீங்களோ மிகுந்தகுற்றஞ் செய்திருக்கிறீர்க
ஆகிலுமிப்போது நீங்கள் க்ஷேமமடைய வேண்டுமென்கிற எண்ண
ருந்தால் அவன்தகப்பன் சிறையைநீக்கி அவன்தேசத்தையும் விட்டுவி
டு நீங்கள்போய்விடுங்களென்று சொன்னான்-எ-று. (௱உ

இத்திற நாக குமார னியம்ப
மத்தகயானை மறப்படை மன்னர்
அத்தகை வேந்த னருஞ்சிறை நீக்கித்
தத்த மரும்பதி போயினர் சார்ந்தார்.

(இ-பு) இப்படியாக நாககுமாரன்சொல்ல மத்தகத்தையுடைய
னைமுதலாகிய வீரத்தன்மையுள்ள நால்வகைப்படையோடுங்கூடிய ப
கைமன்னவர்கள் மேன்மைபொருந்திய இந்திரசேனனைச் சிறைவிடுத்து
தங்கள்தங்கள் நகரத்திற்போய்ச்சேர்ந்தார்கள்-எ-று. * வீரர்கள் போர்
செய்கிறத்தால் வீரசுவர்க்கம் அடையலாமென்னும் விருப்பங்கொண்

போர்செய்கின்றவர்கள் யானை அப்படிக்கொத்த விருப்பமின்றி யுத்தஞ்
செய்வது ஆதலால் யானைப்படை சிறந்ததாகச்சொல்லப்பட்டது. * யா
னையுடையான் படைகாண்டல் முன்னினிதே என்கிறதுமுணர்க. இ
து இனியநாற்பதில். (௱௩)

(வேறு)

மேவலாளர் போயபின்னர் வேந்தன்மா மகன்வர
வேவலாளர் கூறக்கேட்டு வினைபமுற் றமைச்சரைக்
கூவியொல்லை யென்மகற் கொணர்மினீண் டெனவவர்
பூவர்சோலை யுட்புகுந்து புண்ணியற் கொடுவந்தார்.

(இ-பு) பகைமன்னர் போய்விட்டபின்பு இந்திரசேனனென்னும்அ
ரசன் தன்மகன்வந்திருப்பதை யேவலாளர்சொல்லக்கேட்டு மனமகிழ்ச்
சியடைந்து மந்திரிகளை அழைத்து என்புத்திரனை விரைவினில் இவ்விடத்
திற்கு அழைத்துக்கொண்டு வாருங்களென்றுசொல்ல அந்தமந்திரிகள்ம
லர்களையுடைய சோலையினிடத்துக்குப்போய்ப் புண்ணியவானாகிய அந்த
க்குமாரனை அழைத்துவந்தார்கள்-எ-று. (௱௪)

வந்துதந்தை தாளின்வீழ்தன் மைந்தனைப்பொன் மார்புறத்
தந்தையும் பரிந்துதன் றடக்கையா லணைத்திடா
எந்ததண் புனற்குள்வீழ்ந் திறந்தநீ பிழைத்ததென்
முந்தையோர்கள் செய்தவ முடித்த நன்மை யாலென்றான்.

(இ-பு) புத்திரன்வந்து தகப்பனாகிய இந்திரசேனன்பாதத்தில்வணங்
கினவுடன அவனையெடுத்துத் தன்மார்பிற்பொருந்த நீண்ட கையினால்
அணைத்துக்கொண்டு என்னையனே! குளிர்ச்சியுள்ள ஆற்றில்விழுந்து இற
ந்தநீ பிழைத்தது என்பெரியோர்கள் செய்திதாகிய தவஞ்செய்துமுடித்
த நன்மையாலென்றான்-எ-று. (௱௫)

என்பதாய நன்கினி தெய்துபசமந் தனும்மெழுந்
தன்புகூரு மன்னைதன் னடிவணங்க வன்னையுந்
துன்பவாரி விட்டகன்று சூழ்கரைக் கடந்ததோர்
இன்பவாரி யூடுபுக் கெழாதுமூழ்கி னாளரோ.

(இ-பு) இவ்வண்ணஞ்சொல்லுவதாகிய நல்லவார்த்தைகளை யினி
தாகத் தகப்பன் சொல்ல (அதன்பின்பு) புத்திரனானவன் எழுந்து அன்பு
மிகுந்த தன் தாயினுடைய பாதத்தைவணங்க அந்தத்தாயானவள் துக்க
சமுத்திரத்தை விட்டுநீங்கிச்சூழ்ந்த கரைகடந்ததாகிய பெரிய இன்பசமு
த்திரத்தில் புகுந்து எழாதவண்ணம் முழுகினாள்-எ-று. (௱௬)

வளைநற் கிளைஞரு மிரும்பதியுண் மாந்தரும்
போனவாவி பெற்றுடையர் போலமகிழ்வு கூர்ந்தபின்

மானமன்னன் மைந்தவுற்ற வாறெலாங் கிளத்தெனத்
தேனெய்மாரி பெய்வதென்னச் செம்மல்யாவுஞ் செப்பவே.

(இ-பு) இவர்களுமல்லாமல் மற்றைச்சுற்றத்தாரும் பெருமைபொருந்திய நகரத்துச்சனங்களும் தங்கள் உயிர்பெற்றவர்கள்போல் மகிழ்ச்சியடைந்தபின்பு பெருமைபெற்ற ராசகுமாரன் புத்திரனைப்பார்த்து மைந்தனே! நீநதியில்விழுந்தபின்பு நடந்தசேதியெல்லாம் சொல்லென்றவுடனே தேனும் நெய்யுமாகக்கலந்து மழைபொழிவதுபோல நடந்தசேதியெல்லாம் ராசகுமாரனசொல்லி-ன-று. (௱௭

தக்ககன் பரிந்தளித்த தாவில்பல் வளனெலா
மிக்கதாதை பாலளிப்ப வேந்தனுன் மகிழ்ந்துபின்
புக்கவாறு சித்திரவன்ம னுக்குரைத்திர் போதிரென்
றக்கணத்தி ரோலைதூதி னன்புடன்விடுக்கவே.

(இ-பு) தக்ஷகன் பரிவுடன்கொடுத்த கெடுதலில்லாத பொருள்களையெல்லாம் அன்புமிகுந்த பிதாவினிடத்தில்கொடுக்க அந்த ராசனும் மனமகிழ்ந்து அப்பொழுதே யோலையெழுதித் தூதர்கையில்கொடுத்து நீங்கள் சித்திரவன்மராசனிடத்திற்குப்போய்க் குமாரன்வந்தசேதியைச்சொல்லுங்களென்று அனுப்பினான்-ன-று. (௱அ

ஆரிய வருத்தகா டடைந்ததூத ரோலையை
வேரியார் நறுந்தெரியல் வேந்தனுக் களித்தலுஞ்
சோரிவேலி னனுமோலை சொற்பொரு ளுணர்ந்தடல்
பூரிபா விருந்ததன னமைச்சுடன் புகன்றனன்.

(இ-பு) அப்படியனுப்பப்பட்ட தூதர்கள் ஆரியவருத்ததேசம்போய்ச்சேர்ந்து தங்களிடத்திலிருக்கு மோலையைத் தேனிறைந்த வாசனையுள்ள மாலையணிந்த சித்திரவன்மனுக்குக்கொடுக்கவும் பகைவருடலங்தோய்வதற்கேதுவான வேலாயுதத்தையுடைய அவ்வரசன் தூதர்கொடுத்தவோலையி லெழுதியிருக்கும் சேதியைப் படித்துணர்ந்தமாத்திரத்தில் உடல்பூரிப்படைந்திருந்து தன்மந்திரியுடன்சொன்னான்-ன-று. (௱௯)

சொன்னவாய்மை கேட்டவன் றறக்கமேவி னனெ
மன்னர்மன்னன் வன்கழல் வழுத்திநிற்ப மன்னனுட
அன்னவாறு தன்மகட் குரைப்பவந்த வன்னமுந்
தன்னையீன்ற தாதைதாளின் வீழத்தாதை சாற்றுவான்.

(இ-பு) இவ்வாறு அரசன்வார்த்தையைக் கேட்ட மந்திரியானவன் சுவர்க்கலோகத் தின்பம்பெற்றவன்போல மகிழ்ச்சியடைந்து அரசன்பாதத்தை வணங்கித் துதிசெய்திருப்பப்பின்னும் அவ்வரசன் இவ்வந்தசேதியைத் தன்மகளாகிய சீமந்தனிக்குச்சொல்ல அன்னநடைபோன்ற நடையையுடைய சீமந்தனியானவள் மகிழ்ச்சிகொண்டு தன்னைப்பெற்ற பிதாவின்பாதத்தில் வணங்கிநிற்ப அவ்வரசன்சொல்லுகிறான-ன-று. (௱௰)

கங்கைதங்கு செஞ்சடைக் கணிச்சிவா னவற்குநீ
யங்கையா லருச்சனை புரிந்தடைந்த நன்மையான்
மங்கையுன்றன் மன்னனுய்ந்து வந்ததென்று கூறிடாப்
பொங்குதீய வெந்துயர்ப் புணரிநின்று மேறினான்.

(இ-பு) கங்கைபொருந்திய சடாமகுடத்தையுடையவராய் மழுவாயுதமேந்திய பரமசிவனுக்கு நீயுன் அழகியகையினால் அருச்சனைசெய்து வந்த நன்மையினாலே புத்திரியே! உன்கணவன்பிழைத்துவந்ததென்றுசொல்லிப் பொங்குகின்ற தீயதாகிய வெவ்வியதுக்கசமுத்திரத்தினின்றுங் கரையேறினான்-ன-று. (௱௰௧)

மாசுமூழ்கு மாமணி கழீஇயவாறு போலவே
பாசிழையைப் பைப்புனலி னாட்டிப்பாலி னுவியந்
தூசுடுத்தி யொண்மலர்ச் சுரிகுழல் வனைந்துபின
பூசசாந் தணிந்துசெய்ய பொற்கலன்கள் சேர்த்தினார்.

(இ-பு) அழுக்கடைந்த மாணிக்கத்தைக்கழுவியதுபோல் பசும்பொன்னினாற்செய்யப்பட்ட ஆபரணமணிந்துள்ளவளாகிய சீமந்தனிக்கு நல்ல நீரினால் ஸ்நானஞ்செய்வித்துப் பாலின்புகைபோல அழகுள்ள வஸ்திரமணிந்தும் வாசனையுள்ள மலர்களைக்கூந்தலிலணிந்தும் பின்புசந்தனம்பூசிச் செவ்விதாகிய பொன்னாற்செய்யப்பட்ட ரத்தினாபரணங்களு மணிந்தார்கள்-ன-று. (௱௰௨)

கோலமைக்கண் மாதவாவு கொய்யுளைப் பரித்திண்டேர்
மேலிருத்திச் சேடியர் நெருங்கவெண்சங் கார்ப்பெழப்
பாலிமைத்த வேலையிற் பரந்தசேனை சூழ்வரக்
காலியற் கலினமாவி வர்ந்துநாவ லன்சென்றான்.

(இ-பு) இவ்வாறு அலங்காரஞ்செய்தபின் அழகிய மையிட்டநேத்திரத்தையுடைய சீமந்தனியை தாவிச்செல்லும் கத்தரித்த கழுத்துமயிரையுடைய குதிரைகள்கட்டிய பலம்பொருந்திய தேர்மேலேற்றித் தோழிகள்சூழ்ந்திருக்கவும் தவளச்சங்கம் ஆரவாரிக்கவும் பாலினிறைந்த சமுத்திரம்போலச் சேனைகள்சூழ்ந்துவரவும் காற்றைப்போல அதிவேகமாய்ச்செல்லுகின்ற கடிவாளம்பூட்டிய குதிரையின்மேல் அவ்வரசன் ஏறிக்கொண்டுசென்றான்-ன-று. (௱௰௩)

நீடுசெந் நெறிகடந்து நெண்மலி விடதமா
நாடுமேவி யிந்திரசேன னன்னகர்ப் புறத்தினோர்
வடவிழ்ந்த பூப்பொழி லிருந்துதூது போக்கியே
யாடல்வேந் தனுக்குத்தா னடைந்தவா றறிவித்தான்.

(இ-பு) (அவ்வாறுசென்ற அரசன்) நெடியதாகிய மார்க்கத்தைக்கடந்து நெற்கள்நிறைந்த பெருமைபொருந்திய நிடதநாட்டைச்சேர்ந்து இந்திரசேனனுடைய நகரின்புறத்திலிருக்கும் இதழ்கள்விரிந்த மலர்களையுடைய ஒருசோலையினிடத்திலிருந்து தூதரையனுப்பித் தான்வந்திருப்பதை யிந்திரசேனமகாராசனுக்குத்தெரிவித்தான்-எ-று. ஆடல்வேந்தன்-வெற்றியுள்ள அரசன். (௱௯௪)

வெங்கலி கெடத்தாங்கு வேந்தர் வேந்தனுாணர்ந்
தங்குநின் றெழுந்துதன னமைச்சரோ டெதிர்கொளா
மங்குறங்கு கோயில்வாய் வருகெனக்கொண் டேகியே
பொங்குமோகை யோடவண் புதுவிருந்து நல்கினன்.

(இ-பு) கொடியபாவமானது கெடும்படிநீக்கிய மன்னர் மன்னனாகிய இந்திரசேனன் சித்திரவன்மனென்னு மரசன்வந்திருப்பதைத் தூதர்களாலறிந்துகொண்டு தன்மந்திரிகளுடன் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு எதிர்கொண்டு மேகங்கள்பொருந்தும்படியாகிய உன்னதமுள்ள தமது அரண்மனைக்குவாவென்று அழைத்துக்கொண்டுபோய்அவ்விடத்தில்மிகுந்த சந்தோஷத்துடன் புதுமையான விருந்துசெய்வித்தான்-எ-று. (௱௯௫)

சந்திராங் கதனும்வந்து தாழ்ந்து மாதுலனடிக்
கந்தநாண் மலர்வணங்கக் கையினு லெடுத்தணைத்
திந்தமாதி னுவியோடு மெங்களாவி யானவும்
உய்ந்துவாழ வென்றுநீயு முய்ந்துவந்த தாமரோ.

(இ-பு) (சித்திரவன்மனுனவன் விருந்துண்டிருக்கும்போது) சந்திராங்கதன்வந்து தன்மாமனுருடைய பாததாமரை மலர்களை வணங்கினமாத்திரத்தில் மாமனுகியராசன் தன்னைவணங்கின மருமகனைக் கையினுலெடுத்தணைத்து மார்புடன்தழுவிக்கொண்டு இந்தச்சீமந்தனியுயிரும் எங்களுயிரும் பிழைத்துவாழும்படியாக நீயும் பிழைத்துவந்தது-எ-று. கந்தநாண்மலர்-எனபது-வாசனையுடன் அன்றுமலர்ந்தமலர். (௱௯௬)

என்றுகூறி யன்றுசந்தி ராங்கதற் கியைந்தநாட்
டுன்றுசோ திடத்தர்சொல்ல வோரையிற் சுருதிநூல்
ஒன்றுநீதி யந்தண ருரைப்பவொள் ளழலின்முன
மன்றனாறு கோதையை மறுமணம் புணர்த்தினன்.

(இ-பு) இவ்வாறுசொல்லி அதன்பின்பு சந்திராங்கதனுக்குப்பொருந்திய நல்லநாளின்னநாளென்று அங்குவந்திருந்த சோதிடர்கள்சொல்ல அந்த லக்கினத்தில் வேதசாஸ்திரங்களுணர்ந்த நீதியாளர்களாகிய பிராமணர்கள் மந்திரங்கள்சொல்ல ஓமாக்கினியின்முன் சீமந்தனியை மறுமணஞ்செய்வித்தான்-எ-று. ஒள்ளழல்-என்பது ஒளியுள்ளதீ * மன்றல் நாறுகோதை என்பது-வாசனை கமழுங் கூந்தலையுடையவள். (௱௯௭)

மணஞ்செய் வித்தபின்னரன்பு மன்னுசித்திர வன்மன்வி
மிணங்குநல் லமைச்சர்தா மிருபுறமுஞ் சூழ்வரக்
கணங்கொடானை யோடுதேர் கடாவியேகி யூர்புகுந்
தணங்கனார் நலத்தின்மூழ்கி யண்டர்கோனின் வைகினன்.

(இ-பு) மறுமணஞ்செய்வித்தபின்பு அன்புள்ள சித்திரவன்மனுனவன் பெருமைபொருந்திய நல்லமந்திரிகள் இருபுறத்திலும் வரும்படிக்கூட்டமாகிய சேனைகளுடன்புறப்பட்டுத் தேரைச்செலுத்திக்கொண்டுபோய்த் தன்பதியிற்சேர்ந்து தெய்வமகளிரையொத்த தன்னுரியமாதர்களுடன் இன்பம் அநுபவித்துக்கொண்டு தேவேந்திரன்போலிருந்தான்-எ-று.

(வேறு.)

பூமண்டலத்தைப் பொறுக்கும் புயங்கேச னீந்த
தாமந்துகில் பூணிறை சந்தின வாவுநல்கிச்
சீமந்தனியைத் திருமேவருஞ் செம்பொன் மார்பன்
றாமங்கமழுஞ் செழுஞ் சேக்கையிற் றோயுநாளின்.

(இ-பு.) இந்தப்பூமியைத்தாங்கும்படியான நாகராசன்கொடுத்தமாலை வஸ்திரம் ஆபரணம் நிறைந்த சந்தனம் என்று மிவைகளைக் கொடுத்துத் திருமகள்மேவிய மார்பனுகிய சந்திராங்கதன் வாசனைப்புகைபரிமளித்துக்கொண்டிருக்குஞ் செழுமையுள்ள மலர்ச்சயனத்தில்சீமந்தனியுடன் கூடிக்குலாவியவிருநாளில்-எ-று. (௱௯௮)

செய்வண்ண வேற்கைச் சாருமி சேறனுற்குக்
கொய்வண்ண மாலைக்கொழும் பொன்முடி சூட்டிமன்னன்
பொய்வண்ண மாய்வுட லான்வரு போகநீங்கி
மெய்வண்ண மேவத் துறவின்றலை மேவினனே.

(இ-பு.)பகைவருடலுதிரந்தோயும்படியான அழகியவேலேந்துங்கையையுடையவனுகிய ஒருவருமொப்பில்லாத சிங்கம்போன்ற நடையையுடைய தன்புத்திரனுக்குப் பொன்மகுடந்தரித்து அவன் பிதாவானவன் பொய்த்தன்மையுள்ள மாயாசம்பந்தப்பட்ட உடலினுல் வரத்தக்கபோகங்களை வெறுத்துநீக்கி உண்மைப்பொருளாகிய மோக்ஷமடையத்துறவினிடத்திற்சேர்ந்தான்-எ-று. கொய்வண்ணமாலை திருந்திய அழகுள்ள மாலையணிந்தமுடி. கொழும்பொன்-செழுமையுள்ளபொன். (௱௯௯)

தன்றாதை போய்நற் றவஞ்செய்திடத் தாமவேலோன்
பொன்றாழ் குடைக்கீழ்கன் ஞாலம் புரக்குமேல்வை
நன்றாயு மைந்தரிரு நால்வரை யீன்றுநற்பொற்
குன்றார்முலை மங்கையோர் கொம்பினையும் பயந்தான்.

(இ-பு.) இப்படியாகத் தன்பிதா வனத்திற்போய் நல்லதவஞ்செய்து கொண்டிருக்க வெற்றிமாலையணிந்த வேலையுடைய சந்திராங்கதன் அழ

குதங்கிய குடையின்கீழிருந்து அசன்ற பூமியைச்சக்கரவாளில் நன்னெ
யையுணரத்தக்க எட்டுப்புத்திரர்களைப்பெற்றுப் பின்னும்நல்ல பொன்
லையொத்த தனத்தையுடைய பூங்கொம்புபோன்ற ஒருபுத்திரிகையும்பெ
ற்றான்-எ-று. (௱௨

மாவண்மை மன்னன் மகட்பேற்றின் மனங்களித்துப்
பாவந் தவிர்ந்து பதினுயிர மாண்டுபாரிற்
றுவின்றி யின்பநுகர்ந் தான்றவி ஞானவாழ்வு
மேவுந் தவத்தி னெச்சூதன் விளம்பினனே.

(இ-பு.) ஒப்பற்ற ஞானவாழ்வினையுடைய தவத்தர்களாகிய நைமி
சாரணிய முனிவர்களே! மிகுந்த வளப்பந்தங்கிய கையையுடைய சந்தி
ரங்கதன் புத்திரர்கள்பிறந்து நன்மார்க்கத்தில் நடக்கத்தக்கவர்களாயிரு
ப்பதினால் மனமகிழ்ச்சியடைந்து (நீதியுடன்செங்கோல்செலுத்தி)
ஞ்சோரதவண்ணம் நீக்கி யிவ்வுலகத்தில் பதினுயிரம்வருஷம் குறை
ல்லாமல் இன்பம் அனுபவித்துக்கொண் டிருந்தானென்று சூதமுனிவ
சொன்னார்-எ-று. (௱௨௯

எட்டாவது-சோமவாரவிரதபூசை அத்தியாய முற்றியது.
ஆக திருவிருத்தம்-௱௨௯.

உ

சிவமயம்.

ஒன்பதாவது

சோமவாரத்திற்சீமந்தனிபாவவிமோசனம்பெற்ற

அத்தியாயம்.

பின்னுமாதவர் விழைவுறப் பெருந்தவ வியாதன்
அன்னருதம்மா முனிவர னாரரு ளடியார
மன்னுசெய்கையுஞ் சோமவா ரத்தின் மான்மியமும்
இன்னுமோதுவ துண்டவை கேண்மினென் றிசைத்தான்.

(இ-பு.) நைமிசாரணிய முனிவர்கள் பின்னும் சந்தோஷம் அடையு
ம்படி பெரியதவத்தையுடைய வியாசரையொத்த சூதமுனிவர் பரமசிவ
னருள்பெற்ற அடியார்களுடைய இல்லறச்செய்கையும் சோமவாரவி

ரதமகிமையும் இன்னமுஞ்சொல்லத்தக்கதுண்டு அவைகளைக் கேளுங்க
ளென்றுசொன்னார்-எ-று. (௧)

பொங்குவெள்ளிமீன் புகையினுஞ் சகட்டினைப் போழ்ந்து
பங்குவேறினும் படுமழைப் பருவம் பொய்த்தாலுந்
திங்கண்மும்மழைத் திறம்பில வாய்வளஞ் சுரக்கும்
மங்குறோய்பொழில் வைதர்ப்ப நாட்டில்வாழ் மறையோர்.

(வேறு,)

(இ-பு.) விளங்குகின்ற சுக்கிரனென்னுங் கிரகமானது மூடத்தில்
இருந்தாலும் உரோகணி நக்ஷத்திரத்தைப்பேதித்துக்கொண்டு சனிக்கி
ரகம் வக்கிரித்துச்சென்றாலும் மெய்யாகப்பொருந்திய மழைகாலந்தப்பி
னாலும் மாதந்தோறு மும்மாரி மாறுபடாமல் வளப்பம் உண்டாகும்ப
டியான மேகமண்டலவரையிற் பொருந்திய சோலைசூழ்ந்த வைதர்ப்பநா
ட்டில் வாழ்கின்ற பிராமணர்கள்-எ-று. (௨)

இனியநண்பொடு வேதமித் திரன்றவத் தின்ற
புனிதனான்மறை புகல்சுமே தாவுநற் புகழோன்
றுனியிலாமதி யானுயர் சாரசுதன் றோன்றல்
தனிமெய்ஞ்ஞானநூற் சாமவா னெனுந்தக வோனும்.

(இ-பு) வேதமித்திரனென்பவன் அன்புடன்செய்ததவத்தினாற்பெ
ற்ற புனிதமாகிய நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்த சுமேதா என்பவ
னும் நல்ல புகழையுடையவனும் துன்பமடையாத புத்தியினாலுயர்ந்தசா
ரசுத னென்பவனுடைய புத்திரனாகிய ஒப்பற்ற மெய்ஞ்ஞான நூலோ
தியுணர்ந்த பெருமையுள்ள சாமவானென்பவனும்-எ-று. (௩)

அரியநான்மறை முதலிய வங்கங்க ளாறுந்
தெரிவரும்பொருட் புராணமு மாகமத் தெளிவும்
பிரியுமற்றுள கலைகளுங் குரவரால் விளங்கிக்
கரியகாமனுஞ் சாமனு மெனக்கவி னமைந்தார்.

(இ-பு) அருமையாகிய நாலுவேதங்களும் ஆறங்கங்களும் தெரித
ற்கரிய பொருளமைந்த பதினெண்புராணங்களும் ஆகமங்களிற் சொல்
லுகின்ற நிச்சயப்பொருளும் பரந்திராகின்ற மற்றுமுள்ள கலைகளும் ஆ
சாரியரால் கற்றுணர்ந்து மன்மதனும் அவன்தம்பியாகிய சாமனும்போ
ல் அழகமைந்தார்கள்-எ-று. (௪)

மைந்தர்கல்வியு மிளமையு மனக்கொடு மகிழ்ந்த
அந்தணாளர்த மரும்பெறற் புதல்வரை நோக்கிச்
சிந்தையோகையாற் சிறுவர்நீர் புவிக்கெலா மணியாம்
இந்தமாநில வைதர்ப்ப வேந்தன்மாட் டெய்தி

(இ-பு) தங்கள்புத்திரர்களுடைய வாலிபத்தையும் (அவர்களத்தச் சிறுவயதில்) கற்றுணர்ந்த கல்வியின் திறத்தையும் மனங்கொண்டு மகிழ்ச்சியடைந்து பிராமணரிருவர்களும் பெறுதற்கரிய தங்கள் புத்திரர்களைப்பார்த்து உள்ளத்திலுண்டான சந்தோஷத்தினால் சிறுவர்களே நீங்கள் இவ்வுலகத்துக்கு ஆபரணம்போல் விளங்குகின்ற பெரியவிடத்தையுடைய இந்த வைதர்ப்பநாட்டு அரசனிடத்திற்சென்று-எ-று. (ரு)

கற்றகல்வியாற் காவலன் சிந்தையைக் களிவித்
தற்றமாகிப் பரிசிலாங்குவகையி னேற்றுப்
பெற்றசெம்பொனாற் கன்னியர் கடிமணம் பேணி
முற்றுமில்லறம் புரிவதே மேற்கொண்டு முயல்வீர்.

(இ-பு) நீங்கள்கற்றகல்வியால் அரசன்மனங்களியச்செய்து பரிசிலாகக்கொடுக்கும் மிகுந்த திரவியத்தைச்சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டுவந்து நீங்கள்பெற்றுக்கொண்ட அந்தத்திரவியத்தினால் கன்னிகைகளை விவாகஞ் செய்துகொண்டு குறைவில்லாத இல்லறம் நடத்துவதை மேற்கொண்டு நன்மைவரத்தக்க முயற்சியைச் செய்யுங்கள்-எ-று.

என்றுகூறலு மிருவரு மிசைந்தன ரேகிக்
குன்றுபோலுயர் கோயிலிற் கொற்றவற் குறுகி
நின்றுதங்குல விஞ்சைக ணிகழ்த்தலு நிருபன்
நன்றுநன்றுநீர் வேட்டவை பெறுகென நவின்றான்.

(இ-பு) இவ்வாறு அவ்விருவர்பிதாக்களுஞ்சொல்ல அதற்குச் சம்மதித்துச்சென்று மலையொத்துயர்ந்த அவ்வரசன மாளிகையிற்சேர்ந்து கண்டு தாங்கள் கற்றிருக்குங்கல்விகளைப் பிரசங்கித்தார்கள்-அரசனதைக்கேட்டு உங்கள் பிரசங்கமுங் கல்வியும் மிகவும்நன்றாயிருக்கின்றது ஆகையால் உங்களுக்குவேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான்-எ-று. (௬)

மாலைவண்குடை மன்னவர் மன்னமற் றிதுகேள்
சேலைவென்றகட் டிருந்திழை யார்மண முடிப்பான்
வலவந்தன மிருதிதி தந்தருளென்னக்
கோலவெள்ளொளி நிலவிட நகைத்திது கூறும்.

(இ-பு) முத்துச்சரங்களால் அலங்கரித்திருக்கும் வெள்ளைக்குடையையுடைய மன்னவர் மன்னவனே! நாங்கள் சொல்லுவதைக்கேள் கயல்மீனைவென்ற அழகுள்ள பார்வையுடைய கன்னியரை விவாகஞ் செய்துகொள்ள மனதிலுத்தேசித்து உன்னிடத்துக்குவந்தோம் அதற்குத் தகுதியாக மிகுந்த திரவியங்களெங்களுக்குக் கொடுவென்று சொன்னார்கள் அதைக்கேட்ட அரசன் அழகியவெண்மைநிறமுள்ள பற்கள்விளங்கும்படி நகைத்து இந்தவார்த்தை சொல்லுகின்றான்-எ-று. (௭)

மண்டுகேள்புன லிடதத்தர் கோமகன் மனைபாள்
கொண்டசுற்புடைக் கோதை சீமந்தனிக் கொப்பர்
துண்டவெண் பிறை வேணியான் சோமவாரத்தில்
அண்டருங்கண்டு வியப்புற வருச்சனை புரிந்தே.

(இ-பு) மதுரமுள்ள நீர்வளம்நிறைந்த நிடததேசத்தரசன் மனைவியாகிய சீமந்தனியென்பவள் இளந்திங்களணிந்த சடையையுடைய பரமசிவனைச் சோமவாரதினத்தில் தேவர்களுங்கண்டு ஆச்சரியப்படும்படி அருச்சனைசெய்து-எ-று, * கொண்டகற்புடைக்கோதை சீமந்தனிக்கொப்பர்-எ-து, கற்புநிலைதங்கிய பூமாலையணிந்த பூங்கொம்பினையொத்த சீமந்தனியெனப் பொருள்கொள்க. (௮)

அந்தவேளையி னன்மறை முனிவரை யடங்கச்
சந்தமென்முலை தையலா ரொடுவரச் சாற்றி
யிந்துசேகர னுமையென வவர்களை யெண்ணிப்
புந்தியான்மகிழ்ந் தருச்சனை வழிபடல் புரிபா.

(இ-பு.) அந்தச் சோமவாரகாலத்தில் பிராமணர்களையெல்லாம் அவரவர்பத்தினிமாருடன் வரும்படிச்சொல்லியனுப்பி வந்தவர்களைப் பார்வதி பரமேசுவரர்களாக மனதில்பாவித்து மகிழ்ந்து அருச்சனைசெய்து-எ-று. * சந்தமென்முலைத்தையலாருடன்-எ-து-சந்தனக்குழம்பணிந்த மிருதுவாகிய தனங்களுள்ள மாதர்களுடன் எனப்பொருள்கொள்க-சந்தம்-என்பது-அழகு எனக்கூறினு மமையும். (௯)

வேண்டுநன்கலன் வெறுக்கைக ணிகவவர்க் களிக்கும்
ஆண்டுநீவிர்க ளிருவரி லொருவனுண் டகையாய்ப்
பூண்டகோலத்தின் மனைவியா யொருவனைப்புணர்ந்து
காண்டகுஞ்சிறப் பிறைமகள் பாற்சென்று கடிதின்.

(இ-பு.) அவர்கள்வேண்டிய நல்ல ஆபரணங்களும் திரவியமும் மிகுதியாகக்கொடுக்கிறாள் ஆதலால் நீங்களிருவரி லொருவன் ஆண்மகனாயிருந்து ஒருவனைப் பூண்டகோலத்தையுடைய அவன்மனைவியாகஅலங்கரித்து இராசகுமாரத்தியாகிய சீமந்தனியிடத்தில் விரைவிற்போய்-எ-று. *காண்டகுஞ்சிறப்பிறைமகள்என்பதற்குயாவருமதிக்கத்தக்கசிறப்பினையுடைய அரசன்மகளாகிய சீமந்தனியெனப் பொருளுரைத்துக் கொள்க.

கைதவத்தினு லவடரும் வெறுக்கைகள் கவர்ந்து
மைதழைத்தகண் மடவியர் கடிமண மருவி
யுய்தியொன்றுளா மறத்திறோற் றண்டமுண் டென்றுக்
கொய்துணர்த் தொடை வேந்துரைத் தலுமுளங் குலைந்தார்.

(இ-பு.) இப்படிக்கொத்த வஞ்சகத்தினால் அவள்கொடுக்கிற திரவியத்தை அபகரித்துக்கொண்டுபோய்க் கன்னியர்களை விவாகஞ்செய்து

கொண்டுவாருங்கள்-என்சொல்லைத் தப்பீர்களானால் உங்களுக்குத்த ..னைகிடைக்குமென்று அரசன்சொல்லவும் அவர்கள்பணிவருந்தின ர்-எ-று. * மைதனழத்த கண்மடவியர் என்பதற்கு மைபொருந்தியக ணையுடைய கன்னியர் எனவும், கடிமணம் விளக்கமுள்ள விவாகமன் செய்துணர்த்தொடைவேந்தன்-செய்த பூங்கொத்துக்களால்தொடுக் பட்ட மாலையணிந்த அரசன் எ-ம் பொருள்கொள்க.

(வேறு)

அந்தோவந்தோ வெங்கடமத்தி தமுதித்ரோ
கொந்தார்மாலைக் கொற்றவ கோயில் குறுகுற்று
நந்தாநின்ற வஞ்சனைவேட நனுகுற்றால்
எந்தா யெந்தை தந்தையு முதலோ டிறுவாரே.

(இ-பு.) இப்படி அந்தணாசன்சொன்னதைக்கேட்ட பிராமணர் வர்களவனைநோக்கி (ஐயையோ) வேதமுதலாகிய சாஸ்திரங்களை லாங்கற்றிருக்கும் எங்களுக்கிந்தக்காரியம் நன்மையுடையதோ அரசே உன் ஆசாரவாசலுக்குவந்த நாங்கள் வஞ்சனையான வேஷத்தைப்பெ ற்றினால் எங்கள் மாதாபிதாக்கள் குலமுதலுடன் அழிந்துபோவா ரே-எ-று. கொந்தார்மாலைக் கொற்றவ-கொத்தாகிய பூமாலையணிந்த அர சனே எனப்பொருளமைத்துக்கொள்க.

இம்மைதனக்கு மறுமை தனக்கு மொழுமைக்கும்
வெம்மை செய்கேடு நாகும் விளைக்கும் விறல்வேந்தே
செம்மை யகற்றித் தாயெனி விற்றே செய்வேமென்
றம்மறை யோர்கள் நடுங்கியுரைப்ப வடல்வேந்தன்.

(இ-பு) இவ்வாறுசெய்யுஞ்செய்கையானது இம்மை மறுமை யெ ன்னு மிரண்டினிலுமல்லாமல் எழுபிறப்பிலுந் துன்பஞ்செய்யும்படிய கெடுதியையும் நரகினையும் உண்டாக்கும் வெற்றியுள்ள அரசனே! நன் ர்க்கத்தைக் கற்பித்தாயானால் இப்பொழுதே செய்கிறோமென்று அந் பிராமணர்கள் எதிரில்நின்று பயந்துசொல்ல (அதைக்கேட்ட)வல்லபு அவ்வரசன்-எ-று.

வெஞ்சினமூளக் கண்கள்சிவக்க வெடிசொல்லாற்
செஞ்சொ லுரைக்குந் தேசிகர்தேவர் திறல்வேந்தர்
தஞ்சொ னவின்று லம்மொழிகேளாத் தகவில்லோர்
அஞ்சிநடுங்கத் தண்டமிழைப்ப தறமென்றே.

(இ-பு.) வெவ்விய கோபமூண்டு கண்கள்சிவக்க வெடித்த சொல ல்சொல்லுகிறுன்னல்லவார்த்தையைச்சொல்லுங் குரு தேவர்கள் வலி யுள்ள அரசர்கள் என்றுமிவர்கள் யாதாவதொரு சொல்சொன்னால் அ

வர் வார்த்தையைக்கேளாத தகுதியில்லாதவர்கள் பயந்து நடுங்கும்படி தண்டனைசெய்வது தருமமென்று-எ-று. (௰௫)

என்னுரை கேளீ ராமெனினுங்களை யிப்போதே
யன்னிய கீழ்மைக் குலசாய்வேதிய ராகாது
கொன்னுறு தண்டஞ் செய்குவனென்றென் னிறைகூற
முன்னுற நிற்கும் வேதியர்வெருவா மொழிகுற்றார்.

(இ-பு.) இவ்வாறுசொன்ன அரசன் எனவார்த்தையை நீங்கள் கே ளாவிட்டால் உங்களையிப்பொழுதே பிராமணரென்கிற யோக்கியதை யி ல்லாமல் நான்குவருணத்துக்கும் அன்னியமான தாழ்ந்தசாதியாய்ப்போ கத்தக்க கொடியதண்டனைசெய்விப்பேன் கொடியதண்டனை செய்விப் பேனென்று பின்னுஞ்சொல்ல எதிரிலிருக்கும் பிராமணர்கள்பயந்துசொ ல்லுகின்றார்கள்-எ-று. (௰௬)

சிறைமன்னா சிறையுன்றன் றிருவுள்ளப்
பேறல துண்டோ நின்குடைவாழப் பெற்றோர்க்குத்
தாறுலைபூகத் தொடுகனி தேமாத் தலைசாய
ஆறலை மோது நிடதத்திருநா டணைவோமே.

(இ-பு.) மன்னவனே கோபஞ்செய்யாதே கோபஞ்செய்யாதே உன் குடைநிழலில் வாழப்பெற்றவர்களுக்குஉன் திருவுள்ளப்பேறன்றி வேறொ ன்றுண்டோ (இல்லை ஆதலால்)குலைகள் அசைந்துகொண்டிருக்கும்படி யான கமுகமரமும் பழங்களையுடைய தேமாமரங்களும் தலைசாயும்வ ண்ணம் ஆறுனது அலையினால்மோதத்தக்க நிடத தேசத்துக்குப்போகி றோம்-எ-று. (௰௭)

என்றவர் கூறச் சிந்தையுவந்தே யிகல்வேந்தன்
ஒன்றிய சாம வானமடமாத ருருவாகப்
பொன்றணி பெண்மைக் கேயுமனைப்புப் புனைகென்னத்
துன்றி யணிந்தார் கைபுனைவண்ணத் தொழில்வல்லோர்.

(இ-பு) இவ்வாறு அவர்கள்சொல்லலும் சிறந்தவலியுள்ள அவ்வரச ன் மனமகிழ்ந்து அலங்காரஞ்செய்விக்கும் நல்லதொழில்வல்லவர்களை அ ழைப்பித்து இந்தச்சாமவானுக்குப் பெண்ணுருவாகும்படி அழகுமிகுக த பெண்மைக்குப் பொருந்திய அலங்காரஞ் செய்யுங்களென்று சொல்ல அவ்வாறுசெய்ய வொத்துக்கொண்டுபோனார்கள்-எ-று. (௰௮)

மங்கையர் போலக் கொங்கைகள் வேறே வனைவித்துக்
குங்கும சந்தத் தேய்வைகள் கோட்டிக் குளிர்முத்தத்
தொங்கல் வரைந்திட் டினமலர்பெய்த கருவோதி
பொங்கிரு ளைச்சிகழிகையாகப் பொற்பித்தார்.

(இ-பு) மாதர்களுக் கிருப்பதுபோலிருக்கும்படி வேறோரனந் நூதனமாக அதற்குத்தக்க ஒருபொருளால் ஏற்படுத்திக்கும்குடப்பு லிய வாசனைத்திரவியஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு பூசி குளிர்ச்சிதந்தப த்துமாலைகள் அணிந்து பூமாலைசூட்டிய அளகபாரத்தை இருளும் ம்படி கொண்டையாக அலங்கரித்தார்கள்-எ-று.

கோலவிழிக்குக் கருமை சிறக்குங் கோறீட்டி
யால நெடும்பொற் குண்டல முங்கா தணிசெய்து
பாலநுதற்குப் புண்டரமிட்டுப் படர்வேலை
ஞாலமும் விற்குந் தூசுபமைத்தார் நகைவயற்றார்.

(இ-பு) அழகுள்ள நேத்திரங்களுக்குக் கறுத்த மையைச் இர தூரியக்கோலாலெழுதி அசையும்படி யிரண்டு காதிலும் பொற்கு லங்கள் தரித்து நெற்றியினிடத்தில் திரிபுண்டரமாக விபூதியணிந்து ந்த சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தையெல்லாம் (விலைக்காக) விற்றுக்கொ க்கத்தக்க மதிப்புள்ள வஸ்திரமுமணிந்தார்கள், அலங்காரஞ் செ தொழிலில் குற்றமற்றவர்களாகிய வண்ணமாதர்கள்-எ-று. பாலநு மிசைப்பதம்.

(வேறு.)

இருடிகண் மயங்கத் தாருகாவனத்தி னெதிர்ந்தநாண் மாயனர் ம
புரிதருபெண்ணுரு மோகினிருபம் பொருவறப்பெற் றலங்கரித்தா
திதனக்குக் காட்டவுமகிழ்ந்தனை றென்னவன் விடைகொடுப்பத்
னையரோடும் புகுந்தருமறையோர் குழாத்தொடு மிவர்களுஞ் சென

(இ-பு) இருடிகள் மயங்கும்படி தாருகாவனத்தில் சென்றகாலி ஷ்ணுவானவர் மாயத்தினு லேற்படுத்திக்கொண்ட மோகினியென் பெண்ணுருவையொப்பாக அழகுடனலங்கரித்து அரசனுக்குக் காட் வுடன் அவன் மகிழ்ந்து நன்றாக விருக்கின்றதென்று சொல்லி உத் கொடுக்கப் பெற்றுக்கொண்டு சீமந்தனியிடத்துக்குத் தங்கள் தங் த்தினிகளுடன் செல்லுகின்ற பிராமணக் கூட்டத்துடன்போனார்க

குடங்கையினடங்கா நெடுங்கண்ணிருந்தகோயிலிற் குமரனுங் கால
வடந்தருமூலைமா னையுருவெடுத்தமைந்தனும் வருதலுங்கிழா
ஈடங்கெதிர்சென்றுங் கருக்கியமுதல நவைபறபூசனைபுரிந்தாங்
கடைந்தமாதவரோ டிருக்கெனவிவர்க்கு மகமகிழ்ந்தாசன மளித்த

(இ-பு.) உள்ளங்கையினளவி லடங்காத நெடியகண்களையுடைய தனியிருக்கும் கோயிலில் சுமேதாவென்பவனும் அழகிய மணிவட ந்த தனங்களையுடைய பெண்ணுருவமைந்த சாரஸ்வா னென்பவனும் ல்லுதலும் சீமந்தனியவர்களைக்கண்டு மனமகிழ்ந்து எதிர்கொண்டு ய அருக்கியமுதலான குற்றமற்ற பூசைசெய்து அவ்விடத்தில் வந்திரு

பிராமணர்களுடன் மகிழ்ந் திருங்களென்று இவர்களுக்கும் ஆசனங் கொடுத்தாள்-எ-று. (உஉ)

சுழிபடுகங்கைச் சடிலவானவன்றன் சோமவாரத்தினிற்பெருக்க, பழிபடு தீமை முனிந்தவேதியனைப் பன்னியரோடுபன்முறையால், வழிபடுமமை யத் திவர்முகநோக்கி மைந்தரிங் கிவரெனமதித்துப், பொழியருட் கண் ணுணைமுகங்கோட்டிப் பொற்கெனமறைத்திது செய்தாள்.

(இ-பு.) சுழிகள்பொருந்திய கங்கையையணிந்தசடாமகுடத்தையுடை ய பரமசிவனுக்குரிய சோமவார தினத்தில் தன்னிடத்தில் வந்திருக்கு ம் பிராமணர்களை அவரவர்கள் பத்தினிகளுடன் பலமுறையோடு பூச னைசெய்யுங்காலத்தில் இவர்கள் முகத்தைப்பார்த்து இவர்க ளிருவரும் ஆண்மக்களென்று தனக்குளறிந்துகொண்டு அருளைப் பொழிகின்றகண் ணையுடையவள் வெறுப்பினால் பொலிவுள்ள முகத்தைச் சற்று வளைத்து க்கொண்டு பின்பு விரைவுடன் அதைமறைத்து இந்தக்காரியஞ்செய்தாள் எ-று. * பழிபடு தீமைமுனிந்த வேதியனை என்பதற்கு-பாவமுண்டாகு ம் தீமைகளைவெறுத்த வேதியனைப் பொருள்கொள்க. (உ௩)

எத்திறத்தானு மடைந்தவரெல்லா மீசனுமுமையுமே யென்று
அத்திரவிழியாள் வேதநான்முறையு மாகமமுறையுமா யடுத்துப்
பத்திசெய்பூசை விதிமுறைபுரிந்து பால்பழந் தேன்கழைத்தீம்பால்
சித்திரக்கனக வள்ளத்தினேந்திச் சிற்றுண்டி யடிசிலோ டளித்தாள்

(இ-பு) எந்தவேடத்தினாலாவது சோமவாரதினத்தில்வந்தவர்களெல்லா ரும் பரம சிவனும் பார்வதியுமே யென்று (தனக்குள் பாவித்து) பாண மொத்த கண்களையுடையவள் வேதமுறையையும் ஆகம முறைமையினை யுந் தழுவிப் பத்தியிளைபத்தக்க பூசையை விதிதவறாமல் செய்து பால்ப ழம் தேன் மதுரமுள்ள கருப்பஞ்சாறு என்னு மிவைகளைத் தனித்தனி யாகச் சித்திர மமைந்த பொற்கிண்ணத்தி லேந்திச் சிற்றுண்டியையச் சா தத்துடனே கொடுத்தாள்-எ-று. (உ௪)

நறுமலர்மாலை சந்தனத்தேய்வை நவையறு மாடையாபரணம்
பிறையெனவொளிருங் கருப்புரநறிய பிளவுவெள்ளிலையிவை யுதவி
மறையவர்தம்மைவரதனோடுமையை வழுத்துவபோலநின் றேத்தி
நெறியிடைப்படர்தி ரெரிவருள்செய்தா ணிடததேசாதிபன் மனையாள்.

(இ-பு.) வாசனைதங்கிய பூமாலை சந்தனக்குழம்பு நல்லவஸ்திரம் ஆபர ணம் பிறைபோல்விளங்கும் பச்சைக்கருப்பூரம் மணமுள்ள பாக்குப் பி ளவு வெற்றிலையென்னு மிவைகளைக்கொடுத்துப்பிராமணர்களைப் பரமசி வனையும், பார்வதிதேவியாரையும், தோத்திரஞ்செய்தல்போல அவர்களை

திரிலின்று தவஞ்செய்து நீங்கள் மார்க்கத்திற் செல்லுங்களென்ற
ரவு கொடுத் தருளினுள் கிடதேசத்தரசன்மனைவி-எ-று.

அன்னவளுடைய மீசனுமென்ன வருச்சனைபுரிந்த பாவனையாற்
றன்னிகரிலாத சாமவானென்றோர் கோலம்போய்த் தனிரியலுருப்
முன்னைநாண்மைந்த னென்பதுமறந்து மொய்குழலாரென முயக்
தன்னொடுநெறியிற் போதருஞ்சுமேதாத் தனைமுகநோக்கினின்றன

(இ-பு.) அத்தன்மையுள்ளசீமந்தனியானவள் பார்வதியும் பரம
மாகப் பாவனைசெய்து பூசித்ததனையினாலே கல்வியால் தனக்கெ
ல்லாத சாமவானென்பவன் தான்கொண்ட கோலம்போலவேபெ
ரு வமைந்து முன்னம்தான் ஆண்மகனென்பதையுமறந்து மாதர்
வே புணரவிரும்பித் தன்னுடன் மார்க்கத்தில் வருகின்ற சுமேதா
பவன் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறான்-எ-று.

துணைவநீபோத லொழிந்திந்தவனத்திற் றளர்க்கொடி குளாய ம
த்தெதன், பனைமுலைநின்று மணிப்புயத்தழுந்தப் பவளவாயிதழ்
ருகி, யனைகுதியலது மறுத்தியேலின்னே யாருயிர் முடிகுவனெ
னைபுரைகண்ணார் விரும்பிடமறுத்தல் காளையர்க்கறனலகண்டா

(இ-பு.) துணைவனே நீ போவதைவிட்டு இந்தவனத்தில் பூங்கொ
கொடியுடைய கொடிகள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மண்டப
என்னுடைய பருத்ததனங்கள் உன்னுடைய அழகியபுயங்களில் அ
ம்படி பவளம்போன்ற வாயதரத்தை முறையாய்ப் பருகிப்புணர்ச்சி
அல்லது தடுப்பையேயானால் இப்பொழுதே நானிறந்து போவேன்
வுமல்லாமல் பாணமொத்த கண்களையுடைய மாதர்கள் விரும்பி
ம்மதியாமல் தடுப்பது ஆடவர்க்குத் தருமமல்ல-எ-று.

என்றிவ்வமொழி: காமநோய்தலைக்கொண்டிடத்தஞ்சுமேதிநெஞ்சு
தன்றுணைத்தோழன்விளைந்தவாய்மையினுற்சாற்றியதுவெனவெ
ஒன்றெடுத்துரையான் வழிச்செலக்கண்டவுற்பலவிழியினளமீட்
ன்பிணிதோளாயெனையணைந்தன்றிப்போகலையெனச்சென்று தடு

(இ-பு) இந்த மாதானவள் இவ்வாறுதொடர்ந்து காமநோ யதிகரி
இரந்துசொல்லுதலும் செல்லுகின்ற சுமேதாவானவன் அந்தவார்த்
யைக்கேட்டுத் தன் சினேகன் விளைந்த வார்த்தை யிதுவிப்படிச்சொ
கிறனென்று நினைத்துப் பிரியத்தாவு வேறொன்றுஞ் சொல்லாமல்
க்கக்கண்ட நீலோற்பலம்போன்ற கண்களையுடைய அந்தமாது மற
யும் அழகுநிறைந்தோளனே யென்னை யணைந்தல்லது நீபோகக்கூ
டாதென்று சொல்லித்தடுத்தாள்-எ-று. (உ

வனப்புறபெண்மை மருவியதறியா மறையவ னடுத்தவள்வதனந் [த்
தனைப்பிரியாததோழனென்றெண்ணித்தருக்கொடுபொருக்கெனநோக்கி
இனைத்துணையெனுமாண் வடிவின்றிச்செயற்கைசெய் வடிவமுங் காந்து
கனத்தடிபரந்த முலையிளங்கொடியாய் நிற்றலுங்கண்டதிசயித்தான்.

(இ-பு) பெண்ணுருவமைந்த சாமவானிவ்வாறு தடுக்கவே! தன்தோழ
ன் அழகுள்ள பெண்ணுருவமானதை அறியாத சுமேதாவென்னும்பிரா
மணன் இவன்நம்முடைய தோழன்றனே இப்போ திவ்வண்ணஞ் சொ
ல்லுகிறனே யிதென்னகாரணமென்று தன்மனதிலெண்ணித் தருக்குட
ன் விரைவாகச் சமீபத்திற்போய் அவள் முகத்தைப்பார்த்துத் தினை யள
வும்ஆண்வடிவமென்பதில்லாமல் கோலஞ்செய்யும் அவயவங்களுமறை
ந்து கனமுள்ளதாயடிபரந்த தனங்களையுடைய இளங்கொடிபோன்றபெ
ண்ணுருவுக்குள்ள அடையாளத்துடனிருக்கவே அதனைப்பார்த்து அதி
சயித்தான்-எ-று. (௨௯)

குங்குமமெழுதிக் கதிர்த்தடிபரந்த குலவிளங்கொங்கையோமலர்சூழ்
கங்குலிற்சிறந்துநெறித்துநெய்த்திருண்டகருங்குழற்கற்றையோகலைசேர்
திங்களிற்பொலிந்த திருமுகத் தழகோ திங்களிற் கிடந்தசே லென்னப்
பங்கயமலருங் காவியுங்கடந்த படைநெடுந்துணைவிழிவடுவோ.

(இ-பு) அப்படி அதிசயித்தவன் குங்குமப்பூச்சுழம்பினால் ரேகைகளெ
ழுதப்பட்டுப் பூரித்து அடிபரந்து மேலேகுவிந்திருக்கும் தனங்களின்அ
ழகினையோ இருளைப்போலக் கருமைநிறஞ்செறிந்து நெறிப்பாகி நெய்த்து
ந்சரிந்த அளகபாரத்தின் அழகினையோ பதினாறுகலைகளும் நிறைந் துள்
ள பூரணசந்திரன்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் முகத்தி னழ
கினையோ சந்திர னிடத்தி லிரண்டு சேற் கண்டை யிருக்கின்ற தென்று
சொல்லும்படி (முகத்தினிடத்திருக்கும்) செந்தாமரைமலரையும்நீலோ
ற்பல மலரையும்வென்ற வாட்படை போல நெடியதாகிய இரண்டு கண் (௩௰)
ணின் அழகினையோ-எ-று.

மாந்தளிர்நிறைய மேனியின்வனப்போ வரிவளைமுன் கையிற்கவினோ
காந்தளந்நசெங்கை மெல்விரலணியோ கதிர்மணிமே கலையொளியோ
வல்லிநுண்ணிலல்குற் செவ்வியோவிவற்று ளேதையான் புகழ்ந்தெடுத் துரைக்
பூந்தவிசுறையுந் திருமகளன்றிப் புவியில்வேறுமிவள்போல்வார். [சேண்

(இ-பு) மாந்தளிரையொத்த மேனியின்அழகினையோ வரிவளையணிந்தமு
ன்கை அழகினையோ செங்காந்தள் மலர்போன்ற மெல்லியவிரல் அழ
கினையோ ஒளிபொருந்திய மணிவடமாகிய மேகலாபரணத்தின் ஒளியி
னையோ அழகுபொருந்திய அல்குலி னழகினையோ இவைகளுக்குள் எத
னைப் பெரிதென்று நான் தனித்தனியாகப் புகழ்ந்து சொல்லுவேன் செந்
தாமரை மலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் திருமகளை பலவாறு

வுலகத்திருக்கும் மாதர்களில் இவளுக் கொப்பாகின்றவர்கள் யாரிருக்கின்றார்கள்-எ-று.

(கஉ)

எனமனத்தெண்ணிமடந்தையே நானென்றேழுந்தேடிவ்வனத்தடைந்த
னையவன்றன்னைக் கண்டிலேனின்னை யருகுகண்ட திசயமுற்றேன
புனைமலர்த்திருவே யாரைநீயிங்குப் புகுந்தவாறென்புகலென்னச்
சுனைமலர்க்குழலாண் முறுவலித்தெனது துணைவகேளென் மொழி சொன்

(இ-பு) இவ்வாறாக மனதிலெண்ணி மாதே! கேளு நானனைவனைவிதத்துடன் இவ்வனத்திலடைந்தேன் இப்போது அவனைக்காணேன் அருகி லுன்னைக் கண்டதிசயம் அடைந்தேன் அலங்கரித்துச் செல்லத்தக்க செந்தாமரை மலரில்வீற்றிருக்குந்திருமகள்போல்பவளே நீயாவள் இவ்விடத்தில் வந்தகாரணம்யாது சொல்லென்னவே சுனைப்பூவணிந்த அளகத்தையுடைய அந்தமாதானவள் நகைத்து என் துணைவனே! என் வார்த்தையைக் கேளென்று சொல்லுகிறாள்-எ-று.

(கஉ)

முன்னைநின்றனைவன் சாமவான்சாமவதி யெனுமொய்குழலாகி
நின்னுடைமனையாய் நின்னையேபுணரு நேயத்தானினைத்துதி செய்தேன்
பொன்னனீர்சுணங்கென்முலையுறுவண்ணம் புணருதிபொருப்படையாகக்
கன்னலான்பொலிந்தேனென்றவளிசைப்பக் காளைவேதியனிஃதுரைத்தான்

(இ-பு) முன்னம்நான் உன்னுடனிருந்த சாமவானென்பவனே! இப்போது சாமவதியென்னு மாதாகினேன் உன்மனையவளாயுன்னைப் புணரவேண்டுமென்கிற இச்சையினால் நினைந்து உன்னைத் துதித்தேன் பொன்போல் விளங்குந்தேமல் [illegible]னில்பொருந்தாத வண்ணம்புணர்வாயாகப்பொருபடையையுடைய மன்மதன் கருப்புவில்லில்பூட்டிய பாணங்களால் வருந்தினேனென்னக் [illegible] வாலிபனாகிய அந்தவேதியன் இந்தவார்த்தையைச் சொல்லுகிறான்-எ-று.

(கரு)

தீங்குசெய்தாய் பாவிநீபொல்லாய் தெருண்டசாரச்சுதன்றந்தோ
[illegible] திருக்குலமுமுயர்தவப் பெருமையுமறந்து
பூங்கணைகையர் போற்றியுரைகின்ற பொற்புமாத்திறத்தவாய்வேதந்
தாங்கியநீதி நூலிவையெல்லாந் தணக்கவென் சமைந்தவாறென்றான்.

(இ-பு) பாவியே! கொடியவார்த்தைசொன்னாய் நீ பொல்லாதவன் அழுதல்வுணவுகளை யோதியுணர்ந்த சாரச்சுதனாற்பெறப்பட்ட நீ மேன்மையினையும் சிறந்தகுலத்தினையும் உயர்ந்த தவப் பெருமையினையும் மறந்து அழகுள்ளவேசையர்போல் கொடியவார்த்தைசொல்லிக் குணமதற்குத்தக்கதாய் வேதத்திற்சொல்லப்பட்டநீதிசாஸ்திரமுறையினையெல்லாம் நீங்கும்படி யிவ்வாறானகாரணம் யாதோ வென்றான்-எ-று.

விரிகடலுலகின் மாதருக்கெல்லாம் வேண்டுவ கல்வியேயன்றோ
புரியுநூன்மார்பவென்றுணைக் கொழுநபுந்தியினைய மின்றெழிக

அரிவையேயான் மற்றுணலேனென் பதமார்ந்தநின்றிருக்கணற்காணென்
றெரிபசும்பூணுளவயவமனைத்து மேர்தன்முன் புலப்படுத்தினளால்.

(இ-பு) பரந்தகடலாற்சூழப்பட்ட உலகத்தில் வாழு மாதர்களுக்கெல்லாம் வேண்டியபொருள் கல்வியல்லவோ? முறுக்கிய முப்புரிநூலணிந்த மார்பனே! என் துணைக்கணவனே! உன்மனதிலிருக்குஞ்சந்தேகத்தை யிப்போ தொழிபக்கடவை நான்பெண்மகளேயல்லது ஆண்மகனல்லேனென்பதை உன்கண்ணால் தரிதப்படாமல் பாரென்று விளங்குகின்றபூணணிந்திருப்பவள் தன அவயவங்களையெல்லாம் அந்தப்பிராமணனுக் கெதிரில் தெரியும்படிசெய்தாள்-எ-று. பசும்பொன்-பசியபொன்னாற் செய்யப்பட்ட பூண்.

(கசு)

[illegible]ண்டனமகிழா வதிசயித்திந்தக் காரிகை தன்னவயவம்போல்
மண்டுசீர்சுலாய வையகத்தெந்த மடந்தைய ரவயவமுடையார்
அண்டர்நாயகன்றன சோமவாரத்தி னமர்ந்தசீமந்தனி யகத்திற்[றான்
கொண்டபாவனையில் விளைந்தவாறென்னக் குழைந்தனனுளமறந்திருந்

(இ-பு) அவள் தன அவயவத்தைக்காட்டவே கண்டுமகிழ்ந்து அதிசயமுற்று இம்மாதின் அவயவம்போல அவயவமுடையவர்கள் இவ்வுலகத்திலிருக்கு மாதர்களில்யாருமில்லை-பரமசிவனுடைய சோமவாரதினத்தில் வருகிற (பிராமணர்களையும் அவர்கள் பத்தினிமார்களையும்) சீமந்தனி மனதில் சத்திசிவரூபமாகப் பாவனைசெய்யுந் தன்மையினா லிவ்வாறுவிளைந்ததென்றெண்ணி மனங்குழைந்து வசனிப்பதின்றித் தன்னைமறந்திருந்தான்-எ-று.

(கஅ)

காளைவேதியனீ யவயவமுற்றுங் கண்டனை யையநீங் கடிந்தாய்
தோளையேவிரும்பியணைகுவென்றயர் [illegible]கடவணைகென்னா
வாளைநேர்விழியா ளுனாத்தனுக்கட்ட மறைவலான்மனத்துயரெய்திப்
பாளைசேர்கமுகின கழுத்தினைப்பேட்டி யெனவவன் பற்பலமொழிந்தான

(இ-பு) கட்டிளமையனாகிய பிராமணனே! என்னவயவமெல்லாங் கண்டனை சந்தேகமுநீங்கினை இனி என்னுடைய தோளை விரும்பங்கொண்டணை சந்தேகமுநீங்கினை இரக்கின்றேன் ஆதலால் தடைசொல்லாமல் துயரமுண்டு புணரென்று இரக்கின்றேன் அதலால் வாளையொத்த கண்களையுடையவள் காமவிடாய்கெடும்படி அணையென்றவளையொத்த கண்களையுடையவள் சொல்லலும் அந்தவார்த்தையைக்கேட்ட பிராமணன் மனதில் துயரமுற்றுப் பாளைகள்பொருந்திய கமுகமரத்தின் கழுத்தினைப்போலப் பசிபசிறமூர் இரட்சிபுமுள்ள கண்டத்தையுடையவளே கேளென்றுபலமொழிகள்சொன்னான்-எ-று.

(கஎ)

(வேறு.)

வேத முதற்பல மேதகு நூல்களும்
ஓதி னனகலே முற்று முணர்ந்தேஞ்

சாதி யுந்தரு மத்தையும் விட்டிப்
பாத கந்தரு பண்பை யிழைத்தேம்.

(இ-பு) வேதங்களும் மேன்மைபொருந்திய பல சாஸ்திரங் சொல்லுகின்ற நல்லகலைகள் முழுவதையும் உணர்ந்தோம் (இப்படித் தன்மையுள்ள நாம் இப்போது) குலாசாரத்தையுந் தருமநெ யும் விட்டுப் பாவத்தைத்தரும்படியான இந்தச்செய்கையைச்செய் ஏ-று. சாஸ்திரங்களாவன-வேதாந்தம் வைசேடிகர் பாட்டம் பிர ம் பூருவமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை என்னும் ஆறுமாம்.

உற்ற தாதைய ரோடு முணர்ந்தேம்
வெற்றி வேலிறை வஞ்சனி யீர்ப்பான்
சொற்ற கைதவஞ் சூழ்த்தனை [illegible]கி
நற்ற வக்கொடி பானனு குற்றேம்.

(இ-பு) (நாம் அரசனிடத்துக்குப் போனபோது அவன்சொன்ன நம்முடைய பிதாக்களுடன் சொல்லப் போனோம் கெடுதிநேரிட அரசன்சொன்ன வஞ்சனைக்குட்பட்டவர்களாய் நல்லதவமுள்ள தனியிடத்துக்குப்போனோம்-எ-று.

கைத வத்தை யறிந்துமக் கற்பினள்
செய் தவத்திற் சிவனே முடையென
ஐய மற்றங் கருத்தனை செய்[illegible]
மைப விந்துய தன்னொடு [illegible]னம்.

(இ-பு) கற்பினையுடைய அ[illegible]னி நம்முடைய வஞ்சகத் அறிந்துகொண்டும் அவள்தவத்தினால் [illegible]ரவதியும் பரமசிவனுமாக மைப்பாவித்து உண்மையாகப் பூசித்த [illegible]ண்ணே இந்தத்துய அடைந்துவந்தேம்-எ-று.

புன்மை நெஞ்சிற் பொறியறு பாதக
வன்மை வஞ்சர் வருவதெண் ணுமலே
நன்மை யோர்க்கு நவைக ளியற்றிடுந்
தன்மை தங்களுக் கேவந்து சாருமால்.

(இ-பு.) சாஸ்திரவிசாரணையில்லாமல் பாதகங்களைச்செய்யும்படி விவேகமற்ற வலியமனதுள்ள வஞ்சகர்கள் மேல்வருவதையெண் மல் பெரியோர்களுக்குச்செய்யுங் குற்றமானது தங்களுக்கேவந்து டும்-எ-று.

ஆதலா லிவ் விடரை யருந்தவ
மாதவத் தினின் மாற்றுவ மாற்றிடாப்
போது நின்னைப் புணர்வது திண்ணமென்
றோதினன் மறுத்தாள் பின்னு மோதினன்.

(இ-பு) ஆகையாலிப்போது நமக்குநேரிட்டதுன்பத்தை அரிய தவத்தினால் நீக்கிக்கொள்ளுவோம் மாற்றக்கூடாதபோது நிச்சயமாக உனைப்புணருகிறேனென்றுசொன்னான் அப்படிக்கூடாதென்று அவள்மறுத்தாள் பின்னுஞ்சொல்லுகிறான்-எ-று. (௪௨)

வேழ மின்பிடி போலும் விளங்கிழா
யாழி னேர்மண நங்குலக் கேற்பதோ
சூழி யானைய மன்னர் தொழிலென்றான்
மாழை மான்விழி மாது மிதுசெய்தாள்.

(இ-பு) பிடியானையி னடைபோன்ற நடையையுடைய பெண்ணே? காந்தருவவிவாகம் நம்முடைய குலத்துக்கேற்றதோ அது முகபடாமணிந்த யானைகளையுடைய அரசர்க்குரிய தொழிலாமென்றான் (அவனப்படிச்) சொல்லியும் அவளிவ்வாறுசெய்தாள் எனனவெனில்-எ-று. (௪௩)

காம பாணங் கலக்கக் கருத்தழிந்
தாம தல்ல விதென்ப தறிந்திலன்
வாம முன்கை வலிவினிற் பற்றியே
தூம மென்குழ லேய்ந்திட நீங்கினாள்.

(இ-பு) காமபாணமானது கலக்குவதினாலே இந்தக்காரியஞ்செய்யலாமென்றுஞ் செய்யலாகாதென்றும் யோசியாமல் அவனுடைய அழகிய முன்கையைப்பற்றி யிழுத்துப் பலாத்காரமாகப்புணர்ந்து துயைப்நீங்கினாள்-எ-று. தூமமென்குழல்-அகிற்புகைசூட்டிய குழலாள். (௪௪)

வன்பி லன்னவள் புல்லவு மைந்தனு
மின்ப முற்றில [illegible]ன்னலுற் றேதுவான்
முன பயந்தநந் தாதையர் முன்சென்று
துன்ப முற்ற தொடர்பை யுணர்த்துவான்.

(இ-பு) அவளிவ்வாறு பலாத்காரமாகப் புணர்ச்சிசெய்யவே அவனின்பமுறாமல் துன்பங்கொண்டு சொல்லுகின்றான் முன்னம்நம்மிருவரையும் பெற்ற பிதாக்களிடத்திற்போய்த் துன்பமடைந்த இந்தச்சங்கதியைச்சொல்லுதற்கு-எ-று. (௪௫)

வருதி யென்னொடு மென்று வழிக்கொளா
அரிதி னீளிடை நீந்தி யகனகர்
பரிதி யன்னதன் றாதைதன் பான்புகீஇச்
சுருதி நூல்வல்ல தோன்றல் சொன்னனரோ.

(இ-பு) பெண்ணே?என்னுடன் வாவென்றுநடந்து அரிய மார்க்கத்தைக்கடந்துபோய் விசாலமுள்ள நகரத்திற்சேர்ந்து சூரியனைப்போன்ற தந்தையினிடத்திற்சேர்ந்து அந்தப்பிராமணன்சொல்லுகிறான்-எ-று. *சுருதிநூல்வல்லதோன்றல்-வேதங்களுணர்ந்தபிள்ளை. (௪௬)

சொல்லிய மொழிக்கனல் செவித்துளை வெதுப்ப
நல்லுணா வொடுக்கவறி யானடு நடுங்கிச்
சல்லியமுதைப்பமரு மங்கிழி தாச்சாய்
வல்லிய மெனப்புவியின் மன்னவன் விழுந்தான்.

(இ-பு) இவ்வாறு அந்தப்பிராமணன் சொல்லிய சொல்லாகிய னது தன்காதின் துளையைச் சுடுதலினால் பிராமணனுக்கு நல்லவார் சொல்லத் தெரியாதவனாய் நடுக்கங் கொண்டு முள்ளம்பன்றி இறி ர்புளைந்து விழுகின்றபுலியைப்போல் அந்தராசன்மண்ணில்விழு

விழ்ந்தவன் மனத்தையிது வெய்யசுடர் வேல்போற்
போழ்ந்திட வெருக்கொடு பொருக்கென் வெழுந்தாங்
காழ்ந்த விரதத்திருவி னற்புதம் வழுத்தாத்
தாழ்ந்தனன் முனித்தலைவர் தம்மொடிது சொன்னான்.

(இ-பு) அப்படி விழுந்தவனுடைய மனதைப் பிராமணன் ன வார்த்தையானது கொடிய சுடர்வேல்போலப் பிளப்பதினால் கொண்டு விரைவில் எழுந்து முதிர்ந்த விரதத்தையுடைய சேமந்த அற்புதமான செய்கையைப்புகழ்ந்து வணங்கி முனிவர்களிற்சிறே ளாகிய முனிவர்களுட னிந்தச்சேதியைச்சொல்லுகிறான்-எ-று

கேட்டவிருந்தமுனி வீரிஃது கேண்மி
னாட்டமொரு மூன்றுடைய நற்பனை வழுத்தும்
வாட்டமி லவத்தினன் மதித்தபடி மாதாய்க்
காட்டியது பாவமொ ருட்டுரையு முண்டோ

(இ-பு) வந்தபிராமணன் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு ருகிவிருக்கும் முனிவர்களே! நான்சொல்லுகிற மொழியைக்கே ள் [illegible]த்திரங்களையுடைய பரமசிவனைத் துதிசெய்கின்ற தவ லாத தவநெறியையுடைய சீமந்தனி தன்மனதில் நினைத்தபடி ராமனைமகன் பெண்ணுருவமானது என்பாவமல்லது இ ஒருகட்டுரையுமுண்டோ-எ-று

வந்தமறை மாணிபெறு வல்லுரு வொழிப்பான்
எந்தவழி மாதவ மியற்றிடுவன் யானீர்
அந்தவகை யோதுகென வாங்கர சுரைப்பப்
பந்தமில் பராத்துவச மாமுனி பகர்ந்தான்

(இ-பு) வேதங்களுணர்ந்த பிரமசாரியாகிய பிராமணன் பு அடைந்த (எளிதிலொழித்தற்கரிய) பெண்ணுருவத்தையொழிக்க ந்தமுறைமையினால் பெரியதவத்தைச்செய்குவேன் நீங்கள் அ யைச்சொல்லுங்களென்று அரசன்சொல்ல பாசந்[illegible] துவாசமுனிவர் சொல்லுகின்றார்-எ-று.

கண்ணுதல் கழற்றுணை கருத்துற வருத்தும்
புண்ணியர் தருக்கும்விர தத்தினது பொற்பு
விண்ணுல கினிற்பழ விரிஞ்சன்முத றேறான்
மண்ணுல கினிற்சிறிய மானிடர்கொ றேர்வார்

(இ-பு) பரமசிவனுடைய உபயதிருவடிகளுஞ் சித்தத்திற்பொருந் துப்படித்துதிசெய்யத்தக்கதாய்ப் புண்ணியவான்கள் களிப்புகொள்ளும் விரதத்தின்பெருமையைப் பழமையான பிரமன்முதலாகிய தேவர்களு ம் அறியமாட்டார்கள் என்றால் இம்மண்ணுலகிலிருக்குமானிடர்களோ அறியத்தக்கவர்கள்-எ-று (௫௯)

(வேறு)

எப்பாதகஞ்செய்து மெப்பரிசுற்றுளோருஞ்
செப்பாரிளங்கொங்கை மனோன்மணியீசன்றேவி
துப்பார்மலர்ச்சேவடி போற்றித்துதிப்பராயிற்
றப்பாமலெய்துங்கதி தீமைதணந்துபோமால்

(இ-பு) எவ்விதமான பாதகங்களைச்செய்து பின்பு எந்தத் தன்மை யை அடைந்தவர்களும் மனோன்மணியாய்ப் பரமசிவன்தேவியாகிய பா ர்வதியின் திருவடிகளைத் துதிசெய்வார்களானால் தவறுபடாமல் நல்லக தி கிடைக்கும் தீமையானது நீங்கிவிடும்-எ-று, * செப்பாரிளங்கொங்கை பொற்செப்பினையொத்த இளங்கொங்கை எனவும், துப்பார்மலர்சேவடி செம்மைநிறந்தங்கிய தாமரைமலர்போன்ற திருவடிகள் எனவும்பொரு ள்கொள்க. (௬௰)

வெங்காரிருள்பானு விளங்கவொழுங்குமாபோற்
கொங்கார்குழற்பார்வதி யேழுலகுங்கொடுத்தாள்
பங்காதவன்பின் வழிபட்டவர்தங்கண்மாட்டுத்
தங்காதுதீமை யிதற்சேமறைசான்றுவேறே

(இ-பு) சூரியன் உதயமானால் மிகுந்தகருமைநிறமுள்ள இருள்நீங் கிவிடுதல்போலப் பதினான்குலோகங்களையுமீன்ற இயற்கையான வாசனை யுள்ள அளகத்தையுடைய பார்வதிதேவியானைக் கெடுதலில்லாத அன்பு டன் பூசைசெய்தவர்களிடத்தில் யாதொருபொல்லாங்குந்தங்காது அரச னே யிதற்கே வேதஞ்சாக்ஷியாயிருக்கின்றது-எ-று (௬௧)

ஆறுத்தான்ப மனக்கோட்டமகற்றிஞானக்
காணுர்குழலம்மையை நாடிக்கருத்தின்வைத்துப்
பானுவிரவினிம் மந்திரம்பற்றியோதி
நாளுந்தவமாம் வழிபாடுயர்துசெய்வாய்

(இ-பு) [illegible] பூசை (யித்தன்மையுடையதாதலால்) நீங்கா த துன்பமுள்ள மனதிற் பற்றியிருக்கும் காமமுதலாகிய குற்றங்களை

க்கி ஞானமார்கிய வாசனைதங்கிய அளகபாரத்தையுடைய உமையம்மை யைப் பாவனைசெய்து சித்தத்தில்வைத்துப் பாதிராத்திரிப்பொழுதில் மந்திரத்தை யிடைவிடாது உச்சரித்துப் பலவிதமானபூசையும் அன் டன்செய்வாயாக-எ-று. (௬௨)

என்றுமுனிவனு மைமந்திரமீதென்றீந்து
நன்றுயசிதன் றிருக்கோயிலி னுளுர்வைகிப்
பொன்றுமமார்ப புரிபூசனையென்னலோடுங்
கொன்றுருங்வேலா னிமவான்மகள்கோயில்புக்கான

(இ-பு) பாரத்துவாசமுனிவ ரிவ்வாறுசொல்லி உமையம்மைமந் த்தையும் உபதேசித்துப் பொன்னாரமணிந்தமார்பனே பார்வதிதேவி ருடைய ஆலயத்திற்போயிருந்து நாள்தோறும் பூசைசெய்யென்று ல்லவும் அவ்வரச ன்பார்வதியார்கோயிலிற்போனான்-எ-று.* கொன்று ம்வேலான்-பகைவர்க்கு அச்சத்தைத்தருதற் கேதுவர்கப்பொருந்திய ல் என்றுபொருள்கொள்க. (௬௩)

பொறியைந்துமாற்றிப் புலனும்மவையோடுபோக்கி
நெறிநின்றசிந்தை நிருபனருட்டொண்டுபூண்டு
மறியொன்றுசெங்கை வாதன்றிருத்தேவிபூசை
யிறிதன்றிக்கங்கு லொருமூன்றவன்பேணலோடும்.

(இ-பு.) ஐம்பொறிகளைமாற்றி அவற்றுடன் ஐம்புலன்களையு மித்து நல்லநெறியில்நின்ற சிந்தையையுடைய அரசன் வரப்பெறுதற் துவான அடிமைத் திறம்பூண்டு மான்பொருந்திய திருக்கரமுள்ள மசிவனுடைய சிறந்ததேவியாராகிய உமாதேவிபூசை யாதொரு கு மில்லாமல் அந்த ஆலயத்தில் மூன்றுநாள்செய்யவும்-எ-று. (௬௪)

அற்றைப்படுகங் குலினப்மையு முண்மகிழ்ந்து
கொற்றச்சுடர் வேலிறைவன் முனங்கோடிகோடி
கற்றைக்கதிர் வெண்மதிபோலிழனமேனிகாட்டப்
பொற்றைத்திருக் கோயிலுணின்றும் புறப்புவந்தாள்.

(இ-பு) அந்த மூன்றுநா ளிராத்திரியில் பார்வதியார் திருவுள் ழ்ந்து அவ்வரசனுக்கெதிரில் நிறைந்த வெண்கதிரையுடைய அநந்த டி சந்திரர்கள்போலஒளிவிளங்கும் திருமேனி தரிசனங்கொடுக்க ன்மலைபோன்ற திருக்கோயிலின் புறத்துவந்தாள்-எ-று. * கொற்றச் வேலிறை-வெற்றியையும் ஒளியையுமுடைய வேலேந்தும் அரசனெ பொருள்கொள்க.

வந்த ளைவணங்கி வழுத்தியமன்னர்மன்ன
முந்தாகுலந்தீர்த்தன னென்றனமுன்னரின்று

னந்தாவிளக்கே யன்பர்கனையந்தபொன்னே
சிந்தாமணியே சிறியேன்றுயர்தீர்த்தியென்றான்

(இ-பு.) அந்தராசன் தனக்குத் தரிசனங் கொடுத்த பார்வதி தேவி யைத் தொழுது நம்முடைய துயரந்தீர்ந்ததோமென்பதாக எண்ணங்கொ ண்டு நின்று கெடாத ரத்தினதீபமே! பரமசிவனுடைய இடப்பாகத்தை விரும்பிய தாயே! அடியார்க்குச் சிந்தாமணி போன்றவளே! எளியேனு டைய துயரத்தைத் தீர்த்தருளென்றான்-எ-று. (௬௬)

அன்புன் றிரக்கு மரசேயினி யஞ்சலென்றி
இன்புற்ற தேதுபுகலா யென்றிறைறவிகேட்பத்
துன்புற்றவிந்த மறையோன்சிறுதோன்றல்வேட
முன்பிற்றிகழ வருளென்றனன் மூரிவேலோன்

(இ-பு.) இவ்வாறு வரங்கேட்பவனை நோக்கி அன்புடையவனாய்த் தொ ழிசெய்கின்ற அரசனே? இனிபயப்படாதே உன்மனதில் உண்டான விருப்பம் யாதென்று பார்வதிதேவியார்கேட்க துன்பம் அடைந்திருக்கும் இந்தப் பிராமணப்பிள்ளையானவன் முன்போல ஆணுருவம் அடையும்படி தாயே அருள்செய்யென்று விண்ணப்பம் பண்ணினான்-எ-று. (௬௭)

பருவத்தொருகோடி தவத்துளம்பற்றினாலும்
திருபற்கிறைகேளெண்தன்பர் நினைந்தபான்மை
யொருவர்க்குமெம்மீசர் தமக்குமொழிக்காலமோ
தருகூற்றனம்வேறுளகே ளெனத்தையல்சொன்னாள்.

(இ-பு.) அரசனே கேள் ஒருகோடிவருஷம் தவத்தில் மனதை வை த்தாலும் என்னன்பர்கள் நினைத்த தன்மையை எம்பிறைவருக்கும்மற்ற யாவருக்கும் ஒழிக்கக்கூடாது ஆதலால் வேறேவரங்கேள் தருகிறேமெ ன்று பார்வதிதேவியார்சொன்னார்-எ-று. (௬௮)

நல்லாயிவன் மைந்தனையின்றி நவையுறும
இல்லாள்வயிற் றின்றுமோர்மைந்தனை யீதியென்று
சொல்லாமுனந் தந்தனமென்றுரை சொல்லிக்கோல
வில்லார்நுதலா ளிதமிட்டும் விளம்பலுற்றாள்.

(இ-பு.) தாயே யிவன்புத்திரனின்றித் துன்பப்படாமல் இவன் மனை வி வயிற்றினிடமாக இன்னுமொருபுத்திரனை அருள்செய்யென்று அரச ன் விண்ணப்பஞ் செய்வதற்குமுன் அப்படியே கிருபைசெய்கிறோமென் று சொல்லி அழகிய வில்லையொத்த நெற்றியையுடைய பார்வதிதேவியா ர் மறுபடியும் இந்தவார்த்தைசொன்னார்-எ-று. (௬௯)

வில்லொத்தாமவதி தன்னையிம் மைந்தனுக்கே
பயில்வுற்றவேதவிதியேமணம்பண்ணுவிப்பாய்

வெயிலொத்தவேலோனெனச்சொல்லிவிளைவினைசிக்
குயிலொத்தமென்சொல்லுமையாடிருக்கோயில்புக்காள்.

(இ-பு) அரசனே! மயிலையொத்த சாயலையுடைய சார்வதிதேவி பிரதாபத்தின் வழங்கப்படுகின்ற வேதவிதிப்படி இந்தப் பிராமண னுக்கே விவாகஞ் செய்விக்கக் கடவையென்று சொல்லி உடனே பா ர்வதிதேவியார் திருக்கோயிலுக் கெழுந்தருளினார்-எ-று- ✻ வெயிலெ னவொளி- பகைவராகிய இருளைக் கெடுக்குஞ் செப்பைப்பால் சூரிய னைப்போக்கும் வேலாயுதத்தையுடைய அரசனேயென்றும். குயிலொத்த மென்சொல்லுடையாள் - குயிலை யொத்த சொல்லினாள் என்றும் பொரு ள் கொள்க.

வெங்கோபயானை விறன்மன்னவன்சியந்தசாலப்
பொங்கோதவேலைப் புவிபோற்றவிப் பூவைதன்னை
தங்கோதவிம்ம மறைமாணிதனக்குநல்கிக்
கொங்கோதியோடு மனைவாழ்க்கைகுறித்துவாழ்ந்தான்.

(இ-பு.) இவ்வாறுசொல்லிய பார்வதிதேவியாருடைய திருவார் த்தை கேட்ட அவ்வாசன் மிகவுஞ் சந்தோஷித்து இவ்வுலகத்தி லுள்ளவ ர் வாழ்த்தவும் சந்தோஷம்பொங்கவும் சாமவதியென்பவளைப் பிரா மணபிராமணனுக்கு விவாகஞ்செய்வித்துத்தன்மனைவியினுடன் வி சனம் வருவாமல் வாழ்ந்தான்-எ-று. ✻ வெங்கோபயானை விறன் மன் னன் - கொடியதாகிய கோபத்தினையுடைய யானைப்படையும் வெற்றியு முடை ய அரசனெனப் பொருள்கொள்க. சாலப்பொங்கோத வேலைப்புவி-மிகவு ம் பொங்குகின்ற அலையினையுடைய இவ்வுலகமெனப் பொருள்கொள்க.

தயருற்றதாதை மனையாளொடுசோகநீங்கி
மயர்வற்றகேள்வி மகப்பெற்றினி தூழிவாழ்ந்தான்
அயர்வுற்றமன்னன் மகிழ்வோங்கிப்பணத்தகாலம்
உயர்வுற்றசெங்கோ லினிதோச்சியுலகையாண்டான்

(இ-பு.) அதன்பின்பு தன்புத்திரனைக்குறித்துத் துன்பம் அடை ந்தப்பனாகிய பிராமணனும் அவன் மனைவியும் துயரம்நீங்கி மயக்கமி ல்லாத கேள்வியையுடைய புத்திரனைப்பெற்று நெடுங்காலம் இனிதாக வி ருந்தார்கள் சோர்வுற்ற அரசனும்மிகுந்த மகிழ்ச்சிகொண்டு மேன்மை த ங்கிய செங்கோலினிதாகச்செலுத்தி அநந்தங்காலம் உலகத்தை யாண் டான்-எ-று. (எ

மாயாதஞான வாதனடிவாழ்த்துமன்பர்க்
கெய்தாதசெல்வ முளவோவென்றியம்பியேத்தித்
தேயாதசைவ நெறிசூதன்றெரிக்கக்கூற
ஓயாதுவாழ்த்தி முனிவோர்நெஞ்சுவகைபூத்தார்.

(இ-பு) நிலைபெற்ற ஞானசொரூபியாகிய பரமசிவனுடைய திருவ டித் துதிசெய்யும் அடியார்களுக்குக் கிடையாத பொருள்களுமுண் டோவென்று சொல்லித்துதித்து அழிவுபடாத சைவ சமய நெறியை சூதமுனிவர் தெரிந்துசொல்ல அதைக்கேட்ட நைமிசாரணிய முனி வர்கள் இடைவிடாமல் வாழ்த்தி மனமகிழ்ந்தார்கள்-எ-று. (௭௧.)

ஒன்பதாவது-சீமந்தனி பாவனைசெய்த அத்தியாய

முற்றியது.

ஆக திருவிருத்தம் -௫௱௧௰௭.

சிவமயம்.

பத்தாவது.

சிவயோகிமகிமையுரைத்த

அத்தியாயம்.

சீர்பெறுசித்திர வேள்விமுனித்தவர் தீவினையற்றிடநீள்
கார்விடமுற்றணி யானகளத்திறை காலன்வெருக்கொளவே
பாரினுதைத்தவர் தாளைவழுத்திய பான்மையர்பெற்றவெலாஞ்
சோர்வறவுத்தம கூறுகெனக்கதை சூதனுரைத்தனனே.

இ-பு.) சீர்பொருந்திய சிறந்த யாகஞ்செய்யும் தவசிகளாகிய முனி வர் (சூதமுனிவரைவணங்கி) உத்தமரே! எங்கள் தீவினைகளெல்லாம் ஒழியும்படிவிருந்த கருமைநிறந்தங்கி யழகுள்ளதான கண்டத்தையுடை யவரும் யமன்பயங்கொண்டு பூமியில்விழும்படி யுதைத்தவரு மாகிய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்த அன்பினையுடைய வ ர்களடைந்த பேறுகளையெல்லாம் சோர்வில்லாமல் அருளிச்செய்யவே ண்டுமென்ன அந்தச் சிவ சரித்திரத்தைச் சூதமுனிவர் சொல்லுகின்றார்.

மாதவருத்திர நூதியணித்திரன் ஞாலம்விதித்தவனும்
மேதினிபற்சிறு மானிடர்முத்தியின் மேவுமறைப்பொருளா
மோதியுரைத்தவ நீதிவிகற்பமுற மோகைகொள்பத்தர்கள்பால்
மாதவிருத்தி மேலைவிளைத்ததும் யாவருரைக்கவலார்.

(இ-பு.) நாதனாகிய ருத்திரமூர்த்தியானவர் ஆதியிலே யிந்தச் சிறந்த வுலகத்தைச் சிருட்டித்ததுவும் இவ்வுலகத்திலிருக்கும் சிறிய மானிடர்க ள் மோக்ஷத்திற்பொருந்த வேதப்பொருளாகிய சாம்பவமூர்த்தி வேத நூல்களிற்சொல்லிய தத்துவரீதியின் விகற்பமும் மகிழ்ச்சிகொள் அன் பர்களிடத்தில் குற்றமில்லாத விநோதமான திருவிளையாடல் செய்ததை ம் யாவர்தெரிந்து சொல்லத்தக்கவர்கள்-எ-று. (௨)

ஆயினுமெற்குவி யர்தனுணர்த்தன்ம யாதரவத்தடனே
மேயமுனித்தலை வோர்ப்பின்செவிப்புலன் மேவுணர்க்குவனூற்
றாபலனிக்கதை பாவனைத்திரள் கூறபடச்சுடவே
காயவனற்சிகை போல்வனவற்புத காரணமுற்றிடுமால்.

(இ-பு.) முனிசிரேஷ்டர்களே! இச்சரித்திரம் அருமையுள்ளதா யிரு ந்தாலும் வியாசமுனிவர் எனக்குச் சொன்னவைகளை யுங்கள் காதுகளி ற் பொருந்தும்படி சொல்லுகிறேன் தூயவைகளாகிய இந்தச்சரித்திர ம் விருப்பமுள்ளவர்களுடைய பாவமாகிய காடுகள் அழியும்படி சுட்டெ க்காயத் தீச்சிகை போல்பவைகளாகிய அற்புதமுள்ள காரணம்பொருந்தி யவைகள்-எ-று. (௩)

மந்தியினஞ்செறி பொங்கவந்தியின் மந்தரனென்றொருபே
ரந்தணன்முன்புளன் வண்கனகங்கள் னந்தமிகுந்தமையாற்
சந்தியுர்வந்தனை யுஞ்சபமுங்குல தந்திரமும்பிறவுஞ்
சிந்தைமறந்திழி யுங்குலமங்கையர் கொங்கைதினம்புணர்வான்.

(இ-பு.) வானரக்கூட்டமிகுந்துள்ள சோலைசூழ்ந்த அவந்தி தேசத் தில் மந்தரனென்கிற பெயருள்ள ஒருபிராமணன் முன்னமிருந்தான் (அ வனுக்கு) வளப்பம்பொருந்திய திரவியங்கள் அனந்தமாக மிகுதியானதி னால் சந்தியாவந்தனத்தையும் சிவார்ச்சனையையும் ஜபத்தையும் தன்குலத் துக்குரிய கருமங்களையும் மற்றும் முள்ளவைகளையும் மனதிலும் நினையா மல் மறந்து இழிவான சாதியிலுள்ள குலமாதரைத் தினந்தோறும் புண ருவான்-எ-று. (௪)

எச்குலமங்கைய ரெத்தொழினின்ற ரிழிப்பினரொன்றுணரான்
மைக்கண்மடந்தைய ருற்றனரென்ற மகிழ்ச்சியினங்கவர்பாற்
றுய்க்குமருந்தெ மட்டினறுந்தசை தொய்யில்கள்கண்டவெலா
மொக்கவிருந்துக ளிப்பினருந்தி யுளத்தின்மகிழ்ந்திடுவான்

(இ-பு.) இவர்கள் எந்தச்சாதிமாதரோ எவ்விதத் தொழில் செய்கின் ற இழிவுள்ளவர்களோவென்று ஆராய்ந்து பாராதவனும் மையணிந்த க ண்களையுடைய மாதர்கள் கிடைத்தார்களென்கிற மகிழ்ச்சியினால் அவர் களிடத்தில் உண்ணுகின்ற அரியசாதமும் அவிலுமாயிசமும் பல

வித கள்ளுகளும் இவ்விதமாகக் கண்ணினாற்பார்த்தவைகளையெல்லாம் அம்மாதர்களுடனிருந்துகளிப்புடன் உண்டு தன்னுள்ளத்தின் மகிழ்ச்சி யடைவான்-எ-று. (௫)

மங்கையிளங்கொடி பிங்கலையென்று மடந்தையுடன்புணரா
வங்கவள்குங்கும கொங்கைமுயங்கி யழிந்தவசம்பெறலா
லிங்கிதுநன்செய லன்றிதுபுன்செய லென்பதுளங்கருதான்
கங்குலுநண்பக லுங்களிகொண்டு கலந்துமயங்குறுவான்

(இ-பு) மங்கைப்பருவ முள்ளவளா யிளங்கொடிபோன்றபிங்கலையெ ன்கிற பெயரையுடைய மாதுடன்சேர்ந்து அவளுடைய குங்குமம்அணிந் துள்ள ஸ்தனத்திற்புணர்ந்து அந்தவின்பத்தினால் அறிவழிந்து பரவசப் படுவதினால் இதுநல்லசெய்கையென்றும் இதுகெடுதியுள்ளசெய்கையென் றும் மனதில் அறியாமல் இரவும்பகலும் களிப்புள்ளவளுடன்சேர்ந்து ம யங்கிக்கொண்டிருப்பான்-எ-று. (௬)

(வேறு)

கனைவெண்டிரை வருநஞ்சணி களகந்தர னருளே
புனையுஞ்சிவ தவமொன்றிய புனிதன்பவ மறவே
நினைவொன்றிய துரியந்தனி னியிருந்தனி மதியால்
வினையொன்றற நிலைநின்றிடு விரதன்பெயர் விடபன்.

(இ-பு.) ஒலிக்குங் கடலிலுண்டான விஷந்தங்கிய காள கண்டத் தையுடைய பரமசிவனது கிருபையைப்பெற்றசிவதவம்பொருந்திய பரி சுத்தனும் பிறவிநீங்கும்படி அறிவடங்கிய துரியாவத்தைபோல சாக்கி ராவத்தையிற்பொருந்திய மதியினால் தற்செயலென்பதொன்றுமில்லாமல் நீங்கத்தக்கதாக நிலைதவறாமலிருக்கின்ற விரதமுள்ளவனும் விடபனெ ன்னும்பெயருள்ளவனுமாகிய ஒருசிவயோகியானவர்-எ-று. துரியாவஸ் தையில் ஆன்மாதங்கினபோது ஒன்றுந்தோன்றாமலிருப்பதுபோல சாக் கிராவஸ்தையிலும் தத்துவவியாபகமின்றிச்சிவத்துடன் கலந்திருத்தலா ல் வினையொன்றற நிலைநின்றிடு விரதன் எனக்கூறினார் சாக்கிரம் சொப் பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என அவஸ்தை-ரு. (௭)

வந்தானிவ ருறையுந்திரு மனைமுன்றிலின் வரலுங்
கொந்தார்குழ லவளோடுமிம் மறையோனெதிர் குறுகி
முந்தாவுப சாரங்களு முறையின்படி யுதவிச்
சந்தார் துகண் மலரொன்றிய சயனத்திடை வையா.

(இ-பு.) மேற்சொல்லிய பிராமணனும் அவனுடைய மனைவியும்வசி க்கும் வீட்டின்முற்றத்தில்வந்தார் அவ்வாறுவாலும் கொத்தாகிய மலர்க ளணிந்த அளகபாரத்தையுடைய தன்மனைவியுடன் இந்தப்பிராமணன்பி

வயோகிக்கெதிரிற்சென்று முறையின்படி உபசாரங்கள்செய்து அது பொருந்திய மகரந்தம்நிறைந்த மலர்பரப்பிய ஆசனத்திலிருக்கச்செய் எ-று. உபசாரங்களுமுதலியென்றது அருக்கியம் பாத்தியம் ஆசமனீ கொடுத்து எனக்கொள்க.

சேதாவி னறுப்பாலொடு தேமாங்கனி பழனும்
நாதாநக ருதியென்றவர் நனிநீரொடு நல்கிப்
போதார் மலர் தூவிக்குளிர் சந்தம் புனைவித்தங்
கோதாமுக மன்கூறி·வெள் ளிலைபாக்குட னுதவி.

(இ-பு) அவர்கள் நல்லபசுவின்பாலும் மதுரமுள்ளமாம்பழமும் தனே! உண்ணென்றுகொடுத்தபின்பு குளிர்ச்சிதங்கிய சலமும மலரால் அருச்சித்துச் சீதளமுள்ள சந்தனம் அணிந்துகொள்ளும் பிரார்த்தித்து நல்ல உபசாரவார்த்தைகளுஞ்சொல்லிப் பின்பு தாம் முங்கொடுத்து-எ-று.

அற்றைப்படு கங்குற்பொழு தகலுந்துணை யளவுங்
கற்றைக்குழன் மடவாளொடு கலைமாமறை யவனும்
பற்றற்ற முனித்தேவிரு பாதத்துணை வருடிச்
சிற்றச்சிறு காலைமுனி சென்றானிவர் நின்றார்.

(இ-பு) அன்றிராத்திரிமுதல் விடியற்காலமளவாயில் அந்தப்பி ணனும் அவன்மனைவியும் தம்முடைய இரண்டுபாதங்களையும் வரு கொண்டிருக்கும்படி (சயனித்துக்கொண்டிருந்த) இருவகைப்பற்று நீங்கினவராகிய அம்முனிவர் உதயகாலத்துக்கு முன்னமேயெழுந்து ய்விட்டார் அவர்களிருவருந் தங்களிடத்திலேதானேயிருந்தார்கள் இருவகைப்பற்றுவது உட்பற்று புறப்பற்று * கற்றைக்குழல்மடவாள் யாகிய அளகத்தையுடையவள் கலைமாமறையவன்-சாஸ்திரங்களு வேதமுமுணர்த்தக்க பிராமணகுலத்தன்.

பின்னும்மறை யவனுஞ்சிறு பிறைவாணுத லவளு
மன்னுங்கழை மதனுக்கிணை வியுமென்ன மணந்தே
துன்னுஞ்சில நாள்சென்றன தொடரும்பழ வினையான்
முன்னும்பினு மாயங்கவ ரிருவோரு முடிந்தார்.

(இ-பு) பின்னும் அவர்களிருவரும் மன்மதனும் ரதியும்போ ன்பம் அனுபவித்துக்கொண்டிருந்து சிலநாள்சென்றபின்பு பழவி தொடர்ச்சியினால் முன்னும்பின்னுமாக அந்த இருவருமிறந்துபோ ள்-எ-று. * பிறைவாணுதலவள்-பிறைபோன்று ஒளிதங்கிய நெ யையுடையவள். கழைமதன்-கரும்புவில்லையுடைய மன்மதன்.

(வேறு,)

முடிந்தவேதியன்றருமமு நீதியுமுறைமையும்பிறழாது
தடிந்துமாமுகில்பொழிதரவளம்படுதசார்ணநத்தனியாளும்

கடிந்ததீவினைவச்சிரவாகுவின்காதலியுதரத்தி
னடைந்துநல்லுருத்தங்கியகருப்பமாயமர்ந்திடுமமையத்தில்

(இ-பு.) அவ்வாறு இறந்தபிராமணன் தருமமும் நீதியும்முறைமை யும் மாறுபடாமல் மேகங்கள்மின்னி மழைபொழியும்படி வளப்பமுள் ள தசார்ண நகரத்தையாளுகின்ற வச்சிரவாகுவென்னும் அரசனுடைய மனைவியின் கருப்பத்திலடைந்து நல்லுருவந்தங்கிய கருப்பமாய்ப் பொ ருந்தியகாலத்தில்-எ-று. * தனியாளுதல் ஐம்பத்தாறுதேசங்களையுந் தா னொருவனேயாளுதல். தீவினை கடிந்த-பாபத்தைநீக்கிய. (௬௨)

கருப்பமுற்றவள் பின்வருந்தேவிய மனைவருங்கனன்றீண்டி
விருப்பமாயவள் கட்டுறைகுழவியை விளிவுசெய்குவமென்ன
உருப்பவல்விட முணவிலேயளித்தன ருண்டனளுதரத்தின்
நெருப்பையொத்துநின் றெரிந்ததுகரிந்தது நிகரிலாளுருவமா.

(இ-பு) கருப்பம் அடைந்தவளுக்குப் பின்வந்ததேவிமார்கள் (மனப் பொருமையினால்) கோபங்கொண்டு எல்லாருமொன்றாகச்சேர்ந்து மூத் தவள்வயிற்றிற்பொருந்தியசிசுவைக்கொன்றுபோடுவோமென்று (ஆலோ சனைசெய்து) அவளுக்கு விருப்பமாயாகாரங்கொடுப்பவர்கள்போல வி டத்தைக் கலந்துகொடுத்தார்கள் (அவளதையறியாமல்) உண்டாள் அந் த விஷம் அவள்வயிற்றிற்போனவுடன் நெருப்பையொத்து எரிந்தது அத னால் அவளுருவமுங்கரிந்தது-எ-று. * உருப்பவல்விடம்- வெப்பமுள்ள கொடியவிடம்-நிகரில்லாள்-தனக்கு ஒப்பில்லாதவள். (௬௩)

உண்டவல்விடவெம்மையாற்பிணிபல வுதரத்துமுடன்முற்றுங்
கொண்டுமூழ்வினைப்பகுதியான்முடிந்திலள் குழவியும்விளியாம
லுண்டோர்நாயக னருளினலின்றன ளீன்றலுமழிநோயின்
புண்டனுன்மெலிந் தாற்றினர்சுமதியும் புதல்வனும்பொருதந்தா.

(இ-பு) உண்டவிஷத்தின் வெப்பத்தினால் வயிற்றிலும் உடல்முழுவ தும் பலவகையாகிய வியாதிகொண்டும ஊழ்வினைப்பிரிவினால் இறந்தில ளாய்ப் பரமசிவனுடைய கிருபையினால் இறவாமலிருந்த சிசுவைப்பெற் றாள் பெற்றபின்பு சுமதியென்னுந்தாயும் அவள்புதல்வனும் அழிநோயுள் ளா புண்ணினால்வருந்திச் சகிக்கமாட்டாமல் அழுதார்கள்-எ-று. அந்தோ இரக்கச்சொல். (௬௪)

இடைவிடாதவ ரழுதிடுமோதைகேட் டிறைபவனயர்வெய்தி
யடையுர்வாசடர் தங்களையிப்பிணி யகற்றுதிரௌலோடு
மிடையுமாயுணூற்கல்வியான்வழிக்குல விஞ்சையான்வினையத்தால்
உடையரன்மருந் தளிப்பிலசெய்தலுமுறுபிணிதவிர்யாதால்.

(இ-பு) இவ்வண்ணமிவர்கள் இடைவிடாமல் அழுகிறவோசையைவச் சிரவாகுவென்னும் அரசன்கேட்டுத் துயரமடைந்துவருகின்ற வயித்தி

ர்களைநோக்கி யிந்தவியாதியை நீக்குங்களென்றுசொல்லத்தங்கள் ஆராயச்சிசெய்திருக்கின்றவைத்தியசாஸ்திரப்பயிற்சியின் திறத்தினாலும் தங்கள் முன்னோர்கள் கற்பித்திருக்கும் கல்வியினாலும உத்தியினாலும் செய்யப்பட்டிருக்கும் நல்ல அவுஷதங்கள் பலபலவாகச்செய்துகொடுத்தும் தங்கியபிணிதீர்ந்ததில்லை-எ-று. * வாகடர் என்னுமொரு முனிவரால்செய்யப்பட்ட வைத்தியசாஸ்திரத்துக்கு வாகடமென்றுபெயர். வைத்தியர்கள் அந்தசாஸ்திரத்தை வாசித்துணர்ந்தவர்களாதலால் அவர்களுக்கும் வாகடரென ஒருபெயர்வழங்கப்படுகின்றது. (௯௫)

பிணிமுதிர்ந்திடவாகடரெங்களாற்பெயர்க்கரிதரிதென்ன
மணிபுனைந்ததார்மன்னவற்குவகுத்துமன்னவன்மனக்கொள்வா
னணிகொண்மேகலைமடவரலழுகையுமரும்பெறற்புதல்வன்றன்
மணிவிலாதாற்றேதையுங்கேட்டியார்தவிர்விதிதுயில்கிற்பார்

(இ-பு) வைத்தியர்கள் தங்களாற்கூடியமட்டும் பார்த்தும் பிணிதீராமல் அதிகரித்ததினால் ரத்தினமாலைதரித்திருக்கும் அரசனைநோக்கி யிந்தநோயைத்தீர்க்க எங்களாலாகாதென்றுசொல்ல அதைக்கேட்ட அவ்வரசன் நம்முடையபுத்திரன ஓயாமல் அழுகிற ஓசையையும் அதைச்சுறித்து நம்முடையமனைவியானவள் அழுகிற ஓசையையுங்கேட்டு யார்தான் நித்திரைசெய்வார்களென்றுகருதி-எ-று. அணிகொள்மேகலைமடவரல்- அழகுபொருந்திய மேகலாபரணம் அணிந்தமாது. அரும்பெறற்புதல்வன்-பெறுதற்கரிய புத்திரன் என்ப் பொருளைத்தாக்கொள்க. தவிர்விதி-ஓய்பில்லாதகண். (௯௬)

நோவினாலுயிரிறப்பரோவிறக்கில ரன்றியிந்நோய்நீங்கி
மேவுநல்லுருப்பெறுவரோபெறுகிலர் வினையயார்விலக்கிற்பார்
பாவகாரியரிவர்நமனுலயப் பழநகராற்றுறு
நாவினாலெடுத்தோதொணாக்குற நாணிலந்தனில்வந்தார்.

(இ-பு) நோயினால் உயிரிறப்பார்களோவென்றால் இறக்கிறதுமில்லை அல்லது இந்தநோய்நீங்கி நல்லுருவத்தை அடைவார்களோவென்றால் அடைவதுமில்லை அடையக்கூடாதவினையை எவர்கள் நீக்கிக்கொள்ளத்தக்கவர்கள் இவர்கள்மகாபாவிகள் நமனுடைய ஆலயத்திலிருக்கும் பழமையான நகரத்தில்வைத்தால் அதுவுஞ்சகிக்கமாட்டாது ஆகையால் நாவினாலெடுத்துச்சொல்லவொண்ணாத கொடியநரகம் ஒன்றுண்டாகி யதில்விழும்படி யிவ்வுலகத்தில்வந்தார்கள்-எ-று. (௯௭)

என்றுசிந்தையினவர்களையிழந்து மற்றிளையராமனையார்மாட்
டொன்றுமன்பினனுகிமற்றவர் நலனுண்டுவாழ்கிகல்வேந்தன்
கன்றுநெஞ்சினன்றுதனைக்கூவிக் கபத்திபைமகவோடும் [றன்
இன்றுதேர்மிசைக்கொண்டுபோய்க்காட்டகத் திடைவிட்டு மீள்கென்

(இ-பு) இவ்வாறுமனதிலெண்ணி இளைய மனைவியர்களிடத்தில் ஆசை பொருந்தி அவர்களுடைய இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அவ்வரசன் மூத்தமனைவியையும் புத்திரனையும்வெறுத்து வெம்பிய மனதையுடையவனாய்த் தேர்ப்பாகனை அழைத்து இந்தப்பாவியையும் இவள் புத்திரனையும் இன்று தேரேற்றிக்கொண்டுபோய்க் காட்டினிடத்தில் விடுத்துவிட்டுவாவென்றுசொன்னான்-எ-று. (௯௮)

விட்டுமீதியென்றுரைத்தலும் வல்லவனும் வேந்தர்வேந்தனைபேணிக்
கட்டுவாம்பரிக்கொடிநெடுந்தேர்மிசைக் கன்னியைமகவோடும்
இட்டுநன்னெறிநீந்திமுட்கானகத் திறக்கிவிட்டனன்மீண்டு
வட்டவாழிசூழ்புவனிகாவலன்றன் வந்தடியிணைதாழ்ந்தான்.

114534

(இ-பு) இவர்களைக்காட்டில்விட்டுவாவென்று அரசன்சொல்லிய வார்த்தையைத் தேர்ப்பாகன் ஏற்றுக்கொண்டு அவர்களிருவரையும் தேரின்மேலேற்றிக்கொண்டுபோய் நல்லமார்க்கத்தைக்கடந்து முள்ளுகளையுடைய காட்டிலிறக்கிவிட்டுவந்து அவ்வரசனபாதத்தில்வணங்கினான்-எ-று. வாம்பரிக்கொடிநெடுந்தேர் தாவுகின்றகுதிரைகட்டிய பெரியகொடித்தேர். வட்டவாழிசூழ்புவனிகாவலன் வட்டமாகியசமுத்திரஞ்சூழ்ந்தஉலகத்தரசன். (௯௯)

அப்புறத்துவெங்கானிடைத்தமியளா யரும்பெறன்மகவோடும்
வெப்புறத்துநோய்முதிர்விளைவினன்கதிர் வெதுப்புலாவிடவெய்தி
யெப்புறத்தினுமலகையுமுழுவையு மேனமுமிடர்செய்யச்
செப்பெனத்திரண்முலையினளொருசிறை செல்லவும்வழிகாணாள்.

(இ-பு.) தேர்ப்பாகன்போய்விட்டபின் ராஜஸ்திரியானவள் அந்தவெளிக்காட்டில் தனித்தவளாய் வருத்தப்படுத்துகிற நோயின்மிகுதியினாலுஞ் சூரியகிரணவெப்பத்தினாலும் தானுந்தன்புத்திரனும் துன்பம் அடைந்து நாலுபுறத்திலும் பேய்களும் புலிகளும் பன்றிகளும் துன்பப்படுத்த ஒரு இடத்துக்குப்போகவும்வழிகாணமல்-எ-று. செப்பெனத்திரண்முலை- பொற்செப்புப்போலத் திரண்டகொங்கை. (௨௰)

அரியதாகியவிதியினைவெறுக்குமொந் தயர்வுறுமழுதேங்கும்
உரியகாதலன்கொடுமையைநினைந்துகண் ணுறுபுனலிடைதோயும்
விரியுநோய்பெருதாற்றியகுழவிவாய் மென்முலையணைத்தூட்டும்
எரியினின்றுதன்னுடல்சுடுபசியின லிடருழந்திதுசெய்தாள்.

(இ-பு) அரியதாகிய விதியைவெறுப்பாள் நொந்துசோர்வுறுவாள் தனக்குரியகணவனுடைய கொடுமையைநினைந்து கண்கள்பொழிகின்ற நீரில் தோய்வாள் மிகுந்தநோயைச்சகிக்கமாட்டாமல் அழுகிற தன் பிள்ளையின்வாயில் முலையைவைத்து பால் ஊட்டுவாள் நிலையொத்துஇடைவிடாமலிருந்து தன் உடலைச்சுடுகின்ற பசியினால்துன்பங்கொண்டு ஒருகாரியஞ்செய்தாள்-எ-று. அதென்னவெனில்.

வெஞ்சினக்கொலைபாப்பயில்கானகம் விலங்கியோர்புடையேகிப்
பஞ்சின்மெல்லடி குருதிகொள்ளிடத்தனிப் பயப்படச்செல்லுங்கால்
அஞ்சிலோதியோரணிநகர்கண்டதன் விடைப்புகுந்தனளங்கு
இஞ்சிமாநகர்தனக்கிறையாகிய வைசியவிலைகேசன்.

(இ-பு.) கொடியகோபங்கொண்டு கொல்லுந் தொழிலையுடைய மிருகங்கள் சஞ்சரிக்கிற காட்டைவிட்டு நீங்கி ஒருபுறத்தில்சென்று பஞ்சினு மெல்லியதாகிய தனபாதத்தில் உதிரம்பெருகும்படி நடந்து போம்போது அந்தராசஸ்திரியானவள் அழகுள்ளதாகிய ஒருநகரத்தைக்கண்டு அதனிடத்தில் போனாள் (அப்போது) மதில்சூழ்ந்த அந்நகரத்திற்குத் தலைவனாகிய சிறப்புள்ளவர்த்தகனொரு-வ அஞ்சிலோதி-அழகிய மிருதுவாகிய அளகத்தையுடையவள்-பசும்வழி-மிருதுபதம். (௰௭)

மங்குமாதிதியுடைப்பது மாகரங்யனையினிலொருகோடிப்
பங்கிலேவல்செய் இலதியர்தம்மிலோர் பாவைமாற்றவட்கொன்று
செல்வமைக்கணுந்திரு மகளேயுமித்தெரு விஞ்சலர்போல
இல்லியால் வந்தடைந்தவாறேதெனக்குணர்த்து கெனச்சொன்னாள்.

(இ-பு.) மிகுந்த விபத்தையுடைய பதுமாகரனென்னும் பெயரையுடைய அந்தவர்த்தகன்வீட்டில் தொழில்செய்து கொண்டிருக்கும் ஒருகோடித் தோழிகளில் ஒருதோழியானவள் அந்தராசஸ்திரியைப்பார்த்து (நீராசஸ்திரிபோலிருக்கின்றனை) அப்படியிருக்க நீயும் இந்தப்புத்திரனும் ஏழைகள்போலச் சோர்வடைந்து இந்தத்தெருவில் வந்ததற்குகாரணமென்ன எனக்குச்சொல்லென்றாள்-எ-று. (௰௮)

கிர்ப்பிப்பிப் நெஞ்சழிந் தவாய்புலர்ந்திட விழிவழிநீர் சோர
அம்மவம்மலோதழ்வினை விளைந்தவயார்க்குணர்க்குவனென்று
வெம்மைமெஞ்சுடைத்தலை மகனிழைத்ததை மேதிலார்வினைபட்ட
இம்மையின் விடருற்றிவண் புகுந்தது மிற்றெனவுரைசெய்தாள்

(இ-பு) அவ்வாறு தோழிகேட்டவுடன் மனமழிந்து அழுதுகொண்டு கண்களில் நீர் தாரைதாரையாகப்பெருகவும், வாயுலரவும், தாயே! எனக்குநேரிட்டதை எவர்களுக்குச் சொல்லுவேனென்று இரக்கமில்லாத தன்கணவன் செய்ததையும் அயலவர்களாகிய சக்களத்திமார் கொடிய செய்கைசெய்ய (அதனால்) இப்பிறப்பிலேதானே இப்படிக்கொத்த துன்பம் அடைந்து இவ்விடத்தில் அடைந்ததும் இவ்வாறுமென்றுசொன்னாள்.

கேட்டிவல்விரைந் தோடின்றுசென்றனள் கெழுமுசீர்வணிகேசன்
றாட்டுணைத்தொழுதையநங்கடிநகர்சார்ந் தொருகுலத்தையல்
வாட்டடங்கணு ளோர்ந்தியமகவினுள் வருந்தியமுறுநோயாள்
காட்டினாவ்வலன் விடுத்திடவந்து நங்கடையடைந்தனளென்றாள்.

(இ-பு) அந்தராசஸ்திரி சொன்னதைக்கேட்டு அதிகவிரைவாக ஓடிச் சென்று வணிகேசனுடைய இரண்டுபாதங்களையுந் தொழுது ஐயனே! ஒரு ராசஸ்திரியானவள் நம்முடைய நகரத்தையடைந்து ஒரு குழந்தையையேந்திக்கொண்டு வருந்திய மிகுந்த நோயையுடையவளாய் அவள் கணவனாகிய அரசன் காட்டில் அனுப்பிவிடவந்து நம்முடைய வீட்டுக் கடைத்தலைசார்ந்திருக்கிறாளென்றுசொன்னாள்-எ-று-வாட்டடங்கணுள்-வாள்போன்றதாய் நீண்டகண்களையுடையவள்-கடிநகர்-காவலையுடையநகர்.

தருமசிந்தையி னீதியிற்கொடையி னிற்றபுவினிளிசரில்லான்
கருமமாதுரைகேட்டலுங்குழைவுறுங்கருத்தினன் புறம்போந்தாங்
கருமருந்தன மகவைபுந்தாயையுங் கண்டதிசயித்திங்கண்
வருதிரென்றொரு வேதியன்மனையினின் மற்றவர்தமைவைத்தே

(இ-பு.) தருமசிந்தையிலும் தியாகத்திலும் நீதியிலுந்தயையிலுந் தனக்கொப்பில்லாதவனாகிய அந்த வணிகேசன அவள் சொன்ன காரியத்தைக் கேட்டமாத்திரத்தில் வருந்துகின்ற மனதையுடையவனாய் வெளியில் வந்து அவ்விடத்திலிருக்கும் அருமருந்தையொத்த குழந்தையையுந் தாயையும் பார்த்து அதிசயித்து இங்கேவாருங்களென்று அழைத்துக் கொண்டுபோய் ஒருபிராமணன்வீட்டில் அவர்களைவைத்து-எ-று. (௰௯)

உற்றவாயுள் வேதியனெலாம் வருகவென்றுற நிதிமனழசிதி
முற்றும்வல்விட நோயினை மருந்தினன் முரித்திர்மற்றிவளென்னைப்
பெற்றதாயிவண் மகவுமென்பெருந் துணையென்றவன்பலபேசக்
கற்றநூல்புகன் மருந்தெலாமருத்த வுங்களன்றதுமுழுநோயே

(இ-பு) அவ்விடத்திலிருக்கும் வைத்தியர்களையெல்லாம் வரவழைத்து மிகுந்ததிரவியங் கொடுத்து இந்தராசஸ்திரி யென்னைப் பெற்றதாய் இவள் குழந்தை என்னுடையசகோதரன் ஆதலால் இவர்களுக்குப்பொருந்திய கொடியவிஷநோயை அவுஷதங்களால் முரித்துவிடுங்களென்று அவர்களுக்குச்சொல்லஅதைக்கேட்டவைத்தியர்கள் தாங்கள்கற்றுணர்ந்தவைத்தியசாஸ்திரத்திற்சொல்லும் அவுஷதங்களையெல்லாம் இன்னதினால் தீரும் இன்னதினால் தீருமென்று வகையறிந்துகொடுத்தார்கள், அப்படியவர்கள்கொடுக்கக் கொடுக்கப்பழமையாகியவியாதியானதுகொடுமையுடன் அதிகரித்தது-எ-று. (௨௰)

இழுதுபெய்சுடரெரிதலுங்கனற் சிகையெழுவபோலெண்ணில்லாப்
பழுதினன்மருந் திடுதொறுமுதிர்ந்து நோய்படர்செயப்பல்காலும்
அழுதுமாழ்கிய பாலகனிறத்தலு மளவிலாத்துயர்பொங்கப்
புழுதிநீணிலத் துருண்டனளுருமுவீழ் புற்றுறையரவென்ன

(இ-பு) நெய்நிறைந்தகுடத்தை எறிந்தமாத்திரத்தில் அக்கினியானது சிகைவிட்டெழுந் தன்மைபோல் அளவில்லாத நல்ல மருந்துகளைக்கொடு

க்குந்தோறும்அந்தவியாதிமேலிட்டுத்துன்பஞ்செய்தலினால் இடைவிடா ல் அழுதுசோர்ந்தபுத்திரனிறந்தனன் அவனிறக்கவே அளவிலாத து ம் உண்டாகப் புற்றிலிருக்குஞ்சர்ப்பமானது இடி விழுந்தால் பூமியில் டிப்பதுபோலப் பூமியில்விழுந்து புரண்டாள்-எ-று. (உ-அ

விழுமெய்பதைத் தெழூஉமழூஉம்வெதும்பிடும் விம்மும்வெந்துயருள்ளித்
தாழுங்கைகளான் முலைமுகட்டெற்றிடுந்தளர்வொடுஞ்சோரும்
போழுமம்புபாய் மயிலெனமாழ்குறும் பொருமும்புத்திரசோபத்
தாழுநின்று நின்றுருகும் வெய்துயிர்த்திடுமலக்கணுற்றிடுமனனே.

(இ-பு-) பூமியில்விழுவள் உடல்பதைத்து எழுந்திருப்பள் அழுவள் கு ம்புவள் விம்முவள் தனக்குநேரிட்டதுயரத்தை நினைத்துச் சோர்வ இரண்டுகைகளாலும் முலைமுகட்டில் மோதிக்கொள்வள் மிகுந்த வெ வோடு சோர்வள் அம்புபாய்ந்த மயிலைப்போலச் சோர்வள் தேம்புவள் த்திரசோகத்தில் அமிழ்ந்துவள் நின்றுநின்றுருகுவள் பெருமூச்சு வி வள் துன்பம் அடைவள்-எ-று. (உ-

(வேறு.)

அயலகத்துறை யந்தண மாதரு
மயலகத்து வணிக மகளிருங்
கயலையொத்தகட் காரிகை பாலெய்திச்
செயலுணர்த்தித் தெருட்டவுந் தேறலாள்.

(இ-பு) இவ்வாறு துன்பப்படுகிறவளைப்பார்த்து அயல்வீட்டி லிரு க்கும் பிராமணஸ்திரிகளும் மயக்கத்தைநீக்கத்தக்க வைசியமாதர்களு சேல்மீனையொத்த கண்களையுடைய அந்த ராசஸ்திரியினிடத்திற்சென் இவ்வுடல் அநித்தியமேயல்லாமல் நித்தியமல்லவென்பது அனேக தி ஷ்டாந்தங்களைச் சொல்லித் தெளிவிக்கவும்அவள் துக்கம் நீங்கிலளாய்-எ-று.

ஐயனேநம் மரசன்விடுத்தலிற்
கையறத்தளர் வேனை நீகைவிடும்
வெய்யகேண்மை வெதும்பமெலிந்துளேன்
உய்யலேனினி யுன்னை விடுத்துமே.

(இ-பு) அப்பனே? நம்முடைய அரசன் நீக்கிவிட்டபடியால் ஆதர வில்லாமல் தளருகின்ற என்னை நீயுங்கைவிட்ட கொடியதன்மை வருத்துவதினால் மெலிவடைந்தேன் உன்னைப்பிரிந்தும் இனிப் பிழை திருக்க மாட்டேன்-எ-று. (கூ-

என்றுபன்னி யிரங்குஞ்சுமதிதான்
சென்றுநாயகன் றெருட்டவுந்தேறலாள்
கன்றிமாழ்குறுங் காலையிலாங்கணே
தோன்றதேர்விட பன்வந்துதோன்றினான்.

(இ-பு) இவ்வாறுசொல்லிச்சொல்லி அழுகின்ற சுமதியென்பவள் த ன்னையாதரிக்கும் வர்த்தகன்வந்து தேற்றாவான வார்த்தைகளைச்சொல் லித் தேற்றவுந்தேறாமல் மனம்வருந்திச் சோபமுறும்போது முன்னடந்தவைகளையெல்லாம் அறியத்தக்க விடபனென்னும் ஒருசிவயோகி அவ் விடத்தில்வந்தார்-எ-று. (கூஉ)

வந்தயோகி மலரடி தாழ்ந்தெழுந
தெந்தைநீயிவ ளித்துயர் தீர்த்தியென்
றந்தநாய்க னுரைப்ப வருந்தவன்
சொந்தலாய்குழ லிக்கிலவ கூறினான்.

(இ-பு) வந்தசிவயோகியை அந்தவர்த்தகன்கண்டு பாதங்களில் வண ங்கி என்னையனே! இந்த ராசஸ்திரியின் அரியதுயரத்தைத் தீருமென்று சொல்ல அவனைப்பார்த்துச் சிவயோகி யிந்தவார்த்தை சொல்லுகிறார் எ ன்றவாறு. (கூகூ)

என்னைமாழ்கி யிரங்குவ தேனழகி
பொன்னுமாவி பொருந்தியகாயமு
மின்னுமொக்குளும் போலனி வீந்திடும்
அன்னதுள்ளி யறிஞ ரழிவுறார்.

(இ-பு) தாயே! நீயிரங்கித்துயரப்படுவதில் என்னபிரயோசனம் தி ரவியமும் உயிர்பொருந்திய இவ்வுடலமும் மின்னலைப்போலவும்நீர்க்கு மிழியைப்போலவும் விரைவில் இறந்துபோய்விடும் (ஆகையால்) அதை க்கருதி அறிவுள்ளவர்கள் வருந்தார்கள்-எ-று. (கூச)

கூறுசாத்திகங் கூடிடிற்றேவரா
மாறிராசதஞ் சேர்ந்திடின்மாந்தராம்
வேறுதாமத மேவில்விலங்கதாம்
ஊறுதோற்றங்கண் முக்குணத்தாற்றிடும்.

(இ-பு) சொல்லுகின்ற சத்துவகுணம் கூடுமானால் தேவர்களாவார் கள் அக்குணத்துக்கு மாறுகிய இராசதகுணங்கூடினால் மனிதராவார்க ள் அதினும்வேறுகிய தாமதகுணங்கூடினால் மிருகமாவார்கள் இவ்வாறு முக்குணத்தினால் பிறப்புண்டாகும்-எ-று. (கூரு)

முக்குணத்தின் முயற்சியிலோரொன்று
தொக்கவாறு தவன்றுங்குறியினான்
மக்கடேவர் விலங்கெனவந்தவை
துய்க்கும்போகந் தொலையத்தொலையுமே.

(இ-பு) மூன்றுவிதகுணத்தின்முயற்சியில் ஒவ்வொருகுணஞ்சேர்ந் தகுறியினால் மனிதர்களென்றும் தேவர்க ளென்றும் முறைமைப்படி உண்டாகும்

ளென்றும் மிருகங்களென்றும் வந்து அவரவர் அனுபவிக்கவேண்டிய போகங்களை அனுபவித்துத் தொலைந்தபின் உடலும் அழிந்துபோமென் றவாறு. (கூ

பண்டைவாசனை தொக்கபயிற்சியாற்
கொண்டகாய நிலையெனக்கொள்வரோ
அண்டரேனும்பிறப்புள ராமெனின்
விண்டுகாய மிறப்பதுமெய்யரோ.

(இ-பு.) பூர்வவாசனைசேர்ந்த பயிற்சியினால் உண்டான சரீரத்தை நிலைமையென்று எண்ணுவார்களோ தேவர்களேயானாலும் மறுபிறப்புண்டென்றால் உயிரானது சரீரத்தைவிட்டுநீங்கிப்போவது உண்மையாகு மென்றவாறு. (கூ

அங்கமொன்றி னருந்தியவற்றினாற்
றங்குதீமல நாளுந்தணந்திடு
மங்கைநீயதற் கித்துயரலைத்தினை
யிங்குமாண்டமலத்துக்கெனேங்குவாய்.

(இ-பு) ஒருசரீரத்தில் உண்ட புசிப்பினாற்பொருந்திய தீயமலமானது நாள்தோறும் நீங்கிவிடும் தாயே! நீ அதைக்குறித்து உனமனதில் அப்படிக்கொத்த துயரத்தைவைக்காதே இப்போது நீங்கிய மலத்தைக் குறித்து ஏனேங்குகிறாய்-எ-று. (சு

சாவதும்பிறப் பும்மெனுந்தன்மையைத்
தேவருங்கடவாரிது திண்ணமே
பாவைநீதுயர் பட்டிடற்றீருமோ
யாவர்முன்னமு நின்னுயிர்மீட்டுளார்.

(இ-பு) இறப்பதும் பிறப்பதுமாகிய தன்மையைத் தேவர்களும் கடக்கமாட்டார்கள் இது உறுதியாம் தாயே! நீ துயரப்படுவதினால் வருத்தம் நீங்குமோ முன்னிருந்தவர்களில் போனவுயிரை அழைத்து மீட்டவர்கள் யாராவதுண்டோ-எ-று. (கூ

படர்கிரித்தலைப் பான்மதிபோற்கரிப்
பிடர்கிழற்று கவிகையிற்போர்த்தவர்
கடனிலத்திற் கவிழ்ந்தனரான்றிமற்
றுடலெடுத்தெவர் சாவையொருவினர்.

(இ-பு.) பெரியமலையினுச்சியில் சந்திரோதயமானதுபோல யானையின்பிடரியி லேறிக்கொண்டு நிழலைச்செய்கின்ற குடையின்கீழ்ச்சப்பவந்த அரசர்களும் கடல்சூழ்ந்தவுலகத்தில் வீழ்ந் திறந்து போனார்களே யல்லது உடலையெடுத்து எவர்கள் இறப்பைநீக்கினவர்கள்-எ-று. (சூ

உற்றநும்விருப் பானுதித்தானலன்
மற்றநும்வெறுப் பான்மடிந்தானலன்
சுற்றங்கட்கி யொழியத்துறந்தவா
னுற்றபுள்ளி னுடல்விட்டொளித்துளான்.

(இ-பு.) இறந்துபோனபுத்திரன் பொருந்திய உங்கள்விருப்பத்தினால் பிறந்தவனல்லன் மேலும் உங்கள்வெறுப்பினால் மடிந்தவனுமல்லன் பின்னப்பட்ட கூட்டைவிட்டு நீங்கி யாகாயத்தில்பறந்துபோகின்ற பட்சியைப்போல் உடலைவிட்டு மறைந்துபோனான்-எ-று. (சுக)

தாயர்தந்தைய ரின்பத்தருக்கினா
லாயசுக்கில சோணிதமங்கொரு
காயமாகக் கருக்கொளுமுன்னமே
மாயுமங்கவர் நொந்துவருந்தவே.

(இ-பு) தாய் தகப்பன்மார்களுடைய இன்பச்செருக்கினால் உண்டாகிய சுக்கிலசோணிதமானது தாய்வயிற்றிலொரு கருவாகத்தரிப்பதுக்கு முன்னமேஅவர்கள்நொந்து வருந்தும்படிமாய்ந்துபோம்-எ-று (சுஉ)

அங்குமாய்ந்தி தின் றென்னினவயவந்
தங்கியையிரு திங்கடணைந்தபின்
வங்கவாரிசூழ் மண்ணினைத்தோன்றியே
பொங்குசுற்றினை கண்டபின்பொன்றுமே.

(இ-பு.) கருப்பத்திலேதானே இறக்காவிட்டாலும் உறுப்புகளெல்லாம் பொருந்திப் பத்துமாதமும் பின்பு இவ்வுலகத்திற்பிறந்து பந்துசனங்கள் கண்டமும்படி இறந்துபோம்-எ-று வங்கவாரி- கப்பலோடும்படியான சமுத்திரஞ்சூழ்ந்த உலகம். (சுங)

பொன்றறீர்திடிற் பொற்பிறைபோல்வளர்ந்
தொன்றுகேள்வி யுணர்வமையுநாட்
டுன்றுபூங்குழ லஞ்சினுந்துஞ்சுமற்
றன்றுவீத லொழிந்தெழிலாகியே.

(இ-பு) பூவையணிந்த அளகத்தையுடையவளே! பிறந்தவுடன் இறவாதிருந்தால் அழகிய பிறைபோல்வளர்ந்து சொன்னகல்விகளைப் பகுத்தறிந்துகொள்ளும்படியான பருவத்திலிறந்தாலுமிறக்கும் அல்லது அப்போது இறத்தலின்றி அழகுடன்வளர்ந்து-எ-று. (சுச)

காமனேயெனக் கண்டவர்கண்கவர்
வாமமல்லுரு வோடுமரீஇபபின்
தேமலர்விடை போன்மணஞ்செய்வுழித்
தூமவார்குழ றஞ்சினுந்துஞ்சுமே.

(இ-பு) அதிற்புகையூட்டத்தக்க அளகத்தையுடையவளே! மன்மதனைப்போலக்கண்டவர்கள் பார்வையைக் கெடுக்கும்படியான சௌந்தர்யமுள்ள உருவத்துடன் வளர்ந்தபின்பு இன்பமுள்ள நல்லவிஷயம்போலக் காளைப்பருவம் பொருந்திய விவாகஞ்செய்யுங்காலத்தில் இறந்தாலும் இறந்துவிடும்-எ-று. (௪௬)

கல்விமைந்தர் களிப்புந்திருவொடு
செல்வமூக்கமுந் துய்த்துச்செழிக்குநாட்
பல்குபாவப் பயப்புலிபற்றவு
மொல்கிவாவு முழைபெண்மாயுமே.

(இ-பு) கல்விநிறைந்த வாலிபர்கள் சந்தோஷத்தையுஞ் செல்வச்சிறுக்கையும் அனுபவித்துச் செழுமையாக வாழுநாளில் மிகுந்தபாவமாகிய அஞ்சத்தக்கபுலி பற்றினமாத்திரத்தில் சோர்ந்து மானிறப்பதுபோல இறந்துவிடுவார்கள்-எ-று. வாவுமுழை-தாவுகின்ற மான். (௪௭)

கூனிமூத்த குரங்கெனக்கோல்பிடித்
தேனையோரு மிகழவிருமலத்
தானையோடு சரிந்திடச்சாவது
மானிநோக்கினல் லாயொருவண்ணமே.

(இ-பு.) மான்பார்வைபோல் மருண்டபார்வையையுடையவளே! கிழக்குரங்குபோலஉடல்வளைந்து கையில் கோல்பிடித்து தான் நிற்கொண்டு மற்றயாவரும் இகழும்படி மலசலங்கள் வஸ்திரத்திலேதானே கழலும்படி ஒன்றுந்தெரியாமலிருந்து இறப்பதும் [illegible]வதும் ஒருபிரகாரமாம்-எ-று.

காலமென்பர் சிலர்சிலர் [illegible]மே
மூலமென்பர் சிலர்முக்குணமென்பர்
ஞாலமென்புன லாதியகல்லுட
லேனுமூன்றிற்கு மேற்றதெனப்பர்சிலர்.

(இ-பு) இறப்பதற்குக் காலந்தான் காரணமென்று சிலர்சொல்லுவார்கள். அவனவனுடைய கர்மந்தான் காரணமென்று சிலர் சொல்லுவார்கள் முக்குணங் காரணமென்பார்சிலர் பிருதிவி அப்பு முதலாகிய பஞ்சபூத சம்பந்தமான இவ்வுடல்மேற்சொல்லிய மூன்றுக்கும் ஏற்றதென்று சிலர்சொல்லுவார்கள்-எ-று. (௪௮)

ஆதலாலித் திறமுடையாக்கையைப்
போதமுற்றவர் பொய்யெனக்கொண்டுபின்
சாதலுக்கும் பிறத்தற்குந்தம்மனத்
தேதமோடுவப் பின்றியிருப்பரே.

(இ-பு.) ஆகையினாலே இப்படிப்பட்ட சரீரத்தை ஞானமுள்ளவர்கள் பொய்யென எண்ணிச் சாவதற்கும் பிறப்பதற்கும் துக்கமுஞ் சந்தோஷமு மில்லாமலிருப்பார்கள்-எ-று. (௪௯)

எவ்விகற்பத்த வெவ்வுடலெங்களு
மவ்விபத்தத்திற் றோன்றியடங்கிடும்
பவ்வமுற்றிய பாரினெழுந்துகள்
கொவ்வைவாய்க்கொடி மீண்டதிற்கூடல்போல்.

(இ-பு.) கோவைக்கனியொத்த வாயையுடைய கொடி போன்றவளே பூமியில் எழுகின்ற துகள் மறுபடியும் அந்தப்பூமியிலேதானே கூடுவது போலே எவ்விதமாகிய விகற்பங்களையுடைய எவ்விதச் சரீரங்களும் மாயையில்தோன்றி அதிலேதானே ஒடுங்கும்-எ-று. (௫௰)

உன்னையீன்றவ ருன்னாலுதித்தவர்
மன்னுமூற்பவந் தோறுமணந்தவ
ரன்னமேதிரை யாழியினுண்மண
றன்னையெண்ணினு மெண்ணுந்தரத்தரோ.

(இ-பு.) அன்னம்போல்பவளே! பொருந்திய பூர்வஜன்மத்தில் உன்னைப் பெற்றவர்களையும் உன்னாற் பெறப்பட்டவர்களையும் உன்னை விவாகஞ் செய்துகொண்டவர்களையும் அலைகளையுடைய சமுத்திரத்தின் இடிய மணலை பெண்ணினாலும் எண்ணும் அளவை யுடையவர்களோ-எ-று.

பாகெனுஞ்சொலினுப் பட[illegible]காலமா
நாகவாயினி ஞனிலந்தன்[illegible]ில்வாழ்
போகமானிடத் தேரைபொருந்திய
மோகையுஞ்சிறி துற்றிடுமோசொலாய்.

(இ-பு.) பாகுபோல மதுரமுள்ள வசனத்தையுடையவளே! காலமாகிய பாம்பின்வாயில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற மனிதர்களாகிய தேரைகளுக்குச் சந்தோஷமுஞ் சிறிது உண்டாகுமோ சொல்லு-எ-று. இவ்வுலகத்தில் போகங்களை யனுபவித்துக்கொண்டு வாழ்கின்ற [illegible]கிய தேரையெனக்கூட்டுக. (௫௧)

முந்தைநான்முகன் முன்னம்படைத்துட
லந்தநாளிற் றனுகரணங்களும்
புந்திசேர்புவ னத்தொடுபோகமும்
பந்தமாயிடை வேறொன்றுபற்றுமோ.

(இ-பு) பழமையாகிய பிரமதேவன் ஆதியிலிந்த உடலைச்சிருட்டித்தந்தநாளில் தனுகரணங்களும் நினைக்கும்படியாகிய புவனபோகங்களும் தொடர்ச்சியாயிருக்கின்றமையால் மத்தியில்நூதனமாயொன்றும் வாராது-எ-று. (௫௨)

தேகமென்பு நரம்புநிறைச்சியு
மேதுமீரலும் பித்துமிரத்தமும்

சிறுமிட்ட குழிசிக்கிதைக்கது
போலுசீயிதற் கென்கொல்புலம்பலே.

(இ-பு.) தோலும் எலும்பும் நரம்பும் மாமிசமும் பொருந்திய ஈன் ... லும் பித்தநீரும் உதிரமும்சீழும் நிறைத்துவைத்த கடமுடைந்தபோ யிவிட்டது இதற்காக நீபுலம்புவது என்னகாரணம்-எ-று. போலும்-மு ன்னிலையசை. (ருச/

முக்கணுயகன் முப்புரத்தெழு
நக்கநாயக னுண்மலர்த்தாடொழு
மக்களன்றி மறலியைவென்றிடத்
தக்கதன்மையர் யாவெனச்சாற்றினன்.

(இ-பு) சரீரம் இத்தன்மைத்தாயிருப்பதினுல் திரிநேத்திரங்களை யுடையவரும் திரிபுரங்களில் நிற்றநகைத்தவருமாகிய பரமசிவனுடை ய பாதங்களை வணங்கும் அன்பர்கள் நமனை வெல்லலாமேயல்லதுமற்ற ர்கள் யார்வெல்லத் தக்கவர்களென்று சிவயோகி சொன்னர்-எ-று. நாண் மலர்-அன்றுமலர்ந்த தாமரை மலர்போன்றபாதம். (ரு

(வேறு)

கேட்டாளெழுந்தாள் கிளியென்னமிழற்றுசொல்லாள்
வாட்டாரைகரந்தண்மலர் கொண்டெதிர்தீவுமாபோற்
றீட்டாதமைக்கண் பொழியுமெசிறந்தசங்கம்
பூட்டாதகைபாற் றுடைத்தின்னபுகல்வதானுள்

(இ-பு-) கிளிபோல் வசனிக்குஞ் சொல்லையுடைய ராசஸ்திரியான வள் சிவயோகி சொன்னதையெல்லாங் கேட்டு உடனேயெழுந்து வாளிநு ண்டாகும்நீர்த்தாரையைக் காந்தள்மலராள் துடைப்பதுபோல மைதீட் டாத கண்பொழிகின்ற நீர்த்துளியைச் சங்காபரணமில்லாத கை யால் துடைத்து இந்தவார்த்தைசொல்லுகிறாள்-எ-று. காட்டில்வந்துவிட்டமையால் மைதீட்டாத கண்ணென்றும் சங்கம்பூட்டாத கையென் ன் கூறினர். (ருசு

கள்ளாருமாலை முடிவேந்தகனன்றுநீக்க
வுள்ளாவிவாட்டு முதுநோயினுனைக்குவேற்குத்
தள்ளாவிழுச்சீர்ப்புதல் வனிவனுதசாதனுனே
விள்ளாதநுன்பத் தழுலாதவிரதமென்னு

(இ-பு) தேனிறைந்த பூமாலையணிந்த மகுடந்தரித்த அரசன் கோபி த்துக்கொண்டுநீக்கிவிட்டதினுலும் உள்ளுயிரைவருத்தும் சர்மரோகத்து டன் மெலிகின்றவெனக்கு இறந்துபோனவென்புத்திரனுடன் நானும் இறந்துபோ வதே நீங்காத துன்பத்தில் விழாத விரதமென்று சொல்லி-எ-று. தள்ளா விழுச்சீர் நீங்காத மேன்மையான சிறப்பினையுடைய புத்திரன்- (ருஎ

அளிகொண்டசிந்தைபறத் தோய்கின்னருட்கணோக்கம்
விளிகிலாறகாலத் தெதிர்கதேனவினை வெம்மைதீர்ந்தேன்
முளிகொண்டபைங்கூழ்த் தெறுகோடைமுதிர்ச்சிதீரத்
தளிகொண்டல்சிந்திப் புரந்தாங்கிடு தன்மைபோலும்.

(இ-பு. தீயுந்தன்மைகொண்ட பசியபயிரை வாட்டுகின்ற கோடை வெப்பந் தீரும்படி மேகங்கள் நீர்த்துளியைச்சிந்தி வெப்பத்தை யாற்றுந் தன்மைபோலக் கிருபைபொருந்திய மனதையுடைய முனிவரே தேவரீ ர் வந்தருளிய கிருபாநோக்கத்தைநானிறந்துஞ்சமயத்தில்பெற்றுக்கொ ண்டு தீவினைக் கொடுமையை நீங்கினேன்-எ-று. (௫௮)

எனுவிவள் சாதற்கிசைபந்துணிபுமெய்ம்மையுள்ள
முன்னுமூராணுவழிபாடு புரிந்துமுற்பவத்திற்
பொன்னுரையார்பின் மகவென்பதுந் தேர்ந்துபூவை
தன்னுர்வமைந்தனுயிர் மீட்குந்தகைமைசெய்தான்

(இ-பு.) இவ்வாறுசொல்லி அந்த ராசஸ்திரி இறப்பதற்குத் துணிந் த நிச்சயத்தையறிந்து இந்தப்புத்திரன் முற்பிறப்பில் தனக்கு உபசாரஞ் செய்தவனென்பதையும் எண்ணி அவளுடைய ஆசைப்புத்திரனுயிரைமீ ட்கும் வகையை அம்முனிவர்செய்தார்-எ-று. பொன்னுரம் பொன்மாலை யணிந்த மார்புடையபுத்திரன் (௫௯)

பாலொத்திலகுந் திருநீறுபரிந்தெடுத்து
வாலப்பிறைபோல்பவ னெற்றிவயங்கச்சாத்தி
பாலத்திருண்டகளத்தான் பொன்னடியையேத்தி
மூலத்திருமந்திரங்காதின் மொழிபலோடும்

(இ-பு) பால்போன்ற வெண்மைநிறங்கொண்டு விளங்காநின்ற திரு நீற்றினைப் பரிவுடனெடுத்து பாலசந்திரன் போல்பவனுகிய அந்தப்புத்தி ரனுடைய நெற்றியில் பிரகாசிக்கும்படி தரித்து விஷத்தினுல் கறுத்தக ண்டத்தையுடைய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்து பஞ்சாக்ஷ ரத்தைக் காதில் உபதேசித்தவளவில்-எ-று. (௬௰)

மைபந்தாட்கமலக்கண் மலர்ந்தெழப்பாலன்செங்க
ணைந்தாதுவிழித்திட நற்புயமிசைனுன்போன்
றேந்தாவழுந்தே மூலையுண்ணமுயலும்வேலை
செந்தாமரைமேற் றிருவன்னவள்சேர்ந்துபுல்லி

(இ-பு) பரியநிலையுடைய தாமரைமலர்கள் மலர்ந்ததுபோல இற ந்திருக்கும் புத்திரன்கண்களைத் திறந்து நித்திரைநீங்கினவன்போலெழு ந்து முந்தி முலையுண்ணத்தொடங்கினபோது திருமகளையொத்த அந்த ராச ஸ்திரி தன்புத்திரனைக்கட்டித் தழுவிக்கொண்டு-எ-று (௬௧)

பொல்லாவறுமைத் துயர்பூண்டபொறியிலாள
னில்லாதசெய்பொன் கிடைத்தாங்களிழந்துமீள
நல்லாதரவொத்தொடு பெற்றெனநங்கையோகை
கில்லாவபொங்கக்களி பெய்தினளின்றகாலே

(இ-பு.) கொடியவறுமைத் துபரத்தைக்கொண்டிருந்த அங்கப் பழு
து முள்ளவனுகிய ஒருவன் தனக்கில்லாத திரவியத்தைப்பெற்றஉடனே
யிழந்துமறுபடியும் அந்ததிரவியத்தை மிகுந்த ஆசையுடன்பெற்றுச்
ணடதுபோல அந்தராசஸ்திரியானவள் சந்தோஷந்தனக்குள் ளடங்கா
ல் பொங்கக் களிப்பை அடைந்துநின்றபோது-எ-று (௯௨)

மீட்டுங்கருணைக்கடல்போல விளங்கும்யோகி
தோட்டங் கமலத்துகட்டாது சொரிவதேபோல்
வாட்டங்குகைபான்மகன் மேலுமனைவிமேலுங்
காட்டுந்தளிர்ச்செங்கையினீறு கனிவிட்டான்

(இ-பு) கிருபைக்கடல்போல் விளங்குகின்ற அந்தச்சிவயோகியான
வர் இதழ்களையுடைய் தாமரை மலரானது மகரந்தப்பொடியைச் சிந்து
வதுபோலத் தம்முடைய கையினுல் விபூதியை ராச குமாரன் மேலும்
ராசன்மனைவிமேலுந் தரித்தான்-எ-று வாட்டங்குகைப்பான்-வாளாயுதம்
பொருந்திய கையையுடையஅரசன். காட்டுந்தளிர்ச்செங்கை-தளிரிலை
காட்டுகின்றசெய்கை, (௯௩)

வெண்ணீறவனன் பொடுசாற்றலும்வெற்றிரும்பு
தெண்ணீரிரதத்துளி குத்தச்செழும்பொனுகி
மண்ணீர்மைபெற்று லெனமுற்றவர்மேனிநோயின்
புண்ணீர்மைநீங்கிப் பசும்பொன்னுருவெய்திநின்றார்

(இ-பு) அவர்விபூதி தரித்தமாத்திரத்தில் வெறுமிய இரும்பில் தெ
ளிவான தன்மையுள்ள ரசத்துளியைச் குத்தினவுடன் அவ்விரும்புநல்ல
பொன்னுகி அலங்காரமுள்ள தன்மையைப்பெற்றதுபோல நோயினாலு
ண்டாகிய புண்தன்மை நீங்கி அவர்கள்சரீரம் பொன்னிறம் பொருந்தி
னார்கள்-எ-று. (௯௪)

கங்காதரனன்புறுதொண்டன்கழிந்தவாவி
மங்காதுமீட்க வுயிர்வந்தபிள்ளைமந்தனுேடு
கொங்கார்குழலாடிருமேனியிற் கொண்டபுண்ணும்
தங்காதுநீங்கத் திருநீறவன் சாற்றலோடும்.

(இ-பு.) இறந்துபோனவுயிர் அப்படியேபோகாமல் பரமசிவனிடத்
தில் அன்புள்ள தொண்டராகிய சிவயோகியா மீட்க உயிர்பெற்றபு
த்திரனுடைய சரீரத்திலும் தாயின்சரீரத்திலும் பொருந்திய புண்ணா
னது கொஞ்சமுமிராமல் நீங்கும்படி விபூதிதரித்த அளவில்-எ-று (௯௫)

கண்டாதவேள்வி மறையோர்குலத் தையலாரும்
வண்டாதரிக்குந்தொடை நாயகன்மடந்தைமாருங்
கண்டார்மகிழ்ந்தார்வியந்தார் களித்தார்கடனஞ்
சுண்டான்றிருத்தாடொழு தேத்தெடுத்தோதிநின்றார்

(இ-பு.) எப்போதும் யாகஞ்செய்துகொண்டிருக்கும் பிராமணகு
லமாதர்களும் அந்தவர்த்தகனுடைய வீட்டுமாதர்களும் பார்த்துச் சந்
தோஷித்து அதிசய மடைந்து களிப்புற்றுப் பரமசிவனுடைய திருவடி
களைத்தொழுது தோத்திரஞ் செய்தார்கள்-எ-று. (௯௬)

வாவுந்திரையார்கலி சூழும்வளாகங்காக்குங்
கோவின்பெருந்தேவியு மைந்தனுங்கோதிலாத
தேவின்கழற்றாள்பணி யோகிதன்செய்யபொற்று
ளாவின்புறவேத்தி வணங்கிவிலலுற்றார்

(இ-பு.) தாவிமேலெழுகின்ற அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த
பூமியைக்காக்கும் அரசனமனைவியும் புத்திரனும்பரமசிவனுடைய திரு
வடியைப்பணிகின்றசிவயோகியின்பாதங்களைநாவினுல்துதிசெய்து பணி
ந்து சொல்லுகின்றார்கள்-எ-று. கோதிலாததே - குற்றமில்லாதகடவுள்.க
ழற்றாள்-வீரகண்டையணிந்ததிருவடி. செய்யபொற்றாள்-செம்மைநிறத்
துடன் அழகியபாதம்.இன்புற-இன்பம்பொருந்த. (௯௭)

தஞ்சஞ்சிறுவனுயிரீந்துந் தொடர்ந்தநோயா
லஞ்சுந்துயரங்களைக் காத்துமளியைநின்றாய்
வஞ்சம்புணர்மானிடரோறு கைம்மாறுசெய்வோந்
தஞ்சந்திருத்தாளென யோகிதன்றாளில்வீழ்ந்தார்

(இ-பு.) இறந்தபுத்திரனுடையபிராணனைக்கொடுத்தும் எங்களுக்
குநேரிட்ட நோயினுல் அஞ்சுகின்ற துயரந்தீர்த்தும்கிருபையுள்ளவராயி
ருக்கின்ற தேவரீருக்கு சிறியமானிடர்களாகிய நாங்கள் என்னபிரிது உ
பகாரஞ்செய்வோம் எங்களுக்கு உம்முடைய திருவடியே ஆதாரவென்று
சிவயோகிதன்பாதத்தைவணங்கினுர்கள்-எ-று. (௯௮)

(வேறு.)

இறைஞ்சி வீழ்ந்திடு மிருவர்தம் மையுஞ்
சிறந்த கைகளா லெடுத்துச் சீரியோ
னிறைந்த வோகையா னிகழ்த்து மாசிக
ளறைந்துநாமு மறியக்கூறினுன்

(இ-பு.) இவ்வாறுசொல்லிவணங்கிய அவ்விருவரையும் சிவயோகி
யானவர் தம்முடைய திருக்கைகளால் எடுத்து நிறைந்த சந்தோஷத்து

டன் சொல்வதான ஆசீர்வாதஞ்செய்து அந்தப்புத்திரனுக்குப் பெயருங் கொடுத்தார்-எ-று. (சுகூ)

பத்திராயுவிப் பாலனுமமென்
மெத்தலங்களு மிசைக்கநின்மகன்
மைத்தடங்கணுய் வளருங்காறுமில்
துய்த்துநீணிதி வணிகனோர்பவே

(இ-பு.) இந்தப்புத்திரன்பெயர் பத்திராயு என்று எவ்விடத்து மெல்லாருஞ்சொல்லக்கடவது மைதீட்டுங் கண்களையுடையவளே உன்புத்திரன் வளர்கிறவரைக்கும் தன்வீட்டில் இவ்வர்த்தகன் ஆதரிக்கக்கடவன்-எ-று. (எ0)

இங்குணவகுநின் னெழில்கொள்பாலகன்
பொங்குறக்கலைப் புணரிநீந்தினன்
பங்கில்செல்வமு மாசிலாட்சியு
மெங்கணுயக னருளினெய்தியே

(இ-பு.) இவ்விடத்திலிருக்கும் உன்புத்திரன் சாஸ்திரங்களையெல்லாமோதி யுணர்ந்து எம்மிறைவன் கிருபையால் கெடாத செல்வமும் நல்ல அரசாட்சியும் அடையக்கடவன்-எ-று, பொங்கு மிகுந்த கல்விசாஸ்திரமாகிய சமுத்திரத்தை நீந்தினவனாய். (எக)

வினைந்தநீண்முடி மன்னனாகியே
யனந்தகாலமு மவனிகாத்திடு
மினைந்தமூப்புநோ யிகந்ததேவர்போற்
களைந்துவண்டுலாங் கண்ணிமைந்தனே

(இ-பு.) வண்டுகள் இசைபாடிக்கொண் டிருக்கும்படியான பூமாலையணிந்த உன்புத்திரன் மகுடந்தரித்துக்கொண்டு மன்னவனாகி வருகின்ற மூப்புப்பருவமும் வியாதியுமில்லாமலிருக்கிற தேவர்களைப்போல இவ்வுலகத்தைக் காத்துக்கொண்டு நெடுநாளிருப்பான்-எ-று. (எ2)

என்றுபாலனுக் கெதிர்பயாவையு
மன்றல்வார்குழற் றியம்பிமாதவன்
சென்றனன்னெனத் தெளியக்கூறினன்
றென்றமாக்கதை சூதனென்பவே

(இ-பு.) இவ்வாறு சொல்லியதுமன்றி அந்தப் புத்திரனுக்கு மேல்வருகின்ற நடத்தைகளையும் அவன்தாயுடன்சொல்லிச் சிவயோகிபோய்விட்டனென்று சூதமுனிவரானவர் மகத்துவமுள்ள பழமையான இந்தச்சரித்திரத்தை நைமிசாரணியமுனிவர்களுக்குத்தெளியும்படிச்சொன்னார்-எ-று.

சிவயோகிமகிமையுரைத்த-அத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௭௰௨.

சிவமயம்.

பதினொன்றாவது

பத்திராயுவுக்கரசியலளித்தஅத்தியாயம்.

ஐந்துமுகத்தானடியார் செயல்கேட்டிங்
குய்ந்தனம்யாமென்னு முனிவோருளங்களிக்க
மைந்துடலம்பெற்றார்க்கு முத்திவழிகாட்டும்
பந்தமற்றஞானமுனி மீட்டும்பகர்ந்தனனே

(இ-பு.) ஐந்து திருமுகங்களுள்ள பரமசிவனுடைய அடியார் செய்கையைக்கேட்டு நாங்கள் உய்ந்தோமென்று சொல்லிய நைமிசாரணிய முனிவர்கள் மனஞ் சந்தோஷிக்க வன்மையுடன் உடல் பெற்றவர்களுக்கு மோக்ஷவழியைக்காட்டுகின்ற ஞானவானாகிய சூதமுனிவர் மறுபடியுஞ் சொல்லுகிறார்-எ-று. ஐந்து திருமுகங்களின் திருநாமம்-ஈசானம், தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம், என்பவைகளாம். ஈசானமுகம் படிகநிறமுள்ளதாக மேல்நோக்கிய பார்வையாயிருக்கும், தற்புருஷமுகம் பொன்னிறமுள்ளதாய்க்கிழக்குத்திசைநோக்கியிருக்கும், அகோரமுகம் தெற்குநோக்கி நீலநிறமுள்ளதாயிருக்கும், வாமமுகம் பொன்னிறமுடன் வடக்குநோக்கியிருக்கும், சத்தியோசாதமுகம் வெண்மைநிறமுள்ளதாய் மேற்குநோக்கியிருக்கும் - சிவாலயங்களில் தீபாராதனைசெய்யும்போது நாலுதீபத்தட்டு நாலுதிக்கிலும் அந்த நாலின் மத்தியில் ஒருதட்டுமாக அஞ்சுதட்டு வைத்துத் தீபாராதனைசெய்வது--பரமசிவனுடைய பஞ்சமுகங்களுக்குந் தீபாராதனை செய்கிறபாவனையாம். மத்தியில்வைத்திருக்கிற ஈசானமுகத்தட்டு முதலிலும் பின்பு தற்புருடமுகத்தட்டுமுதல் நான்குதட்டும் மேற்சொல்லிய திருமுகக்கிரமப்படியெடுத்துத் தீபாராதனைசெய்வது--சிவலிங்கப்பெருமான் மேற்குநோக்கிய சந்நிதியாயிருந்தால் அந்தத்திக்குநோக்கிய திருமுகமே தற்புருஷமுகமாகத் தற்புருஷத்தட்டுவைத்துத் தீபாராதனைசெய்யும்படி ஆகமவிதியாம்- தெற்கு வடக்கு நோக்கிய சந்நிதிகளாயிருந்தால் அந்தந்தத்திசையே தற்புருஷமாகக்கொள்ளவேண்டும் இன்னமும் உண்டு - அவையெல்லாம் எழுதினால் பெருகும். (க

பிங்கலையென்றோதும் பெருங்கணிகையோரிராத்
துங்கமிகுதவத்துத் தொல்லோன்விடபனுக்குச்
செங்கமலத்தாள்வருடிச் செய்தவழிபாட்டிறு
லங்கலனுஞாலத் தலர்படர்ந்ததுபோலவே

(இ-பு.) பிங்கலையென்று சொல்லப்படுகிறவொருகணிகைமாதானவள் விடபனென்னுஞ் சிவயோகிக்கு ஒருநாளிராத்திரி திருவடிகள் வருடிச் செய்த உபசாரத்தினால் அந்தப்பிங்கலையானவள் இவ்வுலகத்தில் திருமகள்வந்தவதரித்ததுபோல-எ-று. துங்கம் பரிசுத்தமுள்ள தவத்தையுடைய பழமையானசிவயோகி. (உ)

போர்செழுவேல்வேந்தன் புகழ்ச்சந்திராங்கதற்குச்
சீர்கெழுமுதாரமாஞ் சீமந்தனிவயிற்றின்
வார்பெய்முலைக்கீர்த்தி மாலினியென்னும்மொடுந்
தார்புனைமெல்லோதித் தளிரியலாய்த்தோன்றினள்

(இ-பு.) போர்செய்வதற் கேதுவாகப்பொருந்திய வேலாயுதத்தையுடையவனும்புகழ்பெற்ற சந்திராங்கதனென்னும்அரசனுக்குக் கற்புள்ளமனைவியாகிய சீமந்தனிவயிற்றில் புத்திரியாய்ப்பிறந்து கீர்த்திமாலினியென்னும்பேர்பெற்றாள்-எ-று. வார்பெய்முலைகச்சணிந்தமுலை-தார்புனைபூமாலையணிந்த மிருதுவாகிய அளகத்தையுடைய தளிர்போன்ற சாயலுள்ளவளாய்த் தோன்றினாள். (௩)

வானமிருடீர வளருமதிப்பிள்ளையைப்போற்
றேனமருந்தார்வேந்தன் செல்வக்குலமோங்கக்
கானமருங்கூந்தற் கனிவாய்க்கழைமென்றோட்
பானல்விழியாள்வளர்நா ளாற்றசெயல்கன்னுவாம்

(இ-பு.) ஆகாயத்தில் இருள் நீங்கவளர்கின்ற இளஞ் சந்திரனைப்போல் சந்திராங்கதனுடைய குலமானது ஓங்கும்படி கீர்த்திமாலினியென்னும் பெண்ணானவள் வளருகிறநாளில் பொருந்தியசெய்கையைச்சொல்லுகிறோம்-எ-று. தேனமரும் தேன்பொருந்திய பூமாலையணிந்த அரசன், கானமரும் வாசனைதங்கிய அளகமும் கோவைக்கனியொத்தவாயும் மூங்கிலையொத்த மெல்லியதோளும் நீலோற்பலம்போன்ற கண்களுமுள்ளபெண். (௪)

விஞ்சையரினல்யாழ் விதப்பயின்றுவேதமுதல்
வஞ்சமிலாவாறங்க நீதிமுவாராய்ந்து
கொஞ்சுகரிபரிதே ரூர்ந்துகொலைப்படைக
ணெஞ்சங்களிக்க நிகரில்லார்கற்றுணர்ந்தார்

(இ-பு.) தங்களுக்கு ஒப்பில்லாத பத்திராயு சுனயன் என்பவர்கள் வித்தியாதரரைப்போல வீணையின் வகைகளைக் கற்றும் வேதமுதலாக ஆறங்கங்களும் மனுவிக்கியானமென்னும் நீதிசாஸ்திரமும் கற்றுணர்ந்தும் மெதுவாக அடிபெயர்த்துவைத்து நடக்கும் யானையேற்றம் குதிரையேற்றம் தேரேற்றம் இவைகளெல்லாங் கற்றுணர்ந்தும் தனுமுதலாகிய ஆயுதப்பயிற்சியும் மனங்களிக்கக்கற்றுணர்ந்தார்கள்-எ-று. (௫)

மற்றதிருபன்மகன் பத்திராயுவெனுஞ்
சிற்றச்சிறுகுடிமிச் செவ்வாய்மழகளிறுஞ்
சொற்றவணிகன்ற நபன்சுனயனுமா
யுற்றமருவியுட லுயிர்போல்வைகினார்

(இ-பு.) ராசபுத்திரனாகிய பத்திராயுவென்பவனும் இவர்களை யாதரிக்கும் வணிகனுடைய புத்திரனாகிய சுனயன் எனபவனும் ஒருவனைவிட்டொருவன் பிரியாமல் உடலுமுயிரும்போல இருந்தார்கள்-எ-று. சிற்றச்சிறுகுடுமி சிறியகுடுமியும் செவ்வாயுமுள்ள இளமையான யானைக்கன்றினையொத்த ராசபுத்திரன் (௬)

தக்கமறையோர் தழன்மாட்டவிசொரிந்து
மிக்கசடங்கியற்ற நாயகன்விழைவோடுந்
தொக்கவிரவலர்பாற் சொன்னமழைபொழிய
வொக்கவிருவோரு முந்நூலுவந்தணிந்தார்

(இ-பு.) தகுதியுள்ள பிராமணர்கள் ஓமாக்கினியினிடத்தில் அவிர்ப்பாகங்கொடுத்துச் சடங்குகள்செய்ய அந்தவணிகன் வந்திருக்கிற இரவலர்களுக்கு மழைபொழிவதுபோலதிரவியங்கொடுக்கவும் அந்த இரண்டு புத்திரர்களும் ஏககாலத்தில் உபநயனஞ்செய்து கொண்டார்கள்-எ-று. உவந்து சந்தோஷித்து. (௭)

ஞானநூலாதிபல விஞ்சைநயந்தளித்த
வானவர்தந்தேசிகனே போல்வான்மனமகிழ
வூனமில்சீரொண்மணியும் பொன்னுமுவந்தளித்துத்
தேனமர்தார்மைந்தர் திருவயநீரொட்டடைந்தார்

(இ-பு.) ஞானசாஸ்திரமுதலாகிய பலகலைகளை விருப்பத்துடன் அருள்செய்த தேவகுருவையொத்த ஆசாரியர் மகிழும்படி காணிக்கையாக ரத்தினங்களும் பொன்னுமகிழ்ந்துகொடுத்துப் பதினாறுவயதுள்ளவர்களானார்கள்-எ-று. பழுதில்லாதசிறப் ஒளியுமுள்ளமணி தேனமர் தேன்பொருந்திய மாலையணிந்தபுத்திரர்கள். (௮)

மண்டுபுருவச்சிலை குனித்துவாட்கண்ணெ
கொண்டகொடுங்கணையா லெய்வான்குழூஉக்கொண்டு

கண்டமகளிர்கடற் பார்முழுதாளுந்
திண்டிறல்வேற்காளை திருமார்பத்தெய்யுநாள்

(இ-பு.) கண்டமாதர்கள் கூட்டங்கொண்டு நெருங்கிய புருவமாகிய வில்லைவளைத்து வாள்போன்றகண்களே கொடியபாணமாக எய்பக்குறித்து ராசபுத்திரனுடைய மார்பினிடத்தில் எய்யும்படியான பருவம் அடைந்தநாளில்-எ-று சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழுவதும் ஆளத்தக்க பராக்கிரமமுள்ள வேலேந்திய ராசபுத்திரன். (௯)

தீர்ந்தவுயிர்முன் னளித்தசிவயோகி
போர்ந்தசடிலஞ்சூ வற்புாளவந்தெய்த
நேர்ந்தசுமதியெனு நேரிழையுநெஞ்சமருள்
கூர்ந்தகுமாரனுமக் கோதிலான்றொழுதார்

(இ-பு) நீங்கியஉயிரை முன்னங்கொடுத்த சிவயோகியானவர் நீண்ட சடையானது பிடரியினிடத்தப்புரண் டசையும்படிவர நேரிற்கண்டு அந்தராஜஸ்திரியும் மனதில்மிகுந்த கிருபையுள்ள அவள் புத்திரனும் பரிசுத்தரான அந்தச்சிவயோகியின் பாதத்தில் வணங்கினார்கள்-எ-று.

மாண்டபெருந்தவத்தோன் சிந்தைமகிழ்வெய்தப்
பூண்டபரிவினராய்ப் பொன்னுண்மலர்தூவிக்
காண்டகுபால்செந்தேன் கனிபொற்கலத்தேந்தி
யாண்டெழுகும்பூசைவழி பாட்டுடனளித்தார்

(இ-பு) மாட்சிமைதங்கிய சிவயோகி மனமகிழ்ச்சியுண்டாயத்தக்கதா அன்புள்ளவர்களாய் நல்லமலர்களைத்தூவிப் பார்வைக்குமினிய மதுரமுள்ளபால்தேன்பழங்கள்பொற்கலத்தில் வைத்து ஆராதனைசெய்து அருந்தக்கொள்ளச் செய்தார்கள்-எ-று.

கோடும்பவளக் குறுஞ்சடிலமாவிரதி
வாடுஞ்சிறுமருங்குற் செல்வியையுமைந்தனையு
நாடுங்கருணைபுரிந்துநகைமுகத்தாற்
றேடும்பொருளனையீர் தீதிலவேயென்றுரையா.

(இ-பு.) வளைவாகத் தொங்குகின்ற சடையையுடைய சிவயோகியானவர் தம்மைவணங்கிய அவ்விருவருக்கும் ஆசீர்வசனஞ்சொல்லிச் சுகமாயிருக்கிறீர்களா என்றுவினவினார்-எ-று, பவளம்-பவளநிறமுள்ள சிவந்த சடை-வாடும்-மெலிவாகிய சிறியவிடையையுடையவள், மகிழ்ச்சியுள்ளமுகம்-தேடும்பொருளனையீர்-தேடுகின்ற பொருளை யொத்தவர்களே சேமமா, (௰

வாவுபரிதேர்வேந்தன் மைந்தன்முகநோக்கி
மேவுகலையுள்ள விகற்பமெல்லாங்கற்றனையோ
தேவனெனத்தேசிகனைச் சிந்தைமகிழ்வித்தனையோ
வேவுசுடர்வேலோ யென்மையுநினைப்பாயோ.

(இ-பு.) தாவிச்செல்லுகின்ற குதிரைகட்டிய தேரினையுடைய ராசகுமாரன் முகத்தைப்பார்த்து யாவரும் விரும்புகின்ற அறுபத்துநான்கு கலைகளுங் கற்றுக்கொண்டனையா, ஆசாரியரைக் கடவுளாகப்பாவனைசெய்து அவர்மனசு சந்தோஷிக்கும்படிசெய்தனையா, பகைவர்மேற்செலுத்தும்படியான வேலையுடைய புத்திரனே எம்மையும் எப்போதாவது நினைத்திருப்பையா-எ-று. (௰)

சொல்லாயெனமுனிவன் சொல்லுமுறைகேட்டு
நல்லாள்டிதொழுது நானிலத்துமாய்ந்தவர்போற்
புல்லார்புறங்காட்டிற் போடாதுயிரளித்த
வல்லாய்நினையு மறந்திருக்கவல்லோமோ

(இ-பு,) சொல்லென்று சிவயோகிசொல்லிய வார்த்தையை ராஜஸ்திரிகேட்டு அவர்பாதத்தைவணங்கி சுவாமி இவ்வுலகத்தில் இறந்தவர்களைக்கொண்டுபோய்ப் போடுவதுபோல முன்னிறந்திருந்த புத்திரனைப் புற்கள்நிறைந்த சுடலையிற் போட்டுவிடாமற்படிக்கு உயிர்கொடுத்தவல்லவரே உம்மையும் நாங்கள் மறந்திருக்கவல்லமா-எ-று, (௰௧)

நீணிலமேல்வீந்தவுயிர் நீயளிக்கப்பெற்றேனை
மாணவகனாக மனமுனியேகொண்டருளிக்
காணரியசெய்யகோற் காவலர்க்கீதியகன்
றுணவிடாத வழிப்புமளிப்பாயெனறாள்.

(இ-பு,) சிவயோகியே, இந்தப்பெரிய உலகில் இறந்தஉயிரைதேவரீர் கொடுக்கப் பிழைத்திருக்கும் என்புத்திரனைச் சீஷனாகக்கொண்டு இதன்மைத்தென்று எளிதில் அறியக்கூடாத செங்கோல்செலுத்தும் அரசர்களுக்குரிய நீதிகளைச்சொல்லி ஆணவம் மேலிடாதவண்ணம் ஞானமும் அருள்செய்யுமென்று சொன்னாள்-எ-று, (௰௨)

இத்தகையமாற்ற மிவளுரைப்பக்கேட்டமுனி
சித்தமுவந்து சிறுவன்முகநோக்கிக்
கொத்தவிழும்பைந்தார்க் குமரகேட்டியென
வுத்தமநன்னீதிமனு நூலுணர்த்தினான்.

(இ-பு,) இத்தன்மையுள்ள வசனங்களை அந்தராஜஸ்திரி சொல்லக்கேட்ட சிவயோகியானவர் மனஞ்சந்தோஷித்துப் புத்திரன்முகத்தைப் பார்த்துப் பூங்கொத்துகள்மலர்ந்திருக்கும் மாலையணிந்தகுமாரனே கே

ளொன்று நல்லநீதிகளைச்சொல்லும் மனுவிக்கியானேஸ்வரத்தை அரு
ச்செய்தார் எ-று. (௰௪

ஆழியுலகத்தி லந்தணரோயாதியாய்
வாழுமொருநான்கு வருணத்தோர்தம்மையெல்லா
மூழிமுதல்வ னுருவெடுத்துச்செங்கோலாற்
சூழிமதானைத் தொல்வேந்தாய்க்காக்குமே

(இ-பு,) முத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் வாழுகின்ற பிராமண
முதலாகிய நான்குவருணத்தாரையெல்லாம் ஊழிமுதல்வனாகிய பரம
வன் சூற்றிப்பட்டங்கட்டிய மதத்தயானையையுடைய பழமையாகிய
ரசர்களாகத் திருமேனிகொண்டு நீதியினாற்காப்பன்-எ-று. (௰௫

வேந்தன்முறைதிறம்பின் வேதவிதிதிறப்பு
மேந்திழையார்தங்கற்பு மில்லறமுமில்லாவா
மாந்தர்பசியா லுணங்கமழைவறந்து
பாந்தண்முடிக்கிடந்த பாரின்விளைவஃகுமால்.

(இ-பு) அரசன்நீதிதவறினால் வேதவிதிகள்தவறும் மாதர்களுடை
யகற்பும் இல்லறமுமாறிப்போம் மனிதர்கள்பசியால்வருந்தும்படிமழை
பெய்யாமல் ஆதிசேடன்முடியிலிருக்கும் பூமியினிடத்தில் பயிர்விளை
வு குறைந்துவிடும். (௰௬

தீயூட்டித்தாமுண்ணுஞ் செய்தவத்தோராவினங்க
ளேயூட்டுகோய மிகழ்ந்தியற்றுநோன்பினோர்
வேயூட்டுதோளார் விருத்தர்சிறுபாலர்தமைத்
தாயூட்டிப்போற்றுதல் போற்றுர்வேந்தன்காக்குமால்

(இ-பு,) அக்கினிதேவனுக்கு அவிர்ப்பாகங்கொடுத்துத் தாங்கள் ஆ
காரங்கொள்ளுகின்ற பிராமணர்கள்,பசுக்கள், நோயைத்தருகின்ற உட
லைவருத்தித் தவஞ்செய்கின்ற முனிவர்கள்-பசியமூங்கிலையொத்ததோ
ளையுடைய ஸ்திரீகள் விருத்தர்கள்-இவர்களைத் தாயானவள் சிறுபிள்ளை
களை யூட்டிவளர்ப்பதுபோல வெற்றிமாலைபணிந்தஅரசன்காப்பன்-எ-று

தேவர்நிலைகடவார் மேலோர்திறம்பிழையார்
நாவினிரண்டுரையார் நனகல்லவைபுரியார்
காவன்முறைதிறம்பார் காமச்செயல்பெருக்கார்
பூவலயங்காவல் புரியும்புரவலரே.

(இ-பு) இவ்வுலகத்தைக்காக்கும் அரசரானவர்கள் தேவர்கள் நிலை
மையைக்கடவார்கள், பெரியோரிடத்துக் குற்றஞ்செய்யார்கள் நாவினா
லிரண்டுசொல்லார்கள் நன்றல்லாத காரியங்களைச்செய்யார்கள் காவலின்
முறைமைமாறுர்கள் காமச்செய்கை அதிகப்படுத்தார்கள்-எ-று, (உ0)

உற்றூறஞ்சாப் படையுமுயர்குடியு
முற்றுலவாப்பைங்கூழு முன்வருதல்சேமிக்கும்
பெற்றியமைச்சு முதவும்பெருந்துணையுங்
கொற்ற வரணு முடையானேகோமகனே.

(இ-பு,) ஆயுதங்களால் தங்கள்சரீரத்தில் பொருந்திய காயங்களுக்
குப் பயப்படாதசேனையும் உயர்வானகுடியும் முழுவதுங்கெடாத பசிய
பயிரும் மேல்வருவதையறிந்து முன்னதாகக்காத்துக்கொள்ளுகிற தன்
மையுள்ள மந்திரிகளும் உதவிசெய்யத்தக்கபெரியதுணையும் வெற்றிபொ
ருந்திய மதில்அரண்முதலிய நால்வகையரணு முள்ளவனேஅரசனுவன்
-எ-று. நால்வகைஅரணுவது-மதில்-அகழ்-காடு - மலை - என்பவைகளாம்

வடவிழ்மைர்தாரோ யிமையோர்பதம்பெறினு
நாடுநடுங்க நன்கல்லன புரியார்
வேடாபுரிவேட்டஞ் செய்யார்வினைதருஞ்சூ
தாடலினையார் மட்டுண்ணாரரசரே

(இ-பு.) இதழ்விரிந்தமாலையணியும் ராசகுமாரனே அரசர்கள்தேவ
ர்பதவிபெற்றாலும் தேசத்திலுள்ளவர் நடுங்கும்படி நன்மையல்லாதகா
ரியங்களைச்செய்யார்கள், வேடர்களைப்போல வேட்டைத் தொழில்செய்
யார்கள்,பாபத்தைத்தருகின்ற சூதாடலினையார்கள், மதுபானஞ்செய்
யார்கள்-எ-று, (உஉ)

சூரவர்தமைக்காப்பர் செய்நன்றிகொல்லார்
காவடரைக்காய்வர் பழிகண்ணேட்டஞ்செய்யா
ரிரவலருக்கீவ ரெதிர்ந்தோர்முனையின்
விரவுதமுயிரு மெண்ணார்கள்வேந்தரே

(இ-பு.) அரசர்கள் பெரியோரைக் காப்பார்கள், ஒருவர்செய்த உத
வியைமறவார்கள், திருடரைக் கோபிப்பார்கள்,பழிசெய்யார்கள், தாக்ஷ
ணியம்பாரார்கள், இரப்பவர்களுக்குக் கொடுப்பார்கள் பகைவர்நேரிட்
டசண்டையில் தங்களுயிரைப் பெரிதாக எண்ணார்கள்-எ-று, வழக்குமு
ன்னிலையில் வந்தவர்களிலாவது குற்றவாளிகளாய் வந்தவர்களிலாவது த
ங்களுக்கு நட்பினராயிருந்தாலும் பகைவராயிருந்தாலும் இவ்விரண்டு
மல்லாதவர்களாயிருந்தாலும் தாக்ஷணியமில்லாமல் நீதிப்படிவிசாரித்
தல் (உ௩.)

(வேறு,)

அவகறையெழுந்துபுனிதர்க்கடி வரன்முறையிசனைவணங்கித்
தெய்வவேதியருக்கான்குலநிதியந் தெளிபுனற்பழனமோடுதவி

மைதவழ்கண்டனடியவர்பகவ ரதிதிபர்பருவினரெவர்க்குங்
கைகவிசுறுசெய்நிப்பயருன்பால் கன்னன்மூப்பழத்தோடுங்கலந்து

(இ-பு.) உதயகாலத்தில் நித்திரைதெளிந்து எழுந்து பரிசுத்தபு
ளநீரில் ஸ்நானஞ்செய்து ஆகமவிதிப்படி பரமசிவனைப் பணிந்து செ
வத்தன்மையுள்ள பிராமணர்களுக்குப் பசுக்களும் திரவியமும் தெ
லாதியநீர்நிறைந்த விளைநிலங்களுந் தானமாகக்கொடுத்துப் பரமசிவ
டைய அடியார்களுக்கும் முனிவர்களுக்கும் யதிகளுக்கும் கைபிற்ப
க்கொள்ளத்தக்க வாசனையுள்ளசெய் மதுரமுள்ளபருப்பு பசுவின்ப
வெல்லக்கட்டி முப்பழங்கள் இவைகளுடன்சேர்த்து-எ-று. (உ

வாசநன்கருணையடிசிலுமருந்தி மருவியவிருந்தொடுந்துப்த்து
பாசிலைப்பிளவுகருப்புரமருந்திப் பரிமளக்கலவைதண்சந்தம்
யோசனைகமழவணிந்தநல்லணிக ளொளிமுடியாதியபுனைந்து
கேசகத்தடைக்குமாவியர்தானை கிளரொளிமருங்குறச்சாத்தி

(இ-பு) வாசனைதங்கிய நல்லபொரியலுடன் அன்னமுண்பித்த
ந்திருக்கிறவிருந்தாளிகளுடன் தாமுமுண்டு பச்சைக்கருப்பூரமுத
கிய வாசனையுடன் தாம்பூலம்தரித்துக்கொண்டும் வாசனையுள்ளசட்
வர்க்கஞ்சேர்ந்தசந்தனக்குழம்பு யோசனைதூரம் பரிமளிக்கும்படி பூ
சொண்டும் மகுடமுதலாகிய நல்ல ஆபரணங்களணிந்துகொண்டும்
ங்கிற்குளமுயில் அடைக்கத்தக்கதாகப் பாலின்நுரையையொத்த அ
மெல்லியவஸ்திரத்தை இடையில் உடுத்துக்கொண்டும்-எ-று. (உ

அண்டர்கள்சூழப்புரந்தரனிருந்த வவையெனவருபணிகுயின்ற
கிண்டிறன்மடங்கற் றவிசின்வீற்றிருந்து வேந்தர்வந்திறைஞ்சுபுளம்
கொண்டலின்முரசமுன்றிலின்முழங்க வரசிளங்குமாருங்கதிர்வேல்
யண்டலாதிபருஞ்சேனைகாவலரு மந்திரத்தலைவருமடைங்க

(இ-பு.) தேவர்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும்படி தேவே
திரன்வீற்றிருக்கும் சபையைப்போல் கிடைப்பதற்கரிய ரத்தினங்க
தித்தமிகுந்த பலமுள்ள சிங்காசனத்தில் வீற்றிருந்து பகைவர்கள்வ
தாங்கள்கட்டுகிற திறையை அளந்துகொடுக்கவும் அரண்மனை முக
ல்மேகம்போல் பேரிகைமுழங்கவும் ராசகுமாரர்களும் ஒளிதங்கிய
லையுடைய மண்டலாதிபரும் சேனாதிபதிகளும் மந்திரிமார்களும் வ
ங்கவும்-எ-று, (உ

நீதியுமொற்றருகிரிலாக்கண்ணு நீணிலத்தல்லலவையொழித்தும்
வேதியர்தேவர்மெலிந்துளோர்வலிஞர் மெலிவந்துக்குறைத்திறப்பினும்
மோதருங்குடியுமுலப்பிலாநிதிய முயர்ந்திடவுறுதி னங்காத்தும்
குதினிற்பகைவர்திருவினைக்கவருஞ் சூட்சியுந்தனையமுஞ்சூழ்ந்து

(இ-பு.) நீதியும் தூதர்களுமே தமக்குக் கண்களாக இவ்வுலகில் பா
வத்தையொழித்தும் பிராமணர்கள் தேவர்கள் மெலிவடைந்தவர்கள் வ
லுமையாளர் இவர்கள்வருத்தம் நீங்கும்படி குறைப்பாட்டை விருவியும்
சொல்லுதற்கரிய குடிகளும் அழியாதநிதியும் அதிகரிக்கும்படி அனுதி
னங்காத்தும் சூதினாலே பகைவருடைய செல்வத்தை அபகரிக்கும்படி
யான தந்திரத்தையும் அதற்கேற்ற முயற்சியையும் ஆலோசித்தும்-எ-று.()

தருமநூலாய்ந்துமடைந்தவர்ப்புரந்துந் தடுப்பருங்காலங்களுணர்ந்து
மெரிபசும்பூணாநடத்தொழில்கண்டு மியாழினோரின்னிசைகேட்டும்
விரியிருண்மாலைப்பொழுதெலாமனத்தன் விழாவணிநடத்துதல்போலப்
புரிகுழன்மடவார்கலவியிற்றிளைத்தும் போக்குவர்புரவலர்பொழுதே

(இ-பு,) பகற்பொழுதில் தருமசாஸ்திரங்களை ஆராய்ந்தும் தம்மை
அடைந்தவர்களைக் காப்பாற்றியும் தடுப்பதற்கரியகாலங்களை அறிந்தும்
பிரகாசிக்கும் பொன்னாபரணமணிந்த நடனப் பெண்கள் ஆடும் நடக
த்தைப்பார்த்தும் வீணைவாசிப்பவர்கள் இனிய இசையைக்கேட்டும் இ
ராப்பொழுதில் மன்மதனுக்குத் திருவிழாச்செய்வதுபோல் தங்களுக்கு
ரிய மனைவியரிடத்தில் கலவித்தொழில்புரிந்தும் அரசர்கள் பொழுது
போக்குவார்கள்-எ-று. காலங்களுணர்தல் தனக்கு ஜயம்வரத்தக்க கால
ங்களையறிதல் (உ௮)

இத்திறமவனிபுரந்தவேலிறைவ ரெண்ணிலரெண்ணிலகாலஞ்
சத்திரமொன்றிற்றரைமுழுதாண்டு தமனியநெடும்பரியாள
உத்தமவேள்விக்கனற்றுறைமுடித்திவ் வுருவொழித்தம்பரவ்வானமே
சித்திரவிமானத்தரம்பையரோடும் வாழ்குநர்சிறுவகேளின்னும் (ற

(இ-பு,) இத்தன்மையாகப் பூமியைக்காத்த அனேகம் அரசர்கள் அ
னேககாலம் ஒருகுடையின்கீழ் உலகமுழுவதையும் ஆண்டு பொன்னு
லகமாகியசுவர்க்கத்தை யாள்வதற்காக யாகங்கள்செய்து நிறைவேற்றி இ
வ்வுருவத்தையொழித்துத் தேவர்களாய் வானுலகத்தில் சித்திரவிமான
மேறிச்சென்றரம்பாஸ்திரீகளுடன் இருக்கின்றார்கள் புத்திரனே இன்
னமுஞ் சொல்லுகிறேன்கேள்-எ-று, (உகூ)

அவ்வணநீயுங்கடைப்பிடித்தொழுகி யானடிக்கமலமேயாளுப்
பவ்வநீருலகமுழுவதுந்தனிவெண் பனிமதிக்கவிகைசிற்புரப்பாய்
வெவ்வினையகற்றுஞ்சிவகவசமும்யான் விளம்புகேனுனக்கதுவிரவாத்
தெவ்வினையொறுக்குஞ்சயந்தரும்பாவ மறுத்திடுமென்றசெப்பினனால்

(இ-பு.) அந்தத்தன்மையை நீயுமனங்கொண்டு நடந்து பரமசிவனு
டைய திருவடித்தாமரையே துணையாகச் சமுத்திரஞ்சூழ்ந்தபூலோகமு

முவதையும் ஒப்பில்லாததாய்க் குளிர்ச்சிதங்கிய சந்திரவட்டக் குடை
ன்மேல் ஆளுவாயாக அன்றியும் கொடியவினைகளை நீக்கத்தக்கதான சிவ
கவசமும் உனக்குநான் சொல்லுகிறேன் அந்தச் சிவகவசமானது உன்னை
கூடியிராதபகைகளை அறக்கும் வெற்றியைக்கொடுக்கும் பாவங்களை
க்கிவிடும் என்றுசிவயோகிசொன்னார்-எ-று, (௯

சிவயோகி பத்திராயுவுக்கு அரசியலளித்த அத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௭௱

திருச்சிற்றம்பலம்,

ஞானத்தினால் அறியத்தக்கதான அதிகபரமாகாசமா யிருப்ப
தால் சிற்றம்பலமென்று சொல்லப்படுகின்றது, இதனைச் சிதம்பர பு
ராணத்தில் கண்டுகொள்க.

உ

சிவமயம்,

பன்னிரண்டாவது,

சிவகவசமுரைத்த அத்தியாயம்.

பங்கயத்தவிசின்மேவி யிருந்தபற்றுநீக்கி
யங்குறும்பூதசுத்தி யடைவுடன்செய்தபின்னர்க்
கங்கையைத்தரித்தசென்னிக் கற்பகத்தருவைச்செம்பொற்
கொங்கைவெற்பனையபச்சைக் கொடியொடுமுளத்தின் [illegible]வத்தே

(இ-பு,) பத்மாசனத்திலிருந்து சரீரப்பற்றினையொழித்துப் பூதசு
த்தி கிரமப்படி செய்தபிற்பாடு கங்கையைத்தரித்த திருமுடியுடைய க
ற்பகவிருக்ஷம்போன்ற பரமசிவத்தையும் பொன்மலைபோன்ற தனங்களை
யுடைய பச்சைக்கொடியொத்த பார்வதிதேவியாரையும் மனதில் தியா
னித்து-எ-று, பரமசிவன் அடியார்கள்கேட்கும் வரங்களைத்தருகின்
றாதலால் கற்பகவிருக்ஷமென்றார் பத்மாசனமாவது இரண்டுதொடை
மேலும் இரண்டுஉள்ளங்காலையுமாறித்தோன்றவைத்தல்

அகிலநாயகனுய்ஞான வானந்தரூபியாகித்
தகட்டுருமணுவாய்வெற்பின் றோற்றமாயுயிரையெல்லாந்
தகவுடனவனியாகித் தரிப்பவனெம்மையிந்த
மகிதலமதனிற்றீமை மருவிடாதருளிக்காக்க

(இ-பு,) எல்லாவற்றிற்குந் தலைவனாகியும் ஞானானந்த சொரூபியாகியு
ம் துகளாகிய அணுத்தன்மையாகியும் மலைபோலப் பெரியதாகியும் பூமி
யுமாகித் தகுதியுடன் ஆத்துமகோடிகளைத் தாங்குகின்ற கடவுள் இந்த
உலகத்தில் தீங்குநேரிடாவண்ணம் அருள்செய்து எங்களைக்காக்கக்கட
வர்-ஏ-று, (உ)

குறைபுனலுருவுங்கொண்டு கூழ்தொறும் பயன்கனல்கித்
தரையிடையுயிர்கள்யாவுந் தளர்ந்திடாவண்ணங்காப்போ
னிரைநிரைமுகில்களீண்டி நெடுவரைமுகட்டிற்பெய்ய
விரைபுனலதனுள்வீழ்ந்து விளிந்திடாதெம்மைக்காக்க

(இ-பு,) ஒலிக்கின்ற ஜலரூபங்கொண்டு பயிர்கள்தோறும்பயன்
கொடுத்து இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களெல்லாந் தளர்ச்சியடையாதப
டி காப்பவனாகியகடவுள் வரிசைவரிசையாய்வருகின்ற மேகங்கள்சேர்
ந்து பெரியமலைகளில் மழைபொழியப் பெருக்கெடுத்தோடும் சலத்தில்வி
ழுந்து இறவாதவண்ணம் எங்களைக்காக்கக்கடவர்-எ-று, (௩)

தனடயுகந்தன்னிலெல்லா வுலகமுங்கடவுட்டீயா
லடலைசெய்தரிலைதாள மறைதரநடிக்குமீச
னிடைநெறிவளைதாபத்தி லெறிதருஞ்சறைக்காற்றின்
றடைபடாதெம்மையித்தத் தடங்கடலுலகிற்காக்க

(இ-பு.) யுகத்தின் இறுதியில் எல்லாவுலகத்தையும் தெய்வத் தன்
மையுள்ள தீயினால் சாம்பலாகச்செய்து பார்வதிதேவியார்தாளம்போட
நடனஞ்செய்யும் பரமசிவன மார்க்கத்தின் மத்தியில் வளைத்துக்கொள்
ளும் தீவெப்பத்துடன் வீசுகின்ற சூறைக்காற்றினால் தடைபடாமல் பெ
ரியசமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று, (௪)

தூயநன்மூன்றினோடு சுடரும்பொன்வதனநான்கும்
பயுமான்மழுவினோடும் பகர்வரதாபயங்கண
மேயதின்புயங்களுன்கு மிளிருமின்னனையதேசு
மாயதற்புருடனெம்மைக் குணதிசையதனிற்காக்க

(இ-பு.) பரிசுத்தமுள்ள திரிநேத்திரங்களும் பிரகாசியாநின்றபொ
ன்னிறமுள்ள நான்குதிருமுகங்களும் பாய்கின்ற மான்மழுவினுடன்
சொல்லுகின்ற வரதமும் அபயமும் பொருந்திய திண்ணிய நான்குபுய
ங்களும் விளங்குகின்ற மின்னலையொத்த திருமேனிக்காந்தியுமுள்ளத
ற்புருடமூர்த்தியானவர் கிழக்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று. [௫]
வரதம்-வரங்கள்கொடுக்கிறது, அபயம் அச்சமில்லாமை

மான்மழுசூலந்தோட்டி வனைதருபாசமாலை
கூன்மலியங்குசந்திடு தமருகங்கொண்டசெங்கை

நான்முகமுக்கணில நள்ளிருள்வருணங்கொண்டே
யான்வருமகோரமூர்த்தி தென்றிசைபதனிற்காக்க

(இ-பு.) மான்-மழு-சூலம்-அங்குசம் புனையப்பட்ட உருத்திராக்ஷ
மாலை ஆகிய அங்குசம், டமருகம் என்னுமிவைகளைத் தாங்கியசெ
ங்கைகளும் நான்குதிருமுகங்களும் திரிநேத்திரங்களும் நீலம்போலச்
செறிந்த இருள்நிறமுங்கொண்டு ரிஷபத்தி லேறிவருகின்ற அகோரமூ
ர்த்தியானவர் தெற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று. (௬)

இவண்மயிபக்குமாலை செங்கையோரிரண்டுந்தாங்க
அவிர்தருமிரண்டுசெங்கை வரதத்தோடபயந்தாங்கக்
கவினிறைவதனநான்குங் கண்ணொருமூன்றுங்காட்டுந்
தவளமாமேனிச்சத்தியோ சாதன்மேற்றிசையிற்காக்க

(இ-பு.) தாவுகின்ற மானையும் உருத்திராக்ஷ மாலையையும் இரண்
டு திருக்கரங்கள்தாங்கவும் பிரகாசியாநின்ற இரண்டுதிருக்கரங்கள் அ
பயவரதம்தாங்கவும் அழகுநிறைந்த நான்குமுகங்களும் மூன்றுகண்களு
ம் விளங்குகின்ற வெண்மைநிறமுமுள்ள சத்தியோசாத மூர்த்தியான
வர் மேற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று. (௭)

கறைகெழுமழுவுமானு மபயமுங்கண்ணினும
மறைதருதொடையுஞ்செய்ய வங்கைகணான்குமேந்திப்
பொறைகொணான்முகத்துமுக்கட் பொன்னிறமேனியோடு
மறைபுகழ்வாமதேவன் வடதிசைதனிற்காக்க

(இ-பு.) உதிரந்தோயும்படியான மழுவாயுதத்தையும் மானையும் அ
பயவரதங்களையும் உருத்திராக்ஷமாலையையும் சிவந்தநான்கு திருஅத்த
ங்களிலும் தாங்கிச் சாந்தந்தங்கிய நான்கு திருமுகங்களில் மும்மூன்
றுகண்களும் பொன்னிறமேனியுமுள்ள வேதங்களாற்புகழத்தக்க வாம
தேவமூர்த்தி வடக்குத்திசையிற் காக்கக்கடவர்-எ-று. அபயவரதங்களா
வன-அஞ்சவேண்டுவதில்லை-வரங்கள் தருகிறேமென்று தெரிவிக்குங்கு
றிப்பு-அபயம் வலக்கரம்-வரதம் இடக்கரம். (௮)

அங்குசங்கபாலஞ்சூல மணிவரதாபயங்கள்
சங்குமானபாசமக்கந் தமருகங்கரங்களேந்தித்
திங்களிற்றவளமேனித் திருமுகமைந்துபெற்ற
வெங்களீசானதேவ னிருவிசும்பெங்குங்காக்க

(இ-பு.) அங்குசம் கபாலம் சூலம் அழகிய வரதாபயங்கள் சங்கு
மான் பாசம் ருத்திராக்ஷம் தமருகம் என்றிவைகளைப்பத்துத்திரு
க்கரங்களிலுமேந்தி சந்திரனைப்போல வெண்மைநிறங்கொண்ட திருமே
னியும் ஐந்துதிருமுகங்களும் பெற்றுள்ள எங்கள் ஈசான மூர்த்தியான
வர் பெரிய ஆகாயமெங்கும் காக்கக்கடவர்-எ-று. (௯)

சந்திரமவுலிசென்னி தனிநுதற்கண்ணனெற்றி
மைந்துறுபகன்கண்கொட்டோன் வரிவிழியகிலநாதன்
கொந்துணர்நாசிவேதங் கூறுவோனசெவிகபாலி
பைந்திகழ்செங்கபோலந் தூயவைம்முகன்வதன்முழுதும்

(இ-பு.) சந்திரசேகர மூர்த்தியானவர் எங்கள் சிரசினையும் இப்பற
ற் நெற்றிக்கண்ணையுடையவரான பாலலோசனமூர்த்தியானவர் நெற்றி
யினையும் வலிபொருந்திய பகன் என்னுஞ்சூரியனுடைய கண்ணைப்பறித்
தமூர்த்தியானவர் நீண்டகண்களையும் விசுவநாதரானவர் பூங்கொத்தி
ன் வாசனையை அறிபத்தக்க நாசியினையும் வேதமருளிச்செய்த மூர்த்தி
யானவர் காதுகளையும் கபாலியென்பவர் செவ்விதாகிய கபோலத்தையு
ம் பரிசுத்தமுள்ள பஞ்சானன மூர்த்தியானவர் முகத்தினையும்-எ-று.
அந்தில் அசை. பன்னிரண்டுசூரியரில் பகன் ஒருசூரியன் இச்சூரியன
ன் தக்கன்யாகத்தில் பறிக்கப்பட்டது. (௰)

வளமறைபயிலுநாவ னுமனநீலகண்டன்
களமடுபினாகபாணி கையிணைதருமவாகு
இளர்புயந்தக்கன்யாகங் கொடுத்தவன்மார்புதூய
வொளிதருமேருவில்லி யுதரமன்மதனைக்காய்ந்தோன்

(இ-பு) வளப்பமுள்ள வேதங்களைப் பயில்கின்ற நாவுள்ள மூர்த்
தியானவர் நாவினையும் நீலகண்டமூர்த்தியானவர் கழுத்தினையும் போர்
செய்யத் தக்கபினாகமென்னும் வில்லேந்திய பினாகபாணியானவர் கைக
ளையும் தர்மவீருஎன்பவர் விளங்குகின்ற புயங்களையும் தக்கனுடைய
யாகத்தைஅழித்த மூர்த்தியானவர் மார்பினையும் நல்ல ஒளியைத் தருகி
ன்ற மேருவில்லியென்னு மூர்த்தியானவர் வயிற்றினையும் காமதகனமூ
ர்த்தியானவர்-எ-று. (௰௧)

இடையிபமுகத்தோன்றாதை யுந்திகம்மீசன்மன்னும்
புடைவளராகுபேர மித்திரன்பொருவில்வாமம்
படர்சகதீசன்சானு பாய்தருமிடபகேது
விடைநெறிகணைக்காலேய்ந்த விமலன்செய்பாதங்காக்க

(இ-பு.) இடையினையும் கணபதிபிதாவாகிய மூர்த்தியானவர் நாபி
யினையும் நம்முடைய ஈசுவரனானவர் புடைபரந்த அரையினையும் குபேர
ன்தோழனாகிய மூர்த்தியானவர் ஒப்பில்லாத தொடையினையும் பாந்தச
கதீசன் முழங்காலையும் பாய்கின்ற ரிஷப கேதுவானவர் ரிஷபரூபிப்பொ

அந்த அமானுஷ்ய நிலையில், காரியத்தைக் கருத்தாகக் கொண்ட ஓடமொன்று கடலின் இருளில் மிதக்கும் பைசாசம் போல் வாய்க்கால் வழியே மிதந்து செல்கின்றது.

இந்த ஓசை அந்தத் தோணிக்காரனுக்குக் கேட்டதோ என்னவோ! தோணி கடலின் இதயத்தைக் கிழித்துக் கொண்டே நகருகின்றது.

ஒரு முறை ஓசை எழுந்தபின் சற்று நேரத்திற்கு ஒன்றுமில்லை மீண்டும்...

ஊ!...ஊ!!...

அர்த்த சாமத்தில் அதுவும் கடலைபடுத்துள்ள சூனிய வெளியில், இருளின் கோர ஆட்சிக்குட்பட்ட இடத்திலிருந்து—கொண்ட எமனைக் கண்டு விட்டுத்தான் அந்த ஒலியை நாய் இட்டுக் கொள்கிறதோ என்னவோ?

நிழலை நீட்டி, ஒளியை உமிழ்ந்து துப்பிக் கெட்டு அழுது வடியும் அமங்கிலிப் பெண்ணாக நிற்கும் அந்த மின்சாரக் கம்பத்தை அந்த நாய் தேடி ஓடி வருகிறது. அந்த ஓட்டத்தில்தான் எத்தனை அவசரம்? கம்பத்தை அடுத்த மதகில் முன்னங் கால்களை வைத்துக் கொண்டு மதகுக்குக் கீழே ஒரு முறை பார்த்துக் கொண்டு "வள், வள்" என்று குரைத்துக் கொள்கிறது. அந்தப் பார்வையில் பல வில்லையா? நகர்ந்து கம்பத்துக்கடியில் நின்றபோது அதன் உருவம் துலாம்பரமாகத் தெரிகிறது. நாக்கு, உருண்டு நீண்ட கடவாய்ப் பற்களுக்கிடையே தொங்கும்போது அதிலிருந்து உமிழ் நீர் வழிகிறது. முக்கோணம் போன்று கீழே ஒடுங்கி மேலே அகன்ற அதன் முகத்தில்—பீளை ஒட்டி உலர்ந்து கோரப்படுத்தியிருக்கும் பரிதாபம்! மயிருதிர்ந்து, வரண்ட உடலின் தசையைப் பிடித்துவிட முடியாத புண்கள் விளக்குமுன் தழுவ விளைந்த ஈசல்கள் அந்தப் புண்ணை ரசிக்க முற்படுகையில் உண்டான வேதனையைப் போக்க முன்னங்கால்களைத் தடவிக் கொள்கின்றது பலனில்லை. எட்டிச் செல்கின்றது நாய்...

ஊ...ஊ...

ஊளைச் சப்தம்.

சற்றைக் கெல்லாம் ஓய்வு. மீண்டும் துருதுருவென இருளை நோக்கி ஓடுகின்றது. அந்த ஓட்டத்திற்றான் எத்தனை விரைவு!

கடலில் இன்னொரு வள்ளம் ஓடும்போது, யாரோ கனைக்கும் ஒலி நிலவும்போது "வள், என்று குரைத்துக் கொள்கிறது.

சே! அதன் ஆத்திரமும் பதட்டமும் ஓய்ந்து விடப் போவதில்லையா? பாலத்தின் மீது கடந்து கொள்வதும், அப்பால் செல்வதுமாக அலையும்போது "கொக்...கொக்" என்று ஒரு கத்து கத்திக் குரல் எழுப்புகின்றது.

நாய் சற்று முன்னங்கால்களை நீட்டி அப்படியே சற்றுப் படுத்துக் கொள்கிறது. உறக்கமற்ற நோயாளி போன்று அதனால் கிடக்க முடியவில்லை.

கடலின் அலைகள் காற்று உந்துவதனால் ஓலமிடுகின்றன. அந்த ஓலத்தில் உலகத்தின் துன்பங்கள் அனைத்தும் தொனிப்பது போன்ற நிலை.

மதகினைத் தொட்டுச் செல்லும் சுவர்க்கட்டில் ஏறி அந்த நாய் சற்று ஓடிச் சென்று, கீழே கவனித்துக் கொள்கின்றபோது... அந்தப் பீளை சாறிய கண்களில் தீவிரமான ஒளி கிடைக்கின்றதா?

"வள், வள்" அங்கேயே நின்று கொண்டது. அதன் குரலில் தீனமான சாயல் இருந்தும் இலட்சியத்தை அடைந்து விட்டது போன்ற நம்பிக்கை. கீழே பார்ப்பதும், எட்ட அந்த விளக்குக் கம்பத்தைப் பார்ப்பதுமாக அது தன் நேரத்தைக் கழித்துக் கொள்கிறது.

"கொக்கரோ...கொக்..."

தூரத்தில் சிறகடித்துக் கூவும் கோழி விழித்து விட்டது.

"டாண், டாண்!"

கடலை அடுத்திருந்த மாதா கோவிலின் மணி உலகத்தைப் பார்த்து, 'எழுந்திரு' என்று சொல்லிக் கொள்கிற போது, அங்கும் இங்கும் கடலில் ஆட்களின் அரவம்.

"கா, கா" காகங்கள் கரைகின்றன.

இருளென்ற கருந்திரையை நீக்கிக்கொண்டு தன் பிரிவால் உலகம் அதுவரை பட்டபாட்டை இரசிக்க விரும்புபவன் போல் கீழ் வானக் கோடியில் சூரியன் உதயமானான். அவனின் வரவிலே தான் எத்தகைய மகிழ்ச்சி? உயிரிருந்தும் பிணம் போல் கட்டுண்டு கிடந்த சடலங்களின் இயக்கம் ஆரம்பித்து விட்டது. எங்கும் எதிலும் ஒரு பிடிப்பு. ஒரு துடிப்பு. அதோ அந்த இடம் இருளின் கோரத்திற் கிடையில் சிக்கித் ததும்பிச் செயலிழந்து கிடந்ததே! அதில்கூட உயிர்த்துவம் குடிகொள்ளத் தொடங்கி விட்டதா? ஓடக்காரர்கள் கரையடைகின்றனர். ஆழ்ந்த சமுத்திரத்தில் இரவு முழுதும் தனிமையில் உழன்ற அவர்களுக்கு வெளியுலகத்தைக் காணும்போது எவ்வளவு பெருமிதம் அவர்கள் முகத்தில்!

அந்த வேளையில் அந்தக் கடற்கரையைக் கப்பிய அரவத்தை எடுத்தெறிந்து விடக்கூடிய முறையில் மதகில் நின்று கொண்டு கீழே பார்த்துப் பார்த்துக் கொண்டு குரைக்கிறது அந்த நாய்.

"அட அண்டே, அதென்ன சப்தம்......? நாய் ஒன்று குரைக்கிறதும் கீழே பார்ப்பதுமாக இருக்கிறதே! அது என்ன?"

"ஓமடா தம்பி, நான் விடியப்புறம் இதாலே கடலுக்கு வரக்குள்ளேயும் அந்த நாய் குரைத்துக் கொண்டிருந்தது. ஒரே சத்தமாக இரவு இரவாகக் குலைக்கிறது."

சம்பாஷணை செய்து கொண்டிருந்தவர்களின் கவனம் அந்த நாயின் திசையை நோக்கித் திரும்பின......

அந்த நாய் கடலை எட்டிப் பார்ப்பதும், மீண்டும் வானத்தைப் பார்ப்பதுமாகக் குரைத்துக்கொண்டே யிருக்கிறதே யொழிய அதற்கு வேறு எந்தக் கவனமும் இருப்பதாகத் தெரியவில்லை.

கருணையும் கொண்டுள்ள எனக்கு அவர் கிடைக்காமல் போய் விடுவாரா? என் வழிபாடு வீணாகி விடுமா? என்னைப்போல் பெண்ணாகிய நீ உன்னுடைய தூய அன்பினால் கடவுளையே மணாளனாகப் பெற்ற போது நான் மட்டும் அவரை அடைய முடியாமல் போய் விடுமா! தேவி! என் கண்கள்தான் இருட்டாகி விட்டன; என் எண்ணங்களையும் இருட்டாக்கி விடாதீர்கள். அதுதான் எனக்கு ஜீவன்....

நான் நினைப்பது சரியோ? தவறோ? எனக்கு அவர்தான் வேண்டும். சில சமயங்களில் என்னிடம் தணிகாசலம் பேச நேருகின்ற போதெல்லாம் கூட 'கேவலம் குருட்டு பெண்தானே' என்ற நினைப்பில்லாமல் எவ்வளவு மரியாதை கொடுக்கிறார், தெரியுமா? அந்த மரியாதையை வாழ்நாள் முழுவதிலும் அவர் எனக்குத் தருவதையே விரும்புகிறேன். இலட்சியங்களை உணர்ச்சிகளால் தோற்கடிக்க முடியாது. அவர் லட்சிய மனிதர்...கண் இல்லாத ஒரே காரணத்திற்காக என் பெண்மை வீணாகி விடக்கூடாது' என்பதற்காக நான் அவரை ஒருபோதும் வேண்டவில்லை. நான் அவரை வழிபடுகிறேன்; மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். தாயே! நீ வழிபட உனக்கு கண்ணன் கிடைத்து விட்டான்; நான் வழிபாடு செய்ய எனக்கு ஒரு தெய்வம் வேண்டுமல்லவா? அத்தெய்வம் யார் தெரியுமா? தணிகாசலம்...''

என் கண்களில் நீர் பெருகியது. குருடி என்று எண்ணுவதிலேயே அவள் வெறும் மனிதக் கட்டையாகத் தோன்றினாள்; ஆனால் அவள்...உயர்ந்த தத்துவப் பொருள்; இலட்சியப் படைப்பு. கண்கள் இல்லாமல் எத்தகைய புனிதமான காட்சியை, எண்ணங்களினாலேயே காணுகிறாள் கல்யாணி.

'காதல் என்பது ஓர் பரிபூரணமான தூய்மையான அன்பு என்றாலும் வாழ்க்கையின் அடிப்படையில் சிறிதளவாவது உணர்ச்சியைக் கொள்ளாமல் இருப்பதில்லை. சீ இந்த கீழ்த்தரமான எண்ணம் எனக்கு ஏன் எழுந்தது? தெய்வத்தின் மதிப்பிற்கு என்னை உயர்வாக எண்ணி வழிபடும் கல்யாணியின் புனித அன்பை பெறாமல் இத்தகைய கேவலமான உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதா?

'கல்யாணி. உன்னை மனப்பூர்வமாக காதலிக்கிறேன். நீ என் காதலி அல்ல. என் கண்களைத் திறந்த தெய்வம்'—என்னுள் ஓர் ஒளி பிரகாசித்தது.

சாந்திக்கு கண்கள் இருக்கின்றன; ஆனால் அவளை இருட்டையே காணுகிறாள். கல்யாணிக்கு விழிகள் இல்லை. அவள், அருள் வழியும் ஒளியைக் காணுகிறாள். இந்த முடிவுக்குப் பிறகும் என் மனதில் வேறொரு கேள்வி எழுந்தது.

'குருடியை காதலிக்க முடியுமா? குருடியால் காதலிக்க முடியுமா? என்னும் வேதாந்த தர்க்கப் பிரச்னைகளுக்கு நான் தீர்வுகண்டு பிடித்துக் கொண்டிருக்கவில்லை. தூய்மையான அன்பு இந்த விதமான தர்க்கத்திற்கு அப்பால் உண்டாகிறது என்றே தோன்றியது.

வள்ளுவரும் குறளும்

தமிழ்வேந்தன்

★

குறள் நூலின் அமைப்பு :

திருவள்ளுவருடைய குறள் நூல் மிகச் சிறியது. மிக அரிய அதிக விடயங்களை (விஷயங்களை) வரையறைப் படுத்தி சுருக்கமாகக் கூறுகின்ற நூல் குறள். ஒரு பொருளின் இலக்கணத்தைக் கூறுதலும்; அவற்றின் இன்றியமையாமையை விளக்குதலும்; அதனால் பெறப்படும் பயனை அறிவுறுத்தலும்; நாம் மேற் கொள்ளுதற்குரிய தந்திரத்தை உரைத்தலும்; உலகின் கண் உள்ள பொருள்களின் வாயிலாக உண்மையை நிருபித்தலும்; உவமைகளாலும்; உதாரணங்களாலும் பொருளைப் புலப்படுத்தலும் வள்ளுவரின் வழக்கங்களிற் சில.

மக்கள் விலக்க வேண்டிய வற்றை எதிர்மறை முகத்தால் கூறுதல் இவர் இயல்பு. புலவர்கள் ஒரு நீதியை உடம்பாட்டு முகத்தாலும், மறைமுகத்தாலும் புலப்படுத்துவர் என்பதும், ஒரு நீதிக்கு மற்றொரு நீதியை உவமையாக வைத்து இரண்டையும் வற்புறுத்துவர் என்பதும் அறிஞர்களின் கருத்து. சுருங்கக் கூறின் இது வாழக் கற்றுக் கொடுக்கும் ஒரு பெருநூல்.

குறளின் சிறப்புக்கள் :

ஏனைய பல தமிழ் நூற்களிற் காணப்படாத பல சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைத் தெற்றெனக் கூறிய பல நூல்களில் திருக்குறளுக்கு இணையான வேறொரு நூல் இல்லையென்பது உறுதி. சங்கம் மருவிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்கணக்கு என்பனவற்றுள் திருக்குறளைப் போன்ற வேறொரு நூல் இல்லை. அதுவும் குறட்பாவில் அமைந்ததும் இல்லை. மேலும், குறள் ஒரு ஒழுக்க நூலாகும். காமத்துப் பாலில் சிற்றின்பத்தைத் தூண்டக் கூடிய சொற்கள் காணப்படாமையாலும், பரத்தையின் பிரிவை மிகைப்படுத்திக் கூறாமையாலும் குறள் ஒரு ஒழுக்க நூல் என்பது நன்கு புலப்படும். தொல்காப்பியம் மொழியை முன் வைத்தும், சிலப்பதிகாரம் நாட்டை முன் வைத்தும் எழுதப்பட்டதாகும். குறளோ உலக மக்களை முன்வைத்து எழுதப்பட்டதாகும்.

திருக்குறளுக்கு உரையீன்றவர்கள் :

திருக்குறளுக்கு உரையீன்றதாக ஒரு தனிப்பாடல் கூறுகின்றது. அப் பாடலை ஈண்டு காண்போம்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேலழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லை யுரை கண்டாரிவர்."

—என்பதே அப்பாடல். அப்பதின்மர்களுடைய உரைகளும் இக் காலத்தே கிடைக்கவில்லை. இப்போதுள்ள உரைகளில் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது.

நான்முகமுக்கணில நள்ளிருள்வருணங்கொண்டே
யான்வருமகோரமூர்த்தி தென்றிசையதனிற்காக்க

(இ-பு) மான்-மழு-சூலம்-அங்குசம் புனையப்பட்ட உருத்திராக்ஷமாலை யெனாகிய அங்குசம்,டமருகம் என்னு மிவைகளைத் தாங்கியசெங்கைகளும் நான்குதிருமுகங்களும் திரிநேத்திரங்களும் நீலம்போலச்செறிந்த இருள்நிறமுங்கொண்டு ரிஷபத்தி லேறிவருகின்ற அகோரமூர்த்தியானவர் தெற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று. [௬]

இலண்மழுவியக்கமாலை செங்கையோரிரண்டுந்தாங்க
அவிர்தருமிரண்டுசெங்கை வரதத்தோடபயந்தாங்கக்
கவினிறைவதனநான்கும் கண்ணொருமூன்றுங்காட்டுந்
தவளமாமேனிச்சத்தியோ சாதன்மேற்றிசையிற்காக்க

(இ-பு) தாவுகின்ற மானையும் உருத்திராக்ஷ மாலையினையும் இரண்டு திருக்கரங்கள் தாங்கவும் பிரகாசியாநின்ற இரண்டுதிருக்கரங்கள் அபயவரதம் தாங்கவும் அழகுநிறைந்த நான்குமுகங்களும் மூன்றுகண்களும் விளங்குகின்ற வெண்மைநிறமுமுள்ள சத்தியோசாத மூர்த்தியானவர் மேற்குத்திசையில் எம்மைக்காக்கக்கடவர்-எ-று. (௭)

கறைசெழுமழுவுமானு மபயமுங்கண்ணிலும
மறைதருங்கொண்டயுஞ்செய்ய வங்கைகணான்குமேந்திப்
பொறைகொணான்முகத்துமுக்கட் பொன்னிறமேனியோடு
மறைபுகழ்வாமதேவன் வடதிசையதனிற்காக்க

(இ-பு) உதிரந்தோயும் படியான மழுவாயுதத்தையும் மானையும் அபயவரதங்களையும் உருத்திராக்ஷமாலையினையும் சிவந்தநான்கு திருக்கரங்களிலும் தாங்கிச் சாந்தந்தங்கிய நான்கு திருமுகங்களினும் மும்மூன்றுகண்களும் பொன்னிறமேனியுமுள்ள வேதங்களாற்புகழப்படுக்க வாமதேவமூர்த்தி வடக்குத்திசையிற் காக்கக்கடவர்-எ-று, அபயவரதங்களாவன-அஞ்சவேண்டுவதில்லை-வரங்கள் தருகிறேமென்று தெரிவிக்குங்குறிப்பு-அபயம் வலக்கரம்-வரதம் இடக்கரம். (௮)

அங்குசங்கபாலஞ்சூல மணிவரதாபயங்கள்
சங்குமானபாசமக்கர் டமருகங்கரங்களேந்தித்
திங்களிற்றவளமேனித் திருமுகமைந்தும்பெற்ற
வெங்களீசானதேவ னிருவிசும்பெங்குங்காக்க

(இ-பு) அங்குசம் கபாலஞ் சூலம் அழகிய வரதாபயங்கள் சங்கம் மான் பாசம் ருத்திராக்ஷம் டமருகம் என்னுமிவைகளைப்பத்துத்திருக்கரங்களிலுமேந்தி சந்திரனைப்போல வெண்மைநிறங்கொண்ட திருமேனியும் ஐந்துதிருமுகங்களும் பெற்றுள்ள எங்கள் ஈசான மூர்த்தியானவர் பெரிய ஆகாயமெங்கும் காக்கக்கடவர்-எ-று. (௯)

சந்திரமவுலிசென்னி தனிநுதற்கண்ணைநெற்றி
மைந்துறுபகன்கண்கொட்டோன வரிவிழியிலநாதன்
கொந்துணர்நாசிவேதங் கூறுவோனசெவிகபாலி
பைந்திலசெங்கபோலந்தூய வாய்முகன்வதன்முழுதும்

(இ-பு) சந்திரசேகர மூர்த்தியானவர் எங்கள் சிரசினையும் தீப்பற்றுநெற்றிக்கண்ணையுடையவரான பாலலோசனமூர்த்தியானவர் நெற்றியினையும் வலிபொருந்திய பகன் என்னுஞ்சூரியனுடைய கண்ணைப்பறித்தமூர்த்தியானவர் நீண்டகண்களையும் விசுவநாதரானவர் பூங்கொத்தின் வாசனையை அறிபத்தக்க நாசியினையும் வேதமருளிச்செய்த மூர்த்தியானவர் காதுகளையும் கபாலியென்பவர் செவ்விதாகிய கபோலத்தையும் பரிசுத்தமுள்ள பஞ்சானன மூர்த்தியானவர் முகத்தினையும்-எ-று. அந்தில் அசை. பன்னிரண்டுசூரியரில் பகன் ஒருசூரியன் இச்சூரியன் கண் தக்கன்யாகத்தில் பறிக்கப்பட்டது. (௰)

வளமறைபயிலுநாவ னுமணிநீலகண்டன்
களமடுபினாகபாணி கையிணைதருமவாகு
இளர்புயந்தக்கன்யாகங் கொடுத்தவன்மார்புதூய
வொளிதருமேருவில்லி யுதரமன்மதனைக்காய்ந்தோன்

(இ-பு) வளப்பமுள்ள வேதங்களைப் பயில்கின்ற நாவுள்ள மூர்த்தியானவர் நாவினையும் நீலகண்டமூர்த்தியானவர் கழுத்தினையும் போர்செய்யத் தக்கபினாகமென்னும் வில்லேந்திய பினாகபாணியானவர் கைகளையும் தர்மவிருஷனென்பவர் விளங்குகின்ற புயங்களையும் தக்கனுடைய யாகத்தைஅழித்த மூர்த்தியானவர் மார்பினையும் நல்ல ஒளியைத்தருகின்ற மேருவில்லியென்னு மூர்த்தியானவர் வயிற்றினையும் காமதகனமூர்த்தியானவர்-எ-று. (௰௧)

இடையிபமுகத்தோன்றுதை யுந்திகம்மீசன்மன்னும்
புடைவளரரைகுபேர மித்திரன்பொருவில்வாமம்
படர்சகதீசன்சானு பாய்தருமிடபகேது
விடைநெறிகணைக்காலேய்ந்த விமலன்செய்பாதங்காக்க

(இ-பு) இடையினையும் கணபதிபிதாவாகிய மூர்த்தியானவர் நாபியினையும் நம்முடைய ஈசுவரனானவர் புடைபரந்த அரையினையும் குபேரமித்திரனானவர் ஒப்பில்லாத தொடையினையும் பாந்தசன்தோழனாகிய மூர்த்தியானவர் முழங்கால்களையும் பாய்கின்ற ரிஷப கேதுவானவர் ரிஷபமூர்த்திப்பொகதீசன் முழங்காலையும்

த்த சுணக்காலையும் பொருந்திய விமலமூர்த்தியானவர் செவ்வியபாதத்தையுந் தனித்தனி காக்கக்கடவர்கள்-எ-று. (௰௨)

வருபவன்முதல்யாமத்து மகேசன்பின்னிரண்டாம்யாமம்
பொருவருவாமதேவன் புகன்றிடுமூன்றும்யாமஞ்
செருமலிமழுவாள்கைத் திரியம்பகனுலாம்யாமம்
பெருவலியிடபவூர்தி பிணியறவினிதுகாக்க

(இ-பு) வேதங்களில் வழங்கப்படுகிற பகவன் என்னும் திருப்பெயருள்ள மூர்த்தியானவர் முதற்சாமத்திலும், மகேசுரன் பின்னிரண்டாஞ்சாமத்தும், ஒப்பில்லாதவாமதேவர் மூன்றாஞ்சாமத்தும், போருக்கேற்றமழுவாயுதமேந்திய திருக்கரத்தையுடைய திரியம்பகர் நாலாஞ்சாமத்தும், மிகுந்த சீரவன்மையைப் பிணியால் சோர்வுறாதபடி ரிஷபவாகனமூர்த்தியானவருமாகத் தனித்தனி காக்கக்கடவர்கள்-எ-று. (௰௩)

கங்குலின்முதலியாமத்துக் கலைமதிமுடித்தோன்காக்க
தங்கியவிரண்டாமியாமஞ் சானவிதரித்தோனகாக்க
பொங்கியமூன்றும்யாமம் [illegible]ரிசடையண்ணல்காக்க
பங்கமிலுலாம்யாமங் க[illegible]ரித்[illegible]பதியேகாக்க

(இ-பு.) இராத்திரியின் முதற்சாமத்தில் சலாதரமூர்த்தி காக்கக்கடவர் இரண்டாஞ்சாமத்தில் கங்காதரமூர்த்தி காக்கக்கடவர், மூன்றாஞ்சாமத்தில் சடாமகுடமூர்த்தியானவர் காக்கக்கடவர். கெடுதலில்லாதநாலாஞ்சாமத்தில் உமாபதிகாக்கக்கடவர்-எ-று. (௰௪)

அனைத்துளகாலமெல்லா மந்தகற்கடிந்தோனுள்ளுந்
தனிப்பெருமுதலாயுள்ள சங்கரன்புறமுந்தாணு
வனப்புறநடுவுந்தூய பசுபதிமற்றுமெங்கு
நினைத்திடற்கரியதொன்மைச் சதாசிவநிமலன்காக்க

(இ-பு.) எல்லாக்காலங்களிலுங் காலசங்காரமூர்த்தியும் உட்புறத்தில் ஒப்பற்ற முதற்காரண கர்த்தாவாகிய சங்கரமூர்த்தியும் வெளிப்புறத்து ஸ்தாணுமூர்த்தியும் நடுப்புறத்துத்தூயபசுபதியும் மற்றவிடமெங்கும் நினைப்பதற்கரிய சதாசிவமூர்த்தியுமாகத்தனித்தனிகாக்கக்கடவர்கள்-எ-று. (௰௫)

நிற்புழிபுவனநாத னேகுழிநிமலன்மேனி
பொற்புறமாதிநாத னிருப்புழிபொருவிலாத
வற்புதவேதவேத்தி யனுந்துயில்கொள்ளும[illegible]நகண்
டற்பாசிவன்விழிக்கிற் சாமளருத்திரன்காக்க

(இ-பு.) நிற்குமிடத்துப் புவனநாதரும் நடக்குமிடத்து நிர்மலமூர்த்தியும் சரீரத்தின அழகினை ஆதிமூர்த்தியும் இருக்குமிடத்து ஒப்பில்லாத அற்புதமூர்த்தியாகிய வேதவேத்தியனும் நித்திரைசெய்யுமிடத்து தற்பரசிவனும் விழிக்கும்போது சாமளருத்திரனுமாகத் தனித்தனிகாக்கக்கடவர்கள்-எ-று. (௰௬)

மலைமுதற்றுருக்கந்தன்னிற் புராரிகாத்திடுகமன்னுஞ்
சிலைமலிவேடரூபன் செறிந்தகானகத்திற்காக்க
கொலையமர்கற்பத்தண்ட கோடிகள்குலுங்கநக்குப்
பலபடநடிக்கும்வீர பத்திரன்முழுதுங்காக்க

(இ-பு.) மலைமுதலாகிய துருக்கங்களில் புராரிகாக்கக்கடவர், காட்டினிடத்தில் வில்லேந்திய வேடரூபமூர்த்தியானவர் நீங்காமலிருந்து காக்கக்கடவர் சர்வசங்கார முண்டாகும் கற்பகாலத்தில் அண்டகோடிகளெல்லாம் நடுங்கும்படி நடனஞ்செய்கின்ற வீரபத்திரரானவர் முழுவதுங் காக்கக்கடவர்-எ-று. (௰௭)

பல்லுளைப்புரவித்திண்டேர் படுமதக்களிறுபாய்மா
வில்லுடைப்பதாதிதொக்கு மீண்டிடுமெண்ணில்கோடி
கொல்லியன்மாலைவேற் [illegible]குறுகுங்காலை
வல்லியோங்பாகன்செய்கை மழுப்படைதுணித்துமாய்க்க

(இ-பு,) கழுத்துமயிரினையுடைய குதிரைகள்கட்டிய பலதேர்களும் மதநீரொழுகும்யானைகள் தாவிச்செல்லுங்குதிரைகள் வில்லேந்தியபதாதிகளென்னுமிவைகள்சேர்ந்து நெருங்கிய அளவில்லாதவர்களாய்ப்போரில்வெற்றிமாலையணிந்த கூர்மையான கொலைவேலுள்ள பகைவர்கள் போருக்குவந்தகாலத்தில் அவர்களைப் பார்வதிபாகன் திருக்கரத்திலிருக்கும் மழுவாயுதம் துணித்துக் காக்கக்கடவது-எ-று. (௰௮)

தத்துநீர்ப்புணரியாடைத் தரணியைச்சுமந்துமானப்
[illegible]பத்தலைநெடியபாந்தள் பஃறலையனைத்துந்தேய்ந்து
முத்தலைபடைத்ததொக்கு மூரிவெங்கனற்றோள்சூலம்
பொய்த்தொழிற்கள்வர்தம்மைப் பொருதழித்தினி[illegible]

(இ-பு.) படமாகிய தலையையுடைய பெரிய ஆதிசேஷன் தாவுகின்ற சமுத்திரமாகிய ஆடை உடுத்தபூமியைத்தாங்கி பலதலைகள் நீரையுடைய சமுத்திரமாகிய ஆடை... பலதலைகளையுடைய தேய்ந்து மூன்றுதலைபடைத்ததையொக்கும் பலமும் வெவ்விய நெருப்பும் கொண்ட சூலமானது பொய்த்தொழிலையுடைய கள்வர்களைப் போர்புரிந்து அழித்து இனிதாகக் காக்கக்கடவது-எ-று, சூலாயுதங் காக்கக்கடவதென முடித்துக்கொள்க (௰௯)

[illegible]டங்குளைமுதலாய்நின்ற முழுவலிக்கொடி[illegible]க்க
[illegible]டங்களும்பிணிகங்கொல்க வென்றிகைவபனைத்துமுள்ளந்

இடர்படவினைத்துபாவந் தெறுஞ்சிவகவசந்தன்னை
புடன்படத்தரிப்பையானு லுலப்பொருகுவவுத்தோளாய்

(இ-பு,) திரண்ட கல்லைபொத்துக் குவிந்த தோளையுடையவனே சி
ங்கம் ஆதியாயிருக்கும் மிகுந்தபலமுள்ள கொடிய மிருகங்களெல்
லாம் பிணைகர் ணைநிறவில்லானது கொல்லக்கடவது என்றிவ்வாறு எல்
லாவற்றையும் இருதயத்தில் உறுதிகொள்ளத் தியானித்துப் பாவங்களை
வெல்லும் * சிவகவசத்தைத்தரித்துக்கொள்வையானால் * விபூதி-எ-று. (

(வேறு,)

பஞ்சபாதகங்கள்போம் பகைகண்மாய்ந்திடு
மஞ்சலின்மறலியு மஞ்சியாட்செயும்
வஞ்சநோயொழிந்திடும் வறுமைதீர்ந்திடுந்
தஞ்சமென்றிதனைநீ தரித்தல்வேண்டுமால்

(இ-பு,) பஞ்சமாபாதகங்கள்நீங்கும் பகைவர்கெட்டுப்போவார்கள் ரு
க்குப் பயப்படாத யமனும் உனக்குப்பயந்து பணிவிடை செய்வான்கொ
டிய வியாதிகளுந்தீர்ந்துவிடும் தரித்திரந்தொலையும் ஆதலால் இதுவே
டக்காதாரமென்று நீதரித்துக்கொள்ளவேண்டும்-எ-று, (உக)

னைபிறைசுவ [illegible] யல்லியம்பிறை
ன்னறுமாதவ னயந்துபின்னரும்
வன்றிறற்புரிவடி வாளுந்தெவ்வரை
வென்றிகொள்சங்கமும் விருப்பினல்கியே

(இ-பு.) இவ்வாறு சிவகவசத்தின தன்மையைச்சொல்லி நன்மார்க்
மூணர்ந்த அந்தச்சிவயோகியானவர் பின்னும் ராசபுத்திரனிடத்தில் தி
ருவைப் வைத்து யுத்தமுகத்தில் மிகுந்தபராக்கிரமஞ் செய்யத்தக்க வடி
வாளும் பகைவரை ஜயங்கொள்ளுகின்ற சங்கமும் விருப்பத்துடன்
கொடுத்து-எ-று. (உஉ)

கடவுணீறவனுடல் கவினச்சாற்றியே
யடுசரிபன்னிரண் டாயிரத்துடை
வலியளித்து நீநீடுவாழ்கென
வடுவறவாழ்த்தியே வழிகொண்டானரோ

(இ-பு.) தெய்வத்தன்மையுள்ள விபூதியை அவன்சரீரத்தில் அழகு
பெறத்தரித்துப் பன்னிராயிரம்யானை பலமுங்கொடுத்த நீநெடுங்காலம்
தீர்க்காயுவுள்ளவனாய் வாழ்க்கடவையென்று நன்றாக ஆசிர்வதித்துப் போ
ய்விட்டார்-எ-று, (உ௩)

பன்னிரண்டாவது-சிவகவசமுரைத்த-அத்தியாயம்
முற்றிற்று,
ஆ- திருவிருத்தம்-௭௱௨௩.

உ

சிவமயம்.

பதின்மூன்றாவது.

பத்திராயுவின் கதையுரைத்த அத்தியாயம்.

ஈதுவீறுயர் சிவகவசத் தியல்பென்ன
வேதவேள்விசெய் முனிவரர்யாவர்க்கும் விளம்பிக்
காதுவென்றிவேற் பத்திராயுவின் கதைதன்னிற்
சூதமாமுனிபின்னரு மொருகதைசொன்னான்

(இ-பு,) சிவகவசத்தின் [illegible]மை யிப்படிக்கொத்தசென்று வேதவி
திப்படி யாகஞ்செய்கின்ற முனிவர்களுக்குச்சொல்லிப்பின்னும் பகைவ
ரைக் கொல்லத்தக்க வெற்றிவேலையுடைய பத்திராயுவின் சரித்திரங்களி
ல் ஒருசரித்திரஞ் சூதமுனிசொல்லுகின்றார்-எ-று, (க)

வணிகமைந்தனு மன்னவன்சிறுவனு [illegible]
பிணிபுனைந்தபொரீஇ மனையொடுந்தலைப்பிரித்த
வணிகொள்வச்சிர வாகுவின்குலப்பகையான
திணிதடம்புய னளப்பருஞ்செறிகடற் படையோன்

(இ-பு.) வணிகனுடைய புத்திரனும் ராசபுத்திரனும் வளருங்காலி
ல் தன்மனைவிக்கும் புத்திரனுக்குங் கண்டிருந்த வியாதியினால் அவர்க
ளிடத்தில் விருப்பம்நீங்கிக் காட்டுக்கு அனுப்பிவிட்ட வச்சிரவாகுவெ
ன்னும் அரசனுக்குக் குலப்பகையாகிய மிகுந்த புசபலமுள்ளவனும் அ
ளவிடுதற்கரிய சேனாசமுத்திரத்தை யுடையவனுமானவன் (உ)

மத்தேரினு னெனும்பெயர்மகதர்கோ னெழுந்து
சேமத்தேர்பதி னாயிரஞ்சூழ்வரச் சென்று
வாமத்திண்சிலை வச்சிரவாகுவென் றண்ணனு
நாமத்தோளினு னசானன்றுகொள்வது சமைந்தான்

(இ-பு,) பதினாயிரம் சேமத்தேர்கள் சூழ்ந்துவருமபடி புறப்பட்டு
ப்போய் அழகும்பலமுமுள்ள வில்லேந்திய வாமத்தேரினன் என்னும் பெ
யருள்ள மகததேசாதிபதியானவன மாலையணிந்த தோளையுடைய வச்
சிரவாகுவினது தசானன மென்னும பதியை யபகரித்துக்கொள்ள எண்
ணங்கொண்டான்-எ-று, (௩)

வதிகடோறுநின் றுறலைப்படுத்தியுர்வாவிக்
குதிகொள்கன்றினந் துயருறவானிலைகொண்டும்
பதிகடோறும்வெங் கனலெரிபரப்பியும்பனிவான்
மதியுலாவரு புரிசையவளைந்தனன்மறவோன்

(இ-பு,) அவ்வாறு எண்ணங்கொண்ட மகததேசாதிபதி மார்க்கங்கள்தோறுமிருந்து வழிநடக்கும் அத்தேசத்தாரை அடித்துப் பறித்தும் தாவிக்குதித்துச்செல்லுங் கன்றுகள் துன்பமுறும்படி பசுமந்தைகளை பகரித்தும் ஊர்களையெல்லாந் தீயினால் கொளுத்திவிட்டும் குளிர்ச்சியும் வெண்மைநிறமுமுள்ள சந்திரமண்டலத்தை அளாவுகின்ற மதிலைவளைந்துகொண்டான்-எ-று. (௪)

வேறு.

மாறுசெய்மன்னன்வந்து வளைந்தான்மதிலென்னச்
சீறியமன்னனவச்சிர வாகுசெரு—
வீறுடைமன்னுந்தோ ளிணையுண்டாம்விறலுண்டாம்
பாறுகடுன்னுங்கூ ரயிலுண்டாம்பகையுண்டோ

(இ-பு,) பகைகொண்ட மகததேசத்தான்வந்து மதிலை வளைத்துக்கொண்டான் என்பதைக்கேட்ட வச்சிரவாகுஎன்னும் அரசன் கோபங்கொண்டு யுத்தஞ்செய்யவிருப்பங்கொண்டு விருப்பமுற்று நம்முடையஇரண்டுதோள்களும் துணையாயிருக்கின்றன பராக்கிரமும் உண்டாயிருக்கின்றது - பருந்துகள்கண்டுவந்து மேலேசூழத்தக்க கூர்மையுள்ள வேலாயுதமுண்டாயிருக்கின்றது. நமக்குப் பகைவரு முண்டோ-எ-று, (௫)

என்னவுரைத்தாய் கேறினனற்றேரேறுமுன்
துன்னினகொற்றஞ் சேர்படைவெற்றந்தொலையாத
மன்னரெதிர்த்தஞ் சாரணிமுற்றும்மடிவெய்த
வந்திலைமைக்கண்டே வர்வியக்குமமர்செய்தான்

(இ-பு,) இவ்வாறுசொல்லி நல்லதேரிலேறினான் அப்படிபேறுவதற்குமுன்னேவெற்றியுள்ளபடைகளும்வந்துசூழ்ந்தன அழியாதவெற்றியையுடைய அரசர்களாகிய எதிர்த்தபகைவருடைய சேனைவகுப்பெல்லாம் மடியும்படி தேவர்களுங்கண்டு ஆச்சரியப்பட யுத்தஞ்செய்தான்-எ-று,

திண்டிறல்வேலன்செய்த கொடுமபோர்த்திறனெல்லாங்
கண்டுபொறுதேன் றிருகண்ணுநகனல்பொங்க
வண்டமர்தாரோ னேமாதன்போர்வயவேந்தன்
புண்டருவேலான் செங்களமஞ்சப்போர்செய்தான்

(இ-பு.) மிகுந்தபலம்பொருந்திய வேலாயுதத்தையுடைய வச்சிரவாகுசெய்த கொடிதானசண்டைத்திறத்தையெல்லாங்கண்டு மனம்பொறாமல் தன்னிருகண்களிலும் தீப்பொறிபொங்க வண்டுகள்பொருந்தியமாலையணிந்திருக்கும் எமாதனென்னும்வெற்றியுள்ள அரசனானவன் பகைவருடையஉடலில் புண்செய்யத்தக்கவேலையுடைய வச்சிரவாகுவினபோர்க்களம் அஞ்சும்படியுத்தஞ்செய்தான-எ-று, (எ)

மாறுடுமன்னரோ ரிருவோருமறமொன்றிச்
சீறினர்தீயின்கண்கள் சிவந்தார்சிலைநாண்மே
லூறுடுநூறம்பு தொடுத்தார் நொடியின்று
மேறியதிண்டேர்முட்ட விடுத்தா ரிசல்செய்தார்

(இ-பு,) அவ்விருமன்னவரும் பகையுடன் கோபங்கொண்டு சீறிக் கண்கள் தீப்போலச்சிவந்துவில்லின்நாணில்வைத்து ஒவ்வொருதரத்துக்கு நூறுநூறுகப் பாணங்களைவிட்டு நொடிப்பொழுதில் தாங்கள் ஏறிக்கொண்டிருக்கிற தேர்கள் ஒன்றுடனொன்று முட்டவிட்டுப் போர்செய்தார்கள்-எ-று, (அ)

ஆயிரமம்போரொருவன் விடுக்கவனவெல்லா
மாயிரமம்பாலோரொரு மன்ன னறவெய்து
மாயிருஞாலத்திருவரு மெய்யும்வலிகண்டே
செயிருவானத் தேவருநன்றேசெருவென்றார்

(இ-பு,) ஒருவன் ஆயிரம்பாணங்கள் விடுப்பான் அவைகளையெல்லாம் ஆயிரம் அம்புகளால் மற்றொரு அரசன் அறுத்துத் தள்ளுவான் இவ்வாறுபெரிய இவ்வுலகத்தில் இவ்விருவரும் அம்புகள் விடுகுந் திறங்கண்டு அதிதூரத்திலிருக்கும் தேவர்கள் இவர்கள் செய்யும்போரானது அதிசயிக்கத்தக்கதென்றார்கள்-எ-று. (௯)

இத்திறம்வெம்போர்மன்ன ரியற்றிடுமெல்லைக்கண்
கொத்தலர்பைந்தாரேம ரதன்றனகுலமைந்தர்
முத்தணிமார்பன் வச்சிரவாகுபடைமுற்று
மத்திரமேவிக்கொன்று குவித்துமமையாராய்

(இ-பு.) இவ்வகையாக அவர்கள் கொடிய போர்செய்யும்போதுகொத்தாகியபூமாலையணிந்த எமாதபுத்திரர்கள் முத்துமாலையணிந்தமார்பையுடைய வச்சிரவாகுவின் சேனைகளையெல்லாம் அம்புகளேவிக்கொன்று பிணமலையாகக் குவித்துங் கோபந் தணியாதவர்களாய்-எ-று, (௰)

(வேறு.)

சேர்த்தார்கலினமாறன் றிண்டேர்த்தசானனை
யார்த்தார்தந்தானதயதிர் பணித்தேர்த்தட்டிலிட்டார்

தீர்த்தாமொருநாளுந் தீசப்பகையென்றூர்
பார்த்தார்இணைடோளைப் பணைமுரசஞ்சாற்றென்றூர்

(இ-பு) கடிவாளம்பூட்டிய குதிரைகட்டிய பலமுள்ளதேரையுடைய தசாவனனென்னும் அரசனைக்கட்டித் தன்தகப்பன்தேர்த்தட்டில்போட்டு ஒருநாளுந்தீராதிருந்தபகையையின்றெழித்தோமென்று தங்கள் புசபலத்தைவியந்துசயபேரிஅடிக்கச்சொன்னூர்கள்-எ-று. (௰௧)

மாதங்கந்திண்டேர் வயமாத்தொகைகவர்ந்தார்
காதம்பலதோன்றுங் கன்னியெயின்மடித்தார்
சீதஞ்செய்சோலைநகர் செந்திக்குணவளித்தார்
கோதப்புரிமனத்தார் கோயில்வளங்கூட்டுண்டார்

(இ-பு.) யானைகள் தேர்கள் குதிரைகள் என்னுஞ் சேனைத்தொகையைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு பல ... யில் தோன்றுகின்ற உயரமுள்ள அழியாத மதிலைஇடித்தார்கள் குளிர்ச்சிதருகின்ற சோலையையும் நகரத்தையும் அக்கினிக்கு ஆகாரமாகக் கொடுத்துப் பினனுங் குரோதங்கொண்ட மனத்தார்களாய் ராசன் அரண்மனையிலுள்ள பொருள்களையிட்டார்கள்-எ-று. (௰௨)

காடுசேர்ந்தார்கடற் படைவிட்டாமொன்
றேடுநெடுந்தேர்மகதற் கோவைசெல்லாஞ்சுறியே
விடுபெறநண்ணூர்வினைத் வினர்போற்றங்கடிரு
காடனையுங்காவலர்க்குநிணைனிபரகூறுவாம்

(இ-பு.) எதிர்த்தசேனையிலுள்ளார் கையிலிருந்த ஆயுதங்களையெல்லாம்போட்டுவிட்டுக் காட்டிலோடிப்போ யொளித்துக் கொண்டார்களென்றுசெல்லுகிறது பெரிய தேரையுடைய மகததேசத்தரசனுக்குரூச்சதோஷசமாசாரமெல்லாஞ்சொல்லி மோக்ஷவீட்டினை அடைவதற்கு விருப்பமுள்ள ஞானவான்களைப்போல அறுசகதோஷத்தை யுடையவர்களைப்பத் தங்கள் சிறப்புள்ள தேசத்தரசுக்குச் செல்லும் அந்தஅரசர்களுக்குச்சம்பவித்ததைச்சொல்லுகிறேம்-எ-று. (௰௩)

தாமமணித்தோளவிடபன நந்தசுடர்வாளு
மேமமுறுவெண்சங்கமேகநெடுவீதியினவாய்
காமனுருத்தனைய காளையினாதோழனெடுங்
கோமகனுமின்றனபதிகரிதகூடிவார்

(இ-பு) விடபன் என்னும் சிவயோகிகொடுத்த ஒளியுள்ளவாளாயுதத்தையும் இன்பந்தரத்தக்க சபசங்கத்தையும் பூமாலையணிந்திருக்கின்ற தோளில்தாங்கிக்கொண்டு மன்மதன் உருவம்பெற்றதுபோல அழகுள்ள காளை

யாகிய இளமைப்பருவமுள்ள தன்தோழனுடன் ராசகுமாரன் நெடிய வீதியினிடத்து நின்றான் அப்போது வழிநடப்பவர்கள் இந்தவார்த்தை சொல்லுகிறார்கள்-எ-று. (௰௪)

மாவியலுந்திண்டேர் மகதர்கோன்வாளமரிற்
கோவியலுமாற்றிக் கொடிநகருங்கைகொளுவி
யேவியலுந்திண்சிலையான் வச்சிரவாகனனுமொரு
சேவகனைச்சேர்த்துக் கொடுபதியிற்செல்கின்றான்

(இ-பு) குதிரைகட்டிய திண்ணியதேரையுடைய மகததேசத்தரசன் கொலைசெய்யும்போரில் அரசாட்சியைமாற்றி கொடிகட்டிய பட்டணத்தைக் கொளுத்திவிட்டுப் பாணங்கள் தொடுக்கும்படியான வில்லையுடைய வச்சிரவாகு என்னும் ஒரு ராசனைக்கட்டிக்கொண்டு தன்னகரத்துக்குப்போகின்றான்-எ-று. (௰௫)

மன்னனுழந்தாறல கேட்டுமதிமயக்கி
யினனலொடும்போகின்றே மென்றூரொனுங்கடுஞ்சொற்
கன்னமுறநாராசங் காய்ச்சிச்சொருகியபோற்
பொன்னமருந்தோள்விடலை கேட்டுப்புகைந்துசொன்னான்

(இ-பு) அந்தஅரசன் அழுகிறதைக்கேட்டு மதிமயங்கித் துன்பத்துடனபோகின்றேம் என்றுசொன்னூர்கள் அவ்வாறு அவர்கள் சொல்லிய கொடுஞ்சொல் நாராசத்தைக்காய்ச்சிக் காதில்சொருகினதுபோலக் கேட்டுவீரலட்சுமி குடிகொண்ட தோளையுடைய பத்திராயு கோபங்கொண்டு சொல்லுகிறான்-எ-று. (௰௬)

எங்கள்குலவேந்துக் கிறைகொடுக்கவந்தான்
மங்குல்பொதியுஞ்சிக தன்வலிபெற்றனனூற்
செங்கடலையச்சிறுமுயலும் வெல்லுமினிப்
பொங்கொளியோன்மங்கப் புதையிருளுங்காயுமே

(இ-பு) எங்கள்குலத்து அரசனுக்குத் திறைகொண்டுவந்து கொடுத்து வரும் மேகமண்டலத்தளாவிய மதில்சூழ்ந்த மகததேசத்தான் இப்போது பலம்பெற்றான் இனிச்சிங்கத்தின் வலிகெடச்சிறுமுயலும்வெல்லும் சூரியன் மழுங்கத்தக்கதாக உலகத்தைமூடும் இருளும் காயும்-எ-று. (௰௭)

ஆறுதசெங்கோலடன்மகதனசேனைபெல்லாம்
வாறுகொள்ளவினறு வாளாற்றுணித்திலனேற்
பாறுதேன்மொழியாளேத்தப்பலஞ்சலிக்காத்
தாறுவாளடியார்தம்மடியானல்லேனே

உ௬உ பத்திராயுவின்கதையுரைத்தஅத்தியாயம்

(இ-பு) நீங்காத செங்கோல்நடத்தும் வலியுள்ள மகதனுடைய
னைகளையெல்லாம் வீரசுவர்க்கத்தில் சேரும்படி இப்போது என்வ
ல் தண்டஞ் செய்யாவிட்டால் பால்போல் மதுரிக்குந் திருமொழி
யுடையபார்வதிதேவியார் துதிசெய்யும்படி பதஞ்சலிபகவானுக்காக
னஞ்செய்யும் பரமசிவனுடைய அடியார்க்கடியனல்லனுசக் கடவேன்
று. பதஞ்சலிக்காக நடனஞ்செய்தது சிதம்பரத்தில். ஆதிசேஷன்
சலியாகத் திருவவதாரஞ்செய்தது.

என்றான்கடிதினெழுந் தானுனைவனுெடுங்
சென்றான்வெகுண்டான் றிறல்வாளுறைகழித்தான்
குன்றாதங்குலத்தின் கொற்றம் பழிபடுத்த
தன்றாதையின்னற விர்க்குந்தகவோனே

(இ-பு.) குன்றாத தங்கள் குலத்தின்வெற்றிக்குப் பழியுண்டாக்
தன்பிதாவின் துன்பத்தை நீக்குந் தகுதியுடைய பத்திராயு இவ்வாறு
லி விரைவாக எழுந்து தன்தோழனோடுசென்றுசேனையைப்பார்த்து
பங்கொண்டு வாளை உறையினின்றும் நீக்கினன்-எ-று.

இந்தனஞ்சேர்கானகத்தை நுங்குமெரிபோலச்
சந்தமுடைமார்பன் றடக்கையுடைவாளினுன்
மந்தரம்போனீடுகலி மான்றேர்மதவேழம்
பந்தியணிவாம்புரவி பாரின்வீழ்ந்திடச் செற்றான்

(இ-பு.) விறகுகள்சேர்ந்திருக்குங் காட்டினை அக்கினிதேவன்
பெரிப்பதுபோல அழகுள்ளமார்பனாகிய பத்திராயு உறையினின்றும்
கிய தன்பெரியவாளினால் ஒலிக்குங் குதிரைகட்டியதாய் மந்தரகிரிபோ
உயர்ந்ததேர்களும் மதயானைகளும் பந்திபந்தியாகிய குதிரைகளும்
யில்விழும்படி வெட்டித்தள்ளினன்-எ-று.

வந்தவந்தவீரர் மணித்தோள்படையோடுஞ்
சிந்திவிழக்கொய்துஞ் சினம்பெருகத்திராதா
னுந்ததடந்தேரோ னொருவன்றனைமுருக்கி
யந்தநெடுந்தேரேறி யண்டமுறநின்றுருத்தான்

(இ-பு.) எதிர்த்துவந்த வீரர்களுடைய அழகியதோள்கள் பிடி
ஆயுதங்களுடன் துண்டித்து விழும்படி அறுத்தும் கோபம் அடங்க
ல் மேலுமேலும் வந்த பெரிய தேரிலேறிக்கொண்டு போர்செய்யும்
வீரனைக்கொன்று அந்தத்தேரிலேறிக்கொண்டு ஆகாயத்தில் பொருந்
ரவாரித்தான்-எ-று.

காகம்பொருந்துங் களப்போர்கடந்ததந்தை
சோகந்தவிர்க்குஞ் சுடர்மணித்தோள்வாள்வேந்த

னுசங்குருதியணி தோழனருதனு
மாக்கூறந்த் மழகதிர்போற்றேன்றினன்

(இ-பு) காக்கைக்கூட்டம்வந்து நிறைந்திருக்கும் போர்க்களத்தைக்
கடந்த தன்பிதாவினசோகத்தைநீக்கும் பத்திராயுவானவன் தன்சரீரத்
தின் உதிரம்பொருந்திய தோழனை தேர்ப்பாகனாக அமைத்துக்கொண்டு
ஒளிதங்கியதேரிலேறி ஆகாயத்தைவிட்டுவந்த இளஞ்சூரியனைப்போலத்
தோன்றினன்-எ-று. (௨௨)

பாருசூழ்செவ்வேற் படைப்பத்திராயுவினுன்
மாறிலாவெம்போர் மகதர்கோனவட்டானை
சீறியோர்கானி ல்டுஞ்சிங்கந்தெறவெருவி
யாறலாவாறுபட ரான்குலம்போலாயினவே.

(இ-பு) இவ்வாறு தேரிலேறிய பருந்துகள்வந்து வட்டமிடும் வே
லையுடைய பத்திராயுவின்முன் மாறுபடாதவெம்போர்செய்யும் மகதர்கோ
ன்சேனையெல்லாம் மிருகங்களைக்கொன்று காட்டில் சஞ்சரிக்கும் ஒருசி
ங்கம் வந்து கொல்லப்பயந்து மார்க்கமல்லாத மார்க்கத்தில் ஓடிப்போகி
ற பசுக்கூட்டம்போலாயின-எ-று, (௨௩)

கண்டான்படையுடைத லேமாதன்கண்டுபயங்
கொண்டானிவனுமொரு கூற்றமோவென்றுரையாத்
திண்டேர்திரித்துப்புறங் கொடுப்பத்தேர்ந்திடலும்
வண்டாமரைமுகத்தான் வெண்சங்கம்வாய்வைத்தான்

(இ-பு,) தன்சேனைகள்தோற்று ஓடிப்போவதை ஏமாதனென்னும்
அரசன்பார்த்தான் அப்படிப்பார்த்தவன் பயங்கொண்டு இவனுமொருய
மனோவென்றுசொல்லித் தன்னுடையதேரைத்திருப்பிமுதுகுகாட்டியோ
டயத்தனித்த அளவில் அதை அறிந்த நல்ல செந்தாமரைபோன்ற முகத்
தையுடைய பத்திராயுவானவன் தன்சங்கத்தைவாயினிடமாகவைத்து நா
தமுண்டாக்கினன்-எ-று, (௨௪)

முற்றுமிடிமுழக்கங் கேட்டுமழையொடுங்கிப்
புற்றரவமஞ்சிப் புரளுந்தகைமைபோல்
வெற்றியுறுவேல்வேந்தன் வெண்சங்கவோசையினுற்
கொற்றமுறுஞ்சேனையொடு கோவேந்தன்வீழ்ந்தயர்ந்தான்

(இ-பு.) மிகுந்த இடியினமுழக்கத்தைக்கேட்டுச் சர்ப்பங்கள்பயந்
து புற்றுகளில் ஒடுங்கிப் புரளுந்தன்மைபோல் ஜயந்தங்கிய வேல்வேந்
தனாகிய பத்திராயு தொனிசெய்த ஜயசங்கநாதத்தினால் மகததேசத்தா
ன் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான் அவன்சேனையிலுள்ளவர்களும்
அவ்வாறே மூர்ச்சையடைந்தார்கள்-எ-று. (௨௫)

கோதைபுனைவேன்மகதர் கோமானையுமவன்றன
கர்தவுருமைந்தரையுங் காவற்றளைப்பறித்தத்
தாதைசிறைநீக்கியவன் றடோமுறுதகவில்த்தக்
கோதுபழிதீர்த்தா னுயர்வெண்குடையோனே

(இ-பு.) வெற்றிமாலையணிந்தவேலையுடைய மகததேசத்தர[illegible]
வனுடைய ஆசைபொருந்திய புத்திரர்களையும் காவலாகிய விலங்[illegible]
ட்டுப் பிதாவின் சிறையை நீக்கி அவன்பாதத்தில் வணங்கித் தங்[illegible]
த்துக்குநேரிட்டபழியைத் தீர்த்தான் உயர்ந்த வெண்குடையோனு[illegible]
த்திராயு-எ-று,

தங்கசீல்சேனை பதிகடமைவிடுத்து
மன்னுடனேநீவிர் வளநகரத்தெய்துகெனச்
சொன்னமொழிகேட்டுத் துயர்தீர்தசானனர்கோ
னங்கிலையேயார்வமிறைந் தார்[illegible]பார்த்துரைத்தான்

(இ-பு.) தங்களுக்கு ஒப்பில்லாத சேனைபதிகளையும் விடுத்[illegible]
ம்முடைய அரசனுடன் வளப்பம்பொருந்திய நகரத்திற்குச் செல்[illegible]
ளென்று பத்திராயு சொன்னவார்த்தையைக்கேட்டுத் துயர்நீங்கிய
னனதேசத்தரசன் மிகுந்த அன்புள்ளவனாய் அப்பொழுதே பத்[illegible]
வைப்பார்த்துச்சொல்லுகிறான்-எ-று.

எங்கள்குலவேந்தர் தவப்பயனேபோலிங்கெதிர்ந்து
பங்கமுமென்னோயும் பழியுந்தவிர்த்தோனே
சிங்கமனையாய்னினக்குச் செய்யுங்கைம்மாறுண்டேன்
மங்குலுக்குக்கைம்மாறு மன்னுயிருஞ்செய்திடுமே

(இ-பு) எங்கள்குலத்தரசர்செய்த தவப்பயன்போல் உதவிய[illegible]
வந்துஎனக்குநேரிட்ட பங்கத்தையுந் துயரத்தையும் இழிவையும்
ய புண்ணியவானே சிங்கத்தையொத்தவனே நானஉனக்குச்செய்[illegible]
பிரதிஉபகார முண்டாயிருக்குமானால் மழைபெய்தற்கு மேல்[illegible]
கு இவ்வுலகத்திலில்லைபெற்றிருக்கும் உயிர்களும்கைம்மாறுசெய்யும்[illegible]

நின்றமர்யார்நிற்பயந்தார் யாவர்நினதூரேது
வன்றிறலாய்நின்பெயரென் வந்தவரவேதுரையா
பொன்மொழிபத்தக்குரோணி சேனைபொருங்கலிய
வென்றுருத்துவொள்வாள் விதிர்த்தவிறலோனே

(இ-பு) மிகுந்தபலமுள்ளவனே உ[illegible] சுற்றத்தார்யார்
னைப்பெற்றவர்கள்யார் உன்னுடைய ஊர்[illegible]ன்பெயரென்ன நீ[illegible]
வந்ததற்குக்காரணமென்ன மகதனுடைய ஒன்பதக்குரோணி யெல்[illegible]
ழிந்துபோம்படி வென்று சினந்து ஒள்ளியவாளை விதிர்த்தவீர[illegible]

வில்லாயெனதுபெயர் விறபத்திராயுமற்ற
வெல்லாமுணர வியம்புகேன்மேலென்று
சொல்லாவென்றேழுன் சுனதனிவன்றாதை
நல்லாதரவணிக ஞனகியற்றவாழ்கின்றோம்

(இ-பு,) வில்லையுடைய மகாராசனே என்பெயர் பத்திராயு மற்ற
வையெல்லாம் உனக்குத்தெரியும்படி பின்னாலே சொல்லுகிறேனென்று
சொல்லிஇந்தச் சுனதனென்பவன் எனதுணைவன் இவன்பிதாவாகிய மி
குந்த அன்புள்ள வணிகேசனென்பவர் எங்களை ஆதரிக்க வாழ்ந்துகொ
ண்டிருக்கிறோம்-எ-று. (௩௰)

என்றுவிறைஞ்சியிகல் வேந்தன்வெஞ்சிறையை
மன்றுவிட்டேல்யான் வருந்துணையுமென்றுரைத்துத்
தனதுதோழரொடுஞ் சார்ந்தானற்றுயடைந்து
பொன்னாமார்பீர் புகுந்ததுரையீரென்றாள்

(இ-பு,) என்றிவ்வாறு சொல்லிப்பணிந்து மகாராசாவே இந்தப்ப
கை மன்னவன்சிறையை மறுபடிநான் வருகிற வரையில் விடாதேயென்
றுசொல்லித் தோழனைக்கூட்டிக்கொண்டு தன்வீட்டிற்போய்ச்சேர்ந்தா
ன் தாயானவள் அவர்களைக்கண்டு பொன்னாரமணிந்த மார்பையுடைய
வர்களே நடந்தசேதியென்ன சொல்லுங்களெனறாள்-எ-று, (௩௧)

மாறுபடும்போரின் மகதர்கோன்வாகைகொண்டு
சாறுபருமூதார்த்த சானனமுற்றிமடுத்து
நீறுசெய்துமென்மைத நெடுஞ்சிறையிற்கொண்டேகச்
சீறியமர்வென்று சிறைவிடுத்தோமென்றுரைத்தான்

(இ-பு.) பகைகொண்ட யுத்தமுகத்தில் மகததேசத்தன் வெற்றிய
டைந்து விழாக்கள்நடந்து கொண்டிருக்கும் பழமையான தசானன மெ
ன்னும்ஊரைக்கொளுத்தி நீறாக்கி எம்பிதாவை விடாதகாவற் படுத்திக்
கொண்டுபோனான் அதையறிந்துசீறி நாங்கள் போர்செய்துவென்று சி
றையைமீட்டோமென்று சொன்னான்-எ-று. (௩௨)

(வேறு)

தேட்டாளரசன்பெருந் தேவிதன்கேள்வனின்னல்
வாட்டாரைக்கண்ணீர் முலைமுன்றில்வாரக்கலுழ்ந்தாள்
சோட்டானைவீராகுலையச் செருச்செய்துமைந்தன்
மீட்டானென[illegible]ரிர்ந்தா ளறனவேண்டினாள்.

(இ-பு.) அவர்கள்சொல்ல அந்தராசனமனைவி தன்கணவனுக்குநேரி
ட்ட துன்பத்தைக்கேட்டு வாளையொத்த கண்ணீர் தனங்களின்மேல்

விழும்படி அழுதாள் வலிதாகிய பகைவராகிய சேனைவீரர் [illegible] ஓடும்படி உன்மகன்போர்செய்து உன்கணவனைமீட்டானென்று [illegible] னைஅளவில் சந்தோஷமுடையவளானாள் தருமதேவதை வேண்டும் [illegible] க்குநிற்பவள்-எ-று தருமம்நமக்குவேண்டியதென்று அவள்விரும்பா [illegible] அவளிடத்திலிருக்கத் தருமம்வேண்டுமெனபதாகருத்து மாதரா [illegible] னின்றன அறங்களென்பதனாலுமுணர்க. (௬

துணிவுற்றவேந்தின் சிறைநீத்தனன் றேன்றலென்னத்
தணிவுற்றதொல்சீர் வணிகேசனுந் தக்கதென்றான்
மணிமாலைப் புயன்வச்சிர வாகுவொன்றோர்
பணிபத்திருநாட்டைக் தேபகையின்றிவாழ்ந்தான்

(இ-பு.) துணிவுபொருந்திய வச்சிரவாகுவெனனும் அரசனைப் [illegible] திராயு சிறைமீட்டானென்று பழமையாக யிருந்த செல்வமுள்ள வ [illegible] ன்கேள்விப்பட்டு இதுபுத்திரன்செய்பதக்க நன்மையானகாரியமென [illegible] ன்றான் - ரத்தினமாலையணிந்த புயங்களையுடைய வச்சிரவாகுவான [illegible] பகைவர்வந்து தன்னைவணங்கும்படி தனநாட்டிற்சேர்ந்து பகையில்லா [illegible] ல் வாழ்ந்துகொண்டிருந்தான்-எ-று. (௭

வேதப்பொருளினடி பேணும்விடபனென்னுஞ்
சீதப்புயறனைய சீராவினிற்சிந்தையெண்ணி
நீதிப்பெருங் குற்றமெய்நிடதாரசன்
கோதற்றகேள்விக் குலப்பதிகோயில்சார்ந்தான்

(இ-பு.) பரமசிவனுடைய திருவடியையே விரும்பிக்கொண்டி [illegible] கும் குளிர்ச்சியுள்ள மேகம்போன்ற விடபனென்னுஞ் சிவயோகியா [illegible] ர் அன்றுசாத்திரி தமதுமனதில்ஆலோசித்துத் தருமமாகியபயிருக்கு [illegible] தியாகிய நீர்ப்பாச்சும் குற்றமற்றகேள்விகளையுடைய நிடததேசத்த [illegible] சன் அரண்மனைக்குப்போனார்-எ-று. திருவையைப்பொழிவதினால் [illegible] ப்புயலென்றார். (௮

வந்தமுனிக்குமகிழ் சிமந்தனியும்வேந்துஞ்
சிந்தைகுளிர்ந்துவழி பாடுகள்செய்துபோற்றி
யந்தத்தருமா ரணநதேருமடிகளப்பத
நொந்தசிவப்பவரு மாறுநடவறியென்றான்

(இ-பு) அவ்வாறுவந்தவிடபன் என்னுஞ் சிவயோகிக்கு சீமந்தினி [illegible] யும் அவள்கணவனும் மனமகிழ்ந்து ஆராதனைசெய்து துதித்து வேத [illegible] கள்உணர்ந்த சுவாமிகளுடைய திருவடிகள் வருந்திச்சிவக்கும்படி நட [illegible] துவந்தருளியதற்குக் காரணங் கட்டளையிடவேண்டுமென்றான்-எ-று.

வந்தாபிறைவமகட் பேசவயற்கண்வாளை
நந்தோலிடப்பாயுந் தசாணநாட்டின்மன்னன்

கந்தார்களிற்றனவன் காதலிமைந்தனோடுஞ்
சிந்தாகுலத்தாற் கடுங்கானகஞ்சென்றுசேர்த்தான்

(இ-பு) அரசனே பெண்பேச வந்தோம் சங்குகள் ஒலிக்கும்படி வ யல்களில்வாளைமீன்கள் பாயும்படியான நீர்வளப்பத்தையுடைய தசாண நாட்டிற்கு அரசனாகிய யானைப்படைகளுடன் வச்சிரவாகு என்னு ம் அரசன் தன்மனைவியைப் புத்திரனுடன் வியாகுலங்கொண்டு காட்டுக் குப்போகும்படி நீக்கிவிட்டான்-எ-று. கந்தார்களிறு கட்டுத்தம்பத்தில் கட்டப்படும்யானை *சமஸ்கிருதத்தில் சார்னை மென்னப்படுகின்றது()

பொம்மனமுலையாள்கடுங் கானிற்புகுந்தபின்னேர்
மைம்மனனுசோலைகள் மைசிடமாதுகாத
லம்மைந்தனையாமளித்தோ மவனன்புபூண்டு
தெம்மன்னர்தானைதனைக் கெடச்செய்யச்செருத்துமீட்டான்

(இ-பு.) பொலிவுள்ள தனத்தையுடைய அந்த ராஜஸ்திரியானவள் கொடிய காட்டிற்போய் மேகங்கள் வந்து தவழ்கின்ற சோலைசூழ்ந்த ஒ ருநகரத்திற் சேர்ந்திருந்தாள் (அவ்விடத்தில் அவள் புத்திரன் இறந்து போனான்) அவனைநாம் பிழைப்பித்து வாளாயுத முதலானவைகொடு த்து ரட்சித்தோம் அப்படியிருக்க மறுதேசத்தரசன் யுத்தஞ்செய்துவெ ன்று அவன்பிதாவைத் தேரிற்கட்டிக்கொண்டுபோவதை அந்தப்புத்திர ன்கேள்விப்பட்டுப்பிதாவென்கிற அன்புகொண்டுபோய்ப் போர்செய்து பகைவனைவென்று பிதாவை மீட்டுவிட்டான்-எ-று. (௯)

(வேறு)

அன்னவனுன்றனக் கருளவேண்டுகின்ற
தன்னிகர்த்திமா லினியைக்கற்புடைப்
பொனனையென்றவன் புகழ்ந்துகூறலு
மன்னனசந்திராங் கதன்வழங்குவான

(இ-பு) அந்தப்புத்திரனுக்கு உன்குமாரத்தியாகிய கற்புள்ள சீத் திமாலினியைக்கொடுக்கவேண்டுமென்றுசிவயோகிபுகழ்ந்துசொன்னார் அ தற்குச்சந்திராங்கதன்னுன் [illegible] அரசன் மகிழ்ந்துசொல்லுகிறான்-எ-று.

கோசிகன்னனைச் [illegible]
தேசிகாவினிச் செப்பவேண்டுமோ
காசலாமுலைக் காமர்கன்னிகை
மாசிலானுக்கே வழங்குகேனென

(இ-பு.) கோசிகனேயென்று பெரியோர்கள் சொல்லத்தக்க தேசிக னே நானவேதே சொல்லவேண்டுமோ ரத்தினவடம் பொருந்திய த [illegible]

க்தளையுடைய என்மகளைக் குற்றமில்லாத அந்த ராசகுமாரனுக்கே கொடுக்கிறேனென்று-எ-று. கா-ர் அழகு (௬௰)

முனிவனன்புற முகமன்கூறியே
புனிதவேகெனு விடுத்துப்பூடு
பணிகவீரர்போ யரசனமைந்தன்
யினிதுகொண்டிவண் வருதியென்றனன்

(இ-பு.) சிவயோகி அன்புற இவ்வாறு உபசாரத்துடன்சொல்லிச் சுவாமிகளே ஆசிரமத்துக்கு எழுந்தருளலாமென்று அனுப்பிவிட்டுச் சந்தோஷத்துடன் தன்வளசார்த்தரையனுப்பி அந்த ராசகுமாரனையிவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவாருங்களென்றான்-எ-று. (௬௧)

தத்துவாம்பரித் தானைகாவலர்
பத்திராயுவைப் பணிந்துகாவலர்
புத்துணர்கென வெவையுமோதினர்
மத்தயானையான் மகிழ்ச்சிமேயினன்

(இ-பு.) தாவிச்செல்லுங் குதிரைகளையுடைய சேனாதிபதிகள்போய்ப் பத்திராயுவைக்கண்டுபணிந்து அரசனே நீயிதனைக்கேளென்று நடந்தசேதிகளைச்சொன்னார்கள் அதைக்கேட்டு மதயானைகளையுடைய அந்தப்புத்திரன் மகிழ்ச்சியடைந்தான்-எ-று, (௬௨)

தாயுமின்னலுந் தவிர்த்தாய்கனும்
சேயுமுன்செலச் சேனைசூழ்வரப்
போய்மணப்புணர் பதிபுகுந்தனன்
பாயும்வாம்பரிப் பத்திராயுவே

(இ-பு.) தன்தாயும் தங்கள் துன்பத்தைநீக்கி ஆதரித்தவணிகேசனும் அவன்புத்திரனும் முன்னேபோகும்படி தான் அவர்கள்பின்னே சேனைசூழ்ந்துவரப் புறப்பட்டுப்போய் விவாகஞ்செய்துகொள்ளும் பட்டணஞ்சேர்ந்தான் பாய்ந்துசெல்லுங் குதிரைகளையுடைய பத்திராயு-எ-று. (௬௩)

சாந்தம்போழ்தி னேசந்திராங்கதன்
ஏர்ந்தகன்புகூர்ந் தளவளாவியே
பூந்தண்வார்குழம் பொருவில்கன்னிகை
யீந்தனன்மகிழ்ந் திளவற்கென்பவே

(இ-பு.) இவ்வாறு பத்திராயுவந்தபோது சந்திராங்கதன்மிகுந்த அன்புகொண்டு அளவளாவிப் பூமாலையணிந்து குளிர்ச்சிதங்கி நீண்ட அளகத்தையுடைய ஒப்பில்லாத தன்கன்னிகையை விவாகஞ் செய்துகொடுத்தான-எ-று. (௬௪)

பையராவணைப் பச்சைமேகமுஞ்
செய்யதாமரைத் திருவும்போலவே
ஐயநுண்ணிடை யணங்குமன்னனுந்
தூயபூவணைத் துறக்கமேவினர்

(இ-பு.) படமுள்ள சர்ப்பசயனத்தில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும் செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளும்போல் உண்டோ இல்லையோவென்று சந்தேகிக்கும் இடையினையுடைய கீர்த்திமாலினியும் பத்திராயுவும் சுவர்க்கலோகம்போன்றபரிசுத்தமுள்ள புட்ப சயனத்திற்பொருந்தினர்கள்-எ-று. (௬௫)

குங்குமஞ்செறி குவவுக்கொங்கைமேற்
றங்கினன்பமர் சலதிமூழ்கினு
னங்கவன்புயத் தடங்கிமாதரும்
பொங்குகாதலம் புணரிமூழ்கினள்

(இ-பு) பத்திராயு குங்குமப்பூசேர்ந்த சந்தனக்குழம்பணிந்ததாய்க் குவிவாயிருக்கும் தன்மனைவி தனத்தி லிடத்தில் பொருந்தியின்ப சமுத்திரத்திலாழ்ந்தான் கீர்த்திமாலினி யவன் புயத்திலடங்கி ஆசைவெள்ளத்தி லாழ்ந்தாள்-எ-று. (௬௬)

இடையறுமலே யெழில்கொள்மைந்தனு
மடமைமாதரு மருவிவைகுநா
ளடையலாருயி ரருந்துங்காலவே
லிடதராசனு னிகழ்ந்தகூறுவாம்

(இ-பு.) அழகு பொருந்திய பத்திராயுவும் மடப்பந்தங்கிய கீர்த்திமாலினியும் இவ்வாறு பிரியாமல் வாழுநாளில் சத்துருக்களுடைய உயிரைவாங்கத்தக்க வேலையுடைய நிடதராசனால் நடந்த சேதிகளைச் சொல்லுகிறோம்-எ-று. (௬௭)

மன்னர்மன்ன னுமிவசிரவாகுவ
னென்னும்வேந் தனையிங்கழைத்தவன்
பன்னிதன்னை யும்பாலன்றன்னையுந்
துன்னுவிப்பதே சூழ்ச்சியாமென

(இ-பு.) அரசர்க்கரசனாகிய வச்சிரவாகு என்னும் அரசனையிவ்விடத்துக்கு வரவழைத்து அவன் மனைவியையும் புத்திரனையும் அவனுடனகூட்டி அனுப்புவதேயோசனையென்று-எ-று, (௬௮)

மடங்கலன்னவோர் மன்னற்காணவே
யிடங்கொள்சிந்தைமீ தெழுந்தவார்வத்தேன்

கடங்கணிற்றியே காணவம்மென
முடங்கல்போக்கினன் முழவுத்தோளினன்

(இ-பு) இவ்வாறுயோசனைசெய்த நிடதராசன தசார்ணதேசத்தரசனுக்கு ஓலையெழுதி யனுப்பினன் எழுதினவகையாவது சிங்கம்போன்ற ஒப்பற்றவச்சிரவாகு மகாராசாவே உம்மைப்பார்க்கவேண்டுமென்று என்மனதில் விருப்பமுண்டாயிருக்கின்றமையால் நீர் உம்முடைய தேசம்விட்டுப்புறப்பட்டு வழிகளைக்கடந்து நான் பார்க்கும்படி வரவேண்டுமென்று ஓலையெழுதி யனுப்பினன் மத்தளம்போலத் திரண்டதோளையுடைய நிடதராசன்-எ-று, (௪௯)

(வேறு)

தன்னிகரினிடதர்பிரான்றருந்தூதர் தசார்ணர்கோன்றன்மாட்டெய்திப்
பொன்னியலுங்கனைகழலான வரவிடுத்தவோலையெனப்புகன்றுகாட்ட
மின்னியலுங்கதிர்வேலான் குறிப்புணர்ந்துவேறொருவன்விரைந்துவாங்கிப்
பன்னுவனேனெனக்கேட்டாங் கிறைபணிப்பப்பாசுரத்தைப்பகர்ந்
தானே.

(இ-பு) தனக்கொப்பில்லாதவனாகிய நிடத தேசத்தரசன் இவ்வாறு ஓலையெழுதிக்கொடுத்து அனுப்பிய தூதர்கள் தசார்ணதேசத் தரசனிடத்திற்போய்ப்பொன்னாற்செய்யப்பட்டு ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்தகாலையுடைய நிடதமகாராசன் வரவிடுத்த ஓலைகாண்டுவந்தோமென்று சொல்லி அதைக் காண்பித்த வளவில் அங்கிருந்த ஒருகாரியன் அரசன்குறிப்பறிந்து காண்பித்த வோலையைத் தனகையில்வாங்கிவாசிக்கும்படி கட்டளையிட வேண்டுமென்றுகேட்டு அரசன் உத்தரவுகொடுக்கப் பெற்றுக்கொண்டு அவ்வோலையைவாசிக்கின்றான்-எ-று. (௫௰)

பேராண்மைமிகுவேந்தர்முடிபயிலுகழல்வந்த பொற்றாட்புகழோய்காண்க
நீராருநிடதத்தோன்வரவிடுத்த வோலையென்றுநினைக்காணும்
பேராசைமிகவுடையேனாதலினா ளின்னே பெயர்ந்துவந்தென்
சீராருநகரடைந்துபின்னினது திருநகர்சேரல்வேண்டும்

(இ-பு) மிகுந்த பராக்கிரமமுள்ள மறுதேசத்தரசர்கள் மகுடங்களிற்பட்டுச் சிவந்த வீரகண்டை யணிந்த காலையுடை வச்சிரவாகு மகாராசாவே நிடததேசத்தரசனாகிய நாம் உமக்கு எழுதியனுப்பிய ஓலையைவாசித்துக்காணும் ஏனென்னவெனில், உம்மைக்காணவேண்டுமென்று நான் அதிக அபேக்ஷைகொண்டிருக்கிறேனாதலால் உம்முடையநகரம்விட்டுப் புறப்பட்டுவந்து சிறப்புள்ள என்தேசத்திற் சேர்ந்திருந்து பின்பு உம்முடையநகரத்திற்றிரும்ப் போகவேண்டும்-எ-று, (௫௧)

என்றரசன்வரவிடுத்தஓலையிற்பாசுரமுழுதுமியம்பக்கேட்டுக் [றேறி
குன்றெனவான்முகடணவுங் குடுமிநெடுங்குருமணித்தேர்கொணர்கென்
மின்றிகழுர்படைவேந்தர்தற்சூழ முரசதிரவெண்சங்கார்ப்பத் [ள்வான்
தொன்றுவரும்பகைநடுங்க வெழுந்தனன்மன்னவனேடுந்தொடர்புகொ

(இ-பு.) இவ்வண்ணம் எழுதி நிடதராசன்அனுப்பிய ஓலையிலிருந்தவாக்கியங்களைச் சொல்லக்கேட்டு அவ்வரசனுடனட்புகொள்ள பெருமலைபோல் வான்முகட்டை யளாவுஞ் சிகரத்தையுடைய நிறமுள்ள ரத்தினங்கள் பதித்த தேரைக் கொண்டுவரச்சொல்லி அதிலேறிக்கொண்டு ஒளிவிளங்கும் ஆயுதங்களையுடைய அரசர்கள் தன்னைச்சூழ்ந்துவரவும் பேரிகையொலிக்கவும் தவளச்சங்கம் ஆரவாரிக்கவும் பழமையாய்வருகின்ற எதிரிகள் பயந்துநடுங்கவும் புறப்பட்டான்-எ-று, (௫௨)

மாறிலாப்பெருங்குணத்தான் வருகின்றானெனக்கேட்டமன்னர்மன்ன
னாரியோசனையளவும்பணிபரப்பி யெதிர்க்கவனையனபிற்புல்லி
வீறினுயர்ந்தபெருந் தன்பதியினடைவித்துவியப்பினோடுந்
தாறினெடும்பூகந்தலைவணங்குந் தசானனர்க்குத்தக்கசெய்தான்

(இ-பு) எக்காலத்திலு மாறுபடாத பெருங்குணத்தையுடைய வச்சிரவாகு மகாராசன் வருகின்றானெனக் கேள்விப்பட்ட நிடதராசன் ஆறுயோசனை தூரவளவில் தன்சேனைகள் பரந்திருக்கும்படி அனுப்பித் தானும்புறப்பட்டுப்போய் அந்தராசனைக்கண்டு அன்புடன் அளவளாவி எல்லாச்செல்வத்தினாலும் உயர்ந்ததான தன்னகரத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்துச் சந்தோஷத்துடன் குலைகளின் மிகுதியால் கமுகமரங்கள் தலைவளைந்திருக்கும்படியான தசார்ணதேசத்தரசனுக்குத் தக்கபடி உபசாரஞ் செய்தான்-எ-று, (௫௩)

காவலவன்றனக்களித்தசிறப்பனைவையுங் கண்டுநெடுங்கதிர்வேன்மன்னன்
பூவலயந்தனினிவன்போலுடையார் வேறிலையென்னப்புகழ்ந்துவேலை
மாவலவன்பலகலையும்பயில் பத்திராயுவெனுமைந்தனெய்தி
யாவலுடன்றிருத்தாதை யடிபணிந்துவாய்புதைத்தங்கருகுநின்றான்

(இ-பு) நிடததேசத்தரசன் தனக்குச்செய்த உபசாரங்களையெல்லாம் மிகுந்த ஒளியுள்ளவேலையுடைய வச்சிரவாகு என்னும் அரசன்பார்த்துச்சந்தோஷித்துப் பூலோகத்திலிவனைப்போல நம்மிடத்தில் நட்புள்ளவர்கள் வேறொருவருமில்லையென்று புகழ்ச்செய்யும்போது குதிரையேறிப்பொருதுவதில் வல்லவனும் பலசாஸ்திரங்களை யுணர்ந்தவனுமாகிய பத்திராயுவந்து அன்புடன் தன்தகப்பன் பாதத்திற்பணிந்து அவனுக்குச் சமீபமாகநின்றான்-எ-று, (௫௪)

கண்டவுடன்வச்சிரவாகென்னு மடல்வேந்தன்களித்துநோக்கித்
திண்டிறலாய்வடிவாட்கைச் சேவகனேயிவண வருகவருகவென்று
வண்டமர்தார்நிடதர்பிரான்றனைமுகம்பார்த் திவன்கொடியமகதன்றன்
னை, யொண்டிறலும்படைச்செருக்கு மழித்தெனைக்காத் துயிரளித்தவு [வோனென்றான்

(இ-பு) அவனைப்பார்த்தவுடன் வச்சிரவாகு என்கிற பராக்கிரமமுள்ள அரசன் மனக்களிப்புடனேநோக்கி மிகுந்த பலமுள்ளவனே வடிவாளேந்திய கையையுடையவீரனே என்சமீபத்தில்வா சமீபத்தில்வாவென்றுசொல்லி வண்டுகள் பொருந்திய மாலையணிந்த நிடதராசன் முகத்தைப்பார்த்து இந்தப்பிள்ளை கொடியவனாகிய மகததேசத்தன் பலத்தையும் அவன்சேனையின் இறுமாப்பையும் அழித்து என்னைக்காத்து உயிர்கொடுத்த புண்ணியவானென்று சொன்னான்-எ-று, (௫௫)

பின்னுமிந் நாகரிகனருவினையருந்தவப்பயனாற் பெற்றோன்யா [வன்
மன்னுமிவன்பதியேது மரபேதெற்குதவிசெயவந்ததென்ன
பொன்னமரும்புயத்தோய்நின் மருகனிலையெனக்கறைவேபுகலென்ன
ப், பன்னினனக்கதுகேட்ட நிடதர்பிரானமுறுவலித்துப்பகருற்றான்

(இ-பு) மேலுஞ் சொல்லுகிறான் இந்தப்பிள்ளையை அரிய தவப்பயன்போலப்பெற்றவன்யாவன் இவனிருக்கும்பதியெது? மரபென்ன? எனக்குதவிசெய்யும்படிவந்த காரணமென்ன ஜயலட்சுமிவாசமாயிருக்கும் புயத்தையுடைய அரசனே உன்மருமகனுடைய வரலாறெல்லாம் எனக்குவிவரமாகச் சொல்லவேண்டுமென்றான் அதைக்கேட்ட நிடததேசத்து அரசன் நகைத்துச்சொல்லுகின்றான்-எ-று, (௫௬)

திங்களைப்போலிதாயவெண்குடையோ யொருகதையான்செப்பக்கே
ட்டு, மங்குல்வளமுறுதொரு திருநாடுண்டதுபுரக்குமன்னர்மன்ன
னங்கவன்றன் மனைவியையும் பாலனையும்பழிகருதாதகற்றிவிட்டான்
சங்கணிவார்குழைப்பரமனருளினொரு வணிகனவர்தம்மைக்காத்தான்

(இ-பு) சந்திரனைப்போல விளங்கும் முத்துமாலை அலங்கரித்தவெண்குடையையுடைய ராசனே நான் ஒரு கதை சொல்லுகிறேன் அதை நீ கேள் மேகங்கள் காலந்தப்பாமல் மழைபொழிகின்ற வளப்பந் தங்கியதிருநகரமுண்டு அதை ஆளுகின்ற அரசன் ஒருவனுண்டு அவன் பழியையெண்ணாமல் தன்மனைவியையும் புத்திரனையும் நீக்கிவிட்டான் சங்கக்குழையணிந்த பரமசிவனுடைய கிருபையினால் ஒருவணிகன் அவர்களைக் காப்பாற்றினான்-எ-று, (௫௭)

குலநாயகன்றன்கருதிப்புரந்தளிக்கு நாளினந்தக்குமரன்மாய்ந்தான்
சிலைமானுந்திருப்புருவத்தேவியழக் கண்டெதிர்ந்ததெய்வயோகி

யலையாமலினுயிர்பெற்றெழுக வெனவெழுந்தவனுக்கறமுங்கூறித்
தொலையாதவலியுமொருசங்கமும் வாளுங்கொடுத்துத்துயரந்தீர்த்தான்

(இ-பு) உத்தமகுலத்தானாகிய அந்தவணிகன் ஆதரிக்கும்நாளில்புத்திரனிறந்துவிட்டான் அந்தத்துயரத்தினால் வில்லையொத்த புருவத்தையுடைய ராஜஸ்திரிஅழுதுகொண்டிருந்தாள் அப்போது அவ்விடத்திலவந்த ஒருசிவயோகி அவள் அழுவதைக்கண்டு (மனமிரங்கி) வருந்தாமலிருக்கும்படி இறந்தவன் உயிரைக்கொடுத்து எழுப்பி அதன்பின்பு அந்தப்புத்திரனுக்கு ராசநீதிபோதித்து மாறாதமிகுந்தபலமும் வாளுஞ் சங்கமுங்கொடுத்துத் துயரத்தைநீக்கினான்-எ-று. (௫௮)

நற்றவத்தோன்றிருவருளா லிறைமகனுமெழுபெருகநாளுநாளுங்
கற்றிரளிற்பொலிதிணிதோட் காளையாயிளமையெழில் கனியநாளிற்
பற்றலர்தன்றாதையைவென் றிருங்களையிட் டுடனகொடும்போம்படி கே
ட்டெய்திச், செற்றவரைத்தளைப்படுத்தித் தாதைசிறைமீட்டனனபோர்ச்
சிங்கமன்னான்.

(இ-பு.) இவ்வாறு சிவயோகிஅருளினால் ராசபுத்திரன்நாளுக்குநாள் பலம்அதிகரிக்கத் திண்ணைகல்லைப்போலப் பருத்ததோளையுடையகாளைப்பருவமாயிளமையும் சௌந்தரியமும் மிகுதியாகுங்காலத்தில் பகையர் வந்து போர்செய்து ஜயம்பெற்றுத் தன்தகப்பனைச் சிறைப்படுத்திக்கொண்டுபோகக் கேள்விப்பட்டு அழகியசிங்கத்தையொத்த அந்தப்புத்திரன் அவ்விடத்திற்போய் அவர்களைவென்றுசிறைப்படுத்தித்தனதகப்பன் சிறையைநீக்கிவிட்டான்-எ-று. (௫௯)

இக்கதைபோலொருகதைமுன் கேட்டதுண்டேலியம்புகென வியம்பியீ
று, தக்கபெரும்புகழோவோ யுரைத்தகதைக்குரியரையுஞ் சாற்றக்கேட்டி
செக்கமலச்செங்கனிவாய்ச் சேயிவன்றாதையுநீ சிறந்தகற்பாள்
மிக்ககுலத்தேவியுநின் மனையென்றான் மதிமயங்கி வேந்தன்வீழ்ந்தான்

(இ-பு.) இந்தக்கதைபோல நீ ஒருகதை கேள்விப்பட்ட துண்டாயிருந்தால்சொல்லென்றுசொல்லி விளங்குகின்ற தகுதியுள்ளபெரும்புகழ்பெற்ற மகாராசனே இப்போதுநான்சொல்லிய கதைக்கு உரியவர்களையுஞ்சொல்லக்கேட்பாயாக செந்தாமரைமலர்போன்ற செவ்வாயையுடைய அந்தப்புத்திரனும் இந்தப்புத்திரனுமே தகப்பன்நீதான் கற்பினால் சிறந்த தாயானவள் உன்மனைவிதான் என்றுசொன்னான் அதைக்கேட்ட அரசன் அறிவுமயங்கிக் கீழேவிழுந்துவிட்டான்-எ-று, (௬௰)

வீழ்ந்தமன்னன்றனையெடுத்து வியர்புலர முகம்விளங்கி வேந்தே
யெம்மை, யாழ்ந்தவிதிசெய்ததுயர் யாமுழந்தோநீயதனு லழுங்கவேண்
டாந், தாழ்ந்தமனந்தனைத்தெளிவித் தெழுகவெனத்தான்புரிந்த தவறுபொ

ஞ்சைப் போழ்ந்துணர்வையழிக்கவிருந் தயர்வுயிர்த்துமகனைபுறப்புல்லி
ச்சொன்னான்.

(இ-பு) அப்படிவிழுந்த அரசனையெடுத்து விபர்வையாற்றி முகந்து
டைத்து மூர்ச்சைநீக்கி ஐயனே எங்களைப்பற்றிய வினைசெய்த து
ன்பத்தை நாங்கள் அனுபவித்தோம் அதற்காக நீவருந்தவேண்டியதில்லை
யென்று மனதைத்தெளிவித்து எழுந்திருவென்றுசொல்ல எழுந்து அவ்வ
ரசன் தான்செய்தகுற்றந் தன்மனதைப்பிளந்து அறிவைக் கலக்கிவிட
ஒன்றுந்தோன்றாமலிருந்து பின்புதேறி மகனைஅணைத்துக்கொண்டு சொ
ல்லுகிறான்-எ-று. (௬௧)

கடுங்கானத்திடைதனியே நமைவிடுத்துவரப்பணித்தகடியனெஞ்சக்
கொடும்பாவிதனைமகதன் கொல்லாமலுயிரளித்த குமாரவீண்டு
நடுங்காமலுயிர்பொருந்தப் புல்லவுநீகருணைசெய்தாய் ஞாலமென்னை
யடுங்காலனென்பதலா லரசனென்றுசொலத்தகுமோ வந்தோவந்தோ

(இ-பு) கடுமையாகியகாட்டில் உங்களைவிட்டுவரும்படி உத்தரவு
செய்த வலியநெஞ்சையுடைய கொடும்பாவியாகிய என்னை மகதே
த்தான்கொல்லாமல் உயிர்கொடுத்தபுத்திரனே இப்போது நான் அஞ்சா
ல் உயிரோடுயிர்பொருந்தும்படி புல்லிக்கொள்ளவும் கிருபைசெய்தா
இவ்வுலகத்தார் என்னையமனென்று சொல்வார்களேயல்லது அ
சனென்றுசொல்லமாட்டார்கள் ஐயையோ-எ-று. (௬௨)

அறத்தினெறிகருதாம லரிவையையும்புதல்வனையு மகன்கானத்தின்
மறத்தின்வழிவிடுத்தேனு மன்னவனோநீசர்தொழின்மருவிநின்றே
னிறப்பதுவேதருமமெனத் துணிந்தெழுந்த தசார்ணர்கோன் குட்டி
லோர், நிறக்கதிர்வேலிடதர்பிரான் றெருட்டவருந்துயர்சிறிதுநீங்கி
னான்.

(இ-பு) தர்மநெறியையெண்ணாமல் மனைவியையும் புத்திரனையுங்
காட்டினிடத்தி லனுப்பிவிட்ட நானும்அரசனா, புலையர்செய்யுந்தொழிலு
ளவனாயிருந்தேனே ஆகலாலினி இவ்வாழ்க்கைநீங்கிவிடுவதே தருமமெ
ன்று துணிவுகொண்டெழுந்த தசார்ணதேசத்தரசன அங்கிருந்தம
ரிகளும் ஒளிதங்கியவேலாயுதத்தையுடைய நிடததேசத்துஅரசனுமாகிய சந்திராங்கத
னுஞ்சொன்னதினால் துன்பஞ்சற்றுநீங்கிச் சிறிதுநாள்-எ-று. (௬௩)

சந்திராங்கதனன்புகூர வேதங்கிளைஞருக்தொடர்புகொண்டுபின்
சிந்தூரனைச் சுமதிதன்னெடுஞ் செம்பொனீள்கொடித்தேரிலேறியே
மைந்தன்வீரவேற் பத்திராயுவுமருமி கீர்த்திமாலினியும்பின்வரக்
கொந்துலாமலர்க் கானுமாறுநீள் குன்றுநீத்தியேகரங்கூடினான்

(இ-பு) நிடததேசத்துஅரசனாகிய சந்திராங்கதன் அன்புடன்வைத்துக்
கொண்டிருக்கவிருந்து அவ்வரசன் சிநேகமிகுதியாகப்பெற்றுக்கொண்
டுபின்பு சிந்தூரத் திலகம் அணிந்த முகத்தையுடைய தனமனைவியுட
ன் செம்பொன்மயமாய்ப் பெரிய கொடிகட்டப்பட்ட தேரிலேறிக்கொ
ண்டு தன்புத்திரனாகிய பத்திராயுவும் மருமகளாகிய கீர்த்திமாலினியும்
பின்னேவரக் கொத்தாகியமலரையுடைய காடும் நதிகளும் உயர்ந்தமலை
களும் நீங்கித்தன்னகரத்திற்போய்ச்சேர்ந்தான்-எ-று. (௬௪)

நகரின்வாழுநர்கண்டுமைந்தனை நறியமாமலர்சிதறியேத்துவார்
புகர்செயர்னையாழிகாறுநீ பூமிகாத்திமைப்புரத்தியாலென்பார்
தகரவார்குழல்வனிதைசெல்வி சாரங்கபாணியேயிவனென்றேதுவார்
நிகரினமைந்தனுக்காவதாகயா நெடியவாழுநாளெனநிகழ்த்துவார்

(இ-பு) அந்நகரத்தில் வாழ்கின்றவர்கள் பத்திராயுவைப்பார்த்து
வாசனை தங்கிய மலர்கள் தூவித் துதிசெய்வார்கள், சிலர் புகர்முகயா
னைப் படையையுடைய அரசனே ஊழிகாலவரையில் இவ்வுலகத்தைத்தா
ங்கி எம்மை ரக்ஷிக்கக்கடவையென்று சொல்வார்கள், சிலர்பத்திராயு மகா
விஷ்ணுவே மயிர்ச்சாந்தணிந்த நீண்டகுழலையுடைய இவன்மனைவி ம
காலட்சுமி யென்பார்கள், சிலர் நாம்வாழுநாளாகிய நம்முடைய ஆயுசு இ
ந்தப்புத்திரனுக்கே யாகக் கடவதென்று வாழ்த்துவார்கள்-எ-று. (௬௫)

புகைஞரஞ்சவேபொருதுதங்கைதன் புடர்களிந்ததோள்பார்த்திலீரென்
பார், புகைசெய்வேலினானிறைமைபூண்டிவன் புதுதமெய்த்தவம்புரிந்து
ளோமென்பார், மகதராசன்றன்வல்லிபிற்பட வாகைகொண்டகூராவாளி
தோவென்பார்,சகரநீர்சூலாம் புவிபிவன்றிருந் தாளிழுக்கணேதங்கு
மாலெனபார்

(இ-பு.) சத்துருக்கள் பயப்படத்தக்கதாகப் போர்செய்து தகப்பனு
க்கு நேரிட்ட மனவருத்தத்தை நீக்கியபுயத்தைப் பாருங்களென்பார்க
ள்சிலர், புகையைத்தருவதாகிய வேலாயுதத்தையுடையஇவன அரசாட்சி
பெற்றுக்கொண்டு இவ்விடத்திலிரு நாம் உண்மையானதவஞ்செய்தோ
மெனபார்கள்சிலர், மகதராசன் வில்லில் அகப்பட்டுக்கொள்ளும்படிவெ
ற்றிகொண்ட கூரியவாள் இதுதானோ பாருங்களெனபார்கள் சிலர் சமுத்
திரஞ் சூழ்ந்த உலகமெல்லாம் இவன் காலினகீழே தங்குமெனபார்கள்
சிலர்-எ-று. (௬௬)

என்றுகூறியமாந்தரின்புறவேந்தலோடும் போயெழில்கொள்மன்னவன்
குன்றுபோலுயர்கோயில்வைகியோர் குடைநிழற்புவிகாத்தனந்தநாட்
சென்றபின்னரோமகதன்றனை யுந்திறைபள்கொளச்செப்பிவிட்டபின்
பொன்றிவாளுலகாடன்மேயினன் புதல்வன்பூதலப்புறப்பதாயினன்

(இ-பு.) என்றுசெல்லிய நகர்ச்சனங்கள் இன்பப்பொருந்தத் தந்தாகத் தன்புத்திரனுடன்போய் வச்சிரவாகுமகாராசன் மகமேருவையொத்தவன் அரண்மனையிலிருந்த ஒருகுடைநிழலில் பூமியைக்காத்து நெடுநாள்சென்றபின்பு மகதாராசனைச்சிறைநீக்கி யினி நீ திறைகட்டிக் கொண்டிருவென்றுசொல்லி அனுப்பிவிட்டபின் இந்தத்தேகத்தைவிட்டு நீக்கிச்சுவர்க்கபதம்பெற்றான் பத்திராயு அரசுசெய்துகொண்டிருந்தான்-எ-று. (௬௭)

பத்திராயுவின்கதையுரைத்த-அத்தியாயம்,

முற்றிற்று,

ஆக திருவிருத்தம்-௭௱௬௰௭.

௨

சிவமயம்,

பதினைந்தாவது,

பத்திராயுமுத்திபெற்ற அத்தியாயம்.

இருந்தலர்வனைங்கடு நிமல்கச்செங்கோலோச்சிப்
புரந்தனனுலகமெல்லாம் பொதுவறவென்றசூத
விருந்தவருனிவர்க்கெல்லா மிபல்லினியம்பிமீட்டு
மருந்தவனையபத்தி ராயுவின்சரிதஞ்சொன்னான்

(இ-பு,) சத்துருக்களைந்து பனியவும் மிகுந்தநிதிகள்வந்துசேரவும் செங்கோல்செலுத்திப் பொதுவில்லாமல் உலகத்தைக்காத்து அரசுசெய்துகொண்டிருந்தானென்று சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குச்சொல்லிப்பின்னும் அம்முனிவர் பத்திராயுவின் சரித்திரஞ்சொல்லுகிறார்-எ-று, (௧)

கன்னவிதிரண்டோண்முத்தக் கதிர்மணிக்கவிகைச்செங்கோன்
மன்னனுமைச்சரோடு மலிந்தற்றானையோடும்
பொன்னணிந்திதிரிமனனும் [illegible]விபகேர்மேற்கொண்டு
மின்னிடைத்துணைவியோடு [illegible]மலர்க்கானம்புக்கான்.

(இ-பு,) மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற திரண்ட வடிவாயிருக்குந் தோள்களையும் முத்துக்களால் அலங்கரித்த குடையினையும் உடையவனுய்ச்செங்கோல்நடத்தும் பத்திராயு என்னும் அரசன் மந்திரிகளும் மிகுதியாயுள்ளசேனையுஞ்சூழ்ந்துவரப் பொன்னாற் செய்யப்பட்ட உருளை

யுண்டதேரில் தானும் தன்மனைவியுமாக ஏறிக்கொண்டு வாசனையுள்ள-கானகத்திற்சென்றான்-எ-று. (௨)

சண்பகம்பனசம்பூகஞ் சந்தனந்தமாலந்தேமா
விண்பகிர்ந்திருங்கோங்கு வெள்ளின்மந்தாரந்தூற்றுக்
கண்புகவரிதாய்வாசங் காவதங்கமழுஞ்சோலை
பண்பயில்வண்டுந்தேனுங் கிள்ளையும்படிவதாமா

(இ-பு.) அந்தவனத்திலிருக்கும்-சண்பகம்-பலா-கமுகு-சந்தனம்-தேமா-பச்சிலை-அண்டமுகடு பிளக்கும்படி உயர்ந்திருக்கும் கோங்கு-விளா மந்தாரம்-என்னும் விருக்ஷங்களால் பார்ப்பவர்கள் பார்வைநுழைவதற்கு இடமில்லாமல் நெருங்கப்பட்டு ஒருகாத தூரமட்டும் வாசனை பரிமளிக்குஞ் சோலையானது இசைபாடும் வண்டும் தேனென்கிற வண்டுகளுங் கிள்ளைகளும் வாசமாயிருக்கத்தக்கது-எ-று, (௩)

மவ்வலங்குழலாள்கீர்த்தி மாலினியணங்கினோடு
மவ்வனத்தன்னின்மன்ன னயர்வுயிர்த்திருந்தகாலை
கொவ்வைபைங்கினிவாய்க்கற்பிற் கொடியொடோரந்தணாளன்
கவ்வையன்முறையிட்டெய்திக் காவலற்கிதனைச்சொன்னான்

(இ-பு,) இத்தன்மையுள்ள வனத்தில் பத்திராயு என்னும் அரசன் கீர்த்திமாலினி யென்னும் மனைவியுடன் வழிவந்த இளைப்புநீங்கி யிருக்கும்போது ஒருபிராமணன் தனபத்தினியாகிய கோவைப்பழத்தை யொத்த செவ்வாயினையுடையமாதுடன் துயரமுள்ளவனாய் முறையிட்டுக்கொண்டுவந்து அரசனுக்கு இந்த வார்த்தை சொல்லுகிறான்-எ-று, (௪)

அறத்தினிலுலகங்காக்கு மரசனேயரசரேறே
மறப்புலிதொடர்ந்துகொல்லான் வருகின்றததனையுன்
திறப்படையேவியாங்கே செகுத்துயிர்கவர்ந்துயாங்க
ளிறப்பதுதவிர்த்துளாவி யளித்தமைப்புரப்பாயென்றான்

(இ-பு,) தர்மத்துடன் உலகத்தைக்காக்கும் அரசனே அரசர்களாகிய யானைகளுக்குச் சிங்கம்போலிருப்பவனே கொடிதான ஒருபுலி யெங்களைக்கொல்லத் தொடர்ந்து வருகின்றது அதனை உன் கையிலிருக்கும் வலியபாணத்தையேவி அவ்விடத்திலேவிழுந்துசாவும்படிகொன்று நாங்கள் இறப்பதைநீக்கி எங்கள் பிராணனைக்கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்றுசொன்னான்-எ-று. (௫)

(வேறு,)

மறையவனோதிய வாசகம்வந்தே
யறைகழனமன்னவ னஞ்செவியெய்தப்

மிறைநிகர்வுர்ரிலே வாளிபிடித்துக்
கறவுகொள்வெவ்புலி யைக்கடிதெய்வான்

(இ-பு.) இவ்வாறு பிராமணன்சொல்லிய வார்த்தையானது வந்து தீவிக்கும் வீரகண்டைகாலிற்கட்டிய அவ்வரசன் காதில்கேட்டவுடன் பிறைபோன்வளைந்த பெரியவில்லையும் பாணத்தையும் கையிலேந்திக்கோபங்கொண்டு வருகிற வெய்யபுலியை விரைவிற் கொல்லுவதற்கு-எ-று.

உற்றனனுற்றவ னேன்றதன் முன்னம்
பற்றியவெப்புலி பார்ப்பினிதன்னை
யெற்றியணைந்து பிடித்துவுபேங்கு
முற்றிழையாளர சனைமுகநோக்கி

(இ-பு.) எத்தனப்பட்டான் அப்படி பெத்தனித்தவன் வருவதற்கு முன்தொடர்ந்துவந்தபுலியானது அந்தப்பிராமணத்தியை அடித்துப்பிடித்துக்கொள்ளவே அழுகிற அந்தப்பிராமணஸ்திரியானவள் அரசனுமுகத்தைப்பார்த்து-எ-று. (௭)

மன்னவனே புலிவாயிடையுற்றே
னென்னுயிர் நின்பரமென்றிதுகூறி
மின்னெயிற்செஞ் சடையெப்பொருளாம்
பன்னினளாவி நடந்தபாவம்

(இ-பு.) அரசனே நானு புலிவாயி லகப்பட்டுக்கொண்டேன் என்னுயிரைக்காப்பது உனபாரம் என்று சொல்லி மின்னலைப்போல விளங்கும் செஞ்சடையையுடைய உண்மைப்பொருளாகிய சிவாகமத்தை புச்சரித்தாள் பிராணனிங்கிவிட்டது இது பாவமானகாரியம்-எ-று. (௮)

வேதியன்மாது விளம்பியசொல்லான்
மாறுசெய்திய மன்னவெகுண்டே
காதலிடுத்த கடுங்கணைசெனறே
போதெனவீழ்ந்தது புண்டரிகத்தின்

(இ-பு.) அந்தப்பிராமணன் சொல்லிய சொல்லால் பகத்தாகிய துயரங்கொண்ட அவ்வரசன் கோபமுள்ளவனுப் கொல்லும்படி விடுத்தபாணமானதுபோய்ப் புலியின்மேல் பூவைப்போலவிழுந்தது-எ-று. (௯)

கண்டுபொருமை கருத்துதவெதுப்பத்
திண்டிறல்வேலவ னின்றிகைத்தான்
புண்டரிகந்தெறு பூவையையுங்கொண்
டெண்டிடவெம்முழை தேடிபொழுந்து

(இ-பு.) தன்பாணம் பூவைப்போல விழுந்ததைக்கண்டு உண்டான பொறுமையானது மனதைவருத்த மிகுந்தபலமுள்ள வேலேந்தும் அவ்வரசனுக்கு ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்றுவிட்டான்புலியானது தன்னாற் கொல்லப்பட்டவளை புண்ணைக்கவ்விக்கொண்டுமலைக்குகையை நாடிச்சென்றது-எ-று. (௰)

அச்சமுறுத வரும்புலிபோக
வச்சிரவாகு மகன்றுயருற்றான்
விச்சைபுணர்ந்தறி வேதியன்மாதை
யிச்சகமீதி விழந்தனனென்றான்

(இ-பு.) எவ்வளவும் பயமில்லாமல் அந்தப் பெரும்புலியானதுபோய்விடவே வச்சிரவாகு புத்திரனுகிய பத்திராயு என்பவன் துயரம்அடைந்தான் வேதசாஸ்திரங்களுணர்ந்த பிராமணனுடைய என் மனைவியை யிவ்வுலகத்தி லிழந்துவிட்டேனேயென்றுசொல்லி-எ-று. (௰௧)

(வேறு.)

அருந்ததிபொாவ்வாதகற்புடைய மனையவளேயந்தோவந்தோ
பெரும்புலியின்பகுவாயினுயிரிழக்க முற்பவத்திற்பிழைத்ததுண்டோ
குரும்பைமுலைத்தரளநகைக் கொடியிடையாய்நீவிளிந்தகொடுமைகண்டு
மிரும்பனையகொடுமனங்கொண் டின்னமுநானிறவாமலிருக்கின்றேனே

(இ-பு.) பதிவிரதாதருமத்தில் அருந்ததியும் நிகராகாத மனைவியே ஐயையோ பெரும்புலியின் பிளப்பாகிய வாயில் அகப்பட்டுக் கொள்ளும்படி முன்ஜன்மத்திற்செய்த வினையுண்டோ தென்னங் குரும்பையையொத்த தனங்களும் முத்துகளையொத்த தந்தங்களும் பூங்கொடியையொத்த இடையினையும் உடையவளே நீயிறந்த கொடுமையைக்கண்டும் இரும்பையொத்தவன் னெஞ்சங்கொண்டு இன்னமும் நானிறவாமலிருக்கின்றேனே-எ-று. (௰௨)

என்றென்றுபற்பலவும்பன்னியெடுத் தழைத்துமனமிடாின்மூழ்கிக்
கன்றொன்றுதனையிழந்தகறவைபோ னெடிதுயிர்த்துக்கவன்றுமாழ்கி
யின்றொன்றுதுணிகுவன்யானிங்கெனன நினைந்துகடிதெழுந்துநின்று
குன்றொன்றதிரள்புயத்துக் கோமகன்மேல்வெகுண்டினையகூறினளே

(இ-பு.) என்றென்று பலபலவாக தன் மனைவியின் குணங்களை யெடுத்துஅழைத்துச்சொல்லி துன்பத்தில் மனது அழுந்திடக் கன்றினையிழந்த பசுவைப்போலப் பெருமூச்சுவிட்டுக் கவலையுடன் சோர்ந்து இப்போது ஒருகாரியஞ்செய்யத் துணிகுவனென்று தன்மனதில் நிச்சயித்துக்கொண் டெழுந்துநின்று மலையையொத்த திரண்டபுயத்தை யுடைய பத்திராயுவாகிய அரசன்மேல் கோபித்துக்கொண்டு இந்த வார்த்தைகளைச்சொல்லுகிறான்-எ-று. (௰௩)

மறையவருக்கிறைவிவர்தாவ்வருயிருக்குதவிசெய்யாமன்னரோடே
கறையிருக்குநிலாய்வெங் கனற்றறைசட் கொடுங்கிரியின்கண்முன்னு
பிறைநாதற்குப்படரியற்றி புயிர்கவர்ந்துயிலாப் புகுசப்பிடித்தனிலவே
முறைகழித்தகணையேந்தினின்றனை நின்னாசிபெறுர்சுவவையுண்டோ

(இ-பு,) பிராமணர்களுக்குத் துன்பம் நேரிட்டவிடத்தில் உத
யாதமன்னவர்கள் எங்கோ உதிரம் பொருந்தியிருக்கும்பொல்லா
யும் வெவ்விய தீப்பொறியைக் கக்கும் கண்களுமுள்ள ஒரு புலியா
உன்கண்ணுக்கெதிராக என்மனைவிக்குவருந்த்தைச்செய்து உயிரை
க்கிக்குகையிற்போகவும் பிடித்தவில்லும் பாணியிலிருக்கெடுக்க
ம் தக்கிக்கொண்டுநின்றாய் ஆதலால் உன்னரசிபெறுங்கொப்பாள
ல்வேறொன்றுமில்லை-எ-று.

ஆயிரட்டியாயிரம்வெங்கரி யானைபலநூனக்குவ்... தனிவேந்தே
பாயிரட்டிக்கரித்தவேறுபனைவரிடத் நீக்கமா... பயந்தொண்ட
ஆயிரட்டித்தெழுந்தமக்கானகத்தி னென்றுவனை... த்தொடர்ந்த
தோர்,சேயிரட்டித்திருப்பிலவாய்ப்புலிகவசமீட்டு... வீசெய்ததென்

(இ-பு,) பன்னீராயிரம் யானைபலம் உனக்குண்டு ... னையுமரச
அந்தப்பலத்தினைப் பருந்துக்கொண்டபரமாயினார்க்கும் ஒளிக்கி
டிவேலையுடைய பகைமன்னரிடத்தில் கொடுத்துவிட்டுப் பயம்பெற்
கொண்டனையோ இருசெடிகளால் நெருங்கப்பட்டு மரங்கள்மேலோ
யிருக்கும் இந்தப்பெரியகாட்டில் உதிரஞ் சேரப்பர்படி பிளம்போ
வாயையுடைய புலியானது ... டாக்கு என்மனைவியைப்பிடித்துக்
கொண்டுபோய்விட்டதே அதினைத்தடுக்காமல் என்னசெய்தாய்-எ-று, (௫...)

கடுங்கானிற்புலியென்று கனந்துளமுழையக்குறுகி புன்னைக்குறுகின்று
வடுங்காலத்தன்னுயிரழித்திலை நின்னுயிர்ப்புறங்காத்தனனின்று
கொடுங்காலனார்குளத்திலிற்றப் பகைவர்வந்துகொடும்போர்செய
கொடுந்தாபகைக்காரனன்னரசிலை நிறுத்துவையோமாமவேலோய்

(இ-பு,) பகைவர் அஞ்சத்தக்க வேலாயுதமேந்திய அரசனே கொ
டுமையுள்ள இந்தக்காட்டில் உனக்கெதிரில் உதிரமுண்ணப்புலியானது
மனைவியைக் கொல்லும்போது அந்தப்புலியைக்கொல்லாமல் உன்
உயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டுப் பயந்துநின்றனை கொடுமையு
டையமுனிவர்வந்து போர்க்களத்திலிருக்கும்படி உன் எதிரில்வந்து
வலியதான் யுத்தஞ்செய்தால் அந்தச்சமயத்தில் தடுக்காமல்பகைவர்க்
காத்தி உன்னரசாட்சியை நிலைநிறுத்துவையோ-எ-று, (௫...)

பெண்ணுயிர்தனைத்தார் பேதையாய்நினக்கபயம்பேசினனை
யென்னுகொலுப் வேங்கைகந் குணவலித்து னுயிர்காத்தவேழவேந்
தே, மண்ணுளெவன்னுறியோ வின்னுமாருயிர்சுமந்து வயிற்றுழந்
து, நண்ணார்தமிழிபுகைக்குநாணியோ வென்றுபலநடுங்கச்சொன்னான்

(இ-பு,) பெண்பிறப்பாகியும் அந்தப்பிறப்பிலும் பிராமணத்தியாகி
யும் உனக்குஅபயமென்று முறையிட்டவளைக் காக்கவேண்டுமென்று உ
ன்மனதில் எண்ணாமல் கொல்லும்புலிக்கு ஆகாரமாகக் கொடுத்துவிட்
டு உன்னுயிரைக் காத்துக்கொண்ட வழிமையுள்ள அரசனே பலத்தினிற்
குறைந்தும் இன்னமும் பிராமணனை வைத்துக்கொண்டு ஊரார் என்
னுரைப்யோ,பகைவர்கள் இழிவாகப்பேசுவார்களே அதற்கும் நாணமுறு
யோ என்றிவ்வாறு பலபலதூஷணை பண்ணவார்த்தைகளை அவனடுங்கும்ப
டிசொன்னான்-எ-று. (௫௭)

என்னலுமேமதிமயங்கிவடிவேல்கொண்ட கன்மார்பத்தெறிந்ததென்ன
க், கன்னியைவெப்புலிகொன்றகொடும்பழியு நான்மறையோனகடியசொ
ல்லு, மந்நிலையேயசும்பெருப்ப வருந்துயரக் கடலிடையாழ்ந் தழுங்கு
தோறு, மன்னர்பிரானரசியலுஞ் செல்வமுநீத்திறப்பனெனுமனத்தனா
[னான்

(இ-பு.) இவ்வாறு அந்தப்பிராமணன் சொல்லவே அரசன் மதிமய
ங்கி வடிவேலைப் பரந்தமார்பில் எறிந்ததுபோலப் பிராமணஸ்திரியைப்
புலிகொன்ற கொடும்பழியும் பிராமணன் சொல்லுங் கடுமையான வார்
த்தையும் அப்போதேமனவெதுப்பசீய்குதற்கரிய துக்கசாகரத்தில்அ
மூழ்ந்தவருந்துந்தோறும் அவ்வரசன் இந்த அரசாட்சியையும் செல்வத்தை
யும் ஒழித்துவிட்டிறக்கவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனானான்-எ-று,

வேதியருக்கிடர்களையாவேந்தனொரு விலங்கெனவேவேதங்கூற
லாதியினிற்கேட்டிருந்துமவ்க்கிடுமிவந்தவிடத்தஞ்சினின்றேன்
போதுமினியுயிர்சுமத்தல் சுமந்தாலும்பழியலதுபுகழுமுண்டோ
நீதருவாழ்க்கையினுஞ் சீர்த்தியுறப்பொன்றுவதேசீரிதெனா

(இ-பு.) பிராமணர்களுக்கு நேரிட்ட இடரைநீக்காத அரசன் ஒரு
மிருகமேயல்லது அரசனாகான் என்று வேதஞ்சொல்லுவதை ஆதியிலே
கேட்டிருந்தும் இப்போது பிராமணனுக்கு நேரிட்டவிடத்தில்பயந்துநி
ன்றேன் உயிரைத் தாங்கிக்கொண்டிருப்பது இந்தமட்டிற்போதும் அல்
லது உயிரைச்சுமந்துகொண்டிருந்தாலும்பழிவருமேயல்லது புகழுண்
டாவதில்லை ஆதலால் நீங்கைத்தருகிற இந்தவாழ்வி லிருப்பதைப்பார்க்கி
லும் உயிரைவிடுவதே நன்மையாகும் புகழுமுண்டாகும்-எ-று. (௫௯)

மடமாதைப்புலிக்குணவாகமுங்கி நெடுந்துயருழக்கு மறையோன்றனி
மடமார்புமணிமுடியுநிலம்படிய வீழ்ந்துறையர்தவிர்தியென்று
மிடலானதொன்றுமிலாத் தமியேனிரகத்தின்வீழ்கின்றேனென்
னுடைநாடுமென்குலமுநிதியமுநின் வசத்தவென்றுரைத்தோனான்

(இ-பு) என்றிவ்வாறெண்ணாத் தன்மனைவியைப் புலிக்கு ஆகாரமாகக் கொடுத்துவிட்டுத் துயரப்பட்டுக்கொண்டிருக்கிற பிராமணனுடைய பாதத்தில் அகன்றமார்பும் ரத்தினங்கள்பதித்தமகுடமும் பூமியில் படியப்பத்திராயுவென்னும் அரசன்பணிந்து ஐயரே துன்பப் படவேண்டாமென்றுசொல்லிப் பலமென்ப தொன்றுமில்லாத தமியேன் நரகத்தில் விழுகின்றேன் என்னுடைய தேசமுங் குலமுந் திரவியமும் தேவரீர் வசமாக ஒப்பித்தேனென்று சொன்னான்-எ-று. (உ௰)

மாறிலாத்திறல்வேந்தன் வாய்மொழிகேட்டருமறையோன் வழங்
குங்கண்ணினன், வீறிலான்சிறமிழந்தான் பலியெடுத்தான் சுகமிழந்தான்
வினையின்மூங்கைப், பேறுளாநூலிழந்தான்மனையிழந்தானினைதரும்
பேறுநீத்தா, னுறினுமொப்பதென்றேவரசனெனக்கூறியிஃ துரைப்பது
றுரைன்.

(இ-பு.) மாறாத வெற்றியையுடைய அரசன்சொன்ன வார்த்தையைக் கேட்டு அந்தப்பிராமணன் சொல்லுகிறான் கண்ணின்ஒளியிழந்தவனும் வன்மையிழந்தவனும் பிச்சையெடுப்பவனும் சுகமிழந்தவனும் பாவத்தினால் ஊமைத்தன்மையுடையவனும் பூணூலிழந்தவனும் மனைவியையிழந்தவனும் இம்மைப்பயனிழந்தவனுமாயிருப்பவன் விசனம் நீங்கிச் சொல்லத்தக்கதென்னிருக்கின்றது அரசனேயென்றுசொல்லிப் பின்னும் அந்தப்பிராமணன் இந்தவார்த்தை சொல்லத்தொடங்கினான்-எ-று, ()

என்னுடையதுயாமுந்தீர்க்காவியுங்கொண்டிருந்தவங்களியற்றவேண்டி
னுன்னுடையகுலவனிதை கீர்த்திமாலினியையெனக் குதவல்வேண்டு
மன்னவவென்றநுங்கொடிய வடுவுளாவேல்போலரசன் மருமத்தாழ்ந்
நவனெவ்வித்தீழிபுணர்ந்த மிகுமாத்துயருமவனுழைய நகிலற்பாற்றே

(இ-பு) அரசனே என்னுடைய துயரம்நீங்கிப் பிராணனைவைத்துக்கொண்டு நான் தவங்கள்செய்யவேண்டுமென்கிற எண்ணம் உனக்கிருக்குமானால் உன்னுடைய தர்மபத்தினியாகிய கீர்த்திமாலினியை யெனக்குக்கொடுக்கவேண்டுமென்று சொன்னான் - அப்படிசொன்னவுடன் அந்தக்கொடிய வார்த்தையானது அரசனுடைய மார்பில் வேல் தைத்ததுபோலிருந்ததினால் ஐயரே, தர்மத்துக்குமாறான இழிவுள்ள வசனஞ்சொன்னீர் இந்தவார்த்தைசொல்லலாமோ என்று ராசன்சொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான்-எ-று. (உ௨)

கனைகுரற்றெண்கட லுடுத்தகாசினியின் மறைவல்லோய்கலைவல்லோ
ர்க்கு, மூனையிடத்தினுயிர்கொடுப்பர் மூழுநிதியத்தொகைகொடுப்பர்மூ
கமன்சொல்வர், ஆனைபரித்தேர்கொடுப்பர் கரிகொடுப்பர்பரி கொடுப்பர
ன்றித்துணையாயுள்ள, மனைகொடுத்துப்புகழ்படைத்த மன்னருண்டே
லுரையென்றான்மன்னர்கோமான்.

(இ-பு) பிராமணச்சிரேஷ்டரே ஒலிக்கும் ஓசையுடையதாய்த் தெளிவுள்ள கடல்சூழ்ந்த இவ்வுலகில் அரசர்களாயிருப்பவர்கள் பிராமணர்கள் பொருட்டுத் தங்களுயிரைக்கொடுப்பார்கள் மிகுந்த திரவியங்கொடுப்பார்கள் உபசாரவார்த்தைசொல்வார்கள் விரைவாகச்செல்லுங் குதிரைகட்டியதேர்கொடுப்பார்கள் குதிரைகள்-யானைகள் - கொடுப்பார்கள் இவ்வளவேயல்லது இல்லறத்துக்குத் துணையாகிய மனைவியைக்கொடுத்துப்புகழ்படைத்த அரசர்களுண்டாயிருந்தால் சொல்லுமென்றான் பத்திராயுவென்னும் அரசன்-எ-று (உ௩)

செங்கோன்மையரசர்பிரான் செப்பியசொல்செவிபுகுதச் சிவந்துநோக்கி
வெங்கோன்மையரசியற்றும் விறல்வேந்தேபழியிதனுன்மேவினாலுந்
தங்காதவகையெற்றுஞ் சாந்தியறிவேனணங்கைத்தருதியின்றே
லுங்காருந்தழனரகம்புகுதியெனச் சபிப்பனிறுவதியென்றான்

(இ-பு) செங்கோல்மாறாத அரசனிவ்வாறு சொல்லிய சொல்லானது காதிற்பட்டமாத்திரத்தில் பிராமணன் கோபத்துடன் பார்த்துக் கொடுங்கோல்செலுத்தி ராசாங்கஞ்செய்யும் அரசனே இதனாலேயெனக்குப் பாவஞ்சம்பவிப்பதாயிருந்தாலும் அது தொடாத வண்ணம் சாந்திசெய்துகொள்ள என்னாலாகும் ஆதலால் உன்மனையாளைக்கண்டு கொடாவிட்டால் பாவிகளையுண்ணத்தக்க நரகத்தில்விழும்படி உனக்குச்சாபங்கொடுப்பேன் இனிஎன்னசொல்லுகிறாய் சொல்லென்றான்-எ-று. (உ௪)

(வேறு.)

ஆழ்ந்தகேள்விமறையோனிறைபுஞ்சுடுசொல்வாளாற்
போழ்ந்தநெஞ்சககருகப் பொருமிப்பொருமிப்புவிமேல்
வீழ்ந்துவீழ்ந்தாங்கெழுந்து விழிநீர்க்கடலுள்ளழியா
தாழ்ந்துநெஞ்சங்கூர்ந்து தகைவேந்திவைகணிலையும்

(இ-பு) வேதசாஸ்திரப்பயிற்சி நிறைந்துள்ள அந்தப்பிராமணன் சொல்லுஞ்சுடுசொல்லாகிய வாளினால் பிளக்கப்பட்ட மனம்வெதும்பி அழுதழுது பூமியில் விழுந்து விழுந்து பின்னுமெழுந்து கண்ணீர்த்தாரை கடல்போற்பெருக அதிலாழ்ந்தழிந்து ஒன்றுந்தோன்றாத மனமுள்ளவனாய்ப்பெருமைப்பாடுள்ள அரசனிவைகளையெண்ணுகிறான்-எ-று, (உ௫)

மாருக்கர்ப்பிணியினை மறையோற்களிக்கிலையைரய்
வேறுய்மறந்தின்றனாத்தால் வினையேபுரியுமன்றியேன்
கூறுபவள்கூர்பிறையுங்கொன்றைத்தாமரையுஞ்சொருகு
பாராதரிக்குஞ்சடையோனருளேதெனவுரைநியேன்

(இ-பு) அறியாத தன்மையுள்ள இவனைப் பிராமணனுக்குக் கொடுத்தால் வசைவந்துசேரும் அல்லது மறுத்து வேறுசச்சொன்னால் பிராமணன்சாபங்கொடுப்பான் இருதலையுடனிருக்கும் பிறையினையுங் கொன்றைமாலையினையுந்தரித்துக்கொண்டு ஆத்திமாலையினையுந் தரிக்கவிருப்புஞ் சடாமுடியையுடைய பரமசிவத்தின் திருவருள் எவ்வா றிருக்கின்றதோதெரிகிலன்-எ-று. (௨௬)

பொல்லாநரகத்திடையே புகுமாறயிருக்கெடுத்த
கல்லாடலையுமிக்க வயந்தமதுபோற்றகவி
வில்லார்மணிப்பூண்வேந்தர் வினையக்கேட்டுவியப்பத்
தல்லாமாந்தரிழிப்பக் கனலாயப்புகுவேனென்று

(இ-பு) பொல்லாதநரகத்தில் உயிர் விழுகிறதென்றால் அது வசிதான தல்லவே ஆதலால் மனையவளை விரும்பிக்கேட்கிற பிராமணனுக்குக் கொடுத்து ஒளியுள்ள ரத்தினாபரணங்களணிந்த மன்னவர்கள் இந்தச் சேதியைக்கேள்விப்பட்டுச் சந்தோஷிக்கவும் கல்வியுணராதமாந்தர்கள் இழிவுசொல்லவும் தீயில்விழுவேனென்று-எ-று. (௨௭)

இருந்தமனைபோய்நினைக்கே யீர்சேவியவளையீந்தேன்
பெருங்குறிப்பதிவிற்கொடு நீபோமயென்றேபின்னர்
இருந்துமனையாட்டனைத் தாபோல்கென்றேந்தி
யருந்துமமிர்தம்போல் வானவிலைக்கும் இனமைந்தே

(இ-பு) தனக்குள் எண்ணிக்கொண்டு கோபங்கொண்டிருக்கும் வேதப் பிராமணனோ இவளையுனக்குக் கொடுத்தேன் கொடுத்தேன் நீர்வாசமாயிருக்குமகத்துக்குக் கொண்டுபோமென்று சொல்லிக் கற்புள்ளமனைவியைப்பார்த்துத்தாயே இந்தப்பிராமணனுடன் போவென்றுசொல்லித்துதித்துஉண்ணும் அமிர்தம்போன்ற அரசன்விளைவகத்திலேளர்ந்து-எ-று. (௨௮)

கண்ணினீர்வதுழ்தன்மாற்றிக் கருத்துமொருபானிறவித்
தெண்ணனீர்மூழ்கியெழுந்து சிவமந்திரமுட்கருதி
விண்ணூருலவுங்கதிரும் வெந்தாரபச்சிலைகொள்ளனல்வாய்
மண்ணவர்மயிறுன்வீழ்வா னெருப்பட்டுலவுங்கலை

(இ-பு) கண்ணிலிருந்து நீர்வருதலைமாற்றி மனதையொருவழிப்படுத்தித்தெளிவுள்ள நீரில் ஸ்நானஞ்செய்துவந்து பஞ்சாக்ஷரத்தை யுள்ளேயுச்சரித்துக்கொண்டு ஆகாயத்திற்செல்லுஞ்சூரியனும் வெப்பங்கொள்ளச்சிலைவிட்டெழுகிறதீயில் அன்புடன்விழ ஒருமைப்பட்டுத்தீக்குண்டத்தைப்பிரதக்ஷிணஞ்செய்யும்போது-எ-று. (௨௯)

ஐந்துமுகமுமொளிர வவிர்செஞ்சடையின்மீதே
மிந்துமொளிகொண்டிலக விடையேயிடையேயிதழிக்
கொந்தின்றுணர்சின்றசையக் கொக்கினிறகுமறகுஞ்
சிந்தர்பனிநுண்டிவலைச் செழுநீர்மகளுந்திகழ

(இ-பு) ஐந்துதிருமுகங்களும் பிரகாசிக்கவும் விளங்குகின்ற செஞ்சடையில் இளந்திங்கள் ஒளியுடன் பிரகாசிக்கவும் அதன்மத்தியில் தோன்றுகின்றபூங்கொத்துகளிருந் தசையவும் கொக்கிறகும் அறுகும் சிந்துகின்ற குளிர்ச்சியுள்ள துளியையுடைய கங்காதேவியும் பிரகாசிக்கவும்-எ-று. (௩௰)

மூன்றுகண்ணுந்சுடரமுமாறுஞ்சங்கக்கடல்வாய்
நான்றவிடமுண்டிருண்ட கண்டமணிமிற்கவி
வான்றதிரேழுலகு மெல்லாப்புவனத்தடுக்கு
மீன்றகன்னியென விருந்தாள்வாமத்திலக

(இ-பு) திரிநேத்திரங்களும் பிரகாசிக்கவும் ஒலிக்குஞ் சங்கங்களுடைக்கடலினிடத்துவாசுகிக்கவிஷபானஞ்செய்த கறுத்தகாலகண்டம்நீலரத்தினம் போலவிளங்கவும் நிறைந்துள்ள பதினான்குலோகங்களும் அவைகளேயன்றி மற்றப் புவனகோடிகளை எல்லாம் பெற்றும் கன்னியாயிருக்கும் உமையவள் இடப்பாகத்தில் விளங்கவும்-எ-று. (௩௧)

பவள்வரையிற்சூழ்ந்து படிந்நீலப்புயல்போற்
கவளயானையுரியைக் கவினுருவம்போர்ப்பத்
திவளும்புலியின்தோலைச் சேர்த்திப்புயங்கமேவி
துவளநீற்றின்றவளச் சுடர்ப்புண்டரமுந்தோற்ற

(இ-பு) பவளமலையில் கருமேகம் படிந்திருப்பதுபோல யானைத்தோற்போர்வை திருமேனி போர்ப்பவும் விளங்குகின்ற புலித்தோலையுடுத்து அதன்மேல் சர்ப்பக்கச்சணியப்பட்டுத் தொங்கி அசையவும் தாவள்ளியமான விபூதித் திரிபுண்டரங்களும் பிரகாசிக்கவும்-எ-று. (௩௨)

தெய்வமகளிர்கடிக்கச் சிறந்தமுழவங்கறங்க
வைபப்புங்கரடிக்கு மழவெள்விடையினேறிக்

கோய்புமலர்கொண்டடியிற் குளிரப்புனைவார்க்கெளிதிற்
கைவல்லியமின்றருளுங் கருணைக்கடல்வந்தெதிர்ந்தான்

(இ-பு) ரம்பாஸ்திரீகள் நடனஞ்செய்யவும் சிறந்ததாகிய குட்முழா ஒலிக்கவும் திரிபுர தகனஞ் செய்யும்போ தமைந்த தேரி லச்சுமுதியக்ஷணனில்வந்து நடித்ததாகிப் இளம்பியும் வெண்மை நிறமுமுள்ள இருமாலாகிய ரிஷபவாகனத்தின்மேல் ஆரோகணித்துக் கொண்டு செய்யதிருப்பள்ளித் தாமங்கொண்டு குளிரும்படி திருவடியில் அருச்சிப்பவர்களுக்கு எளிதாக மோக்ஷம் அருளுங் கிருபைக்கடலாகிய பரமசிவன் தரிசனங்கொடுத்தார்-எ-று, வையம்மூன்றுங்கடிக்கும் என்றபாடமாயின் இவ்வுலகத்தையுண்ணடித்த பால்விடையெனப் பொருள் உரைத்துக்கொள்க-வையம்-என்பது தேர்-பூமி, (கக)

கண்ணுமனமுங்குளிரக் கண்டானரசர்க்கரசன்
நிணமைம்பிறவிப்பகை யைச்செற்றேமெனமுகருதி
புண்ணுமமிர்தருண்டா னொருவனென்னக்களித்து
விண்ணுமண்ணும்பிறவுமானோனடியிற்வீழ்ந்தான்

(இ-பு.) அரசனானவன் தன்கண்களு மனமுங் குளிரும்படி தரிசித்து நிச்சயமாகப் பிறவிப்பகையாயுள்ள கர்மமுடைய ... யையொழித்தோமென்றுஎண்ணித் தேவர்களுண்ணும் அமிர்தம் உண்ட ஒருவன் களிப்பதுபோற்களித்து ஆகாயமும் பூமியும் மற்றவுலகங்களுமாய் நின்றருளும் பரமசிவத்தின் திருவடியிற் பணிந்தான்-எ-று. (கச)

வேறு.

தேவாதிதேவனைச்-சிற்குணனையற்புதனை
மூவாமுதலாய் முழுப்பொருளாய்நின்றானை
காவாய்பிறவிக் கடலீர்த்திக்கையிலைத்தே
னாவாயெனவேயின் னுண்மலர்த்தாள்பெற்றேனே

(இ-பு) தேவர்களுக்கெல்லாம் முதலாகிய தேவனாகியும் சிற்குணனாகியும் அற்புதனாகியும் - மூவாமுதலாகியும் - கடவுள்தன்மை நிறைந்த பொருளாகியும்-வீற்றிருக்குங்கடவுளே, அடியேனைக்காத்தருளவேண்டும்-பிறவிச்சமுத்திரத்தைநீந்திக் கரையேறமாட்டாமல் கைவிளைத்தேன் அந்தக்கடலைநீந்துவதற்குக் கப்பலைப்போல உன்னுடைய திருவடித் தாமரைமலரை இப்போது பெற்றுக்கொண்டேன்-எ-று. மூவாமுதல்-என்பது சிலகாலம் இளமையும் அதற்குமேல்கிழத்தன்மையும் அடையாமலிருக்குதல். முழுப்பொருளென்றதனால் சிலதேவர்க்குக்கடவுள்தன்மைகுறைந்திருக்குமென்பதாகக்கொள்க. (கரு)

உண்ணுறைபாயு வட்டாதெள்ளமுதாய்
மண்ணுமணியாய் மறைப்பொருளாய்நின்றானை
யெண்ணாலளவுபடாத் தன்பத்திட்டுழந்தேனை
கண்ணாலுறநோக்கிக் கையாற்றொழுகின்றேனே

(இ-பு) உண்ணப்படாததேனாகியும் தெவிட்டாதமதுரமுள்ள அமிர்தாகியும் கழுவப்படாத மாணிக்கமணியாகியும் வேதப்பொருளாகியுமிருக்கும்கடவுளே உன்னை இலக்கத்தினால் அளவுபடாத அன்பத்தினால்வருத்தங்கொண்ட அடியேன் கண்ணினால் தரிசித்துக் கைகளால் தொழுகின்றேன்-எ-று. மண்ணுமணி எக்காலத்தும் ஒளிமாறுமணி (கசு)

அன்புக்கோரன்பா யறத்துக்கறல்லறமாய்
வன்புக்குவன்பாய் வடிவொருவிநின்றானை
முன்புக்குணாவிலனாய் மூங்கைத்தொழில்புரிந்தே
னென்புக்குருக வெளியிற்பணிகின்றேன்

(இ-பு.) அன்புக்கு அன்பாகியும் தர்மத்துக்குத் தர்மமாகியும் கடினத்துக்குக் கடினமாகியும் உருவமின்றிநின்ற உன்னைமுன்பு சேர்த்துக்கொள்ள ஞானமில்லாதவனாய் ஊமைத்தன்மையுள்ளவன்போலிருந்தேன் இப்போது எலும்புகள் நெக்குவிட்டுருகும்படி வெளியில் பணிகின்றேன்-எ-று, (கஎ)

என்றேயரசன்களி பெருகியேத்தெடுப்பக்
குன்றாவிமயக்குலக் கொழுந்தின்கோமானும்
மின்றாதகாட்சிப் பெரியோயெழுகவெனத்
தன்றாளில்வீழ்ந்தானைத் தன்றிருக்கையாலெடுத்தான்

(இ-பு,) பத்திராயு என்னும் அரசன் இவ்வாறுசொல்லி ஆனந்த பரவசனாய்த்தோத்திரஞ்செய்ய குறைதலில்லாத மலையரையன்புத்திரியாகிய உமையவள்கணவர் மாறாதஅன்புமூழ்ந்தவனே யெழுந்திருவென்று தன் திருவடியில் பணிந்தவனைத் திருக்கரங்களால் எடுத்தருளினார்-எ-று, ()

எங்கிலையுந்தானு யிறைவனெடுத்துனதா
மன்னுநிலைதேர்வான் மறையவனாய்வந்தநாம்
பொன்னவிர்மாமேனிப் பொருப்பரையன்றன்மகள்காண்
டன்னிகரில்பார்ப்பனியாய்ச் சார்ந்தவளிரியலே

(இ-பு,) எப்பொருளும் தானாகிய இறைவன் எடுத்தருளி அன்பனே உன்னுடையபத்தியிலெல்லாரும் அறியும்படிக்கதாகநாமே பிராமணனாக வந்தோம் தனக்குநிகரில்லாத பிராமணஸ்திரியாகவந்தது பொன்மயமானமேனியையுடைய மலையரையன் புத்திரியாகியபார்வதிதேவியாம்-எ-று
கஅ

வந்துமறஞ்செய்த மறப்புலியுமாயைகாண்
சிந்தைகவலாதொழி நீயுன்தேவியுமா
யிந்தவுமையுடனே யெம்மையும்பூசித்ததனாற்
புந்திமகிழ்ந்தேன் பொருந்துவரங்கேளென்றான்

(இ-பு.) இங்கேவந்து பிராமணஸ்திரியை அடித்துத் தூக்கிக்கொ…
ண்டு போனவீரமுள்ள புலியோவென்றால் மாயையாகும் நீயுன்மன…
கவலைப்படவேண்டுவதில்லை நீயும் உன்மனைவியும் எம்மையும் உமைய…
ளையும் பூசித்ததனால் உள்ளத்தில்மகிழ்ந்தேன் உனக்குவேண்டிய வர…
கேளென்றார்-எ-று. (ச…

வேந்தர்பிரானுமது கேட்டுமெய்பனிப்ப
வேந்துமுலைமென்றோளி மயத்தின்றோளி யாடும்
போந்தபரிசெளிதோ வேறோர்பொருளுமுண்டோ
நீந்துயரக்கடலை நீந்தினேற்கென்றுரைத்தான்

(இ-பு.) பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கைக்கேட்ட பத்திரா…
யு உடல்கம்பிதங்கொண்டு உயர்ந்ததனங்களும் மென்மையான தோள்…
முடையபார்வதிதேவியாருடன் சுவாமிகள் எழுந்தருளியது எளிதா…
தோ துயரக்கடலைநீந்திய அடியேற்குக் கேட்கவேண்டிய வரமும் வே…
றேயிருக்கிறதோ-எ-று, (ச…

நீதிவரம்பிகந்து நின்றேனுமென்மனையுந்
தாதையுமென்யாயுந் தமியேம்படருழந்த
வேதமறக்காத்த விளங்கோவுமைந்தனுநின்
பாதமலர்சேரப் பணிப்பாயெனவேயும்

(இ-பு,) நீதிவரம்பைபக்கடந்துநின்ற அடியேனும் என்மனைவியும் அ…
டியேன் தாயுந்தகப்பனும் எங்களைக்காத்தூ சுவித்தவணிகேசனும் அ…
ன்புத்திரனும் தேவரீருடைய திருவடிமலரைச் சேரும்படி அருள்செ…
யவேண்டுமென்னவளவில்-எ-று. (ச…

காவலவன்றேவியுமெங் காரணனேயேற்பயந்த
மாவலவன்வண்புகழான் மன்னுசந்திராங்கதனு
மேவலருங்கண்ணொளி லங்கிளழுசீமந்தனியாம்
பூவையுநின்பாதம் புகுதப்பணியென்றாள்

(இ-பு,) அந்தராசன்தேவியானவள் சுவாமியைநோக்கி எங்கள்சு…
டவனே அடியாளைப்பெற்ற குதிரைச்சேவகத்தில் வல்லவனும் புகழு…
ளவனுமான சந்திராங்கதனும் பாணங்களையொத்த பார்வையையுடை…
கண்ணுளான சீமந்தனியும் தேவரீர்திருவடிகளை அடையும்படி அரு…
செய்யவேண்டுமென்றாள்-எ-று (ச…

இபாகவையுந்தாளை விசையோன்றனாதிருத்
தேவியொடுமாங்கவர்கள் செப்பும்வரமீந்தகன்றான்
மாவியலுந்தேர்நூண்டி மானவேன்மன்னவனுங்
காவிநெடுங்கண்ணியொடுங் காமர்பதிபுகுந்தான்

(இ-பு,) எல்லாப்பொருளுந் தாமாயிருக்கும் கயிலாசபதியானவர்,
அவர்கள்சொல்லியவரம் அருளிச்செய்து பார்வதிதேவியாருடன் எழுந்
தருளிவிட்டார் பத்திராயு நீலோற்பலமலர்போன்ற கண்களையுடையத
ன்மனைவியுடன் தேரிலேயிக்கொண்டு தன் அழகிய பதியிற்சேர்ந்தான்
எ-று, (சச)

வையம்பொதுநீங்க மன்னர்திறையளப்பத்
செய்யதனியாழியினை செல்லவொருகோலோச்சிப்
பொய்யில்பதினாயிரம் பருவம்பூதலங்காத்
தெய்யும்வரிசிலையானேந்தற்காசளித்தான்

(இ-பு,) தன்பதியிற்சேர்ந்த அவ்வரசன் இவ்வுலகம்பொதுவின்றித்
தன் ஒருவனுடையதேயாகவும் மற்றதேசத்தரசர்கள் இறைகொண்டுவந்
து அளக்கவும் நன்மையுள்ள தன் ஆக்கினைச்சக்கரம் நிகரின்றிநடக்கும் செ
ங்கோல்செலுத்தி சரியாகப் பதினாயிரம்வருஷம் பூமியைக்காத்து அரசு
செய்து தன்புத்திரனுக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டு-எ-று, எய்யு
ம்அம்புகளை வைத்தெய்யும்நீண்டவில்லினான் (சரு)

வேயனையமென்றோள் விளங்கிழையினொடிருந்த
பாயும்விடையோன் வரமளித்தபான்மையினான்
மாயனுநான்முகனுந் தேராமறைமுடியின்
சேயபதந்தேவியொடு தேர்வேந்தன்சேர்ந்தானே

(இ-பு,) பாயாநின்ற ரிஷபவாகனமுடைய சாம்பசிவமூர்த்தியானவ
ர் முன்னம் மூங்கிலையொத்த தோள்களையுடைய பார்வதி தேவி
யாருடன்எழுந்தருளிவந்து வரம் அருளிச்செய்த தன்மையினால் பத்தி
ராயுவென்னும் அரசன் தன்மனையாளுடன் திருமாலும் பிரமதேவனு
ஞ் சாணுதவேதாந்தப் பொருளாகிய மோக்ஷத்தையடைந்தான்-எ-று, ()

மன்னர்பரவவருஞ் சந்திராங்கதனுந்
தன்னிகரிறேவியொடுஞ் சார்ந்தான்சிவலோக
மென்னமுனிருத னியம்பவனுசேளாமு
னன்னெறிசேர்மாமுனிவர் நாதனிசைபாடினார்

(இ-பு,) அரசர்களெல்லாரும் புகழும்படி ராசாங்கஞ் செலுத்திய
சந்திராங்கதராசன் தன்தேவியுடன் சிவலோகஞ் சேர்ந்தானென்று சூத

முனிவர்சொல்ல நல்லொழுக்கமுள்ள நைமிசாரணியமுனிவர்கள் அந்த ச்சரித்திரங் கேட்டவுடன் பரமசிவன அருளின் பெருமையைப் புகழ்ந் து பாடினார்கள்-எ-று, (௯௭)

பதினன்காவது-பத்திராயுமுத்திபெற்ற-அத்தியாய

முற்றிற்று,

ஆக திருவிருத்தம் - அ௲௯௱

௨

சிவமயம்.

பதினைந்தாவது,

விபூதிமகிமையுரைத்த அத்தியாயம்

மற்றுமோர்கதைவிளம் பெனவருந்தவர்வழங்கச்
செற்றமில்குணவாம தேவன்புரிசெயலுங்
கற்றையஞ்சடைக்கடவுள் வெண்ணீற்றின் மாச்சதையுஞ்
சொற்றதன்மைநூற்குத மாமுனிவரன்சொல்வான்

(இ-பு.) இன்னமுஞ் சிவசரித்திரம் அருளிச்செய்யவேண்டுமென் நைமிசாரணிய முனிவர்கள்கேட்க நற்குணங்களையுடைய வாமதேவனெ ன்னும் ஒருமுனிவர்செய்த செய்கையும் செஞ்சடையையுடைய கயிலா பதியின் பரிசுத்தமான நிறமுள்ளதாய்ப் பெருமைதங்கிய விபூதிமா மியமும் சொல்லுகின்ற தன்மையுடைய வேதமுதலான சாத்திரங்க ணர்ந்த சூதமுனிவர்சொனனர்-எ-று. (௧

கொலைபெருக்கியகொடுந் தொழில்வாழ்க்கையரேனுந்
தலைமைபெற்றவிக்கதையினைக் கேட்டதன்மையினோர்
நிலைமைபற்றிய பவத்தொடுமும்மலநீங்கி
யலைவறப்பரசிவ பதமுத்தியேயடைவார்

(இ-பு.) எப்போதும் உயிர்க்கொலைசெய்கின்ற கொடியதொழிலை டைய பாதகரேயானாலும் முதன்மையாகிய இந்தச்சரிதையைக்கேட்ட தன்மையர்கள் தொடர்ந்து வருகின்ற பிறவியும் மும்மலமும்நீங்கி அ வற்றிருக்கும்படி சிவபதமாகிய முத்தியை அடைவார்கள்-எ-று. (௨

காமதேவனைமுருந்திய கடவுளைக்கடுக்கைத்
தாமதேவனைவழிபடு தகுதியன்றவத்தாற்
றூமதேவனும்புனித நற்றவினர்துதிக்கும்
வாமதேவனென்றுள னொருமாசிலாக்குணத்தோன்

(இ-பு.) மன்மதனை நெற்றிக்கண்ணினால் எரித்தவரும் கொன்றைப் பூமாலையணிந்தவருமாகிய பரமசிவனை ஆராதிக்கும் அன்பினை யுடைய வனும்தவத்தினால் அக்கினிதேவனும் முனிவர்களும் புகழும்படியாகிய ப ரிசுத்தமான குணமுள்ளவனுமாகிய வாமதேவனென்னும் ஒருமுனிவ னுளன்-எ-று. (௧)

கருத்துகேவலத்துற்றவன் புறத்துறைக்கருமத்
தருத்தியில்லவனீற்றினால் விளங்குமெய்யணியன்
விரித்தவேணியசிரையன் விளங்குவெண்கடாலந்
தரித்தசெங்கையனிறைய மேற்குநெனச்சமையா

(இ-பு.) மோக்ஷத்தில் கருத்தைவைத்திருப்பவன் உலகசம்பந்தமா ன காரியத்தில் விருப்பமில்லாதவன விபூதியே பூஷணமாகத் தரித்துக் கொண்டுவிளங்குந் திருமேனியையுள்ளவன் பரந்தசடையினை யுடைய வன் அரையில் மரவுரி தரித்திருப்பவன் விளங்குகின்ற வெண்கபாலந் த ரித்தசெங்கையன் இவ்வண்ணம் பிக்ஷைவாங்குகின்றவர்கள்போல வே ஷங்கொண்டு-எ-று, (௨)

புவலிமாந்தருக்கின்னருள் சுரந்திடும்பொருறயாற்
கவனமோடுலகெங்க ணுந்திரிதரு திகழலான்
சிவனுனேர்பவன்செய் தொழிலிகந்தவனொருநாள்
றவனியோர்புகழன் றில்பெருவனமடைந்தான்

(இ-பு.) இவ்வுலகத்தி லிருப்பவர்களுக்கு இனிய அருள் பொழியு ஞ்சாந்தகுணத்தினால்விரைவாகத்தேசமெங்குஞ் சஞ்சரிக்கும் பாதத்தை யுடையவன் சிவனுக்கொப்பானவன் செய்யுந்தொழிலை நீக்கினவன் ஒரு நாள் இவ்வுலகத்தார் புகழும் அன்றில் வனத்தையடைந்தான்-எ-று. (௩)

அரியமாமுனியடைதலு மயிலெயிற்றகல்வாய்க்
கரியமாகுணங்கச் சின்னூரக்கங்கணத்தா
னெரியுநீள்கடற்றிரை யெனநெளிபுருவத்தான்
பெரியமால்வரைமுழை யெனவிரிந்தபேழ்வாயான்

(இ-பு.) அருமையாகிய தவமுள்ள வாமதேவமுனிவர் அந்தவனத் தில் அடைந்தவளவில் வேலைபோத்தப்பற்களும் அகன்றவாயுமுள்ளவனும் கருநாகமாகிய அரைக்கச்சு அணிந்தவனும் சர்ப்பகங்கணத்தை யுடைய

வனும் நெருங்கியநீண்டகடலின் அலைபோல்மேலேநீட்ட புருவமுடையவனும் பெரியமலையின் குகைபோலிருக்கும் ஆழ்ந்த வாயினையுடையவனும்-எ-று. (௮)

கெட்டைவெண்பிறையிரண்டெனாவிணைப்புலால்கமழுந்
தட்டமென்றமென்றசக்கி யவ்வுதரத்தன்றழலாய்
வட்டமிட்டுழல்கணவி னன்வடவையருசிகைபோல்
விட்டெழுந்தசெங்குஞ்சியன்வெடிகுரலையான்

(இ-பு.) நீண்டுவெண்மையாகிய இரண்டுபிறையை வைத்திருப்பது போன்றபற்களை நாறிக்கொண்டிருக்கும் பற்களால்மென்றுமென்று அசக்கிக்கொண்டிருக்கும் உதட்டினையுடையவனும் அக்கினிமயமாய் வட்டமிட்டுச் சுழன்றுகொண்டிருக்கும் கண்களையுடையவனும் வடவாமுகாக்கினியின் சிகைபோலக் கொழுந்துவிட்டு மேலெழுந்த செம்மயிரையுடையவனும் இடிபோல ஒலிக்கும் குரலோசையுடையவனுமாய்-எ-று. (௯)

அஞ்சனக்கிரிதான்கொடு நடக்கெனவடைந்து
வஞ்சகத்துகவ்வக்கன மாமுனிவனைவதைப்பான்
நெஞ்சுசினத்தநீபோகலெ நிற்றியென்றுரையா
வெஞ்சினத்தொடுசேழ் இபதன்கரங்களால்விசித்தான்

(இ-பு.) வஞ்சகத்தையுடைய வலிய ஒருராக்ஷதன் நீலமலையானது கால்பெற்றுக்கொண்டு நடந்து வருவதுபோல வந்து பெருமைபொருந்திய வாமதேவமுனிவனைக்கொல்ல மனதிற்கோபங்கொண்டு (அம்முனிவனைப்பார்த்து) நீ போகாதே நில்லு நில்லென்று சொல்லிக் கொடியதான கோபத்துடனே பிடித்துக்கொண்ட தனகைகளால் இறுக்கினான்-எ-று. ()

நீண்டனைக்கையாற தழுவினனிருக்கவக்கியலன்
றேன்களிற்றிருநீறு மெய்பதிதலாற்றெடலான்
வாளரக்கன்வல் வுருவமும்பாவமுமாய
வேளனத்தெழுரு வொடுநின்றனன்விளங்க

(இ-பு.) பலமரம்போல விராகின்ற நீண்டகைகளால் தழுவியிறுக்கவும் பரிசுத்தனாகிய அம்முனிவனுடைய தோள்களில் பூசியிருக்கும் விபூதியானது தன்சரீரத்திற் பட்டதினாலும் அம்முனிவனை திருமேனியைப் பரிசித்ததினாலும் கொலைசெய்யும் அந்தராக்ஷதனுடைய கோரரூபமும் பாபமுந்தொலையவே மன்மதனைபோலப் பிரகாசியாநின்ற சௌந்தரியமுள்ள சரீரத்துடன் விளங்கும்படிநின்றான்-எ-று. (௧)

எரிசிகைத்தழற்கடவுளை யடைந்தவையாவும்
விரியுநல்லழலுருவமாய் விளங்குமசறென்னக்
கரியவல்லுருவொழிய வல்லரக்கனங்கணத்தி
லுருவப்பைம்பொனிறொளியவிர் மேனிபெற்றுயர்ந்தான்

(இ-பு.) எரிகின்ற சிகையையுடைய அக்கினிதேவனை அடைந்தபொருள்களெல்லாம் பரந்த நல்ல அக்கினிமயமாய் விளங்குவதுபோலக் கருமைநிறமுள்ள வலியஉருவமொழிந்தமாத்திரத்தில் அப்பொழுதேஅவ்வரக்கன் மாற்றுயர்ந்த பொன்போலவிளங்குமேனி பெற்றுயர்ந்தான்-எ-று.

தன்னுருக்கரந்தொழிந்திடத் தாகமும்பசியுந்
துன்னுதீக்குணந் தொலைந்தது பாவங்கடொலைய
முன்னுமுற்பவத் தியற்றியநோன்றதுமனத்தான்
முன்னிமாதவகேட்டியென நிலைநந்தினனமொழிந்தான்

(இ-பு.) தன்உருவம் மறைந்துநீங்கவே அந்தராக்ஷதனுக்குத்தாகமும்-பசியும்-மாறுமலிருந்த-தீயகுணமுந் தொலைந்தது-இப்போது பாவங்கள்தொலையும்படி பூர்வசென்மத்தில் கொஞ்சம் புண்ணியஞ்செய்து அந்தராக்ஷதனாயிருந்தவன் மனதினால் தன் உண்மைநிலையை யறிந்து வாமதேவமுனிவனைவணங்கி மகாதபசியாகிய முனிவரே கேளுமென்று சொல்லுகிறான்-எ-று. (௰௧)

வெப்பினுறுமபசியினுன் வனத்திடைமெலிந்தே
னொப்பிலாத்தவமுனிவ நின்னூறுபெற்றதனு
லப்புலாலுடலரும்பசிகொலைத்தொழிலகலச்
செப்புலாயதன்றுயதோர்திருவுருவமைந்தேன்

(இ-பு.) வெப்பத்துடன் எப்போது மாறுமலிருக்கும்பசியினால் இக்காட்டில் வருந்தினேன்-ஒப்பில்லாத தவமுனிவரே உம்முடைய பரிசத்தை அடியேன்பெற்றதினால் அந்தராக்ஷதஉருவமும் அடக்கக்கூடாத பசியும் கொலைத்தொழிலும் நீங்கிச் சொல்லக்கூடாததாகிய நல்லஉருவத்தையடைந்தேன்-எ-று. (௰௨)

உற்றுநின் திருக்கண்க ளாலொருகணநோக்கப்
பெற்றநாயடியே னுழல்பிறவிநோயகற்றப்
பற்றறுங்குணப்பரமன் வாழ்பாகதியடைய
முற்றுமென்னைநீபுரப்பது கடனெனமொழிந்தான்

(இ-பு.) ஒருக்ஷணப்போது உம்முடையகண்களால் என்னைப்பார்க்கும்படி பாக்கியம்பெற்ற நாயடியேன இயல்பாகவேபற்றற்ற குணத்தையுடைய பரமசிவன்வாழ்கின்ற பதியைப்பெறவும் இன்னமும் இவ்வுலக

த்தில் உழலுகின்ற பிறவிப்பிணிநீங்கவும் என்னைரட்சிப்பதுதேவரீர்கடமையேயாமென்றசொன்னான்-எ-று. (௰௩)

கேட்டமாமுனி புவகையுங்கருணையுங்கெழுமிக்
காட்டகந்தொறுந் திரிதருகடுந்தொழிலர்க்க
நாட்டுநீயெவணிங் குவந்தமைபெகுநவையா
வீட்டுதீயுரு வெடுக்கவென்னியற்றினையென்றான்

(இ-பு.) நல்லுருவம்பெற்றவன் இப்படிசொல்லியதைக்கேட்ட வாமமுனிவர் சந்தோஷமும் கிருபையும்பொருந்தி அவனைப்பார்த்துக் காட்டுவழியெங்குஞ் சஞ்சரிக்கிற் கொடியசெய்கையையுடைய அரக்கனே இவ்வண்ணம் பேசுகிற நீபாவன இவிடத்தில் வந்த காரணமென்ன பாவத்தையொழிக்கத்தக்க தீயதாகிய ராக்ஷதரூபம் எடுக்கும்படி யென்ன பிழைசெய்தனையென்று சொன்னார்-எ-று. (௰௪)

அந்தவாசகங்கேட்டலு மகமகிழ்ந்தரக்க
னெந்தநின்னருட்பெற்றி னிலெழுமையுமுணர்ந்தேன்
வந்தவாறெலாமோதுகேன் கேளெனவணங்கி
முந்தையுற்றதும்புகுந்ததுஞ் சோர்வறமொழிந்தான்

(இ-பு.) ராக்ஷதனானவன் அந்தவார்த்தையைக்கேட்டவுடன் மனமகிழ்ந்து வணங்கி ஐயனே உன்னுடைய கிருபையைப் பெற்றதினால் எழுபிறப்பும் அறிந்தேன் நான்வந்த வரலாற்றையெல்லாஞ் சொல்லுகிறேன்கேளென்று முன்னேசம்பவித்ததையும் வனத்தில்வந்ததையும் குறைவில்லாமல்சொன்னான்-எ-று, (௰௫)

(வேறு)

ஐயனேகேட்டியிந்தப் பிறவிக்கு முந்தைத்தோற்றம்
வையகம்புகழவாழ்துச் சயனென்னுமன்னன்
வெய்யபாதகங்களசெய்யு மிலேச்சர்க்குவேந்தனாகிச்
செய்தொழிலனைத்தையுமது சிறுதொழிலியற்றினேன்

(இ-பு.) ஐயாவேகேள் இந்தச்சென்மத்துக்குமுன் இருபத்தைந்தாம்பிறவியில் இவ்வுலகம் புகழும்படி வாழ்கின்ற துச்சயனென்னும் ராசனாய்க்கொடுமையானபாவங்கள்செய்யும் மிலேச்சர்களுக்கு இறைவனாகி நல்லதொழிலைச்செய்ய வொண்ணாமல் இழிதொழிலைச் செய்துகொண்டிருந்தேன்-எ-று, (௰௬)

வாழுநாளுலகுக்கெல்லாம் வருந்திடக் கொடுங்கோல்செய்தேன்
விழிவாய்மயிலன்னார்கள் வேண்டுநர்தமைவருத்துங்

குழிமாலியானையென்னவொரு பகற்றேயர்தாகத்துப்
பாழியஞ்சிறையிலெண்ணில் பாவையர்க்கலக்கணசெய்தேன்

(இ-பு.) அவ்வாறுவாழும்நாளில் உலகுக்கெல்லாம் வருத்தம் உண்டாகும்படி கொடுங்கோல்செலுத்தினேன் விழிக்கலிபோன்றவாயும் மயில்போன்றசாயலும் உடையமாதர்களில் எனக்கு விருப்பமானவர்களையெல்லாம் விவாகஞ்செய்துகொண்டும் வருத்துகின்ற யானைபோல ஒருநாள் அவர்களைப் புணர்ந்து அதன்பின்பு பலமானசிறையினிடத்தில் காவற்படுத்தி அனேகம்மாதர்களுக்குத் துன்பத்தைச்செய்தேன்-எ-று. (௰௭)

பின்னரோர்போழ்துந்தோயேன் பீடுசாலெழுகுலத்திற்
கன்னிமாரீசர்மாதர் வணிகர்தங்கற்பின்மிக்கோர்
தொன்னெறிவேளாண்செல்வத் தோகைபராயாக
வன்னியவருணத்துள்ள மகளிர்களனந்தங்கோடி

(இ-பு.) விவாகஞ்செய்துகொண்ட தினத்தில் புணர்வதேயன்றி மறுபடியொருநாளாவது அம்மாதரைப்புணரேன் பெருமைமிகுந்த பிராமணகுலமாதர்கள் க்ஷத்திரியகுலமாதர்கள் வைசியகுலமாதர்கள் பழமையானமுறையையுடைய சூத்திரகுலமாதர்கள் முதலாக அன்னியசாதியிலுள்ளமாதர்கள் அனந்தங்கோடி-எ-று. (௰௮)

கம்மியமகளிர்குன மடந்தையர்கழிகாரோடக்
கொம்மைவெம்முலையார்குன்றக் கொடிச்சியர்குறுங்கர்மாதர்
தம்பியற்குலசலமாதர் மஞ்சிகத்தையனல்லார்
சும்மையம்பரதமாதர் சுடுதொழிற்புலையமாதர்

(இ-பு.) கம்மாளக்குலமாதர்களும் ஊன்விற்குமாதர்களும் காரோடர்குலத்திற்பிறந்த இளமையுள்ளதாய் விருப்பத்தைத்தருந் தனமுள்ளமாதர்களும் மலையில்வாழுங்குறமாதர்களும் தோல்வினைசெய் மாதர்களும் தம்பியற்காருத குயவர்குலமாதர்களும் வண்ணாரச்சாதிமாதர்களும் நுளையர்குலமாதர்களும் நீசகுலமாதர்களும்-எ-று, (௰௯)

பங்கயன்படைத்தவிந்த வருணத்தின்பகுதிதம்மை
இங்கியான்கணித்துக்கூறற் கெளியவனல்லேனுள்ள
மங்கையர்குலங்கடோறு மனந்தமாய்வினைந்தன்றிக்
தங்கியகாதறீரப் பெற்றிலேன்காமந்தன்னால்

(இ-பு.) பிரமதேவன்சிருஷ்டித்த இந்தப்பகுப்புள்ளசாதிகளை நான் அளவிட்டுச்சொல்ல எளிதல்ல அந்தந்தச்சாதிகள்தோறும் அனந்தமாதர்களை விவாகஞ்செய்ததேயல்லது காமமிகுதியால் எனக்குண்டாகிய ஆசைநீங்கினேனில்லை-எ-று, (௨௰)

பிறிதொருசெயலுஞ்செய்யேன் காமநோய்மிகுத்தநெஞ்சி
னறிவொருசிறிதுமின்மையே னமைச்சர்தமொழியுங்கொள்ளேன்
சிறுதொழின்மருவிநின்றே னரசியல்சிறிதுந்தேரே
னெறில்பயிப்புதல்வர்தாமு மிகழ்ந்திடநோயின்மாய்ந்தேன்

(இ-பு) வேறொருதொழிலுஞ்செய்கிறதில்லை காமமென்கிற நோய் பொருந்தியநெஞ்சில் கொஞ்சமேனும் அறிவையுடையதில்லை மந்திரிகள் சொல்லையும் ஏற்றுக்கொள்ளேன் ஈனத்தொழிலைப்பொருந்தி யிருந்தேன் அரசாட்சியின் தன்மையித்தன்மையானதென்று சிறிதும் விசாரித்திலேன் வேகமாகச்செல்லும் வெற்றிபொருந்திய குதிரைபோன்ற செலுத்தும் புத்திரர்களும் இகழத்தக்கநோய்கொண்டு இறந்தேன்-எ-று. (௨௧)

இறந்தபின்காலதூதர் பாசத்தாலார்த்துவீக்கி
நிறைந்தொளிர்பரப்பிருப்புத் தூண்டிலென்குறியினோ
யறைந்தனர்பற்றியீர்த்துக் காலனைதிருமுன்காட்டச்
சிறந்தொளிபரந்தபூணான் சிலதனைநோக்கிச்சொன்னான்.

(இ-பு) இவ்விதமாக இறந்தபின்பு காலதூதர்கள்பாசத்தினால் விறுக்கிக்கட்டி ஒளிநிறைந்து பரந்த இரும்பினாலாகிய தூண்டிலின்முள்ளை என்னுடையதேகத்தில் சேர்த்தடித்து அசைப்பித்து இழுத்துக்கொண்டுபோய் யமனதிருமுன்னேகாட்டச் சிறந்து ஒளிபிரிந்த ஆபரணத்தை அணிந்த யமன் ஏவலாளிகளைப்பார்த்துச்சொன்னான்-எ-று. (௨௨)

ஆசியந்தநின்றிந்தனை யிணைகலந்தமெய்யிற்செய்த
பாவியையென்றுந்தீராப் படியற்றொழுக்கத்தினாக
கோவியலழித்தான் கூழைப்புசேர்வாய் தின்றான
மேவரோவிருமியென்ன வெடிபடவிளம்பினானே

(இ-பு) பாலின்புகைபோல வெண்மையுடைத்தவருமுள்ள அழகியவஸ்திரம் அணிந்த தன்மனைவியைப்புணராமல் சிறையில்வைத்துப்பாவியும் வருத்தவனைநீராத பொய்யொழுக்கம் உள்ளவனுமாகிய இவனைப் பெருமைப்படுகெடும்படி இந்திரியக்குழாய்புகைந்த நரகத்தில்பொருந்தக்கடவீர்களென்று மிகுந்தகோபத்துடன்சொன்னான்-எ-று. (௨௩)

கடலினும்பெரியவாய நரகிடைக்கடிதினுய்ப்ப
முடைகொளிந்திரியந்தன்னின் மூழ்கியுந்நீக்கிநீக்கி
குடவயிறகல்விலாவு நிறைதரக்குடித்துமிவ்வா
நடைவுறுவருடமையா முபிரமலக்கனுற்றேன

(இ-பு) சமுத்திரத்தைப்பார்க்கிலும்பெரியதாகியநரகத்தில் விரைவாகக்கொண்டுபோய்ச்சேர்க்கநாறுகின்றஇந்திரியத்தில் முழுகியுநீந்தி

யும் குடம்போன்றவயிறும் பக்கவிலாப்புறமும் நிறையும்படிகுடித்தும் இவ்வாறு அடைகின்ற மூப்பத்திரெண்டு பிரம்வருஷம் துன்பமுற்றேன-எ-று()

அழிமுள்டநரகநீங்கி யானைகுழிகோடிதாங்கும்
பழியுறுமுடலங்கொண்ட பசாசுமாவெடுத்துக்கானிற்
கழிவுறுத்தெய்வயாண்டு நூறவண்கழித்துமாய்ந்து
விழியழல்பொழியுஞ்சீற்ற வெங்கொலைப்புலியையானேன்

(இ-பு) கெட்டநாற்றத்தையுடைய நரகத்தைவிட்டுநீங்கி ஒருகோடி ஆண்குழிபொருந்திய பழிபாவந்தங்கிய பேயுருவங்கொண்டு காட்டில்நீங்காமல் நூறுதேவவருஷம் அவ்விடத்திலிருந்து பின்பு இறந்துகண்களில் தீப்பொறியைச்சொரிகின்ற கொலைத்தொழிலையுடைய புலியாகப்பிறந்தேன்-எ-று. (௨௫)

படுமலைமுழைபின்வைகும் பறந்தளாய்த்தோன்றினேன்பின்
சடைமயிர்ச்செந்நாயாகத் தரணியிலுதித்துமாய்ந்தேன்
சடைமலமருந்தப்பன்றி யாயினேனகாமரூபி
யுடையதீயுருவைப்பெற்றேன் ஞமலியாயுதித்துநின்றேன்

(இ-பு) பின்பு மலைக்குகையிலிருக்கும் பாம்பாகப்பிறந்தேன் பின்பு இவ்வுலகத்தில் சடையாகிய மயிரையுடைய செந்நாயாகப்பூமியிற் பிறந்திருந்துமாண்டேன் அதன்பின்பு மலத்தைப்புசிக்கும் கடைப்பட்ட பன்றியாகப்பிறந்தேன் பச்சோந்தியினுடைய உருவத்தைப்பெற்றேன் நாயாய்ப்பிறந்திருந்தேன்-எ-று. (௨௬)

வீழ்முகநரியாய்வந்தேன் விளிந்துபின்முயலாய்வந்தேன்
றாழ்வுறமானுமானே னந்துவானரமுமானேன்
காழ்சிறைக்கங்கமானேன் கடுநடைநகுலமானே
னூழ்வினைதாப்பக்காகத் துருவெடுத்துழன்றுவீந்தேன்

(இ-பு) நீண்டமுகமுள்ள நரியாய்ப்பிறந்தேன இறந்தபின்பு முசலாய்ப்பிறந்தேன பின்பு தாழ்ச்சியுற மானாய்ப்பிறந்தேன அதன்பின்புதத்துகின்ற குரங்காயும்பிறந்தேன பின்பு உறுதியான சிறகுள்ள பருந்தையப்பிறந்தேன் கடுநடையுள்ள கீரியுமானேன ஊழ்வினைதாப்பக் காக்கையாய்ப்பிறந்துழன்று இறந்தேன்-எ-று. (௨௭)

வல்லுகிரொண்குமானேன் வருபுவனத்துவாழும்
பல்பொறிக்கோழியானேன பாதகக்கரமுமானே
னில்லுறைபூசையானே னெறிகுரற்றவளையானேன்
கல்லிநீருண்ணுறுங்கூவக் கயத்துறைகமடமானேன்

(இ-பு) வலிய நகத்தையுடைய காடியாயும்பிறந்தேன இந்தப்பூமியில்வாழும் பலபுள்ளிகளையுடைய கோழியானேன் பாவமுள்ள கழுதையு

மானேன் விட்டுகளில்வாழும் பூனையானேன் கத்துகிறகுரலையுடையதவ ளையானேன் கல்லின்றுண்கின்றகுளத்தில் ஆமையாய்ப்பிறந்தேன்-எ-று. (

வரியுடைமீனுமானேன் மாய்ந்துமுடிகமுமானேன்
பரியபைங்கழலவுண்கப் படர்கிறைக்கூகையானேன்
சொரிமதத்தருவிதூங்குந் துளைக்கைமாலியானையானே
னிருபத்தோடைந்தாந் தோற்றமிவ்வனத்தரக்கனானேன்

(இ-பு.) வரிபொருந்திய உடலையுடையமீனானேன் இறந்துபெருச்சா ளியுமானேன்-பருத்தகாலும் இப்பொழிகக்கும் கண்களும் பாந்திற முள்ள கோட்டானுமானேன் அருவிபோல மதநீர்பொழியுந் துதிக்கையு ள யானையுமானேன் இருபத்தைந்தாம்பிறப்பி லிவ்வனத்தில் ராக்ஷதனானேன-எ-று. (௨௯

பாந்தவெங்கானந்தன்னிற் பறவைபல்விலங்குமக்க
ளிரந்தரந்தொடர்ந்துபற்றிக் கொலைசெய்துகிணங்கடுத்து
மரந்தவெம்பசிதீரா மயர்வுற்றேனமுதவாரி
சொரிந்திடும்புயலையொப்பாய்நினைக்கண்டேன்றுயரங்காணே

(இ-பு.) விசாலமாகிய இக்காட்டில் பலபட்சிகளை மிருகங்களைப் ம லமனிதர்களைத்தேடிக்கொண்டு பிடித்துக்கொன்று மாமிசங்களைத் தின் றும் வருத்தத்தைத்தருகிற பசியடங்காமல் துனபங்கொண்டிருந்தேன் இப்படியிருக்கையில் அமிர்தமழைபொழியும் மேகம்போலக் கிருபை பொழியும் உம்மைக்கண்டேன் கண்டவுடன முனனிருந்த துயரத்தை க்காணேன-எ-று. (௩௰

படியிறுனெடுத்தகாயம் பற்பலவவற்றினெல்லாங்
கொடியவெம்பாவமன்றித் தருமத்தைக்குறிக்கொண்டில்லே
னடியனேனின்னைக்கண்டின் றமாறனைதற்கென்செய்தே
னோ வெனவரக்கன்சொல்லத் தவமுனிநுவல்வதானான்

(இ-பு.) இவ்வுலகத்தில் நானெடுத்தசரீரம் அனேகங்களாம் அவ்வு டலங்கள்தோறும் கொடியபாவத்தைச்செய்ததல்லது புண்ணியமென்ப தை நினைத்ததுமில்லை அடியேன இப்போது தேவரீரைத்தரிசித்தத் தே வனுமானேன் இப்படியாவதற்கு என்னபுண்ணியஞ்செய்திருக்கிறேன் சொ ல்லும் ஐயா என்று அரசன்சொல்லத் தவமுனிசொல்லுகிறார்-எ-று. ()

முட்டெறுகானத்தென்னை முடுகிநின்கைகளாரக்
கட்டியகாலையென்மேற் கவினியதிருவெண்ணீறு
பட்டதுநின்மேலந்தப் பான்மையாற்பாவநீங்கி
விட்டதவ்வளவோமுன்னைப் பிறவியும்விளங்கமேலோய்

(இ-பு,) முள்கள் தைக்கும் இந்தக்கானகத்தில் ஓடிவந்து என்னை உ ன் கைகளாற்கட்டிப்பிடித்தபோது என்சரீரத்தில் அழகுள்ளதாயிருந்த திருநீறானது உன்மேற்பட்டது அதனால் உன்பாவம் நீங்கிவிட்டது அவ் வளவுதானு முனபிறப்புகள் தெரியும்படி மேலவனே-எ-று, (௩௨)

கோயிலாதியன்றயாக்கைத் தேவனும்நோய்திவின்றும்
வேயுலாந்தோளிபாகன் விபூதியின்பெருமைமுற்றுந்
தூயநான்முகனுமாலுந் துணிகலாத்தன்மைத்தென்றாற்
காயமாறுடிச்செல்லு மனிதரோகருதற்பாலார்

(இ-பு,) எளிதாகப் பிணியென்பதில்லாமற் பொருந்திய திவ்விய சரீ ரத்தையுடைய தேவியும்ங்கின்ற மூங்கிலைப்பொருத்த தோள்களையுடைய பா ர்வதிபாகனுடைய பரமசிவத்தினுடைய திருநீற்றின்பெருமை முழுவதும் பரிசுத்தனான பிரம்மதேவனும் மகாவிஷ்ணும் நிச்சயித்து அறியக்கூடாத தன்மையையுடையதென்றால் வெவ்வேறு தேகம் எடுத்துப்பிறந்து உழ லுகிற மனிதர்களோ அறிபத்தக்கவர்கள்-எ-று. (௩௩)

என்னினுந்திருநீற்றுண்மை யியம்புவன்சிறிதுகேட்டி
தென்னவன்றமிழ்நாட்டங்கோர் தீத்தொழின் மறைவல்லாளன
பன்னெடுங்காலம்பாரிற் பாவமும்பழியுமீட்டி
யங்கிலைநெறியுநீங்கி யந்தணர்திறனும்விட்டான்

(இ-பு.) மனிதர்களுக்கு அரிதென்றாலும் திருநீற்றின் பெருமையை ச் சிறிதுசொல்லுகிறேன்கேள் பாண்டியனுடைய தமிழ்நாட்டினிடத்தி ல் கொடியசெய்கையையுடைய ஒருபிராமணன் இவ்வுலகத்தில் பாவமு ம் பழியுஞ்சம்பாதித்து அதற்குச்சரியாக ஒழுக்கத்தினு மாறுபட்டுப்பி ராமணத்தன்மையும்விட்டான்-எ-று, (௩௪)

பொய்க்கவருடலானும் புன்றொழிற்களவினானுங்
கைக்கொள்வான்பொருள்களெல்லாங் கணிகையர்திறத்திலீந்து
மைக்கணார்வயத்தனாகிக் காமநோய்மலிபமேனமே
லிக்குவெள்கணைகள்பாய நிறைபழிந்திடையுநாளில்

(இ-பு,) பொய்சொல்லத்தக்க சூதாடுதலினாலும் இழிவானச்செய்கை யென்கிற திருட்டினாலும் சம்பாதித்து பிருந்ததிரவியங்களையெல்லாம் வேசையர்களுக்குக்கொடுத்து மையணிந்தகண்களையுடைய அந்தவேசை யர்வசப்பட்டவனாகிக் காமநோய் வருத்துதலினாலும் காமசரம் பாய்தலி னாலும் நிறைபழிந்து இளைக்குநாளில்-எ-று. (௩௫)

ஒருபெருங்கங்குற்போழ்தி லூனவிழைபுலையனில்லி
மருவியமனைவிதன்னைக் கரவினின்மணக்குங்காலைத்

திருகுவெண்ணீற்றினத் திசன் செங்கைவாளுறையினீக்கி
வெருவரத்தோன்றிபார்த்து வீசினன்விளிந்துவீழ்ந்தான்

(இ-பு,) ஒருநாள் பாதிராத்திரியில் ஊனையே விரும்புகின்ற ஒருத்தன்வீட்டிலிருக்கும் மனையாளைச் சோரத்தனமாகப் புணரும்போது அந்தநீசன்கண்டு மிகுந்த கோபமுள்ளவனாய்க் கைவாளை உறையினின்றுங் கழற்றி அக்கொடியவ பயப்படும்படி ஆரவாரித்து வீசினான் அவனிறந்தான்-எ-று, (௩௮)

பட்டபின்றனைப்பற்றிப் புலைமகன்படர்ந்தசேரிக்
கிட்டமுள்வேலிக்கப்பா லெறிந்திடும்பிணத்தின்மீதச்
சுட்டவெண்சாம்பரேய்காற் சுணங்கன்வெம்பசியதாலே மித்
தட்டவாய்கொண்டுகவ்வித் தசைபறித்தருந்துங்காலை

(இ-பு,) அந்தச்சோரன் இறந்தபின்பு நீசனவன் பிணத்தின்காலைப்பற்றிச் சேரிக்கிட்டிருக்கிற முள்வேலிக்கு அப்பால் எறிந்துவிட்டான் அந்தப்பிணத்தின்மேல் வேறொருபிணத்தைச்சுட்ட வெண்சாம்பலிற்படிந்தகாலையுடைய நாயானது பசித்தனக்குள்ள பசியினால் பற்களையுடைய வாயைக்கொண்டு கவ்விமாமிசத்தைப்பிடுங்கித்தின்னும்போது-எ-று,

திண்டிறற்காலத்தூதர் சேர்ந்தவன்றன்னைப்பற்றிக்
கொண்டனரேகிற்றிவாய் கும்பியின்வீழ்ந்துமாங்கண்
கண்டனருமையாள்பங்கன் கணங்களக்கணத்திலெய்தித்
தண்டஞ்செய்காலதூதர் தங்களைத்தண்டஞ்செய்யா

(இ-பு.) மிகுந்த பலமுள்ள யமதூதர்கள்வந்து இறந்தவனைப் பிடித்துக் கொண்டுபோய்த் தீநரகில் தள்ளும்போது பரமசிவனுடைய கணங்கள்கண்டு இறந்தவனைத்தண்டிக்கிற காலதூதர்களைத்தண்டித்து-எ-று

கும்பியின்வீழ்வோன்றன்னைக் குருமணிவிமானத்தேற்றி
யும்பரினேகுவார்முன் கரியகோட்டெருமையூர்ந்து
வெம்பியமறலிபெய்தி விழுத்தகவொன்றில்லானை
யம்பிகைபாகன்றன்பால் விடுவதற்கடுத்ததென்னே

(இ-பு.) நரகத்தில்விழுகின்றவனை நிறமுள்ள ரத்தினங்கள்பதித்த விமானத்திலேற்றி ஆகாயத்திற் செல்லுகின்றவர்கள் எதிரில் முனைக்கொடிப்புள்ளயமன் கரியகொம்பினையுடைய எருமைக்கடாவிலேறிக்கொண்டுவந்து மேலானதகுதி எவ்வளவுமில்லாதவனைப் பார்வதி பாகனிடத்தில்விடுப்பதற்குண்டான நீதியென்ன-எ-று, (௩௯)

சொல்லுதிரெனலுமீசன் தூதுவர்சொல்வரின்றோன்
புல்லியபிரேதவங்கம் பூதியிற்பொலிதலாலே

வல்லியத்துரிவையார்த்த மறைமுதன்மறையோன்றன்பாற்
செல்லுதிரென்னா ரென்ன விடைதரயாங்கள்சேர்ந்தோம்

(இ-பு,) சொல்லுங்களென்ன சிவதூதர்கள் சொல்லுகிறார்கள் இவனுடையபிரேதசரீரம் திரிபுண்டரப்படியினாலே புலித்தோல் உடைதரித்தருளியபரமசிவன்நீங்கள்போய் அந்தஉயிரை நம்மிடத்துக்குக் கொண்டுவாருங்களென்று கட்டளையிட்டதினால் நாங்கள்வந்தோம்-எ-று, (௪௰)

பொன்னவிர்சடையினான்ற னேவலிற்புகுந்தனின்றே
மின்னவிர்பூணினாய்நீ விலக்குதற்கெளியமல்லே
மென்னவோர்மாற்றங்கூறி யெரிமணிவிமானத்தோடு
மன்னவன்றன்னைக்கொண்டாய் கானுலகடைந்தானன்றே

(இ-பு,) பொன்னிறமுள்ள சடைமுடியையுடைய பரமசிவன் கட்டளையினால் நாங்கள் வந்தோம் ஒளிவிளங்கும் ஆபரணம் அணிந்தவனே நாங்கள் உன்னால் விலக்கத்தக்க எளியர்களல்லோமென்று ஒருவார்த்தை சொல்லிவிட்டு ரத்தின விமானத்துடன் அவனைச் சிவலோகங் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்-எ-று, (௪௧)

ஆதலினிருதவண்ண லணிதிருநீற்றின்றன்மை
யோதுதற்கெளிதோபொல்லா வுருவெடுத்துலகிற்றீராப்
பேதுறமுணர்வின்பாவப் பிணியினரேனுந்தொட்ட
போதினேபுனிதராகிப் பொன்னுலகடைவரன்றே

(இ-பு,) ஆதலால் ராக்ஷதஅண்ணலே திருநீற்றின்பெருமை சொல்லுதற்கெளிதானதல்ல பொல்லாத உருவெடுத்து உலகில் நீங்காததுன்பம் அடைகின்ற புத்திபூர்வமான பாவிகளேயானாலும் விபூதியைத்தொட்டமாத்திரத்தில் புனிதர்களாய்ப் பொன்னுலகம் அடைவார்கள்-எ-று,(

அந்தவெண்ணீற்றையானு மரன்றிருவடியார்போல
விந்தமெய்முழுதும்பால்போ லிலங்கிடவணிந்துநின்றேன்
மந்தரச்சிகரிபோலு மணிப்புயத்தரக்கவென்று
சிந்தையிலளியவாமத் தேவன்றான்செப்பினானே

(இ-பு,) மந்தரமலையின் சிகரத்தையொத்திருக்கின்ற அழகிய புயமுள்ள அரக்கனே அந்த விபூதியை நானும் சிவனடியார்கள் தரித்துக்கொண்டிருப்பதுபோல இந்தச்சரீரமுழுவதும் பால்நிகராய் விளங்கும்படி தரித்துக்கொண்டிருக்கிறேன் என்றுமனதில் கிருபையுள்ள வாமதேவமுனிசொன்னார்-எ-று, (௪௩)

ஐயனேபோற்றிபோற்றி யமலனேபோற்றிபோற்றி
துய்யநீறளித்தென்பாவத் தொடர்பறுத்திட்டாய்போற்றி

யுய்யுமாறடியேனின்னை யெதிர்தரவுய்த்தநன்மை
மையமுகுரைத்தாயுமறன் றிருவருள்வளத்தாற்சொல்வேன்

(இ-பு.) ஐயனே போற்றி போற்றி நிர்மலனே போற்றி போற்றிவி யதாகியதிருநீறு கொடுத்து அடியேன் பாவத் தொடர்ச்சியை அறுத்தவனே போற்றி அடியேன் கடைத்தேறும்படி தேவரீரைத் தரிசிக்கக் கூட்டியருளினை குற்றமற்ற குணத்தையுடையவரே உம்முடைய அருளின் பெருமையென்றே சொல்லுவேன்-எ-று. (சச)

முடக்குளைத்தவினைநறி முந்தைமுப்பிறப்பினுயே
னடுதொழின்மிலேச்சர்தேசத் தரசியற்றுங்காலைத்
தொடக்கியமறையோன்றன்பாற் றாயநீர்ப்பழனமொன்னறக்
குடங்கையிற்றெண்ணீரேந்திக் கோடியென்றுதகஞ்செய்தேன்

(இ-பு.) நாயேன முற்பிறப்பில் சிங்காசனத்தி லிருந்துமிலேச்சதேசத்தில்அரசாட்சிசெய்யும்போது வேதமோதிய ஒரு பிராமணனிடத்தில் என்னுள்ளங்கையில் நீர்வார்த்துக்கொண்டு இந்தவிளைபூமியை நீதானம்வாங்கிக்கொள்ளென்று தத்தஞ்செய்து கொடுத்தேன்-எ-று, (சரு)

பருமரத்தடலையோடும் பருவங்கள்பலன்கள்பொய்யாத்
திருமலிகழனியொன்றை யளித்தருள்செய்தநன்கா
லிருபதோடைந்தாந்தோற்றத் திருந்தவயோகியைக்கண்
டருவினைதுலைப்பாயென்ன மறலியுமன்றுசொன்னான்

(இ-பு.) பருத்த மரங்களுள்ள சோலையுடன் காலந்தோறும் பலன் தப்பாமல்கொடுக்கும் வளமிகுந்த ஒருவிளை நிலத்தைத் தானஞ்செய்தன்மையால் இருபத்தைந்தாம்பிறவியில் ஒரு சிவயோகியைத் தரிசித்துப் பாவம் நீங்குவாயென்று யமதர்மராசனும் அந்நாளிற்சொன்னான்-எ-று. ()

அன்னதேவிளைந்தநன்காலடியனேனின்னைக்கண்டு
துன்னியபாவநீங்கித் தூயநல்லுருவமெய்தி
நன்னிலையுணர்வம்பெற்றே னவையிலாயின்னுமொன்று
பன்னுவதுண்டுகேட்டி யென்றடிபணிந்துசொன்னான்

(இ-பு.) அத்தன்மையாகவே இப்போது விளைந்த நன்மையால் அடியேன்தேவரீரைத் தரிசித்து என்னைப்பற்றிய பாவம்நீங்கிப் பரிசுத்தமானதே வருபம்பெற்றுநல்லநிலைமையுள்ள உணர்ச்சியும் பெற்றேன் குற்றமில்லாதவரே இன்னமொன்று சொல்வதுண்டு அதையுங்கேளுமென்று அவர்பாதத்தைப்பணிந்து சொல்லுகிறான்-எ-று, (சஎ)

வெள்ளைவெண்ணீறுதன்னை மேனியிலணியுமாறுந்
தொல்லைவெம்பிறவிநீக்கு மந்திரந்துதிக்குமாறும்

பிள்ளைவெண்பிறையானீறு பிடித்திடுங்காலந்தானுங்
கொள்ளைவெவ்வினைகளைந்தாய் கூறெனமேலோன்கூறும்

(இ-பு.) வெண்மைநிறமுள்ள திருநீற்றைச் சரீரத்தில்தரித்துக்கொள்ளுகிறவிரமும் கொடியதாகியபழையபிறவியைக் கெடுக்கத்தக்க திருமந்திரஞ்செபிக்கிறவிரமும் இளம்பிறைபணிந்த பரமசிவன் விபூதியையுண்டாக்குங்காலமும் மிகுந்த கொடுமையுள்ள என்வினைதீர்த்தவரே சொல்லுமென்ன முனிவர்சொல்லுகிறார்-எ-று, (சஅ)

பதினைந்தாவது - விபூதிமான்மியமுரைத்த- அத்தியாயமுற்றிற்று,

ஆ திருவிருத்தம்-அஎஅ.

உ

சிவமயம்,

பதினாறாவது,

திரிபுண்டரமுரைத்த அத்தியாயம்

அந்தரத்தகடணவிய சிகரத்துமகன்ற
கந்தரத்திலும் விஞ்சையர்கடிமணமயரும்
சுந்தரத்துணர்க்கற்பகப் பொங்கர்சூழ்சாரன்
மந்தரக்கிரியெனப் பெயருடையுமால்வரையின்

(இ-பு,) ஆகாயமுகட்டை யளாவிய சிகரத்திலும் விசாலமாகிய குகைகளிலும் வித்தியாதரர்கள் விவாகஞ் செய்துகொள்ளத்தக்க சுந்தரமானபூங்கொத்துகளையுடைய கற்பகச்சோலைசூழ்ந்த சாரலுள்ள மந்தரகிரியெனப்பெயர்பெற்ற பெரியமலையில்-எ-று, (க)

தேங்குகங்கையுந்திங்களுந்திருமுடிக்கணிபர்
வேரங்கல்போல்வருமுருத்திரருலப்பில்பல்கோடி
தாங்குமால்விடைப்பரிநின்றுமிழிந்தடிதாழ்ந்து
வீங்குதோளினர்மான் மழுக்கரத்தினர்மிடைய

(இ-பு.) நிறைந்த நீர்வடிவமாகிய கங்கையையுஞ் சந்திரனையும்அணிந்து மலைபோல்வருகின்ற பலகோடி ருத்திரர்கள் தாங்குகின்ற பெரியரிஷபவாகனத்தினின்றுமிழிந்து பரமசிவனுடைய பாதத்தில் வணங்கிப் பருத்ததோள்களையுடையவர்களும் மானுமழுவும் ஏந்தியகையையுடையவர்களுமாய் நெருங்கவும்-எ-று, (உ)

ஆழியேமுதலம் படையங்கையினேந்தி
வாழிநாரணனெண்ணி லர்வழுத்துபுநிற்ப

ஆதிநான்முகனுலகுயிர் யாவையும்படைக்கும்
பாதியம்புயநான் முகரளப்பிலர்பணிய

(இ-பு.) சக்கரமுதலாகிய பஞ்சாயுதங்களை அழகிய கைகளில் தாங்கிக்கொண்டு அளவில்லாத விஷ்ணுக்கள் துதிசெய்துகொண்டு நிற்கவும் ஊழிகாலமுதல் உலகத் துயிரையெல்லாம் சிருஷ்டிக்கும் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் நான்முகங்களையுடைய அளவற்ற பிரமாக்கள் பணியவும்-எ-று. சக்கரம்-சங்கு-கோதண்டம்-வாள்-தண்டம்-இவை-பஞ்சாயுதம்

இந்திராதியர்வானவர் விஞ்சையரியக்கர்
சந்திராதித்தர் கின்னரர்தானவராக்கர்
சிந்துராநனத்தனை முலைத் தெரிவையெழுவீர்
விந்தையின்றருமேலங் காண்வேலின்குமரன்

(இ-பு.) தேவேந்திரன் முதலிய தேவர்கள் வித்தியாதரர்கள் இயக்கர்கள் சந்திரசூரியர்கள் கின்னரர்கள் தானவர்கள் அரக்கர்கள் சிந்தூரப்பொட்டணிந்த முகத்தையும் அழகிய தனங்களையுமுடைய சப்தமாதர்கள் பார்வதிதேவியார் பெற்றருளிய விநாயகர் வேலாயுத மேந்திய சுப்பிரமணியக்கடவுள்-எ-று. அபிராமி மாகேச்சுவரி கவுமாரி நாராயணி வராகி இந்திராணி காளி இவர்களே சப்தமாதர்கள். (௫)

நாகமன்னவர் நாரதாதியர்சிவிநூம்
போகமேவிய பொன்னுலகத்துமாமுனிவர்
யாகஞானெறி வசிட்டனுயிருந்தவன்முதலாச்
சோகமோகமின் மறைமுனித்தலைவர்களுஞ்சூழ்

(இ-பு) நாகராசர்கள் நாரதர் முதலாகச்சொல்லப்பட்ட போகம்பொருந்தியதேவலோகத்துமுனிவர்கள் யாகங்கள் செய்யும் வேதசாஸ்திர முறைமைதெரிந்த வசிஷ்டர்முதலாகிய காமாதிகளைநீக்கிய பிராமணரிஷி சிரேஷ்டர்கள்சூழவும்-எ-று, (௬)

சுருப்புவிற்றுணை யெனப்பொலிகரியநீள்புருவ
வுருப்பசித்திரு முதலியவரர்வையரோடும்
பொருப்பினிற்பிறந் திழிகருபுனிதநீர்க்கங்கைத்
திருந்தமாதிய நதிக்குலவனிதையர்செறிய

(இ-பு.) இரண்டு கரும்புவில்லை வளைத்து வைத்ததுபோலிருக்கும் கரியநிறமுள்ள நீண்டபுருவமுடைய உருப்பசிமுதலாகிய ரம்பாஸ்திரிகளும் இமயமலையில் உற்பத்தியாய்வருகின்ற கங்காநதிமுதலான நல்லநதிக்குலமாதர்களும் சூழவும்-எ-று, (௭)

எண்டொனகப்படும் வசுக்களுமருத்துவரொவ்ரு
பண்டர்வர்க்கத்தில் பிதிர்களுமாடிநின்றேத்தக்

கொண்டலொத்துநின் றிரைத்திடுவயிரவக்குழாமு
மண்டுவேள்விசெய்தக கனுமுறைமுறைவழுத்த

(இ-பு,) அஷ்டவசுக்களும் மருத்துவதேவர்களும் தேவர் வர்க்கத்திற்சேர்ந்தபிதிர்களும் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு துதிக்கவும் மேகம்போலவொலிக்கும் வயிரவக்கூட்டமும் யாகஞ்செய்ததக்கனும் முறைமுறையாகநின்று துதிக்கவும்-எ-று. அனலன் அனிலன் ஆபச்சைவன் சோமன்தரன் துருவன் பிரத்தியூசன் பிரபாசன் இவர்களே அஷ்டவசுக்கள்)

தமரநாபுரகெட்டை வேதாளவாகனத்துக்
குமரனுதிபுவீரனுவெம் படைபொடுக்குழுக
வமரில்வந்தெதிர்த்தனி மூபிர்தவுணர்கெட்டோடச்
சமரில்வாரணப்பிடர் வருசாத்தனுந்தழுவ

(இ-பு,) ஒலியுள்ள சிலம்பு அணிந்த நெடிய வேதாளவாகனத்தையுடைய வீரபத்திரர் படையுடனவரவும் அவுணர்கள் போரில்வந் தெதிர்த்துப்படைமுறிந்து கெட்டோடும்படி யுத்தகளத்தில் யானையின் பிடரியில் ஏறிவரும் அரிகாபுத்திரன் வரவும்-எ-று. (௮)

ஊதுலைக்கனற்புகை யெனவுயிர்ப்புலாந்துண்டக்
கோதினெட்டெயிற்றகல் பிலவாய்க்குறுங்கூளிப்
பூதமுற்றியகணங்களும்பொருவில்வெண்சங்க
நாதநற்செருமிற்பானுகம் பனும்வந்துநண்ண

(இ-பு,) உலைக்களத்தில் ஊதுகின்றதீப்புகைபோல பெருமூச்சு உண்டாகும்படி கினையும் பழுதில்லாமல்நீண்டபற்களையும் அகன்றபிலத்துவாரம்போன்றவாயையுமுடைய குட்டையாகிய பூதகணங்களும் ஒப்பில்லாத தவளச்சங்கநாதத்தொழில்செய்யும் பானுகம்பனும் வந்துபொருந்தவும்-எ-று. (௯)

சங்ககன்னனற்றவரி மணிக்கரத்தினன்றயவின்
மங்குல்போலருள்மாணி பத்திரன்மகோதரன்சொற்
பிங்கிரீடிவிருகோதரப் பெருந்தலைப்பெருந்தூண்
பொங்குசீரொளிவிகடன் குண்டோதரன்பொருந்த

(இ-பு,) சங்குகன்னனும் ஒப்பற்ற மணிக்கன்னனும் தலையில்மேகத்தையொத்த அருளும் மாணிபத்திரனும் மகோதரனும் சொல்லுகின்ற பிங்கிரீடியும் மேலானதகுதியையுடைய விருகோதரனும் பெரிய ஆபரணங்களணிந்துமிகுதியான ஒளியையுடைய விகடனும் குண்டோதரனும் பொருந்தவும்-எ-று. (௰)

மாலையப்புயமகா காளர்புலிவதனத்தோ
ராலும்வாரணமுகத்தின் ராளிமாமுகத்தோர்

வாலவெள்ளெயிற்றரவமு மடங்கன்மாவேறும்
போலுகீழ்வதனத் தினெண்ணிலர்பொருந்த

(இ-பு.) மாலையணிந்த புயமுள்ள மகாகாளரும் புலிமுகத்தரும் அசைகின்றயானைமுகத்தரும் ஆளிமுகத்தரும் வெண்மையாகிய தந்தங்களையுடையசர்ப்பமுகத்தரும் சிங்கமுகத்தரும் ஆனகணத்தர் அளவில்லாதவர்களாய் வந்துபொருந்தவும்-எ-று. (௰௧)

முகடுபோழ்ந்திட்டண்டர்மொழிவதற்கரிதாம்
விகடமாகியவேறுவே றுருவத்தர்விளங்கும்
பகடுபோலுமோர் கரத்தினர்பலபலகரத்தர்
தகடுவேய்பொலன் கழலினரெண்ணிலரெழுவ

(இ-பு.) அண்டமுகடு பிளக்கும்படி உயர்ந்த வடிவமுள்ளவர்களும் சொல்லுதற்கரிய விகடமான பலபல உருவத்தையுடையவர்களும் விளங்குகின்ற யானைபோல ஒருகையுடையவர்களும்பலவாகியகைகளுடையவர்களும் தகட்டுப்பொன்னாற் செய்யப்பட்ட வீரகண்டையுடையவர்களுமாக எண்ணில்லாதவர்கள் பொருந்தவும்-எ-று. (௰௨)

படர்ந்தநீணிலஞ்சுமந் தசேடனபஃறலைபோன்
மிடைந்தெழுந்ததிண் டோட்களிலார்த்தவார்விசித்துக்
குடங்கையாயிரமெடுத் துவாணசுரன்கொண்ட
லடங்குமாமுழ வாயிரமுகத்தினுமறைய

(இ-பு.) பரந்தநீண்ட பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனுடையதுயிரந்தலைபோல நெருங்கி யுயர்ந்திருக்குந் திண்ணிய தோள்களில் கட்டிய வாரைவிசித்துக்கொண்டு தன்ஆயிரமாகிய உள்ளங்கைகளை யெடுத்து வாணசுரன் மேகத்தி னிடியோசையு மறையும்படி பெரியகுடமுழாவின் ஆயிர முகத்தினும் அறையவும்-எ-று. (௰௩)

முருகுவிண்டதார் தேவருமுரைமுறைநிறவித்
திருகுவெஞ்சினத்த வுணரையொருபுடைசேர்த்தி
யுருகுபொன்னிறக்கண் களையொருவழிசெறித்துப்
பெருகுவான்புகழ் நந்திகைப்பிரம்பெடுத்துலவ

(இ-பு.) வாசனையுடன் மலர்ந்த மாலையணிந்த தேவர்களை வரிசைவரிசையாய்நிற்கச்செய்து மாறுபடுகின்ற கோபமுள்ள அசுரர்களை யொருபுறத்தில் வரிசையாகநிறுத்தி உருகியபொன்னிறமுள்ள கணங்களையொருபுறத்தில்நிறுத்தி மிகுந்த சிறப்புள்ள நந்திதேவர் கையிற்பிரம்பேந்திக்கொண்டு உலாவவும்-எ-று. (௰௪)

இலகுநல்லவைநடு வணேயெழிலரிசுமந்த
வலகிலாநவமணி களுமொளிகெடவிருங்

குலவுமாணிக்கங் குயிற்றியகொழுந்தவிசேறி
யுலகமூன்றுக்குமொரு பொருளெம்மையாளுடையான்

(இ-பு.) பிரகாசிக்கும் நல்ல சபையி னடுவில் அழகுள்ள சிங்கங்கள் தாங்கும் அளவில்லாதநவரத்தினங்களும் ஒளிமழுங்கும்படி பிரகாசிக்கும்மாணிக்கங்கள்பதித்த செழுமையுள்ள ஆசனத்தில் வீற்றிருந்து மூன்றுலகங்களுக்கும் ஒருபொருளாகிய எம்மை அடிமையாகவுடைய பரமசிவன்-எ-று, (௰௫)

கோடிசெங்கதிராதபர் கோடிவெண்மதியங்
கோடியூழியின்வடவனலோரிடந்தழுவி
நீடுமோருருவெடுத் தனகிரத்திலிருளு
மோடியெங்கணுநிலை யறவலோகத்திலொதுங்க

(இ-பு.) கோடிசூரியர்களும் கோடிசந்திரர்களும் கோடிவடவாமுகாக்கினியும் ஓரிடத்தில்கூடி ஒருருவாக எடுத்தது போன்றதாய் கரகத்தினிருளும் ஓடி யெவ்விடத்தும் நிலைபெறாமல் அவலோகத்தில் ஒதுங்கத்தக்கதாக-எ-று, (௰௬)

வேலையேழையு மொருகணவேலையினுகருங்
காலவூழிவெங்கனலெனச்செஞ்சடைகளினப்
பாலலோசனந்துணை விழிமூச்சுடர்பகைப்பச்
சூலமாதியபடை யொடுந்தோள்பலதுளங்க

(இ-பு.) ஏழுசமுத்திரத்தையும் ஒருகணப்பொழுதில் உண்ணத்தக்கதாக ஊழிக்காலத்திலுண்டாகும் கொடிய ஊழித்தீப்போல் செய்யசடைகள்பொலியவும் நெற்றிக்கண்ணும் மற்ற இரண்டுகண்களுமாகிய சோமசூரியாக்கினிகளுடன் பகைக்கும் சூலாயுதமுதலிய ஆயுதங்களோடுபலதோள்கள்விளங்கவும்-எ-று. (௰௭)

அனந்தன்வாசுகி தக்கன்முதலியவரவம்
புனைந்தபல்கலனென வடிமுடிமுதல்புனைந்து
கனைந்துவண்டுணு மிதழிவாசிகையிடைகவின
வனைந்தவிந்துவுங்கங்கை யுமமுதலைவழங்க

(இ-பு.) ஆதிசேஷன் வாசுகி தக்ஷகன் முதலான நாகங்களை ஆபரணங்களாகத்திருவடி திருமுடிமுதலான இடங்களில் அணிந்துக்கொண்டு இசைபாடும் வண்டுகள் தேனுண்ணும் கொன்றைப்பூமாலை அழகுள்ள திருமுடியில்தரித்தசந்திரன் அமுதத்தைவழங்கவும் கங்கைஅலைவீசவும்-எ-று, (௰௮)

காய்சினக்கொடுவரி யுரிகலையினிற்பொலியப்
பூசலிட்டடுபுழைக்கை யாவுரிவைமெய்போர்ப்பத்

தேசுபெற்றிடுமுத் தரீபத்தொளிதிகழ
மாசறுத்தொளிர் மின்னெனமார்பினூல்வயங்க

(இ-பு.) காய்ந்தின்ற கோபத்தையுடைய புலியினதுரேல் வஸ்திரமாகத் திருவரையில்விளங்கவும் போர்செய்து கொல்லுந் தன்மையை யுடைய யானையின்தோல் போர்வையாகத் திருமேனியில்போர்ப்பவும் ஒளிபொருந்திய உத்தரீயத்தின் பிரகாசம்விளங்கவும் மாசுநீங்கி யொளிர்கின்ற மின்போல பூணூல் திருமார்பில் விளங்கவும்-எ-று. (௰௯

தொல்லைப்பழமறை யெலாமிறுதியிற்சொல்லு
மெல்லைகண்டவால்ல துகாண்கிலாவிறைவ
னல்லியந்துணர்த்தே றன்மொண்டிலகுதாதள்ளிச்
செல்லுமன்றலந்தென் றல்பந்தலைவீற்றிருந்தான்

(இ-பு.) பழமையாகிய வேதங்களெல்லா முடிவிற்சொல்லும் அவ்வெல்லைகண்டவர்கள் காணலாமேயன்றி மற்றவர்கள் காணக்கூடாத பரமசிவன் அகவிதழினையுடைய பூங்கொத்துகளிலிருக்கும் தேனை மொண்டு மகரந்தங்களை அள்ளிக்கொண்டுவரும் இளந்தென்றற் காற்றுவந்து லவுவீற்றிருந்தான-எ-று. (உ௰

அந்தவேளையிலாதிகாள் முகனுளத்தவில்
வந்துதோன்றியமவுன ஞானத்தினின்வதிந்தோன்
பந்தமற்றிடுசனற் குமாரன்பணிந்தேத்தி
முந்துநல்லிசைபணி தொறும்பணிதொழுமெந்தை

(இ-பு.) அக்காலத்தில் ஆதியாகிய பிரமதேவன் உள்ளத்தில் ஞானத்துடன் வந்தவதரித்த மவுனஞானநிலையிற் பொருந்தியவராய்ப் பாசபந்தம் நீங்கிய சனற்குமாரமுனிவர் பணிந்து துதித்துப் பணியுந்தோறும் பரமசிவனுடைய முதன்மையான நல்லபுகழைக்கூறி-எ-று. (உ௧

ஐயசேட்டிதீயக லிடத்தரியதாந்தரும
முய்யுமாறெனக்குரை யெனவொளிநிலாமுறுவற்
செய்யவாய்மலர்திறந்து தேன்றுளிக்குமாபோல
வையமேழுடைநாயகன மகிழ்வுறவுரைத்தான்

(இ-பு.) எங்கள் ஐயனே நின் திருவுள்ளத்தில் அடியேன் விண்ணப்பத்தைக்கொண்டருள் அதாவது இவ்வுலகத்தில் அரியதாகிய தருமம் அடியேன உய்யுமாறு கட்டளையிட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள ஒளியுள்ள நிலாவையொத்த நகையுடன் திருவாய்மலர்ந்துதேனைத்துளிப்பதுபோல ஏழுலகத்தையும் உடைய பரமசிவன் மகிழ்ச்சியுண்டாக அருள்செய்கின்றார்-எ-று. (உ௨

சேட்டஞானநூலினைத் தையுங்கினைத்திலைபுவிமி
லிட்டுகனமத்தி லிருவினையிபற்றியமுன்றிய
பூட்டவுன் னுமா னிடர்களுமுத்திநையாழுவா
னுட்டுநற்கிவதரும மாய்நாடுதற்கெளிதாய்

(இ-பு.) அடியேன் விண்ணப்பம் பண்ணிக்கொண்டபடி ஞானசாஸ்திரமெல்லாம் அருவினை உலகத்திற்செய்கின்ற கர்மத்தினால் நல்வினை தீவினைகள்முறைமைப்படியூட்ட உண்ணுகின்றமானிடர்களும் மோக்ஷம் அடையாநட்டுகின்றநல்லசிவதருமமாகியும் நாடுவதற்கெளிதாகியும்-எ-று.

வருத்தமில்லதாயிருவி னையகற்றுநன்மருந்தா
யருத்தியோடிறைப்போ தினில் நிவுமருதுவாய்க்
கருத்தில்வேண்டுவபீம் மையிலுதவுகற்பகமாய்
விரித்துவேதநூற்றரும மொன்றுரையெனவிளம்பி

(இ-பு.) வருத்தமில்லாததாகியும் இருவினையை நீக்குகின்ற நல்லமருந்தாகியும் ஒருநாழிகைப்பொழுதில் அன்புடன ஞானங்கொடுப்பதாகியும் மனத்தில்விரும்பியபொருளை இம்மையிலே கொடுக்குங்கற்பகவிருக்ஷம்போன்றதாகியும் விரிக்கப்பட்ட வேதத்திற்சொல்லுவதாகியு மிருக்கின்றதர்மமொன்று கட்டளையிடவேண்டுமெனறுசொல்லி-எ-று. (உ௩)

அஞ்சலித்தடியிணை மிசையலர்மழைதூவி
வஞ்சமொன்றிலாமறை முனிகேட்டற்குமகிழ்ந்து
நஞ்சமுண்டகாலாக் கிவிருத்திரநாதன்
கெஞ்சவேயவனுளத் தொண்டுசெருளுறச்செப்பும்.

(இ-பு.) கைகுவித்து நமஸ்கரித்துத் திருவடிகளில் மலர்களால் அருச்சித்து உண்மைநெறியுள்ள அந்தச்சனற்குமாரமுனிவர் விண்ணப்பம் பண்ணிக்கொண்டதற்கு விஷபானஞ்செய்த காலாக்கினி ருத்திரமூர்த்தியானவர்களிகூர்ந்து அம்முனிவர் உள்ளத்தில் செவ்வையாகத் தரித்து அறிந்துகொள்ளும்படி உபதேசிக்கின்றார்-எ-று. (உ௪)

அங்கமாறுடை வேதமுமாகமமுக
மெங்குமோதிடு முபநிடதத்தினதிபலுஞ்
சங்குபோலும்வெண்ணீற் றிறைற்பரிபுண்டரத்தைத்
துங்கநெற்றியிலணி வதேதருமமாச்சொல்லும்,

(இ-பு.) ஆறங்கங்களையுடைய வேதங்களும் ஆகமத்தின்முதலும் எங்குமோதுகின்ற உபநிடதத்தின் உண்மையும் சங்குபோல்விளங்கும் வெண்ணீற்றினால் பிரகாசிக்கும் திரிபுண்டரத்தைப் பரிசுத்தமான நெற்றியில் தரிப்பதே தர்மமாகச்சொல்லும்-எ-று. திரிபுண்டரமாவது மூன்றுவரையில் தரிப்பதே மும்மலத்தையும் போக்குமென்கிற காரணந்தோன்றாகத்தரிப்பது மும்மலத்தையும் போக்குமென்கிற காரணந்தோ ன்ற அவ்வாறு தரிப்பதாம் (உ௫)

(வேறு,)

என்னப்பரமன்சாற்றுதல்கேட் டெழுந்துவணக்கிச்சனற்குமார
முன்னைப்பொருளேயடியோடு முடியுமில்லாமுழுமுதலே
புன்னிப்புகன்றதிருநீறே துரைத்ததிரிபுண்டரமேது
பின்னர்த்தரிக்குமிடமேது பேசுந்திருமந்திரமேதோ

(இ-பு.) இவ்வாறு பரமசிவன் அருளிச்செய்ததைக்கேட்டுச் சந்தோஷமுண்டாகிய சனற்குமாரமுனிவர் ஆதியானபொருளே ஆதியந்தமில்லாதமுதலே கருதிச்சொல்லியருளிய விபூதியென்பதுயாது சொல்லியதிரிபுண்டரமென்பது யாது மற்றும் அதை எந்தவிடத்தில் தரிப்பது சொல்லும் திருமந்திரம்யாது-எ-று. (உஎ)

காலமேதோவளவேதோ சருதப்படுந்தெய்வதமேதோ
சீலமேதோதிரவியமற்றேதோ தரிக்கிற்பலனேதோ
மூலமுளையாய்நெடுந்தருவாய் வித்தினடங்குமுறைபோல
ஞாலமெல்லாமாயையின்பா லுதிப்பித்தொடுக்கும்பரனே

(இ-பு.) தரிக்குங்காலமேது அளவுயாது நியமிக்கப்படுந்தேவதையாது ஒழுக்கம்யாது அதற்குரிய திரவியம்யாது தரித்தால்வரும் பலன்யாது வேருமுளையுமாய்நெடியவிருக்ஷமாய் விதையில் அடங்கு முறைமைபோல உலகமெல்லாம் மாயையினிடத்து உதித்து ஒடுங்கச்செய்யும்பரமனே-எ-று, (உஅ)

என்றுவினவுமுனிக்கீச னியம்புமுரைத்ததிருநீறு
தான்றுதிற்பாற்கோமயத்தைச் சுட்டவடலையாகுங்கா
ணின்றதிரிபண்டரமதுதான் சென்னிநெற்றிகள்மிர்தோ
ளொன்றுமார்புநாபிபுற முருவமுதலுந்தானமாய்

(இ-பு,) என்று வினவிய முனிவருக்குப் பரமசிவன் அருளிச்செய்கின்றார் வேதாகமத்திற் சொல்லப்பட்ட திருநீறானதுபொருந்தியமதாமுள்ள பால்தராநின்ற பசுவின்சாணத்தை ஓமாக்கினியில் பாகமாகும்படி வைத்ததிருநீறாம், திரிபுண்டரமாவது சிரசு நெற்றி கழுத்து தோள்பொருந்துமார்பு தொப்புள் பின்புறம் இவ்விடங்களில் முதலில் உத்தூளனமாய்-எ-று, (உகூ)

குழைக்குத்தைவைக்கதற்பின் னர்க்குழைத்தசீற்றவெண்ணிலவி
விழைத்தசொன்னச்சொன்னவிடத் தியற்றும்போழ்தினெற்றியி
டழைத்தவிரலினடுநீக்கித் தற்சனியாலனாமிகையாற் [ன்கண்
மிழைத்தவறவேதரித்தெதிராப் பெரியவிரலானடுவணிந்தால்

(இ-பு,) குழைத்துத்தடவி அதன்பின்பு முன்குழைத்த அந்தவிபூதியை வெண்மையான நிலவினால் செய்ததுபோல மேற்சொன்ன இடங்களில் தரிக்கும்போது நெற்றியினிடத்தில் செழுமையுள்ள விரல்களில் நடுவிரலைவிட்டு மோதிரமணியத்தக்க விரலாலும் சுட்டுவிரலாலும் குற்றமறத்தரித்துப்பின்பு பெரியவிரலால் நடுவே எதிராக அணிந்தால்-எ-று (

அதுவேதிரிபுண்டரமுரைத்த வங்கமவையேயிடனாகும்
பதியாறுரைத்தமந்திரங்கள் பஞ்சப்பிரமமுபநிடத
விதியால்வேதத்தெடுத்துரைத்த வியன்மந்திரங்களெனறிவாய்
புதிதாய்நின்றகாலங்கண் முப்போதுகளெப்போதுமாம்

(இ-பு,) அவ்வாறுதரிக்கப்படுவதே திரிபுண்டரமாம் முன்சொன்ன அங்கங்களே திரிபுண்டரந்தரிக்குமிடமாம் பரமசிவனால் சொல்லப்பட்ட மந்திரங்கள் பஞ்சப்பிரம உபநிடதம் வேதத்தில் முறையாக எடுத்துரைத்த மேன்மைபொருந்திய மந்திரங்களென்று அறிவாய் தற்காலமாகநின்ற காலங்கள் முப்போதுமாம் அன்றியும் எப்போதுமாம்-எ-று(

நீளப்புருவத்தளவாகு மிடையினீக்கமொருவிரலா
மாளுந்தெய்வமுருத்திரனே டரியமகேசன்சதாசிவனு
நாளுஞ்சீலங்கடைப்பிடியாய் நன்காயிட்டுந்திரவியங்க
ளோந்தருபால்வெண்ணீறு முலகுக்குயிராந்தோயமுமே

(இ-பு,) நெற்றியில் தரிக்கின்றநீளம் புருவத்தின் அளவாம் திரிபுண்டரமாகியமூன்று கீற்றுக்குள் மத்தியில்மத்தியில் ஒருவிரல் அளவு இடம் விட்டிருக்கவேண்டுவது அதற்குரிய தேவதைகள் உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் கடவுள்களாம் இந்த ஒழுக்கத்தையொருநாளும் மறவாமலிருப்பாயாக நன்மையுடன் சேர்க்குந் திரவியங்கள் ஆளாய்ப் பால்நிறமுள்ள விபூதியும் உலகுக்குயிராகிய நீருமாம்-எ-று. (ஙஉ)

பலத்தினைப்பெருமைமாமுனியே பகரிலேவர்தாமறிவார்
நிலத்தின்மீதுமானிடர்க்கு முத்திக்கிதுபோனெறியுண்டோ
சொலற்குத்தகுநால்வருணத்தோர்வருணச்சிரமத்தொழில்புரிவோர்
கலத்திற்கியபாவிழிகுலத்தோர் கலன்பூண்மகளீர்கைமையுற்றோர்

(இ-பு,) பெருமையுள்ள முனிவனே விபூதியைத்திரிபுண்டரமாகத் தரிப்பதினால்வரும் பலனைச்சொல்லுமிடத்தில் எவர்களறியத்தக்கவர்கள் இவ்வுலகத்தில்பிறந்தமனிதர்களுக்கு மோக்ஷந்தர இதைப்போல் சொல்லலாமென்றால் வேறுபொருளில்லை பிராமணர்முதலிய நான்குலத்தார் பிரமசரியமுதலிய நான்கு ஆச்சிரமமுள்ளவர்கள் அபாத்திரர்களாகிய இழிகுலத்தோர் மாங்கலியஸ்திரிகள் கைம்பெண்கள்-எ-று, ()

இபாவரோனுமித்தரும மியன்றநாலத்தியற்றுவதேற்
பாவமாயத்தினையறுத்துப் பாரிற்பிறவிக்கடலீந்திச்
தேவர்போகப் பொன்னுலகிற் சென்றுதாய்த்துச்சிவனருளா
னாவினுலும் வழுத்தரிய முத்தியின்பமெண்ணுவரால்

(இ-பு) இப்போது சொல்லிய இவர்களில் எவர்களேயானுலுந் திரி புண்டரந்தரிப்பதாகிய தருமஞ்செய்வார்களேயானுல் பாவமாகிய பந்தத்தையறுத்துப் பூமியிற்பிறக்கும் பிறவிக்கடலைநீந்திச் சுவர்க்க லோகத்திற்றேவபோகத்தை அனுபவித்துப்பின்புபரமசிவனுடைய திருவருளினால் நாவைக்கொண்டு சொல்வதற்கரிய முத்தியின்பம் அடைவார்கள்-எ-று. (௬௫)

கோறல்களவுகள்ளுண்டல் குருவைப்பிணைந்தல்கூட்டென்னத்
தேறும்பஞ்சபாதகத்தை யொழியாதியற்றுமெலியோரு
மாறிலொன்றுதாங்கொள்ளாத நீதியற்றியபற்றிகந்த
பாறுபடிவெண்ணனைவரும் பயந்தோர்க்கொன்றபாதகரும்

(இ-பு.) கொலைசெய்தல் திருடுதல் மதுபானஞ்செய்தல் ஆசாரியபசாரஞ்செய்தல் காமம் என்று சொல்லப்படுகிற பஞ்சமாபாதகத்தை எப்போதுஞ் செய்கின்ற கீழோர்களும் ஆறிலொருபாகம் வாங்கிக்கொள்ளாமல் அநீதிபுரிந்து தர்மத்தையொழித்த பருந்துகுழும்படியானவேலேந்திய மன்னவர்களும் மாதாபிதாக்களைக் கொன்றபாதகரும்-எ-று. (௬௬)

செய்தநன்றிமறந்தோருந் நிலைத்தில்லஞ்சிதைத்தோரும்
கொய்தபகைவதைத்தின்றோருங் கொண்டோர்பிழைத்துத்திரிந்தோருஞ்
செய்திகரிபொய்த்துரைத்தோரு சேர்ந்தபசிழந்துகொடுத்தோரு
மவதுபழிக்கப்பொய்யென்று முன்னூல்கேழ்ந்தவஞ்சரும்

(இ-பு.) செய்தநன்றி மறந்தவர்களும் வீட்டில் நெருப்புவைத்துக்கொளுத்தியிட்டவர்களும் பசுவையறுத்துத் தின்றவர்களும் கொண்டகணவனுக்குத் துரோகஞ்செய்து சோரம்போகிறமாதர்களும் ஸாக்ஷிப்பொய்சாக்ஷிசொன்னவர்களும் விரதங்களை யிகழ்ந்து சொனவர்களும் சாஸ்திரங்களைப் பழிக்கப்பொய்யென்று இகழ்ச்சிசெய்யும் பாதகரும் -எ-று, (௬௭)

கருப்பம்விழ்த்திதிரிந்தோருங் கலவாதவனைக்கலந்தோரும்
பரிந்தவொருதேவினைவழுத்திப் பலதேவரைப்பழித்தோரு
மருந்திலிட்டுத்தாற்கொன்றோரு மற்றோர்க்குறுவதைந்தோரும்
விருந்தர்பாலர்மடவார்க ளையுங்கனினைகள்செய்தோரும்

(இ-பு.) கருப்பத்தை யழித்துத்திரிகின்றவர்களும் சோரத்தகாதவர்களுடன் சேர்ந்தவர்களும் தம்முடைய உள்ளத்திற்கொண்ட ஒருதெய்வத்தைத்துதித்து மற்றக்கடவுளரைப் பழித்தவர்களும் விஷங்கொடுத்துக்கொன்றவர்களும் தரித்திரர்களுக்கு அன்னந் திரக்காம விருப்பவர்களும் கிழவர்கள் பாலர்கள் மாதர்கள் என்னுமிவர்கள்பயப்படும்படிகொடியசெய்கைகள் செய்தவர்களும்-எ-று. (௬௮)

அடைந்தோர்க்குருளாதிருந்தோரு மாமிலாசன்படைவெருவி
யிடைந்துவெரிவிட்டோடினரு வெறிபசுநிரைபசார்ந்தோரு
மிடைந்தவறியோர்க்கியாமவிதியிட்டிருந்தோரும்
குடைத்தீருண்ணவல்குளங் குட்டஞ்சிதைத்தகொடியோரும்

(இ-பு) தங்களை அடைக்கலமாக அடைந்தவர்களுக்கு உபகாரஞ்செய்யாதவர்களும் அரசன்படையிற்போய்ச்சண்டை கேட்டவிடத்திற் பயந்துமுதுகுகாட்டி யோடினவர்களும் பலனில்லாத கோள் சொன்னவர்களும் இடைந்திருக்கும் வறுமையுள்ளவர்களுக்குக் கொடாமல் பொருள் சம்பாதித்துவைத்திருப்பவர்களும் முழுகிநீருண்ணும்படியான கிணறு குளம் குட்டை இவைகளையழித்த பாவிகளும்-எ-று. (௬௮)

ஆராமங்களழித்தோரு மதிவிருந்தவயின்றோருந்
தோசிபுரைபபகைவருக்குத் தவசிலருக்குஞ்செய்தோருஞ்
சோலையைச்சேர்ந்தொழுகிந் திட்டுண்ணுந்திறந்திறம்பிப்
பாராவாரங்கலத்தேறி நீவேட்டுழன்றபார்ப்பாரும்

(இ-பு) பூஞ்சோலையையழித்தவர்களும் வந்தவிருந்தாளிகள்பசியால்வருந்தவுவர்களையுமழையாமலுண்பவர்களும் பகைவராயிருப்பவர்களுக்கும் தவசிலர்களாகிய முனிவர்களுக்கும் ஒருயாத துன்பத்தைச் செய்கின்றவர்களும் சோரத்தகாதவர்களுடன்மனைவியைப்பொருந்தி யந்தவழியில் நடக்கின்றவர்களும் சோத்தகாததன்மையைப்பொருந்தி யந்தவழியில்நடக்கின்றவர்களும் கொள்ளுந்தன்மையாகிப் பொருளைத்தியாகஞ்செய்து பிணபுபோசனஞ் செய்து பின்புபோசனங் கொள்ளுந்தன்மையாகிப் பிராமணுளையிச்சித்துக் கப்பலேறிச் சமுத்திரத்திற்சென்று உழலுகிற பிராமணர்களும்-எ-று. (௬௯)

இன்னுங்கொடும்பாதகம்புரிந்தோ ரியாவரோனுமவரெல்லாம்
பின்னுஞ்சடிலமாமுனியே திருநீறணியப்பெறிலிவர்பான்
மன்னும்பிறவிமுதலவினை முழுதாமாயுர்வயங்கொளியோன்
மின்னுங்கனகவுதயவரை மேவவிருள்வீந்திடுவதுபோல்

(இ-பு) பின்னலாகிய சடையையுடைய முனிவனே இப்போதுசொல்லிவந்த பாதகங்களுமல்லாமல் மற்றுமுள்ளபாவங்கள் செய்தவர்களேயானுலும் அவர்களெல்லாரும் திருநீறணியப்பெறுவார்களானுல் அவர்களிடத்தில் நிலையாகியபிறவிமுதலான வினைகளெல்லாம் சூரியன் சொர்ணமயமான உதயகிரியில் தோன்றினவளவில் இருளொழிவதுபோல நீங்கிவிடும்-எ-று. (௭௦)

எள்ளப்படுகீழ்மக்களேனு மிழிந்தகுலத்தோரென்றாலும்
வள்ளற்பரமன் றிருநீறு மணியுமணிந்தமாண்பினரை
யுள்ளத்துள்ளேயிருபொழு துணர்ந்துதெருண்டுசிவனெனவே
கொள்ளத்தகையவறிவினரே பிறவிக்கடலிற்குளியாதார்.

(இ-பு) இகழப்படுங் கீழ்மக்களென்கிற இழிந்தகுலத்தோர்களேயா னாலும் பரமசிவன் விபூதியும் ருத்திராக்ஷமுந் தரித்தபெருமையாளரை இரவும் பகலும் இருதயத்தில் தியானித்துச் சிவமெனக்கொள்ளத்தக்க அறிவாளர்களே பிறவிக்கடல் மூழ்காதவர்கள்-எ-று. பரமசிவன் யாவரு க்கும் அருள் தருகின்றவராதலால் வள்ளற்பரமனென்றார். (சக)

நாடிமூன்றுகாலமெண்ணு னம்பன் றிருப்பேரிசைக்கிலா
ஞாடிவிளங்கும்பாவையென வறிவொன்றில்லாதானேனு
நேடிவெண்ணீறினிதள்ளி நெற்றியினகத்தரிப்பானேற்
கோடிபிறவிகள்கும்பியிடை குளியாதரன்பாற்கூட்டுவனால்

(இ-பு) பலனுண்டென்னநினைத்துத்திரிகாலங்களிலும் தியானிக் காதவனும் பரமசிவனுடைய திருநாமத்தின் பெருமையை நாவினாற்று தியாதவனுமாய்க்கண்ணாடியில் வெழுதப்பட்ட சித்திரப்பிரதமைபோல அறிவில்லாதவனேயானாலும் விபூதியைத்தேடிச் சம்பாதித்து இனிதாக அள்ளிநெற்றியில்விளங்கும்படி தரிப்பானானால் தன்னுடைய அனந்தபி றவிகளைநரகத்தில் முழுகவொட்டாமல் சாம்பசிவனிடத்தில் சேரும்படி சேர்ப்பன்-எ-று. (சஉ)

வழுகோடிமந்திரமு மெண்ணிறவாமிருநிலத்தி
லாழமுடையகங்கைமுத லனந்ததீர்த்தமுமமரேசன்
வீழுந்துரகமிறாவ் வேள்வியினைத்துர்விளம்புங்காற்
றழுஞ்சடையான்றிருநீறு தரும்பேறொன்றுந்தாராவே

(இ-பு) சத்தகோடி மகாமந்திரங்களும் அளவில்லாத ஸ்தலங்களு ம் இந்தப்பெரிய உலகத்திலிருக்கும் ஆழமுள்ள கங்கைமுதலான அன ந்த நதிகளும் தேவேந்திரன் விரும்புகின்ற அசுவமேதயாகம் முதலிய யா கங்களும் ஆகியஇவைகள் தாழ்ந்த சடையையுடைய பரமசிவன் விபூதி தரும் பேறுகளில் ஒருபேற்றினையுந்தரமாட்டாதுகள்-எ-று. (சங)

பத்தியால்வெண்ணீறணிந்தோர் பாரைப்பொதுநீக்கிடப்புரந்து
வாய்த்தபோகத்திறுதியினிற் சோதிவிமானத்தினிலேறி
மைத்தகுழலாரொடுமெருவி விண்பதத்தில்வாழ்ந்தபின்னர்ச்
சத்தாயதத்தையெய்தியுறைவ சாயுச்சியமேசார்வாரால்

(இ-பு) பத்தியுடன் விபூதிதரித்துக் கொள்ளுகின்றவர்கள் பொது வில்லாமல் இவ்வுலகத்தையாண்டு போகங்களை யநுபவித்து இறுதியில்

சோதியுள்ள தேவவிமானத்தி லேறிச் சென்று கரிய அளகத்தையுடைய ரம்பாஸ்திரிகளுடனே தேவேந்திர னுலகத்தில் வாழ்ந்திருந்து பின்புசீவ த்தன்மை நீங்கிச் சிவத்தன்மைபெற்றுச் சிவசாயுச்சியம் அடைவார்கள் எ-று. (சச)

இந்தவிபூதிமான்மியத்தை வேதம்பலவுமியம்புமதை
யிந்தத்தெளிதாய்மிகச்சுருக்கிச் செப்பினேமென்றருள்புரிய
வந்தத்தோடேமுதலுமில்லா வாதிபரமனகன்றிட லுஞ்
சந்தக்குலநான்மறைவிரிஞ்ச னுலகத்தடைந்தான் சனற்குமரன்

(இ-பு.) இந்தவிபூதியின் மகத்துவத்தை வேதங்களெல்லாம் விஸ்தா ரமாகச் சொல்லுகின்றன உனக்குத் தெளிவாகத்தெரியும்படி மிகவுஞ் சுருக்கி நாஞ்சொன்னோமென்று அருள்செய்து ஆதியந்தமில்லாத முதற் கடவுளாகிய கயிலாசபதியானவர் சொல்லியெழுந்தருளவும் சனற்குமா ரமுனிவர் சந்தமுள்ளகூட்டமாகிய நான்குவேதமுமுணர்ந்த பிரமலோ கம்போய்ச்சேர்ந்தார்-எ-று. (சரு)

இன்னதாயவெண்ணீற்றின் றகைமையெம்மாற்புகலவற்றோ
வுன்னைநலியும்பசிதீர்த்தற் கொருப்பட்டமைநீயுறப்பறவி
மன்னுதிருநீறனதுடல மலியப்பரிசித்ததனுலே
யன்னகாலிருந்தவுடல் வகற்றித்தேவாயினையென்று

(இ-பு) இத்தன்மையுள்ளவிபூதியின் மகத்துவம் எம்மாற்புகழத்தக் கதோ உன்னைவருத்திய பசிநீர எம்மை உண்ணவேண்டுமென்றுபிடித்த நிலைபெற்றவிபூதி யுன்சரீரத்தில் பொருந்தப் பரிசித்ததினால்முன்னுள்ள ராக்ஷதஉருவம்நீங்கித் தேவரூபம்பெற்றாயெனவு-எ-று. (சசு)

அன்பினுணர்த்திவெண்ணீற்றை யள்ளியரக்கன்றனக்களிபா
லின்பமருளுமந்திரமு மியம்பிமுறைநீவிளிவித்துத்
துன்பமொழிந்தாய்பொன்னுலகிற் போகந்துய்த்துத்தொலைந்தபின்னர்
வன்பாறியாச்சிவபதத்தை மருவிவாழ்த்தியெனவிடுப்ப

(இ-பு.) அன்புடன்சொல்லி விபூதியைஅள்ளி அரக்கனுக்குக்கொடு த்துப் பேரின்பம்அருளும் மந்திரோபதேசமுஞ்செய்து முறையாகவிபூ தியைத்தரித்துக்கொள்ளும்படிதெரிவித்துத்துன்பம்நீங்கினவனேசுவர்க் கத்தைத்தரித்துக்கொள்ளும் ... போகஇன்பம் அநுபவித்து நீங்கினபின்பு அன்பில்லாதவர்கள் அறியா த சிவபதத்தைப்பொருந்தி வாழ்ந்திருவென்று விடைகொடுத் தனுப்ப-எ-று. (சஎ)

பழையமுனிவனடியிணைமேற் பணிந்தாங்கெழுந்துவிடைபெற்றுக்
குழையுமனத்தினுவகையொடும் பொன்னாட்டெல்லைகுறுகுதலும்

பிழையில்பொருளின்பதந்தெரியும் வாமதேவப்பெருந்தவனுந்
தழையுமிதழிச்சடாதரன்போற் சார்ந்தானென்றுசாற்றினான்.

(இ-பு.) அக்கன் பழமையாகிய வாமதேவமுனிவர் திருவடியினி
டத்தில் பணிந்தெழுந்து விடைபெற்றுக்கொண்டு குசபூபாளத்தினாரு
ச்சந்தோஷத்துடன் தேவலோகத்திற்செல்லுதலும் பிழையில்லாதபொ
ருளின் தன்மையுணர்ந்த அம்முனிவர்தழைந்த கொன்றைமாலை யணிந்த
சடாமகுடமுள்ள பரமசிவன்போலிருந்ததாம் போகவேண்டிய ஸ்தான
த்திற்குப்போனாரென்று சூதமுனிவர்சொன்னார்-எ-று. (சுஅ)

பதினாறாவது திரிபுண்டரமுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சளசுஅ

உ

சிவமயம்.

பதினேழாவது.

வேடன்சிவபூசைகடைப்பிடித்த அத்தியாயம்

இவ்வண்ணம்வியந்துசூதனிறைத்தலுமதனைக்கேளா
மைவ்வண்ணக்காளகண்டன வால்வண்ணப்பூதிநல்கு
மெய்வ்வண்ணப்பலத்தினைபெற்றி விழைந்தனமெனவேத்திப்
பொய்வ்வண்ணம்புகுதாவுள்ளத் தருந்தவர்புகல்வதானார்

(இ-பு.) சூதமுனிவர்மகிழ்ந்து சொல்லுதலும் இதனைக்கேட்டு கரு
நிறமுள்ள காளகண்டமூர்த்தியின் வெண்மைநிறமுள்ள விபூதிதரிக்கின்
ற மார்க்கபலத்தின்தன்மையைக்கேட்டு ஆனந்தமடைந்தோமெனத்துதி
செய்து உண்மைநெறிபொருந்திய உள்ளத்தையுடைய நைமிசாரணியமு
னிவர்கள் சொல்லுகின்றார்கள்-எ-று. (க)

முற்றுநான்மறை[illegible] முடிபொருட்டெளிவையோர்ந்து
கற்றவர்குரவராகிற் பேறுமக்கணத்திலெய்துஞ்
சிற்றியற்குரவர்தம்பால மாணிடர்மெய்ஞ்ஞானம்
பெற்றிடலெவ்வாறு சிவன்பதத்தைச்சேர்வார்

(இ-பு.) நான்குவேதமுழுவதுஞ் சொல்லத்தக்க முடிவான பொரு
ளின்விசயம்அறிந்து கற்றவர்கள் ஆசாரியரானால் சிவபதம் அப்பொழு
தே கிடைக்கும் அவ்வாறு கற்றுணராத ஆசாரியரிடத்தில் மாணாக்கர்சேர்
ந்து மெய்ஞ்ஞானம்பெறுவார்களானால் சிவபதத்தை அவர்கள் எவ்வண்
ணஞ்சேர்வார்கள்-எ-று. (உ)

அருந்தவமுனிவர்பேசிய விவ்வினாவுக்கு விடையாதன்பு
புரிந்தமச்சுரைத்தியென்று புராதனமுனிவர்கூற
விரிந்தநற்கலைகள்வல்ல வியாதனைமனத்தினேத்தித்
திருந்தியதவத்தர்க்கு முனிவரன்செப்பினானே

(இ-பு.) அரியதவமுள்ள சூதமுனிவரே இந்தவினாவுக்கு விடைஆசா
ரியர்க்கு அன்புகூர்ந்து எமக்கு அருள்செய்யுமென்று புராதனர்களாகிய நை
மிசாரணியமுனிவர்கள் சொல்ல விரிவாகிய பலகலைகளிலும் வல்லவரா
கிய வியாசனை இருதயத்தில்சிந்தித்துத் துதித்து நல்தவசியாகியசூதமு
னிவர் சொல்லுகின்றார்-எ-று. (ங)

பாவகுமுலகில்மாறு மானிடப்பசுக்கட்கெல்லா
மானதருமத்தோங்குங் கிரியையில்லாவொன்றுண்டேற்
குரவனதறிவின்கீழ்மை மேன்மைதான்குறிப்பதென்னே
சிரமுறமன்பினானே சிவகதிசேரலாமே

(இ-பு.) சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகில் மனிதசீவன்களுக்கெல்லா
ம் சிவதருமமாக மேன்மைதங்கிய கிரியாவாதத்தில் விருப்பமென்பதொ
ன்றுண்டாயிருக்குமானால் ஆசாரியருடைய அறிவின்கீழ்மையையும் பெ
ருமையையும் நாம்குறிக்கவேண்டியதில்லை உறுதியாகிய அன்பினாலேயே
சிவகதியடையலாம்-எ-று. (ச)

உடைத்தெறிந்திட்டகல்லிற் பசுமண்ணின்மரத்திலோட்டிற்
கிடைத்தவற்றொன்றுதன்னை யரனெனக்கிரியைபேணிக்
கடைப்பிடித்துறுதிகூறு மவாவொடுகனிவானாயின்
விடைக்கொடியுயர்த்ததோன்றல் கருமத்தான்முத்திமேவும்

(இ-பு.) உடைத்து எறிந்துவிட்டகல்லில் ஈரமுள்ளமண்ணில் ஓட்
டில் இவைகளுமல்லாமல் வேறேயெதுகிடைத்தாலும் அதுகளிலொன்
றைப் பரமசிவனாகப்பாவித்துக் கிரியைவிரும்பி மறவாமற்பற்றி உறுதி
யிருந்த அன்புடன் ஒருவன்மனங்கனிவானானால் அவனுக்குரிஷபக்கொடி
யுள்ள பரமசிவனதுகிரியையால் முத்திகிடைக்கும்-எ-று. (ரு)

காட்டிடுங்குரவன்றானுங் கயவனுந்தகையனேனு
மீட்டுமக்கிரமம்வாளா வசனமாமியக்கிற்றேனுங்

[illegible]சட்டமானுக்கன்றுறு மயிவிற்கிழ்மகனுமேறு
[illegible]டியவவாவொன்றுண்டேற் சிவபதநண்ணுவானே

(இ-பு) அறிவிக்கிறகுருவும் சாஸ்திரவிசாரணை யில்லாதவனாயா னாலும் உச்சரிக்கிறமந்திரமும் பயனில்லாத வசனத்தன்மை யுள்ளதே யானாலும் உபதேசம்பெற்ற சிஷன் விவேகமில்லாத மிழ்மகனேயானாலு ம் சொல்லிய அன்பெனபது உண்டாயிருக்குமானால் சிவபதத்தையடை வான்-எ-று, (௬)

ஆரணநான்குமோதி யறிந்தபோ ரிருனோனும்
காரணவேள்விநாளுங் கருத்தினின் முடித்தானேனும்
வாரணமுரித்தவள்ளன் மலரடிதன்னினைந்த
பூரணவேட்கையில்லான் பொருந்திடான்முத்தியன்றே

(இ-பு) நான்குவேதங்களும் ஓதியுணர்ந்த ஞானவானானாலும் சுவ ர்க்கபதத்திற்குக் காரணமாகிய நூறுயாகம் விளவாகச்செய்து நிறைவே ற்றினவனேயானாலும்யானையையுரித்தநம்மிறைவன் திருவடிமலரில்வை த்த பூரணமாகிய அன்பில்லாதவன் முத்தியடைவான-எ-று. (௭)

ஆதலாற்கருமம்யாவு மையத்தோடியற்றினற
பேதமையுளத்தார்பெற்ற பேறில்லைபண்டோர்வேடன்
போதமிலரசன்சொன்ன வினைநறபொருளென்றெண்ணி
வேதநாயகனைப்பூசித் துய்ந்தமைவிளர்புவாமே

(இ-பு.) ஆகையினால் கிரியைகளெல்லாம் சந்தேகத்துடன் செய்கி ருக்கும அறிவில்லாதவர்கள் அடைந்தபேறு ஒன்றுமில்லை பூர்வத்தில் ஒ ருவேடன் ஞானமில்லாத ஒரு அரசன்சொல்லிய வினைவார்த்தையை நல்லபொருளென்றுநம்பிப் பரமசிவனைப்பூசித்து உய்ந்த சரித்திரத்தைச்சொ ல்லுகிறோம்-எ-று. (௮)

பண்டுபாஞ்சாலதேசப் பார்த்திபக்குமரன்மிக்க
திண்டிறற்சிங்ககேது வெனும்பெயர்ச்செங்கோல்வேந்தன்
கொண்டலொத்துதவுகையான் கோதிலான்குணத்தின்மிக்கான்
றணுதலின்றிவேட்ட மாடுவானசமைந்துபோனான்

(இ-பு.) பூர்வத்தில் பாஞ்சாலதேசத்து ராசகுமாரன் மிகுந்தபராக் கிரமமுள்ள சிங்ககேதுவெனும் பெயர்பெற்றச் செங்கோல்செலுத்து மன்னன மேகம்போற் கொடுக்குங்கையான் குற்றமில்லாதவன் நற்குண த்திற்சிறந்தவன இத்தகுதியுள்ள அவன்ஒருநாள் நீங்குதலில்லாமல் வே ட்டையாட உத்தேசித்துப்போனான்--எ-று,

அடியினைவலைவார்காவித் தடந்தொறும்வருவார்கோடி
யடிபொருவிலைபொங்கத் தொண்டகாதுவைப்பார்கோடி

கடிசெவிநுமலிபற்றி வருபவர்கோடிகோடி
கடிதருதொகையோர்சூழக் காட்டகம்வேட்டை[illegible]யதான்

(இ-பு,) அடிகளின்மேல்வலைகளும் வார்களும்போட்டுச்சுமந்துகொ ண்டு மார்க்கந்தோறுஞ்செல்லுகின்ற வேடர்கள்கோடிபேர் அடியுடன் இரும்காதமுழங்கக் குறிஞ்சிப்பறைகள் முழக்குகிற வேடர்கள் கோடி பேர் வளைந்தகாதுகளையுடைய நாய்கள்பற்றிக் கொண்டுவருகின்றவர்க ள்கோடிகோடிபேர் இவ்வாறு கணக்கில்லாதவேடர்கூட்டஞ் சூழ்ந்துவ ரச்சென்று காட்டிலிடத்தில்வேட்டையாடினான்-எ-று. (௰)

அப்பெருவனத்திற்சண்ட னெனும்பெயர்வேடனெஞ்சி
யெப்பெருநெறியுநேடி விலங்கினையெறியவெண்ணி
யொப்பருஞ்சிலையினோடுங் கணைபிடித்தருத்தச்செல்வான்
இப்பியமொழிந்துநந்தி யிடிந்தவாலயத்தைச்சேர்ந்தான்.

(இ-பு,) அந்தப்பெரிய ஆரணியத்தில் சண்டனென்கிறஒருவேடன் தனித்து எல்லாவழிகளையுந்தேடி மிருகங்களைக்கொல்லநினைத்து ஒப்பி ல்லாதவில்லையும் பாணத்தையும்பிடித்துக் கோபத்துடன் செல்லுகின்ற வன்பொலிவுமாறியிடிந்துபாழாயிருக்கும்ஒருஆலயத்திற்சேர்ந்தான்எ-று

சிதைந்துருவழிந்துவீழ்ந்து கிடந்ததோர்சிவலிங்கத்தைக்
குதைந்தவார்பகழிவேடன் கண்டனன்குறித்தநெஞ்சிற
புதைந்தபோன்பினாலே போற்றினனெடுத்துப்போந்து
ததைந்தபூந்தெரியல்வேய்ந்த தராபதிதிருமுன்காட்டி

(இ-பு,) சிதைவுபட்டு உருவம்அழிந்து விழுந்திருக்கிற சிவலிங்கத் தைக்கண்டு குதையுள்ளநீண்டகணைகளையுடைய அந்தவேடன் அதைக்கு றித்த மனதில்நிறைந்த பெரிதானஅன்புடன்துதித்து எடுத்துக்கொண்டு வந்து நெருங்கிய பூமாலையணிந்த அரசன்முன்காட்டி-எ-று (௰௨)

அருப்புவிமுழுதுமாளு மரசனேயரசரேற
விரும்பியவடியேன்கையின் மேவியசிவலிங்கத்தைப்
பெரும்பயனறிந்துபோற்றிப் பூசிக்கும்பேற்றியெல்லாந்
தாம்பெறவுரைத்தியென்னச் சாற்றினன்சாற்றலோடும்

(இ-பு,) அருமையான பூமிமுழுவதுங்காக்கும் ராஜனே மன்னவர் சிங்கமே விருப்பங்கொண்ட அடியேன்கையில்பொருந்திய சிவலிங்கத் தை மிகுந்தபயனை அறிந்து துதித்துப்பூசிக்கிற முறைமையெல்லாஞ்சிரம மாகச் சொல்லவேண்டுமென்றான் அப்படிசொன்னவளவில்-எ-று, (௰௩)

மடமையினன்றேவிந்த வனசரனுரைத்தமாற்றம்
புடையமாந்தர்கள்கேண்மி னென்றுநகைபடத்துநர்க்குப்

௨௯ம் வேடன்சிவபூசைகடைப்பிடித்தஅத்தியாயம்

பழைய புலாத்தடக்கைவேட னிலக்கறுபணிப்பனென்றுக்
கடலுலகாளும்வேந்த னசதியாற்கட்டுரைத்தான்.

(இ-பு.) இந்தவேடன்சொன்னவார்த்தை அரியாமையினாலல்லவா என் அருகிலிருப்பவர்களேகேளுங்களென்று கைதட்டிநகைத்து ஆயுதங்களும் பெரியகையுள்ளவேடனே பூசைசெய்கிற முறைமையைச் சொல்லுகிறேன்கேளென்று கடல்சூழ்ந்த உலகாளும்அரசன் எளனமாகச் சொல்லுகிறான்-எ-று. (௰௪)

வந்தியசிவலிங்கத்தை யியல்பின்மஞ்சனநீராட்டிப்
பூந்துணர்சந்தஞ்சாற்றிப் புகையொடு தீபங்காட்டி
யாந்தவாச்சுட்டசாம்பர் கொணர்ந்து முன்வைத்துப்போற்றி
யாய்ந்துநீதுய்க்குந்தீம்பா லடிசிலோடளையுநல்கி

(இ-பு.) வந்திய சிவலிங்கத்துக்கு விதிப்படி திருமஞ்சனநீரால்அபிஷேகஞ்செய்து சந்தனபுஷ்பந்தரித்துத் தூபதீபங்கள்கொடுத்து இறந்தமனிதரைச்சுட்ட சுடலைச்சாம்பலைக்கொண்டுவந்துஎதிரில்வைத்துப்போற்றிசெய்து பதம்அறிந்து நீஉண்ணுகின்ற மதுரமுள்ள பால் அன்னம் இன்னுமுள்ளது நிவேதித்து-எ-று. (௰௫)

நேயமோடிறைஞ்சியேத்தி நிருத்தங்கள்புரிந்துநின்று
வாயினாலமுதகானம் பாடியும்வணக்கஞ்செய்துந்
தூயநற்பூசைசெய்வா யென்றிறைசொன்னான்முற்றுங்
காயும்வெஞ்சிலைக்கைவேடன் மெய்மையாற்கருத்திற்கொண்டான்

(இ-பு.) அன்புடன்பணிந்துதுதித்து நடனங்கள்செய்தும் வாயினால் மதுரமுள்ள கீதங்கள்பாடியும் பவித்திரமான நல்லபூசைசெய்யென்றுஅரசன்சொன்னான் பகைவரைக்கொல்லத்தக்கவேடன் அதையெல்லாம் உண்மையாக மனதில் எண்ணிக்கொண்டான்-எ-று. (௰௬)

நெஞ்சினில்வேட்கைகூரக் கடைப்பிடிநிகழ்தலாலே
வஞ்சமுற்றரசன்சொன்ன விதிமுறைவழுவாதெண்ணி
யஞ்சலித்தயலன்றூசை யனுதினமொருநாள்போல
விஞ்சவேபுரியுங்காலத் தொருபகல்விரதவேடன்

(இ-பு.) விரதங்கொண்டிருக்கும் வேடன்மனதில் அன்புமிகுதியால் அரசன்சொன்னதையெல்லாம் மறவாததன்மை உண்டானதினால் அவ்வரசன் கபடங்கொண்டு சொல்லியமுறைமையில் ஒன்றுந்தவறாமல் ஞாபகத்தில்வைத்துக்கொண்டு வணங்கிச் சிவபூசை முதல்நாள்போலவே செய்யுங்காலத்தில் ஒருநாள்-எ-று. (௰௭)

மற்றையவெல்லாங்கொண்டு வரதனைப்பூசைசெய்வா
னுற்றனனடலைநீறு கண்டிலனாலேயேசிச்
சுற்றியவனங்களெங்குந் திரிவினனோடிக்காணான்
சற்றையங்குழலாளோடு கருத்தழிந்திதுசொல்லுவான்

(இ-பு.) சிவபூசைக்குவேண்டிய திரவியங்களெல்லாஞ் சேகரித்துக்கொண்டு பூசைசெய்யஆரம்பித்துச் சேகரித்ததிரவியங்கள் சரியாகவிருக்கின்றதாவென்றுபார்க்கையில் சுடலைச்சாம்பலில்லாமையினால் விரைவுடன் சுடலைகளையெல்லாந்தேடிப்பார்த்து அகப்படாமல் மனம்வருந்தித்தன்மனைவியுடன்சொல்லுகிறான்-எ-று. (௰௮)

குன்[illegible]ழலைக்கொடிச்சிகேட்டி
யன்றுநங்குரவனான வரசர்கோனபணித்தவாறே
யின்றளவீசன்பூசை யியற்றினேன்குறைபாடின்றி
யொன்றவற்றிலதேலன்றால் பூசையின்றொழியுங்கண்டாய்

(இ-பு.) குன்றி மணிமாலைதொங்கி அசையும்படியான குவிந்த தனமுள்ள குறமாதாகிய என்மனைவியேகேள் நம்முடையகுருவாகியராஜன் அன்றுசொன்னமுறைமைப்படி யின்றுவரையில்சிவபூசை குறைபாடில்லாமல்செய்தேன் அந்தப்பூசைத்திரவியங்களிலே இப்போது ஒருதிரவியமில்லாவிடில் சிவபூசைகிரமந்தப்பிப்போம்-எ-று. (௰௯)

பூசனைவழுவுமாயிற் புலைதுடனன்னைப்போற்றிச்
சீசியாவிருக்கலாற்றே னிறப்பதேதிண்ணமென்றான்
மாசிலாவுள்ளத்தாளுங் குறைபடேதவந்தென்றாள்
ஆசுலாமல்குலாய்தேன் சுடலையினடலையென்றான்

(இ-பு.) சிவபூசைதவறுமானால் சீச்சியென்கிறதாற்றுடலைவைத்துக்கொண்டிருக்கமாட்டேன் இறந்துபோவதேநிச்சயமென்றான் குற்றமில்லாத மனதுடைய அந்தக்குறமாது இப்போதுநேரிட்ட குறைபாடென்னவென்றாள் ஆடையணிந்த அல்குலையுடையபெண்ணேகேள் சுடலைச்சாம்பல் குறைபாடு என்றான்-எ-று. (௨௰)

உரைத்தவத்துள்ளேயொன்றின் றுயிறுமுலைகைகூர்ந்து
பரித்திடார்தொண்டர்பூசை யென்றுநீபகர்ந்தயாவும்
கருத்தினுணர்ந்தேனின்று கனைநுதற்பரமன்றன்னை
யருத்தியாலவழிபட்டேத்த வறைகுவனடியனென்றாள்

(இ-பு.) சொல்லியதிரவியங்களில் ஒன்றில்லாவிட்டாலும் அடியார்கள் சந்தோஷத்துடன் பூசையைத்தொடங்கார்களென்று நீசொன்னதையெல்லாம் மனதில்அறிந்தேன் இப்போது சிவபூசை யன்புடன்செய்துதிக்க அடியேன் ஒன்றுசொல்லுகிறேனென்றாள்-எ-று. அதாவது (௨௧)

மத்திடையைலொன்று குறைந்ததென் றிரங்கவேண்டாஞ்
சமித்தாந்தயில்லிற் செந்தழல்கொளுவிமூட்டி
யத்துநான்வீழ்ந்தக் கனல்புகுந்தவிவேனின்னே
பூமாய்த்தமார்பவேந்த சம்பாரற்பூசைசெய்வாய்.

(இ-பு.) சுடலைச்சாம்பலொன்று குறைந்ததென்று விசனப்படவேண்டியதில்லை காவலாகக்கட்டிய நம்முடையகுடிச்சையில் தீவைத்துக்கொளுத்திவிட்டு நான்மோகூத்தைவிரும்பி அந்தத்தீயில்விழுந்து இறந்துபோகிறேன் பூமாலையணிந்திருக்கும் மார்பையுடையநாயகனே அந்தச்சாம்பலைக்கொண்டு இப்பொழுதே சிவபூசைசெய்-எ-று. (உஉ)

என்றவள்சொல்லக்கேட்ட வேடனுமினைந்துசொல்வான்
மன்றலங்குழலாய்கேட்டி யில்லறம்வளரநின்றான்
றன்றனிமனைவியாலே தருமமேமுதலநான்கு
மொன்றிடவேண்டுமென்று மூலகமென்றுரைத்துப்பின்னும்

(இ-பு.) என்றவள்சொல்லியதைக்கேட்டவேடன் மனமிரங்கிச்சொல்லுகிறான் வாசனையுள்ள அளகத்தையுடையமாதே நான் சொல்வதைக்கேள் இல்லறம்வளரும்படியிருக்கு மொருவன்தன்மனைவியினால்தர்மமுதலாகிய நான்கும் பொருந்தவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றுசொல்லி மேலுஞ்சொல்லுகிறான்-எ-று. (உங)

பொங்கிளமுலையாய்கேண்மேற் புதல்வனைப்பெற்றுயல்லை
மங்கையின்பருவத்தின்ப மானநீமன்றுங்காமந்
தங்கியகாதன்மேன்மேற் றழைத்திடுமிளமைதன்னி
லங்கியில்வீழ்ந்துசாதற் கடுக்குமோவடாதுகண்டாய்

(இ-பு.) இளமையிருந்த தனமுள்ளவளேகேள் நீயிதுவரையில் புத்திரசெய்ப்பத்தையடையவில்லை நீயோ பதின்மூன்றுவயதாகிய மங்கைப்பருவமுள்ளவள்காமம்பொருந்திய ஆசைமேல்மேல் தழைக்குமிளமையில் தீயில்விழுந்து சாதல் அடுப்பதோ அடுப்பதல்ல-எ-று. (உச)

மின்குலமனையவாளி வேட்டுவர்க்கரசாய்த்தோன்று
நின்குலமைந்தனில்லா நிரயப்புக்காழ்ந்துபோன
வென்குலத்தவரையெல்லா நாகினின்றேற்றிமேலென்
புன்குலந்தன்னையோம்பிப் புரப்பவர்யாவரென்றான்

(இ-பு.) மின்னற்கூட்டமொத்தபாணமேந்திய வேடர்குலத்துக்கு ராசனாகப்பிறக்கும் உன்னுடையவமிசபுத்திரனில்லாமல்நரகத்தில் மூழ்கிப்போன என்குலத்தாரையெல்லாம் நாகத்திலின்றுங்கரையேற்றிஇழிவென்புல்லியகுலத்தை ஆதரித்து ரக்ஷிப்பவர்கள்யாரென்று சொன்னான். (உரு)

கருங்கயல்விழியாள்கேட்டுக் கூறினாள்கருப்பமென்று
மருங்கயற்கடலுளாழ்ந்த வறிவறமதியிலாரிற்
பெருங்கயமுரித்தோனன்றொண்டு பேணியேமாய்ந்துபெற்றாற்
பொருங்கயமனையாய்பின்னும் விழைவதோர்பொருளுமுண்டோ

(இ-பு.) கரிய சேல்மீன்போன்ற கண்களையுடையவள் தன்கணவன் சொன்னதைக்கேட்டுச்சொல்லுகிறாள் யானைபோற்பலமுள்ளகணவனே அறிவில்லாதவர்கள் பிறவியாகியசமுத்திரத்தில் மூழ்கி யிறந்துபோகிறதுபோலப் பெரியயானையையுரித்த பரமசிவனுடைய அடிமைத்திறத்தை ஆதரித்து இறந்துபோகப்பெற்றால் அதற்குமேலும் விரும்பத்தக்கபொருளொன்றிருக்கின்றதோ-எ-று. (உசா)

புரவலமருவியீசன் பூசனைமுடிக்கவேண்டி
விரவனல்குளித்திப்போது வீவன்யானென்னலோடு
மரவெனத்திகழுமல்குலாயிழைதுணிவையோர்ந்து
பரவருங்கற்பினாளை யெரிபுகப்பணித்தலோடும்

(இ-பு.) இறைபவனே தடுக்காதே சிவபூசை நிறைவேற்றவேண்டி யிப்போதுபொருந்திய தீயில்விழுந்து நானிறந்துபோகிறேனென்று சொன்னஅளவில் பாம்பின்படம்போல் விளங்குகின்ற அல்குலையுடைய தன்மனைவியின் துணிவையறிந்து யாவருந் துதிக்கத்தக்க கற்புள்ளவளைத்தீயில்விழும்படி உத்தரவுசெய்தமாத்திரத்தில்-எ-று. (உஎ)

வானயாறிழிந்ததென்ன வரையினின்றிழிந்துபாயுங்
கானயாறருவியாடிக் கலன்பலவணிந்துசுண்ண
நானஞ்செய்வாசநீர்பூசி நறுமலர்மாலைசூடிப்
பானுவைவெண்படார்த்துங் கணவனைப்பணிந்துவாழ்த்தி

(இ-பு.) ஆகாயகங்கை யிழிவதுபோல மலையினின் றிழிந்துபாயுங்காட்டாறாகிய அருவியில் ஸ்நாநஞ்செய்து பலவித ஆபரணங்கள் அணிந்துகொண்டும் சுண்ணப்பொடிகஸ்தூரி இவைகள்சேர்ந்த சந்தனக்குழம்புபூசிக்கொண்டும் வாசனையுள்ள பூமாலை தரித்துக்கொண்டும் பாலின்நுரையையொத்த பட்டுவஸ்திரந் தரித்துக்கொண்டும் தன்கணவனை வணங்கித்துதிசெய்து-எ-று. (உஅ)

மனையின்மீதங்கிசேர்த்தி வலங்கொண்டுவணங்கியேத்திப்
புனைமதிக்கண்ணியான்றன் பொலன்கழறொழுதுபோற்றித்
தினையெனுந்துணையுநீங்கா தன்பொடுநினைப்போர்கள்
வினையிலதுருக்குமையா வின்னைப்பங்கேளாயென்றே

(இ-பு.) வீட்டின்மேல்நெருப்பைப்போட்டுப் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துத் துதிசெய்து பிறையைக்கண்ணியாக அணிந்த திருமுடியையுடைய பரமசிவனது பொன்மயமான

திருவடிகளை வணங்கித் துதிசெய்து இன்னையளவும் நீங்காமல் நியாயிப் பவர்கள் வினையாகிய விலங்கைத் தறித்துவிடும் ஐயனே அடியேனுடை யவின்னணப்பூசைக்கேளென்று-எ-று. (௨௧)

இந்திரியங்களைந்து மலராகவெனதுகாயங்
கந்தமார்பூசையிற்காட்டு மதிலாகக்கருத்துநீடுஞ்
சுந்தரதீபமாகப் பிராணன்றுப்பனமேயாக
வந்தநாற்கரணமுற்று மருக்கியமாகக்கொண்டே

(இ-பு.) பஞ்சேந்திரியங்கள் மலராகவும் என்னுடைய சரீரமானது வாசனைதங்கிய அபிஷேகையாகவும் என்னிருதயமானது மிகுந்தசுந்தரமுள்ளதீபமாகவும் பிராணனானது நிவேதனமுமாகவும் அந்தக்கரணமுழுவதும் அருக்கியமாகவுங்கொண்டு-எ-று. (௨௨)

அடியனேன்சிவன் பூசாபலத்தினை யடையல்வேண்டுங்
கொடியனவானமரர்வாழ்வுங் குறிக்கிலேன்பிறவிதோறுந்
தடையறத்தோன்றினுலு மாயையைத்தணந்துவெள்ளை
விடையவின்கழற்கீழன்பு வேண்டுவனென்றுவேண்டி

(இ-பு.) அடியேன் சிவன்பூசைப்பலனையடையவேண்டும் கொடியேனுகியவான்தேவர்கள்வாழ்வையுங் குறிக்கின்றிலேன் தடையில்லாமல் எண்பத்துநான்கு லக்ஷம் யோனிகள்தோறும்பிறந்தாலும் மாயையினீங்கிவெள்ளைரிஷபவாகனத்தில் ஆரோகணித்துக்கொண்டெழுந்தருளுகின்றநின்திருவடியின்கீழ் அன்புபொருந்த விரும்புகிறேனென்று வேண்டி-எ-று. (௨௩)

செங்கபலனையகண்ணுள் செழுந்தழற்குழிபுதன்னுட்
பங்கயமலரிற்செல்லுந் திருவெனப்பாய்ந்துமாயாப்
பொங்கியசாம்பராகக் கண்டனன்புளகமோங்கி
யங்கையினடலேயேந்தி யீசனையருச்சித்தானே

(இ-பு.) செவ்விய சேற்கெண்டையையொத்த கண்ணுள் செழுமையானதீப்பிழம்பில் தாமரைமலரிற்செல்லுந்திருமகள்போலவிழுந்து பரிசுத்தமான சாம்பலைக்கண்டு புளகங்கொண்டு அந்தச்சாம்பலைத்தன்னுள்ளங்கையில் எடுத்துக்கொண்டு பரமசிவனை அருச்சித்தான்-எ-று. (௨௪)

இறையவனபூசைமுற்றி யிறுதியிற்கழித்தவெல்லாம்
மறையுதலென்றுமேற்கும் பேற்றிபோலற்றைப்போது
மறைமுதல்பூசைச்சேடம் வாங்குவான்வந்துதோன்றி
நிறையுடனின்றுள்கண்டு நெடுந்தகைநினைவிற்றேர்வான

(இ-பு.) சிவபூசை இவ்வாறு நிறைவேற்றி அந்தப் பூசையின் முடிவில் கழித்துவிட்டதையெல்லாம் அவன்மனைவிநாள்தோறும் ஏற்றுக்கொ

ள்வதுபோல அன்றைப்பதினமும் பரமசிவனுடைய பூசை நிருமாலியத்தை வாங்கிக்கொள்ளவந்து வணக்கமுடனின்றுள் அதைவேடன்கண்டு தன்மனதில் ஆலோசிக்கின்றுன்-எ-று. (௨௫)

மனைபடுதீயில்வீழ்ந்து மாண்டனமாய்ந்தாள்வெந்த
புனிதவெண்சாம்பராலும் பூசனைமுடித்தவாறுங்
கனவுகொனனவுதான்கொல் கழிந்தவள்வந்துநின்றுள்
வினையினுல்வெந்தவில்லும் பண்டுபோல்விளங்கிற்றென்னே

(இ-பு.) வீட்டில் பற்றிக்கொண்டதீயில் நம்முடையமனைவி யிறந்ததும் இறந்தவளுடைய புனிதமானவெண்சாம்பலால் நாம் பூசைசெய்து நிறைவேற்றிய முறையுஞ் சொப்பனமோ அல்லது நினைவுதானே இறந்தவளோ முன்போலவேவந்து நிற்கின்றுள் வினையினுல்வெந்தவீடும் முன்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது இதுஎன்னகாரணம்-எ-று.()

உள்ளத்தினினினையுந்தோறு மதிசயித்துவகைதோன்றத்
துளக்கறநின்றவந்தத் துணைவிதன்முகத்தைநோக்கி
வளர்த்தசெந்தழலில்வீழ்ந்தாய் மாய்ந்திலைவந்தவாறுங்
கிளத்துதிவெந்துநீறுங் கிளர்மனைதழைத்ததோடும்

(இ-பு.) மனதிலிவ்வாறு நினைக்குந்தோறும் ஆச்சரியம் அடைந்துசந்தோஷம்உண்டாக நடுக்கமில்லாமலிருக்கிற தன்மனைவியாள்முகத்தைப் பார்த்துப் பெண்ணே வளர்ந்த அக்கினியில் விழுந்த நீஇறவாமல் வந்தவாறும் வெந்து நீறுனவீடு முன்னிலும்செழுமையாயிருக்கு முறைமையுஞ்சொல்-எ-று. (௨௭)

(வேறு,)

என்றுமொழிந்தானதுகேட் டதுமீதுசொன்னுள்
மின்னூர்தழலில்லைவத் தாங்கதில்வீழ்ந்ததன்றிப்
பின்னுன்விளைந்தபடி யிதெனப்பேசவற்றே
பொன்னுரமார்பதுயி லீங்கினர்போலவந்தேன்

(இ-பு.) என்று சொல்லலும் அதைக்கேட்ட வேடன்மனைவியான்வள்பொன்மாலையணிந்த மார்பையுடையஎன்பிராணநாயகனே வீட்டில் நிறைந்தநெருப்பைவைத்து அதில்விழுந்தது எனக்குத்தெரியுமேயல்லாமல் பின்பு விளைந்தது இவ்வாறென்று நான்சொல்லத்தக்கதோ நித்திரைநீங்கின வர்கள்போல்வந்தேன்-எ-று. (௨௮)

கனையாரழலுங்க வெரிந்துகரிந்துவீழ்ந்த
மனையானதியாவன ஞெடுவையங்கள்கண்டே

னைாயாளுடையா யெனடீங்கைபிறந்தவொடு
நின்பாயகிழ்வெய் தினனிதாகிழ்ந்தகாலை

(இ-பு.) நீ[illegible]த நீயானது உன்னைக் கரிந்தபோன நம்முடைய
டு அழியாத வளப்பத்தடன் பிரகாசித்துக்கொண்டிருப்பதைக்கண்டே[illegible]
ன என்னுடைய நாயகனே என்று தன்மனைவி சொன்னவளவில் நடந்த[illegible]
ந்த அதிசயத்தை மனதிலெண்ணி மகிழ்ச்சியடைந்தான் இறு நடந்தகா[illegible]
த்தில்-எ-று, (கூஎ)

(வேறு,)

கோடிசெங்கதிர்குழுமிய தெனவொளிசொழிப்ப
வாடகத்திறுமணியி னமைத்ததோர்விமான
மூடறத்துவாள முகட்டிழிதாவதிலுறையும்
கேடில்சீர்க்கணநாதர் வந்தினையனதிளந்தார்

(இ-பு.) ஒருகோடி சூரியர்கள் ஒன்றாய்க்கூடினதுபோல ஒளி[illegible]
க்கப்பொன்னினுலும் ரத்தினங்களினுலும் அமைக்கப்பட்டதாகிய ஒரு
தேவ விமானம ஆகாயமுகட்டைப் பிளந்துகொண்டு இழிந்துவர அதி
ல் வீற்றிருக்கும் அழிவில்லாத சிறப்புள்ள கணநாதர்கள்வந்து இந்த வா
ர்த்தை சொல்லுகிறார்கள்-எ-று. (கூஅ)

செங்கைவார்சிலைக்கி ராதநின்றேவியிேனுடும்
பொங்குபேரொளிமா னத்திற்பொருக்கெனவேற்றி
யெங்களுயகனேழி னேடேழுலகின்றான்
பங்கனுங்களைக்கொடு வருகென்னவேபணித்தான்

(இ-பு) சிவந்தகையில் வில்லேந்தும் [illegible]னே உன்னையும் உன ம
னையாளையும் அதிகரிக்கும் பெரிய ஒளியுள்ள இவ்விமானத்தி வேற்றிக்
கொண்டு நங்களிறைவனும் பதினன்கு உலகையும் ஈன்றருளிய பார்வதி
தேவியார்பாகனுமாகிய பரமசிவன் தம்முடைய உலகத்துக்கு விரைவுட
ன்கொண்டுவரும்படி யெங்களுக்குக் கட்டளையிட்டார்-எ-று, (கூகூ)

அண்ணலேவலினடைந் தனமிக்கணத்தயிலார்
கண்ணனிேனொடும் வருகநீயென்றனர்கழறி
விண்ணிேனோர்புகழ்விளங் கொளிவிமானத்தினேற்றி
மண்ணிேனோர்தொழச் சென்றனர்மங்குல்வானெறியே

(இ-பு) பரமசிவனுடைய கட்டளையினல் நாங்கள்வந்தோம் (ஆதலா
ல்) வேலொத்த கண்களையுடைய உன்மனைவியுடன் வாவென்றுசொல்லி
த் தேவர்கள்புகழும்படியான விளங்கும் ஒளியையுடைய விமானத்திலே
ற்றிக்கொண்டு பூலோகத்தாரெல்லாந்தொழ ஆகாயமார்க்கம சென்றார்க
ள்-எ-று, (௭0)

பாயும்வெம்பரிவேன் விகளைத்தையும்பரித்த
தூயாரயினுமனுனெர் னைச்சிவநகத்தி
லாயவேடனேடரிவை யைப்புகுத்தினரன்றோர்
மாயநீங்கியபேரின்ப வாழ்வினின்மகிழ்ந்தார்

(இ-பு) நூறுஅசுவமேதயாகஞ்செய்தவர்களேயானலும் சேரக்கூ
டாத சிவசுவர்க்கத்தில் அந்தவேடனையும்அவன்மனைவியையுஞ்சேர்த்தா
ர்கள்அவ்விருவரும்மாயைநீங்கிய பேரின்பவாழ்வில்மகிழ்ந்திருந்தார்கள்
-எ-று, (௭க)

ஆதலாலரன்பூசனைக் குரியதையறியிற்
காதலாறுய்கண்டப் பிடியன்றிவேறில்லை
மாதுபூசனைவழிபடற் கிதுமறைப்பொருளென்
றேதிறுன்றெல்லை நாலுணர்ந்தருமுரவோன்

(இ-பு) ஆகையால் சிவபூசைக்குரியதை ஆராயுமிடத்தில் அன்பி
னுலுண்டாகும் உறுதிப்பாட்டேயன்றி வேறென்றுமில்லைபார்வதிபாகனை
ஆராதிப்பதற்கு இதுதான் வேதத்திற்சொல்லும் உண்மைப் பொருளு
மென்று வேதசாஸ்திரபுராணங்கள் அறிந்தருதமுனிவர்சொன்னார் எ-று

பதினேழாவது-வேடன்சிவபூசைகடைப்பிடித்தஅத்தியாய

முற்றிற்று,

ஆ. திருவிருத்தம்-கூாஎ௰௫.

உ

சிவமயம்,

பதினெட்டாவது,

உமாமகேசுவரபூசைமகிமையுரைத்த அத்தியாயம்.

காதலாலொருவர் கருதுவயாவுங் கருதியவண்ணமேதருவ
தோதுமாசுமங்க டெரிந்தெடுத்துரைத்த துமாமகேச்சுரமெனப்பகருந்
தோலாவிரதமேவற்றினுமேலாந் திறத்ததொன்றுளதெனவியந்து
சூதன்மாதவத்திர் யாவருங்கேண்மினென் றதன்வரன்முறைசொன்னான்

(இ-பு) ஆசையுடன் ஒருவர்நினைக்கும் பொருளையெல்லாம் அவர்க
ள்நினைத்தபடி தருவதும் சொல்லும் ஆகமங்களில் ஆராய்ந்தெடுத்துச்
சொல்வதுமாகிய உமாமகேசுரவிரதமென்று சொல்லத்தக்க பழுதில்லா

த விரதங்களுக்கெல்லாம் மேலான தன்மையுள்ளதாக ஒன்றிருக்கின்ற முனிவர்களே அந்தவிரதத்தைச் சந்தோஷத்துடன் சொல்லுகின்றேன் இன்முறைமையைக் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்-எ-று.

அலைகடலுடுத்த புவிக்கெலாமணியாய்க் கவினைப்பெறுமானந்தநாட்டின் மனைவியும்பொறையு மைந்தரும்வாழ வாழ்பவன் மனையறத்தாற்று வினைவல்லான்வேத விரதனென்பவனோர் வேதியனவனருள்கூடத் தனையையுணர்ப்பெருக்கிறின் கனிந்தவாய்தார்க் குழற்சாரதையெனப (௪)

(இ-பு.) ஒலிக்காநின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்துக்கெல்லாம் ஆபரணம்போல்வதாய் அழகுபொருந்திய ஆனந்தமென்னும்தேசத்தில் மனையாளும் சாந்தகுணமுள்ள புத்திரர்களும் வாழும்படி வாழ்ந்து இல்லறம்வழுவாமல் காக்குஞ் செய்கையில் வல்லவனுமாய் வேதவிரதனென்கிறபெயருள்ள ஒருபிராமணனிருந்தான் அவன்மிகுந்தஅன்புடன் ஈந்திருக்கும் புத்திரியாகிய இனிய கோவைக்கனியொத்த செவ்வாயும் தாழ்ந்த அளகபாரமுடையவளாய் சாரதையென்னும் பெயர்பெற்ற ஒருத்தியுண்டு-எ-று.

மின்னிகர்மருங்குற் பிறைநுதற்கனிவாய் வெண்ணகைக்கருங்குழ லுடையாள், பன்னிருபருவ மடைந்தனள்பைந்தேன் பனிமுகைமென்முலை முகிழ்த்தா, ளன்னகாலையிலத் திருநகராளு மரசர்கோனினுயிர்த்தோ ழ, னன்னெறியிழுக்காக் கருணைமால்பதும நாபனென்றுரைக்குமறை யோன்.

(இ-பு.) மின்னலையொத்த இடையும் பிறையையொத்த நெற்றியும் கோவைக்கனிபோன்றசெவ்வாயும் வெண்ணகையும் கருமைநிறமுள்ள அளகமுமுடைய அந்தப்பெண்ணானவள் பன்னிரண்டுவயதுள்ளவளாய்ப் பசுமையுள்ளகோங்கினரும்புபோலத் தனங்கள்உண்டாக மங்கைப்பருவம்பெற்றாள் அப்போது அந்த நகரத்தையாளுகின்ற அரசனுடைய இனியவுயிர்போன்ற தோழனாகிய நல்லொழுக்கந்தவறாத கிருபைமிகுந்த திருமாலையொத்தவனாய்ப் பதுமநாபனென்னும் பெயருள்ள ஒருபிராமணன்-எ-று. (௫)

உளமகிழ்காதற் கிழத்திபல்காலமுநல னுகர்ந்துபின்னிறப்ப, விளமைபோயடைந்த மூப்புடனிருந்து மிருநிதிபல்பெயகளிப்பாற், றளைவானமுறுவற் குழற்கனிவாய்ச் சாரதையினைக்வேட்டு வளநிதிக்கொடுத்து முலைவிலைகொடுத்துமணவினை தொடுகெனவிடுத்தான்.

(இ-பு.) உள்ளத்திலமிகுந்த அன்புடைய அவன்மனைவி நெடுநாள் இன்பம்அனுபவித்துக்கொண்டிருந்து இறந்துபோனாள் அவனுக்கு இளமைப்பருவம்நீங்கிக் கிழத்தன்மையடைந்திருக்கவும் மிகுந்ததிரவியமிருக்கிற களிப்பினால் முல்லையரும்புபோன்ற வெண்ணகையும் தாழ்ந்தகுழலும கனிவாயுமுள்ளவளாகிய சாரதையென்பவளை விரும்பி அவளைப் பொருந்திய மிகுந்த திரவியங்களைப் பரியமாகக்கொடுத்து மணந்தொழில்பேசும்படி சிலமுதியோரை அனுப்பினான்-எ-று. (௬)

ஆங்கவர்கூறு மொழிதலுங்கேட்ட வஞ்சிநேர்பொலங்கொடி தாதை, யீங்கியாமெளிய மகட்கொடைநேரா தினனுரைமறுத்தனமாயிற், றேங்கு நீருலக மொருகுடைநிழற்றுஞ் செய்யகோலிறைவலியானைய், கோங்கி ளமுலையாண் மணவினைமுடிப்பன் கொடியனென்றுணர்ந்தனனோர்ந்தான்.

(இ-பு.) அந்தமுதியோர்கள்போய்த் தாங்கள்வந்தசேதியைச்சொல்லும் பிரகாசிக்கும் ஆபரணங்களணிந்த பொற்கொடிபோன்றசாரதையென்பவளுடைய தகப்பன்கேட்டு நாமிப்போது ஏழையாயிருக்கின்றோம் ஆதலால் [illegible] வார்த்தைசொல்லாமல் கன்னிகையைக் கொடுக்கிறதில்லையென்று மறுத்துச்சொல்வோமேயானால் அந்தப்பிராமணன் துஷ்டன் மேலும்சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்துக்கெல்லாம் தன்னொருகுடைநிழலைச்செய்யும் செங்கோலுள்ள ராஜனுடையபலத்தினால் கோங்கரும்பையொத்த இளமுலையையுடையநம்முடையகன்னிகையைப் பலாத்காரமாக விவாகஞ்செய்துகொள்வானென்று யோசித்துப் பெண்கொடுக்கச்சம்மதித்தான்-எ-று. (௭)

கொய்யுளைமான்றேர்ப் பரிதியென்முகட்டிற் குறுகியகண்பரந்காலைச், செய்தவக்கிழமை யந்தணர்க்கெல்லாஞ் செழுநிதிப்புனலொடுமுழுங்கி, நெய்சொரிவேள்விக் கனலிசானாக விரைமலர்ச்செங்கரம்பற்றி, மொய்குழற்கனிவாய்முகிழ்முலையணங்கை மறையவன்வேட்டான்.

(இ-பு.) கத்தரித்த பிடரிமயிரையுடைய பச்சைக் குதிரைகட்டிய தேரில்வருஞ்சூரியன் ஆகாயத்தின் உச்சியிற்சேர்ந்த மத்தியானகாலத்தில் செல்வமாகிய தவத்திற்குரிய பிராமணருக்கெல்லாம் மிகுந்ததிரவியங்கள் நீருடன்தானமாகக்கொடுத்து நெய்சொரியப்படும் ஓமாக்கினிசாக்ஷியாக ஒழுங்குபட வளையலணிந்தகையைப்பற்றி மொய்த்த அளகமும் கனிவாயும் தாமரையரும்பையொத்த தனமுமுள்ள சாரதையென்பவளைப் பதுமநாபனென்னும் பிராமணன் விவாகஞ் செய்துகொண்டான்-எ-று. (௮)

வாம்பரித்தடந்தேர்ப் பரிதிவானவன்போய் மாதிரக்குடகடல்குளிப்ப, வாம்பல்வாயவிழு மாலையங்காலத் தந்திவந்தனைத்தொழின்முடித்து, இப்புனற்றுறையின் நகன்றுவல்லிருளிற் றிரும்பலுந்தீவிடமொழு

ருசு, மாப்புடையெயிற்று வாளராத்தீண்டச் சோர்ந்துயிர்றுறந்
ஊறவோன்,

(இ-பு.) ஊர்ச்செல்லும் பச்சைப்புரவிகட்டிய தேரையுடைய சூரி
ன்போய் மறைந்துவரும் அலைகளையுடைய மேற்றிசைச்சமுத்திரத்தில்
றைய அல்லிமலர்கள் முகமலரும் அந்திப்பொழுதில் மணஞ்சேர்ந்து
ன பிராமணன் சந்தியாவந்தனத்தொழில் முடித்துக்கொண்டு
ள்ள தீர்த்துறையினின்றுமீண்டு இருட்பொழுதில் தன்வீட்டுக்கு
ரும்பினவளவில் கொடியவிஷம் ஒழுகும்படியான துவாரத்தோடு
டிய பற்களையுடைய சர்ப்பந்தீண்டுதலினால் அந்தப்பிராமணன் சோர்ந்
டிறந்தான்-எ-று.

தொடிமலர்ச்செங்கை பற்றுபுமணந்தோன் சூழ்வினையுந்தொரு
ன்றும், வடிமலர்க்கோதை நன்னலம்பருகான் மாய்ந்தனனென்பதுகேள்
க், கொடியவெந்துயருற் றன்னவன்கிளைஞர் மேமியாக்கவலமுற்றார்
ச், கடன்முறைகழிப்பான் பழமறைவிதியால் கதழொடு
டார்,

(இ-பு.) மனைவியின் வளையலணிந்த செந்தாமரைமலர்போன்ற
கையைப்பற்றி விவாகஞ்செய்துகொண்டவன் சூழ்ந்தவினையினால் சிறப்ப
டுச் சிவிப்பினளிப் பூவணிந்த அளகத்தையுடைய அம்மனைவியினின்பம்
ஒருநாளும்அனுபவியாமல் இறந்துபோனானென்பதைக்கேட்டுக் கொடி
தாகிய துயரமடைந்து அவன்சுற்றத்தார் அவலங்கொண்டு அழுது உத்
தரகிரியை செய்துமுடிக்க வேதவிதிப்படி வேகமாகப்பற்றியெரியும்படி
சவத்தைவைத்து வந்துவிட்டார்கள்-எ-று.

மலர்தலையுலகு பரவுசாரதையை மணம்புணர்காதலன்கலவி
நலனறக்கனிந்த மூப்பினனுறி நாளுலந்திறந்திலினாலே
யலர்கருங்குவளை மதர்விழிபனிப்ப வருந்துயர்வனியுழந்திவாய்க
கலனணியொருவிக் கைம்மையாய்த்தனைதை கடிமனையிருந்தனளன்றே,

(இ-பு.) பரந்த இடத்தையுடையபூலோகத்தார் துதிசெய்யத்தக்
கபுள்ள சாரதையென்பவள் தன்கணவனானவன் கலவியின்பம்அனுபவி
க்குந்தன்மைமிக்கும்படி முதிர்ந்தமூப்பையுடையவனும் வாழும்நாள்மு
டிந்து இறந்தமையால் மலர்ந்தநீலோற்பல மலர்போன்ற கண்களில் நீர்
பெருக மிகுந்த துயரம்அடையாதவளாய் மங்கிலியத்தைநீக்கிவிட்டுத்
தந்தையின் கிரகத்திலிருந்தாள்-எ-று,

இன்னணாந்திங்கள் சிலகழிந்திடலு மெல்லியல்பருவங்கள்கடந்தோன்,
முன்னோரான் மறைபுராணநூலு முழுதுணர்சாந்தனுமாவோ

னன்னெறிவழாத வருந்தவக்கிழமை நபிக்குவனென்றுமாமுனிவன்
மனனடிதொழுவோர்வேதியன்விடுப்பச்சாரதைமனையினைவந்திறுத்தான

(இ-பு.) இவ்வாறு சிலமாதஞ்செல்லுமளவில் அசைவில்லாதவருநந்
கள்நீங்கினவரும் பழமையாகியநான்குவேதங்களும்-ஆகமங்களும் சாஸ்
திரங்களுமாகிய இவைகள்முழுவதையுந்தேர்ந்து சாந்தருணமுள்ளவரு
மாகிய நல்லொழுக்கத்தில்மாறுபாடாத தவத்திற்குரியசுத்தருவெனனு
மாகிய முனிவர் தமதுபாதத்தைத்தொழும்படியான ஒருசிஷ்யனையனுப்ப அவ
ர் சாரதைவீட்டிற்குவந்தார்-எ-று. (௯)

வருதலுமவடன் றந்தைதாய்கிளைஞர் மற்றொருவினையும்வேட்டவணின்
றொருசிறைபகலத் தமியளாய்பனிமொழி யுறையவண்குலத்தேவ
னெரிதினவந்தடைந்தா னெனமகிழ்ந்தெதிர்சென்றடிமலரிறைஞ்சிமி
ன்றேத்திக், காதலற்கடப்பியான்செயும்பணியென கடவுளேயருள்கென
[ப்பின்னும்

(இ-பு.) அந்த முனிவர் வந்தபோது அவள் தகப்பனுந்தாயுஞ் சுற்ற
த்தாரும் ஏதோ ஒருகாரியத்தைக்குறித்துத் தங்கள்வீட்டினின்றும் புற
ப்பட்டுவேறிடத்துக்குப்போயிருப்பதினால் தனியாயிருக்கும் அந்தச்சார
தையானவள்கண்டு நம்முடையகுலதெய்வமே முனிவர் வடிவங்கொண்
டெழுந்தருளியதென்று மகிழ்ச்சியடைந்து எதிர்கொண்டு அவர் பாதம
லரைவணங்கித் துதிசெய்து கைகளைக்குவித்துக்கொண்டு நின்று சுவாமி
களே அடியேன்செய்யும்பணியாதோ கட்டளையிடவேண்டுமென்றுசொ
ல்லிப்பின்னும்-எ-று. (௰க)

வெறிகமழ்கமலச்சேவடிவிளக்கியசொலாம்பலர்ந்திடவிசி
நறுமலர்வாசப்புழுகுநெய்தேய்த்து நனிபனிநீர்சொரிந்தாற்றிச்
சிறுமதிக்கண்ணியண்ணல்பூசனையின் செவ்விபெற்றவிசினிலிருத்தி
முறிமிடைப்பட்டலைச்செழுமலர்சூட்டி முருகுலாஞ்சந்தமுமப்பினள்கே

(இ-பு.) வாசனைகமழுஞ் செந்தாமரை மலர்போன்ற பாதங்களை நீ
ரினால் அலம்பி மேனியிலுண்டாயிருக்கும் வியர்வையெல்லாம் நீங்க வி
சிறி நல்லமலரும் வாசனையுள்ளபுழுகும்சேர்ந்த எண்ணெய்தேய்த்துமிகு
தியாகப்பனிநீர்சொரிந்து ஸ்நானஞ்செய்வித்து இளந்திங்களைமாலைபோல்
அணிந்திருக்கும்பரமசிவனை ஆராதிக்குமுறைபோல ஆசனத்திலிருத்தி
ருக்கச்செய்து துளிர்களுமலர்களுஞ்சேர்ந்தமாலைசூட்டி வாசனைமிகுந்த
சந்தனமும்பூசி-எ-று. புழுகு—ஜவாது. (௰உ)

காரகில்கமழுந்தூபத்தட்டேந்திக் காதலிற்பூசனைபுரியா
வார்வமொடினியவறுசுவைபடிசி லருத்தினளருந்தினளருந்தி

வார்சடைமுனிவன்பெருமெயவனை மகிழ்தராமுனங்களிசிறப்புறீ
தார்பணங்கமுப்பிருமுத்தின்பந் தழைத்திடவாசிகள்சொன்னான்

(இ-ள்) கருணைநிறமுள்ள அதிக்கட்டைமுதலிய பொருள்சேர்த்த அபநிபாசனைசெய்து அன்புடன் பிரிவியஅதாசனவயுள்ள அன்னமும்பு சிக்கும்படி பிரசத்தித்தாள் நீண்டசடையையுடைய அந்தமுனிவர், அன் னமும்புசித்து (அவன்செய்யும்பத்தியினால்) பெருகாநின்ற சந்தோஷம் நி றையுந்தோறும் நிறையுந்தோறும் மனதில் களிப்புமேலிடப் பூமாலையின் வாசனைகமழாத அளகத்தையுடைய சாரதையென்பவளுக்கு இன்பமெ ருகத்தக்கதாக ஆசீர்வசனஞ்சொன்னார்-எ-று. (௰௬)

பண்கனிந்தசொற்சேரிவைபோபாசா வறிஞர்செல்வமேபோலக்
கொண்கனுங்நீயுமளப்பருங்காலந் தேராதிலாகன்னலுறுகர்ந்து
இன்கட்டுலகிற்பலகலைதேருந் சிறுவனைப்பயந்துஇசெல்லாம்
வன்புகழ்நிறைந்தோர்தெய்வதங்காப்பவாழ்திஎன்றகமகிழ்ந்துரைத்தான்

(இ-ள்) இசைபோல முதிர்ந்த மதுரமான வசனமுள்ள மடந்தையே வர்கள்செல்வம்போல உன்கணவனும் நீயும் அனேககாலவரையில் குறை வில்லாத இன்பம் அனுபவித்துக்கெளிந்த கடல்சூழ்ந்த இவ்வுலகில் பல சாஸ்திரங்களும் ஆராய்ந்தக்க புத்திரனை யீன்று அஷ்டதிக்குகளிலும் புகழ்நிறைந்து அப்பற்றடவுள் ரக்ஷிக்கத்தக்கதாக வாழக்கடவீர்களென் றுமனமகிழ்ந்துசொன்னார்-எ-று. (௰௭)

மடவரல்கேட்டதிசயித்தநோ மறைவலாய்வினவுமெய்வாய்கள்
கடிமலர்க்கணைக்கெல்வமோடிருக்கும் கைமையேற்கனவைதார
தடுதொழின்றுமலிக்குர்பாராமுத மருந்துதல்போலவுமொழிந்து
படுபசுங்கூழிற்பொழிமழைபோன்றும் பயனிலவாயிறதவே

(இ-ள்) சாரதையென்பவள் அந்தமுனிவர் சொன்னதைக்கேட்டுஆ ச்சரியப்பட்டு ஐயோ முனிவரே உம்முடையஉண்மையுள்ளவாக்குகள் மங்கிலியமிழந்து துன்பத்தையடைந்திருக்கும் கைம்பெண்ணாகிய எனக்கு இன் பங்களைத்தராமல்கொலைத் தொழிலையுடைய நாய்க்குக்கிடைப்பதற்கரிய தேவாமிர்தத்தை உண்பதுபோலவும் உலர்ந்துபட்டுப்போன பயிரில்பொ ழிகின்ற மழைபோலவும் பிரயோசனமில்லாமல் வீணாகிவிட்டனவே-எ-று. (௰௮)

கோட்டமில்குணத்தாய்தமியனேன்கவினி கோதிலாவிளமைவீணிறப்ப
விட்டுநிவேன்பயனுறுக்கனரே ளினியுனதாசியின்பயனை
வேட்டனவெறுதல்கைவராமியேன் விதியினைநடிக்கிலென்றனை
ப்பக், கேட்டமாதவத்தோன்வருந்தலையிதுகேட்டியென் றின்னன்புக [ன்றான்

(இ-ள்) மாறுபடுதலில்லாத நற்குணமுள்ள முனிவரே தமியேனாகிய யான் கைம்பெண் பழுதில்லாத இளமைப்பருவம் வீணாய்க்கழிந்துவிட்டபூ ர்வசென்மத்தில் தேடிக்கொண்ட வினைப்பயனை அனுபவிக்கிறேன இனி யும்முடைய ஆசிர்வாதப் பயனாகிய இன்பங்களை விரும்பிப் பெறுவதற் கெவ்வாறுரியேன்தேவரீருடைய அடிச்சியென்றுசொன்னாள் அதைக்கே ட்டமுனிவர் சாரதையைப்பார்த்து நீவருந்தாதே நான்சொல்லுகிறவார் த்தையைக் கேளென்று இந்தவார்த்தைகள் சொல்லுகிறார்-எ-று, (௰௯)

கற்றவிதிமறைத்தேனளித்தநல்வார்த்தைகைபற்சுமைப்பமெய்மையாக்குவனெ ன்றுமாமனக்கோடியுமாமகேச்சுரமென் றொருதவவிரதமொன்றதனை ட்புரிகவேயுள்ளங்கருதியவெல்லாப் பொருளும்வந்துறுமெனப்புகல ச்சுரிகுழலணங்குகேட்டதுபுரியுந்தொன் முறைபகரெனச்சொன்னாள்

(இ-ள்) சேற்கண்டமையொத்தகண்களையுடையவளே வேதநிரந் தெரியாதயான்சொன்ன இந்தவார்த்தைஉண்மையாகும்படி செய்கிறேன வன்வார்த்தையைஉன்மனதில் உறுதியாகக்கொள் என்னென்றால் உமாமகே ச்சுரமென்பதாக ஒருதவவிரதமுண்டு நீ அந்தவிரதத்தை அனுஷ்டித்தா ல் மனதில்நினைத்த பொருளெல்லாம்வந்து சித்திக்குமென்று சொல்லஅ தைக்கேட்ட்சாரதை அந்தவிரதம் அனுஷ்டிக்கும்பழமையான்முறைமை யைச்சொல்லுமென்று சொன்னாள்-எ-று, (௨௰)

வளமலிவேனிற்சித்திரைபனிகூர் மார்கழியிவற்றிலோர்மதியி
னிளமதிக்கலையால்வளர்முதற்பக்கத் திசைபத்தறினத்திலிவ்விரத
முளமலியன்பாற்றொடங்கிவட்டசோ முழுதிநீராடுயுமாவெண
றளவுசேர்நிதியோர்நான்கினுந்தண்ணீ ராடியோர்மண்டபமமைத்தே

(இ-ள்) வளப்பங்கள்நிறைந்த வசந்தகாலமாகிய சித்திரைமாதம் ப னிமிகுந்தமார்கழிமாதம் என்றுசொல்லப்பட்ட இரண்டில் ஓர்மாதத்தில் இள ந்திங்கட்கலையினால்வளருகின்ற பூர்வபக்ஷத்தில் பொருந்திய நல்லநாளில் இவ்விரதத்தை அன்புடன் ஆரம்பித்து அஷ்டமிசதுர்த்தசி பர்வம் என்று சொல்லப்படுகிற நான்கு திதியிலும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஒருமண் டபம் அமைத்து-எ-று, (௨௰௧)

துஞ்சரிகமுத்தங்கோதைதைதூக்கி வயங்குபட்டாடைகம்பலமாய்
விஞ்சுபேரொளியமைமணிகோவை விதானஞ்செய்கனகமண்டபத்திற்
செஞ்சுடர்ப்பசும்பொ னெட்டிதழ்க்கமலந் திருவுருவமைத்தாதனையு
மஞ்சிறைக்கவிவண் டியிர்பொழிமயத் தணங்கையுந்தாபிதஞ்செய்தே

(இ-பு.) பூங்கொத்துகளாகிய வாசனையுஞ்குளிர்ச்சியுமுள்ள மா லைகள்தொங்கக்கட்டி விளங்குகின்றபட்டாடை கம்பலமாய் மிகுந்த ஒ

ளியுள்ள முகங்களைக் கையாற் றிண்மையோடு முடைய மேல்விதானங்கட்டிய பொ
ன்மயமான மண்டபத்தில் ஒளியுள்ளதாய் மாற்றுயர்ந்த பசும்பொன்னி
னால் இருவுருவாக அமைந்த பாதிவத்திலையும் அழகியதுள்ளதாய்க்கனி
ப்பிரியுடைய வண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும்படியான கோ
வெருக்கத்தினையமாலை மிடைத்தில் திருவவதாரஞ்செய்த பார்வதிதேவி
யாரையும் தாபிதஞ்செய்து-எ-று. (௰௯)

சமயனைப்புமும்பஞ்சகவ்வியத்தாற் றகவொடுபுனிதமாக்கிபின்
பூமலர்த்தேனுங்கன்னலும்பிரதம் பொழிபுருக்கனிவொடுங்கலந்து
விதிமுறைசாத்தியஞ்செழுத்தாதி விளங்குமந்திரத்திநேசன்
கதிதருமேகாதசவுருத்திரத்தாற் கடிகமழ்புனலாட்டி.

(இ-பு) நானுவேதங்களாலும் புகழத்தக்க பஞ்சகவ்வியத்தால் சு
த்தியுடையதாக்கிச்செய்தபின பூமலர்த்தேனும் கருப்பஞ்சாறும்
பஞ்சாமிர்தமுங்கலந்து விதிப்படிசாத்திப் பஞ்சாக்ஷரஞ்சொல்லி அம்மந்தி
ரத்துடனே சிவபெருமான பதவியைத்தரத்தக்க ஏகாதசருத்திர மந்திர
த்தினால் வாசனைகமழும் திருமஞ்சனநீர் அபிஷேகஞ்செய்து-எ-று. (௨௰)

விரிகதிரப்பசும்பொற்பீடமேல்வைத்து வேறொருதவிசினைப்பொருந்தி
மருமறைபாதிமந்திர மோதியகுலிசாசியிலையா
லொருவழியுள்ளநிறுவியஞ்சலி செய்துறுபவத்திறினொழிய
விருமைகற்பயனுஞ்செல்வமும்வீடு மெமக்கருள்புரிகவென்றுணர்வால்

(இ-பு) பரந்த ஒளியுள்ள பொன்னிறத்தாற்செய்யப்பட்ட ஆசனத்தில்
எழுந்தருளப்பண்ணி தான் வேறொரு ஆசனத்தி லிருந்துகொண்டு அ
றியவேதத்துக்கு முதலாகிய பிரணவமந்திரஞ்சொல்லி விரல் காரிய
ணிடத்துவைத்து மனதை ஒருவழியில் நிறுத்தி வந்தனைசெய்து பிறந்
திறவித்துயரந்தீரும்படி இம்மை மறுமை யென்னும் இகபரசவுக்கியமு
மோக்ஷமும் எமக்குக்கிருபைசெய்யவேண்டுமென்றுஞானத்தினால்-எ-று.

குளிர்கலைசெழுமியளைவில்வெண்டிங்கள் குழுமியீற்றிருந்தனவெண்ண
றுளிர்திருமேனி மின்னல்வெயிப வுவர்படுதடங்கடற்றோன்றி
வளரிளம்பரிதி கோடியோர்வடிவாய் வானொளிபரப்புவதேய்ப்ப
வளிமுரல்க்கொக்கை புனைசடாமகுடத் தஞ்சுடர்முறுவெயில்கொழிப்ப

(இ-பு) குளிர்ச்சிதங்கிய கலைகளைப்பொருந்திய அளவில்லாதசந்தி
ரர்கள் கூட்டமாய்வீற்றிருப்பதுக்கொப்பாக வெண்மைநிறமுள்ள விபூ
தியானது பிரகாசியாநின்ற திருமேனியிடத்து இளநிலாவொளியை
வீசவும் உப்புள்ளபெரிய சமுத்திரத்தில் உதயமாகிவருகின்ற கோடிசூ
ரியர்கள் ஒருவடிவமாகி யிருந்த பிரகாசத்தைப் பரப்புவதுபோ

ப்பாக வண்டுகளிசைபாடிக்கொண் டிருக்கும்படியான கொன்றைமாலை
யணிந்த சடாமகுடத்து அழகிய பிரகாசமானது முதிர்ந்தவெயிலைப்பர
ப்பவும்-எ-று. (௨௨)

செங்கதிர்விரிக்குமுடிமிசைபொருபாற் சிறுமதிக்கலைநிலாத்தவழக்
கங்கைப்பெயரா றெறிதிரையொருபாற் கடுக்கைபசுந்செழுந்துணர்கொ
ழிப்பக் குங்குமக்குவடு பொருவுதண்புயத்துக்கடையிற்றாவணிமணிச
வங்கைகளப்ப வாதபோராடிளமானனிதிகழ்மழுப்படைதழுவ

(இ-பு) செம்மைநிறமுள்ள ஒளியை விரிக்கா நின்ற திருமுடியின்
ஒருபுறத்தில் இளம்பிறையின பிரகாசமானது விரியவும் ஒருபுறத்தில்
கங்கையென்னும் பெயருள்ள நதி வீசுகின்ற அலைகள் செழுமையான
கொன்றைப்பூங்கொத்துகளைக் கொழிக்கவும் குங்குமமலையையொத்த தி
ண்ணியபுயங்களில் கூர்மையான பற்களையுடைய சர்ப்பாபரணங்கள்பி
ரகாசிக்கவும் அழகிய திருக்கரங்கள் நானகில் ஒன்று அபயஸ்தமும்ஒ
ன்று வரதாஸ்தமும் மற்றையிரண்டில் மானும் அழகுடன் பிரகாசிக்கி
ற மழுப்படையும் விளங்கவும்-எ-று. (௨௩)

அடுகொலைமதனனெரிபடச்சிவந்த வனல்விழிதிருநுதன்முகிழ்ப்பத்
தொடுகடற்றிரைவாய்ப்படுவிடமிடற்றிற் சுடரொளித்திருணிறங்கொழி
கொடுவரியதளினுடைபிணிசிறந்த கோளராமருங்கனிற்றழ [ப்பக்
வுடல்சினவுருமிற்பிளிறுமாலியானை யுரிவைபோர்மேனியைப்போர்ப்ப

(இ-பு) காமுகரை வருத்துகின்ற மன்மதன் எரிந்துபோம்படி சிவ
ந்த அக்கினிநேத்திரமானது திருநெற்றியில் முகிழ்த்த வண்ணமாக இரு
க்கவும் வளைந்த அலைகடலில் உண்டான விஷமானது திருக்கண்டத்தில்
நிலைவிட்டுக்கொண்டு கருநிறம்பொழியவும் புலித்தோலாடை பிணிப்பு
ற்றுச்சாகக்கட்டிய வலியுள்ளசர்ப்பமானது திருஅரையில் பொருந்தவு
ம் நீலமேகமுருவங்கொண்டதுபோன்று இடிபோல ஆரவாரிக்கும்பெரி
யயானைத்தோற் போர்வையானது பொன்னிறமுள்ள திருமேனியில்போ
ர்க்கப்பட்டிருக்கவும்-எ-று. (௨௪)

தினகரனொளியில் விஞ்சொளிபரப்புஞ் செஞ்சுடர்ப்பருமணியிமைக்குங்
கனகமாமடங்கற்றவிசின்வீற்றிருக்குங் கருணையங்கடலை மெய்யடியார்
மனதொறுமின்பக்கருஞ்செழுந்தேறல் நிறைமலர்க்கற்பகக்கனியை
யனகனையாதித்தனிப்பெருஞ்சுடரை யமலனைவினைந்துபினன்பால்

(இ-பு) சூரியனுடைய ஒளியினும் அதிகமான ஒளியைப் பரப்புகி
ன்ற செஞ்சுடரையுடைய பெரியரத்தினங்கள் பிரகாசியாநின்ற பொன்
மயமான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அழகிய இருபாசமுத்திரத்தை

உண்மையான அடியார்களுக்கிக்குநேரும் இன்பம் அருளும் செழுமி லை மலர்நிறைந்த கற்பகவிருக்ஷத்தையும் விளங்கு ஒப்பற்ற ஆதிய ய பெரியசோதியை இருமலின மனதில் தியானித்துப் பின்பு அர்ச்சி க்க-எ-று. (உ௰)

காலை கடற்றினைப் பிருள் றத்துரத்து வருபரிதியொப்பரிதிக் கிலேயொருவடிவுகொண்டென்சோதி நிலைத்திருமேனியின்றெழில விளையனைப்பவரை நமோடம்ப செத்துபாசமோகசமேற்றித் தளையவிழ்முளரிச்செய்கைகாண்டிலகத் தாழ்குழல்புயல்விறழிப்ப

(இ-பு.) இருள்நீங்கும்படி ஸமுத்திரப்பூமியைச்சூழ்ந்த அலைகளை யுடைய சமுத்திரத்தினிடத்தில் உதயமாய்வருகின்ற பரிதியைப் சூரிய மண்டலம் ஒருவடிவங்கொண்டதுபோலச் சோதியினையுடைய திருமேனி பிரகாசிக்கவும் பாவையாய் அப்பவர்களுடன் அருமர்கள் துதிசெய்கின் ற பாசாங்குசமேந்திய முழங்கைகள் விரிந்த தாமரைமலர்போன்ற நான்கு திருக்கரங்களும் பிரகாசிக்கவும் தாழ்ந்த அளகபாரம் மேகத்தைப் பெருமை யை அழிக்கவும்-எ-று, (உ௧)

தண்டவெண்மதிநுமதியும்போலச் சோதிவாணுதலொடுவதன மண்டலங்கவினமல்லிகைமாலை வார்குழற்குழியத்தழைப்பத் தண்டளிர்ப்பிண்டிபுன்னைசண்பகப்பூத்தாமங்களிருசெவிப்புறந்தாழக் குண்டலம்பிப்பதங்களுழைத்தோளிற் குருமணியிளவெயில்கொழிப்ப.

(இ-பு.) குண்டமாகிய வெண்மதியைப்போல் திருநெற்றியும் பூரண சந்திரன்போலத் திருமுகமண்டலமும் அழகைச்செய்யவும் மல்லிகைப் பூமாலையணிந்த அளகத்தில் குழியக்கொண்டு விளங்கவும் குளிர்ச் பொருந்திய தளிர்களையுடைய அசோகு புன்னை சண்பகம் இவைகளின் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் இரண்டுகாதுகளின் புறத்தில் வி ளங்கவும் ரத்தினகுண்டலங்கள் பொருந்தி அசையும்பச்சைமூங்கிலை யொத்ததோளில் சிறந்தங்கிய மாணிக்கம் இளவெயிலைப்பரப்பவும்-எ-று.

அஞ்சுடரொளிமாணைச்சியபொன் மலர்மாலையாகத்துமிளிரச் செஞ்சுடர்விரிக்கும்பொலந்தொடிபசிய செழுங்கழை தோளினிலிலவ லஞ்சிறுவண்மருங்குல்கனியகோவை வாமமேகலையொளிதழைப்பப் பஞ்சினைவெல்லடியிற்பருமணியையச்சும் பரிபுரஞ்சேயொளிபரப்ப

(இ-பு.) அழகிய பிரகாசத்தை நவரத்தினங்கள்பதித்த பொன்ம லைகள் அடிபாரந்தனமுள்ளமார்பில் விளங்கவும் ஒளியைவிரிக்குமபொ ன்னலாகியசெழுமையுள்ள ரத்தினங்கள் பதித்ததோளணிபச்சைமூங் கிலையொத்த தோள்களில்விளங்கவும் பூங்கொடிபோன்ற அண்மைய

டையில் அழகியமணிவடமாகிய மேகலாபரணத்தி பூயவும்செ ம்பஞ்சினுமெல்லியவாகிய திருவடிகளில் பெரியரத்தினங்கள்பதித்தநூ புரங்கள் செவ்விய ஒளியைப்பரப்பவும்-எ-று. (உஅ)

மரியமணிக்குழைசூழ்ந்துகுபட்டாடை யெழில்பெறப்புனைந்துசெஞ்சாந்தும் விரைமதர்ச்செய்யதொடையுமணிந்து மின்னெனப்பொலிந்த பூங்கொ டியனைய பரிமளர்மழைக்கட்கருணைநோக்கடியார்க் கருள்செயுமணங்கையா மலையை வளையணிந்தபச்சைமாமணியனை முலையமலையைநினைந்தே

(இ-பு.) இரத்தினமாணிக்கங்கள் சேர்ந்த அரைப்பட்டிகையை மேலேசேர்த்த பட்டாடையை அழகுபொருந்தத்தரித்துச் செஞ்சாந்தை யும் வாசனை தங்கிய பூமாலையு மணிந்து மின்னலைப்போல விளங்கும் பூங் கொம்பை செவ்வரிபரந்த களிப்புற்ற மேகம்போற் கருமையுள்ள திரு நேத்திரங்களினால் திருவருள்நோக்கம் அடியார்க்கருளும் தேவமாதையா மலையை மலையரையன்பெற்ற மரகதமணியை அழகிய தனங்களையுடை ய அம்மையைநினைந்து-எ-று. (உ௯)

உளக்கமலத்தினின்னணைந்தியானித் தவ்வகைகூர்ந்தகமகிழ்சிறந்து களித்தயின்பசும்பொன்விம்பமேலன்பு கனியவாவாகனம்புரியா வளித்திடுமுறையாலருச்சியமுதல வளித்துநன்மணங்கொள்சாந்தணிந் தளித்திளக்கேறல்வழிதொடைசூட்டித் தணைகிருஷாருச்சனைபுரிந்தே

(இ-பு.) இருதயதாமரையில் இவ்வாறு தியானித்துச் சந்தோஷமிகு ந்து மனமகிழ்ச்சிகொண்டு களிப்புற்றபின் பசும்பொன்னாலாகிய விம்பத் தினிடத்தில் அன்புமுதிர ஆவாகனஞ்செய்து கொடுக்கவேண்டுமுறைமை ப்படி அருக்கியமுதலானவைகள்கொடுத்து நல்லவாசனையுள்ள சந்தனம் அ ணிந்து தேன்துளித்துப் பெருகின்ற பூமாலைசாத்தி மலர்களால் அருச்ச னைபுரிசெய்து-எ-று, (௩௰)

முகையிளமுல்லையனையபாலடிசின் முதலவாமுணவினிகனியா மகமகிழ்வெய்தக்கனலிவாய்நாற்றிறட் டாற்றினறுநெய்யாற்புரிந்து புகைகமழ்தூபதீபத்தட்டேற்றிப் பொருவிலாஞ்சனமுதத்தி நகைமதிக்கண்ணிபுன்னைசேர்முடிமைய நணிஜூத்தியபனஞ்செய்தே

(இ-பு.) முல்லையரும்பையொத்த பாலன்ன முதலாகியவுணவை இ னிதாக நிவேதனஞ்செய்து மனமகிழ்ச்சியையுடைய ஓமாக்கினியி னிடத்தி ல் நல்லநெய்யினால் நாற்றெட்டாஹுதிசெய்து வாசனைப்புகைபரிமளிக்கும் தூபத்தட்டும் தீபத்தட்டுமேற்றி ஒப்பில்லாத நீராஞ்சனஞ்செய்து பிர காசிக்குஞ் சந்திரனைமாலைபோல அணிந்திருக்கும் பரமசிவனையும் பா ர்வதிதேவியாரையும் அன்புடன் உத்தியாபனஞ்செய்து-எ-று, (௩௧)

மனறவெனொருவன்மனைவியோடிக்கு வருகவெனவழுத்தவர்தாம்
பிறைபணிவேணியன்மேலோடிணையப் பொன்னறமுதாகவுட்கருதி
நறைமலர்நாணியபூசையடிகினலம்பெய்கதிரபடுகாலை
குறைபடுபூஞ்சரும்பித்தகல்வேள்விக் கோதிலாச்சேடமாக்குமின்றே

(இ-பு) ஒருபிராமணனை அவன் மனைவியுடன் வரவழைத்து கலைப்பிறையணிந்த சடையையுடைய பரமசிவனும் பார்வதியுமாக பாவனைசெய்து வாசனையுள்ள மலர்களால் அருச்சித்தும், அறுசுவை அன்னம் அளித்தும் சூரியாஸ்தமன மாகும்போது குறைவில்லாத பூசையைநிறைவேற்றிக் குற்றமில்லாத யாகசேஷத்தைப்புசித்து-எ-று. (௧௨)

வருமதிதோறும்பக்கமோரிரண்டில் வான்றருகற்பதினாறி
லருமறையேத்துமாகமவிதியா லன்பொடுபூசனையிப்பரிப்
பருவமொன்றிற்றபின்னர்நாண்மதியும் பயக்குமாக்கொன்றையும்
அவ்வொருதனிமுதலோடிமயமின்றெடுத்த வுமையையுட்களித்...

(இ-பு.) மாதந்தோறும்வருகிற இரண்டுபக்ஷத்திலும் நல்ல திதிகள் நான்கிலும் அரியவேதாகமவிதிப்படி அன்புடன் பூசைசெய்து ஒருவருஷஞ் சென்றபின்பு இளம்பிறையுங் கொன்றைமாலையுமணிந்துப்பற்ற முதலாகிய பரமசிவனையும் மலையரையன் தவத்திற்பெற்ற பார்வதிதேவியாரையும் இருதயத்தில் தியானித்து-எ-று. (௧௩)

நானெறிமாடியுருத்திரசமக நவனறெடுத்தோதிவண்டியிர்பூந்
தேனெநெய்பாறெங்கினமுப்புடைக்காய்த் தெண்புனறதுபொடிவாச
நானநீராட்டிநறியசாந்தணிந்து நாண்மலர்ச்செழுந்தொடைசாத்திப்
போனகம்பாலித்தேத்தெடுத்திறைஞ்சிப் பூசனைவான்முறைமுடித்தே

(இ-பு.) வேதாகம விதிப்படி ருத்திரமாணியாச மந்திரஞ் சொல்லி வண்டுகளிசை பாடிக்கொண்டிருக்கும் நல்லதேனை மதுரமுள்ள பால் இளநீர் தயிர் வாசனையுள்ள கஸ்தூரிகலந்தநீர் இவைகளால் அபிஷேகஞ்செய்து நல்லசந்தனம் அணிந்து பூமாலைசாத்தி அன்னம நிவேதித்து அதன்பின் துதிசெய்து சாஷ்டாங்கமாகப் பணிந்து இவ்வாறு பூசையைமுடித்து-எ-று. (௧௪)

ஆசொடுமைம்பொன் விம்பமுமிலகுஞ் சீர்மணிக்குடம்பமுமகிழ்ந்து
தேசிகற்கருளி யந்தணர்க்கெல்லாந் திருத்தமானசம்வழங்கிக்
காசொடுகனகம் வேண்டுவல்கிக காதலாற்றமருடனயினறு
மாசறுவிரத முடிப்பதாகத்தின் வரன்முறைமதிநுதலணங்கே

(இ-பு.) ஆடையாபரணங்களும் பிம்பமும் சோதியையுடைய ரத்தினகும்பமும் மகிழ்ச்சியுடன் ஆசாரியருக்குக்கொடுத்துப் பிராமண ச

ந்தர்ப்பனையுஞ்செய்து ரத்தினங்கள் சுவர்ணங்கள் இன்னும்வேண்டிய பொருள்களுங்கொடுத்து ஆசையுடன் பந்துகளை வைத்துக்கொண்டு போசனஞ்செய்து இவ்வாறு குற்றமற்ற விரதமுடிப்பது ஆகமவிதியாம் பிறைபோன்ற நெற்றியையுடையமாதே-எ-று. (௧௫)

இப்படிப் பெண்ணே யிவ்விரதத்தை யிந்தவாறியற்றினர்தவர்தம்
மூவெழுமுறைமைத் தமரொலாந்தெய்வ மருகுலாங்கற்பகாட்டின்
மேவரச்சேர்த்து யெல்லையில்காலம் விழைதகும்போகங்களுகர்ந்து
நூலவத்தினினிவாழ்ந்ததன்பின் பொருவறுசிவபதமடைவார்

(இ-பு) எவர்களேயானாலும் இந்த உமாமகேசுரவிரதத்தை மேற்சொல்லியமுறைமைப்படி செய்கின்றவர்கள் தங்களுடைய இருபத்தோருதலைமுறையாகிய சுற்றத்தாரையெல்லாம் வாசனைவீசுகின்ற கற்பகச்சோலையுள்ள தேவலோகத்தில் போகும்படிசேர்த்து அளவில்லாத இன்பம் அநுபவித்துக்கொண்டிருந்து அதற்குமேல் ஒப்பற்ற சிவபதம்பெறுவார்கள்-எ-று, ஏழுதலைமுறைவரையில் ஞாதிகள் அதற்குமேற்பட்ட ஏழுதலைமுறைவரையில் தாயிண்டார்கள் அதற்குமேற்பட்ட ஏழுதலைமுறைவரையில் சமானோதகர்கள்-இவ்வாறு மூவேழு இருபத்தோருதலைமுறையெனச் சொல்லப்படுகின்றது, (௧௬)

ஆதலாலணங்கே நீயுமிவ்விரத மகந்தெளிந்தியற்றுதியென்றுங்
காதலால்விழைந்த பொருளெலாநினக்குக் கடிதினிலடையுமென்றமல
னோதுவாசகங்கேட் டன்னதுதேறி யுளமகிழ்காலையிலவட
னுதையுந்தாயுந் தமரும்வந்திண்டித் தவமுனிதாளினைதொழுதார்

(இ-பு.) ஆகையினாலே பெண்ணே நீயும் இந்தவிரதத்தை மனதில் சந்தேகமில்லாமல் நாள்தோறும் அனுஷ்டித்தால் ஆசையுடன்விரும்பிய பொருள்களெல்லாம உனக்கு விரைவில்கைகூடுமென்று அம்முனிவர் சொல்லிய சொல்லைக் கேட்டு அத்தன்மையுள்ள விரதத்தைஅநுஷ்டிக்க வேண்டுமென்று தன்மனதில் நிச்சயித்துக் கொண்டாள் அப்போது அவள் தகப்பனும் தாயும் சுற்றத்தாரும் வந்து அவர்பாதத்தில்வணங்கினார்கள்-எ-று, (௧௭)

தொழுதனர்நின்றந் நனைபணியவிழ்ந்த துணர்சூழும்போதுகவேலி
வழிபடுமுறையுமருச்சனைபுரிந்து மாதவனடைந்தஞானநெறிகொண்
டெழில்பெறுமணங்கு புரிபணிவிட்டு யிருந்தவனீந்தமெய்வாழ
முழுதுமாகக்குழைப்பக்கேட்டகமகிழ்ந்து முனிவனைநோக்கியிதுரைத்தாள்

(இ-பு) அவ்வாறு வணங்கிநின்று அரும்புகளினமுறுக்குகள்விரிந்த கொத்தாகிய மலரால் ஆராதனைசெய்யுமுறைமைப்படி அருச்சித்துச்

சென்றரியமுன்பு தங்கள் பெண்ணுக்கவன் அம்முனிவர்களாகிய திரு
க்கொண்டுசெய்யவேண்டியதைமும் அவர்கொடுத்தருளிய உண்மையான
சாரமும் வழுவாமல் சொல்லக்கேட்டு மனமகிழ்ந்து முனிவரைப்பார்த்து (௯)
இவ்வார்த்தைசொல்லுகின்றார்கள்-எ-று

மத்தவஞ்செய்பிதத் தந்தலைபடிச ளைப்பதற்கேற்பவனே
யத்தனேயிந்தவடிவினிலைப்பதே மனக்களுள்ளசமயமேயாமிரப்
பத்திமேயுடிசணைந் திங்களுமிதப் பதியிலடையிருந்தமிபணிந்த
மெய்த்தவவிரத பிறந்தவித்தேகல் வேண்டுமென்றடிதொழுதிருந்தார்

(இ-பு.) எங்கள்குறைபவனே அய்யனே சுவாமிகள் இவ்விடத்திற்கு
எழுந்தருளுவர்படி என அதவஞ்செயதோபோ தேவரீரால்அடியேங்களுக்கு
ல்லாம்நேட்டுமேனும் எங்கள்பெண்ணுக்குகேரிட்ட வைகமுதல்மையாகிய
பிணிதீர்க்கும்படி பன்னிரண்டுமாதமும் இப்படியிருந்தவே
நீர்கட்டளையிட்ட உண்மையானதவவிரதத்தை அனுஷ்டிப்பித்தே அவள்
பின்பு போகவேண்டுமென்று அவர்பாதத்தில்வணங்கி மிரந்து வேட்டுக் (௯௰)
கொண்டார்கள்-எ-று,

அன்னதேபுரிவன் றுபசொற்றிப்பென மைகெறுக்காலைசென்றடைந்து
பொன்வளிரகடுக்கை வேணிவானவன்றன பூசனைபுரிந்தனவிருப்பத்
தன்னிகரில்லாச் சாரதைதானுந் தவமுனியாகமவிதியாற்
சொன்னவாறிந்த விறுமவிரதந் தொடங்கியாற்றினளன்றே

(இ-பு) அப்படியேசெய்கிறேன் நீங்கள்துயரம்நீங்கி யிருங்களென்
றுசொல்லி அவரொரு பன்னசாலையிலேபோய்ப் பொன்போலபிரகாசி
க்கும் கொன்றைமாலையணிந்த சடையையுடைய பரமசிவனைப் பூசித்துக்
கொண்டிருந்தார் தனக்குவொப்பில்லாத சாரதையானவள் தவமுனிவர் ஆக
மவிதியால்சொன்னபடி மகத்துவமுள்ள அந்தவிரதத்தைத் தொடங்கி
அனுஷ்டித்தாள்-எ-று, (௯௰)

என்றுமாமுனிவர்க் கின்னணஞ்சூதன் வியம்பிடுங்காதையைக்கேட்டு
நன்றுநன்றென்ன வுவகைகூர்மனத்தர் நாளுமச்சாரதையடைவா
லொளவியமேவிமுக்குப் பெற்றவாறெல்லா முறைத்தருளெனவவருரைப்ப
பக்குவனியதவத்துமடவால்பெற்றதுசிற்றெனத்தொகுத்தனன்சொல்லுவன்

(இ-பு.) இவ்வாறு சூதமுனிவர்சொல்லிய உமாமகேசுவரவிரதசரித்
திரத்தைக்கேட்கப்பட்ட நைமிசாரணியமுனிவர் இது மிகவும் நல்லமு
புளறென்று சந்தோஷங்கொண்ட மனமுள்ளவர்களாய்ச் சூதமுனிவ
ரைப்பார்த்து அந்தச்சாரதையானவள் மனமொருமித்து இவ்விரதத்தை
அனுஷ்டித்துப்பெற்ற முறைமையெல்லாம் எங்களுக்குச் சொல்லியருள

வேண்டுமென்று அவர்கள்சொல்ல அந்தவிரதத்தை அனுஷ்டித்தவள்பெ
ற்றுக்கொண்டவரம் இன்னதென்று தொகுத்துச்சொல்லுகின்றார்-எ-று, (௯௰௧)

பதினெட்டாவது

உமாமகேசுவர பூசையுரைத்த அத்தியாயம்

முற்றிற்று,

ஆக திருவிருத்தம் - ௬௱௯௰,

௨

சிவமயம்.

பத்தொன்பதாவது,

உமாமகேசுவரபூசாபலமுரைத்த அத்தியாயம்.

இந்துவாண்முகத்தாள் பன்னிருமதியு மிபற்றியவிரதத்தைமுடியா
வந்தணர்க்கயினி யருத்தியஞ்சுடர்ப்பொன் வருளியன்றருந்திலளவிந்
தந்தைதாய்பாதத் துணைமலரிறைஞ்சிச் சனர்மறைமுனிவரன்புகன்ற
மந்திரமுணர்ந்தாங் கிருந்தனளந்தி மாலைவந்திறுத்ததுமன்றே,

(இ-பு,) சந்திரனைபொருந்த முகத்தையுடைய சாரதையானவள் பன்
னிரண்டுமாதமும் அனுஷ்டித்தவிரதத்தை நிறைவேற்றிப் பிராமணர்க
ளுக்குச் சந்தர்ப்பனையும் அழகியவொளியுள்ள சுவர்ணதானமுஞ்செய்து
தான் அன்றுபோசனஞ்செய்யாமல் தாய்தந்தையருடைய இரண்டு திரு
வடிமலரையுந்தொழுது நான்குவேதங்களுமுணர்ந்த முனிவர் உபதேசி
த்த மந்திரத்தைச் செபித்துக்கொண்டிருந்தாள் (அப்படியிருக்கும்போ
து) அந்திப்பொழுதுவந்தது-எ-று, (௧)

கள்ளவிழ்கடுக்கை வேணிவானவனைக் காதலாற்பூசனைபுரிந்து
நள்ளிருடகந்துவிழித்தனளிருந்து நாவினாலவன்புகழ்பயிற்றத்
தெள்ளிதிற்பரமசிவாகமமுழுதுந் தெளிந்தநான்மறைமுனிவரனும் தே
வெள்ளிடைநெடுவேற் கருங்கண்மாதுமைதனவிளங்கிசைபாடினனுணர்ந்

(இ-பு,) தேனுடன்மலர்ந்த கொன்றைமாலையணிந்த சடாமகுடமு
டைய பரமசிவனை அன்புடன் பூசைசெய்து இருள்மிகுந்த அவ்ராத்தி
ரிமுழுவதும் நித்திரைசெய்யாமல் நாவினால் பரமசிவனுடையதோத்திர
ங்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள் சிவாகமமுழுவதையும் தெளிவுட

ஞானத்துணர்ந்த அம்முனிவரும் ஒளியுள்ளதாகிய நீண்டவேல்போன்ற திருநேத்திரங்களையுடைய பார்வதியின்விளங்குகின்ற புகழைத் துதிசெய்துகொண்டிருந்தார்-எ-று, (௨)

வேறு,

இன்னகத்தவ வாய்க்கிளிமொழிபெற்றிவிரதத்தாலுந்
தனனிகரில்லாத்தாபோன் றகைமைசாறவத்தினாலும்
பொன்னவிர்சுணங்குவாய்ந்த புணர்முலைபொருகலாற்றி
மின்னிடையிமயப்பூத்த விளங்கிழைவெளிப்பட்டாளே

(இ-பு) இனியதாகிய நகையினையுடையவளாய்க் கிளிமொழிபோல வசனிக்கின்ற சாரதையானவள் அனுஷ்டித்த விரதத்தினாலும் ஒப்பில்லாதமுனிவருடைய மேன்மைதங்கிய தவத்தினாலும் பார்வதிதேவியார் தரிசனமானார்-எ-று. பொனனவிர்-பொனபோல்விளங்குந்தேமல்பொருந்திய தம்மிலொத்த தனபாரத்தினைத்தாங்கமாட்டாத (மெல்லிய) மின்னலையொத்த இடையையுடையவராய் இமயமலையில் திருவவதாரஞ்செய்தருளிய விளங்கும் அணிகளணிந்த பார்வதியார்-எ-று (௩)

வெளிவரமறைந்தசெங்கண் விளங்கியமுனியருள்ளக்
களியுடையணங்குமன்னை கமலத்தாளிறைஞ்சிவீழ
வொளிவிரிபசும்பொற்கொங்கை யுமையிருவரையுமங்
களியினெடுத்துநோக்கி யமுதனமுகமன்சொன்னாள்

(இ-பு.) அப்படி தரிசனமளித்தவளைக் முன்தெரியாத பார்வைதெரிந்தமுனிவரும் மனக்களிப்பினையுடையசாரதையும் நம்முடையதாயாகிய பார்வதிதேவியாருடைய திருவடித்தாமரைமலரில் விழுந்துபணிந்தார்கள் அவ்வாறு பணிந்தபோது ஒளிமிகுந்த பசும்பொனனிறம் பொருந்திய தனங்களையுடைய உமாதேவியார் கிருபையுடன் அவ்விருவரையும் பார்த்து எடுத்து அமிர்தம் ஊட்டுவதுபோல உபசாரவார்த்தைசொல்லின-று. (௪)

கற்றுணர்முனிவேநின்னிற் கற்புடையணங்கேநும்பாற்
பெற்றனமகிழ்ச்சியாறும் பெருவரும்வரங்களென்ன
சொற்றனதருவீர் சொல்லுதுமென்றுகூற
கற்றவக்கிழவனகேளா தங்கிதப்புகல்வதானான்

(இ-பு,) வேதமுதலான சாஸ்திரங்கள் ஓதியுணர்ந்தமுனிவனே அழிவில்லாதபதி விரதபாவத்தையுடையமாதே உங்களிடத்தில் நாம் மகிழ்ச்சியடைந்தோம் விருப்பமான வரங்கள் வேண்டுமென்றாலுந் தருவோம்

நீங்கள் சொல்லுங்களென்று பார்வதிதேவியார் மொழிந்தருள முனிவர் அந்தத்திருவாக்கினைக்கேட்டு விருப்பத்துடன் இந்தவார்த்தைசொல்லுகிறார்-எ-று, (௫)

கண்மணியிழந்தேன்மங்கை கணவனாயிருந்ததானே
னுண்மலியுவகையாலே யுறுதுணையிழந்தாளன்ன
வெண்மதிநுதலாய்காமம் வெறுக்குநாள்களவின்சேர்
வண்மலரகந்தோய்ந்து வாழ்கவென்றுரைசொன்னேன்

(இ-பு) அடியேன் பார்வையிழந்த அந்தகனாயிருந்ததினால் இந்தமாது கைம்பெண்ணாயிருப்பது தெரியாமல் அடியேனுக்குச்செய்த உபசாரத்தினால் மகிழ்ந்து கணவனை யிழந்திருக்கும் இவளைநோக்கி வெண்மைநிறந்தங்கிய இளம்பிறைபோ லிருக்குநெற்றியையுடையவளே நீகாமத்தைவெறுக்கும் நாளளவும் உன்கணவனுடைய அழகுபொருந்திய மாலையணிந்தமார்பில் தோய்ந்து வாழ்ந்துகொண் டிருக்கக்கடவையென்று ஆசீர்வாதஞ்சொன்னேன்-எ-று, (௬)

பூசுரர்குலத்திற்றோன்றும் பொலனகொடிக்கடியன்சொன்ன
வாசியின்பயன்குன்று மருள்கவென்றிறைஞ்சியேத்தி
வாசநாண்மலரோனன்ன மறைமுனிபகரலோடும்
பாசிழைப்பணைமென்கொங்கைப் பனிவரைமாதுசொன்னாள்

(இ-பு.) பிராமணகுலத்திற்பிறந்த பொற்கொடிபோன்ற இந்தமாதுக்கு அடியேன்சொல்லிய ஆசீர்வாதத்தின்பலன் கெடாதவண்ணம் அருள்செய்யவேண்டுமென்று பணிந்துதுதித்து வாசனைபொருந்தியதாமரைப்பூவிலிருக்கும் பிரமனையொத்தமுனிவர் விண்ணப்பம் பண்ணினவளவில் பொன்னாலாகிய ஆபரணமணிந்தபருத்ததனங்களையுடைய இமயமலையிற்றோன்றிய பார்வதிதேவியார்சொல்லுகின்றார்-எ-று, (௭)

இந்தைசால்புடையநோன்மைச் செய்தவக்கிழமையோனே
முந்தைநற்பிறப்பிலிந்த வாய்குழமிழ்நன்னாட்டோ
ரந்தணர்முன்னர்வேட்ட மணங்கன்பின்மணஞ்செய்காதற்
பைந்தொடி பண்டைநாமம் பத்மினியென்பதாமே,

(இ-பு,) மனதில் தூய்மையுள்ள விரதத்தையுடைய முனிவனே முன்பிறப்பில் இந்தசாரதையென்பவளை தமிழ்நாட்டில் ஒரு பிராமணன் தான்முன் விவாகஞ்செய்துகொண்ட மூத்தமனைவியிருக்க இரண்டாவதாவிவாகஞ்செய்துகொண்டான் அப்பிறப்பிலிவளுக்குப் பத்மினியென்று பெயர்-எ-று, (௮)

சா௰

வேறு

மாந்தளிர்போனி றவைப்பிணும்விழியு மருந்தாமோ சர்விழிநோக்கார்
சாந்திளமுலைய மலையமுமொளாளும்த் தழுவுறாக்கவிரும்கள்ளலத்தாம்
காந்தளாருசெய்கை பற்றிபகாமே முதலவர்க்காதலன்றன்னைத்
தேர்தளிர்ஸிற்ற வர்க்குழலிடன் செயல்வழிநடப்பதேபவித்தாள்

(இ-பு) மாந்தளிர்போன்ற மேனியின அழகினாலும் நோயும் அதற்கு அவுஷதமும்போலிருக்கும் வரிப்புள்ள கண்பார்வையினாலும் சந்தனமணிந்த இளமுலையு மார்பழுமொன்றும்த் தழுவிக்கொள்ள முடியாத்தினத்தினாலும் காந்தள்மலர்போன்ற தன்செங்கைபற்றிப் பாணிக்கிரகணஞ் செய்த தேக்கணவனைத் தன்சொல்லின்படி நடக்கத்தக்கதாகச்செய்தாள்-எ-று. தேன்துளி-சிந்துகின்ற மலரணிந்த அளகத்தையுடைய இவள் தன்னிடத்தில் இச்சைவைத்தவனை விருப்பமின்றிப்பார்த்தால் வருத்தமும் விருப்பத்துடன்பார்த்தால் மகிழ்ச்சியும் அவனுக்குஉண்டாகின்றமையால் பிணியுமருந்து மாமதர்விழியென்றார் - பிணிபுமதற்கு மருந்தும் பிறழப்பிறழ்மினாலும், பணியும்புணைமருந்தும் பெருந்தோளி படைக்கண்களே இறநிருக்கோவையார். (௯)

தவளருந்தாளுந் தாமருந்தாமுந்தடப்புயக்கொழுநனுங்காத
[illegible]ளமுலையின் போகமேறுசர்ந்தாம் வின்பமாந்கடலினடைய
நலஞ்நுண்மருங்குற் றமுதனாயமுதத் அலைவிதன்கோண்கிள்ப்பெரு
கூருலளைவாய்க்கருங்கண் மைந்நாரிபிலிற்றக் கொடுந்துயர்கடலினை
[யாழ்ந்தான்

(இ-பு) வெண்மைநிறமுள்ள மூப்புரியாகிய பூணநாலும் பூமாலையும்பொருந்திய பெரியபுசத்தைபுடைய கணவனும் ஆசையினால் இவளிடத்திலேயே போகம்அனுபவித்துக்கொண்டு இன்பக்கடலிற்புகுந்திருப்பதினால் தவஞ்செய்கின்ற மேல்மையிடையும் செவ்வல்லிமலர்போன்ற வாயுமுள்ள அழுத்தமுமுடையவளாகிய தன் கணவனுடன் சேருதற்கின்மையால் நீலோற்பலமலர்போன்ற தன் கண்கள் நீரைச்சொரியப்படி துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தாள்-எ-று. (௰)

தவித்துணையுருதுதல் துணைபுணராத் தன்னையுந் தூயமலர்க்குழலா
ளனித்தயருழந்து புதல்வனைப்பெறுத் தம் மன்னலந்தொழுதாடுபிரங்கி
யனிபுரிப்பொறைசோண் டாற்றலேனென்னே யின்மையுமதுணையுமுயி
ழந்தேன், புனிதனேயென்றுப் புலம்புகொண்டிறந்து பொன்னுலகடைந்
(தனளன்றே

(இ-பு) தனிமையாயிருக்குந் தன்மையாகிய துணையேயல்லது தன் துணையாகிய கணவனோயடியாதருவிரச்சியும் வாசனையுமுள்ள மலர்

அணிந்த அளகத்தையுடையமூந்தாள் மிகவுந்துயரங்கொண்டு புத்திரர்களையும்பெறாமல், இளமைப்பருவம் நாளுக்குநாள் நீங்குந்தோறும்இரங்கி இனியிவ்வுடலைவைத்துக்கொண்டிரேன் வினையேனாகிய நான் இவ்வுலகத்தின்பத்தையும் (புத்திரவில்லாமையால்) சுவர்க்கலோக வின்பத்தையும் இழந்தேனே பரமசிவனேயென்றுசொல்லிப் புலம்பிக்கொண்டிருந்து இறந்து பொன்னுலகம்அடைந்தாள்-எ-று. (௰௧)

வேறு

இவ்வண்ணமிகழ்காலத் தயலிடத்தே ரில்லுளமாபுமக்கணுளன்
செவ்வண்ணத்துவர்வாயும் வளமுலையுர் வருத்தநிறை தேய்ந்துதேய்ந்து
மைவ்வண்ணக்கொடுங்காமங் கைமிசையுமிவன்மலர்கைகை வலிதிற்பற்றக்
கைவ்வண்ணக்காவிகந்தாள் கற்பிழவாதன்னேனைகை கடந்துபோனுள்

(இ-பு) இவ்வாறுநடக்குங்காலத்தில் அயல்வீட்டிலிருக்கும் ஒருபிராமணன் இவளுடைய செம்மைநிறந்தங்கிய பவளம்போன்றவாயும் அழகியமுலையும் தன்னைவருத்த நிறையழிந்து மெலிந்துமெலிந்து இருள்மயமாகிய காமமானது அதிகரித்தலால் இவள்கையை வலிதிற்பற்றினான் அவ்வாறுபற்றவே தன்னைக் காப்பவர்களை யிழந்திருப்பவள் தன் கற்பினிலையையிழவாமல் அந்தப் பிராமணன்கையை நீக்கிக்கொண்டுபோய் விட்டாள்-எ-று. (௰௨)

அந்நிலையேகளவொழுக்க மனக்கொள்ளாள்வெறுந்தகன்றவயலான்கற்பி
பன்னியிளமுலைகிடந்த வெக்கறவாலறிவழிந்து மையுநூற்றேன் (ற்
தன்னைவடுநிலைகுழைந்து வேனிலானமாடுங் கணைகளாகந் (றே
தினமயின்னஞ்செயக்காம விடந்தலைக்கொண்டுகற்றான்றுசேர்ந்தானை

(இ-பு) அவ்வாறு சோரப்புணர்ச்சிக்குச் சம்மதியாமல் வெறுத்துப் போய்விட்ட அன்னியனுடைய மனைவியினிடத்திருந்த எக்கறவால் அறிவழிந்து துன்பமடைந்து மன்மதனதுகருப்புவில்லைவளைத்துப் போர்செய்யுங்கணைகள் தனதுடையசரீரத்தை இன்னமினஞ்செய்வதினால் காமமாகியவிஷந் தலைமட்டுங்கொண்டு இறந்துபோனான்-எ-று. (௰௩)

கற்பினிலைகடவாத நிறைபிருந்தும்பொறையிருந்துங்கமழ்தார்சூட்டி
முற்படத்தன்னேன்மணந்த முழுவினழையையொருஞான்றுமுயங்கவொட்
டாள், பொற்புடைத்தன்புணர்முலையின் புதுநலமேறுகரும்வண்ணைப்புரி
தலாலே, யிற்பழியில்லாளிவளுமிளமையிலேலைகமையுற்றுங் கிருந்தாளென்றே

(இ-பு) கற்புத்தன்மைகடவாத நிலைமையிவளிடத்திருந்தும்பொறுமையிருந்தும் தனக்குமுன்னேன்கணவனுக்கு மாலைசூட்டி விவாகஞ்செய்

துகொண்டவனை பொருநாளாவது கணவனுடன் இன்பம் அனுபவிக்க வொட்டாதவளாய் அழகுள்ள தன்கொங்கையினைபத்தரேயே அனுபவிக்கும்படி செய்தலினாலே பதிவிரதா தர்மத்துக்குப் பழிநேரிடாமல் காத்துக்கொண்ட இவளும் கைப்பெண்ணாயிருந்தாள்-எ-று. (௰௭)

வளாமலிசிர்மகளிரொடுமயிலனைரிளகனாநாயவலணமாற்றி
யுளமலிபுமனக்களியாற்ற மதுவழிபேபொழுகவுடல்கூடுருந்
தளவநகைக்கயல்விழியார் தமைக்காமவிடாயகனற் றதகளர்க்குமாமிழி
யிளமையிலேநான்குபவங் கயிலியாயளவிறுன்பமெய்துவாரே

(இ-பு.) வளமையுஞ் சிறுமுள்ள மனைவியருடன் கணவன் இன்பம் அனுபவியாதவனை மாற்றி உள்ளத்திற்பொருந்திய களிப்புடன் தங்கள் சொற்படிநடக்கும்படி ஊடல்கொள்ளுகின்ற முல்லையரும்பினை யொத்த நகையினையும் சேல்மீனையொத்த கண்களையுமுடையமாதர்கள் (மறுபிறப்பில்) தங்களைக்காமவிடாயானது வருத்தச் சோர்ந்துதுயரமுற்ற இளமையிலேதானே நான்குபிறப்புவரைக்கும் கைம்பெண்ணாயி அளவில்லாத துன்பத்தைப்பொருந்துவார்கள்-எ-று. (௰௮)

அறந்தழையுந்தூயமனத் தருந்தவனேயருந்ததிகற் பனையகற்பாற்
சிறந்தமலர்க்குழலிவுடன் சிந்தைகளிகூர்ந்துறந் தேங்கொள்போதச்
சிறந்தபவத்தென்னையருச்சித்தேத்தலாலெழுபிறப்புமீட்டும்பாவம் [றே
பிறந்தவிந்தப்பவத்திலொளிர் சுடர்காக்குமிருள்போலப் பெயர்ந்ததன்

(இ-பு) தர்மமே குடிகொண்டிருக்கும் நல்லமனத்தையுடையமுனிவனே அருந்ததியின் கற்பினையொத்தகற்பினால் மேன்மைபெற்ற இவளுமனங் களிப்படைந்து மலர்களால் முனபிறப்பில் என்னை அருச்சித்ததுதித்தமையினால் எழுபிறப்பினுஞ்செய்த பாவமெல்லாம்பிறந்துள்ள இந்தப்பிறப்பிலேதானே சூரியனால் நீக்கப்பட்ட இருள்போல நீங்கிவிட்டது-எ-று. (௰௯)

சுரமலர்ப்பூங்குழலே பென்றிரந்துகரம்பற்றி யிரங்குகென்று
வார்வாருற்றுநல்லனுகராத் துயரான்மு பவத்திறந்தவந்தணனன்
றீர்விலொருகலைக்காமங் கூட்டவிக்க பவத்துமிவன் செங்கைபற்றி
வார்மூலைத்தனுகமுறப் புணராமலவனிறக்க மாய்ந்துபோந்தோ

(இ-பு.) குளிர்ச்சிபொருந்திய பூமாலையணிந்த அளகத்தையுடையவளே இந்தவேளை உன்மனமிரங்கவேண்டுமென்று இவள்கையைப்பற்றிக்கொண்டு இரந்து ஆசையுற்றும் இன்பம் அனுபவியாத துயரத்தினால் முற்பிறப்பிலிறந்துபோன பிராமணன் நீங்காத ஒருகலைக்காமமானது கூட்டுவிக்க இந்தப்பிறப்பில்விவாகஞ்செய்துகொண்டுஅவள் கையைப்பற்றி

இன்பதுவுண்டுள தெவிட்டுகாளி துயிக்கேளிறப்பனிறந்தானென்று
யினமுறையானெழுந்து யிருவிருமெயதுபதும்பெறுவிரன்றே

(இ-பு.) உன்பிரதாபயன் பெற்றுக்கொண்ட கணவன்வசமாகி இவ்வுலகத்தில் இருந்த பொனமயமானவீட்டில் சகஸ்ராவஸ்தைகள் தோறும்புணர்ச்சி கனவுதோறும்புணர்ந்து இன்பம் அனுபவித்து அதனிடத்தில் மனவெறுப்புண்டாகுங்காலத்தில் உன் உயிர்போன்ற அந்தக்கணவனிறந்துவிடவே அவ்வாறு அவனிறந்தபின்பு நீ மேற்படி அக்கினியில்மூழ்கி நீங்களிருவர்களும் நம்முடைய பதவியைச் சேர்வீர்கள்-எ-று. (௨௰)

(வேறு.)

எனவுரைத்தெழுதாமறைபுராதன நூலியாவையுமுணர்ந்துளங்கெளிந்த
தனையனையினனே பெறுதிநின்செல்வந் தழைத்திடவாழ்கியநற்றனையு
வனமுறவிடவுந்தமனமகளிசிறப்ப வரங்கொடுத்தாயிசையுவனு
முனிவனுங்காணவிமயமீன்றெடுத்த முகிணைகைகயிலையையடைந்தாள்

(இ-பு.) இவ்வாறு பார்வதிதேவியார் அனுக்கிரகஞ்செய்து எழுதப்படாதவேதமுதலிய பழமையான சாஸ்திரங்களையெல்லாம் உணர்ந்திருக்கும் புத்திரனை யிப்பொழுதே பெறுவையாக இலழியாதசெல்வந்தழைய நீ வாழக்கடவையென்று அழகிய தனங்களையுடைய சாரதையின்மனமானது சந்தோஷத்தினால் சிறப்படையத்தக்கதாக வரங்கொடுத்தருளி அப்பொழுதே அவளும் அந்தமுனிவனுங்காணக் கயிலைக்கு எழுந்தருளினார்-எ-று. (௨௧)

வளர்மதிகண்ணியண்ணல்பாகத்து மாதுமைவரந்தரப்பெற்ற
தளிரியன்மகிழ்ச்சிகூர்ந்தருந்தவன் பொற்றுள்ளுருச்சனைபுரிகாலை
முளரிநாண்மலரினைதலையமிழ்ந்து முருகுகொப்பளித்திடச்செங்கே
ழொளிர்கதிர்விரிக்கும்பரிதியஞ்செல்வ னுதயமால்வரையிசையுதித்தான்

(இ-பு.) விளங்குகின்ற பிறையாகிய மாலையணிந்த பரமேசுவரனிடப்பாகத்தில்வீற்றிருக்கும் பரமேசுவரி வரங்கொடுத்தருளப் பெற்றுக்கொண்ட சாரதைமகிழ்ச்சியடைந்து அம்முனிவனுடையபாதங்களில் அருச்சனைசெய்யும்போது தாமரைகளினருப்பு இதழ்விரிந்து தேன்சொரியும்படி செவ்வனிறந்தங்கிய ஒளிபொருந்திய கிரணங்களைப்பரப்பும் சூரியதேவன் உதயகிரியில் தோன்றினான்-எ-று. (௨௨)

காறுபூங்கோதமர்துமையோடு களிர்மதிவேணியன்மகிழ
வீறுயர்சிறதமியற்றியதிறத்தால் விளைபயனே இலை [illegible]
[illegible]முனிவனனைவட்டப் பந்தைத்தனுமன்னையுமறியக்
[illegible]நினன்கூறியாபிடையகனறோர் குளிர்புனனுட்டமடைந்தான்

(இ-ள்) வாசனை பொருந்திய பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய காமினியர்கள் யாவரும் குளிர்ச்சியுள்ள பிறைமதியணிந்த சடையையுடைய சாம்ப மூர்த்தியும் மகிழ்ந்தருளும்படி பெருமைதங்கிய உமா மகேசுவர விரதத்தை அனுட்டித்தல் வேண்டும் அவ்விரதத்தை இவ்விதம் அனுஷ்டிக்க வேண்டுமென்று சாரதையின் தாயும் தந்தையும் அறியும்படி முனிவர் சொல்லிவிட்டு அவ்விடம் விட்டுக் குளிர்ச்சியுள்ள நீர்வளந்தங்கிய சிறந்த நாட்டிற் போய்விட்டார்-எ-று. (௨௮)

முனிவர் அகல விதிமுறையோற்ற மெய்ம்முல்லைக் குன்றப்பொதிய
கலையல்குல் செழுந்தார் கேள்வனுந்தானுங் கலந்துகாத்தின்புறுநாளிற்
பனிவரையின்ற கோவ்வைபச்செவ்வாய் பசுங்கிளியளித்த வல்லாரத்தார்
கனவுதன் கனிகலைந்தொவனுட் களித்திடக் கருப்பமுற்றதுவே

(இ-ள்) அந்த முனிவர் போய்விட்டபின்பு விதிப்படி விரதம் அனுஷ்டிக்க சாரதையானவள் இராத்திரிதோறும் தேனுடன் மலர்ந்திருக்கும் செழுமையுள்ள பூமாலையணிந்த கணவனுந்தானும் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்குங்காலில் மலையரையன் செய்த தவத்தினால் அவனுக்குப் புத்திரியாகிய கோவைப்பழம் போன்ற சிவந்த வாயையுடைய பசுங்கிளி பொழியும் மொழியையுடையவளாகிய பார்வதிதேவியார் அருள்செய்த வரப்பிரசாதத்தினால் சொப்பனத்திற்கூடுங் கலவியின்பத்திலும் அவள் மனங் களிப்படையும்படி கருப்பமுண்டாயிற்று-எ-று. (௨௯)

கருவளர்ந்திடலான் மாந்தளிர்மேனி கலைமதிபுரை வெளிறளிர்ப்பச்
சிறுந்தலைகள்(?) ... பெறலுங் கணிகிலாரங்கதுகண்டார்
இருகவினழகிந்தாள் கற்பினிற்பிறப்புக் இறப்பிலேனெனப்பழிகூறி
யாவருமுணர்வ திறந்தகேடாகேட்டிசயித்துகப் புழுங்கினரே.

(இ-ள்) அந்தக் கருவளர்தலினால் மாந்தளிர்போன்ற மேனியானது சோடசகலைகளுள்ள சந்திரனை வடிவம் போல வெண்மை நிறம் அடையும்படிச் சாரதை கருப்பத்திற் பொருந்தவும் இதனுண்மைதெரியாதவர்கள் இந்தக்கன்னி மகாபெண்ணாகிய சாரதையானவள் பதிவிரதத் தன்மையையுங் குடிப்பிறப்பையும் இழந்துவிட்டாளென்று பழிசொல்ல அதைப் பாம்புகடித்திறந்துபோனவன் பந்துக்கள் கேள்விப்பட்டு அதிசயித்து மனம்புழுங்கினார்கள்-எ-று. (௩௦)

(வேறு)

நுண்மொழிபொறுநகானிய கணைத்தாப்பக்கத்தின்
...டகத்திலிரந் அடிமினர்களுமங்கே
புல்லைச்சென்று போந்திடமிக்க பூசரனையுமன்பயர்ந்தோன்
இல்லினைமருக்கொழுந்தவடாளுஞ்சார்ந்தான்

ம் கச்சணிந்த இவள் தனங்கள் தன்மார்பிற்பொருந்தும்படி புணர்வதற்கு இல்லாமல் பாம்புகடிக்க இறந்துபோனான்-எ-று. (௩௧)

இறந்தவனேயிவள்கொழுநனல்லனுமையப்பிறப்பிலிவளிலங்குசேன்வன்
சிறந்தசங்கத்தமிழ்மொழிக்குந்தென்கூடற் றென்னர்பிரானகன்னிநாட்டிற்
பிறந்தகொழுகுலத்தவர்க்கோர்திலகமாய் ளவில்செல்வம் பெற்றுமற்
றோர் மறந்தனமுபிராணநாதமணம்புணர்ந்துபுறநலமார் மெய்மர்கின்றனே

(இ-ள்) இப்போது இறந்தவன் இவள் கணவனல்லன் முன்பிறப்பில் இவள் கூடியகணவன் சிறப்புதங்கிய சங்கத்தமிழ் விளங்கு மதுரைத்தலத்தில் அரசுசெய்துகொண்டிருக்கும் பாண்டியனுடைய நாட்டிற்பிறந்து பிராமணகுலத்துக்கு ஒருதிலகம்போல அளவில்லாத செல்வம்பெற்று இல்லறம் வழுவாமல் நடக்கும் மற்றொரு கன்னிகையை விவாகஞ்செய்து இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கிறான் எ-று. திலகம் முகத்துக்கு அழகுபோல அந்தப்பிராமணன் பூசுரர்குலத்துக்கு அழகுதருவதினால் திலகமெனக்கூறினர். (௩௨)

அவனவன்பொற்றடமார்புமலர்முலையாகமும் பொருந்தியழுந்தக்கூடிப்
புனைமலரின்பகந்தாதுபொதுஞ்சமம பூவணையின்புறத்துமேவிக்
கனவுதொறுமிவள்காமக் கனிநுகர்வாளாகவந்தககனவிற்கூட்ட
நனவினுறுபுணர்ச்சியினும் மனவிறந்தநன்னலமேநல்குமன்றே

(இ-ள்) அவனுடைய பெரியமார்பும் இவளுடைய பரந்தனங்களுள்ளமார்பும்பொருந்தி அழுந்தத்தக்கதாகக் கூடிப் பூந்தாதுகள் நிறைந்த வாசனையுள்ள மலரணையினிடத்திற் பொருந்திச் சொப்பனத்திலேதோறும் இவள்காம இன்பமாகிய பழத்தை உண்பவள் அந்தக்கனவிற்கூடுதல் சாக்கிராவஸ்தையில்புணரும் புணர்ச்சியினும் அதிகமான நல்ல இன்பத்தைக்கொடுக்கும்-எ-று. (௩௩)

அளவுறுகாவதமுந்நூற்றிக் ... கப்பாலதாமசுந்தருதிஞ்ச
வளநகரினிருக்குமினனுந்தன முன்னைவினைவயத்தினுலே
தளவனகைப்புளகமுலைத்தாழ்குழலிப்பொலங்கொடியைக்கங்குல்தோறும்
முளமகிழ்புங்காதலொடுகனவிற்சேர்ந்தம்பர்செல்வமுறுவனமன்னே

(இ-ள்) அளவுபட்ட முந்நூற்றுயோசனைதூரத்துக்கு அப்பாலிருக்கும் அந்தநகரத்தில் அழகுமிக்க இன்பமுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் இவள்கணவனும் முன்ஜென்மவினைவசத்தினுலே முல்லைமுகைபோன்ற பற்களையும் புளகம்பொருந்திய தனங்களையும் தாழ்ந்த அளகத்தையுமுடைய பொற்கொம்பை யொத்தவளாகிய இவளை இராத்திரிதோறும் சொப்பனாவஸ்தையில் ஆசையுடன் புணர்ந்து சுகபோகத்தையடைவான்-எ-று. (௩௪)

இன்னணநாட்களி லெருநாளிலக்கதப் [illegible] [illegible]
பொன்னுனாயிற் பொலிசனகனின் மனநுலையமன [illegible]
னைச், கன்னமி [illegible] [illegible] [illegible]
வென்றுர், தன்னிரிக்லாயு [illegible] [illegible]

(இ-பு) இவ்வாறு உள்ளத்திற் களிப்புண்டாகி அதிகரிக்கத்
தாக இன்பம்அநுபவித்துக்கொண்டிருக்கும் சுமதி யென்
னிளங்கோபம்பாக்க அழகிய தனங்களுள்ள இவள் ஒரு [illegible]
பெறுவாள் மலைக்கொப்பாகச் சொல்லத்தக்க புஜங்களையுடைய [illegible]
னைவனுந்தனபுத்திரனைச் சொப்பனத்தோறக்கண்டதென்று [illegible]
ப்பெண்ணாதமுனிவனுக்குச் சொல்லிச் சாதனையைப்பார்த்துப் [illegible]
வியார்சொல்லுகின்றார்-எ-று.

குளிமதிவாணுதற்பசிபகுவளைவிழிச் சாதனை [illegible]
புனைகளனின்பொனமணிக் [illegible] [illegible]
ன்றன்னைப், பனிமதியிற் பிலையெனத்தன்பணிலம் [illegible]
னாட்டிர், கனவினிற்கடைவிருபியா [illegible] [illegible]
[illegible]

(இ-பு) விளைந்த பிறைபையொத்த ஒளிதங்கிய நெற்றியையும்
மாதங்கிய நீலோற்பலம்போன்ற கண்களையுமுடைய சாதனையே [illegible]
பிறப்பில் மணமாலைசூட்டித் திருமங்கிலியதாரித்து உன்னைச்சேர்த்
த்தகனைத்தூளிர்ச்சியுள்ள சந்திரனைப்போலச் சந்துகன்தவறுர் [illegible]
ன்றுழ்ந்த ஒப்பற்றவனை [illegible] சொப்பனத்தில் கண்டதிக்கருப்பம் (௲)
கமத்திலும் கண்ணிற்காண [illegible] [illegible]-எ-று

கணவனுநின்னொடுகனவிற்புணர்குப் [illegible] [illegible]
நுனையியெனத்தெளிவனவ்வாறு [illegible] தொருவர்பண்டைய
தொடர்புபெற்றுர், புனைதனமதியாகக்கலை [illegible] கணசன்டபு
ன்றேடே, யினையில்விரதப்பயழிற்சமபாகம் [illegible]

(இ-பு.) கணவனும் உன்னுடன் சொப்பனத்தில் புணர்ந்தரிப்பிரு
எதிர்காண்பதற்குமுன் பனிவியென்று உன்னை அறிந்துகொள்வன் [illegible]
வாறுஅறிந்து ஒருவர்க்கொருவர் முன்பிறப்பிற்சம்பந்தத்தைப்பெ
த்தன்புத்தியே தெய்வமாகச் சாஸ்திரமனைத்துஞ் சமுத்திரத்தைக் [illegible]
கும் புத்திரனுடன ஒப்பில்லாத உன்விரதபலத்தில் கணவனுக்குச் [illegible]
பாகநீடு-எ-று, (உ)

நின்விரதப்பயனைற்றொழுநன் வசமாகிருசிலத்தினிடும்
பொன்மனைவாய்மனவிதாமும் புணராதுகனவிலின்பப்புணர்துமாகத்

(இ-பு.) தங்களுக்குசேரிட்டிருக்கிற பழிமொழியைச் சகிக்கமாட்
டாமல்வெட்கம் அடைந்துகொடியதாகிய கோபம் அதிகரித்ததனுல் சா
ரதையின் தகப்பன்வீட்டில்வந்து சேர்ந்து அவ்விடத்திலிருக்கும் வேதசா
ஸ்திரமுணர்ந்த பிராமணச்சபையின்முனசாரதையை அழைப்பித்தார்க
ள் அவளும் அங்குவந்தாள்-எ-று. (௩௰)

நிலங்கிளைத்தயர்ந்துநாணி நீள்குழற்றலைமிழிட்டேர
நிலங்கொளியின்னிளன்று னொழிலனைவயாவுநோக்கித்
குலங்கெடவடுவுண்டாக்குங் கொடியவரிவளாமென்றே
யலங்கலந்தண்டார்மார்பத் தந்தணரம்பல்சொன்னுர்

(இ-பு,) பூமியைக் காற்பெருவிரலாற்கிளைத்து மனச்சோர்வுடன்நா
ணமுங்கொண்டு நீண்டகுழலையுடைய சிரசினைவளைத்துப் பூமியைப்பா
ர்த்துக்கொண்டு ஒப்பற்ற ஒளியுள்ளமின்னலைப்போல நிற்பவளுடையசு
ரீரத்தின் அழகினையெல்லாம்பார்த்து இவள் குலங்கெடும்படிகுற்றத்தை
யுண்டாக்கும் கொடியவளென்று அலங்கலாகிய குளிர்ச்சியுள்ள பூமாலைய
ணிந்திருக்கு மார்பினையுடைய பிராமணர்கள் பழிமொழி சொன்னார்க
ள்-எ-று, (௩௧)

வாழ்கலைதவறுசெய்த மதியிலியென்றுசொல்வார்ந
தாழிருங்குழலேயீது தகாதுங்கண் மரபுக்கென்பார்
இழிலையாயுமீது இழிமையேபுரிந்தாயென்பார்
ரோழைசீயிறையினீங்கி யென்செய்தாயிதனையென்பார்

(இ-பு,) குலத்துக்குப் பழுதுண்டாகச்செய்த புத்திகெட்டவளே யி
னிநீ உயிருடன்வாழ்வதில்லையென்று சிலர்சொல்வார்கள் அடிபெண்ணே
நீசெய்த இந்தக்காரியம் உங்கள்குலத்துக்குத்தகாதென்று சிலர்சொல்வா
ர்கள் நீஉயர்ந்தசாதியிற் பிறந்தவளாயிருந்தும் இழிவான காரியத்தைச்
செய்தனையென்று சிலர் சொல்வார்கள் - அடி மதிகெட்டவளே பதிவிர
தைதன்மையைவிட்டு என்னடி யிப்படிசெய்தாயென்று சிலர் சொல்லுவார்
கள்-எ-று, (௩௨)

என்றவசொறுத்துக்காலை யிருமைதேர்சான்றோரெண்ணித்
தொன்றுசால் [illegible] பகற்பின் றெழுகுலங்கெடச்செய்தாளை
மன்றலங்குழலு [illegible] [illegible] ன்னைவார்காதுமின்னே
யொன்றறக்கொய்துபோக்கி யூர்க்கயல்கடிகவென்றுர்

(இ-பு,) இவ்வாறு அந்தச்சபையிலிருந்தவர்கள் தூஷித்துப்பேசும்
போது இம்மை மறுமைகளையுணர்ந்த பெரியோர்களாயிருப்பவர்கள் ஆ
லோசித்துப் பழமையாகவருகின்ற கற்புநிலையையுடைய பிராமணகுலத்

௪௩

ரைக்குக் கொடுமையுண்டாகச்செய்தவனைத் தமையனேயும் மூக்கையும் காதையும் இன்றுவரைவிடாமல் இப்பொழுதே அறுக்க ஞருக்கு அரக்கியிடங்களெனுமசொன்னர்கள்-எ-று.

சேட்டைபுரிதருமொருகவளக்கொழுவினுங்காமி
நூட்டைத்தலைகளைக் கருவேவருத்தச்சிதை
சேட்டினமிசைபராய்நெடு மிக்கவேறைவர்சூழ்ந்து
மொட்டுவருமலைதுருளே முருக்குவான குமருங்கவே

(இ-பு) அவர்கள் சொன்னதைக்கேட்டு அப்படியேசெய்து
ன மூன்றுவிதரேகையுடையவர்களாய் அரக்கியைப்போகக்
விட்டு உகவிரத்துடனே நின்றவைப்பெருமையுள்ள ஒருபெட்
வைக்கொல்லத்தொடரும் துணைசேனைபோலச்சூழ்ந்துகொண்
டுபோய்மலை வருத்தப்படி சென்றபோது-எ-று.

மன்னியநிறைவழுவா வயங்கிய்றவைப்
பொன்னணியின்பக்கும் பொதுநலக்கனிகையென்றே
சொன்னவர்காவர்சூழ்ந்த தயர்க்கடல்குளிப்பவென்று
மின்னெனக்குப்பின்னேர் தெய்வதம்விளம்பிற்றன்றே

(இ-பு) சேர்ந்த நானையைதவறுதல் விளங்குகின்ற
ந்தச்சாரதையை ஒரு புருஷனுக்குக்கொடுத்த பொன்னளவுக்குத்தக்க
கொடுக்கும் பொதுமகளாகிய வேசையென்றுசொல்லுகின்ற
குருக்கு சூழ்ந்ததுக்கசாகரத்தில் முழுகுவார்களென்று மின்னல்
பதுபோல ஆகாயத்தினின்று ஒருதெய்வம்சொல்லிற்று-எ-று.

விளப்புசொற்கேட்டனரும் வியனகர்மாக்களோர்
மூளைக்கனித்தவைகூத்தர் குவர்க்கடனெனவர்த்தர
விளக்கொடிநிரைகுரோடு தகையவள்மாதாவும்
துவக்கினைபரித்துத் தொலைவுவியமுற்றார்

(இ-பு) அவ்வாறுசொல்லிய தெய்வவாக்கைக்கேட்டமாத்திரத்தி
ல் விசாலமுள்ள அந்தநகரத்திலிருக்கும் மனிதர்களெல்லாரும் மனங்க
ளிந்துச் சங்கோசமடைந்து பார்வையைத்தில் ஒருசமுத்திரம்போல
ஆவலித்தார்கள் சாரதையின் தாய்தந்தையர்கள் சுற்றத்தார்களுக்கு
கஷ்டமடைந்து ஒழியாத இன்பம் அடைந்தனர்-எ-று.

அவ்வழியநேர்ந்தாமு மவரமொழிதருநிரைகு
செவ்விமுகத்தினது வனதொகைப்புத்தமென்றதுவிசை
செவ்விதின்முகத்திட்டுத் திருத்தனையபடாகை
இவ்வாறுமாதவதொனா இருந்துவிந்தக்கவிருபே

(இ-பு) பொன்னிறத்தையொத்த கொன்றைமாலையையணிந்த சடை
யையுடைய பரமசிவனைப்பூசைசெய்யும்படியான சிவராத்திரிதினத்தில்
சனங்களெல்லாரும் கோகர்ணத்துக்குப்போகின்றார்களென்பதைக்கேள்வி
ப்பட்டுச்சாரதைகேள்விப்பட்டுப்பிறந்தேவர்களுக்குஞ் செய்யுந்தவஞ்செ
ய்யத்தக்க சாரதையென்னும்பெயருள்ள புத்திரனுடன் புறப்பட்டுத்த
ன்னைப் பாதுகாக்கும் பந்துக்களுஞ் சூழ்ந்து வரும்படி போனாள்-எ-று.

பூந்துணர்விழுந்தவழ்பபகுங்கால் புதுமலர்ச்சண்பகவேலிக்
கொந்தளத்திலம்மிவிளைக்குஞ்சாந்துக்கதிர்கோமுத்தமுங்கொழித்து
நீர் நிரதமிழ்மணக்கும்வைகையாறுசூழ் தென்புலக்கடகன்றுங்க
ளைக்கிளமுலைமாள்சாரதைதவத்தால் வெய்யிதழ்கொழுந்துமாடைந்தாள்

(இ-பு) அப்படியவள் போம்பொழுதுபூங்கொத்துகளில்பொருந்தி
வருகின்றவாசனையுள்ள தென்றற்காற்றுச்சென்று உலாவுகின்ற சண்பகச்
சோலைவளர்ந்திருக்கும் பொதியமலையில் உண்டான செழுச்சந்தனத்துண்டு
ம்ஒளியுள்ள நிலவையொத்த முத்துக்களையுங்கொழித்து மதுரமுள்ள த
மிழ் மணத்துக்கொண்டிருக்கும்படியான வைகைசூழ்ந்த பாண்டிநாட்
டை அகன்று இனிமைதங்கிய தனமுள்ள சாரதைதவத்தினுற்பொருந்தி
ய கணவனும் வந்தான்-எ-று. (ருக)

கள்ளவிழ்குழலாள்பிடைக்கணவிற் கலவிசெய்கொழுநனைக்காணு
வுள்ளுறத்தெளிந்தவனதுமைபுள்க முறவுவந்தவந்தவைகோகமித்
தென்றுதெண்டிரைசூழ்பொலங்கிரிமுகடுந்தேட்டிளம்பரிதிக்கண்டாங்
கே முன்னைமுளரிமுகக்கழித்தென்ன முகமலர்ந்தகமகிழ்ந்தனளே

(இ-பு) தேனுடன்மலர்தமலரணிந்த அளகத்தையுடைய சாரதை
யானவள் கொடியின்றிவில் தன்னைப்புணருங் கணவனை அவ்விடத்திற் க
ண்டவுடன்மனதில் தன்னுடைய கணவனேயென்று தெளிந்து அழகியத
ங்களினிடத்திற் புளகமுண்டாக அவன்வடிவை யெல்லாம் பார்த்துத்
தெளிவுள்ள சமுத்திரஞ்சூழ்ந்த உதயகிரியினிடத்தில் உதயமாகுஞ் சூரி
யனைக்கண்டு அப்பொழுதே முன்னேகள்பொருந்திய கொடியுள்ள தாம
ரையரும்பு முகிழ்கட்டு மலர்வதுபோல முகமலர்ந்து மனமகிழ்ச்சிய
டைந்தாள்-எ-று. (ருஉ)

பண்டைநாண்முதலிமேனிவேலா மின்பப்பருவிதேனுமன்மனது
கண்டறிகுறியாற்றிந்தபடிவங்காட்டியமதலையுங்காணு
வண்டியிர்குழலாய்நின்றுதெபசரு மாற்றமொன்றுளதெனவேறு
கொண்டனுமுவகைக்கடலிடைமூழ்கிக் குளித்தனள்விவுவான்புகுந்தான்

(இ-பு) முன்னுள முதலாகச் சொப்பனங்கள் தோறும் சாரதையு
டன் இன்பம் அனுபவித்தக்கணவன் அந்தக்குமாரனின் பார்த்தபின்த குறிப்

யிருல்தெரிந்து முன்னுருவர் சாயலைக்காட்டிய புத்திரனையுங்கண்டு வ ண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும் அளகத்தை யுடையவளே உன்னு டனொருவார்த்தை பேசவேண்டியதிருக்கின்றதென்று தவித்திருந்துகொ ண்டு மனமானது சந்தோஷிக்கடலில் முழுகத்தக்கதாகக் குறித்ததனை வினவத்தொடங்கினன்-எ-று. (௫௩)

மணமலிகுழலேயாணையீதின்னை மணம்புணர்கேள்வன்யாரிம்முன் னுணர்வுடைத்தக்கதயாலனேவெதுநின் னூரெதுபேரெதென்றுவர்த்த கனைவனமுனவினவக்கதுழுந்துதன்மாபு தொடுத்திளமையின்மணஞ் செய்த, கணவனையிழத்தல்காறுமின் றுரைத்தனள்காதலன்மறுத்திஃதுரை (த்தான்

(இ-பு.) வாசனைநிறைந்த மலர்மாலைபணியத்தக்க அளகத்தையுடை யவளே நீயார் உன்னை விவாகஞ்செய்துகொண்டகணவன் யார் உனக்கு டைய உன்பிதாயார் ஊர்எது பெயரென்ன வென்று கணவன் வினவச் சாரதையானவள் கண்களில்நீர்பெருகும்படி துயரம் அடைந்தவளாய்த் தன்மரபுமுதல் இளமைப்பருவத்தில் விவாகஞ்செய்துகொண்ட கணவ னையிழந்த திருக்சொன்னுள் அவன்மறுபடியும் இந்தவார்த்தைசொல்லு கிறான்-எ-று. (௫௪)

மன்றலங்கோதாயிந்நகரில் வாய்ந்த மறையிளஞ்சிறுவனை மகன்கொ லன்றியற்றபலர்மகன்கொல்யார்மகனென் றுயிகலான் போலவன்வினவ நின்றசீர்ச்சாரதேயனென்றொருபேர் நிலைமெலாநிலவிப்புகழோ னொனறனிப்புதல்வன்பலகலைவேதம் யாவையுமுணர்ந்தவனென்றுள்

(இ-பு.) வாசனைதங்கும் அளகத்தையுடையவளே உன் அருகிலிருக்கு ம் இந்தப் பிராமணப்பிள்ளை உன்புத்திரனே அல்லது மற்றொருவர்புத் திரனே யாருடைய புத்திரனென்று அயோதலன்போலவினவ இந்தப்பு த்திரன் பெருமைதங்கிய சாரதேய னென்னும் ஒப்பற்றபெயர் உலகமெ ங்கும் விளங்கும்படி புகழ்பெற்றவன் என்னுடைய புத்திரன் பலசாஸ்திர ங்கள் வேதங்கள்யாவும் உணர்ந்தவனென்று சொன்னுள்-எ-று (௫௫)

சொற்றனன்கேட்டுவெடிபடநகைத்துத்தொழுகுலத்துதித்தநின்செய்கை முற்றவுநன்றுகாணென்று மொழிந்துரைப்பங்காத்தளஞ்செங்கை பற்றியஞான்றேயிறந்தனன்கேள்வன் பாலனுநீயின்றார்ப்பயந்த தெற்றெனப்பகர்வேன்முகிழ்முலையணங் கேயேதுகாரணமிதற்கென்றான்

(இ-பு.) அவள் சொன்னதைக்கேட்டுக் கடகடவென்று நகைத்துப்பி ராமணகுலத்திற்பிறந்த உன்செய்கை யெல்லா மிகவும் நன்று யிருக்கின றதென்றுசொல்லிச் செங்காந்தள்மலரையொத்த உன்கையைப்பற்றிவிவாகஞ்

(இ-பு.) அப்போது அதிதிகளும் பழிகட்டியவர்களும் மின்பார் வைபோன்ற பார்வையுள்ள சாரதையின் கற்பினன்மையானது அற்புத முள்ளதென்று பயந்து செவ்விதாக முகத்தைத்திருப்பிக்கொண்டுயதொ ருபேச்சுமில்லாதவர்களாய் இவ்வாறு இரண்டுநாழிகையட்டிருந்து ம னங்கலங்கினார்கள்-எ-று. (௫௬)

வேறு.

அற்புதமிஃது சாதமெலறணை நகல்விகுர்பிடையொலித்தெழுந்த சொற்படிதென்றுத் தொழுகுலத்தோரிச் சொற்றனாசிலரவரெல்லாம் பொற்புறநாவற் றிறக்கிடவாயாற் புழுச்சொரிந்தனாவைகாறுத் கற்பினடைதையைப் புகழ்ந்தனர்சிலரும் கனமிகுபத்தருவினர்மகிழ்ந்தே

(இ-பு.) இது அற்புதமான சத்தியமானதென்று உணராமல்விசா ரமுள்ள ஆகாயத்தில் ஒலித்தெழுந்த அசரீரிவசனத்திற்குப் பொய்யென் று பிராமணர்களிற் சிலர்சொன்னுர்கள் அவர்களெல்லாரும் அழகுபொ ருந்திய நாக்கறுந்துவிழும்படி வாயின்வழியாகப்புழுக்கள்சொரிந்தார்கள் அவைகளைக்கண்டு கற்புள்ள சாரதையைப் பத்திகள்வந்து தழுவிக்கொண் டு அவள்கற்பினதிருமையைப் புகழ்ந்துபேசி மகிழ்ந்தார்கள்-எ-று. (௫௭)

செய்தவக்கிழமையேனவிநான்மறையோர்சிலரவணிருந்த தெய்வத்தமுங் கைதவமுமையா தின்றுக்குள்வயிற்றிற் கருப்பமும்வளர்வதேவிந்த மைதவழ்குழலிக் கேந்தவாறெந்தோ வசையறுமெனாதவயுமஞ்சு மெய்தெரிந்திலகலையுணர்ந்திந்த வேதியனெருவனியம்பினான்

(இ-பு.) தவஞ்செய்தற்குத்தக்க உரிமையும் யாகஞ்செய்யும் உரி மையும் உள்ளபிராமணர்களில் சிலர் அங்கிருந்து யார்பொய்சொன்னுலு ம் தெய்வமும்பொய்சொல்லாது இவள்வயிற்றிலேகருப்பமும் நாளுக்குநா ள்வளர்வதினல் இவளுக்குவசைமொழி எவ்வாறு நீங்குமென்று வருந்துங் காலத்தில் உண்மைதெரிந்து சாஸ்திரங்களையெல்லாங்கற்ற ஒருபிராம ணன் இந்தவார்த்தைசொல்லுகிறான்-எ-று. (௫௮)

கண்டுகேட்டறியப் படுவனவான காட்சியாலோகமேவனவா லுண்டெனவுணர்ந் திறந்தவாறெல்லா முலகமுமாயையின்வடிவே தெண்டலினமாயை மயக்கினுல்வாராத் தகையனயாவையாதலினுற் திண்டவினமாயை மயக்கிறுவதற்கரிதாம் பான்மையதொன்றெனத்தருமே பண்டைநாளிலதுஞ் சிவதற்கரிதாம்

(இ-பு.) கண்டும் கேட்டும் அறியப்படுவதுகளாகிய பிரத்தியக்ஷப் பிரமாணத்தினுலும் ஆகமப்பிரமாணத்தினுலும் உண்டென்று அறியத்தக்க பிரமாணத்தினுலும் ஆகமப்பிரமாணத்தினுலும் எல்லாவுலகமும் மாயாரூபமே ஒழியாத அந்த மா க்கருமைமையினபடி எல்லாவுலகமும மாயாரூபமே ஒழியாத அந்தமாயை முன் னைமயக்கினுல் வாராதனவல்லவையுமில்லை ஆகையால் அந்தமாயை முன்

குறிவில்லாததாய் நினைப்பதற்குவரிதாகிய பகுதியுள்ள இருகாரியத்தை தாதனமாக உண்டாக்கும்-எ-று. (௬௰)

இந்தமாமாயை இங்களக்கண்ணி யிறைவிளையாட்டெனத்தவிர்ந்து
சந்தான்மறையு மாகமமனைத்துந் தனித்தனியினைத்திடுமென்று
மந்திரான்மலரி லுலகெலாங்காட்டு மொருவனுமயனுமொரறியா
வந்தவானவனறன் றிருவிளையாட்டையார்கொலோவின்னதெனறறிவார்

(இ-பு.) இந்தமகா மாயையானது பிறையைமாலைபோல அணிந்தரு
ளிய பரமசிவனுடைய திருவிளையாட்டென்று நிச்சயித்துச் சந்தமுள்ள
நான்குவேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் தனித்தனி முறையிடு
மென்றால் நாபிக்கமலத்தில் உலகத்தைத்தோட்டும் மாயனும்பிரமனும்
சிறிதும அறிந்துகொள்ளமாட்டாத அந்தக்கடவுளுடைய திருவிளையா
டலை யித்தன்மையதென்று யாவர்கள் அறியத்தக்கவர்கள்-எ-று. (௬௧)

இதுகானமறையீர் கேட்டிர்மின்வயிற்றின் யோசனகந்திவந்துதித்தாள்
மேதியினகட்டின மகிடனெனறுரைக்கும் வெங்கிறற்றுன்னவனபிறந்தான்
றேதாழ்பொழில்சூழ் சத்தியபுரத்திற் றூழ்குழலியரனைவருமே
ரேதுவாற்கால மொனறிலவ்வயிறூர்ந் தெழில்பெறக்கருப்பமுற்றனரே

(இ-பு.) வேதங்கள்ஓதும் பிராமணர்களே கேளுங்கள் மீன்வயிற்றி
னிடமாக யோசனைகந்திவந்துபிறந்தாள் எருமைவயிற்றினிடமாகக் கொ
டியசெய்கையையுடைய மகிடாசுரன்வந்துபிறந்தான் மகரந்தங்களுடன்
பூமலர்ந்திருக்குஞ் சோலைசூழ்ந்த சத்தியபுரத்திலிருந்த தாழ்ந்த அளகத்
தையுடைய மாதர்களெல்லாரும் ஒருகாரணத்தால் ஒருகாலத்தில் வயி
று நிறைந்து இடைதோற்றுதல் முதலாகியகுறிகள் தோன்றக் கருப்பம் அ
டைந்திருந்தார்கள்-எ-று. (௬௨)

வரிதவழ்வடிவே லடல்வசுதேவ னிகலினரிடுதளைப்படுநாட்
கரியமெல்லோதி யுரோகணிகேளின றிக் கருப்பமுற்றனளவையன்றி
யுருணமயுமுதவுந் தெய்வதவாத்தா விருடிகண்முனிந்தசாபத்தால்
வரனமுறையாகித் தொன்றுதொட்டுலகில் வருவனவல்லவும் வருமே

(இ-பு.) நீயுமிழும் வடித்தவேலையுடைய வசுதேவன்பகைவரால் வி
லங்கிட்டிருந்தகாலில் கறுத்தஅளகத்தையுடைய உரோகணியென்பவள் அ
வன்மனைவி தன்கணவனில்லாமலிருந்தும் கருப்பமடைந்தாள் இவைக
ளும் அல்லாமல் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையுங்கிருபைசெய்யுந்
தேவாத்திரனும் முனிவர்கள்சபித்தசாபத்தாலும் வரன்முறையாகப்
பூர்வகாலந்தொடங்கிவருவதுகள் மாகிவேறே தாதனமாக வருவதுமு
ண்டு-எ-று. (௬௩)

ஐந்தவித்துயர்ந்த வாற்றன்மாதவத்தோர சங்கறுத்துரைத்தசாபத்தால்
முன்னாதநாட்சாம்பனகட்டிடைவலிய முசலமொன்றுதித்ததுசெழுந்தாரப்
பைங்குவளையிதழிச்செஞ்சடாமகுடப் பரமனைப்பரவுமோர்முனிவன்
மந்திரபலத்தாலன்றுவனாசுவ வயிற்றினுங்கருப்பமுற்றதுவே

(இ-பு.) பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்துமேன்மைதங்கிய
தவவல்லமையுடைய மகாரிஷிகள்மனதில் கோபங்கொண்டு சொல்லிய
சாபத்தினால்முன்னாளில்சாம்பனென்பவன்வயிற்றினிடத்தில்வன்மையுள்
ள முசலமென்னும் இருப்புலக்கையுண்டாயிற்று பசுமையுள்ள கொன்றை
ப்பூங்கொத்துமாலையணிந்த செஞ்சடாமகுடத்தையுடைய பரமசிவனைத்
துதிசெய்யும் ஒருமுனிவனுடைய மந்திரபலத்தினால் வனாசுவனென்
பவன்வயிற்றிலும் பூர்வகாலத்தில் கருப்பமுண்டாயது-எ-று. (௬௪)

தாறுதாழ்பொருட்டுத்தாமரைக்கோயிற் றூழ்குழலனையசாரதையும்
வேதமாமுனிவனொருவனைப்பணிந்து விரதமொன்றியற்றுதல்புரிந்த
னாதலால்வயிற்றிற்கருப்பமுற்றிருந்தா மருளவையகற்றினளிதனைத்
தீதிலாவேறுமாதரால்வினவித் தேர்ந்துளந்தெளிமினெனறுரைத்தான்

(இ-பு.) மகரந்தம் நிறைந்துள்ள பொகுட்டினையுடைய தாமரைப்பூ
க்கோயிலிலிருக்கும் திருமகளையொத்த இந்தச் சாரதையும் ஒருமுனி
வனைப்பணிந்து உமாமகேசுவரவிரதம் அனுஷ்டித்தாள் அந்தவிரதபலத்
தினால்கருப்பம் அடைந்து குற்றமற்றவளாயிருக்கிறாள் இந்தகாரியத்தை
உத்தமகுணமுள்ள சிலமாதரை அனுப்பிக்கேட்டுக்கொண்டு வரச்சொல்
லி உங்கள் மனதிலிருக்குஞ் சந்தேகத்தை நிவிர்த்திபண்ணிக்கொள்ளு
ங்கள் என்றுசொன்னான்-எ-று. (௬௫)

அன்னதுதேர்வானெழுகுலத்தமைந்த வணங்கனார்செல்கெனச்சென்ற
மின்னிகரிடையார்வினவலுமவண்முன் விளைந்தனபடிப்படிவிளம்ப
பின்னவைக்கேட்டோர்மீண்டுவந்துரைத்தார் யாவருமுணர்ந்தொருமைற
வின்னவைகேட்டோர்மீண்டுவந்துரைத்தார் யாவருமுணர்ந்தொருமறை
யோன்சொன்னவைமுழுதுஞ்சாதமென்றேத்திச் சுரிகுழலவளையுந் [துதித்தார்

(இ-பு.) அந்தப்பிராமணன் சொன்னதை யோர்ந்துக்கொண்டு சார
தைகருப்பங்கொண்டிருக்கு முறைமையைத்தெரியும்படி பிராமணஸ்தி
ரீகளைப்பார்த்து நீங்கள்போய் அறிந்துகொண்டுவாருங்களென்று அனு
ப்ப அவர்கள்போயிச் சாரதையைக்கேட்டார்கள் அவள் முனிவர்வந்தது
முதல் நடந்ததையெல்லாங்கிரமமாகச்சொல்ல அதைக்கேட்டுவந்துசபை
யாருக்குச்சொன்னார்கள் அதைக்கேட்டவர்களெல்லாரும் இந்தப்பிராம
ணன் சொல்லியதெல்லாம் உண்மைதானென்று அவனைப்புகழ்ந்து சுரி
ந்திருக்கும் அளகத்தையுடைய சாரதையினையுந் துதிசெய்தார்கள்-எ-று. (௬௬)

செழுமறைபலருங்கவிருங்கற்பின நிறைப்பழுத்தகன் ...னாரங்கே
பழியறுசிறப்பினருந்ததியனைய பனிமொழிச்சாரதையென்பாள்
அழிவியர்பரிதிச்செல்வனைப்போலக் குரைகடலுலகெலாம் விளங்கு
மழவையின்றெடுத்துக்களிசிறந்தவகை யாகடன் மூழ்கினன் மகிழ்ந்தே

(இ-பு) அதன்பின்பு அங்கிருந்த பிராமணர்களும் பண்டிதர்களும் போய்விட்டார்கள் அதற்குமேல் பழிநீங்கிச் சிறப்படைந்த அருந்ததியை யொத்த கற்புள்ள சாரதையானவள் ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட இவ்வுலகமெங்கும் விளங்கும் உதயகால இளங்கதிரோனை ஒருகுழந்தையைப்பெற்றுக்களிப்படைந்து சந்தோஷக்கடலில் ஆழ்ந்தாள்-எ-று. (௭௭)

என்றவனேவப்பகன்குசாண்மறையோர் டிலக்கணமிடங்கயனைத்
தோன்றிடப்பகலைப் புனைந்துமுகநூலுந் தொன்மறைவிதிமுறைசு
யானறசீர்ச்சகாதேவனென்றொருபே ரமைவரப் புனைந்தவின்யாண்டேழர்
மூன்றகவையிற்றன் றுணைவிசூறெழுக்கு முதலவாமறை முழுதுணர்ந்தான்

(இ-பு) பெற்றவள் சந்தோஷிக்க கள்மையிருந்த விவேகத்துடன் புத்திரனை பிராசனைமுனிவனிடத்தில் விருத்தின்றன் றதை சொல்லும்படி தேசனைறி எல்லாச்சாஸ்திரங்களையுமுணர்ந்து பழையயாசவிதிப்படி உபநயனமுஞ் செய்துகொண்டு சிறப்புபொருந்திய சாதேவனெனனும் பெயரும்பெற்று மூன்றுவயதான அளவில் தன்னுணர்ச்சியினுல் இருக்கு வேதமுதலாகிய வேதங்களையெல்லாம் உணர்ந்தான்-எ-று. (௭௮)

மறைபயில்பாலன்கலையினுல்வளரு மதியெனக்கலைகளான் வளர்ந்
தனைறமுழுதுத்தொடையல்சூழ்சடில நாயகன்கொலிவாலு
முறுதிதாறெளிந்துபாதவண்டத் தறைபவா நெவரும் ஈங்கே
உய்குதற்கரியசிவபதச்சீர்க்குங் குறைவில்சீர்க்கோகன்னமடைந்தார்

(இ-பு) இவ்வாறு வேதங்கள் உணர்ந்த அந்தப்புத்திரன் கலைகளுடன் வளருஞ்சந்திரனைப்போல் கலைகளாகிய சாஸ்திர உணர்ச்சியுடன் வளருங்காலில் வாசனைகமழுங் கொன்றைமாலைசூழ்ந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன பூசைக்குரிய சிவராத்திரிவிரதத்து அந்நாளில் வேதமுணர்ந்து பாதகண்டத்தில் வாசஞ்செய்கின்றவர்களெல்லாரும் யாவருஞ்செல்லுதற்கரிய சிவலோகத்தை யொப்பாகுங் குறைவில்லாதசிறப்பையுடைய கோகர்ணத்தக்குச்சென்றார்கள்-எ-று. (௭௯)

பொன்புனைகடுக்கைவேணியானவனைப் பூசனைபுரிசிவநிசியின்
மனபதையெல்லாம்பொருவில்கோகனம் மணியவாசதங்கேனாத்
தென்புலவாணர்க்கருங்கடனிறக்குஞ் சிறுவனுந்தாயுமப்பெருந்து
தன்பாங்காக்கு மோனுற்குப்போதத் தனிப்பசாரதைபோனுள்

செய்துகொண்ட கணவன் அன்றையதினமே யிறந்துபோனுன் பின்பு நீ புத்திரனைப்பெற்றது என்ன அதிசயமென்று சொல்வேன் தாமரையரும்பையொத்த தனமுள்ளவளே கணவனிறந்தபின்பு நீ புத்திரனைப்பெற்றதற்குக்காரணம் என்னென்றுன்-எ-று. (௮௦)

அரிவைமடர்கைதனைமீதுஉ வலர்க்கிர்மதிமுகமிறைஞ்சி
பின்னைப்புரிந்துதமியனை யிகழ்ந்த வெற்பதோமுழுதுணர்ந்தவ
நின்னையானென்பிரியத்துளனென்னை நீயுமிவ்வாறறிந்தனையா
லுன்னருந்தகைபரிக்கிலைக்கிருவே முள்ளமேசான்றெனப்பின்னும்

(இ-பு) அந்தப்பிராமணன் சொன்ன வார்த்தையைக்கேட்டவுடன் சாரதையானவள் பாத்திரமங்களையுடைய சந்திரனையொத்த முகத்தை வணங்கிக்கொண்டு இனியநகைசெய்து தமியனுகிய என்னை, யிவ்வாறு இகழ்வது உனக்குத்தகுதியோ முழுவதும் அறிந்த ஞானவனே உன்னை நான் அறிந்திருக்கிறேன என்னை நீயும் அவ்வாறேயறிந்திருக்கின்றனை இதற்கு அரிய இந்நிலைமைக்கு நாமிருவர் மனமே சாக்ஷியென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறுள்-எ-று. (௮௧)

முனிவரன்மேனுண் மொழிந்தமன்றேன் மொழிப்படி நோன்பியற்றிய
தும், பனிவரையுமையாளொடுந்த கழலோடு பவங்களோரிரண்டினுமு
ன்னை, வினைவழிநிகழ்ந்ததொடர்பெலாமுணர்ந்தி பெய்வாமளித்ததுமு
மையாய்த் தவனைவிரதப்பயனிலோர்பாதிதனைறுமுழங்கினாளண
[ங்கே

(இ-பு) முன்னாளில் முனிவர் சொன்னதும் அவர் சொற்படி தான் விரதம் அனுஷ்டித்ததும் உமையவள் பிரத்தியக்ஷமானதும் அவ்வாறு பிரத்தியக்ஷமாகிப் போன இரண்டு ஜென்மத்தில் உன்னை விதிவசத்தால் தொடர்ந்துவந்த முறைமைதெரிவித்ததுமன்றி உண்மையாகிய வாங்கொடுத்துஞ்சொல்லிப் புத்திரனைத்தான் அனுஷ்டித்த விரதபலத்தில் பாதியுடன்கொடுத்தாள்-எ-று. (௮௨)

அறைகடலுலகிற்பெறற்கரிதாய வரும்பொருள்பெற்றெனப்பெற்றுன்
பொறையுடையணங்கின்றனைத்தாய்கிளைஞர் பொருந்திடவன்னவனுட
னே, மறையிளஞ்சிறுவற்கொண்டுபெருவகை மகிழ்ச்சிபனுகியாங்கன்று
சிறைபவிபாண்செய்பொதும்பர்சூழ்வகைச் செந்தமிழ்பாண்டிநாட்ட
[டைந்தான்

(இ-பு) ஒலிக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகில் பெறுதற்கரியதாகியவொருபொருளை அடைந்ததுபோல அடைந்தபிராமணன் கற்புநிலையுள்ள சாரதையின் தாய் தகப்பன் பந்துகள் இவர்களெல்லாருஞ்சம்மதி

க்கத்தக்கதாகத் தன்புத்திரனையும் அவளையுங்கூட்டிக்கொண்டு பெரிதா னசந்தோஷமும் தன்னை மறக்கும்படியான மகிழ்ச்சியுமுள்ளவனுகி அவ் விடம்விட்டுநீங்கி சிறகினையுடைய வண்டுகள் இசைபாடும் பொழில்சூழ் ந்த வைகைநதிசேர்ந்த பாண்டிநாட்டிற்சேர்ந்தான்-எ-று. (௬௪)

வாள்விரிபசும்பொற்புதவுயர்மாடமதுரைசூழ்வளநகர்சார்ந்து
நீள்கருங்குழலாள்புணர்முலைப்போக நீங்கருங்கனவெலாநுகர்ந்து
நாள்பலகழியவிறந்தனன்கேள்வ னலநுகர்ந்திவளையேழ்பிறப்புந்
தோள்பிரியேனென்றணங்கனுடாளுஞ் சுடர்விரிதழெரிகுளித்தாள்

(இ-பு) ஒளிபரந்த பொன்னாற்செய்யப்பட்ட கதவுகளையுடைய உய ர்ந்தவீடுகள்நிறைந்த வீதிகளுள்ள வளப்பமுடைய மதுராபுரியில் சே ர்ந்துநீண்டகரியகுழலையுடையசாரதையின்போகத்தை அனேகநாள் கன வில் அனுபவித்து அதற்குமேல் இறந்துபோனான் சாரதையானவள் இந்த க்கணவனை யெழுபிறப்புவரையில் பிரியாமல் இன்பம் அநுபவிப்பேனெ ன்று சுடர்விடுகின்ற தீயில்முழுகினாள்-எ-று. (௬௫)

தொடைசடைநுலகினலநுகர்ந்துடலந் துறந்தவிருவரும்பினனும்
வடிமலர்க்கணணிக்கற்பகமிலைந்து மகிணனுந்துணைவியுமாகிக்
கடிநலந்துய்ப்பானகோடியாதவர்செங் கதிரொளியொருவழிகுழீஇ
நெடிவிசும்படைந்ததெனவொளிசெழுமி நிலவுசிர்வியானமேவினரே

(இ-பு) சகரர்களால் தோண்டப்பட்ட கடல்சூழ்ந்தபூலோகத்தினி டத்தில்இன்பம் அநுபவித்து உடலையொழித்த அவ்விருவரும் ஆய்ந்தக ற்பகப்பூமாலையணிந்து கணவனுமனைவியுமாகச் சுவர்க்கபோகம் அநுப விக்கக்கோடிசூரிய பிரகாசமெல்லாம் ஒரேயிடத்தில்சேர்ந்துநெடியதாகி ய ஆகாயத்தினிடத்தில் வந்ததுபோல ஒளிபொருந்திவிளங்குகின்றசிற ப்பினையுடைய விமானத்திற்பொருந்தினார்கள்-எ-று. (௬௬)

ஆங்கினிதமர்ந்துகுங்குமக்குவட்டி னணிபெனத்திரண்டவின்புயமுங்
கோங்கினமுகிழினழகுவீற்றிருந்த குவிமுலைத்தடங்களுமெருங்கத்
தீங்கனியனையமெய்யுறபுணர்ச்சித் திருநலனுகர்ந்தபிதெவிட்டிப்
பூங்குழலுமையோடிளமதிக்கண்ணிப் புனிதன்வாழ்சிவபதமடைந்தார்

(இ-பு) இவ்வாறு விமானத்திலேறிச் சென்றவர்கள் சுவர்க்கலோக த்தில்இன்பமுடன் அமர்ந்து குங்குமமலையின் அழகுபோலத்திரண்டதி ண்ணியபுயங்களும் இளமையாகிய கோங்கின் அரும்புபோலக்குவிவாகிய தனங்களுநெருங்கத்தக்கதாக மதுரமுள்ள பழவர்க்கத்தையொத்தஇ ரண்டு உடலும் ஒன்றுபடப் புணர்வதாகியசிறந்த இன்பம் அநுபவித்து க்கொண்டிருந்து பின்புஅதனைவெறுத்துப்பூமாலையணிந்த அளகபாரமு

ள்ள பார்வதியுடன் பரமசிவன் வீற்றிருக்குஞ்சிவபதம் அடைந்தார்கள்-எ-று (௬௭)

இன்னதன்மையநிக்கதையெனவிதனை யாவரேயாயினுங்கற்றோர்
ஏன்னிரோர்கேட்டோரிருநிலத்திம்மைப் பயப்பன்வினமுந்துணர்நுகர்ந்து
பின்னருமறுமைப்பலன்சிவபதமே பெறுகுவர்இன்னமீதென்னச்
சொன்னநான்மறையின்பொருண்முழுதுணர்ந்த சூதன்மாதவர்க்கெடுத்
[துச்சொன்னான்

(இ-பு) நைமிசாரணிய முனிவர்களே இந்தஉமாமகேசுவரபூசாபல சரித்திரம் இத்தன்மையுள்ளதெனறுசொல்லி இந்தச்சரித்திரத்தை எவர் களேயானாலும் கற்றுணர்ந்தவர்களும் பிறருக்குச்சொன்னவர்களும் கே ட்டவர்களும் பெரியதாகிய இவ்வுலகத்தில் தாங்கள்விரும்பியபடியெல் லாம் இம்மைப்பயனை அநுபவித்துப்பின்புசுவர்க்கபதமும் அநுபவித் துச்சிவபதம் அடைவார்களென்பதுநிச்சயமென்று நான்குவேதங்களின் பொருள்முழுவதையுமுணர்ந்த சூதமுனிவர்சொன்னார்-எ-று. (௬௮)

பதினைந்தாவது,

உமாமகேசுர-பூசாபலமுரைத்த-அத்தியாய

முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௬௯௰௬,

உ

சிவமயம்.

இருபதாவது,

உருத்திராக்ஷமகிமையுரைத்த அத்தியாயம்.

கேட்டபின்மறந்த்தகர்கிளர்ந்துவகைபொங்கி
நாட்டமொருமூன்றுடைய நம்பனருளடியார்
வேட்டணியுமக்கமணி மேன்மையைவிரித்தே
கோட்டமில்குணத்துமுனி கூறுகெனலோடும்

(இ-பு) உமாமகேசுவர பூசாபலத்தைக்கேட்ட நைமிசாரணியமுனி வர்கள்சந்தோஷம் நிறைந்து திரிநேத்திரமுள்ள பரமசிவன் அருள்பெற் றஅடியார்கள் விரும்பி அணிந்துகொள்ளும் ருத்திராக்ஷ மகிமையைவி

வரித்து மாறுபடுதலில்லாத குணத்தையுடைய சூதமுனிவரே சொல்லு மென்று அளவில்-எ-று. (௧)

மக்களுணர்வைக்கொடு மதித்துணரவற்றே
முக்கணிறைவற்கடிமை பூண்டவர்தரிக்கு
மக்கமணியின்பெருமை யற்புதமிதென்னாத்
தொக்கமுனிவர்க்குமுனி சூதனுரைசெய்தான்

(இ-பு.) மனிதர்கள் உணர்ச்சியினால் மதித்து அறியத்தக்கதோ மூன்று திருநேத்திரங்களையுடைய பரமசிவனுக்கு அடிமைத்தன்மை பூண்டவர்கள் தரிக்கும் ருத்திராக்ஷத்தினது பெருமை அற்புதமானதென்று சூதமுனிவர் கூட்டமாக இருக்கும் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொன்னார்-எ-று. (௨)

எத்தகையரேனுமிழி வெய்துதொழில்செய்யு
மத்தகையரேனுமுமை யன்பனைவழுத்துஞ்
சித்தமிலரேனுமிறை சீர்மணிதரிக்கின்
முத்தரவரெனமறை முற்றுமுரைசெய்யும்

(இ-பு.) எத்தன்மையுடையவர்களானாலும் இழிவானதொழில்செய்யுந் தன்மையுடையவர்களேயானாலும் பார்வதிநேசனைத் துதிசெய்யுஞ் சித்தமில்லாதவர்களேயானாலும் பரமசிவனுடையசிறப்புள்ளருத்திராக்ஷம் தரிப்பார்களானால் அவர்கள் சீவன்முத்தர்களென்று வேதங்களெல்லாஞ்சொல்லுகின்றது-எ-று. (௩)

நம்பரமனின்பய னந்தனிலுதித்தே
யும்பர்புகழக்கமணி பூணுமறிவுள்ளோர்
சம்புவியிடத்தில்வரு பாவமுமறுத்தே
செம்பொனுலகத்தரனை யொத்தினிதுசேர்வார்

(இ-பு.) நமது கடவுளுடைய திருநேத்திரங்களினின்றும் உண்டாகித் தேவர்களால்புகழப்பட்ட ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொள்ளும் விவேகமுள்ளவர்கள் இவ்வுலகில் நேரிடும் பாவங்களையெல்லாம் நீக்கித் தேவருலகத்தில் சிவனையொத்து இனிதிற்சேர்வார்கள்-எ-று. (௪)

என்கொனதிபற்பல வெதிர்ந்தடைவின்மூழ்க
லென்கொல்பரிவேள்விமுத லியாவையுமியற்ற
லென்கொலெழுகோடிவித மந்திரமுமெண்ண
லென்கொறவமென்றனலை ந்திடையிருத்தல்

(இ-பு.) பலபல நதிகளிற்சென்று மூழ்குவதினாலென்னபலன் அசுவமேதமுதலாகிய யாகங்கள் செய்வதினாலென்னபலன் சப்தகோடிமகா மந்திரங்களைச்செபித்தலினாலென்னபலன் தவமென்று பஞ்சாக்கினிமத்தியிலிருப்பதினாலென்னபலன்-எ-று. (௫)

இத்தனையுநல்குபலம் யாததனிலென்கூ
றொத்தபலநல்குவது ருத்திரவிழிப்பேர்
சுத்தமணியென்றறிய தொல்லைமுனிவோராம்
வித்தகர்தரிப்பரிதில் வேறுபொருளுண்டோ

(இ-பு.) நதிகளில் மூழ்குவது முதலாகச் சொல்லப்பட்ட இவைகளெல்லாம் கொடுக்கும் பலனையாதோ அதனினும் எட்டுப்பங்கு அதிகமாகக்கொடுக்கத்தக்கது உருத்திராட்சமென்னும் பெயருள்ள நல்லமணியென்று தவத்துக்குரிய புராதனமுனிவர்களாகிய ஞானவான்கள் தரித்துக் கொள்வார்கள் (ஆதலால்) அந்தமணியினுஞ் சிறந்தபொருள் வேறொன்றுண்டோ இல்லை-எ-று. (௬)

வேறு.

ஆயமாமணியோராயிரம் பூணுதிடவல்லார்
மாயனும்முதன்புரந்தரன் வானவர்முதலோர்
பாயுமால்விடைப் பரனெனப்பணிகுவரென்றுற்
றாயமாமணியிலைந் தவர்மனிதரோசொல்வீர்

(இ-பு.) அத்தன்மையுள்ள உருத்திராட்சமணி ஆயிரம் அணிந்துகொள்வார்களானால் அவர்களை-விஷ்ணு-பிரமன்-தேவேந்திரன்-தேவர்கள்முதலானவர்கள் தாவிச்செல்லும் ரிஷபவாகனருடனாகிய பரமசிவனென்றுகருதி வணங்குவார்களென்றும் அந்தமணியைத்தரித்துக்கொள்ளுகின்றவர்கள் மனிதர்களோ சொல்லுங்கள்-எ-று. (௭)

கடவுண்மணிசிரத்தினுங்காதினுங்களத்தும்
படருமார்பினுந் தோளினுங்கரினும்பருத்து
மிடையுநல்விரலங் குட்டமதனிலும்விளங்க
வடைவினாற்றரித் தணிபவர்சிவபதமடைவார்

(இ-பு.) அந்தவுருத்திராட்சமணியைச் சிரசினிடத்திலும் காதுகளினிடத்தும் கண்டத்தினிடத்திலும் மார்பினிடத்திலும் தோள்களினிடத்திலும் கைகளினிடத்தும் அந்தந்த இடங்களில் தரிக்கவேண்டிய தொகைப்படி உத்தமமான்மைதங்கிய அங்குஷ்டவிரலிலும் அணியவேண்டியகிரமத்தையறிந்து தரித்துக் கொள்ளுகின்றவர்கள் சிவபதம் அடைவார்கள்-எ-று. (௮)

பொங்குமாணிக்கமாதியமணியொடுபுணர்த்தித்
தங்கமாயறுதகட்டி னிற்குயின்றனவலத்தி

னங்கண்மாகிலத்தர னக்கமணியினையணிவார்
பங்கயப்பதந்தொழுபவர் பவக்கடல்படியார்

(இ-பு.) விளங்குகின்ற மாணிக்கமுதலாகிய ரத்தினங்களுடன்சேர்த்துத் தங்கத்தகட்டினாற்செய்யப்பட்ட ஆபரணம்போல உருத்திராட்சமணியை இவ்வுலகத்தில் தரித்துக்கொள்ளுகின்றவர்களுடைய திருவடித்தாமரைகளைத் தொழுகின்றவர்கள் ஜெனனசாகரத்தில் அழுந்தார்கள்-எ-று. (௯)

அரனிடத்திலன் பற்றவராவனக்கமணியுந்
திருவெண்ணீறுமெய் தரிக்கிலாப்பாதகச்சிரேட
ருரியவஞ்செழுத்துணர் கிலாகீசர்பேருலகிற்
சாமெனக்குனா குமலிதாலெனப்பவங்கழிப்பார்.

(இ-பு.) பரமசிவனிடத்தில் அன்பில்லாதவர்களும் உருத்திராட்சமும் விபூதியுந் தங்கள்சரீரத்தில் தரித்துக்கொள்ளாதவர்களாகிய மூடப்பாவிகளும் மோட்சம்அடைவதற்குரிய பஞ்சாட்சரத்தை அறியாத அன்னையுள்ளவர்களும் இந்தப்பெரியவுலகத்தில் கழுதையாகவும் குனாக்குமாயாகவும்பிறந்தும் இறந்தும் ஜெனனத்தைக்கழிப்பார்கள்-எ-று. (௰)

இந்துசேகரன் மணியக்கவலத்திலேற்று
மந்திரந்தருபலத்தை யித்துணையெனமதித்துப்
புந்தியாற்றெரிந் துணர்வதாம்புனலிடைப்படிவோர்க்
கந்தமணிப்படு புனல்சிவகங்கையாமால்

(இ-பு.) சந்திரனைத் திருமுடியில்அணிந்தருளிய பரமசிவனுடைய மணியாகிய உருத்திராட்சவடத்தினால் செபிக்கத்தக்க மந்திரந்தருகின்ற பலனை இவ்வளவெனமதித்துப் புத்தியினால்தெளிந்து அறிகின்றவர்கள் யாவர் நீரில்முழுகுமவர்களுக்கு உருத்திராட்சத்தில் படும்நீர் சிவகங்கைத்தீர்த்தமாம்-எ-று. (௰௧)

என்னுமோர்முக மதியாயிரமுகமு
நன்னுநன் மணிய தியிலோர்மணியினைநாடி
புண்ணியோர்கடோம் பூசனைமுறையினிற்புரியிற்
றெண்ணிலாமதி வேணியான்பூசையிற்சிறக்கு

(இ-பு.) என்னுகின்ற ஒருமுகமுதலாகப் பதினொன்றுமுகமும்பொருந்தியிருக்கும் அம்மணிகளில் ஒருமணியினைக்கருதிப் புண்ணியவான்கள்முறைமையுடன் பூசைசெய்தால் தெளிவாகியசில்வினையுடைய பிறைமதியணிந்த பரமசிவன் பூசையாகவே சிறக்கும்-எ-று. (௰௨)

இன்னதன்மையமணியின இயல்பெலாமெடுத்துப்
பன்னியோதிடிற்பங்கயன் முதலினோர்க்கமையா
தென்னில்யாவரேயதனிலே விளம்புவாரெனினு
முன்னமந்தமாமணியினு னிகழ்ந்தமைமொழிவாம்

(இ-பு.) இத்தன்மையுள்ள உருத்திராக்ஷத்தின் பெருமைகளையெல்லாம் எடுத்து விவரமாகச் சொன்னால் பிரமன் முதலானவர்களுக்கும் அமையாதென்றால் மற்றையாவர் அதன் பெருமையைச்சொல்லத்தக்கவர்கள் ஆயினும் இந்த ருத்திராக்ஷத்தினால் ஆதியில் நடந்த சரித்திரத்தைச்சொல்லுகிறோம்-எ-று. (௰௩)

இல்குமாங்குயிலொளித் திடமயிலினமுவப்ப
வல்சநீர்ந்திடமழை முகிலறாதினம்பொழிந்து
மல்கு செழுங்காச்மீரத்துக்குமன்னன்
பல்கு சேனையான்பத்திர சேனனென்பவனே

(இ-பு.) மாமரத்திலிருக்குங் குயில்கள் சோர்வடைந்து ஒளிக்கவும் மயிற்கூட்டங்கள் சந்தோஷிக்கவும் குறைவுகள் நீங்கவும் மேகங்கள் அநுதினமும்பொழிந்து நிறைந்த சீர்தங்கிய காஸ்மீர தேசத்துக்கு அரசனும்மிகுந்த சேனையையுடையவனுமாகியபத்திர சேனனென்பவன்-எ-று.

கொற்றமன்னவனளித் திடுமாசிலாங்குமரன்
செற்றநீங்குசுற்றரும னென்றுரைத்திடுஞ்சேயுங்
கற்றபேரமைச்சன தருகாளை தாருகனு
முற்றவேதநான்முதலி யகலையெலாமுணர்ந்தார்

(இ-பு.) வெற்றியுள்ள இவ்வரசன் பெற்றருளிய இளவரசாகிய குற்றம் நீங்கிய தருமனென்று சொல்லப்பட்ட புத்திரனும் கற்றுணர்ந்த மந்திரிபெற்ற புத்திரனாகிய தாருகனென்னும் பெயரையுடையவீரனும் வேதசாஸ்திரமுதலாகிய கல்விகள்முழுவதும் ஓதியுணர்ந்தார்கள்-எ-று. ()

அரசநீதியிற்படைக் கலவிஞ்சையினமையும்
பொருவிலாவருச்செல்வமிளமையும்பொற்புந்
தருமநீர்மைமுங்கருணையுந் தயாவொடுமொன்பு
மிருவர்க்குமிகவேதிருவிலத் திலேபெரவளர்ந்தார்

(இ-பு.) இந்தப்புத்திரர்கள் உருவத்தினால் இரண்டுபேராகக் காணப்பட்டாலும் ராசநீதியும் தனுர்வேதப் பயிற்சியும் ஒப்பில்லாத உருவமும் ஆயுசும் இளமையும் அழகும் தருமமும் ஞானமும் கிருபையும் தயாளமும் மாட்சியும் ஆகிய இவைகளில் வேற்றுமையில்லையென்னும்படி வளர்ந்தார்கள்-எ-று. இவ்விதகுணாதிசயங்களுடன் ஏகோமுகமாயிருப்

பவர்கள் இவ்வுலகத்தில் வேறொருவரு மில்லை யென்னும்படியிருந்தார்கள் என்று சொல்லிறு மையும் (௰௬)

அன்னமைந்தர்க ளிருவருஞ்சிலைசேப் பதிய
மின்னுமன்மணிக்கலன் களுஞ்சினைத்துஞ்சாந்தும்
பொன்னின்மேனியிற் புனையலாகிவெண்பொடி
மன்னுமக்கமணி வருமெழுற்றுப் வினந்தார்

(இ-பு) அத்தன்மையுள்ள புத்திரர்களிருவருஞ் சிலையினளவு அறியப்படாத பிரகாசிக்கும் நல்லரத்தினுபரணங்களும் வாசனை தங்கிய சந்தனமும் சௌந்தரியமுள்ள தங்கள் சரீரத்தில் தரித்துக்கொள்ளாதவர்களாய்விபூதியும் விலைபெற்றதாகிய ருத்திராக்ஷமுமே சரீரமுழுவதும் அணிந்துகொண்டார்கள்-எ-று, (௰௭)

அந்தமன்னனு மமைச்சனுமரிதினிலீன்ற
கந்தமைந்தரைத் தனித்தனியமைத்தினிதுரைத்து
கந்தநல்விரைத் தேய்வைகள்சலன்பலவளிக்க
புந்திவைத்திலர் மருத்தனர்பொருவருநிலையர்

(இ-பு) அவ்வரசனும் மந்திரியும் அருமையாகப்பெற்ற தங்கள் தங்கள் புத்திரர்களைத் தனித்தனியாக அழைத்து இனிதானவசனங்கள்சொல்லி வாசனை பொருந்திய நல்ல கூட்டுவாக்குஞ் சேர்த்த சந்தனமும் ஆபரணங்களுங்கொடுத்து(தரித்துச்கொள்ளச்சொன்னார்கள்) ஒப்புச்சொல்லுதற்கரியவர்களாகிய அந்தப்புத்திரர்கள் அவைகளில் விருப்பமுவையாமல் மறுத்துவிட்டார்கள்-எ-று. (௰௮)

பாலினன்ன மொழுகிடும்பருவத்திலாங்கண்
ஞாலமெங்கணும் பராசரனெனப்பெயர்கொளுஞ்
சீலமாதவனெய்தலுஞ் சென்றெதிர்கொண்டு
மேலவேதகும்பூசக ளியற்றினனிறைவா

(இ-பு) அந்தப் புத்திரர்கள் இவ்வாறு நடக்கும் நாளில் ஒருநாள் உலகமெங்கும் பராசரரென்று சொல்லும் பெயருள்ள தவசிலாகிய முனிவரவரும் அந்தராசன் எதிர்கொண்டுசென்று பணிந்து அவர் மனதுக்குச்சந்தோஷ முண்டாகும்படி தகுதியுள்ள பூசைசெய்தான்-எ-று, (௰௯)

அனையமாமுனி மனமகிழ்ந்தாசிகளியம்பக்
கனகவாசனத்தி ருத்துபுகாவலனிறைஞ்சி
யெனதுமைந்தனுமமைச்சர் சேனமுந்துமெல்லையிப்
பனகமாமணி குயிற்றியபணிவெலாமிகழ்ந்தே

(இ-பு) அந்தப்பராசரமுனிவர் மனமகிழ்ந்து ஆசீர்வசனஞ்சொல்ல அரசனானவன் அந்தமுனிவரைப் பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருக்

கச்செய்து பணிந்து என்புத்திரனும் மந்திரி குமாரனும் ஒருவரைவிட்டொருவர்பிரியாத சிநேகமுள்ளவர்களாய் நாகரத்தினம்பதித்த ஆபரணமுதலானபல ஆபரணங்களையிகழ்ந்து-எ-று, (௨௰)

கைகொடுந்தொடார்கண் கொடுபார்த்திடார்கடிந்து
தூய்யபூதியுஞ்சிவ னக்கமணிபுமேதுலங்கு
மெய்யெலாமணிந் திருந்தவர்வினையமேதறியேன்
ஐயனேயெனக்குரை யெனவருந்தவன்கேளா

(இ-பு) அந்த ஆபரணங்களைக் கையினால்தொடாதவர்களாயும் கண்ணால் பாராதவர்களாயும் நீக்கிவிட்டுப் புனிதமாகியவிபூதியும் உருத்திராட்சங்களுமே சரீரத்தில்பிரகாசிக்கும்படி தரித்துக்கொண்டிருக்கிறார்கள் அதன்காரணமின்னதென்று அடியேன் அறிந்திலேன் ஐயனேயெனக்குச்சொல்லுமென் அந்தவார்த்தையைப் பராசரமுனிவர்கேட்டு-எ-று, ()

மண்டுதீப்பவமா கடந்தவென்மனனுவரோறே
பண்டிவர்க்குறு பிறவியிற்பழகியதொடர்பே
கொண்டடைந்தவிப் பிறப்பினுமகிலைகொண்டா
ருண்டுமற்றதன வான்முறைகேளெனவுரைத்தான்

(இ-பு.) எதிரேற்றவருகின்ற பலகவருடையபோரைகடந்தவேலாயுதத்தையுடைய ராசசிங்கமே பூர்வ மிவர்களுக்குப்பொருந்திய பிறப்பில் பழகிய தொடர்ச்சியைக்கொண்டு இப்போதுவந்த பிறப்பிலும அந்தப்பழக்கத்தை விடாமலிருக்கின்றார்கள் அதற்கொருகாரணமுண்டுஅந்தக்கிரமத்தைக்கேளென்று சொல்லுகின்றார்-எ-று. (௨௨)

மாடமாளிகைக் குடுமியின்முகிறவழ்மனைமி
லாடரங்கினி லார்ந்தபொற்கொடிக்குழாமாட
லோடுமாமதிக் களறுடைத்திடுவபோலொளிருங்
கோடில்சீர்த்திகொள் பெரும்பதிவளநந்திக்கிராமம்

(இ-பு.) மாளிகைகளின் உச்சியிலும் மேகந்தவழ்கின்றவீடுகளிலும் நாடகசாலைகளிலும் கட்டியிராநின்ற பொற்கொடிகூட்டம்மேலசைதலுடன் ஆகாயத்திற்செல்லுகின்ற சந்திரனுடையகளங்கத்தைத் துடைப்பதுபோல பிரகாசித்துக்கொண்டிராநின்ற கெடுதலில்லாத சிறப்பினையுடைய பெரும்பதியான வளப்பம்பொருந்திய நந்திக்கிராமமென்றொரு நகரமுண்டு-எ-று. (௨௩)

அப்பெரும்பதி தன்னின்மானத்தையென்றதையுந்
தப்பெனச்சிவந் தொளிர்கனிவாயிளந்தோகை
யொப்பருந்தலப் பொதுமகளொருவியர்நீட்டுந்
துப்பெத்துருவா ருயிர்பெற்றெனச்சிறந்தாள்

(இ-பு.) அந்தப் பெரியநகரத்தில் மாளிகையென்னும் பெயரினையுடைய பவளம்போலச் சிவந்துபிரகாசிக்கும் வாயினையுடைய வளாய்த்த போபலத்தையுடைய ஒருகணிகை சித்திரக்காரர்எழுதும் இவ்வியமான சித்திரமானது உயிர்பெற்றிருப்பதுபோல அழகிற்சிறந்தவள்-எ-று (உ௪)

மேவுபொன்மனை முன்றில்வாய்வெள்ளிடையின்றாய்
வாவுமாப்படை வேந்தர்தமைந்தரு மதிநூற்
காவன்மந்திரக் கிழவர்தங்காண்முளைவருந்
தாவுநாணிலி வெட்டியர்குமாருந்தொகுவார்

(இ-பு.) யாவரும் விரும்பத்தக்க பொன்மயமான அவள் வீட்டின் முன்றிலினிடத்து வெளியில்லாமல் தாவிச்செல்லுங் குதிரைப்படைமுதலாகிய படைகளையுடைய ராசகுமாரர்களும் மந்திராலோசனைக்குரிய சாஸ்திரங்கள் கற்றுணர்ந்த மந்திரிகளுடைய புத்திரர்களும் மிகுந்த திரவியங்கள்கொடுக்கத்தக்க வசியபுத்திரர்களும் கூட்டமாகச்சேர்ந்திருப்பார்கள்-எ-று (உ௫)

நீணிதிப்பெரு வளமையிற்பெண்மையின்மேற்
காணவதோர் திருமகளிவளெனக்கவினு
மாணிழைக்கொரு கங்குலின்மருவுமாசளித்தா
லாணிதீர்ந்தபொன் னுயிரக்கழஞ்செனவறைவார்

(இ-பு.) மிகுதியாகிய திரவியமுள்ள வளப்பத்தினாலும் பெண்தன்மையினாலும் பூலோகத்தில் எல்லாரும்பார்க்கும்படி வந்திருக்குந்திருமகளே யிவளென்றுசொல்லத்தக்க சௌந்தரியமுள்ள அந்தக் கணிகைமாதுக்கு ஒருராத்திரி வருகின்றவர்கள்கொடுக்குங்கூலியாணிவைத்து மாற்றுப்பார்க்கவேண்டுவதல்லாத உயர்ந்தபொன் தொகை ஆயிரங்கழஞ்சென்றுசொல்லுவார்கள்-எ-று, ஒருகழஞ்சு-பத்துபணவிடை (உ௬)

நாளுமன்னவ ளாறுமலர்விதிமுறைதூவி
வளைவென்றகண் விமலனைவழிபடும்வேட
மாளுமன்பரை யாமெனவருளொடுபணியுங்
கோளெதிர்ந்தெதிர் வறியவரிரவலர்கொடுக்கும்

(இ-பு.) அத்தன்மையுடையவள் நாள்தோறும் வாசனைதங்கிய மலர்களால் ஆகமவிதிப்படிஅருச்சித்து மன்மதனைவென்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை ஆராதனைசெய்யும் திருவேடமுடைய அன்பர்களைக்கண்டு சிவமென உள்ளமுருகி வந்தனைசெய்வாள் இதுவுமன்றிக குற்றமீங்கிய தரித்திரர்கள் யாசகர்வந்தால் இவர்களுக்குத் திரவியங்கொடுப்பாள்-எ-று (உ௭)

அறிவுகொண்டபேர் பொதுமகளுடலினரங்கிற்
பொறிகொள்சேவலும வானரக்குழவியும்பொருந்தத்
தறியினிற்பிணித்த ரசக்கமணிபுனைதாமஞ்
செறிவுறுத்தவை யிரண்டுக்குமெழில்பெறச்சேர்த்து

(இ-பு.) மெய்யறிவு உடையவளாயுயர்ந்த அந்தக் கணிகையானவள் நடனஞ்செய்யும் நாடகசாலையிற் புள்ளிகள்பொருந்தியசேவலும்வானரக்குட்டியும்பொருந்தத் தூணிற்கட்டி உருத்திராட்சமணிகள்கோத்தமாலைகளை அவ்விரண்டுக்கும் அழகுபெறத்தரித்து-எ-று, (உ௮)

வேறு,

வானரமுடன்பழகி வாரணநடித்தல்
கானமார்கரும்குழலி தோழியரொடுங்கண்
டானனம்வியர்ப்பநகை செய்துவிளையாடித்
தானினதயர்ந்துபல நாளுமனிசார்வாள்

(இ-பு.) வானரக்குட்டியுடன்பழகிக் கோழிநடிப்பதை வாசனைதங்கிய கரியஅளகத்தையுடையவள் தோழிகளுடன்பார்த்து முகம்வேர்க்கும்படி நகைசெய்து விளையாடி யினிதாகஅமர்ந்து நாள்தோறும் அதனிடத்தில் தலைவைத்திருந்தாள்-எ-று (உ௯)

இன்னணநிகழ்ந்திட விருந்தவண்மனைக்கண்
மின்னுசடிலப்பகவர் வேடநனிமேவிப்
பொன்னினுபர்பூதியொடு மக்கமணிபூணு
மன்னினன்மணிக்கடக முன்கைவணிகேசன்

(இ-பு,) இவ்வாறு நடக்கும்படியிருந்தவள் வீட்டினிடத்தில் பிரகாசியாநின்ற சடாமகுடத்தையுடைய முனிவர்வேடங்குறைவில்லாமற்பொருந்திப் பொன்னினுஞ்சிறந்தவிபூதியும் ருத்திராட்சமுந்தரித்துக்கொண்டு ரத்தினகடகம்பொருந்திய முன்கைகளையுடைய வைசியத்தலைவனாகிய ஒருவனவந்தான்-எ-று, (௩௰)

கண்டனளெழுந்தனள் கலாமதிமுடித்தோன்
றொண்டனிவனென்றமுறை யோடுதொழுதேந்தாய்
மண்டலமதிக்கவட னிட்டுமணிதுற்றிக்
கொண்டகடகத்தின்விலை கூறுணரவென்றாள்

(இ-பு,) மானங்கையெனபவள்கண்டு எழுந்து இளம்பிறைசூடிய சாம்பசிவமூர்த்தியினுடைய அடியாரிலொன்று முறைமையுடன்பணிந்து பூசைசெய்து இவ்வுலகத்தையெல்லாம்விலையாகமதிக்கும்படி பொருந்திய உன்னிறைவனே இவ்வுலகத்தையெல்லாம் விலையாகமதிக்கும்படிபொருந்திய ரத்தினகடகத்தினை நகைதட்டு மணிபதித்து அணிந்துகொண்டிருக்கும்ரத்தின கடகத்தின் விலையாதோ எனக்குத் தெரியச்சொல்லென்றாள்-எ-று, (௩௧)

சந்திரனெனத்திகழ் தனிக்குடைநிழற்கீழ்
வந்தமன்னர்முன்கையின் மணிக்கடகமியாவு
மிந்தவயிரக்கடக மொப்பதலவென்றுக்
குந்தநகைவல்லிகவர் வேட்கையொடுகூற

(இ-பு.) சந்திரனைப்போல விளங்குகின்ற ஒப்பற்ற குடையின்கீழவருகின்ற மன்னவர்முன்கையில் அணிந்திருக்கும் ரத்தினகடகங்களெல்லாம் இந்தவயிரமணிக்கடகத்தை ஒப்பாகாதென்று இறகின் குருத்தைப் போன்ற நகையையுடையாள் வாங்கிக்கொள்ளும் விருப்பத்துடன்சொல்ல-எ-று. (௩௨)

வல்லியுரைசெய்தது மனத்துணர்குறிப்பு
நல்லவனுணர்ந்துநகை யாடிமடநல்லா
யெல்லொளிமணிக்கடக மின்னவிலையென்னச்
சொலவுவனதற்குநிதி யீதறுணிவாயோ

(இ-பு.) அதற்கு அவள்சொல்லியதும் மனதில் எண்ணிய குறிப்பும் வாதலைவியன் அறிந்துகொண்டு நகைசெய்து பெண்ணே சூரியனைப்போலப்பிரகாசிக்கும் இந்தரத்தினகடகம் இன்னவிலையென்றுசொல்லுகிறேன் நீஅதற்குப்பொருள்கொடுக்கத் துணியமாட்டாயோ-எ-று (௩௩)

என்றவையுரைத்தது மிலங்கிழையியம்புங்
குன்றனையதோள்வணிக கொங்கைவிலைகூறும்
புன்றொழிலினார்கள்பொருள் கொண்டுபொருணல்கி
னன்றவர்கள்பெண்மையவர் நன்னலமுமன்றே

(இ-பு) இவ்வாறுவைசியன்சொல்ல மானந்தைசொல்லுகிறாள் மலைபோன்ற புசங்களையுடைய வணிகேசனே தனங்களைவிலைக்குவிற்கும்புன்றொழிலையுடையவர்கள் ஒருபொருளைவாங்கிக்கொண்டு அதற்குவிலையாகத்திரவியங்கொடுத்தால் அந்தப்பெண்களுடைய பெண்மையும் இன்பமும் நன்றேயாகும்-எ-று, (௩௪)

வாழ்பொதுநலக்கணி கைமார்நெடுமாயன்
வீழ்தருகவுத்துவமும் விற்குநரெனிற்றாற்
றாழ்கலவியிற்றழுவி யேகவர்வதல்லாற்
சூழ்நிதிவிலைக்குதவ றேல்வுலகிலுண்டோ

(இ-பு.) வாழ்கின்ற யாவர்க்கும் பொதுவாகிய இன்பத்தையுடைய கணிகைமாதர்கள் மாயன்விரும்புகின்ற கவுத்துவமணியே யானாலும்விற்பவர்கள் கொண்டுவந்தால் தங்கியபுணர்ச்சியினால் தழுவி வாங்கிக்கொள்ளுவதல்லது திரவியம் விலைகொடுப்பது பழமையாகிய இவ்வுலகத்திலுண்டோ இல்லை-எ-று. (௩௫)

அன்பினொடுகங்கண மெனக்கைதனிலிட்டான்
முன்பதினமூன்றுன நாளெல்லைமடவாளி
னின்பமுறமெல்லணையில் யானேவனென்று
மின்பொருவுநுண்ணிடை விளங்கிழையியம்ப

(இ-பு.) இறைவனே அன்புடன் இந்தக்கடகத்தை யென்கையி லிட்டால் மூன்றுநாள்வரைக்கும் முன்சொன்னபடி உனக்கு மனைவியாக இருந்து இன்பம் உண்டாகச் சயனத்தில உன்னை நான் அணைவேனென்று மின்போலத் தெரிந்தும் தெரியாமலுமிருக்கும் நுண்ணிய இடையையுடைய கணிகைசொல்ல-எ-று, (௩௬)

நன்றுரைசெய்தாய் மணிசெய்கடகமீவே
னென்குலமடந்தை யினிசைந்தினமூன்றும்
புன்கணிலையிற்பிறர்கள் போகநுகரேனென்
றின்கனிமொழிக்கணிகை ருளிதியென்றான்

(இ-பு) கணிகைமாதே நன்றாகச்சொன்னாய் இந்தக் கடகத்தை உனக்குக் கொடுக்கிறேன் கொடுத்தால் எனக்குரியமனைவிபோல விருப்பதாக நீ சொன்ன மூன்றுநாளும் சொன்னமொழிதவறி மற்றொருவர் போகத்தை அநுபவிக்கிறதில்லையென்று ஒருசூள்வார்த்தை சொல்லென்றான்-எ-று, (௩௭)

(வேறு,)

புனிதவாணிசன் கூறியமொழிக்கவள்பொருந்தி
மனிதரேயன்றி வாசவன்றனிவன்வரினு
முனிவதன்றியே யணைகலேன்மூன்றுநாள்காறும்
பனிகொள்வேணியெம் பரன்றிருவாணையென்றிசைத்தாள்

(இ-பு.) நின்மலனாகிய அந்தவர்த்தகன் சொல்லிய வார்த்தைக்கு அவள்சம்மதித்து மனிதர்களே யல்லாமல் தேவேந்திரன் இவ்விடத்திலவந்தாலும் இந்தமூன்றுநாள் வரையில் நீக்கிவிடுவேனே யல்லாமல் நானணையேன் குளிர்ச்சிதங்கிய சடைமுடியையுடைய சிவனது ஆணையின்படியென்றுசொன்னாள்-எ-று. (௩௮)

என்றுமானந்தை தனசசவனிருள்கெடவிமைத்து
மின்றுமாமணிக் கடகத்தைவிருப்பொடுநல்கிப்
பின்னுமீதொருமா ணிக்கவிலிங்கமீதேபேணி
யன்னமேபுரந்தெனக் கொடுமளித்தியோவென்றான்

(இ-பு,) என்றுசொல்லிய மானந்தையென்பவளுக்கு வணிகன் இருளைநீங்கத்தக்கதாகப்பிரகாசிக்கும் ரத்தினக்கடகத்தைக் கொடுத்து விருப்பமுடன் அன்னம்போல்பவளே மறுபடி ஒருமாணிக்கலிங்கத்தைக்காட்டி

சுதப்பற்றிரமாக வைத்திருந்து மறுபடி யெனக்குக் கொடுப்பையாகவே ண்டும்-எ-று. (௬௧)

அவ்வகுநீர்மையளன் னதேசெய்வனென்றதனை
வணங்கிவாங்கித்தன் னுடைகவாங்கிஸில்வைத்தே
யிணங்குமாலைவா யிருத்தனுங்கனவண்மார்பிருக்
கிணங்குமாய்ந்தெழுவன முலைச்சுவடுறத்தோய்ந்தாள்

(இ-பு) தெய்வப்பெண்ணையொத்த தன்மையையுடைய மானந்தை யென்பவள் அப்படியே செய்கிறேனென்று சொல்லி வணக்கஞ்செய்து அச் சிவலிங்கத்தை வாங்கிக்கொண்டு தன்னுடைய நாடகசாலையி லிடத்தில் வைத்து மாலைப்பொழுது வந்தவளவில் தன்கணவனாகிய வணிகனுடைய மார்பி ல் தேமலைப்பொருந்தி வளர்ந்திருக்கும் அழகிய தன் தனங்களின் தழும் பு பொருந்தி யழுந்தப் புணர்ந்தாள்-எ-று. (௬௨)

காமவேளுநல் விரதிரமென்னவேசலந்து
ஆமயல்மெய்செக் கையிர்துயில்கொளவுறுநா
ளியாமமெய்திய வேலையிலியழல்கதுவித்
தாமகாலநடியான் னாடகசாலைமுருக்குவானசைமந்தே

(இ-பு) மன்மதனும் ரதியும்போலக் கலந்து வாசனைப்புகை கலந்த சயனத்தில் நித்திரைசெய்யும் அர்த்தராத்திரியான வேளையில் ரத்தினமா லைகள்கட்டிய பொன்னுலாகிய நாடகசாலை வேகும்படி நெருப்பு பற்றிக் கொண்டு-எ-று. (௬௩)

மஞ்சுபோற்றவழ் புகையொடுபுலிங்கங்கண்மலியச்
செஞ்சிகைக்கணைக்க தழேரிபரப்புசெல்லத்
துஞ்சமேல்வைவழி விருவருந்தான்செனைவிழியா
வஞ்சியோடின்ன முஞ்சேவலுமென்ன

(இ-பு) அவர்கள் நித்திரை செய்யும்போது மேகம்போலத் தவழ்கி ன்றபுகையுடன் தீப்பொறிகள் நெருங்கத் தக்கதாகச் சிவந்த சிகைகளை விட்டெழுகின்ற அக்கினியானது அதிவேகமாகப் பற்றிக்கொண்டு மிகமு ழுவதும் எரிக்க அவ்விருவருந் திடுக்கிட்டு நித்திரைநீங்கிப் பெட்டைய ன்னமும் ஆணன்னமும் ஓடுவதுபோலப் பயந்து ஓடினார்கள்-எ-று. (௬௪)

ஓடும்வேலையிலொண் டொடிபொருக்கெனத்திரும்பி
யாடுநாடகசாலையி லிலசன்மண்டபமணிந்த
கோடுவாழ்சிறு குரங்கொடுசெஞ்சிறைக்கோழி
சேடுவ்வனைவ கண்டுபிணியினை நெகிழ்த்தாள்

(இ-பு) அவ்வாறு ஓடும்போது மானந்தையென்பவள் விரைவில் தி ரும்பி நிர்த்தனஞ்செய்யும் நாடகசாலையில் ருத்திராக்ஷந் தரிக்கப்பட்ட

குரங்குக்குட்டியினையும் சிவந்த உச்சிக்கொண்டையையுடைய கோழியி னையுந்தேடிக்கண்டு கட்டியிருந்தகயிற்றை அவிழ்த்து விட்டாள்-எ-று. (௬௫)

கோடுவாழ் மரக்கொம்புகளிற் சஞ்சரிக்குங் குரங்கு
பிணிநெகிழ்த்தலுங் குரங்குமச்சேவலும்பெயர்ந்து
கணவெறிக்குழாங்க ளுறுமெல்லையைக்கடந்த
வணிகனல்கிய வவிரொளிமாணிக்கலிங்க
முணருமுன்னமே நீறெழவெந்தொழிந்ததுவே

(இ-பு) கட்டவிழ்த்து விட்டமாத்திரத்தில் குரங்குங் கோழியும்ப றந்துகொண்டெரியுங் கட்டமாகிய நெருப்பிடத்தைவிட்டு அப்புற ம்போய்விட்டதுகள் அந்தவர்த்தகன்கொடுத்த மாணிக்கலிங்கமானது ம னத்தைக்கு ஞாபகம்வருவதற்குமுன் வெந்துநீறாய்விட்டது-எ-று. (௬௬)

தூமவேகத்தின் றன்னதுகண்டதொல்வணிக
னாரிகாண்டிபோ நான்றருசிவலிங்கநாதன்
மூரிவெங்கனன் முருகிடச்சாம்பரயமுடியக்
தீருமின்றுடன் வாழ்வெனத்துயரொடுசெப்ப

(இ-பு) தூரமாகப்போய்நின்ற வர்த்தகன் மாணிக்கலிங்கம் வெ ந்துபோனதைப்பார்த்துப்பெண்ணே நான்உன்கையிற்கொடுத்த சிவலிங்க ப்பெருமான் மல்முள்ளதாகிய நெருப்பு பற்றியதலால்வெந்து சாம்ப லாய் விட்டதைக் கண்டனையோ ஆதலால் என்வாழ்நாள் இன்றோடிந்து விடுமென்று துயரத்துடன்சொன்னான்-எ-று. (௬௭)

இறைவளைக்கையா ளினைமுலைக்குவட்டிடையேற்றி
மறுகினாப்பனேசங் காவென்றுவாய்விட்டுக்
கறைதரித்தவேற் கண்ணினீர்களுழியாயொழுக
வறிவழிந்தவளாற்றலும்வணிகனுமறைவான்

(இ-பு) அதைக்கேட்ட மானந்தையானவள் வளையலணிந்தகைகளா ல் இரண்டுதனத்தினமேலும் அடித்துக்கொண்டு துயரமுற்று சம்பனே சங்கரனேயென்று வாய்திறந்து உதிரம்படியத் தக்கவேல்போன்ற கண் களில் ஆறுபோல நீர் பெருகும்படி அழுது அறிவழிந்து சோர்ந்து விட் டாள் அதைக்கண்டவணிகன் சொல்லுகிறான்-எ-று. (௬௮)

காந்துவார்குழற் புணர்முலைநறுமலர்க்கொம்பே
யிரங்கலெம்மனோ ரித்தியர்வரினுயிர்க்கிரங்கா
ராங்கிலேன்சிவ லிங்கம்வெந்தடலைபாய்விடுமேர்
புரந்தராதியர் விலக்கினிமழுலினடப்புகுவேன்

(இ-பு) மயிர்ச்சாந்தணிந்த நீண்ட அளகத்தையும்நெருங்கிய தனங் களையுமுடைய நறியபூங்கொம்புபோல்பவளே நீ துயரப்படவேண்டாம்

வர்போலிருக்கு இவ்விததுன்பம் நேரிட்டால் (உயிரைவிட்டு விடுவார்களே யல்லாமல் அதையெப்படி விடுகிறதென்று)இரங்கார்கள் நாடகசாலையில்வைத்த என்சிவலிங்கம்வெந்து சாம்பலாய் விடுமானால்தேவேந்திரன்முதலானவர்கள்வந்து விலக்கினாலுந்தீயில்விழுந்துவிடுவேன்-எ-று, ()

மற்றுநீயொன்று நினைகலைபனவிடைமடிய
பற்றமிந்தன மடுக்கியேபடுகனல்வளர்க்கக்
கற்றைபங்குழன் மடந்தைநீபணியெனக்கழறச்
சிற்றிடைக்கொடி புருமூவீழாவெனத்திகைய

(இ-பு) நீ வேறென்றும் நினைக்காதே தீயில்விழுந்து நானிறப்பதற்கு உலர்ந்தவிறகுகளை யடுக்கி எரியத்தீயை மூட்டும்படி நெருங்கிய அளகத்தையுடையவளே நீஉத்தரவுசெய்யென்று வணிகன்சொல்லச் சிறிய இடையையுடையவளாய்க் கொடிபோன்றமானத்தைதிகைத்து-எ-று, (௪௮)

வேண்டுநீணிதி யளிக்குவன்வேதியர்க்கர்ப்பிப்
பூண்டமாவிரதத் தையும்வழுவறப்போற்றி
யாண்டகைப்பெரு வணிகநீயழல்புகும்வண்ண
மீண்டுதீதகற்ற வாலியற்றுதியென்றான்

(இ-பு) யாதொன்றுக்கும் அஞ்சாத நிலைமையையுடைய வணிகேசனே வேண்டியதிரவியங்கள்கொடுக்கிறேன் பிராமணர்களுக்குக்கொடுத்துச்செய்யபத்தக்கவிரதங்களையும் பழுதறச்செய்து இப்போது நீ தீயில்விழும்படி நேரிட்ட குற்றம் நீங்கத்தக்கதாகப் பெரியோர்களைக்கொண்டு பிராயச்சித்தஞ் செய்யென்றாள்-எ-று. (௪௯)

நிலம்பொறுக்கலாச்செம் பொன்னிறைகுடிப்பிறந்தேன்
கலம்பொறுக்கலாது சுப்பிறுய்வறியர்போற்கருதிக்
குலம்பொறுக்கலாவிழிந் தசொற்கூறுதறவிர்ந்து
தலம்பொறுக்கலாக்கத மெரிவளர்த்திடச்சமைவாய்

(இ-பு) பூமியுந் தாங்கமாட்டாத மிகுந்தபொன்னையுடையகுடியிற்பிறந்தேன் ஆபரணங்களைத் தாங்கமாட்டாதநுண்ணியஇடையையுடையவளே நீஎன்னை வறுமையாளர்போலநினைத்து எங்கள்குலம்பொறுக்காத இழிவானவார்த்தை சொல்லுவதைவிட்டு இவ்வுலகத்தார் பார்த்துச் சகிக்கக்கூடாததான வேகமுள்ள தீமூட்டுவாயாகவென்று வணிகன் சொன்னான்-எ-று, (௫௰)

என்றுசிறியகடுசொலால் வணிகர்கோனிசைப்பக்
குன்றுபோலுயர் கொங்கையாண் மறுப்பதுகொளாது
பொன்றுவானென்று பொருக்கெனச்சிலதரைக்கூவித்
துன்றுகாழுவர் படுத்தியற்றுமினென்றாள்

(இ-பு) இவ்வாறுகோபித்துச் சுடுசொல்லினால் வணிகேசவன்சொலவே பொன்மலைபோல்வளர்ந்த தனத்தையுடைய மானத்தையானவள் தான்தடுப்பதை யொத்துக்கொள்ளாமல் இறந்து போவானென்று நிச்சயித்துக்கொண்டு ஏவலாளிகளை அழைத்து விறகுகளிட்டு விரைவாகத்தீமூட்டுங்களென்றாள்-எ-று, (௫௧)

சிலதர்மானதை பணியினைத்தலைக்கொடுசென்றுங்
வலகிலாத்துவ மடுக்கினராழல்கொளுவி
யிலகுபோழற்சிகை யெழவிழுதுபெய்குழிசி
பலவும்வீசினரொழுக்கது கொழுங்கனற்படலம்

(இ-பு.) அந்தவலாளிகள் மானத்தை கட்டளையிட்டவார்த்தையைச் சிரசில்வகித்துக்கொண்டுபோய் அளவில்லாத விறகுகள் அடுக்கித்தீமூட்டி குடங்குடமாக நெய்யை ஊற்றினார்கள்அடித்தீச்சிகை மேலோங்கும்படி ஊற்றின அளவில் கொடியதீயானது (கற்றைகற்றையாகச்சிகைவிட்டுக்கொண்டு மேலோங்கிவளர்ந்தது-எ-று, (௫௨)

கண்டதாபதவணிகர் கோன்கடிபுனன்மூழ்கி
மண்டுதீயினைமும் முறைவலஞ்செய்துவணங்கித்
துண்டவான்பிறை மௌலியான்றிருவடிதொழுதே
யண்டகூடமட் டாவொலியெழவனற்குளித்தான்

(இ-பு,) அதைக்கண்ட வணிகமுனிவன் வாசனைதங்கிய நீரில் ஸ்நானஞ்செய்துகொழுந்துவிட் டெரியுந் தீயை மூன்று பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி இளம்பிறை யணிந்தருளிய சடா மகுடத்தையுடைய சிவபெருமான்றிருவடிகளைத்தொழுது அண்டகூடவரையில் ஓசையெழும்படி அந்தத்தீயில் மூழ்கினான்-எ-று. (௫௩)

வேறு,

இந்தவாறுகண்டுதுன்ப மெய்தினின்றவேழையும்
பந்தமாயகேளிர்தம் முகம்பரிந்துபார்த்திவண்
முந்துமங்கியிற்பட முடிந்தநாயகன்முன்னமே
தந்தகங்கணமிதற் கியைந்தவாறுசாற்றுகேன்

(இ-பு,) அந்தவணிகேசன் தீயில் முழுகினதைக்கண்டு துயரங்கொண்டுநின்ற மானத்தையானவள் தனக்குப்பந்தமாயிருக்கிற சுற்றத்தார் முகங்களைப்பார்த்துச்சுற்றத்தவர்களே கேளுங்கள் இப்போது இத்தீயில்விழுந்துஇறந்துபோன வணிகேசன்கொடுத்தது இந்தக்கங்கணம்இதைக்குறித்து நடந்தசெய்தி சொல்லுகிறேன்-எ-று. (௫௪)

இக்கடகல்விலைந்து மூன்றுநாளியைந்துபின்
புக்கின்மேவுகற்பின்மாது போலவாழ்வனென்றியான்

றெக்காளிலாருயிர் துறந்துாய்கன்மாய்ந்ததா
லொக்கயானுமாமழற் குளிப்பதன்றியுய்கலேன்

(இ-பு.) இந்தக்கடகம் பெருமான லிலக்காக மூன்றுநாள் உன்ம
யில் வாழும் மனைவிபோல உன்னுடன நான் வாழ்கிறேனென்று சம்ம
தித்துக்கொ...டேன் அந்தமூன்றுநாளுக்குள் வணிகேசன் உயிர்துறந்து
றந்ததினாலே நானும் அவனுடன அக்கினியில்விழுந்து இறப்பதல்லது
வரியுயிருடன்வாழேன்-எ-று. (௫

அன்னலிங்கமென்கையி லளித்தபோதுமற்றவன்
சொன்னதுண்டெனுவியாயத் துணிந்துபோற்றிவையென
வென்னைபாவியேன்பிழைத்த வாறிலிங்கம்வெந்ததாற்
றன்னைநேரிலாதசைவ நாயகன்சாதனையேயினான்

(இ-பு.) அந்தச்சிவலிங்கத்தை வணிகேசன் என் கையிற் கொடுத்
போது இதுஎன் உயிர்போலிருப்பது ஆகையால் பத்திரமாகவைவெ
ன்று சொன்னதுண்டு அப்படியிருக்கப் பாவியாகிய நான் மதிமோசம்போ
னேனே இது என்னகாரணம் சிவலிங்கம் வெந்துபோய்விட்டபடியால்
ணக்கொப்பில்லாத சைவசமயப் பத்திமையுள்ள அவ்வணிகேசன் இறந்து
போனான்-எ-று. (௬

என்னிமித்தமாகவந் ததித்துணையுமாதலால்
வன்னியிற்குளிப்பதன்றி வாய்மைபொய்த்துவாழ்வனோ
மூன்றுநாளைத்தவாகமம் புராணம்வேதமுதல்வாய்ச்
சொன்னசொன்னயாவையுந் தொகுத்தவுண்மையல்லவோ

(இ-பு.) இத்தனைகாரியமும் என்னிமித்தம் நேரிட்டதாகையால் தீ
யில் விழுவதல்லது சொன்னசொல் தவறிஉயிர்வாழ்கிலேன்சொன்னசொ
ல் தவறலாகாதென்று நம்முடைய ஆண்டவனால் சொல்லப்பட்ட ஆகம
ங்கள் புராணங்கள் வேதங்கள் முதலாகிய எல்லாவற்றிலும் விதித்திரு
க்கிற உண்மையல்லவோ-எ-று. (௭

வேலைவேலையுள்ளடங்கி மீறுயர்ந்துநிற்பதுங்
காலைமாலைபானுவெண் கலாமதியுதிப்பது
ஞாலமாதிபூதமைந்து நண்ணியென்றுநிற்பது
மாலகாலமுண்டவீசனுண்மையன்றியாதுமோ

(இ-பு.) சமுத்திரமானது கரைக்குள் அடங்கி மேலுயர்ந்து நிற்பது
ம் உதயகாலத்திலும் மாலைகாலத்திலும் முறையாகச் சூரியன் உதிப்பது
வும் சந்திரன் உதிப்பதும் பிருதிவிமுதலாகிய பஞ்சபூதங்கள் எப்பொ
து மிருப்பதும் ஆலகாலம் உண்ட பரமசிவனுடைய ஆக்கினையன்றி
வேறொன்றினாலாகாதாதலால்-எ-று. (௮

வாய்மைதப்பினோர்களிந்த மாநிலத்திலீனராய்த்
தீய்மையுற்றுமேலுளோர் பழிக்கவேயிருந்துபின்
றூய்மையற்றகும்பியுட் டுளைந்தழுங்குவாரெனு
வாய்மனுப்பகர்ந்தவேத சாகைமுற்றுமறையுமே

(இ-பு.) சொல்லிய வார்த்தை தப்பியவர்கள் இவ்வுலகத்தில் ஈனர்க
ளாய்ப்பாவத்தை அடைந்து பெரியோர்கள் பழிக்கும்படி இருந்து பின்பு
தீங்குபொருந்திய நரகத்தில்விழுந்து வருந்துவார்களென்று வாய்மையுற்
ற மந்திரங்களைச் சொல்லுகின்ற வேதமுழுதுஞ்சொல்லுகின்றன-எ-று. (௯)

ஆதலாலெனைக்குறித் தழுங்குமாறடாதென
மாதராடெருட்டியீட்டு மாநிதிக்குவையெலாம்
வேதவேதியர்க்குமா விரதியர்க்குமவ்வினராய்ப்
போதுநர்க்குமகமகிழ்ந்து போதுமென்னநல்கியே

(இ-பு.) ஆகையால் என்னைக்குறித்து நீங்கள் வருத்தப்படுவது தகா
தென்றுமானத்தை தன்சுற்றத்தார் தெளியும்படி சொல்லித் தான்சம்பாதி
த்த திரவியங்களையெல்லாம் வேதமோதிய பிராமணர்களுக்கும் பெரிதா
கிய விரதங்களை அனுஷ்டிக்குந்தபசிகளுக்கும் ஏழைகளாய்வருகின்றவர்
களுக்கும் போதுமெனகிறமட்டில் மனமகிழ்ச்சியுடன்கொடுத்து-எ-று. (௰)

மோனமாகிநீரின்மூழ்கி மூப்புரத்தைவென்றசீர்
ஞானநாதனடிவணங்கி நல்லழற்பிழம்புறுந்
தானமேவலங்கொடெய்தி வீழுமெல்லைதன்னிலே
வானிலாமுடித்தவேணி வள்ளல்வந்துதோன்றினான்

(இ-பு.) இவ்வாறு தானம்பண்ணிவிட்ட பின்பு மௌனவிரதங்கொ
ண்டு ஒருவருடனும் பேசாமல் நீரில் ஸ்நானஞ்செய்து திரிபுரதகனஞ்செ
ய்தமெஞ்ஞான சொரூபியாகிய பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி
நல்ல தீப்பிழம்பு பொருந்திய இடத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து அக்கினி
க் குண்டத்தில் விழும்போது இளந்திங்கள் அணிந்தசடைமுடியையுடை
ய கயிலாசபதியானவர் தரிசனமானார்-எ-று. (௧௧)

கொன்றைதுன்றுவேணியுங் குளிர்ந்தவைந்துவதனமுங்
கன்றநீலகண்டமுங் கரசரோருகங்களு
மின்றிரிந்தமேருவாய் விளங்குதோளுமுந்தியுந்
துன்றுதாளுமுன்புகண்டு தோகைவீழ்ந்திறைஞ்சினாள்

(இ-பு.) கொன்றைமாலையணிந்த சடாமகுடமும் குளிர்ச்சியுள்ள ஐ
ந்து திருமுகங்களும் கறுத்த காளகண்டமும் செந்தாமரைமலர்போன்ற
திருஅத்தங்களும் ஒளிவிளங்கும் பொன்மலைபோலாய் விளங்கும் திருப்

பு[illegible]களும் திருவுந்தியும் பொருந்திய திருவடிகளுந் தரிசனமாகக்க
டு மான்[illegible]தையெனபவன் பூமியில்விழுந்து பணிந்தாள்-எ-று, (௬

[illegible]ங்கைநீகனற்குள்வீழ்த லொழிதிநின் மனத்தினிற்
[illegible]ங்குமுண்மைபுணருவான் சமைந்துபொன்செய்கடகமோ
[illegible]துவந்துமளவளாவெரிக்கண்வீழ்ந்தவணிகன்யான
கண்[illegible]ல்வாய்த்துணிந்துநின்ற கருமநன்றுநன்றரோ

(இ-பு.) அவ்வாறு சேவித்துக்கொண்டவளைப்பார்த்து அடியவ[ளே]
நீ தீக்குள்[illegible]வதைநீங்கு உனமனதிற் பொருந்திய மெய்யனபினை [இ]
வுலகத்தாருக்குத்தெரிவிக்கும்பொருட்டுப் பொன்னாற் செய்யப்பட்ட
டகத்தினுடன் இவ்விடத்துக்குவந்து உன்னுடன அளவளாவித் தீயி[ல்வீ]
ழுந்த வணிகன் நாமே இந்த ராத்திரியில் நீ தீயில்விழும்படி [நீ]செய்[த]
காரியம் மிகவும் நன்று நன்று-எ-று. (௬

பொதுமடந்தமார்கடேடு பொருளினுசைநீங்கியே
மதியிலங்குநுதலினின்னில் வாய்மைபேணவல்லரோ
வதிசயப்புவிக்கணீது புதிதுகண்டறிந்தனந்
கதிதெரிந்துபெறுபதத்தில் விழைதலேதுகழறுவாய்

(இ-பு.) பிறைபோல்வளைவாகியநெற்றியையுடையவளே பொது
ஸ்திரீகளாயிருப்பவர்கள் பொருளாசையைவிட்டு உன்னைப்போலச் சத்தி[யத்]
தைக்காப்பாற்றுவார்களோ இவ்வுலகத்தில் இதுஅதிசயமானகாரியம்
மாகக்கண்டறிந்தோம் பதவிகளுக்குள் நீ அடையவேண்டிய பதவி[யெ]
வோ உனக்கு விருப்பமுள்ளதைச் சொல்லுவாயாக-எ-று. (௬

வேறு,

என்றுபரமனியம்புமதுகேட்டுக்
குன்றுமரனுங் குழைந்துருகக்கோற்றொடியா
ணின்றுதொழுது நிமலாநின்தடியே
னொன்றுமறியே னுரைப்பதுளங்கொள்ளேன்

(இ-பு,) இவ்வண்ணம் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினை
கேட்டு மலைகளும் மரங்களும் நினைறுருகும்படி மானந்தையெனபவ[ள்]
ழுந்துநின்றுதொழுது நிருமலனே உன்னடியவளாகிய நான் ஒன்று[ம]
யாதவள் இன்னது சொல்லவேண்டுமென்றுந் தெரியாதவள்-எ-று, (௬

தேவரோடு திரிபுவனத்துள்ளோர்க
ளேவரோவாழும் பதமுமினிவேண்டேன்
மூவரோயாகித்து மூன்றுமுத்தொழிற்குங்
காவலாயிக் கடந்துநின்ற நாரணனே

(இ-பு,) தேவர்கள்முதல் திரிலோகத்தி லிருப்பவர்களில் எவர்கள்
வாழும் பதவியும இனிவேண்டேன் திரிமூர்த்திகளாகியும் முக்குணங்க
ளாகியும் முத்தொழிற்குங் காவலாகியும் இவைகளையெல்லாங் கடந்த கா
ரணனாயிருக்கும் ஆண்டவனே-எ-று, (௬௬)

அன்புற்றெனது கிளைஞரனைவோருந்
துனபக்கடலுட் டுளையாதெனைப்போல
வினபச்சிவபதத்தை யெய்தியினிதாக
வன்புற்றுனதடிக்கீழ் வாழுவருளென்றாள்

(இ-பு,) அன்புள்ள என் சுற்றத்தார் எல்லாரும் துக்கசாகரத்தில்மு
ழுகாமல் அடியேனைப்போலப் பேரின்பமுள்ள சிவலோகத்திற்சேர்ந்து இ
ன்பமுடன் எக்காலமும் ஒரேதன்மையாக வாழும்படி கிருபைசெய்யவே
ண்டுமென்றாள்-எ-று, (௬௭)

கோட்டுவிடையமர்ந்த கோமான்குயின்மொழியாள்
கேட்டவரமனைத்து மீந்தோமெனக்கிளத்தி
யிட்டுபெருங்கிளைஞ ரொல்லோரொடுமிவள்போய்
வீட்டுநெறிப்பேரின்ப மேவப்பணித்தகன்றான்

(இ-பு.) கொம்பினையுடைய ரிஷபவாகனத்தை விரும்பிய பரமசிவ
ன் மானந்தைகேட்ட வரமெல்லாங் கொடுத்தோமென்று அருளிச்செய்
து சுற்றத்தாருடன் பேரின்ப வீட்டிற் போய்ச் சேரும்படி அருளிச்செ
ய்து கயிலையங்கிரிக்கு எழுந்தருளினார்-எ-று. (௬௮)

ஆடரங்கைத்தீமுருக்கும் வேலையணங்கனையாள்
கூடுபிணிமொழித்த வானரமுங்கோழியும்போய்
நீடுபலகாலநில வயத்தேயிருந்து
வீடுகுரங்குகண்டாய் வேந்தேநின்கான்முளையே

(இ-பு,) நாடகசாலையைத் தீபற்றி யெரிக்குங்காலத்தில் தெய்வப்பெ
ண்ணையொத்த மானந்தையானவள் கட்டவிழ்த்துவிட்ட குரங்கும் கோ
ழியும்போய் நெடுங்காலம் இவ்வுலகத்தி லிருந்து இறந்துபோன குரங்கு
தான் உன்புத்திரன்-எ-று, (௬௯)

சோரிபொடித்தனைய சூட்டெழில்கொள்வாரணங்காண்
சீரியசொற்றேரு மமைச்சன்சிறுவனிவர்
பாரிலவதரித்தும் பண்டுடையவாதனை காண்
பேரியலினக்கமணி பூதிபெற்றணிந்தார்

(இ-பு,) உதிரம்பொடித்ததையொத்த உச்சிக்கொண்டையையுடை
ய கோழிதான்சிறப்புள்ள சாத்திரங்கள் உணர்ந்த மந்திரிகுமாரன் இவ

ர்களிருவரும் பூலோகத்திற்பிறந்தும் பூர்வவாசனையினால் பெரிதான்று றைமையுடன் ருத்திராக்ஷமும் விபூதியும் விரும்பி யணிந்தார்கள்-எ-று.

முன்னைப்பிறந்தபிறப் பின்முதல்வன்மணி
தனையணிந்ததபோ பலத்தின்றன்மையான்
மன்னர்தொழுமன்னு வுனக்குமதலையுமாய்க்
கன்னிமதியமைச்சன் சான்முளையுமாயினரே.

(இ-பு) முன்னேகிய பிறவியில் பரமசிவனுடைய மணியாகிய ருத்திராக்ஷத்தைத்தரித்த தபோபலத்தினால் அரசர்களெல்லாம் வணங்கத்தக்க அரசனாகிய வுன்புத்திரனும் அழிவில்லாத உணர்ச்சியையுடைய மந்திரி குமாரனுமானார்கள்-எ-று. (௭௧)

[illegible] கரனையினைஞரிரு வோருங்கள் றுதலோன்
றுளைநெடுநாட் டணைவாதருச்சித்து
வரனையுகளும் [illegible]னாடினிதாண்டு
வேலையெரித்தோனருளால் வீட்டின்பமெய்துவரால்

(இ-பு) இந்த இரண்டு புத்திரர்களும் பரமசிவனுடைய திருவடிகளை இடைவிடாமல் நெடுநாள் பூசித்து வானைமீனைகள்தாவிக்கொண்டிருக்கும்படியான நீர்வளமுள்ள இந்தத்தேசத்தை யின்பமுடன் ஆண்டு காமதகனாகிய பரமசிவனுடைய திருவருளினால் மோக்ஷம் அடைவார்கள்-எ-று, (௭௨)

ஈங்கிவர்கள்முன்னை யியல்புமியன்றதவு
மாங்கதனிற்பய னுலடைந்ததுவம்
நீங்கறநாங்கூறினோந் தேர்வேந்தேநின்மனத்தி
லோங்குவிழைவால்வினவ லுண்டே லுரையென்றான்

(இ-பு) இவ்விருவருடை முற்பிறப்பின் றன்மையையும் அப்போது நடந்ததையும் அதனால் அடையவேண்டிய பயனை யிப்போது அடைந்ததையும் குற்றமறநாம் உனக்குச்சொன்னோம் தேரையுடைய அரசனே உன்மனதில்மிகுந்த விருப்பத்தினால்இன்னமேதாவது கேட்கவேண்டியிருந்தால் சொல்லென்று பாராசரமுனிவர்சொன்னார்-எ-று, (௭௩)

இருபதாவது
(உ)ருத்திராக்ஷமகிமையுரைத்த அத்தியாயம்.

முற்றிற்று,

ஆ. இருவிருத்த- [illegible],

௨

சிவமயம்.

இருபத்தொன்றாவது,

சீருருத்திரமகிமையுரைத்த அத்தியாயம்.

என்னாமுனிருத னினிதியம்பிமாதவத்திர்
மன்னர்மன்னன்மீட்டு மந்தமாதவனைத்தாள்போற்றிப்
பனணிவினவுவது கேட்டுப்பாராசரனார்
பின்னுமுரைத்ததனை கேண்மினெனப்பேசினான்

(இ-பு.) இவ்வாறு சூதமுனிவர்சொல்லி நைமிசாரணிய முனிவர்களே அவ்வரசனானவன் பராசாருடைய பாதங்களிற்பணிந்து துதித்துவினவுதல் [illegible]ட்டு மேலும் அவர்சொல்லிய சிவசரித்திரத்தைக் கேளுங்களெனறு சொன்னார்-எ-று. (௧)

வேறு,

ஓங்கியபேருவகையி னுவட்டனெழுந்துமன்னவர்கோன்
றேங்கமழுகறந்தெரியல் முடிதாழச்சென் றிறைஞ்சிப்
பூங்கமலத்தயனையை புகழ்முனியேநின்னருளாற்
றூங்கரியமனமாயை தணிந்தறிவின்றலைநின்றேன்

(இ-பு) மிகுந்தசந்தோஷத்தை யுடைய அவ்வரசன் பராசர முனிவருடைய பாதங்களில் தன் மகுடம் படும்படி பணிந்து பிரம்மதேவனையொத்தபுகழுள்ள முனிவரே தேவரீருடைய கிருபையினால் தாங்குதற்கரியமனமாயைநீங்கி அறிவினிடத்தில் நின்றேன்-எ-று, வாசனைகமழும்பூமாலையணிந்தமகுடம் (௨)

மைந்தன்வரலாறனைத்துங் கேட்டுமனமகிழ்ந்தேன்
கந்தனையவிளங் காளையினிக்காசினியை
யெந்தவகைபுரப்பானவாழ் நாண்மற்றெத்தனையுண்
டந்தமுறைதானுமடி யேற்கருள்கென்றான்

(இ-பு,) சுவாமிகளே என்புத்திரனுடையவரலாறெல்லாங்கேட்டுமனமகிழ்ந்தேன சுப்பிரமணியக்கடவுளையொத்த இவ்வாலிபன் இனி எவ்விதமாக உலகத்தை ஆளுவான் ஆயிசு எவ்வளவிருக்கின்றது அம்முறையையும் அருளவேணுமென்றான்-எ-று, (௩)

செம்பொன்முடிக்குரிசில் கேட்டியதுசெப்பினற்
கம்பமுறநெஞ்ச [illegible]கலங்கித்துயருழப்ப
[illegible]ரும்பர்முதலோரு [illegible] னாய்கெய்தும்
வெம்புகொடுந்துயரம் [illegible]ரோவிலக்கிற்பார்

(இ-பு,) பொன்னாற்செய்யப்பட்ட மகுடந்தரித்த அரசனேசொல்லுகிறேன்கேள் என்னவெனில்; அதைச்சொன்னால் தேவர்முதலானவர்களும் நடுக்கமுண்டாக மனங்கலங்கித்துயரம் அடைவார்களென்றால் உனக்குநேரிடுங் கொடிய துயரத்தை யார்விலக்குவார்கள்-எ-று, (௪)

எவ்விடருஞ்சாரா விறைவனருள்பெற்றனையாற
செவ்வடிவேல்வேந்தேயான் செப்புகேனின்புதல்வ
னவ்வியமொன்றில்லாதா னீரிரண்டாண்டினனடைந்தான்
கவ்வையுறலின்றுமுத லோரேழ்தினங்கடந்தால்

(இ-பு,) பரமசிவனுடைய திருவருள் கிடைத்திருப்பதினால்யாதொரு துன்பமும் நேரிடாத வேலேந்திய அரசனே யான் சொல்லுகிறேன் உன்புத்திரன் பாபமென்பது சிறிதுமில்லாதவன் இப்போது பன்னிரண்டுவயதுள்ளவனாயினான துன்பம்அடையாதே இன்றுமுதல் எழுநாள் கடந்தால்-எ-று. (௫)

சாவதுவேதிண்ணமெனமுனிவனுரைசாற்றுதலு
மேவுபட்சாயுமிக லரிமானேறுபோற்
காவலன்மேதினிமேல் வீழ்ந்துகடைக்கண்முத்தத்
தாவிலையில்லாத் துயர்க்கடலுண்மூழ்கினான்

(இ-பு,) இறப்பதுநிச்சயமென்று முனிவன்சொல்லலும்அம்புப்பட்டமாத்திரத்தில்விழுந்துவிடுஞ் சிங்கம்போல அரசனபூமியில்விழுந்து கடைக்கண் நீர்துளியைச் சிந்தும்படி நிலைபடாத் துயரகடலில் ஆழ்ந்தான்-எ-று, (௬)

தாங்கிமுனிவ னெடுத்துத்தராபதியை
வீங்குதுயர்மாற்றி விழிநீரறநீவி
யோங்குபொலன்கரத்துற் றநறுந்தெண்ணீரை
வாங்கிமுகங்கழீஇ வந்ததுயர்நீக்கினான்

(இ-பு.) துக்கசாகரத்தில் முழுகிய அரசனைப் பராசரமுனிவர் தாங்கியெடுத்துத் துயரம்நீக்கிக் கண்ணீரைத்துடைத்து மாற்றுயர்ந்தபொன்கரகத்திலிருந்த தெளிவுள்ள நீரைக்கையில் வார்த்துக்கொண்டு அவ்வரசன்முகத்தைக்கழுவி நேரிட்ட துயரச்சோபத்தை நீக்கினார்-எ-று, (௭)

வேறு.

ஊழ்வினையுருத்தகாலத் துறுவதீன்றநற்றாய்
விழ்முலைசுரந்தபாலு முண்டபின்வெய்யநஞ்சா
மாழ்கடற்பிறந்தநஞ்சு [illegible]மென்றால்
வாழிய [illegible] பிருவினை [illegible]

(இ-பு,) அரசனே ஊழ்வினை சம்பவித்தகாலத்தில் மிகுந்த தவத்தினால்பெற்ற தாயின் முலையினின்று சுரந்தபாலும் உண்டபின் கொடிய நஞ்சுபோலாகும் நல்வினையுற்றகாலத்தில் ஆழ்ந்தகடலில் உண்டாகிய விஷமும் உண்டபின் தேவாமிர்தம்போலாகும். என்றால்மனிதர்களெல்லாம்இருவினைவசப்பட்டவர்களே-எ-று; வீழ்பால் விரும்பப்பட்டபால் (௮)

இன்பம்வந்துற்றகாலை யிருங்களிவெய்தறாதுந்
துன்பம்வந்துற்றகாலைத் துயருழந்தழுதறாது
மன்பதைபுரக்கும்வேந்தே யறிவிலார்மாட்சிநல்லோர்
துன்பமுமின்பந்தானுந் தொல்வினைத்தொடர்ச்சியென்பார்

(இ-பு,) மனிதரைக்காக்கும் அரசனே இன்பம்வந்துபொருந்தினகாலத்தில் மிகுந்த சந்தோஷத்தை அடைவதும் துன்பம்வந்து பொருந்தினபோது துயரப்பட்டு அழுவதும் அறிவில்லார்செய்கை அறிவுள்ளவர்கள் சுகதுக்கங்கள் பழவினைதொடர்ச்சியென்பார்கள்-எ-று. (௯)

ஆதலால்வருந்தல்கேட்டி யருபியாயமலனுமிச்
சோதியாய்நின்றவீசன் சுவேச்சையாங்குணங்கண்மூன்று
ளோதுராசதத்திலாதி விரிஞ்சனையுதிப்பித்தன்றே
வேதநூலனைத்துமாங்க விரிஞ்சனுக்கமைத்துமின்னும்

(இ-பு.) ஆகையினால் அரசனே நீ வருந்தாதேநான்சொல்வதைக்கேள் அருபியும்நிர்மலனும் சோதியுமாய் நின்ற பரமசிவன் தனனுடையசுவேச்சையாகும் முக்குணங்களுக்குளொன்றாகிய ராசதகுணத்தில் பிரமதேவனைச்சிருஷ்டித்து வேதசாத்திரங்களையெல்லாம் அந்தப்பிரமதேவனுக்கு அப்பொழுதே அருளிச்செய்துமின்னும்-எ-று, (௰)

வேறு,

மாசிலாஞானமா யனுக்கள்வாழ்வதாய்க்
காசிலாவுபநிட தத்தின்கண்ணதாய்ப்
பாசமாய்த்திடுபசு பதியைப்பற்றிடு
மாசில்சிருருத்திர வத்தியாயமும்

(இ-பு) குற்றமில்லாத ஞானமாகியும் உயிர்கள் வாழ்வுபெறத்தக்கதாகியும் குற்றமில்லாத உபநிடதத்தினிடத்ததாகியும் ஆணவமலத்தைக் கெடுத்தருளாநின்ற பசுபதியைப்பற்றிய பழுதில்லாத சிருருத்திர அத்தியாயமும்-எ-று. உபநிடதங்கள் - ௩௨ (௰௧)

அருளினனகத்திடை யறிந்தநான்முகன்
றெருளுறவுலகமீ [illegible]சேப்தமி
னிருளறுத்துலகங்க [illegible]யவெண்ணியே
பொருட்டருவேதங்கள் [illegible]லுங்காலையில்

(இ-பு) அருளிச்செய்தார் அவைகளை மனதுக்குளறிந்த பிர்ம்மதேவன் தெளிவுபொருந்தப் பதினாலுலோகமும் சிருஷ்டித்தபின்பு இவ்வுலகத்திலிருப்பவர்கள் அஞ்ஞானத்தைநீங்கிக்கடைத்தேறவெண்ணிப்பொருள்தங்கிய வேதங்களைச்சொல்லும்போது-எ-று. (௰௨)

நாற்றிசைமுகத்தினு நான்குவேதமுந்
தோற்றநாட்டென்றிசை முகத்திற்றோற்றிய
வாற்றசாறயித்திரிய மதனிற்பயனெ
யேற்றசீருருத்திர மெழுந்துதோன்றிற்றால்

(இ-பு) நான்குதிசை முகங்களிலும் நான்குவேதங்களும் உண்டானநாளில்தென்றிசைநோக்கியமுகத்தில் தோன்றியபெருமை மிகுந்த தைத்திரியவேதத்தின்மத்தியில் மேன்மையுள்ள சிருருத்திர மந்திரமுண்டாயிற்று-எ-று, தத்திரியென்னும்பக்ஷியுண்டு பகிழ்ந்தமையால் தைத்திரியமென்றாயது-எ-று, (௰௩)

அத்தகைமந்திர மரீசியாதியாம்
வித்தகமுனிவர் விரும்பிக்கற்றட
னுத்தமவுலகிடை முனிவர்க்கோதிடத்
தத்துவமறையவர் தாமுங்கற்றனர்

(இ-பு) பெருமைபொருந்திய அந்தமந்திரத்தை மரீசிமுனிவர் முதலாகிய ஞானமுள்ளமுனிவர்கள் விரும்பி உணர்ந்து உடனே இவ்வுலகத்திலிருக்கும் உத்தமமுனிவர்களுக்கு உபதேசஞ்செய்யத் தத்துவமுணர்ந்த அம்முனிவர்களும் தெரிந்துகொண்டார்கள்-எ-று, (௰௪)

ஆர்வுருபாவமா மழனற்கோடையாற்
பார்மிசைமானிடப் பசுப்புல்வாடுத
நீர்தரும்மவ மினனுச்சேர்ந்துபெய்
கார்மழையொத்ததிக் கடவுண்மந்திரம்

(இ-பு) நிறைந்த பாவமாகிய வெறுப்புகின்ற கோடையால் இவ்வுலகத்திலிருக்கும் மனிதர்களாகிய பசியபுற்கள்வாடுதல் நீங்கும்படி பிரணவமாகிய மின்னலைச்சேர்ந்து பொழிகின்றமேகத்தையொத்தது தெய்வீகம்பொருந்திய இம்மந்திரம்-எ-று. (௰௫)

மற்றொருதவங்களேன் மந்திரங்களேன்
சிற்றியல்விரதமேன் வேள்விச்செய்கையேன்
சுற்றியமலங்களைத் துடைத்துமுத்தியைப்
பெற்றிடவளிப்பதோர் பிரமமீதரோ

(இ-பு) இம்மந்திரமிருக்க வேறுதவங்களேன் மந்திரங்களேன் சொற்பபயனைத்தருகின்ற விரதங்களேன் யாகத்தொழிலேன் பிறவி

தோறுந் தொடர்ந்துவருகிற மும்மலங்களைநீக்கி மோக்ஷத்தைப்பெறும்படிகொடுக்கும் பரமசிவர் இதுவேயாம்-எ-று, (௰௬)

பின்னருநான்முகப் பிரமகன்பொறை
மன்னியதேவர்கள் மக்கள்வல்விலங்
கன்னியவடிவுள வனந்தயோனியும்
பன்னருஞ்சிறப்பினும் படைத்துமுற்றியே

(இ-பு) பிர்ம்மதேவன் முனசிருஷ்டித்ததுமல்லாமல் பின்பும் சாந்தகுணமுள்ளதேவர்கள் மனிதர்கள் வலியமிருகங்கள் இவைகளேயன்றி யின்னமும் பலபலவிதமாகிய அனந்தம்யோனிபேதங்களும் சொல்லுதற்கரிய சிறப்புடன் சிருஷ்டித்துமுடித்து-எ-று. (௰௭)

புண்ணியபாவமும் பொருவினன்மையு
மண்ணியதீமையு மகிழ்வுந்துன்பமு
மெண்ணியநினைப்பொடு மறப்பும்யாவையு
நண்ணியவுணர்வொடு வகுத்துநல்கியே

(இ-பு) புண்ணியபாவங்களும் ஒப்பில்லாத நன்மையும் இவ்வுலகத்தில் நேரிடுந்தீமையும் சுகதுக்கங்களும் எண்ணுகின்ற நினைப்பு மறைப்புகளும்பொருந்திய உணர்ச்சியுடன் வகுத்துச் சிருஷ்டித்து-எ-று, (௰௮)

துறக்கமுநரகமுந் துவன்றிக்காக்கெனப்
பிறைக்குலநானகெனப் பிறழ்வெண்கோட்டிடைக்
கறைக்குட்றணிந்தமாற் களிற்றுவேந்தையு
மறத்தொழிற்கூற்றையும் பணித்துமன்னனே

(இ-பு) அரசனே நான்கு பிறைகள்போலப்பிரகாசிக்கும்வெண்மை நிறமுள்ள தந்தங்களினிடத்தில் பகைவருடைய ரத்தமும் கூடலும்நிறையத்தக்கபெரிய ஐராவதமென்னும் யானையையுடைய இந்திரனைநோக்கி நீ சுவர்க்கலோகத்தைக் காத்துக்கொண்டிருவென்றும் கோபமுண்டாகும்தொழிலையுடைய யமனைநோக்கி நீநரகத்தைக்காத்துக்கொண்டிருவென்றுங் கட்டளையிட்டுப் பின்பு-எ-று, (௰௯)

நாடிமுதல்காலங்க டோற்றுந்தன்மையுங்
கடிதினில்வருஞ்சுடர்ச் சதிருந்திங்களு
மிடையுளகோள்முதற் றாரகையாவையு
மடையுறுபூதங்க ளைந்துமாக்கினின்

(இ-பு) நாடிமுதல் காலங்கள் உண்டாகுந் தன்மையையுமகமேருவைவலமாகச்சுற்றிவரும் சூரியனையும் சந்திரனையும் அவ்விடத்திலிருக்குங்கோள்முதலாகிய கிரகங்கள் எல்லாவற்றையும் ஆகாயமுதலாகப் பொருந்திய பஞ்சபூதங்களையும் சிருஷ்டித்தான்-எ-று, (௨௰)

ஆக்கியசராசர மனைத்துமவ்விதி
நீக்கியபகுதியி னெருங்கியெங்கணும்
போக்கறவியிர்த்துசெல் பொழுதிற்கூற்றவன்
காக்குமக்ரோகங்க டழைபக்கற்பிப்பான்

(இ-பு) இவ்வாறு அந்தப்பிரமன் உண்டாக்கிய சராசரங்களெல்லா
ம் பேதமில்லாமல் நெருங்கி யெவ்விடத்தும் இறத்தலின்றி அதிகரித்த
வரும்போது யமன்காக்கின்ற அக்ரோகங்கள் தழையும்படி கற்பிக்கின்
றான்-எ-று. (௨௧

கூறியபாவத்தின் கூற்றவாகிய
சீறியகாமமே முதல்நிலையை
வீறுயர்கதையினான் விளித்துநீவிர்போய்
மாறுசெய்துலகிடை மருவியெய்துமே

(இ-பு.) சொல்லுகின்ற பாவத்தின பிரிவாகிய சீறுகின்ற காமமுத
லான பாவங்களைப் பெருமையிருந்த யமன் அழைத்து நீங்கள்போய்ம
றுபாடுசெய்து உலகமெங்கும் பொருந்தி-எ-று, (௨௨

தருமமுநீதியுந் தயாவும்வாய்மையு
மருவியதவங்களும் பிறவுமாற்றிநீர்
கருமமாந்தித்தொழில் கணக்கிலாதன
புரிதிர்நிரகினைப் புரத்திர்போயென்றான்

(இ-பு.) தருமத்தையும் நீதியையும் தயையையுஞ் சத்தியத்தையும்
பொருந்திய தவங்களையு மற்றுகளையு மாற்றி உங்கள் தொழில்களா
ய பாவத்தொழில்களை அனந்தமாகச்செய்து கொடிய நரகத்தைக் காத்
க்கடவீர்களென்றான்-எ-று, (௨௩

அங்கதுகேட்டலு மழகிற்றென்றுபோய்
தங்கயவுலகிடை வந்துசார்தலும்
பொங்குசிருருத்திர மெவருமேபுகன்
றெங்கணுநிறைதலாற் றுண்ணென்றேங்கியே

(இ-பு) அந்த வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் எங்களுக்கு
ண்மையானகாரியமென்று, காமமுதலிய பாவங்கள் சென்று பொருந்தி
உலகத்தில்வந்து சேர்ந்தவளவில் மகத்துவமுள்ள சிருருத்திர மந்திர
த்தையெல்லாருஞ் சொல்லி எவ்விடத்தும் நிறைந்திருப்பதினால் நடுக்க
கொண்டு ஏங்கி-எ-று. (௨௪

மீண்டனவோடின வெருவிக்காலன்மு
னீண்டினவாய்புலர்ந் திளைத்துநின்றன
வாண்டகைகேட்டிநின் றுனையாற்றிரு
வேண்டியவிருநில வளாகமேவினோம்

(இ-பு) பயந்து திரும்பியோடி யமனிடத்தில் சேர்ந்துவாயுலர்ந்து
இளைத்துநின்று ஐயனே கேட்பாயாக உன்னுடைய ஆணையால் செல்வம்வேண்
டிய பெரிய உலகத்தினிடத்திற்பொருந்தினோம்-எ-று, (௨௫)

கவ்வைமாகடிக்கமா கடவுளாலயந்
செவ்வியமொழிமறை யாளர்சேர்விட
மெவ்விடமெவ்விட மெனறுகூறுவேம்
பவ்வநின்றிரைப்பது போலப்பாரெலாம்

(இ-பு) ஓசையையுடைய பெருமை பொருந்திய நதிக்கரை தேவால
யம்நல்லசோலை பிரமாலயம்ஊர்தெருவிடமெனறு பிரித்துச்சொல்வோ
ம் பூலோகமெங்குஞ் சமுத்திரங் கோஷிப்பதுபோல-எ-று, (௨௬)

வல்லசிருருத்திர மந்திரங்களை
யெல்லையில்யாவருமினிதுரைத்திட
நல்லழற்பிழர்பெரு நரகைநாப்தலா
லொல்லையில்வெருவினனுழையுநூகினேம்

(இ-பு.) முத்திதரவல்ல சிருருத்திர மந்திரத்தை அளவில்லாமலெ
ல்லாரும் ஓதுகின்றார்கள் அதுமிகுந்தநெருப்புபோல நாமவர்களைக்
காய்கின்றதினால் பயந்திரைவாசனனிடத்தில்வந்துசேர்ந்தோம்-எ-று, (௨௭)

(வேறு)

ஏழுகோடிமந்திர மெடுத்தவரியம்பினுந்
தாழ்விலாதமந்திரங் கடம்மையொல்லைநீக்குவேருந்
சூழ்சடைப்பரமனைந்து தொல்லெழுத்தையொன்றியே
வாழுமந்திரத்திலோ ரெழுத்திலுக்குமாழ்குவேம்

(இ-பு.) சத்தகோடி மகாமந்திரங்களை பெயர்களோடுத்துச்சொன்னா
லும் தாழ்ச்சியில்லாத அந்த மந்திரங்களை விரைவினில் நீக்கிவிடுவோம்
சூழ்ந்தசடையையுடைய பரமசிவனது பஞ்சாக்ஷரத்தைப்பொருந்திவா
ழுஞ்சிருருத்திர மந்திரத்தி லிருக்கும் ஒருஅக்ஷரத்துக்கு யாங்களெரு
ந்துவோம்-எ-று. (௨௮)

பெருமைநீபணித்தவாறு நரகராதிபேணலே
மருமைபெற்றிறத்தடாது கூர்பொழுதிற்றிடென்
றெருமையிற்கிளத்தலோடு மூர்த்தியெனவொலியெழுந்
தருமராசன்வீற்றிருந்த சபைபுகுந்துபணியவே

(இ-பு) இறைவனே நீகட்டளையிட்டபடியினிநரகத்தினைக் காக்க
மாட்டோம் காப்பதருமை யெங்களாலாகாது நரகம் பாழாயிருக்கின்ற
து அதனை நீ யறிதியென்று சொல்லிய வளவில அதைக்கேட்ட தருமரா
சன் சமுத்திரம்போல ஓசையுண்டாகத்துக்கதாக ஆர்ப்பரித்துக்கொண
டு தர்மதேவனிருந்த சபையிற்போய்ப் பணிந்து-எ-று. (௨௯)

செம்பொன்வெற்பதொன்றுநாலு சிகரமோடிருந்தென
வம்புயாசனத்திருந்த வண்ணல்வாய்மலர்திறந்
தெம்பதத்தடைந்தவாறெனமறலியென்றியம்பவே
வெம்புநெஞ்சனெடிதுயிர்த்து வெகுளியோடுமுரைசெய்தான்

(இ-பு.) ஒருபொன்மலையானது நாலுசிகரத்துட னிருந்ததுபோலக் கமலாசனத்திலிருந்த பிரமதேவன் திருவாய்மலர்ந்து தருமராசனே நீ என்னிடத்திற்குவந்தகாரணமென்ன வென்றுசொல்லலும் யமன்வெதும் புமனத்தனாய்ப்பெருமூச்சுவிட்டுக்கோபத்துடன்சொல்லுகின்றான்-எ-று.

அய்யநீபணித்தவண்ண மரியவேழுநான்கெனும்
வெய்யகோடிகும்பியும் விளங்கியேதழைக்கயான்
செய்யலாவதேதினிச் சிறந்தசிருத்திரம்
வையம்யாவுமோதலாலம் மாநிலத்துளோரெலாம்

(இ-பு.) சிறப்புப்பொருந்திய சிருத்திரத்தைப் பூலோகத்தி லிருப்பவர்களெல்லாரும் செபித்தலால் ஐயனே நீ கட்டளையிட்டபிரகாரம் இருபத்தெட்டு நரகங்களும் விளங்கித் தழைக்கத்தக்கதாக அடியேன்செய்யலாவதென் னிருக்கிறது-எ-று. (௩௧)

நாகநாடுநண்ணிலார்க ணரனனைந்தனித்துவாழ்
போகநாடுநண்ணிலார்கள் புண்டரீகனேறிரு
போகநாடுநண்ணிலாரு லோகபாலர்நாடுறு
சோமாயசிவபதத்தி னெல்லையாருநண்ணினார்

(இ-பு.) சுவர்க்கலோகத்தில் பொருந்துகின்றார்களல்லர் விஷ்ணு தனித்துவாழ்கின்றபோகநாடு பொருந்துகின்றார்களல்லர் தேவருடையநாட்டிலும்பொருந்துகின்றார்களல்லர் லோகபாலர்நாட்டிலும்பொருந்துகின்றார்களல்லர் வகுப்பரமசிவனுட்டில் எல்லாரும்பொருந்துகின்றார்கள்-எ-று. (௩௨)

புண்டரீகவண்ணலே புராரிவாழ்பதத்தினி
லெண்டிசாமுகத்துளோரு மெய்தலாலமற்றேவரோ
கொண்டதீமைநரகம்வந்து குறுகுவார்கள்குறுகுமா
றண்டநாதபுரிவியல்ல தாள்கலேனென்னரசரோ

(இ-பு.) தாமரையில் வீற்றிருக்கும் கடவுளே பரமசிவனுடைய பதவியில் அஷ்டதிக்குகளுக்குள்ளிருப்பவர்களும் பொருந்துதலால்மற்றையார்வந்து நரகத்திற் பொருந்துவார்கள் தேவநாதனே அப்படியன்றிநரகத்தில்வந்து பொருந்தும்படிசெய் இல்லாவிட்டால் என் அதிகாரத்தைவிட்டுவிடுகிறேன்-எ-று. (௩௩)

வேறு.

என்றுகூறி மறலியிறைஞ்சலுந்
துன்றுபங்கய நான்முகன்சூழ்ச்சியா
னன்றுசெய்பவர் தங்கட்குநன்னெறி
யன்றியேதவ றுற்றுவதேதெனு

(இ-பு.) இயமனிவ்வாறு சொல்லிவணங்குதலும் தாமரையிற்பொருந்தியபிரமதேவன் உணர்ச்சியினால் நன்மைசெய்கின்றவர்களுக்குநன்மார்க்கம் வருவதன்றிப் பொல்லாங்குவருவதேதது-எ-று. (௩௪)

ஞாலநாயகன் பின்னருநாடியே
காலனெஞ்சங் கலங்கியுரைத்தது
மூலமோடு நரகமுடிந்தது
மேலநீக்குதற் கின்னவையாமென்றே

(இ-பு.) எமன் மனங்கலங்கிச் சொன்னதையும் அடியோடேநரகமுடிந்ததையும் பிரமதேவன் யோசித்து இதுகளை நீக்குதற்கு இவைகளாகுமென்று தீர்மானித்து-எ-று. (௩௫)

கோதுசெய்புன் ஞானத்தின்கூறதாய்
வாதஞ்செய்ய வளாவிருப்பின்மையுந்
சூதுசெய்திடுந் தன்மதியும்புவிக்
கேதஞ்செய்திட வேகுகவேதியே

(இ-பு.) குற்றத்தைச் செய்கின்ற அஞ்ஞானத்தின்பிரிவாய் வாதுசெய்யவளர்கின்ற விருப்பமில்லாமையையும் சூதுசெய்கின்றதாரப்புத்தியையும்பார்த்து நீங்கள் பூலோகத்தில் துன்பம்செய்யும்படி செல்லுங்கள் அவ்வாறுசென்று-எ-று. (௩௬)

மாசகற்றுசி ருத்திரமானிட
ராசைபற்றி பினைவருமோதுதல்
காசினிக்குண் முழுதுமடிக்குநந்
தேசறுத்தசெயலை நடத்துவான்

(இ-பு.) பாவங்களை நீக்கத்தக்க சிருத்திரத்தில்விருப்பங்கொண்டு பூலோகத்திலிருக்கும்மனிதர்கள் எல்லாரும் ஓதுதலை நீக்கிஉங்களுடையகொடிய செய்கையைநடத்த-எ-று. (௩௭)

எய்துமென்று பிதாமகனேவலு
மொய்திநெய்தி முணங்கியகேள்வியார்
செய்தவப்புரி சிந்தையினண்ணியே
கைதவங்கொடு செஞ்சரக்கலக்கின

(இ-பு) செல்லுங்களென்று பிரம்மதேவன் ஏவினவளவில் அனைவ ர்பூலோகத்தில் விரைவுடன்வந்து மிகுதியான சாஸ்திர விசாரணையினா ல்நல்லதவஞ்செய்கின்ற மனிதர்பொருந்தி வஞ்சகத்தைக்கொண்டு அந் த மனதைக்கலக்கின-எ-று, (௧௮)

மடியினுல்விருப் பின்மைமலியவே
கடியுளோர்கள்சி ருத்திரப்பற்றுவிட்
டடைவுசீத்தொழுக் கல்லனசெய்தலிற்
கொடியநிரயங்குடியேறிற்றே

(இ-பு.) சோம்பலினால் விருப்பமில்லாமை உண்டாக இவ்வுலகத்தி லிருப்பவர்கள் சிருருத்திரம் ஓதுதலைவிட்டுக் கிரமந்தப்பிப்பாவங்களை ச்செய்தலினால் கொடிய நிரயத்தில் குடியேறியது-எ-று, (௧௯)

பிறையெயிற்ற மறலிபெயர்த்தூர
னுறைபதித்தல் மெய்தியுவப்புடன்
குறைவறக்களி கூர்ந்திருந்தானினி
யிறைவநின்மகற் செய்வனசொல்லுகேன்

(இ-பு) பிறைபோல்வளைவும் வெண்மைநிறமுமுள்ளபற்களையுடை ய எமதர்மராசனானவன் தானிருக்கும் வைவச்சுத பட்டணத்திற்போ ய்ச் சந்தோஷத்துடன்குறைவற்ற களிப்புடனிருந்தான் அரசனே இனியு ன்புத்திரனுக்கு நடப்பதைச் சொல்லுகிறேன்-எ-று, (௨௰)

இடரொழிக்கவு மின்னுயிர்நல்கவு
மிடையுங்காலனை நீக்கவும்வேண்டுமேற்
படைமழுக்கைப் பரமன்சிருத்திரந்
தொடையன்மார்பவி யற்றுதல்சூழ்ச்சியே

(இ-பு) துன்பத்தை நீக்கவும் இனிதாகிய வுயிரைக்கொடுக்கவும் வ ருகின்றயமனை நீக்கவும் வேண்டுமானால் மழுவாயுத மேந்திய திருக்கர த்தையுடைய பரமசிவனது சிருருத்திரத்தை மாலையணிந்த மார்பனே சொல்லவேண்டும்-எ-று, (௨௧)

யாவரேனு மினியசிருந்திர
நாவினோதி நளிர்மதிசேகரத்
தேவையாட்டுதெண் ணீரைத்தஞ்சென்னியிற்
றூவினனமனை துடைப்பரே

(இ-பு) எவர்களேயானாலும் இனியதாகிய சிருருத்திரமந்திரம் நா வினாலோதிப்பரமசிவனுக்கு அபிஷேகம்செய்கின்ற தெளிவுள்ளதீர்த்தத் தை தங்கள் சிரசில் தெளித்துக்கொண்டால் சிதைக்கும் யமதண்டனை நீக்குவார்கள்-எ-று, (௨௨)

தாங்குசிருத்திர சமகஞ்சொலித்
தேங்குமஞ்சன மாட்டியசிரியோ
ராங்கணேபதி னாயிரமாண்டுபோர்
வாங்குவிற்கையாய் வாழ்வொடுவைகுவார்

(இ-பு) போரில் வளைக்கும் வில்லேந்திய கையையுடையவனே எல் லாரையும் ஆதரிக்கும்படியான சிருருத்திர சமகஞ்சொல்லிப் பரமசிவ னுக்குத்திருமஞ்சனஞ்செய்யும் சிரினையுடையவர்கள் அப்பொழுதே ப தினாயிரம்வருஷம் சம்பத்துடன்வாழ்வார்கள்-எ-று, (௨௩)

பத்தியோடுசி ருத்திரம்பாருளோர்
சித்தம்வைத்துத் தினந்தோறுமோதினு
லத்தனின்புற்ற வர்க்கருள்செய்திடு
முத்தியீவமொ ழியவும்வேண்டுமோ

(இ-பு.) இவ்வுலகத்தி லிருப்பவர்கள் பத்தியுடனேசிருருத்திரம்நா ள்தோறுமனமொருமித்து ஓதுவார்களேயானால் பரமசிவன்கிருபைகூர் ந்து மோக்ஷங்கொடுத்தருளுவார்இதனைச்சொல்லவும்வேண்டுமோ-எ-று

ஆதலானின்மத லைக்குமன்னதிப்
போதியற்றப் பொருவரும்புண்ணிய
மாதவத்தின் மறையவர்க்கூவென்றான்
றாதுமன்னன் விட்டானவர்தன்னினார்

(இ-பு) ஆகையாலிப்போது உன்புத்திரனுக்குச் சிருருத்திரமந்திர ம் சொல்லிய தீர்த்தஸ்நானஞ்செய்விக்கிறதற்கு ஒப்பில்லாதபுண்ணியமு ள்ளதபசிகளை அழைப்பியென்று பராசரமுனிவர்சொன்னார் அதைகேட் ட அரசன் தூதர்களை யனுப்ப அவர்கள்போய்ச் சொன்ன அளவில்மு னிவர்களெல்லாரும் வந்தார்கள்-எ-று. (௨௫)

அடைந்தவாயிர மந்தணருந்தொழிற்
சடங்குநீதிப்ப ராசரன்சாற்றிடக்
குடங்களாயிரங் கொண்டதெண்ணீர்தொடா
விடங்கொளந்தைசீ ருத்திரமெண்ணினார்

(இ-பு) பராசரமுனிவர் சடங்குவிதிசொல்ல வந்த ஆயிரமுனிவர் களும் ஆயிரங் கும்பங்களிற் பூரித்திருக்கும் நீரைத்தொட்டுவிஷமுண் டபரமசிவனது சிருருத்திரம்சொன்னார்கள்-எ-று. (௨௬)

இந்தவண்ணமே ழாத்தினநெய்தலு
மந்தணாளரோ ராயிரங்கும்பமுங்
கந்தளன்னவேற் காளையையாட்டினார்
மைந்தன்மண்ணிடை வீழ்ந்துமயங்கினான்

(இ-பு) இவ்வாறு ஏழாநாள் வந்தபோது அந்த முனிவர்களும் தங் கையிலிருக்கும் கும்பத்தீர்த்தத்தினால் சுப்பிரமணியக்கடவுளையொத்த அந்த ராசபுத்திரனுக்கு ஸ்நானஞ் செய்வித்தார்கள் உடனே, அந்தப்புத் திரன் மயங்கிப் பூமியில் விழுந்தான்-எ-று,

கண்டிமன்னவன் கையறவெய்தலுந்
தண்டிகுண்டிகை தாங்கிய தாபதர்
விண்டவார்பிறை வேணியன் மந்திரங்
கொண்டு பூதிவெண் காப்புக்குயித்திட்டார்

(இ-பு) தன்புத்திரன் மயங்கிவிழுந்ததை அவ்வரசன்பார்த்துத் துக்கங்கொண்டான் அப்பொழுது தண்டுகமண்டல மேந்திய முனிவர் பிறைபணிந்த சடையையுடைய பரமசிவனது மந்திரமாகிய சிருத் ரஞ்சொல்லி விபூதியுந்தரித்தார்கள்-எ-று. (௯௦)

அறங்கொள்வேதியர் ஆசிபக்கிட
மறங்கொள்வேந்தன் மனமகிழ்வோங்கிட
வுறங்கினன்றுயி றீர்ந்தனனென்னத்
திறங்கொண்மைந்த னெழுந்துசெப்புவான்

(இ-பு) தருமநெறியைக்கொண்டிருக்கிற முனிவர்கள் ஆசீர்வசனஞ் சொல்லும் விதம்பொருந்தியராசன் மனதில் மகிழ்ச்சி யதிகரிக்கத் தக்கதாக நித்திரைசெய்தவன் அதுநீங்கியெழுந்ததுபோலப்புத்திரனெழு ந்து இந்த வார்த்தைசொல்லுகிறான்-எ-று, (௯௧)

வேறு,

இத்தலையினிசழ்ந்தபொருளென்தகேளி எம்பிறைபோல்வெள்ளெ யிற்றனெரியுங்கண்ணன், மைத்தொகுமரப்பலையனையவுருவன்மிக்க மழை முகிலினிடிமுழக்கமனையசொல்லன், கைத்தலத்திலொருகதையுங்கயி றுமேந்திக் கனன்றெனையேபிடித்தடர்க்குங்காலைதோன்றி, யத்தவியே விடுவித்தவனைப்பற்றி யடர்ந்தகனரோவவொவரோவறிகிலேனே

(இ-பு.) என்னையனே? யிவ்விடத்தில்நடந்த சேதியைக்கேள் இளம் பிறைபொத்த வெண்மையாகிய பற்களையுடையவனும் கருமைநிறந்தங் கிய மலையையொத்த வடிவமுடையவனும் மேகமுழக்கம்போன்ற சொல் லையுடையவனுமாகிய ஒருவன்கையினிடத்திலொரு தண்டாயுதமும்பா சக்கயிறுமேந்திக்கொண்டு அதிககோபமுள்ளவனாய் என்னைப்பிடித்திழுத் திடுங்காலத்தில் அவிடத்திற்சிலர்வந்து அவனைப்பிடித்துக்கட்டிக்கொ ண்டுபோனார்கள் அவர்களெவர்களோ நானறியேன்-எ-று, (௯௨)

என்றுதனிக்குமாரனிஃதியம்பக்கேட்ட விகல்வேந்தனுவகையினுலெழுந் துபுல்லி, நின்றமறைவேதியர்தமுகமன்கூறி ... திமாதவனை வருக

வெருப்பகல்கிப், பொன்றுமகவுயிரளித்தருங்கட்கின்னே புரிவதொரு கைம்மாறுகாணேனென்று வன்றவரோடிருந்தசுவைப்படிசினமாற்றி யரி யணைமேலதிசயத்தோடமர்ந்தகாலை

(இ-பு) இவ்வாறு ஒப்பற்ற தன்புத்திரன் சொல்லக்கேட்டுப்பலரு ள்ள அரசன்சந்தோஷத்தையுடையவனாகிப்புத்திரனையணைத்துக்கொண் டு அவிடத்திலிருந்தமுனிவர்களுக்கு உபசாரவார்த்தைசொல்லி இரவிய மாகியமழையை வெறுக்கும்படி யாவருக்கும் கொடுத்த இறந்த என்மக னுக்கு உயிர்கொடுத்த உங்களுக்கு இப்போதுசெய்யும் பிரதியுபகாரமொ ன்றும் நான்காணேனென்றுசொல்லி அவர்களுடனிருந்துபோசனஞ்செய் து சிங்காசனத்தில் அதிசயத்துடனிருந்தபோது-எ-று. (௯௩)

தேன்மாரிதுளிப்பனபோல்மகதிவீணைத் திவவுறுந்தந்திரியின்வழித் தாகத்தோனமும், வான்வழிற்றெனவெளியைச்செவியிலேற்று மறைமுனி நாரதனவ்வயின்வந்துதோன்றநகர்மாலையிலிற்றுகறைமொழுகுமார்பன் கழலெனச்சென்றிறைஞ்சியிருகழலும்போற்றித், தானவாழுமரியணையி ன்மருங்குவேறோர் தமனியப்பீடிகைமுனிவன்றனக்குமீந்தான்

(இ-பு.) மகதியாழினைக்கையினால் மீட்டத்தக்கதான தந்திரியின் வ ழியாக ஆகாயவழியிற்றுவென்னும்படிதோற்றுகின்ற நாதத்தை யாவர்கா துகளிலும் தேன்மழை துளிப்பதுபோலச் சொரியும் நாரதமுனிவர் அந் தசபையில் வந்தவுடன அவ்வரசன் விரைவிலெழுந்துபோய் அம்முனிவ ருபாதங்களையும் வணங்கித் துதித்துத் தானிருக்குஞ்சிங்காசனத்தின் அ ருகில் அம்முனிவருக்கும்வேறொரு ஆசனங்கொடுத்தான்-எ-று, (௯௪)

மணித்தவிசின்வைகியருளிய நாரதமன்னன்மகிழ்ந்தருந்தவத்தோய்மலரி னுமேலான், கனித்தவுலகிசெழுகோடியினெய்தி காணவல்லாயிறுமி டுகண்டதுண்டேற், பணித்திடெனவினவுதலுமகிழ்ந்தவண்ட பரிச னைத்துமப்படியேபகர்வானென்றும் குணித்துமிகவுதிசயித்துவேந்தேபுன்ற ன் குமரனியல்கேட்டியெனக்கூறலுற்றான்

(இ-பு) அந்த ரத்தினாசனத்திலிருந்தநாரதமுனிவர் ஆசீர்வசனஞ் சொல்லமன்னவன்மகிழ்ந்து அரியதவத்தையுடையவரே பிரமதேவன்சி ருஷ்டித்த பதினாலுலோகமும் கொடிப்பொழுதிற்சென்று காணத்தக்கவ ராதலால் எதாவது அதிசயம் உண்டாயிருந்தால்சொல்லுமென்று வினா வினவானில் மகிழ்ச்சிகொண்டு தாங்கண்ட தொன்றும்விடுவாமல் சொ ல்லநினைத்து மிகவும் அதிசயத்தை யுடையவராய் அரசனே உன்புத்திர னுடைய சங்கதியைக்கேளென்று சொல்லுகின்றார்-எ-று. (௯௫)

விசும்புநெறியானபடமேலைகண்டேன் விடுகயிறுமடுதண்டுங்காத் திலேந்திப், பசும்புயல்போற்கரியதிறமறலியுன்றன் பாலனிவன்றனைப்பற்

றிக்கொடுபோங்காலே, யசும்பழுதபொழிமதிச்செஞ்சடையோனேவ வ
டல்வீரன்கணத்திறெடுமடைந்தகூற்றைத், தசும்பொழுகப்பாசத்தாற்
பிணித்துவீக்கித் தருக்கிறெடுலமர்தனையும்விலக்கிமீட்டான்

(இ-பு,) ஆகாயமார்க்கத்தில் நான்போம்போது வீசுகின்ற பாசக்க
கயிறும் அடிக்குந் தண்டாயுதமுங் கையிலேந்திக்கொண்டு நீருண்ட மே
கம்போலக் கருமைநிறமுள்ள காலனானவன இந்த உனபுத்திரனைப்பிடி
த்துக்கொண்டு போகுங்காலத்தில் அமுதத்துளி பொழிகின்ற பிறைமதி
யணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன் அனுப்பவெற்றிபொருந்திய
வீரபத்திரன் கணங்களுடன் வந்து கூற்றுவனை உதிரம் ஒழுகும்படி பா
சத்தினாற் கட்டியிறுக்கி இவனை மீட்டுவிட்டான்-எ-று. (௫௪)

பிணியிறெடுங்கூற்றுவனைக்கொண்டுவீரன் பெயருநெறியிடைத்தரும
ராசனெய்தி, யணியுமணிமுடிகழலிற்றீண்டவீழ்ந்தெய்மையனேதக்கன்
மகமழித்தகோவே, பணிசெயுநின்னடியருக்குமடியனைப் பற்றுதசிறிய
னைநீபற்றற்குள்ளர், துணியுமதற்கிவனிழைத்தவாறேதென்னத் தோலா
தபடைவீரன்சொல்வதானன்

(இ-பு.) அதன்பின்பு வீரபத்திரர் கட்டினகட்டுடன் காலனைக்கொ
ண்டுபோமிடத்தில் யமதருமராசன்வந்து தன்னுடைய ரத்தினகிரீட
ம் அவர்பாதத்தில் படும்படிபணிந்து எங்களையனே தக்கன் யாகத்தை
அழித்தஇறைவனே தொண்டுசெய்கின்ற நினடியருக்கும் அடியனாகும்
படிதகுதியில்லாத இவனை நீபித்துக்கொண்டுபோகத் திருவுளங் சொன்
வதற்கு இவன் செய்தகுற்றம் யாதோவென்னத் தோற்புஅடையாதவீர
பத்திரர் சொல்லுகின்றார்-எ-று, (௫௫)

வணங்குவரிசிலைத்தடக்கைப்பத்திரசேனன் மாமதலைசீருத்திரவண்ணம
யாலே, பிணங்குபதினாயிரம்யாண்டிருப்பான் றன்னையீராறுண்டகவ
யிலேயிறதிசூழ்ந்து, கிணங்கொணெடுந்தடிப்பிலவாய்க் காலதூதர்செரு
ங்குநாயறமுருக்கிச்சிறுவனை, குணங்குறையிலடியவனைப்புரத்தியெ
ன்ற கூற்றுதைத்தோன்பணிதலைமேற்கொண்டுவந்தோம்

(இ-பு,) வளைக்கும் நீண்டவில்லையுடைய பத்திரசேனராசன்புத்தி
ரன் சீருருத்திர மந்திரமகிமையால் பதினாயிரம்வருஷம் உயிருடனிரு
ப்பவனாயிருக்கப் பனனிரண்டுவயதில் அவனுக்கு முடிவுகருதி நிணம்
பொருந்திய பெரியதண்டமும் பிலர்போன்ற வாயுமுள்ள காலதூதர்க
ட்டிப்பிடித்தார்களாதலால் நீபோயவர்களைத்தண்டித்து நற்குணங்களி
ல்குறைவில்லாத ராசகுமாரனைக் காத்தியென்றருளிய காலசங்காரமூர்த்
தி யேவலைப் பெற்றுக்கொண்டுவந்தோம்-எ-று, (௫௬)

இம்மதலைசிவன்றொண்டனாகுர்வாழ்நா ளீராயிரமுடையோனின
னுக்கிந்த, வெம்மையிடர்விளைவித்தகூற்றைக்கட்டி விமலன்முனங்கொ
டுபோவோமென்னலோடு, மம்மவெனமதிமயங்கித்தருமராசனு திரண்
டாண்டேயிவனுக்காயுவென்னச், செம்மையுடனுரைத்திடலும்வீரனகே
ட்டுச் சித்திரகுத்திரனகணக்கிற்றெரியாயென்றான,

(இ-பு,) இந்தப்புத்திரன் சிவனடிமையாவன் இவன் பதினாயிரம்வ
ருஷம ஆயுசுடனிருப்பவன் இத்தன்மையுடையவனுக்குக் கொடுந்துய
ரம்விளைத்தகாலனைக் கட்டிக்கொண்டு பரமசிவன் சந்நிதிக்குக்கொண்டு
போவோமென்று சொன்னவுளவில் தருமராசனமதிமயங்கி இவனுக்குப்
பன்னிரண்டுவயதுதானென்று நிச்சயமாகச்சொல்லியவளவில்வீரபத்திர
ர்கேட்டுச் சித்திரகுத்தன் கணக்கைப்பார்த்து நீ தெளிந்துகொள்ளெ
ன்றார்-எ-று, அம்ம-அசைச்சொல், (௫௭)

வரவழைத்துத்தருமனுண்மைக்கணக்கன்றன்னை வதனம்பார்த்திந்த
விளமதலைக்காயுந், திரவளவையுரையெனலுமவனுந்தேர்ந்து செப்புவானீ
ராறுண்டளவேதிண்ணம், பரவருசீருருத்திரத்தின்பலத்தினாலே பசீ
டதினாயிரம்பருவம்பாரில்வாழப்,புரவலனேபின்னெழுதிக்கிடத்தல்கண்
டேனெனப்புகலவவனுமஞ்சிப்புகலலுற்றான்,

(இ-பு,) அந்தவார்த்தையைக்கேட்ட தருமராசன் சித்திரகுத்தனைவ
ரவழைத்து அவன்முகம்பார்த்து இந்தவாலிபனுக்குள்ள ஆயசுமுடிவை
ப்பார்த்துச்சொல்லென்றான் சித்திரகுத்தன் கணக்கைப்பார்த்துப்பனனி
ரண்டுவயதென்பது நிச்சயமே ஆனால் சீருருத்திரமந்திரபலத்தினால்பதி
னாயிரம்வருஷம் பூமியில்வாழும்படி பின்னாலெழுதியிருப்பதை யிப்
போதுபார்த்தேனென்றுசொல்ல யமன்பயந்துசொல்லுகின்றான-எ-று, ()

புன்மையினன்மடமையினலடியார்செய்த புன்றொழிலேயேபொறுத்த
ல்புலவோர்செய்யுந், தன்மையெனப்புகழ்ந்துநமனிரந்துகூறத் தனிவீரன்
பிணித்தகொடுங்கூற்றைவிட்டுத், தொன்மையதார்சிவலோக மடைந்தா
ன்வாசத், தொடைத்தருமன்றன்பதியிற்புகுந்தாணிந்த, நன்மையதிசயத்
தகைமைபுகலவேண்டி நாமுனதுநகரடைந்தோநாமவேலோய்,

(இ-பு.) புல்லமியினாலுந் தெரியாமையினாலும் அடியார்கள்செய்த
குற்றங்களைப் பொறுத்துக்காப்பது பெரியோர்கள்செய்கையென்று காலன்
வீரபத்திரரைப்புகழ்ந்து இரந்துசொல்ல அவர்காலனைக்கட்டியகட்டினைய
விழ்த்துவிட்டுப் பழமையாகியசிவலோகமடைந்தார் வாசனையுள்ளமாலை
யணிந்ததருமராசனதன்னுலகம்போய்ச்சேர்ந்தான் இந்தநல்ல அதிசயத்
தைச்சொல்லவேண்டி அரசனே நாமுன் நகரத்திற்குவந்தோம்-எ-று, ()

வேறு.

என்றுநாரதமுனிவராகியர்பலு மெழும்வலிக்குவவுத்தோள்
குன்றுபோல்வளர்த்தோங்கிடவுவகை யங்குணாகடலினிடைமூழ்கி
நன்றுநன்றெனவருநகளர்முதலிய நான்மறைபவர்ப்போக்கித்
துன்றுதாரவன்சிவந்தனேடாணடி தொழுதுவீற்றிருந்தானே

(இ-பு.) இவ்வாறுநாரதமுனிவர் சொன்னமாத்திரத்தில் பலமுள்ள தாய்க் குவிந்திருக்கும் புயங்கள் மலைபோல்வளர்ந்தோங்கிப் பூரிக்கத்தக் கதாகச் சந்தோஷமாகிய சமுத்திரத்தில்மூழ்கி இதுமிகவும் நல்லகாரியம் நல்லகாரியமென்றுசொல்லி முனிவர்கள்முதலாகிய பிராமணர்களை அனு ப்பிவிட்டுப் பூமாலையணிந்தாசன தன்புத்திரனுந்தானுமாகப் பரமசிவ ன் திருவடிகளைத் தொழுது வாழ்ந்திருந்தான்-எ-று. (௩௰)

இந்தமந்திரத்தருநியுமாகினோர்க் கௌறப்பவனருள்கூரு
கந்தவண்ணமுங்காலனைக்கடிந்து மரும்பெறற்றிருமைந்த
னந்தரீர்ந்தறுமாயுளைப்பெற்றது நவின்றமாக்கதைதன்னைச்
சிந்தைசெய்குநர்படிக்குநர் சிவபதமடைவாரே

(இ-பு.) இந்தமந்திரப்பெருமையும் இதைச்சொல்லுகின்றவர்களுக்குப் பரமசிவன் கிருபைசெய்யுமுறையும் காலனைக்கடந்ததும் பெறுதற்கரிய ராசகுமாரனிறந்தல்நீங்கினதும் பதினாயிரம்வருஷம் இருக்கும்ஆயுள்பெ ற்றதும் சொல்லுகின்ற இந்தமகத்துவமுள்ளசரித்திரத்தைச்சிந்திப்பவர் களும் படிப்பவர்களும் கேட்பவர்களும் சிவபதமடைவார்கள்-எ-று. ()

இன்னதன்மையதிக்கதையெனமுனி யிளமதிச்செழுங்கண்ணி
மின்னுசெஞ்சடையமலனைவிமலனை யமலனையடிபேணி
நன்னலந்தருமிருந்தவத்திறமைசா னவையிலார்களிகூரச்
சொன்னநான்மறைவியாதனருள்பெறு சூதமாமுனிசொன்னான்

(இ-பு.) இந்தச்சரித்திர மித்தன்மையுடையதென்று இளம்பிறைம தியை மாலைபோலணிந்திருக்குஞ் செஞ்சடையையுடைய அமலர் விமலர் நிமலரென்னும் பலதிருநாமமுள்ளபரமசிவனுடையதிருவடிகளைத்தொ ழுது நல்லபோகத்தைத்தருவதற் கேதுவாகிய தவநெறியுள்ள நைமிசாரணி யமுனிவர்கள் ஆனந்தம்அடையும்படி சூதமுனிவர்சொன்னார் அவரோ வேதங்களைவகுத்துக்கூறிய வியாதமுனிவருடைய சிஷ்யர்-எ-று. (௩௨)

இருபத்தொன்றாவது

சிருத்திராகினையுரைத்த அத்தியாயம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௲௩௱௭௰௭.

சிவமயம்.

இருபத்திரண்டாவது

வஞ்சனைமுத்திபெற்ற அத்தியாயம்.

நீட்டுமற்றோர்கதை சூதன்விளம்புந்
தீட்டலாதமனற யோர்திறல்வேந்த
ரீட்டுசீர்வணிக ரென்றிவர்மூவர்
நாட்டுவேதநெறி நண்ணிலரின்றோர்

(இ-பு.) சூதமுனிவர் மேலுமொருசரித்திரஞ்சொல்லுகின்றார் பரிசு த்தர்களாகிய பிராமணர்கள் வெற்றியுள்ள க்ஷத்திரியர்கள் ...... வைசியர்களாகிய இம்மூவரும் விதிவிலக்குகள்சொல்லும் வேதத்தின் மார்க்கத்திலிருப்பவர்கள்-எ-று. (௧)

அந்தநூலினதி காரமிலாராய்
வந்தபின்னவரு மாநிலமீதிற்
சந்தமில்லிழி குலத்தினர்தாமுஞ்
சிந்தைநன்கொரு வுதேமொழியாரும்

(இ-பு.) அவ்வேதங்களோதும் அதிகாரமில்லாதவர்களாய்வந்தருஞ் சூதரும் பெரிய இந்தவுலகத்திலிருக்கும் மாட்சிமையில்லாத இழிகுலத்தாரு ம் மனதில் கற்பினிலையில்லாத மாதர்களும்-எ-று. (௨)

மூற்றுநன்னதிகளை மூழ்கினரோனு
நற்றவம்புரிதலொடிலரோனு
முற்றபேறமுவந்திலரோனும்
பற்றிலானடி பணிந்திலரோனும்

(இ-பு.) நல்லநதிகளிலெல்லாம் மூழ்காதவர்களாயிருந்தாலும் நல்லத வஞ்செய்யவேண்டுமென்று நினையாதவர்களாயிருந்தாலும் பொருந்திய தருமங்கள் செய்யாதவர்களாயிருந்தாலும் விருப்பு வெறுப்பு இயல்பாக வேயில்லாத பரமசிவனுடையதிருவடிகளைப் பணியாதவர்களாயிருந்தா லும்-எ-று. (௩)

ஓதற்குமரிதா யுணர்கல்லாப்
பாதகத்தொழில்கள் பண்ணினரோனுஞ்
சோதிக்கிறைமுடித்திடுதொல்லோன்
காதையிற்படு கருத்தினராலும்

(இ-பு.) சொல்வதற்குமரியதாய மனதில்நினைக்கவுங்கூடாத பாவங் களைச்செய்கின்றவர்களேயானாலும் பிரகாசமுள்ள பிறைபணிந்த ஆதி

காரணனாகிய பரமசிவனுடைய சரித்திரத்தில் சிந்தை வைப்பவர்களானு ன்-எ-று. (௪)

பாவமென்றமொழி பற்றறுத்துத்
தேவரும்பரவி வந்தனைசெய்யக்
கோவையங்குமுத வாயுமைகொண்கன்
மேவரும்பதவி மேவியிருப்பார்

(இ-பு) பாவமெனகிற சொல்லின் பற்றைக்கெடுத்துத் தேவர்களும் துதித்துத் தொழும்படி கோவைப்பழமொத்த செவ்வாயினையுடைய உமையவள் கணவனாகிய பரமசிவன் வீற்றிருக்கும் சிவபதவியில் பொருந்தியிருப்பார்கள்-எ-று, (௫)

கரந்தைவார்சடையர் காதையைநாளு
மிருந்துகேட்க வியலாதவர்தாமு
மசந்தைநீங்கி யனைநாழிகையேனுந்
தெரிந்துகேட்கி னுறுதீவினைமாய்ப்பார்

(இ-பு.) கரந்தைப் பத்திரமணிந்த நீண்ட சடையையுடைய பரமசிவன் கதையை ஒருநாள் முழுவது மிருந்து கேட்கக்கூடாமையாயிருப்பவர்கள் தமகளுக்கிருக்கும் வருத்தத்தைவிட்டு அரைநாழிகையாவது ஞாபகத்துடன் கேட்பார்களானால் ஜென்மங்கள்தோறும் பொருந்தியதீவினையைக்கெடுப்பார்கள்-எ-று, (௬)

வேறு.

கலியுகத்துநற் கன்மமியற்றுதன்
மலிபுராணநூல் கேட்பதுமாட்சியா
லலையுநெஞ்சம லைவற்றுமெய்ந்நெறி
நிலைபெறுஞ்சிவ யோகத்துநிற்குமே

(இ-பு.) கலியுகத்தில் நற்கருமங்கள் செய்குதலும்நிறைந்துள்ளபுராணங்களைக்கேட்பதுமாகிய பெருமையால் சஞ்சலப் படுகிறமனம் அலைவற்று நல்லநெறியில் நிலைத்திருக்கத்தக்க சிவயோகத்தில்நிற்கும்-எ-று, (௭)

வஞ்சகக்கரு நெஞ்சமுமாகிலா
வஞ்செழுத்தை யடையவரந்தைபோம்
விஞ்சுதீவினை வேரும்வேரறத்
துஞ்சிலாத்துரி யத்திற்சுகிக்குமே

(இ-பு.) வஞ்சகமுள்ளதா யிருண்டிருக்கிறமனமும் குற்றமில்லாத பஞ்சாக்ஷரத்தைப்பொருந்துமாகில் துன்பம் நீங்கும் அதிகரிக்கும் தீவினைக்குக்காரணமாகிய ஆணவமலம் நீங்கும் அது நீங்கினால் மாயாதுரியாவத்தையில் சுகித்துக்கொண்டிருக்கும்-எ-று. (௮)

உம்பராமுது ண்டவர்தங்கட்கு
நாம்புகாய நகைதிரைமாற்றுமா
லெம்பிரான்கதை யின்னமுதுண்டவர்
வெம்புகாய வினைமுற்றுமாற்றுமே

(இ-பு) தேவர்களுக்கும் கிடைப்பதற்கரிய அமுர்தம் உண்டவர்களுக்குத்தங்களுடையதென்று நம்பிக்கொண்டிருக்கிற சரீரத்தின் நரையையுந்திரையையு மாற்றிவிடும் நம்முடையவன் சரித்திரமாகிய அமுர்தமுண்டவர்களுக்கு வருத்தத்தைக்கொடுக்கிறதாகிய சரீரத்தின் வினையையெல்லா நீக்கும்-எ-று, (௯)

ஆன்றகாதையின மேல்விருப்பற்றவர்
தோன்றுமுற்கதை பொய்யென்றுசொல்பவர்
மூன்றுகோடி நரகத்தின்மூழ்கியே
நான்றநாவுடை நாய்ப்பிறப்பெய்துவார்

(இ-பு) மகிமைமிகுந்த சிவகதையில் விருப்பமில்லாதவர்களும் முன்னடந்திருக்கும் சிவகதை பொய்யென்று சொல்லுகிறவர்களும் மூன்றுகோடிநரகத்தில் அழுந்திப் பின்பு தொங்கிய நாவுடைய நாயாகப் பிறப்பார்கள்-எ-று. (௰)

எக்குலத்தவ ராயினுமீர்ஞ்சடை
முக்கணான்கதை யோதுமுதல்வனை
மக்களுள்ளிவ னும்மகனெனபவர்
கக்குவாய்ப்புழுக் கான்றிடநோய்கொள்வார்

(இ-பு.) எந்தக்குலத்திற் பிறந்தவனே யானாலும் குளிர்ச்சிதங்கியசடையையுடைய பரமசிவனது சரித்திரத்தைச் சொல்லுகின்ற முதல்வனை மனிதர்களுக்குள் இவனுமொரு மனிதனென்று எண்ணிச்சொல்லுகின்றவர்கள் கக்கும்வாய்ப்புழுக்களைக் கக்கும்படியான வியாதியையடைவார்கள்-எ-று, (௰௧)

ஓங்குசீர்த்திருக் காதையுணர்த்துநர்
தாங்குபீடத்தை யின்றித்தனாயிரா
ராங்கவர்களையு மஞ்சலிசெய்திடார்
தீங்கினேருநர் சிற்றவைசேர்ந்திடார்

(இ-பு) மேலான மகிமையுஞ் சிறப்புமுள்ள சிவசரித்திரஞ் சொல்லுகின்றவர்கள்தாங்குகிற ஆசனமில்லாமல் தரையிலிரார்கள் அவிடத்திலிருக்கும் யாரையுமவர் துதியார்கள் தீயவர்களிருக்கிற புல்லியசபையிற்சேரார்கள்-எ-று, (௰௨)

செப்பார்திக்கனி செய்யுமிடத்தினு
மதிமிலாளர் குதர்க்கமாங்கினு

முறவில்வஞ்சிய குண்டாட்டிடத்திலும்
பொறியிலாளர் பெருந்துயிடத்திலும்

(இ-பு.) அற்பமாகப் பாவத்துக் கேதுவாகிய சிறப்புகள் செய்யுமிடத்திலும் அறிவில்லாதவர்கள் கூடும் அரங்கத்திலும் தந்தங்களவர்களுடன்மர்தர்கள் விளையாடிக்கொண்டிருக்குமிடத்திலும் அங்கப்பழுதானவர்களிருக்குமிடத்திலும்-எ-று. (௰௩)

கம்பயால்சரி கல்கிலுங்கணைக
ளிம்பர்நாடு முழுவதுமிரிந்து
செம்பொன்மாரி பொழியினுஞ்செஞ்சடை
நம்பன்காதை நயக்குநவிற் றிடார்

(இ-பு.) அசைதலையியல்பாகவுடைய பெரிய யானை கொடுத்தாலும் இடமகன்ற இவ்வுலகத்தில் காடு கொடுத்தாலும் பொன்மாரி வருஷித்தாலும் செஞ்சடையையுடைய பரமசிவனது சரித்திரத்தை விரும்பிச் சொல்லார்கள்-எ-று. (௰௪)

மூவராதி முழுதுலகத்துள
தேவர்வாழுந் தினகரமுன்னருந்
தாவுதண்ணற வுண்டுகருப்பியிர்
பூவர்சோலைப் புனிதவிடத்திலும்

(இ-பு.) திரிமூர்த்திகள் முதலான எல்லாவுலகங்களிலுமிருக்கின்ற தேவர்கள் வீற்றிருக்கும் ஆலயங்களின் முன்னும் பெருகாநின்ற குளிர்ச்சிதங்கியதேனையுண்டு வண்டுகளிசைபாடிக்கொண்டிருக்கத்தக்க மலர்களையுடையசோலையாகிய புனிதமுள்ளவிடத்திலும்-எ-று. (௰௫)

தீதிலாத செழுநதிதீரத்துங்
கோதிலார்கள் குழீஇயவிடத்திலும்
வேதவேதியர் வேள்விச்சாலையினு
மாதிமாத வரம்மனைமுற்றத்தும்

(இ-பு.) தீமையில்லாத செழுமையுள்ள நதிதீரத்திலும் குற்றமில்லாதவர்களாகியநல்லவர்கள்கூடிய இடத்திலும் பிராமணர்கள்செய்யும் யாகசாலையினிடத்திலுமாதியாகிய முனிவர்களுடைய ஆசிரமத்தினிடத்திலும்-எ-று. (௰௬)

மற்றும்வேறுள புண்ணியமல்குசீ
குற்றதெவ்விட மவ்விடத்தோறுமவர்
பற்றிநாளும பரமன்றிருக்கதை
முற்றுமோதி முழுதுணர்கேள்வியார்

(இ-பு.) இவ்விடங்களிலுமல்லாமல் இன்னுமிருக்கிற புண்ணியம் பொருந்திய சீரினையுடையது எவ்விடமோ அவ்விடத்திலும் வேதாகம

சாஸ்திரபுராணங்கள் முழுவதையு மோதியுணர்ந்த பெரியோர்கள் அன்புடன்சிவகதையை நாடோறுஞ்சொல்வார்கள்-எ-று. (௰௭)

நாயகன்கதை நாடோறுங்கேட்குநர்
தூயதீரினிற் றோய்ந்துவெண்ணீறணிந்
தேயநித்தக் கருமமியற்றிப்பின்
காயவைம்புல னுங்கருத்தொடாக்கியே

(இ-பு.) பரமசிவனுடைய சரித்திரத்தையே தினந்தோறுங் கேட்பவர்கள் பரிசுத்தமுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதியணிந்துகொண்டு தங்கள் வருணாச்சிரமத்துக்குரிய நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சரீரத்தைப்பொருந்திய ஐம்புலன்களும் கருத்தும் ஒருவழிப்பட்டு-எ-று. (௰௮)

வல்லதேசிக னுக்குமணித்தீவி
சொல்லேலக்கி யுறுபொருளீந்துநன்
கல்லவாண்மிடி னத்தலடங்கிவன்
புல்லசாவை மாப்புறம்போக்கியே

(இ-பு.) சிவகதைசொல்லவல்ல ஆசாரியனுக்கு விரைவாக ரத்தினங்கொடுத்து மிகுந்தபொருளுங்கொடுத்து நல்லதல்லாததாகிய வார்த்தைபேசுதலைவிட்டு மிகவும் புன்மையானவர்களைப் புறத்தில் போக்கிவிட்டும்-எ-று. (௰௯)

பத்தியோடொல்கு பாவகத்தோடுறு
வொத்தநற்றவி சேறலொழித்தநால்
வித்தகற்குக்கீழ் மென்றவிசொன்றியே
சித்தம்வேறறக் கேட்பதுசெவ்விதால்

(இ-பு.) பத்தியுடனும் ஒடுக்கமுள்ளபாவகத்துடனும்பொருந்திச் சிவகதைசொல்லுகின்றவ ராசனத்துக்குச்சரியான நல்லாசனத்திலிருப்பதையொழித்தவராசனத்துக்குக்கீழ்ந்த ஆசனத்திலிருந்துகொண்டு மனம்வேறேரிடத்திற்செல்லாதவண்ணமாகக் கேட்குதல்நன்மையாம்-எ-று.

அன்றிக்கேட்கு மிடத்தழுக்காற்றினற்
சன்றிவேறோர் பொருளினைக்கற்பிப்பா
ரொன்றலாத வுரைத்தெதிர்வாதிப்பார்
பன்றியாயிர்தப் பாரினுதிப்பரே

(இ-பு.) இவ்வாறன்றிக் கேட்குமிடத்தில் பொறாமையினால் மனம்வெதும்பித் தங்கள்கற்பனையால் வேறொருபொருளைச் சொல்லுகின்றவர்களும் பலபலவாறாகச்சொல்லி யெதிரில் வாதுசெய்கின்றவர்களும் இவ்வுலகத்தில் பன்றியாய்ப்பிறப்பார்கள்-எ-று. (௨௧)

அன்பினிற்கதை கேட்பதலாற்பிறர்
வன்பினெய்தி மனங்கொளித்துக்கேட்பவர்
அன்பமெய்து சுடலையிலோங்கிய
வின்பமில்கனி யெட்டியதாகுவார்

(இ-ம்.) அன்புடன் சிவகதையைக்கேட்பதைவிட்டுப் பிறருடைய வன்மையினில் மனம்வைத்து அவர்கள்சொல்லும் வேறொன்றைக் கேட்பவர்கள் துன்பம்பொருந்திய சுடலையில் ஓங்கிய மதுரமில்லாத பழத்தையுடைய எட்டிமரமாவர்-எ-று. (உ௪)

கூறுமாக்கதை கூட்டுமுனுப்பனே
வேறுதங்கருமத் துவிரைந்துபோஞ்
சிறுசிந்தையர் செல்வத்தைத்துய்க்குங்கா
லேயசெல்லா இடையிலிழப்பரே

(இ-ம்.) சிவகதையையாரம்பித்து முடிப்பதற்குமுன் மத்தியில் தாங்கள் தங்கள்காரியத்தைக்குறித்து விரைந்துபோய்விடுகின்ற அற்பமுள்ளவர்கள் நல்வினையினுல் செல்வத்தைஅனுபவிக்குங்காலத்தில் தங்கள்ஆயுள்வரையில் அனுபவியாமல் மத்தியிலிழந்துவிடுவார்கள்-எ-று. (உ௫)

மஞ்சமேறியும் வெள்ளிலைமார்த்தியு
ஞ்சமுண்டவர் நற்கதைகேட்குந
ரஞ்சியேயவன் றாற்றிக்கழுவினைத்
துஞ்சமாகக் கிடந்துதவிப்பரே

(இ-ம்.) மஞ்சத்தின்மேலேயிருந்துகொண்டும் தாம்பூலம்போட்டுக்கொண்டும் விஷபானஞ்செய்தருளிய பரமேசுவரனுடையசரித்திரத்தைக்கேட்பவர்கள் பயங்கரமானகழுமரத்தில் ஏறிக்கொண்டு கழுமரத்தினுலேயே துஞ்சமாக அதிலிருந்து தவிப்பார்கள்-எ-று. (உ௬)

கயிலையண்ணல் கதையையிகழ்ந்துழித்
துயில்புரிந்திடுந் தொல்வினைப்பாதகர்
வெயில்காந்திடு வெங்கொடிக்குன்றியே
யயின்முட்காட்டுறை கூகையதாகுவார்

(இ-ம்.) கயிலாசபதியின்சரித்திரத்தைச் சொல்லுமிடத்தில் நித்திரைசெய்கின்ற பழையவினையையுடைய பாவிகள் தன்னைக்கொல்லுகின்ற கொடிய காக்கைகளுக்குப்பயந்து பகலிலொளித்துக்கொண்டு இருப்பதற்குக் காட்டில் வாசஞ்செய்கிற கோட்டானுவார்கள்-எ-று. (உ௭)

படர்ந்தவேணிப் பரமன்றிருக்கதை
யிடந்தசேக்கையிற் கேட்குமதியிலோர்
மிடைந்தமால்வரை யுச்சியிடர்புகுந்
தடைந்துபாசுண மாகிப்பிறப்பரே

(இ-பு.) விரிந்தசடையையுடைய பரமேசுவரனது சிறப்புள்ள சரித்திரத்தைப் படுத்திருந்த பாயலிலிருந்தபடியே கேட்கும் அறிவீனர்கள் நெருங்கிய பெரியமலையின் உச்சியிலிருக்குங் கல்வெடிப்புச்சந்துகளில் புகுந்துகொண்டிருக்கும் பாம்பாய்ப்பிறப்பார்கள்-எ-று. (உ௬)

ஈசனகாதைசொல் வானன்றியின்னுமோர்
தேசிகன்பிற னுண்டென்றுசெப்புமோ
காசுநீக்குங் கதைவிளக்கங்கொடு
மாசின்மாக்கண மனவிருணீக்கலால்

(இ-பு.) சிவகதை சொல்லுகின்றவனை யன்றி வேறேயொரு ஆசிரியனுமுண்டென்று வேதாகமங்கள் சொல்லுமோ (எனெனில்) குற்றங்களைத் நீக்கத்தக்க சிவசரித்திரமாகிய தீபத்தைக் கொண்டு பழுதில்லாத மனிதர்கள் தங்களுடைய மனவிருளை நீக்குதலினுல்-எ-று. (உ௭)

ஆதலாற்கதை கேட்குமவையினைப்
போதமென்றிய புண்ணியமாந்தர்கள்
சாதகக்கவிர்க்கும் பயபத்தியாய்
காதலல்லவையென்றெண்ணிக்கண்ணுவார்.

(இ-பு) ஆகையால்சிவகதைகேட்குஞ் சபையை ஞானம்பொருந்திய புண்ணியவான்கள் பாவத்தை நீக்கும்படியான பயபத்தியுடனதிமேலான ஈசனுடைய சந்நிதியென்றுகருதி மேற்சொல்லிய குற்றம் யாதொன்றுமில்லாமலிருந்து கேட்பார்கள்-எ-று. (உ௮)

வேறு.

இத்தகையதனையான்முன் னியம்றகதையொன்றுளைப்பாங்
கத்துதிரைமணிகொழிக்குங் கடல்சூழ்செந்தமிழ்நாட்டின்
மைத்தொரீஇப்பொழிலுடுத்த வாட்களாமுதாநகரில்
வித்தகராயின்னுறையும் வேதியர்களனைவோரும்

(இ-பு) சிவகதையானது இத்தன்மையுள்ளகதையாகும் இனிமுன் நடந்ததொரு சிவகதைசொல்லுகிறேன் அலைமேலெழுகின்றஅலைகளானது இரத்தினங்களைக்கொழிக்கும் பெரியசமுத்திரத்தையுடைய தமிழ்நாடாகிய பாண்டிநாட்டில் மேகங்கள் சேரும்படி பூஞ்சோலைசூழ்ந்த வாட்களமென்னும் பழையநகரத்தில் ஞானவான்களாயிருந்தவாழும் பிராமணர்களெல்லாரும்-எ-று. (உ௯)

இப்பேறுதொழிநிறம்பப் படைத்தசெங்கையராய்
நாப்பேறுமந்திரமு நற்பொழிலுமாதரந்து
பூப்பேறுபரனகழலி லருச்சிக்கும்புத்தியின்றி
மீப்பேறுங்கடவுள்ர்த முப்போதுக்கடனும்விட்டார்

(இ-பு.) நித்தியாருஷ்டிசெய்யுந் தொழில்மாறி அயுதயோக்கிய மனையுடையவர்களாய் நாவினுலுச்சரிக்கும் மந்திரத்தையும் தர்ப்பருமங்களையு மிகவுமறந்து மலர்களையெடுத்து அன்புடன் பரமேசுவரனுடைய திருவடிகளினருச்சிக்கவேண்டுமென்கிற விவேகமுமில்லாமலவானுலகில்வாழுங் கடவுளர்களைவந்திக்கத்தக்கதான திரிகாலச் செய்தொழிலையு மறந்துவிட்டார்கள்-எ-று, (௯௰)

அரணைமூர்த்தனியோதா ரந்தணருங்கடாக்கரும
காரணமாம் நீசர்தொழில் கடைப்பிடித்தமறையோருள்
வாரணிற்கும்பமுலை வஞ்சனைதன்மணக்கொழுநனு
மாவனிக்குளவிதுரனெனப் பெயருடையோனுருவனுளன்

(இ-பு.) வேதங்களையு மோதாதவர்களாய்ப் பிராமணர்களுக்குரியதல்லாத செய்கைக்குக் காரணமாகிய நீசத்தொழிலை அனுசரித்திருக்கும் பிராமணர்களில் கச்சணிந்த தனங்களையுடைய வஞ்சனையென்பவளின் கணவனாகிய இவ்வுலகத்தில் விதுரனென்று சொல்லும் பெயரையுடையவனொருவன்-எ-று, (௯௧)

பண்பில்லாநெறிபூண்டோன் படிற்றொழுக்கினனிழிஞனு
னண்பிகழ்ந்தபட்டைகனி யிளமுலையினலமெய்த்து
வெண்பலாலரவுமிழ்ந்தவிடந் தலைக்கொண்டெனக்காமுற்
றெண்பொனூர்தடமார்பன் றன்மனையைப்பொழிதிட்டான்

(இ-பு.) நன்மையில்லாத ஒழுக்கத்தையுடையவனும் மேலுக்குப் பிராமணவேஷமும் உள்ளே நீசத்தொழிலுமாகிய செய்கையில் விருப்பமும் ஒளிபொருந்திய பொன்மாலை யணிந்த மார்பையுமுடையவனுமாகிய அந்த விதுரனென்பவன் நேசத்துடன் பொது மகளிருடைய இளமைதங்கிய தனங்களைப் புணரும் கலவியின்பம் அனுபவித்துக் கொண்டு பாம்பானது வெண்மைநிறமாகிய பற்களினூற கக்கியவிஷம் தலைகேறியதுபோலக் காமதலைக்கேறக்கொண்டு தன்மனைவியி னிடத்தி லனுபவிக்குங்கலவி யின்பத்தை யொழித்துவிட்டான்-எ-று, (௯௨)

துணைபிரிந்தமடவன்னப் பேடைபோற்றுயருழந்து
கணைமலிந்தகருங்கட் காமசரத்தாலலைந்து
பிணைநெடுங்கண்டுயின்மறப் பனிகத்தாற்பெரிதுணங்கி
மணமலிந்தகுழலோதி வஞ்சனையுமிதுசெய்தாள்

(இ-பு.) வாசனை பொருந்தியதாய்ச் சுருண்ட அளகத்தையுடைய வஞ்சனையானவள் ஆணன்னத்தைப் பிரிந்த பெட்டையன்னத்தைப்போல் துயரமடைந்து பேய்கள் சஞ்சரிக்கும் இராக்காலந்தோறும் காமபாணத்தினால் அலைந்து மானபார்வைபோல பார்வையுடைத்தவள் சரீரம் பசலை படர்ந்து இவ்வாறுசெய்யத் தொடங்கினள்-எ-று.

காதலானுமெருவிக் கற்புநிலைமாய்புமிகக்
கேதிலானிழிகுலத்தோ னொருவனையிற்றேணதுசையாற்
போதுலாமலரணையிற் றனிக்காமவிடாய்தவிர்வான்
மாதராடனைவாது மருவுநாடனிலொருநாள்

(இ-பு.) காமவிகாரத்தினால் தர்மவழியை நீங்கிக் கற்புநிலையாகியவை கைப்பிடிக்கப் படாதவளாகிய வஞ்சனையானவள் அன்னியனாகிய ஒரு இழிகுலத்தானுடைய அழகுள்ள தோளைப் புணரும் விருப்பத்தினால் மகரந்தம் நிறைந்த மலரணையில் தனக்குள்ள காமவிடாய் தவிரும்பொருட்டு ஒருநாளும் வருந்தவிராமல் புணர்ந்துகொண்டிருக்கும் நாளில் ஒருநாள்-எ-று, (௯௩)

பதியுணாதன்செவிவெதுப்பப் பைந்தொடி தன்கற்போர்வான்
பொதியமழையினவாயமந் தயிபனும்புகுந்திட்டுத்
தழையினர்தோள்வஞ்சனையுங் காளையொருவனுமனைவாய்
வினையுடனமென்பூவணைமேல் மெய்குழையநல்லுகர்ந்தார்

(இ-பு.) இவர்களுக்குக் காரியம் வரைந்து பேசிக்கொள்ளும் பழிமொழி தன்காதுகளைச்சுடுதலினால் விதுரனென்பவன் வஞ்சனையின் கற்பு நிலையைப்போல மழைபொழிந்துகொண்டிருக்கும் அர்த்தராத்திரியில் தன்மனைக்குச்சென்றபோது இளமையான பருவமுள்ள பெருத்த தோள்களையுடைய ஸ்திரீயும் ஒருவாலிபனுமாக வீட்டுக்குள் விருப்பமுடன் அணைமேல் மெய்குழையப்புணர்ந்துகொண்டிருந்தார்கள்-எ-று. (௯௪)

கண்டனன்றுன்னெனுநெஞ்சன் கதமேறியோவணுகுதல்
கொண்டங்கபடிற்றொழுக்கனவெருவினன்குலைந்தகன்றுன்
வண்டுறழ்ங்குழல்பற்றி வஞ்சகனைமனங்கலங்கத்
தண்டமிதழ்க்குவனென்றுத் தாட்டுணையாற்றுகைத்திட்டான்

(இ-பு.) இவ்விதமிருப்பதைக்கண்டு நெருக்கிட்ட மனமுள்ளவனுய்ப் பற்றியெரியும் தீப்போலமிகுந்த கோபங்கொண்டு வருவதை அந்தச்சோரன்பார்த்துப்பயந்து ஓடிப்போனன் வண்டுகளிசைபாடிக்கொண்டிருக்கும்படியான அளகத்தைப்பிடித்திழுத்து வஞ்சனை மனங்கலங்கும்படி தண்டிக்கிறேனென்று தன்கால்களால் மிதித்தான்-எ-று. (௯௫)

கன்ங்குழையுமிகமறுகிக் கணவனெயென்றனரியுந்
தின்புகுறைத்துகேட்டாற்பின் செந்தித்தியெனவிரப்ப
மனக்குறைத்துடையானும் மலர்க்குழல்விட்டொயொனதுங்
கனிற்கண்ணீரொழுகத் தனிபநுமிழற்றுவான்

(இ-பு.) அந்தினார்கள் பதித்திருப்பதினால் பருவான குழையணிந்த காதுகளையுடையவளாகிய வஞ்சனையானவள் மிகுதியாக மனமுருகி காதலனேயெனத் தன்வார்த்தையைக் கேட்டுப் பிறபாடு செக்கணவனே

ன்றுபோடென்றுசொல்ல மனமிரங்கி அடிக்காமல் அனாதத்தைவிட்டு நீ [illegible] வனைதச்சொல்லென்ற வளவில் தன்னுடைய தனங்களின்மேல் கண் ணீர் [illegible]ப்படி அழுதுகொண்டு ஊளிபோன்ற தன்மையுள்ளவள் சொல்லுகின்றாள்-எ-று, (௫௩)

வஞ்சனைலறனொருவிப் பொதுமாதர்வசமாகி
யெனகனுர்வழமினறி யின்றளவுமிகந்தனைநா
னுன்கனுலருளோக்கம் பெறுதருகியுடன்மெலிந்து
புனகனுல்வேனிலான் கணைக்கிலக்காய்ப்புழுங்கினனே

(இ-பு,) இக்கமில்லாமையினுல் தாம்நெறியைமாதிப் பொதுமாதர்வசமாகி எனனிடத்தி லாசையுமில்லாம லின்றளவும் நீவிட்டாய் நான் உன்கிருபாநோக்கம் பெறுமல் நெடுநாளாக மனமுருகி யுடல்மெலிந்து துயரங்கொண்டு மன்மதபாணங்களுக்குஇலக்காகவருந்தினேன்-எ-று,

நல்லிளமைசெவ்விலை நாளும்வழிதேயப்
பொல்லாமையினக்கினெனக் காமக்கனல்கொளுத்த
வல்லிபம்போற்செறன்றல் வாவாவிலைவுந்தென்கட [illegible]
மல்லல்செயக்கக்குமுறு மாற்றுதேனுமினமே

(இ-பு,) நல்ல இளமைப்பருவமும் அழகும்பெண் [illegible]யும்நாள்தோறும் வீணுகிவிடும்படி கருமாதனலீக்ஷளத்தி லுண்டாகும் நீபோலக் காமக்கினிகொளுத்தவும் புலிபோலத்தென்றல்வரவும் ஒளிபொருந்திய சந்திரனுந் தெளிவுள்ள சமுத்திரமும் துன்பஞ்செய்யவும் இராத்திரிகாலந்தோறுஞ் சகிக்கமாட்டாதவளானேன்-எ-று, (௫௪)

காவலநீயேவுனையென் றிக்நெடுநாட்காத்திருந்தே
னுவல்பெருகத்தமியே னற்றேறப்தவநிழைத்தேன்
பூவர்குழன்மாதருக்குள காளையர்க்கும்பொதுவன்றோ
மேவரியபெருங்காம மெனவிம்மிவிளம்பினுள்

(இ-பு,) என்னைப்பாதுகாக்கத்தக்க தணவனே யித்தனைநாள்வரைக்கும் வருவையென்று கற்புநிலைக் காத்துக்கொண் டிருந்தேன் நீவாராமையினுல் காமம் அதிகரிக்கத் தனியாயிருக்கும் நான் சகிக்கமாட்டாமலகுற்றஞ்செய்தேனா காமமானது மாதருக்கும் ஆடவர்களுக்கும் பொதுவல்லவாவென்று அழுதுகொண்டு சொன்னாள்-எ-று, (௫௫)

இரங்கினன்றன்பாற்றவநென் றெண்ணினன்சேட் [illegible]
மரங்களொடுகற்றுனுமய மாழ்கிபரற்றுதல்வேண் [illegible]
தரங்கநெடுங்கடலனைய காமநோய்தடுப்பவரார்
சுருங்கவினியொருசூழ்ச்சி சொல்லுகிறேன்றனி [illegible]

(இ-பு.) குலமாதர்களுக்குத்தகாத செய்கையைமேற்கொண்டு [illegible] நிலையில்லாதகொடிய மாதர்களிருக்கும் நிலைமையிலிருக்கிறேன் [illegible] நிலையில்லாதகொடிய மாதர்களிருக்கும் நிலைமையிலிருக்கிறேன் நானிழந்து மேம்புவருமட்டும் நானசெய்தபாவம் உலகத்தில் ஒருவருஞ் செய்கிறார்கள்-எ-று, (௫௬)

ஆதலாலின்றெனக்குச் சாக்காடுமண்ணிபது
நீதிலாவேதியநீ செப்பியகாதைப்படியே
கோதிலாயபுழுக் குழியிடைவிழ்வதுமெய்
யீதினுலுள்ளமுடைந் தென்றுசதென்றுகின்றேன்

(இ-பு,) ஆகையினு லிப்போது எனக்குச் சாக்காடுசமீபித்திருக்கின்றது நீ குற்றமில்லாத முனிவரே நீர்சொல்லிய கதையின்படி நான்செய்தபாவத்தினுல் புழுக்கள் நிறைந்தநரகத்தில் விழுவதுமெய்யே இதனுல் மனம் உடைந்து என்றுசதும் என்றுகின்றேன்-எ-று, (௫௭)

காய்ந்துகாலன்றூதர் கனல்முருத்துத்தண்டிச்சி
லாய்ந்தவமில்லேனையஞ் சலேயென்றேற்றி
வாய்ந்தெரியத்தழலில் வாடாமனுயடியே
னேய்ந்தழுதுமாழ்காம லார்வந்துதவுவார்

(இ-பு.) காலதூதர்கள்கோபித்துத்தண்டித்தால் அப்போது நல்ல புண்ணியஞ்செய்யாத என்னை நீபயப்படாதேயென்று ஆறுதல்பொருந்திய நாகாக்கினியில் வருந்தாமலும் நாயடியேன் அழுது தளர்வதைசோராமலும்யார்வந்து உதவிசெய்வார்கள்-எ-று, (௫௮)

என்றுபலபலவும் பன்னியிடருழந்து
நின்றுமறைமுதல்வ நீயேபுரந்திடெனச்
சென்றுநெடுங்கச் சேவடியில்வீழ்ந்திறைஞ்சிங்
கன்றுமனத்தாள் கலுழ்ந்துதைப்பவேதியனும்

(இ-பு,) இவ்வாறு பலபலமொழிகள்சொல்லித் துயர்கொண்டவளாகி நின்று முனிவரே அடியேனைத்தேவரீரே காப்பாற்றுமென்று எதிரில் நின்று முனிவரே அடியேனைத்தேவரீரே காப்பாற்றுமென்று வெப்புமிகுந்த சமீபத்திற்போய் அவர்பாதத்தில் விழுந்து பணிந்து வெப்புமின்குந்த [illegible]டயவளாய் அழுதுசொல்ல அம்முனிவர்-எ-று, (௫௯)

[illegible] பொல்லவெடுத்தாயிழையே
வி[illegible]தவடன்னைப்பற்றி நெஞ்சமகன்றிடுவாய்
யா[illegible]பெரும்பாதகத்தி னச்சமகன்றிடுவாய்
சூழ்ந்தபுரிநினக்கே யின்னிரக்கந்தோனறுதலா
லாழ்ந்தமலனொலே நீவிரைவிட்டோடுங்காண

(இ-பு) பணிந்தவள் கையைப்பற்றி மெல்லவெடுத்து மாதே நீ மிகு தியாய்ச்செய்த பாபத்துக்குப் பயப்படும் பயத்தை நீக்கிவிடு ஆதியில்பா வங்களைச்செய்த உனக்கே யிப்போது பயம் உண்டா யிருப்பதினால்பத ழ்த்தப்பிய பூப்போல உன்பாவமெல்லாமுன்னைவிட்டோடிப்போம்-எ-று,

காரிகைநின்மூப்பாற்ற வம்புரியக்காலமிலை
மாரியெனத்தானம் வழங்கப்பொருளின்றும்
சீரியாய்ப்பாவ மகற்றச்சிவகதையாம்
பேரியலொன்றுண்டதனைச் பேசக்கேட்டபிடியாய்

(இ-பு) மாதே நின்னுடைய மூப்பினால் தவஞ்செய்வதற்குக் கால மில்லைமேலும் மழைபொழிவதுபோலத் தானங் கொடுப்பதற்குப் பொ ருளுமில்லை யாதலால் மகத்துவமுள்ளதாயுன் பாவத்தை நீக்கச்சிவகதை யாகிய புராணமுண்டு அதன் பெருமையைச் சொல்லக்கேட்டு (உன்மன தில்)உறுதியாக வைத்துக்கொள்-எ-று, (கக)

யானெனதென்றெண்ணி யிருவினையுமீட்டுவது
மானதயன்றி மடவாலேமற்றில்லை
யானமடவாயை யிருளுக்குமஞ்ஞான
வினைமுறுபாவ விருளுக்கும்வெய்யவனும்

(இ-பு) நானுடைய பொருளென்றும் யான்செய்தேனென்றும் மெ ல்லினல்வினை தீவினைகளைத் தேடிக்கொள்ளுவது மனதின்செயலேயன் றி வேறொன்றுமில்லை அதற்கேதுவாகிய ஆணவமல மாயையென்கிற இ ருளுக்கும் அஞ்ஞானமாகிய கிழமையுற்ற பாவமென்னு மிருளுக்கும்சி வத்தச்சிவகதை சூரியனைபோலாகும்-எ-று. (கஉ)

கொய்யுளைமாவேள்வி யொருகோடிசெய்திடினு
மையனருள்கதையருள் பெயும்பேறீந்திடுமோ
வையுளெவர்க்கிருக்கும் பரன்காதைத்தெள்ளமுதை
யுய்யவினிதாயருந்தி யும்பர்வீட்டெய்துதியால்

(இ-பு) கொய்யும்படியான கழுத்து மயிரினையுடையஅசுவமேதயா கம் ஒருகோடி செய்தாலும் அவைகளில்சிவசரித்திரம் அருளிச்செய்யப் பேறும் பேறுகளைக்கொடுக்குமோ துன்பங்களையெல்லாம் நீக்கத்தக்கசி வகதையாகியதெளிவுள்ள அமிர்தத்தை நீ உய்யும்படியினிதாயுண்டு மே லானபோகத்தை அடைவாயாக-எ-று, (கூ)

மூன்றேழைகையோடு விரதந்தவறுபலப்
பெற்றோர்மனவிருளை நீக்கப்பெறலின்றும்

(இ-பு) அவளிவ்வாறு சொல்லியதைக் கேட்டுத் தன்னிடத்திற்கும் தயிருக்கின்றதெனவெண்ணி யிரங்கி இளங்கொடிபோன்றவளே? மாங் கள் மலைகளுங் குழையும்படி நீஅழுது சோரவேண்டுவதில்லை அலைகளை யுடைய சமுத்திரம்போலப் பெரிதாகிய காமநோயை நீக்கத்தக்கவர்க ளொருவருமில்லை இப்போதுனக்கொரு உபாயஞ் சுருக்கமாகச்சொல்லு கிறேன் அந்தப்படிசெய்யென்று-எ-று, (எக)

வேறு,

அந்தணரேயாக விழிகுலத்தோர்களாக
வந்தவரையெல்லாம் வரையாதுமேவியவர்
தந்தபொருண்முற்று மெனக்களித்துன்றுகாமச்
சிந்தையமீர்வளைவுஞ் சேர்குவாயெனப்பணிந்தான்

(இ-பு) பிராமணர்களேயானாலும் அவர்களுக்குத்தாழ்ந்தவருணத் தார்களேயானாலும் வந்தவர்களையெல்லாம் நீக்கிவிடாமல் புணர்ந்து அவ ர்கள் கொடுத்தபொருள்களையெல்லாம் எனக்குக்கொடுத்து உன் காமவி டாய்தீரும்படி மனதிலுண்டாயிருக்கு மையல்நிறுதிரவனைக்கும் சேர் ந்துகொண்டிருவென்று சொன்னான்-எ-று. (சை)

நறுமலர்க்கோதாய்நீ கல்கும்பொருள்கொடுத்து
வீறுபெறுங்கொங்கை விலைமகளிர்தோள்விரும்பி
யுறுகின்றவிங்காமமொழிவதுதற்கேயுமிசைவுடைவனை
கூடிபுறகேட்டதற்குக் கொற்றொடியுந்தானிசைந்தே

(இ-பு) பரிமளிக்கும் பூமாலையணிந்த அளகத்தையுடையவளே? நீ கொடுக்கும் பொருளையெல்லாம் பூரித்திருக்கும்பெரியதனங்களையுடைய விலைமாதர்களுக்குக்கொடுத்து அவர்களைப்புணர்ந்து எனக்குண்டாகிய காமம்ஒழியும்படி யின்பம்அநுபவிக்கிறேனென்று சொல்லியதைக்கேட் டு அதற்கு அவளுஞ்சம்மதித்தாள்-எ-று, (சுரு)

அன்னதுவேசெய்வ னடியனேனென்றிறைஞ்சி
மின்னிடையாள்சால மகிழ்ந்துவெளிப்படையாத்
துன்னினார்தம்மையெல்லாந் தோடோய்ந்துவரளித்த
பொருளையெல்லாங்கேள்வனுக்கே யீந்தாள்பொலங்கொடியே

(இ-பு) அடியேன் அப்படியேசெய்கிறேனென்று கணவனைவணங்கி மின்போன்றஇடையையுடைய பெண்கள் மிகவும் வெளிப்படையாகவந்த வர்களையெல்லாம் புணர்ந்து அவர்கள்கொடுத்தபொருளையெல்லாந் தன் கணவனுக்குக்கொடுத்தாள்-எ-று, (சுசு)

௨௪

ஆங்கவனுஞ்செம் பொன்னளப்பில்கொண்டன் றன்றே
பூங்கனிகைமாதர் புகழுமனைவழங்கித்
தீங்கலிவாய்வின்னமுத முண்டுகிலனாள்கழிய
வீங்கியழப்பெய்தி வினையாப்பத்தளர்ந்திருன்

(இ-பு.) அந்தவிடனென்பவன் தன்பேர் விடுக்கிறபொருளெல்லாம் அப்போதைக்கப்போதே அழகுள்ள வேசையர்கள் புகழும் அதிகமாகக்கொடுத்து மதுரமுள்ள அமுதம்போல இனிப்புள்ள அவ்வடையதரபானமுண்டு சிலநாள்நீங்கினபின் பிருந்தழப்படைந்தான்-எ-று.

தன்கணவன்பொன்றத் தனியனுங்கைகாமயுற்று
மின்னுவைபொற்கலனுங்கீந்துமிகழப்பெய்திப்
புன்கணுறுத்லைப் புராரிசிவராத்திக்கு
நன்குணர்சேரெல்லோருங் கோகன்னகனணைகிருர்

(இ-பு.) தன்கணவனிறந்துபோகவே வஞ்சுளையானவள்கையிலணிப் பிரகாசிக்கும்மங்கிலியத்தாடன பொன்னுபரணங்களுமிட்டு மிருதழப்படைந்து துன்பப்பட்டுக்கொண்டிருக்குங்காலத்தில் பரமசிவனுக்குரிய தினமாகிய சிவராத்திரி தரிசனத்துக்குப் பத்தியுள்ளோரெல்லாம் கோகன்னத்துக்குப்போகுருர்கள்-எ-று,

அற்றைப்பொழுதிலணியிழந்தவஞ்சுளையுஞ்
சுற்றத்தொடும்போய்த் தொன்னகரின்பாலணைந்து
கொற்றக்கொலைமழுவோன் கோடிதீர்த்தம்படிந்து
கற்றைச்சடையான் திருவடியைக்கைதொழுதாள்

(இ-பு,) கைம்பெண்ணையிருக்கும் வஞ்சுளையும் சிவராத்திரிதினத்தில் அவிடத்துக்குப்போகின்ற சுற்றத்தாருடன் தானும்போய்ப் புராதனமாகிய கோகன்னஞ்சேர்ந்து வெற்றிபொருந்திய கொலைமழுவேந்திய பரமசிவனுடைய கோடிதீர்த்தத்தில்முழுகிக் கற்றையாகிய சடையையுடைய பரமசிவன் திருவடியைத்தொழுதாள்-எ-று,

மீட்டுந்திருக்கோயில்சூழ் வருங்கால்வேறுருசார்
தீட்டுஞ்சிவகருணம் யாவுதொருதேசிகனு
னேட்டின்புறத்தினிய நுணர்ந்தவாசிப்பக்
கேட்டஞ்சியினனல் கிளாநடுங்கிநின்ருள்

(இ-பு,) மறுபடி ஆலயத்தைப் பிரதட்சிணஞ் செய்யும்போது ஒருபக்கத்தில் எழுதிவாசிக்கும்படியான சிவதருமமெல்லாம் ஒ

சிகன் புத்தகம்வைத்துக்கொண்டு வாசித்துப் பொருள்சொல்லக்கேட்டுப்பயந்துமிகவு துன்பமுண்டாக நடுங்கிநின்ருள்-எ-று, (௬௮)

அக்காதைகூட்டு மிகநடுங்கவணைந்தணன்முன்
புக்கா டொழுதாள் புராணபுராதனனே
யிக்காதைசொல்பொருளி னெண்ணரியபாவங்கள்
தொக்கசார்பவதெல்லாஞ் சொன்னுயவற்றுள்ளே

(இ-பு.) அந்தச்சரித்திரத்தைக் கேட்டுமுடிவில்தேசிகரிடத்தில்போய் அவர்பாதந்தொழுது ஐயா! புராணிகரே! இந்தச்சரித்திரத்தில் சொல்லுகின்றபொருளினல் அளவிறந்தபாவஞ்செய்கிறவர்கள்படும்பாடெல்லாம்சொன்னீர் அவைகளுக்குள்-எ-று, (௬௯)

காமவசத்தாற் கணவற்கிழந்தசெழுந்
தாமமுலையார் தமையொறுக்குந்தண்டத்தான்
வாய்ந்தீய்ம்ப முருகவழன்றுடுத்தக்
சேமமுசலஞ் செலுத்துவாமென்றுரைத்தாய்

(இ-பு.) காமவசத்தினுல் கொண்டவனைவிட்டுச் சோரம்போனமாதரையெல்லாம் தண்டிக்குமக்கூற்றுவன் செழுமையுள்ளமாலையணிந்த முலையையுடைய அவர்களழகியபிதம்பத்தில் தீயில்காய்ந்த முசலமென்றும் இருப்புலக்கையைச் செலுத்துவானென்றுசொன்னீர்-எ-று, (௭௰)

கற்புநிலைகடந்த காமக்கயத்தியரை
நற்பகத்திற்றூண்டிலிட்டு நான்றலையமேற்றூக்கிப்
பற்பலகூறுக மழுவாய்ப்படத்துணித்து
வற்புமத்திக்காய்ந்த மணல்சொரிந்துதீய்ப்பனென்றுய்,

(இ-பு.) கற்புநிலைதவறிய காமிகளாகிய கீழ்மைத்தனமுள்ள மாதர்களின் குறியினிடத்தில் தூண்டில்மாட்டித் தொங்கியலையும்படி மேலேதூக்கிப் பலபலதுண்டாகும்படி கோடாலியினுல் வெட்டித்துணித்துஉடலிப்படுத்திக் காய்ந்த மணலைச்சொரிந்து தீய்ப்பார்களென்று சொன்னீர்-எ-று. (௭௧)

காப்புக்கடைகழித்த காமக்கிழத்தியரைச்
சேப்பவுங்காய்ந்த இரனிருப்புகீள்கழுவிற்
பூப்பொருவுமல்குலைப்பொதுத்தேற்றிக்
கோப்பர்கெடுங்காலமெனவெடுத்துக்கூறினுய்

(இ-பு,) காவலிடத்தைக்கடந்த காமிகளாகிய கீழ்மைத்தனமுள்ள

மாதரைத் தீங்கும்படி தியில்காய்ச்சி இரண்டாகிய நீண்டகழுவில் நு வைப்போல மிருதுவாகிய அல்குல் வெதுப்பத்தக்கதாகக் குத்தியேற்றி நெடுங்காலம் வைப்பார்களென்றுசொன்னீர்-எ-று, (௭௨

கற்புநெறிமாறு நிலையொருவர்க்கையர்தந்
செம்பொனகலல்குலின்வாய்ச் செம்புருக்கிவிட்டதனுற்
பைம்புழுக்கலிப்ப நாய்தசையைப்பற்றியுண
வெம்புறவை விருந்தயாவோய்வனொரும்

(இ-பு) தம்பிய கணவரிடத்திலிருக்கும் நிலைமாறிய மாதர்களுடைய செம்பொன்னிறமுள்ள அல்குலில் செம்பினையுருக்கிவிடுவதினுலினி வாசப்புழுக்களுண்டாகவும் நாயானது தசையைப்பிடுங்கி புண்ணவுங் கொடியபருந்துமுதலிய பட்சிகள்விருந்துண்ணவும் அம்மாதர்கள்சேர்வார்களென்றீர்-எ-று, (௭௩

கொண்டோர்ப்பிழைத்த கொழுங்கயற்கண்மங்கையரைக்
கண்டேசர்மன்னடுங்கக் காரிருப்புத்தியகலில்
விண்டேயுடலம் வெடிக்கவறுப்பரெனத்
தண்டேய்கரத்துத் தவமுனிவேசாற்றினுய்

(இ-பு) ஒருகையில் தண்டர்வந்திய தவமுனிவரே கொண்டவனை விட்டு மற்றொருவனைப்புணர்ந்த செழுமையான சேற்கெண்டையொத்த கண்களையுடையமாதர்களைப் பார்த்தவர்கள் மனமும் நடுங்கும்படி தீய்ந்த கருமையுள்ள இரும்புத்தகழியிலிட்டு உடல்வெடிக்கும்படி வறுப்பார்களென்றுசொன்னீர்-எ-று, (௭௪

நாயடியேனின்னவெலாங் கேட்டுநடுநடுங்கித்
தூயமுனிவரனே துன்பக்கடல்விழுந்தேன்
காயும்விடமனைய காமந்தலைக்கொள்ளச்
சேயபருவத்தே கற்பின் றிறம்பிழைத்தேன்

(இ-பு) பரிசுத்தராகியமுனிவரே சொல்லும்விடத்தையொத்தசாமந்தலைக்கொள்ள இளமைப்பருவத்தில் கற்புநிலைகெட்டிருந்தேன் ஆதலால் நாயினேனே வினைகளையெல்லாங்கேட்டு நடுநடுங்கித் துக்கசாகரத்தில் முழுகினேன்-எ-று, (௭௫

குலமகளிர்க்கேலாத கொள்கையைமேற்கொண்டே
நிலைமையில்லாத்திப்பெண்டிர் நிற்குநிலைநின்றேன்
கலனிழந்துழப்பெய்து காறுபியானசெய்த
பலவினையின்பாதகத்தைப் பாரிலெவர்செய்தார்

சற்றேனுக்கேட்டவருஞ் சாருபமாவரெனக்
கற்றோர்புகழ்கதையாற் காலங்கழிப்பாயே

(இ-பு) நிறைந்த சந்தோஷத்துடன்-விரதங்கள்-தவங்கள்-செய்யப் பெற்றவர்கள் மனவிருளை நீக்குந்தன்மை பெறுதலில்லைஇக்கதையில்சொற்சேற்றுக்கேட்டவர்களும் சாருபம் பெறுவார்களென்று கற்றவர்கள் சொல்லுவதற்குக் கதையால் உன்காலத்தைக்கழிப்பாயாக-எ-று, (௭௯)

உன்றுதலைநாளிற் சாமனென்றோற்பெயர்
கொண்ட பெரும்பாவியனை [illegible]
[illegible] புகன்றமுனிவிட்டதனால்
பண்டுபழங்கதைதனைற கேட்டிலைபோயைந்தொடியே

(இ-பு) சாமனென்று சொல்லும் பெயர்பெற்ற பெரியபாதகன்முன் பொருவன் இருந்தான்-அவன் மரணகாலத்தில் தேவர்பிரானுகிய பரமேசுவனுடைய திருநாமங்களைச்சொல்லி அறியாமல் மோக்ஷத்தை அடைந்தான்-அந்த பழையபுராணசரித்திரத்தில் நீ [illegible] கேட்டதில்லையோ-எ-று, (௮௦)

ஆங்கவனைப்போலுனக்கும் சாக்காடணுகுநாள்
தேங்குசிவநாம நாவினுலுச்சரித்துப்
பாங்குபெருகதைதனைக் கேட்டிற்பழவினையாற்
றீங்ககலநீயுஞ் சிவபதத்திற்சேர்வாயே

(இ-பு) அவனுக்கு வந்ததுபோல உனக்கு மரணகாலம் வந்திருக்கையில் மேன்மைதங்கிய சிவநாமங்களை நாவினுலுச்சரித்து கன்மையுள்ள இக்கதையைக்கேட்பாயாகில் உன்பாவங்கள் நீங்கும் நீயும் சிவபதஞ்சேர்குவாய்-எ-று, (௮௧)

பொய்யென்றுகொள்ளா தாண்கதையிற்புத்திவைப்பார்
மெய்யென்றவனுமன் கேட்டுவியந்துவைப்பார்
வையர்புகழுஞ்சிவ பதத்தில்வாழ்ந்திருப்ப
ரையன்றிருவாக்கை சத்தியமீதாமென்றான்

(இ-பு) பொய்யென்றெண்ணாமல் இக்கதையை மனதில் வைப்பவர்களும் மெய்யாகவே மோக்ஷத்தைக்கொடுக்குமென்று சொல்லுகின்றவர்களும் இவ்வுலகில்கேட்டு மகிழ்ச்சியுடன் வாயினுற்சொல்லுகின்றவர்களும் பிறவுலகத்தார் புகழும்படி சிவபதத்தில் வாழ்வார்கள் அவனுடைய திருவாக்கு மெய்யேயென்றுசொன்னான்-எ-று, (௮௨)

என்னமறையோனியம்புமதுகேட்டுருகிக்
கன்னன்மொழிவஞ்சியோயுங் காவிவிழிநீர்ததும்ப

அன்னவழியேயின் னடியனேனின்னருளான்
மனனுமிறனியெனு மாக்கடனீந்திடவே

(இ-பு) இவ்வாறு முனிவர் சொல்லியதைக்கேட்டுக்கருப்பைப்போல மதுரிக்குஞ் சொல்லினையுடைய வஞ்சுளையானவள் நீலோற்பலம்போன்ற தன்கண்களில் நீர்ததும்பநின்று சுவாமிகளே தேவரீர் இருவையினால் அடியேனை சிவகதைகேட்டும் சிவநாமங்களைச்சொல்லியும் என்னுடைய அளவற்றசெனனசாகரத்தைநீந்த-எ-று, (௬௮)

சென்றேசிவபதத்திற்சேர்ந்திருக்குமாறுருணைக்
குன்றேதிருவுளத்தி லெண்ணிக்குவமற்ற
வின்றேகினங்குமிர வத்திரியுமுற்றவிற்ப
னன்றேதருகாதை காளுவிலென்றாள்

(இ-பு) சிவபதத்திற்சென்று சேர்ந்திருக்கும்படி மலைபோல அசையாநிலைமைபெற்ற குணமுள்ளசுவாமி தேவரீர் திருவுளத்தினிலெண்ணி இப்போதே திருவருள்செய்து நன்மைதருஞ்சிவகதையை நானறியச்சொல்லி அருளுமென்றாள்-எ-று, (௬௯)

மாதவனுமன்பின் மனம்பெருகிவன்காதத்தாற்
பூதிதனைவர்கிப் புனிதமுறமெய்பூசிக்
காதினுமூலத்திற் கண்ணுநுதன்மூலமொழிந்துத்
தீதில்கதையோதியவள் சிந்தைதெளிவித்தானே

(இ-பு) அந்தரிஷியானவர் அன்பில் மனம் வைத்துத் தம்முடைய திருக்கரத்தினால் விபூதியையெடுத்துப் பரிசுத்தமாகும்படி அவள்சரீரமுழுவதிலும் பூசிக் காதுக்குள் பஞ்சாக்ஷர மூலத்தையுபதேசித்துக் குற்றமில்லாதசிவகதைசொல்லி அவள்மனந் தெளியச்செய்தார்-எ-று, (௭௰)

சைவநெறிபூண்டதவக் கொடியுடக்கதைகேன்
மெய்யுணர்வினிற்கைத மைந்தாடோறுமீதா
மையமுருங்கண்டனை நிருத்தான்வழிபட்டவா
லைவனையுமைவிடயத் தேகாதடக்கினாள்

(இ-பு) சைவநெறிபொருந்திய தவமுள்ள வஞ்சுளையானவள் அந்தச்சிவகதையில் உண்மையறிவுடன் மனத்திலுண்டான ஆசை நாடோறும் அதிகரிக்கவேண்டு காளகண்டத்தையுடைய பரமசிவன் திருவடிகளை ஆராதிப்பதினால் பஞ்சேந்திரியங்களை அவைகளுக்குரிய விஷயங்களிற்செல்லாதவண்ணம் அடக்கினாள்-எ-று, (௭௧)

பத்திநெறிநின்று பல்லிழைவுதான்றவிர்ந்து
முத்திமுனிவர்போன் முப்போதுநீர்மூழ்கிச்
சுத்தமரவுரியே தூசாமருங்குடுத்து
வித்தகனக்கமணி வெண்ணீறினிதணிந்தாள்

(இ-பு.) பத்திநெறியில்நின்று பலவாகிய இச்சைகளைநீக்கி முத்தியடைய முனிவர்கள்போல மூன்றுகாலத்திலும் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமுள்ளமரவுரியே வஸ்திரமாக அரையி லுடுத்து ருத்திராக்ஷமும் விபூதியும் இனிமையாகத் தரித்துக்கொண்டாள்-எ-று, (௭௨)

வேறு.

மையார்மழுவெம்படையாய்சரணங் கருணைக்கடலேசரணஞ்சரணம்
பையாடரவத்தணியாய்சரணம் படர்செஞ்சடையாய்சரணஞ்சரண
மையார்கலிவெந்திறகொண்டிடவான் மழைமஞ்செனவேவருநஞ்சயினு
மையாசரணஞ்சரணம்மெனையா ளமலாவிமலாசரணஞ்சரணம்

(இ-பு) இருக்கர்த்திலமைந்தமழுவாளனே சரணம் கிருபாசமுத்திரமே சரணஞ்சரணம் படங்களையுடைய சர்ப்பாபரணங்க ளணிந்தவனே சரணம் பரந்த செஞ்சடைக்கடவுளே சரணஞ்சரணம் கருங்கடல் வெந்துவற்றவும் தேவர்வருந்தவும் மேகம்போலேவந்த விஷமுண்ட நாயனே சரணம் சரணம் அடியேனை யாட்கொண்ட நிமலனே விமலனே சரணம் சரணம்-எ-று, (௭௩)

தொத்தாரிதழித்தொடையாய்சரணஞ் சுருதிப்பொருளேசரணஞ்சரண
ஞ் சத்தாகியசிற்குணனேசரணஞ் சமனுக்கொருவெஞ்சமனேசரண
முத்தாரிளவெண்ணகையம்பிகைதன் மூறுகுந்தவசிந்தனைகண்டருளு
முத்தாசரணஞ்சரணம்மெனையா ளமலாவிமலாசரணஞ்சரணம்

(இ-பு.) கொத்துக்கப்பொருந்திய கொன்றைமாலையணிந்த சடாமகுடக்கடவுளே சரணம் வேதப்பொருளே சரணம்சரணம் சத்தாயிருக்கும் ஞானகுணமூர்த்தியே சரணம் காலனுக்குக்காலனாகிய ஐயனே சரணம் முத்துகள்போன்ற வெண்ணகையுள்ள பார்வதிதேவியாருடைய உறுதியான தவசிந்தனையைக்கண்டருளிய அத்தனே சரணம் சரணம் அடியேனை யாட்கொண்ட அமலனேவிமலனே சரணம் சரணம்-எ-று (௭௪)

கமலாலயனுக்கருளியவாய்சரணங் கயிலைக்கிரியாய்சரணஞ்சரண
மமலாகமதற்பரனேசரண நெடுமாலறியாய்சரணஞ்சரணஞ் [கொண்
சமராடினர்முப்புரமுங்கடிதிற் றழன்மண்டிடவெண்ணகைவெங்கனல்
டமராடியவாசரணம்மெனையா ளமலாவிமலாசரணஞ்சரணம்

(இ-பு) பிரமதேவனுக்குப் படைப்புத்தொழில் அருள்செய்தவனே சரணம் கயிலாசநாதனே சரணஞ் சரணம் நிர்மல ஆகமங்கள் அருளிய நாதனே சரணம் மாயவனும் காணவொண்ணாதவனே சரணஞ் சரணம் தேவர்களுடன் போர்செய்துகொண்டிருந்த முப்புரங்களும் விரைவில் பொருந்தும்படி வெண்ணகைத் தீயினால் போர்செய்த புராந்தகனே சரணம் அடியேனை யாட்கொண்டஅம்பலவனே சரணம் சரணம்-எ-று,

வேறு,

என்றுபலபலவு மேத்தியிலங்கிழையா
டொண்டுபடுசைவத் துறையின்முறைபேணி
நின்றசிவகதியா நிகரில்லாத்தெள்ளமுத
மொன்றுபடச்செவியா லுணர்ந்திலகட்கழித்தாள்

(இ-பு) வஞ்சனையானவ ளிவ்வாறு பலவகையாகத் தோத்திரஞ்செய்து பழமையாகிய சைவநெறியில்நின்று சிவகதியாகிய நிகரில்லாத தெளிவுள்ள அமிர்தத்தை மனம் ஒருவழிப்படச் செவியாலுண்டு பலநாள் கழித்தாள்-எ-று, (எகூ)

ஊழின்முறையா லுறுதவத்தாள்பொன்றுதலுந்
தாழுஞ்சடையரன் றருகணங்கள்வந்தேந்தி
வீழுங்கனகவி மானமிசையேற்றி
வாழுஞ்சிவபதத்தில் வஞ்சனையைக்கொண்டடைந்தார்

(இ-பு) உடல்விட்டுநீங்கும் ஊழ்வந்தடுத்துக்கொள்ளவே தவநெறியுள்ளவஞ்சனையானவள் மரணமடைந்தபோது தாழ்ந்தசடையுள்ள பரமசிவன் கட்டளையிட்டருளச் சிவகணங்கள்வந்து விரும்பத்தக்க சுவர்ண ரத்தினவிமானத்திலேற்றி அழியாமல் வாழ்ந்துகொண்டிருக்கத்தக்க சிவலோகத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்-எ-று. (எ[illegible])

மூன்றுசுடரு மழுங்கமுதிசெரளியா
லான்றசிவலோகத் தவிர்கனகமண்டபத்தி
லேன்றயனமால்விண்ணோ ரிருபாலுநின்றேத்த
வூன்றுமணிக்கோல்பிடித்து நந்தியொருபாலுலவ

(இ-பு) சூரியன்-சந்திரன்-அக்கினி - என்னும் முச்சுடர்களும் மிகுந்த ஒளியினால் மழுங்கும்படி விளங்கும் சிவலோகத்திலிருக்கும் பொன்மண்டபத்தில் பிரமனும்-மாயவனும்-விண்ணவர்களும் இருபக்கத்திலும் நின்று துதிக்கவும் ஊன்றும் வெள்ளிப்பிரம்பு பிடித்த வண்ணமாக நந்திதேவர் ஒருபுறத்திலுலாவவும்-எ-று, (எஅ)

தக்கன்றலையரிந்த வீரனொருசாரணுகத்
தொக்கணநாதரெல்லா மெம்மருங்குஞ்சூழ்போத
முக்கணுறுமைந்து முகமுன்னேனினிதமர்ந்த
மிக்கதிருச்சபையின் மெல்லியலைத்தான்விடுத்தார்

(இ-பு) தக்கனுடைய தலையையரித்த வீரபத்திரர் ஒருபுறத்தில் வந்திருக்கவும் மிகுந்த கணநாதர்கள் எந்தப்பக்கத்திலுஞ் சூழ்ந்திருக்கவும் திரிநேத்திரங்கள் பொருந்திய ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவனினிதாக வீற்றிருக்கும் திருச்சபையில் வஞ்சனையைக் கொண்டுபோய் விட்டார்கள்-எ-று, (எகூ)

அன்னவளுஞ்சிவ னடித்தாமரைபரவி
யென்னதவப்பயனோ கெய்தியதென்றேம்பலுற்றுக்
கன்னன்மொழிமாதுமையைக் கண்ணுதலையுங்கண்டு
தான்றவியவாநந்த வாரிக்குழிப்பட்டாள்

(இ-ள்) அந்தவஞ்சனையானவள் பரமேசுவரனுடைய திருவடித்தாமரைமலர்களைத்துதித்து எத்தன்மையான தவப்பயன் நம்மையிவ்விடத்திற்கொண்டுவந்ததென்று சந்தோஷமடைந்துகரும்பின்மதுரம்போன்ற மொழியையுடைய பார்வதிதேவியாரையும் பரமேசுவரனையும் பலதரம் பார்த்து நீங்காத ஆநந்தவெள்ளச்சுழியிலகப்பட்டுக்கொண்டாள் -எ-று

காவலவுணர்புணர் கட்டழித்தகண்ணுதலோன்
பாவையந்திருமுகத்தை யன்பினொடுபார்த்தருளிப்
பூவையிமயப் பொலங்கொடிக்குநாடோறு
மேவல்புரிதியெனப் பணித்தருளினனாயால்

(இ-பு) காவலவுணருடைய அவுணர்கள் முப்புரத்தைக் கட்டழித்தபரமசிவன் வஞ்சனையின் சிரனமேன்மையான முகத்தைக்கிருபையுடன்பார்த்தருளி மலையரையன்புத்திரியாகிய உமாதேவிக்கு நீ தினந்தோறும்பணிவிடைசெய்துகொண்டிருவென்று இன்சொல்லாற் கட்டளையிட்டருளினார்-எ-று. (அ௧)

ஆரணங்குபோல்வா ளரன்பணிப்பவெற்புதவுங்
காரணிக்கந்தேவல் புரிந்தொழுகுங்காலத்தில்
நாரணனுநான்முகனு மேத்துமவையில்லாப்
பூரணிமேகேட்டியெனப் போற்றிப்பணிந்தாளாத்தாள்

(இ-பு) தெய்வப்பெண்களையொத்த வஞ்சனையானவள் பரமசிவன் கட்டளையிட்டருளியபடி பர்வதராஜன்பெற்ற எல்லாவுலகங்களுக்குங்காரணமாகிய பரமேஸ்வரிக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்குங்கால

த்தில் (வஞ்சனையானவள் உமையவளைப்பார்த்து) பிரம்ம விஷ்ணுக்க போற்றி செய்கின்ற பரிபூரணியே யென்று துதிசெய்து அடியேன்செ ல்லும் விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டுமென்று பணிந்துசெ ளுள்-எ-று, (அ

பாதவஞ்சூழ்சாரற் பனிவரையின்பாங்கர்தோறு
மேதமின்றிப்பன்னா ளிருந்துதவம்புரிந்த
மாதவத்தினோர்க்கும் வழங்காப்பெரும்பதவி
போதமிலேற்கின்றருளா யிந்தபுராதனியே

(இ-பு) விருக்ஷங்கள் சூழ்ந்திருக்கும் பனிமூடிய மலைச்சாரல்க ளெல்லாம் குற்றமில்லாமல் பலகாலிருந்து ம[illegible] தவங்கள்செ முனிவர்களுக்குங் கெடாதபெரியபதவியை ஞானமில்லாதஎனக்குக் கையினால் அருளிச்செய்த புராதனியே-எ-று. (அ

யாலிப்பதத்தி லிருந்திருக்கவென்கணவன்
முனைனப்பரிசினானு வெவ்விடத்திற்சார்ந்தானோ
பானற்கருணைவிழிப் பைந்தொடியேகூறுகென்று
நானக்குழலுமையாள் சற்றேநகைத்துரைத்தாள்

(இ-பு) அடியேன் இந்தப்பதவியிலிருக்க என்கணவன் எத்தன் புடையவனுயெவ்விடத்தி லிருக்கின்றானோ நீலோற்பல மலர்போன் ருபாநோக்கத்தையுடைய தாயே சொல்லியருளவேண்டுமென்றவின் ப்பஞ்செய்தவளவில் மயிர்ச்சாந்துகமழும் அளகத்தையுடையஉமாதே யார் புன்னகையுடன் சொல்லுகின்றார்-எ-று, (அ

சந்தார்களபமுலைத் தார்குழலேநின்கணவன்
சிந்தாகுலமயலாற் றீவினையைச்செய்திறந்து
நந்தாதநீவாய் நரகனைத்துஞ்சேர்ந்தேறி
விந்தாடவியி லலகையாய்மேவுகின்றானே

(இ-பு.) சந்தனக்குழம்பணிந்த தனங்களையும் பூமாலையணிந்த கத்தையுமுடையவளே உன்கணவன் மனவியாகுல முண்டாக்கத்தக் தகத்தினால் பாவங்களையே செய்துகொண்டிருந்து பின்பு இறந்து ஒ காலுங்கெடாத அக்கினிமயமாய் நரகங்களிலெல்லாஞ்சேர்ந்து அ களைவிட்டேறிவிந்தாடவியென்னும் வனத்தில் பேயாயிருக்கிறான் எ

வேறு.

என்றுமுன்னமடவா ளிமவான்மகளைத்தொழுதே
யன்னேவன்னேயின்னு லடியேனிவ்வாறெழுக

முன்னேயெனையாள்கணவன பேயாய்முட்கானகத்திற்
பொன்னேயனையாய்திரித றகவோவென்னப்புகன்றாள்

(இ-பு.) இவ்வாறு சொல்வதற்குமுன் வஞ்சனையானவள் பார்வதி யைத் தொழுது பொன்போல யாவருக்குங் கிடைப்பதற்கரிய தாயே உ ன்னருளால் அடியே னிவ்வா றிருப்ப முன்னம் எனையாண்ட கணவன் முட்களையுடையவனத்தில்திரிவது தகுதியோவென்று சொன்னாள்-எ-று. அன்னே இரக்கச்சொல் (அசு)

கல்லார்மணிப்பூணுமையாள் கருணைகெழுமநோக்கி
யெல்லாத்துயரமுமுழ வெறிகொள்வாயொழிவாயென்றே
கல்லர்புனலுந்தவ னென்னுறுநினைவுருவும்
பொல்லாவினையுங்கழிந்துப் புகுதப்புரப்பன்தாண்டி

(இ-பு) ரத்தினாபரணங்க ளணிந்துகொண்டிருக்கும் பார்வதிதேவி யார் வஞ்சனையைக் கிருபைபொருந்தப்பார்த்து உன்கணவன் இப்போது அந்திருக்கிறபேயுருவமும் பொல்லாத பாவங்களையும்போக்கி யிவ்வி டத்திற்குவர என்றால் ரக்ஷிக்கப்படுவான் ஆகையால் நீ துயரத்தையெல் லாம்நீங்கென்று சொல்லி-எ-று, (அஎ)

வாசங்கமழுங்குழலாய் மின்னன்பானிபோகென்
றீசன்றேவியின்னு மியமேர்வீணைக்கிழவ
னுசொர்றில்லாவிஞ்சை யறிதம்புருவையனழையா
நீசென்றவளோட்டந்த நெடுங்கானகத்தைச்சேர்ந்தே

(இ-பு.) வாசனை கமழ்ந்துகொண்டிருக்கும் அளகத்தை யுடையவ ளே? உன்கணவனிடத்துக்கு நீபோகென் றருளிச்செய்து பின்னும் பார் வதிதேவியார் [illegible] வீணைக்குரியவனுகிய குற்றம [illegible]யுணர்ந்த தும்புருஎன்னு முனிவனையழைத்து நீயிவளுடன் சென் றந்தப்பெரியகாட்டிற்சேர்ந்து-எ-று, (அஅ)

சந்தமறையின்றலைவ னிசையையினசையாற்சாற்றி
யிந்தமடவாள்கணவ னிருந்தானகத்திற்பேயாய்ப்,
பந்தவினையாலுழலும் பாவமதனைநீக்கி
நந்தமுலகிற்கொடுவா வென்றாநங்கைநவின்றாள்

(இ பு,) பரமசிவனுடைய புகழை யிசையினுற்பாடி இவள் கணவன் அந்தப்பெரியகாட்டிற் போய்ப் பந்தப்பட்ட முன்வினையினாலுழலும்பா வரூபத்தைநீக்கி நம்முடைய உலகத்திற்கொண்டுவாவென்று பார்வதிதேவி யார்சொல்லியருளினார்-எ-று

நன்னித்திலவார்ஞ்சுறவ வங்கைவின்றபணிவைய
முன்னித்தலைமேற்கொண் டேமுகமன்கூறிப்பிறைஞ்சி
பின்னிற்நிகழுமணிதோய் விமானமீதினேறிப்
பொன்னிற்பொலிபுபேணிப் பூவையொடும்போனான்

(இ-பு.) நல்லமுத்துகளைபொத்த தந்தங்களையுடைய பார்வதிதேவியார் இட்டகட்டளைப்படி (நமக்கிந்தப்பாக்கியங் கிடைத்ததென்கிறதாகத்)த மனதிற்கருதிப் பிரசாதவஸ்துக்கொண்டு உபசாரவார்த்தைகள்சொல்லிப் பணிந்து மின்னலைப்போற் பிரகாசியாநின்ற ரத்தினங்கள் பொருந்திய விமானத்தில் வஞ்சனையென்பவளையேற்றித் தானுமேறிக்கொண்டு அப்புருமுனிவர்போனார்-எ-று. பொனைப்போற்பொலியுமெனப் பூவையெனபது பொன்போல விளங்குகின்ற தேகம்பெற்ற நாகணவாய்ப்பறவைபோல்வசனிப்பவளை. (௬௰)

இந்தக்கிளையாய்ப்பட விமானுஞ்செலுத்திச்சென்றான்
விந்தத்தடவிநடுவணடைந் தானடைந்தவேலைப்
பந்தப்படுதீவினையிற் பேயாய்ப்பட்டகஞ்சுருவோ
விந்தப்பிளவின்றுசெம்போலினை கொண்டலகுமெட்டிரோன்

(இ-பு.) மனோவேகம்போற் செல்லும் விமானத்தைச் செலுத்திக்கொண்டுபோய் விந்தாடவி நடுவில் அடைந்தார் அடைந்தவளவில் பந்தமாகிய பாவத்தினால் பேயாய்த்திரிந்துகொண்டிருந்த விஷம் போன்றகொடியதாகிய உருவத்தையும் இருபிறைபோன்ற இரண்டுகோர தந்தங்களையுமுடையவனும்-எ-று, (௬௧)

நீலைப்பொருவுங்கண்ணன் [illegible]வன்
வாயைப்பிளப்பனசைப் பல்[illegible]யைக்கடித்திடுவன்
வேயைக்கருகிற்கதிப்பன விழுவனெழுவனலறு
காயத்திடையேபுடைப்பன் கதறிக்கதறிக்குழல்வன்

(இ-பு.) தீயொத்த சிவந்த கண்களையுடையவனும் தனக்குத்தானே [illegible] கொண்டுசிரித்தழுகின்றவனும் [illegible] வாயை ஆவென்று திறப்பவனும் [illegible] கைப்பவனும் மலையைத்தாண்டி விழுகின்றவனும் மூங்கில்களைக்கரும்புபோற்கடிப்பவனும் விழுந்து விழுந்து எழுகின்றவனும் தன்சரீரத்தி லடித்துக்கொள்கின்றவனும் கதறிக்கொண்டு காற்றாடிபோற சுழல்கின்றவனுமாயிருக்கின்றான்-எ-று. (௬௨)

அன்னோன்றன்னைநோக்கி யந்தோவந்தோவிலையாள்.
முன்னுண் முயன்றதீவினையான முடிந்தவினைகளெல்லாம்

பொன்னேகாண்டியென்னப் புகன்றுபாசம்வீசிப்
பின்னவனைப்பிணித்துப் பேய்வல்லுருவந்தீர்ப்பான்

(இ-பு,) இவ்வாறிருப்பவனைப்பார்த்து அய்யய்யோ இவன் முன்னுள் செய்தபாவத்தினால் நேரிட்டசெய்கையையெல்லாம் வஞ்சனையே பாரென்று சொல்லிப்பாசத்தைவீசிப் பின்னாகக்கட்டி வலியபேயுருவந்தீர்க்க-எ-று, (௬௩)

வலத்திற்பேர்யாழ்வாங்கி வலித்துநரம்புவீக்கிப்
புலத்தேர்டமைந்ததவத்தோர் புகழ்துர்புருமாமுனிவன்
குலத்தோடிறப்பும் பிறப்பு மில்லாச்சுருகன்புகழைத்
தலத்தோர்வானோர்வியப்பச் சதியிற்பாடாநின்றான்

(இ-பு.) வலப்புறத்தில் பேரியாழையெடுத்து நரம்பினை வலித்துக்கட்டி ஞானத்துடனே பொருந்திய தவசிரேஷ்டராகிய புகழ்பெற்ற தாப்புருமுனிவர்குலமும் பிறப்பிறப்புமில்லாத பரமேஸ்வரனுடைய புகழைப் பூலோகத்தாருந் தேவலோகத்தாரும் அதிசயிக்கும் தாளக்கிரமத்துடனே பாடினார்-எ-று, (௬௪)

வேறு.

நஞ்சமிருக்குமணிமிடற்றோய் நெடுமால்சாத்துங்கமலர்க்
கஞ்சமிருக்கும்பதத்தோய் படியரிதப்பக்கடிச்சுகால்த்
தஞ்சமிருக்குமிடப்புறத்தோய் அமுதமதியினலர்கிரணப்
புஞ்சமிருக்குந்திருச்சடையோய் கயிலைவாழும்புகழோனே

(இ-பு.) விஷம்பொருந்தியிருக்குங் காளகண்டமூர்த்தியே மஹாவிஷ்ணுவானவன் சாத்துகின்ற தாமரைமலரிருக்கும் பதயுகளமூர்த்தியே அடியார்கள் இருதயதாமரையில் வீற்றிருக்கின்ற அன்னம்போன்றபார்வதிதேவியார் அமர்ந்திருக்கும் இடப்பாகத்தையுடைய கடவுளே! அமிர்தம் நிறைந்துள்ளபிறையினது விளங்கும் கிரணக்கூட்டமிருக்குஞ் செஞ்சடையையுடையானே கயிலாசகிரியில் வீற்றிருக்கும்புகழோனே-எ-று, (௬௫)

மூரியிருக்குந்துவசத்தோய் மூவர்யானன்பர்க்கருளருள்
மாரியிருக்கும்விழிக்கடையோய் [illegible]முழுகுமலரிதழி
வேரியிருக்குஞ்சடைமுடியோய் வெண்டைமறலியுரங்குதித்த
சேரியிருக்குங்கழலோய் கயிலைவாழுந்தொல்லோனே

(இ-பு,) ரிஷபம்பொருந்திய கொடியுள்ளவனே முனியாமல் அடியார்க்கருள்செய்யும்பொருட்டு அருள்மழைநிறைந்திருக்கும் கடைக்கண்ணுள்ளவனே தேன் ஆறுபோலப்பெருகும் கொன்றைமாலையின் வாசனைதங்

யிபசடைமுடியோனே கோபங்கொண்டுவந்த நமனையுதைத்தகாலத்தில் அவன்மார்பிலிருந்துண்டாகிய உதிரமிருக்கும் வீரகண்டையணிந்த திருவடியையுடையவனே கயிலாசகிரியில் வீற்றிருக்கும்புராதனனே-எ-று குணா ஒலி (௯௬)

வேதமிருக்குங்கபாலத்தோய் விழையுமிடையர்மகளிர்நவ
நீதமிருக்குஞ்சாயகத்தோ யிமவான்பயந்தகோரிழைதன்
பாதமுடையபுரிசடையோய் பதங்கூர்சுருதியாகரண
நாதமிருக்கும்பரிபுரத்தோய் கயிலைவாழுநம்பனே

(இ-ள்) வேதங்கள் பொருந்திய கபாலத்தையுடையவனே ஆய்ச்சியரெடுக்கும் வெண்ணெயுண்ட [illegible]னாகிய அம்புடையவனே மலையரையன்புத்திரியாகிய பார்வதியார் திருவடிதங்கிய திருமுடியுடையவனே பதங்களையுடைய வேதவியாகரண நாதம் நிறைந்துள்ள சிலம்பணிந்தவனே கயிலாயகிரியில்வாழும் நம்பனே-எ-று (௯௭)

தே[illegible]திலதுமொருசுடரோ தேவரேத்துமுழுமுதலே
தாயாயுலகமுழுநின்ற புராதனனுடைக்குந்தசவோ[illegible]
வாயானமறையோனுரைக்கருணின் சரிதைகேட்டும்[illegible]ற்சார்
பேயாய்விடுத்தவ்வந்தோனைப் புரவாதிருந்தாற்பிழையு[illegible]

(இ-ள்) குறைபாடிலக்காளுமொரோதன்மையா யிருக்கும் ஒப்பற்ற சோதிசுரூபமே தேவர்கள் துதிக்கும்பரிபூர்ணகாரணனே தாயாகியுலகமுழுவதையுந் தந்து ரக்ஷித்துச் சங்கரிக்குந் தகுதியை யுடையவனே திருமாமணன் தன்வாக்கினாற் சொல்லிய உன்சரித்திரத்தைக் கேட்டவிலக்ஷணத்தின்பொருட்டு விந்தாடவியிற் பேயாய்த்திரியுமிவனை ரக்ஷியாமலிருந்தால் உனக்குக் குற்றஞ் சம்பவிக்குமோ-எ-று (௯௮)

[illegible]ன்றுங்கிசையாளேத்துதனு மீசன்புகழான்மனநெகிழ்ந்து
நின்றானுள்ளந்தேறனைக்க நீர்தங்கெளிவதெனத்தெளிந்து
முன்றான்புரிந்தநிவினைகண் முழு[illegible]துமிகவெருவிக்
[illegible]னைழ்வுனையாழ்த்தும்புருவுங்[illegible]ளிகளைச்சாற்றினான்

(இ-ள்) இவ்வாறு யாழிசையினால் துதிசெய்தவனவில் பரமசிவன்புகழினால் மனநெகிழ்ந்து நின்றவனுள்ளமானது தேற்றுங்கொட்டையுரைத்தபாத்திரத்தில் நீர்தெளிவதுபோலத்தெளிந்து முன்தான்செய்தபாவங்களையெல்லாம் நினைந்து மிகுதியாகப்பயந்து யாழ்வாசிக்குந் தும்புருவுந்தன்னருந்தபுள்ள சொல்லைக்கேட்கச்சொல்லுகின்றான்-எ-று (௯௯)

[illegible]மையானைதிர்ந்ததிறத்தானு முரவோனிசைகேட்டதனுல்
மமையாதிழைத்தபாவமெல்லா மகற்றித்துயரக்கடல்கடந்தே
னிமையாமுக்கட்கொழுங்கனியை யிமயமயிலோடேத்துகின்றேன்
[illegible]மையாலுயர்ந்தோயெனவுரைத்துக் கயிலைநாதற்பாடினான்

(இ-ள்) உண்மை காந்தரிசித்த தன்மையினுலும் பரமசிவனுடைய புகழைக் கேட்டதினுலும் மிகுதியாகநான்செய்த பாவமெல்லாம் நீங்கித்துன்பக்கடலையுங் கடந்தேன் இமையாத முக்கண்ணுடைய செழுமையுள்ள கனியாகிய பரமசிவனையும் உமாதேவியையுந் துதிசெய்கின்றேன் கோனிறனுயர்ந்த முனிவரே யென்றுசொல்லிக் கயிலாயநாதனைப்பாடினான்-எ-று (௱)

செக்கச்சிவந்தசெழும்பாகே தேனேபாலேதெள்ளமுதே
முக்கட்கரும்பே [illegible] கனியேவேதமுழுமுதலே
மிக்கதருமம்பகர்காதை [illegible]வெண்துவிளங்கவிழுக்காத்
திக்கத்துழல்வேனடினைப்புரவா திருந்தாலுனக்குத்துக்குண்டோ

(இ-ள்) செக்கச்சிவந்ததாய்ச்செழுமையுள்ள [illegible]பாகேதேனே பாலேதெளிவுள்ள அமுதமே முக்கண்களுள்ள கரும்பே ஐந்து திருமுகங்களையுடைய கனியே வேதத்தின் முழுமுதலே மிகுந்த வேதருமசரித்திரத்தைக்கேட்ட என்மனைவியின்பொருட்டுத் துக்கத்திலுழலுகின்ற வென்னைக் காவாதிருந்தால் உனக்குக்குற்றமுண்டோ-எ-று (௱௧)

பச்சைவல்லிபடர்ந்தேறும் பவளக்குன்றேபழமறையின்
நுச்சியிசைவேலோர் [illegible] மூல்வாச்சர்கையொருகருவே
விச்சைமறையோனின் [illegible]விளம்பக்கேட்டமெல்லியற்காச்
செச்சைபலவைபானேனை யருளாதொழிந்தாற்குறையுண்டோ

(இ-ள்) பச்சைக்கொடி படர்ந்தேறும் பவளமலையே பழமையாகிய வேதங்களின் [illegible]யில் வேர்விட்டு [illegible]லாமுங்கெடாத சாகைகளையுடைய ஒப்பற்றதருவே ஞானவானாகிய [illegible]மணன்சொல்லிய உன்சரித்திரத்தைக்கேட்ட என்மனைவியின் பொருட்டு அறிவில் இளைத்த பேயாயிருந்த என்னை யாட்கொள்ளாவிட்டா லுனக்குக் குற்றமுண்டோ-எ-று

அன்னமேனமர்[illegible] [illegible]

முன்னியநிறாகிதாய பொருளே[illegible]முழுமுதலே

ரிம

பண்ணுமறைபோயின்சரிதம் பகரக்கேட்டபார்ப்புனிக்கா
மண்ணுமலகையாகேனை யானாதொழிந்தால்வசையுண்டோ

(இ-பு.) பிரமன் அன்னமாகித் திருமுடியைத் தேடியும் விஷ்ணு பன்றியாகித்திருவடிகளைத் தேடியுங்காணுதற் கரியதாயிருந்தபொருளே ஒப்பில்லாத முழுமுதலே வேதங்க ளோதி யுணர்ந்த பிராமணன்சொல்லிய உனசரித்திரத்தைச் சொல்லக்கேட்ட பிராமணத்திக்காகப் பெருந்தியபேயாகி [illegible] என்னை யானா இருந்தால் உனக்குவசையுண்டோ-எ-று.

மன்றுண்மகிழ்ந்தான [illegible]த்தை வின்புற்றங்கமயிர்சிலிர்ப்ப
நின்றுமலர்க்கணுங்க [illegible] திறைத்தயர்ந்தான்
கன்றுவென்னவுளஞ்சிறந்தான் கா[illegible]டியந்தனை
பொன்றுவாழ்வுதந்தனி[illegible] னெஞ்சோனென்[illegible]கழினன்.

(இ-பு.) என்று துதிசெய்து மகிழ்ச்சியும் ஆச்சரியமுங் கொண்டு இன்பமுற்று ரோமங்கள் சிலிர்ப்பநின்று தாமரைமலர் போன்ற கண்களில் ஆநந்தவெள்ள [illegible]கப் பாவத்தினுமிக் கன்றினையுடைய [illegible]சுவைப் போல உள்ளந் [illegible] [illegible]ளுமிப் பாடியாடினன் [illegible] நித்தியவாழ்வை யெம்மிறைவன் கிருபை செய்தானென்று புகழ்ந்தினன்-எ-று.

இ[illegible]ப்படிபோரோழுதின மிறைவன் [illegible]ருத்தாள்புகழ்[illegible]தந்த
[illegible]னைதயலகையுருநீங்கி முயலாதமரருருக்கொண்டு
[illegible]மகிழ்ந்துசித்திரிகை பொருந்திவிமான[illegible]தந்தேறிச்
சந்தமுலையாளடிபாலச் சிவனார்பதந்தைச்[illegible] [illegible]ன.

(இ-பு.) இவ்வாறு ஏழுநாள் பரமேசுவரனுடைய திருவடிகளைப் புகழ்ந்து துதிசெய்து முன்னிருந்தபேயுருவம்நீங்கி ஒருமுதற்சிபு மில்லாமல் தேவருருவம்பெற்று மனமகி[illegible]த்திரிகை பொ[illegible] விமானத்திலேறித் தன்மனைவி யடிபாவ[illegible]பதத்தைச்சார்ந்தான்-எ-று. (௭௩)

சென்றார்மீளாப்பெரும்பதத்தைச் சேர்ந்துசிவனுமிடப்பாகத்
தோன்றுநின்றபெண்ணமுது மேவப்பக்கணங்கள்பணிகேட்ப
மின்றுவயிரங்குயின்றசெம்பொன் விமானம் [illegible]மீதமர்ந்திருந்து
துன்றுநின்றசிவபோகந் துய்த்துத்தணவா திருந்தாரே.

(இ-பு.) இவ்வாறுசென்றவர்கள் மீளாதபெரும் பதவியைச் சேர்ந்து பரமசிவனும் இடப்பாகத்திலிருக்கும் பார்வதிதேவியாருஞ் சந்தோஷிக்கவும் சிவகணங்கள் ஏவல்செய்யவும் ஒளிதங்கிய வயிரங்கள் பதிக்கப்பட்ட செம்பொன்விமானத்தில் விளங்கும்படி வீற்றிருந்து அழியாத சிவபோகத்தையனுபவித்துக்கொண்டு நீங்காமலிருந்தார்கள்-எ-று. (௭௪)

வேறு.

ஆதலாற்பரமன்சரிதமேகேட்க வழியிலாப்பெரும்பதம்வேட்[illegible]டா
ரீதலால்வேறுபெருந்தவமுண்டோ [illegible]யம்புதற்கி[illegible]ணுச்
சூதமாமுனிவன்விழிந்தினிதுரைத்தான் சுருதி[illegible]மு[illegible]வரர்கேட்டுக்
காதலாலுரிசிபரகரவென்[illegible] கரங்கடஞ்[illegible]ற்குவித்தார்

(இ-பு.) ஆகை[illegible]ல்லா[illegible] பெரும்பதவி[illegible] விரும்பினவர்கள் பரமசிவன் சரிதத்தை[illegible]கேட்டவர்கள் இவ்வுலகத்தில்இதையன்றிச்சொல்லுவதற்கு வேறுதவ[illegible]ண்டோவென்று சூதமுனிவர்சந்தோஷத்துடன் சொன்னார் [illegible]முணர்ந்த [illegible]மிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள்கேட்[illegible] அன்பினால்மனமுருகி அரகராவென்று சொல்லித்தங்கள்கைகளைச்சிரசி[illegible]ற்குவித்துவைத்துக்கொண்டுதொழு[illegible]ர்கள்-எ-று.

தேவர்தம்பெருமான் சிறந்தவஞ்செழுத்தின்
சீர்புகழ் மா[illegible]கதை[illegible]தலாப்
பாவநிறைநறும் [illegible]புராணநூல்கே[illegible]போர்
பலன்பெற[illegible] மொழி[illegible]தையிரு
மேவரப்புகன்[illegible] சிவ[illegible]தை[illegible]தும்
[illegible]டன்கே[illegible]ந்தாம்
யாவர்மற்றேனு மால[illegible]முதலோ
ரெய்தருஞ் சிவபதமடைவார்

(இ-பு.) தேவர்[illegible]மானுகிய ப[illegible]னுடைய சிறந்த பஞ்சாக்ஷரத்தி[illegible]மகிமையைப் புகழாநின்ற [illegible]மு[illegible]ச் சிவபுராணங்களைக்கேட்பவர்கள் பலன்பெறுதலைச்சொல்லுகின்றசரித்திரம் அந்தமாக விருப்புமுறச்சொல்லிய சிவசரித்திர முழுதுங் கேட்பவர்கள் எவர்களேயாகிலும்-அரிபிரமாதிகளடைவதற்கரிய சிவபதம்அடைவார்கள்-எ-று.(௭௫)

[illegible]ராங்கு[illegible]ானமறைமுக
சீல[illegible]னவர் செங்கோல்விளங்குக

காலமாமழை மன்னுகாதலாற்
சாலவீச னடியார்தழைக்கவே

(இ-ள்) இவ்வுலகம் வாழக்கடவது, நான்குவேதங்களும் வாழ்கடவன, நீதிவழுவாத மன்னவர் செங்கோல்வாழக்கடவது, காலந்தப்பாமல் மழைபெய்யக்கடவது, அன்புடன் சிவனடியார்கள் மேன்மேலும் வாழக்கடவர்கள்-எ-று,

இருபத்திரண்டாவது
வஞ்சனைமுத்திபெற்றஅத்தியாயம்
முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩௯௬ உம்.
பிரமோத்தரகாண்டம்

முற்றுப்பெற்றது.

114894

(வயயம்)

விளம்பரம்.

இதனால் யாவருக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை செங்காங்கடைக்குத்த நாராயணமுதலியார் வீதியில் (நு௨) வதுநெம்பருடைய வீட்டிலிருக்கும்-இ-சித்தையப்பர்களிடத்தில் மேற்படியிரண்டு புஸ்தகங்களும் விக்கிரயத்திற்காய்ப்போட்டிருப்பதால் வேண்டியவர்கள் புஸ்தகம்-க-இக்கு விலைரூபா-ஒன்னரைவிழுக்காடு வாங்கிக்கொள்ளலாம்.

1151